வைணவ உரைவளம்

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்

வைணவ உரைவளம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

இந்நூல் 'தேனும் கன்னலும் கலந்து' சுவை நிறைந்த பால் போன்றது. சுவையின்றத் தள்ள வேண்டிய பக்கம் ஒன்றுகூட இல்லை. பேராசிரியர் தாம் துய்த்துணர்ந்ததை ஐதிகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகைகளில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகின்றார்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-5-0

eBOOK ~ மின் நூல்

வைணவ உரைவளம்

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

வைணவ உரைவளம்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதற்பதிப்பு – 1985
இரண்டாம் பதிப்பு - 2018

Price: Rs.750.oo

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939685-5-0

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப் படையல்

நன்னயஞ் சான்ற வுளத்தினை ஆழ்வார்
நவின்றருள் மறைகளுக் களித்தும்
பன்னரும் நுட்ப அறிவினைப் புலமைப்
பாவலர் தங்களுக் களித்தும்
பொன்னெனத் திகழும் ஒப்பிலா வுயிரைப்
பூரண நாரணற் களித்தும்
மன்னிய புகழ்கொள் வேங்கட சாமி
வள்ளலார்க் குரியதிந் நூலே.

ஸ்ரீ ராம ஜெயம்

சிறப்புப் பாயிரம்

திரு. S. K. இராமராசன் ('கம்பராமன்') பதிப்பாசிரியர், பேரகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

நற்றவ வடிவாம் வைதிக மதத்தை
நவையறு கோவிலைக் குளத்தைப்
பெற்றியிற் காக்க எண்ணிய விஜயப்
பேரர சுளத்தினில் ஆய்ந்து
கொற்றமார் குன்றில் மேவுரெட் டிகளைக்
குலவிய தமிழகத் தனுப்பி
வெற்றிபெற் றது;நற் கொண்டரெட் டிகளும்
வீரத்தால் சமயத்தைப் புரந்தார். 1

குன்றினி லிருந்து மேவுகா ரணத்தால்
குலவுகொண் டாரெட்டி என்று
மன்றெலாம் புகழப் பொலிந்தவர் நிலத்தைப்
மகிழ்வுடன் உழுதொழில் புரிந்து
நன்றமை பண்ட குலத்தவர் என்று
நானிலம் புகல்பெயர் பெற்றுத்
தென்றமிழ் நாட்டை யுயர்த்தினார்; இவரால்
செந்தமிழ் வீறுபெற் றதுவால். 2

---

1. கொண்ட—மலை (தெலுங்கு)
2. பண்ட—வேளாண்மை (தெலுங்கு)

சங்கரன் உமையோ டுவப்புடன் மேவித்
தகவுறு பெருங்களிப் பெய்தும்
வெங்கனூர்ச் சிற்பம், சிவப்பிர காசர்
மேதினிக் களித்தநன் னூல்கள்
கங்கைபோற் பெருகும் காவடிச் சிந்து
காசினிக் கிக்குலம் புரிந்த
துங்கமார் தொண்டை வியப்புற விளக்கும்
துவங்குக இக்குலம் என்னும். 3

இத்தகு புகழ்சால் குலத்துலோர் புரிந்த
இணையிலா நற்றவத் தாலே
வித்தகம் மிக்க செந்தமிழ் உயர,
மேவிய பல்கலை ஒளிர,
எத்தலங் களிலும் அறிவியல் பொலிய
இணையிலா முயற்சியே வடிவாம்
சித்தமொ டுதித்தார் பல்கலை யாவும்
தேர்சுப்பு ரெட்டியாம் தோன்றல். 4

உலகினுக் கன்றே சமரசந் தன்னை
உணர்த்திய எதுமலை என்னும்
தலமதில் மேவும் தெய்வங்கள் அருளத்
தகவுறு கல்வியி லுயர்ந்து
நலமுறு துறையூர் உயர்நிலைப் பள்ளி
நவையறு பெயர்பெற உழைத்துப்
புலமமை காரைக் குடியினிற் கல்விப்
புனத்தினைக் காத்தனர், அன்பர், 5

பாங்குறு காரைக் குடியினிற் கம்பன்
பாலமு துண்டுசெம் மாந்து
தேங்கிய களிப்பை மழையெனப் பொலியத்
திருமகள் நாயகன் பொலியும்
வேங்கடம் 'வாவா' என்றுவந் தழைக்க
மேவியங் கொப்பிலாத் தமிழை
ஓங்குறச் செய்தார்; அருங்கலைக் கோனென்
றுவந்தது குன்றையா தீனம். 6

கற்றவர் பராவும் வேங்கடக் குன்றில்
கனிவொடு மேவிடும் போதில்
பெற்றியல் மிக்க வைணவக் கடலிற்
பெட்புடன் பன்முறை தோய்ந்தும்
நற்றவத் திருவாய் மொழியினை யாய்ந்தும்
நயமுறுத் தந்த நூல் தேர்ந்து
பற்றுடன் 'டாக்டர்' என்றுயர் பட்டம்
பண்புடன் தந்தனள் தமிழ்த்தாய். 7

ஓங்கிய தமிழ்த்தாய் இதயமாய்ப் பொலியும்
ஒப்பிலா வாய்மொழி ஆய்ந்து
பாங்குறத் தந்த தத்துவ நன்னூல்
பாய்தலாற் புவிஎங்கும் இலங்கும்
ஆங்கிலம் இனிய சருக்கரைக் குன்றம்
அமைவுறக் கரைந்தபாற் கடலாய்
ஈங்குயர் சுவையைப் பெற்றது; தமிழ்த்தாய்
இதயத்தில் உவகைபொங் கியதே. 8

செந்தமிழ் நாட்டின் இருகணாய்ப் பொலியும்
சீரிய வைணவந் தனையும்
நந்தலற் றோங்கும் உயர்வினைப் பெற்ற
நவையறு புகழ்ச்சைவந் தனையும்
சிந்தையில் ஆய்ந்து தருமிரு நூலைச்
செம்மையாய் ஆய்பவர் எவரும்
புந்தியில் சுப்பு ரெட்டியின் ஞானப்
புலமைக்கு முதல்மதிப் பளிப்பார். 9

துங்கமார் முயற்சி வடிவமாய் என்றும்
துலங்கிடும் சுப்புரெட் டியின்கை
தங்கிடத் தவம்செய் எழுதுகோல் களித்துத்
தாளினில் புனிதக்கூத் தியற்றின்
பொங்கிய சமய தத்துவம் விளங்கும்;
புனிதஇல் லறநெறி துலங்கும்;
மங்கலில் லாமல் அணுவியல் இலங்கும்;
மடமையே அச்சத்தாற் கலங்கும். 10

அருங்கலை வினோதர் இவ்வணம் பன்னூல்
அளித்தனர்; அறிஞர்கள் வாழ்த்தை
மருங்குறப் பெற்றுக் களித்தனர்; மேலும்
மனத்தினில் வேட்கைஓங் குதலால்
கருங்கலும் உருக வைணவச் செல்வர்
கனிந்தருள் உரைகளுக் கிடைசேர்
பெருங்கனிக் குள்ளார் சாற்றினைப் பிழிந்து
பேரமு தாக்கிநன் களித்தார். 11

மறைகளும் பரவ உலகமும் பரவ
　　மகிழ்வுடன் பாற்கடல் மேவும்
இறைவனை உணர்த்தும் புராணமாக் கதைகள்
　　இணையிலா ஐதிகம் சான்றோர்
நிறைவுறப் பேசும் நல்லுரை யாடல்
　　நேயமார் சொற்பொருள் விளக்கம்
முறைமையால் விளக்கும் இப்பெரும் பனுவல்
　　முதன்மையாற் களஞ்சியம் ஆகும். 12

பொன்னியின் நடுவண் எம்பிரான் மேவிப்
　　பொலிவுறு கோவிலை விளக்கும்
மன்னிய விமானம் எட்டெழுத் தின்கண்
　　மருவுமோங் காரமே என்றும்
பன்னரும் ஏழு மதில்களும் மற்றைப்
　　பண்புறும் ஏழெழுத் தென்றும்
நன்னய மாக விளக்குதல் கண்டு
　　நான்மறை பூரித்து வாழ்த்தும். 13

உடையவர் தமது பாதுகை தாங்கி
　　ஒப்பிலா நுண்பொருள் அறிந்து
தடையறப் பகர்ந்த திறங்கொளெம் பார்; நல்
　　தலைவனைப் பணிந்துமுக் கோலை
அடைவுடன் "ஏனைநீ காத்திடு" கென்ன
　　அமைந்ததே என்னும்நஞ் சீயர்
நடையினை நோக்கி விளக்கிய இந்நூல்
　　நாம்புரி தவப்பயன் அன்றோ? 14

கடலினுள் ஆழ்ந்து விருப்புடன் சென்று
கையினால் பன்முறை அரித்துச்
சுடர்விடு மணிகள் கொணர்ந்துல குவப்பத்
துறையினிற் குவிப்பவர் போலத்
திடமுடன் புகுந்து வைணவ வுரைக்குள்
திகழ்தரு நுண்பொருள் வழங்கும்
அடலினை வியந்தேன் புலமையாம் செல்விக்
கமைந்தநற் றிலகம்இப் பனுவல்.

கம்பன் நிலையம்
தஞ்சை
அக்டோபர் 1, 1985

S. K. இராமராசன்
(கம்பராமன்)

ஸ்ரீ

சீதாபதி துணை

அணிந்துரை

நாராயண நாராயண
　　நாராயண நமஎன்(று)
ஆராயினும் இம்மந்திரம்
　　அநுசந்ததம் மறவார்
பேராயிரம் உடையான்அருள்,
　　பிறவார் பிறவியிலை
வாரார்இனி வாரார்என
　　மறைநூலும் விளம்பும்.[1]

—ஒரு பழம் பாடல்

'வைணவ உரைவளம்' என்ற நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களைத் தமிழுலகம், சில ஆண்டுகளாக வைணவ உலகம், நன்கு அறியும். இவர் கல்லூரியில் படித்த நாள் தொட்டே இவரை நான் நன்கு அறிவேன்; எனது ஊருக்கு அண்மையில் இருந்தவர் என்பதனாலோ, ஓர் இனத்தவர் என்பதனாலோ அல்ல; இவரது அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் தளரா உழைப்பும் என்மனத்தைக் கவர்ந்துவிட்டன. கல்லூரியில் படித்த நாள்தொட்டு இன்றுவரை அவரோடு இணைந்த தொடர்பு

1. மதுரைத் தமிழ்ச் சங்கம் திருநாராயண அய்யங்கார் சொன்னது.

அறுகுபோல் வேரூன்றிவிட்டது. கல்லூரியில் பயின்ற போதே மாணவநிலையில் கண்டு பேசி இருக்கின்றேன். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழிப் படி அப்பொழுதே நினைத்தேன்—புலமையில், பழகும் பான்மையில், அறிவுத் திறமையில், அயரா உழைப்பில் நிகரற்று விளங்குவார் என்று. இன்று அவர்களிடத்தில் இவற்றையெல்லாம் கண்கூடாகக் காண்கின்றேன்.

இத்தகைய பேறு வாய்த்தது, ''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து'' (குறள்-398) என்ற தமிழ் மறையைப் பின்பற்றியதா? இறைவன் திருவருளினாலா? என்றால்:இரண்டையும் ஏற்றுக்கொள்ள லாம். எனினும், பேராசிரியர் அவர்களின் உழைப்பு அசாதாரணம் ஆனது. திருச்சி தமிழ்ச் சங்கத்தில் (சனவரி 1983) இவர் எழுதிய 'முத்திநெறி' என்ற நூல் வெளி யீட்டு விழாவில் அடியேன் கலந்துகொண்டு பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது சொன்னேன், இவர்கள் வெளியிட்டுள்ள நூல்கள்பற்றி. இவ்வளவு நூல்களையும் சிந்தித்து, பிழை நேராதவாறு எழுதிவிட இவர்களால் எப்படி முடிந்தது? குடும்பச் சுமை ஒரு புறம்; ஊதியத்திற்கு உழைக்கும் தொழில் தொல்லை மற்றொரு புறம். இந்த நிலையில் அறிஞர்கள் மூக்கில் விரல் வைத்து வியக்கும் வண்ணம் புலமை நிறைந்த கட்டுரைகளை வெளியிட் டுள்ளார்கள்; வெளியிட்டும் வருகின்றார்கள். ஒருக்கால் ''இன்கவி பாடும் பரமகவிகளால் தன் கவி தான்தன்னைப் பாடுவியாது, இன்று—நன்கு வந்து என்னுடன் ஆக்கி, என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்த நாதனே' (திருவாய் 7.9:6) என்ற ஆழ்வார் பாசுரப்படி வேங்கட நாதனே இவர் நெஞ்சுள் நின்று அருள் பாலித்து வர வேண்டும்'' என்று கூறினேன். அதைத் தான் 'வைணவ உரைவளம்' என்னும் இவ்வரிய பெரிய நூலைக் கண்டதும் நினைவுகூரச் செய்கின்றது. சொல்லுக்கு எட்டாதது இறைவன் செயல் என்பார்கள். இவர் ஆற்றிய, ஆற்றி

வரும் செயல் என் சிந்தனையைக் கடந்து நிற்கின்றது. போலித்தனமானப் பேச்சும், சொல்லும் மலிந்து, உண்மை உணர வழியின்றிப் போன இன்று, என்னுடைய எழுத்தும் சொல்லும் யாருடைய முகமனையும் எதிர்பார்த்தது அல்ல என்பதைக்கூறி, இந்த வெளியீட்டைப்பற்றி உணர்ந்ததைக் —அநுபவித்ததைக்—கூறுவேன்.

'வைணவ உரைவளம்' என்ற இந்த வெளியீடு 'தேனும் கன்னலும் கலந்த' சுவை நிறைந்த பாலைப் போன்றது. சுவையின்றித் தள்ள வேண்டிய பக்கம் இந் நூலில் ஒன்றுகூட இல்லை. ஆழ்வார்கள் பாசுரங்களைச் சுவைத்து அநுபவிப்பதற்கு இந்நூல் போன்ற வேறொரு நூலை நான் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. அடியேனை அணிந்துரை வழங்குமாறு ஆசிரியர் பணித்தது பாசத்தாலன்றி அறிவை அளவுகோலாகக் கொண்டு அல்ல; அடியேன் அநுபவித்ததை—நூலை படிக்கும்போது பரவசம் அடைந்ததை—எழுத்தில் வடித்துக் காட்ட இயலாது. எனினும், கடமையைக் கருதி ஒருசிலவற்றை எடுத்துக் காட்டுவேன். ஓர் ஆசாரியனை ஆச்ரயித்து, பணிந்து, கேட்டு, அறிந்து கொள்ள வேண்டியவற்றை ஒரு சிரமமும் இல்லாமல் அறிந்து அநுபவிக்குமாறு உதவுவது இந்த அரிய பக்திக் கருவூலம்.

ஆசிரியர் 'வைணவ உரைகள்' என்னும் கடலில் மூழ்கி முத்தெடுத்து வந்து அவற்றில் தாம் கண்டவற்றை ஐதிகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகைகளில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகின்றார். அவற்றுள் சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவேன்.

ஐதிகம் : (1) 'பக்த விலோசனம்' என்ற தொடருக்கு (பக்.42) இவர்காட்டும் பொருள் நாம் அறியாதது. பக்தி — சோறு; விலோசனம் — பார்வை; சோறு பார்த்திருக்கும் இடம் என்று பொருள் கூறி, இதற்கு இவர் காட்டும் ஐதிகம் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

(2) 'கிடந்தவாறு எழுந்திருந்து பேசும்' புதுமை நம்மை பக்திசாரர் காலத்திற்கு இழுத்துச் செல்லுகின்றது. (3) அதுயேன் கோயிலில் (அரங்கத்தில்) சில ஆண்டுகள் வாசம் செய்ய நேர்ந்தபோது செந்தாரப்பட்டி பாகவ தோத்தமர் முகுந்த ராமாநுஜ சுவாமிகளோடு ஆழ்வார் அருளிச் செயல்களைச் சல்லாபித்துக்கொண்டு இருப்பது வழக்கம். ஒரு நாள் "தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்க நாதனை "நம் அரங்கனாகிய பித்தன்" என் கின்றாரே, அது பொருந்துமாறில்லை; சிவனை வேண்டு மானால் பித்தன் என்று சொல்லலாம். காரணமும் இருக் கின்றது. மேடையில் ஆடவன் பெண் வேடம் பூண்டு நடிப்பதுபோல புருடோத்தமனான சீமந் நாராயணன் ஒரு காரணார்த்தமாகப் பெண் வடிவு கொண்டபோது, சிவன் அவனைப் பெண் என்றே எண்ணிப் பேதுற்றதனால் அவனைப் பித்தன் என்பது பொருந்தும்; நமது சுவாமிக்கு அது தகாதே" என்றார். அவர் கொண்ட ஐயத்திற்கு அன்று என்னால் அமைதி கூற இயலவில்லை. பேராசிரியர் 'அடியார் பித்தினை உடையவன்' என்று தெளிவுபடுத் தியது (பக்.51) என்னை வியக்க வைக்கின்றது. திருவாய் மொழியின் ஏற்றம்பற்றி (பக். 72 - 73) காட்டப் பெற்றுள்ள ஐதிகம் அற்புதமானது. ஆழ்வார்களின்அருளிச் செயல்கட்குப் பட்டர் கூறும் நயமும் ஐதிகமும் இந் நூலில் பரக்கக் காணலாம். 'தாய் எடுத்த சிறு கோலுக்கு மைந்தனுக்கு' என்ற தொடருக்குக் கூறும் விளக்கமும் ஐதிகமும் (பக்.184) வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கின்றன. 'புரிவதும் புகை பூவே' என்பதற்குப் பட்டரின் ஐதிகம் (பக்.264) சாத்திரத்திற்குப் புதுவிளக்கம் தருவதாக அமை கின்றது. 'மாயன் என் நெஞ்சில் உள்ளான்' என்ற பாசு ரத்தின் கீழ் அரும்பத உரையில் கண்ட ஐதிகம் (பக்.268) போலி வைணவவர்கட்கு ஒரு சாட்டையடி. 'கண்ணுளே நிற்கும்' என்ற பாசுரத்தில் 'இவ்விடத்தில் வேல் வெட்டிப் பிள்ளைக்கு பிள்ளை அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது' என்ற ஐதிகத்தின் விளக்கம் உண்மையான

வைணவர்கட்கு ஓர் ஒளிவிளக்கு. 'பண்டை நாளிலே' என்ற பாசுரத்தில் காட்டப் பெறும் இரண்டு ஐதிகங்களும் (பக்.494) சுவைமிக்கவை. 'என்சொல்லி' என்னும் திருவாய்மொழியில் கீதைப் போவானுக்கும் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வானுக்கும் உள்ள வேற்றுமைபற்றிய ஐதிகம் (பக்.472) நம்மை வியக்க வைக்கின்றது. பாகவத சேஷத்துவம் அருமையினும் அருமை என்பதற்கு ஈட்டுரையில் காணும் (பக்.321, 322) இரண்டு ஐதிகங்களும் ஆழ்ந்த கருத்துடையவை. வங்கிபுரத்து நம்பி ஆய்ச்சிகள் பக்கம் நின்று சேவித்தபோது முதலியாண்டான் வார்த்தை (பக்.499) உள்ளன்பை எடுத்துக் காட்டுகின்றது. 'அன்பினையே பார்க்கும்' என்பதற்கு ஈட்டாசிரியர் காட்டும் ஐதிகம் நம்மை முறுவலிக்கச் செய்கின்றது.

இதிகாசம்: 'உந்து மதகளிற்றன்' (பக். 33) என்ற திருப்பாவையில் வரும் இதிகாசத்தை அனைவரும் அறிவர். பேராசிரியர், இராமாநுசர் பிட்சை ஏற்றதைத் துறவுக்கு ஏற்ற செயல் என்று விமர்சிக்கின்றார். இந்த நிகழ்ச்சியைத் திருப்பாவை காலட்சேபம் செய்பவர் எவரும் ஒரு சொல்சொன்னது இல்லை. அன்று நடந்த இந் நிகழ்ச்சியை நமது மனக் கண்ணால் பார்க்க நேர்ந்தால் அத்துழாயைக் கண்டதும் உடையவருக்கு ஏற்பட்ட பிரேமை அதிர்ச்சி நமக்கும் நேரும் என்பதில் ஐயம் இல்லை. 'நின்ற ஓர் நித்திலத்தை' (பக் 95) என்பதுபற்றிய இதிகாசம் நம்மை முறுவலிக்கச் செய்கின்றது. 'வரை மீகானில் தடம் பருகு கருமுகிலை' என்ற தொடருக்கு பட்டரின் அருளிச் செயல் (பக் 98) நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. 'கள்வன் கொல்' என்ற பாசுரத்தில் 'வயலாளி மணவாளன் பரகாலநாயகியைக் கவர்ந்து சென்றது மறைவாகவா அல்லது பலரும் அறியவா!' என்ற வினாவுக்கு பட்டர் அருளிய இதிகாசம் (பக் 131) அகப்பொருள் சுவையை விஞ்சவைக்கின்றது. 'போம் பழியெல்லாம் அமணன் தலையோடே' என்ற நம்பிள்ளை சூக்தியில் கண்டவரலாறு

(பக் 261) கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீம்பு அவன் தலையில் ஏறும் என்பதை அற்புதமாக விளக்குகின்றது. மிளகாழ்வானைப்பற்றிய இதிகாசம் (பக். 513) வைணவத்துவம்பற்றிய மன நிறைவைக் காட்டுகின்றது. 'நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே' என்ற தொடரை விளக்குவதற்கு செல்வ நம்பியின் தேவியார் செயலும் சொல்லும் (பக் 487) வைணவ பக்தர்களின் நெஞ்சை நெகிழவைக்கின்றது.

சம்வாதம் :'முன்னோர்தூது' (2-2 : 3) என்ற திருமங்கை மன்னன் திருமொழிக்கு பட்டர் கூறும் நயம் (பக்.85) நம்மை மெய் மறக்கச் செய்யும். 'கலிகன்றி...ஆவாரே' என வரும் பல சுருதிப் பாசுரத்திற்குத் தடையும் விடையுமாக நஞ்சீயருக்கும் பட்டருக்கும் நேர்ந்த உரையாடலை (பக்.102) அறிந்து அநுபவிக்கும் திறன் இல்லாதவர் 'செவியிற் சுவையுணரா வாயுணரும் மாக்களே யாவர்'. 'பள்ளச் செறுவில்...புள்ளம் பூதங்குடிதானே' என்பதில் வரும் வருணனை குறித்து (பக்.140) பட்டருக்கும் ஆலவாயுடையானுக்கும் நேர்ந்த உரையில் பட்டரின் சமத்காரமான பேச்சு கூர்த்த மதியினரையும் கைகூப்பச் செய்யும். 'திரு நறையூர்த்தேனே' என்ற திருவிண்ணகர்ப் பாசுரத் தொடருக்கு (பக்.153) நஞ்சீயர் கேட்ட வினாவுக்கு பட்டர் அருளிய உரைநயம் பட்டரின் கூர்த்த மதிக்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு.

ஆழ்பொருள் ரஸோக்தி முதலியன ;இவை இந்த நூலின் சிறப்புக்குப் பெருமை அளிக்கின்றன. 'பள்ளி கமலத்திடை நள்ளியூடும்' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் ஆழ்பொருள் (பக். 162) அவர் புலமைக்கு அடி வணங்கச் செய்கின்றது. 'தண்சேறை யெம்பெருமான்...என் தலைமேலாரே' என்ற தொடருக்குப் பெரியவாச்சான் பிள்ளை கூறும் ரஸோக்தி (பக். 173) நம்மைப் புல்லரிக்கச் செய்

கின்றது. 'பொன்னலர்ந்த நறுஞ் செருந்திப்...ஊர் என்று போயினாரே' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் கற்பனா லங்காரம்(பக் 233)செவிக்குத்தேன் எனச் சுவை தரும்.'என் நீர்மை கண்டிரங்கி' என்ற தொடருக்குப் பட்டர் தமிழ்ப் புலவர்க்குக் கூறிய பொருள் (பக். 254) புலவர்கட்குப் பெரு விருந்தாகும். 'உடலொடுங்கொண்டு கொடுத்தவனை' என்ற தொடருக்குப் பட்டர் கூறும் 'ரஸோக்தி' (பக். 327) நம்மை வியக்க வைக்கின்றது.

சொற்பொரு நயம். பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரை கண்ட பெரியார் பலருள் நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், மேலும் பெயர் தெரியாத அரும்பத உரையாசிரியர் போன்ற நுண்மாண் நுழைபுலச் செல்வர் களின் உரை நயத்தை அறிந்து அநுபவித்துச் சுவைத்த பெருமக்களைத் திவ்வியப் பிரபந்த உரையாசிரியப்பெரு மக்கள் பிரபந்தத்தில் காணும் சொற்களுக்கும் சொற் றொடர்கட்கும் காட்டும் நயம் வியப்பால் மெய் சிலிர்க்கச் செய்யும். 'கண்ணார் கரும்பின்... நாங்கூர்' என்ற சொற் றொடரில் 'கழைதின்று வைகி' எனவும் 'மண்ணேந்திள மேதிகள் வைகு' எனவும் வரும் இடங்களில் வைகி, வைகு என்பதற்குப் பட்டர் காட்டும் இடம் புலவர்கட்கு நல் விருந்து. 'மாளிகை சூழ்தெருவில்... நாங்கூர்' என் பதில் வலைச்சியர் விளைந்த நன்முத்துகளைக் கொடுத்து, நெல் லைப் பண்டமாற்றாகப் பெறும் திருநாங்கூர் என்ற தொடருக்குத் (பக். 137) தொனிப் பொருளாக வரைந் திருப்பதும் புலவர்கட்கு நல்விருந்தாகும். 'வலையுள் ...அகப்பட்டேன்' என்பதில் (பக். 368) 'வலை என்பது நோக்கையும் புன்முறுவலையும் காட்டுவதற்கு ஈட்டுரையில் காணப்பெறும் நயம் சிந்தனைக்கு நல்விருந்தாகும். 'வந்தருளி என் நெஞ்சிடங்காண்' என்ற இடத்தில் 'வந்தருளி, வந்தருளி...' என்று மேலே போகமாட்டாமல் பாடுவாராம் ஆப்பான் திருவழுந்தூர் அரையர். இதன் ஈடுபாடு நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

எம்பெருமான் [1]சிலவற்றுடன் ஒப்பு ; எம்பெருமானை யானை (பக் 146), மேகம் (பக் 223), இரத்தினம் (பக் 194), நிதி (பக் 418) ஆகியவற்றுடன் ஒப்புமைப் படுத்திக் காட்ட பெற்றுள்ள செய்திகள் நெஞ்சில் நிலைநிறுத்தப் பெற வேண்டியவை.

அருளிச் செயலுக்குரிய வியாக்யானங்கள் அனைத்தும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப் பிரவாள நடையில் அமைந்துள்ளன. அன்றியும் வைணவ சம்பிரதாயத்திற்கே யுரிய சில சம்பிரதாய வாக்கியங்கள், பரியாயச் சொற்கள் ஓர் ஆசானை அணுகிக் கேட்டாலன்றி இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே, என்னைப் போன்றவர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் முயன்றுள்ளபேராசிரி யர் அவர்களின் அரியபணி—தெய்வப்பணி—யைச் சிறப் பாக வைணவப் பெருமக்களும் பொதுவாகத் தமிழ்நன்மக் களும் போற்றி ஆதரவு காட்டுவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை. இதுபோன்ற உலகிற்கு உதவியான பணியை மேன்மேலும் செய்து உதவும் பேராசிரியர் அவர்கட்கு நலமும் வளமும் தந்தருளமாறு எளியேனை ஆட்கொண்ட அண்ணல் சீதா பதியின் திருவடித்துணையை வாழ்த்தி வணங்குகின்றேன்.

கம்பர் நிலையம்
தேவானூர்-621214
அக்டோபர் 1, 1985

உழுவலன்பன்,
பெ. இராமானுஜன்.

நூல் முகம்

சேய பங்கயச் சிறுவிடுல்
    அங்கையில் திரட்டிய நறுவெண்ணெய்
ஆயர் மங்கையர் இட இட
    அமுதுசெய் தாடிய திருக்கூத்தும்
நேய மும்குறு முறுவலும்
    புரிந்துபார்த் தருளிய நெடுங்கண்ணும்
மாய வன்திரு வடிவமும்
    அழகும்என் மனத்தைவிட் டகலாவே![1]

—வில்லிபுத்தூராழ்வார்

ஆண்டவன் அருளின்றி எதுவும் நடைபெறாது என்பது மெய்ப்பொருள் உணர்த்தும் உண்மை. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற பழமொழி உணர்த்துவதும் இவ்வுண்மையையேயாகும். பி. எஸ்சி., எல். டி. பட்டங்கள் பெற்று உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி அதில் தலைமையாசிரியனாகப் பணியாற்றிய அடியேனை அடியேனின் நுகர்வினை (பிராரத்தம்) பல்கலைக் கழக விதியாக அமைந்து எம். ஏ. பட்டம் பெறுவதற்குப் பத்தாண்டுகளும், பிஎச். டி. பட்டம் பெறுவதற்குப் பதினைந்து ஆண்டுகளும், ஆக இருபதைந்து ஆண்டுகள் பெற முடியாமல் தடுத்து நிறுத்தின.

---

1. வில்லிபாரதம்-நச்சுப்பொய்கை-கடவுள் வாழ்த்து.

அடியேனின் முன்னோர் நல்வினைப் பயனும் அடியேனின் நல்வினைப் பயனும் பதினேழு ஆண்டுகள் திருப்பதியிலுள்ள பல்கலைக் கழகத்தில் அடியேனைக் கருவியாகக் கொண்டு 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலாகிய' ஏழுமலையான் தமிழ்த்துறையைத் தொடங்க வைத்து அதனை வளர்க்கவும் வாய்ப்பளித்தான். அடியேனைச் சார்ந்த இடத்தின் வண்ணமாகவும் செய்தான்.

அந்தர்யாமியாக இருந்து கொண்டு அடியேனின் பிஎச். டி. பட்டத்திற்கு 'நாலாயிரத்தில் நம்மாழ்வார் தத்துவம்' என்ற பொருள் பற்றி ஆயவும் வழிவகுத்தான். ஐந்தாண்டுகள் ஆழ்வார்கள் பாசுரங்களில் ஆழங்கால் பட்டேன். பாசுரங்களைப் பயிலும்போது உள்ளம் உருகியது. கண்ணீர் ஆறாகப் பெருகியது. பக்தியின் கொடு முடியை எட்டியது போன்ற அநுபவம் கிட்டியது. பட்டமும் பெற்றேன். இதுவே அடியேனின் இம்மை வாழ்வின் பொற்காலமாக அமைந்ததாகக் கருதுகின்றேன். பட்டம் பெற்றதால் இம்மைப் பயன் கணிசமாக இல்லையெனினும் பாசுரங்களால் அடைந்த மனப்பக்குவம் மறுமைப் பயனுக்கு வழியமைத்ததாக அதிராத நம்பிக்கை கொள்ளுகின்றேன்.

ஓய்வு பெற்று 1978-ஜனவரி 14ஆம் நாள் சென்னையில் குடியேறியதிலிருந்து,

> பழுதே பலபகலும் போயினஎன் றஞ்சி
> அழுதேன்2
>
> வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
> பூசித்தும் போக்கினேன் போது3

என்று என் காலம் கழிகின்றது. ஆழங்காட் பட்ட பாசுரங்களை அசைபோடுகின்றேன், உரை வளத்தில் ஈடுபட்டு

2. முதல். திருவந். 16
3. நான். திருவந். 63

உள்ளதைப் பறி கொடுக்கின்றேன். இந்த அநுபவத்தின் விளைவாக எழுந்தது இந்நூல். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வின் விளைவாக இந்நூல் ஆக்கப்பெற்றது. உரைகளில் கண்ட ஐதிகம், இதிகாசம், சம்வாதம் அடியேனின் உள்ளத்தைக் கவர்ந்தனவாதலின் அவற்றிற்குரிய பாசுரங்களோடு அவற்றைத் தருகின்றேன். இத்தொகுப்பின் முன்னோடியாகவுள்ள 'அறிமுகம்' நூலைப் புரிந்து கொள்வதற்கு வழியமைக்கும் என்பது அடியேனின் நம்பிக்கை. நூலில் வரும் வைணவப் பெரியார்களைப்பற்றிய குறிப்பும் விளக்கத்திற்குத் துணைபுரிதல் கூடும் என்று கருதி அகர வரிசைப் படுத்தி குறிப்புகளுடன் நூலின் இறுதியில் தந்துள்ளேன். இம்முறையில் மேற்கொண்ட அடியேனின் முயற்சி 'வைணவ மரபுகளைப்' புரிந்து கொள்வதற்குத் துணைபுரியுமானால் அதுவே அடியேன் பெற்ற நற்பேறாக அமையும்.

ஏழுமலையானின் கருவியாக நின்று நிதி உதவி வரும் திருமலை—திருப்பதி தேவஸ்தானாருக்கும், இதனை அச்சிட்டு உதவிய மூவேந்தர் அச்சகத்தின் உரிமையாளர் முத்து அவர்கட்கும், அழகிய முறையில் ஓவியமும் அச்சுக் கட்டையும் தயாரித்து வண்ண அச்சு முதலியதையும் அமைத்துத் தந்த ஓவிய மன்னர் பி. எஸ். ஆனந்தன் அவர்கட்கும் லாமினேஷன் போட்டு உதவிய மாருதி லாமினேஷன் உரிமையாளர் திரு. பார்த்திபன் அவர்கட்கும, இவ்வளவும் ஆன நிலையில் அழகிய முறையில் கட்டமைத்துக் கற்போர் கையில் கவினுறத் தவழச் செய்த கந்தன் அடிமை எஸ். பி. சண்முகம் பிள்ளை அவர்கட்கும் என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

சிறப்புப் பாயிரம் நல்கிய 'கம்பராமனைப்'பற்றிய ஒரு சிறு குறிப்பு; முத்தர்களுள் ஒருவரான பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இவரை திருத்தக்க தேவரும் கம்பநாடரும் இணைந்த மறுபிறவி என்று

போற்றுவர்; இந்து இவர்தம் கவித்துவம்பற்றியது. ஆழ்வார்கள் பாசுரங்களில் ஆழங்கால் பெற்ற இவரது அநுபவம் இவர் பாடல்களை ஏழுமலையான் இலட்டுபோல் இனிக்க வைக்கின்றது: பச்சைக் கர்ப்பூர மணம் இலட்டில் கமழ்வதுபோல் பக்திமணம் இவர்தம் பாடல்களில் கமழ்கின்றது; சொல்வளமும் கொழிக்கின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பேரகராதித் துறையில் பணியாற்றும் இவருக்கு இவர் மனத்தில் குடிகொண்டு நெருடும் பல்லாயிரக் கணக்கான பாடல்கள் சொற்பொருளுக்கு மேற்கோள்களாக அமைவதில் பெருந்துணை புரியும் என்பதற்கு ஐயம் இல்லை.

ஏற்கெனவே அடியேனின் இலக்கண இலக்கிய அறிவியல் பணியை,

கற்றவர்க்குப் புலனாகாக் காப்பி யத்தைக்
கலைமெருகு கொடுத்தினிதே யறியச் செய்தாய்;
பொற்றொடியார் தமைமணக்கும் காளை கட்குப்
பொலிவுடைஇல் லறநெறியைப் புரியச் செய்தாய்;
கொற்றமுறும் அணுநுட்பம் இனிதே யாய்ந்து
குளிர்தமிழிற் பகர்ந்துள்ளம் தெளியச் செய்தாய்;
உற்றகலைத் திங்கட்குப் பயணம் செய்த
ஒளிநெறியை உளந்தோறும் விரியச் செய்தாய்.[4]

என்று காட்டி வாழ்த்தியவர். இத்தகைய நண்பர் இப்பொழுது இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் நல்கியமைக்கு அடியேனின் உளங்கனிந்த நன்றி. சிறப்புப் பாயிரம் நூலிற்குப் பொலிவும் பெருமையும் திகழச் செய்கின்றது என்பது அடியேனின் நம்பிக்கை.

அணிந்துரை அருளிய முதுபெரும் புலவர் திருவாளர் பெ. இராமாநுஜ ரெட்டியார் எங்கள் குலத்துப் பிதாமகர்

4. அடியேனின் மணிவிழா மலரில் (1977) வாழ்த்திய பாடல்களில் ஒன்று.

போன்றவர். அடியேனின் இளமைப் பருவம் தொட்டே அடியேனின் வளர்ச்சியைக் கண்டு ஆசி கூறி வருபவர். இன்று வைணவ ஒளியில் திளைத்து, தமிழ் ஒளியில் பழுத்து நிற்கும் பாகவத சிரோமணியாகத் திகழ்பவர். 1977-இல் அடியேனை,

தன்னிலைமை தானறியாத் தன்மை யாளன்;
சாதிவெறி சமயவெறி சற்று மில்லான்;
துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்
தூயதிருக் கச்சிநகர் அண்ணங் கரராம்
மன்னியவா சாரியரின் மலர்த்தாள் போற்றி
வைணவத்தின் வளமனைத்தும் உணரப் பெற்றோன்;
பன்னியதை ஏட்டினிலே பரவச் செய்தான்
பலவுரைத்தேன் அவன்திறமைப் பகர்தல் ஆற்றேன்.[5]

என்று என்னை 'ஏகலைவனாக' இனங்கண்டு வாழ்த்திய பெரியார். இப்பொழுது இந்நூலுக்கு அணிந்துரை நல்கி ஆசி கூறியமைக்கு அடியேனின் மனம் கனிந்த நன்றி என்றும் உரியது. இவர்தம் அணிந்துரையால் இந்நூல் மேலும் சிறப்படைகின்றது என்பது அடியேனின் அதிராத நம்பிக்கை.

மகாவித்துவான் கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள் சற்றேறக் குறைய நாற்பது ஆண்டுகட்குமுன் மயிலையில் வாழ்ந்து வந்த பன்மொழிப் புலவர் உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் இல்லத்தில் அறிமுகம்ஆன நாள் தொட்டு இவர் திருநாடு அலங்கரிக்கும் வரை (22-12-84) அடியேனின் உடன் பிறவாத அண்ணனாக இருந்து வந்தவர். தமிழ்-வைணவக் களஞ்சியம்போல் இருந்து ஒல்லும் வகையெல்லாம் அடியேனுக்கு உதவி வந்தவர்.

---

5. அடியேனின் மணிவிழா மலரில் (1977) வாழ்த்திய பாடல்களில் ஒன்று.

இலக்கியமா? இலக்கணமா? இயல்விஞ் ஞான
எழிற்கலையா உளநூலா? எதிலும் வல்லான்;
கலக்கமிலா தாராய்ச்சி முடிவு காட்டிக்
களிப்புறுவோன்; அறிஞரெலாம் கருத வாழ்வோன்;
புலக்கண்உற உரைகாண்பான்; நூலும் காண்பான்;
போதகா சிரியனுமாய்ப் போந்தான் கண்டீர்;
தலக்கணிவன் தனக்குநிகர் தானாய் நின்ற
சான்றோன்காண்; சுப்புரெட்டி என்பான் மன்னோ?[6]

என்று அடியேனை எடை போட்டு மகிழ்ந்தவர். என்றும் 'விஷ்ணுசித்தனாக' இருந்து வாழ்ந்தவர். எப்பொழுதும் திருமண் காப்புடன் திகழும் இவரைக் காணும்பொழுது வில்லிப் புத்தூர்ப் பெரியாழ்வார் வாழ்ந்த காலத்தில் வாழப் பேறு பெறாத நமக்குப் பூதூரில் வாழ்ந்த இப்பெரியாரைக் காணும்போதெல்லாம் பெரியாழ்வார் நினைவுக்கு வருவதால் இவர் பூதூர்ப் பெரியாழ்வாராகக் காட்சி தருவார். வைணவப் பெருமக்கள் பூதூர் சுவாமிகள் என்றே இவரைப் போற்றிப் புகழ்வர். தமிழிலும் வைணவத்திலும் ஆழங்கால் பட்டு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை இருமுறை பதிப்பித்து, எல்லையிலாப் புகழ் பெற்ற இப்பெரியாருக்கு இந் நூலை அன்புப் படையாலாக்கி மகிழ்கின்றேன். பரமபதத்தில் முத்தர்களுள் ஒருவராகவுள்ள இப்பெரியாரின் ஆசியால் அடியேன் வைணவ இலக்கியத்திலும் தத்துவத்திலும் மேலும் மேலும் தெளிவு பெறுவேன் என்பது என் அிராத நம்பிக்கை.

அடியேனின் உள்ளத்தில் நிலையாக இருந்து கொண்டு அடியேனை இயக்கி இத்தகைய தெய்வப் பணியில் ஈடுபடச் செய்து வரும் 'சீர் ஆர் திருவேங்கட மாமலைமேய, ஆரா அமுதத்தை' மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றேன்.

---

6. அடியேனின் மணிவிழா மலரில் (1977) வாழ்த்திய பாடல்களில் ஒன்று.

உன்னை யுள்ள படியறியோம்;
உலகம் உள்ள திறமுள்ளோம்;
பின்னை யறியோம்; முன்னறியோம்;
இடையும் அறியோம்; பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியின் நிற்கும் அதுவல்லால்
என்னை அடியேம் செயற்பால?
இன்ப துன்பம் இல்லோனே.[7]

—*கம்பநாடன்*

"வேங்கடம்"
AD-13 (*பிளாட்* 3354)
அண்ணா நகர்
சென்னை-600 040
அக்டோபர் 2, 1985
(*காந்தியடிகள் பிறப்பு*)

ந. சுப்புரெட்டியார்

---

7. *கம்ப, யுத்த, பிரமாத்திர*—223

உள்ளுறை

அன்புப் படையல் v
சிறப்புப் பாயிரம் vii
அணிந்துரை xiii
நூல் முகம் xxi

பக்கம்

அறிமுகம் (1—19)

முதலாயிரம் (1—29 பாசுரங்கள்)

1. *பெரியாழ்வார் திருமொழி* (1—5) (23—73)
2. *திருப்பாவை* (6) (33—35)
3. *நாச்சியார் திருமொழி* (7—9) (35—44)
4. *பெருமாள் திருமொழி* (10) (44—46)
5. *திருச்சந்தவிருத்தம்* (11) (47—48)
6. *திருமாலை* (12—17) (48—60)
7. *அமலனாதிபிரான்* (18—22) (61—71)
8. *கண்ணிநுண் சிறுத்தாம்பு* (23) (71—73)

பெரிய திருமொழி (24—105 பாசு)

9. *முதல் பத்து* (24—26) (77—82)
10. *இரண்டாம்பத்து* (27—40) (82—116)
11. *மூன்றாம் பத்து* (41—50) (116—138)

12. நான்காம் பத்து (51) (138—139)
13. ஐந்தாம் பத்து (52—60) (139—152)
14. ஆறாம் பத்து (61—68) (152—167)
15. ஏழாம் பத்து (69—75) (167—177)
16. எட்டாம் பத்து (76—87) (177—197)
17. ஒன்பதாம் பத்து (88—94) (197—209)
18. பத்தாம் பத்து (95—100) (209—216)
19. பதினோராம்பத்து (101—102) (217—221)
20. திருநெடுந்தாண்டகம் (103—105) (221—233)

திருவாய்மொழி (106—254 பாசு)

21. முதல் பத்து (106—124) (237—272)
22. இரண்டாம் பத்து (125—136) (272—293)
23. மூன்றாம் பத்து (137—153) (293—327)
24. நான்காம் பத்து (154—169) (327—361)
25. ஐந்தாம் பத்து (170—182) (361—394)
26. ஆறாம்பத்து (183—202) (394—437)
27. ஏழாம் பத்து (203—222) (437—480)
28. எட்டாம் பத்து (223—226) (480—488)
29. ஒன்பதாம் பத்து (227—239) (488—510)
30. பத்தாம் பத்து (240—254) (510—536)

இயற்பா 255

31. முதல் திருவந்தாதி 555 (539—542)

பின்னிணைப்புகள்

1. பயன்பட்ட நூல்கள் (543—545)
2. வைணவப் பெரியார்கள் (546—563)
3. பாசுர முதற்குறிப்பு (564—567)
4. பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் (568—570)

நீயும் அடியேனும்!

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய் கார்வானத்து உள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதுஎன் நெஞ்சில் உள்ளாய்!
பெருமான்! உன்திருவடியே பேணி னேனே![1]

—திருமங்கையாழ்வார்

1. திருநெடுந். 8

ஆன்மாவும் பரமான்மாவும்

இன்றுஆக நாளையே
யாக இனிச்சிறிது
நின்றுஆக நின்அருள்என்
பாலதே; நன்றாக
நான்உன்னை அன்றிஇலேன்
கண்டாய் நாரணனே!
நீஎன்னை அன்றி
இலை![1]

—திருமழிசை ஆழ்வார்

1. நான். திருவந். 7

சரணாகதி

'அகலகில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம்மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே![1]

—நம்மாழ்வார்

---

1. *திருவாய்.* 6. 10: 10

அறிமுகம்

அறிமுகம்

வைணவம், உரைவளத்தால் ஏற்றம் பெற்றது என்றும், சைவம் சாத்திரவளத்தால் சிறப்புற்றது என்றும் பல பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இந்த உண்மை இரண்டு சமயங்களைப்பற்றியும் அறிந்து கொள்ள முயன்ற அடியேனுக்குத் தெளிவாகப் புலனாகின்றது. பின்னதை விளக்க இங்கு இடமில்லை; முன்னதை விளக்குவது இந்நூலுக்கு இன்றியமையாததாகின்றது.

திருமால் திருவருளால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருள்மிக்குப் பாடிய இன்தமிழ் பாக்களே **நாலாயிரத் திவ்விய பிரபந்தம்.** இதனுள் திகழும் திருப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் செவிக்கினிய செஞ் சொல்லாலாயது: சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தது: பிறவித்துயரறுத்து அந்தமில் பேரின்பத்தை அளிக்கவல்லது. இவ்வாற்றான் ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு நூல் எனத்தக்க மாட்சிமையுற்றிருத்தலால் 'நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்கலாயிற்று. இவ்வரிய நூல்—ஆழ்வார் அருளிச் செயல், திவ்விய பிரபந்தம், ஸ்ரீகோசம் என்றும் வழங்கப்பெறும். இது மக்களின் கீழ்மையை யகற்றி மேன்மையளிக்கும் மறையாய் விளங்குதலின் இதனைத் **'தென்மொழி மறை'** என்பர் சான்றோர்.

உரையாசிரியர்கள் : திவ்வியப் பிரபந்தங்களையும் அவற்றின் பொருள் சிறப்புகளையும் ஆழ்வாரிடம் நேரில் பெற்று அவற்றை உலகில் பரவச் செய்தவர் நாதமுனிகள். ஆதலின், அப் பெரியாரையே முதல் உரையாசிரியராகக் கொள்வது வைணவ மரபு. அவர் முதலாக வந்த அவ்வுரை **உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார்** (நாத

முனிகளின் பேரர்), பெரிய நம்பிகள், திருமாலையாண்டான், இராமாநுசர் காலம் வரையிலும் கேள்வி வாயிலாகவே வழங்கி வந்து எம்பெருமானார் காலத்தில்தான் 'வியாக்கியானம்' என்ற பெயரால் நூல் வடிவம் பெற்றது. இங்ஙனம் உரைவளர்ந்த வரலாற்றை அறிந்து கொள்வது இன்றியமையாததாகின்றது.

ஆறாயிரப்படி : இராமாநுசர் திருவாய் மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்கள் செழித்து வளரத் திருவுளங் கொண்டார். முதன்முதலாகத் **திருக்குருகைப் பிரான் பிள்ளான்** என்னும் தம் சீடரைக் கொண்டு **'ஆறாயிரப்படி'** என்ற வியாக்கியானம் இட்டருளினார்.

> தெள்ளாரும் ஞானத் திருக்குரு கைப்பிரான்
> பிள்ளான் எதிராசர் பேரருளால்—உள்ளாரும்
> அன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்த
> தின்பமிகும் ஆறா யிரம்'[1]

என்று கூறுவர் மணவாள மாமுனிகள். 'ஆறாயிரப்படி' என்பது 'ஆறாயிரங் கிரந்தங்கள்' என்னும் அளவினையுடையது என்பது பொருளாகும். ஒற்றொழித்து உயிரும் உயிர் மெய்யுமான முப்பத்திரண்டு எழுத்துகளையுடையது ஒரு கிரந்தம் எனப்படும்[2]. படி என்பது, அளவு என்னும் பொருளையுடையதாக இவ்வியாக்கியானம் செய்யப்பட்டதாதலின் இஃது 'ஆறாயிரப்படி' என்னும் பெயரைப் பெற்றது. இறைவனைப்பற்றிக் கூறுகின்ற **விஷ்ணுபுராணம்** ஆறாயிரம் கிரந்தங்களையுடையதாதலின் இறைவனைப்பற்றிக் கூறுகின்ற இத்திருமறைக்கும் அத் தொகையளவிலேயே இவ்வியாக்கியானத்தை அருளிச் செய்தார் பிள்ளான்.

ஒன்பதினாயிரப்படி : இதனை அருளிச் செய்தவர் **நஞ்சீயர்.**

---

1. உபதேசரத்தின மாலை (உ. ர, மா.) - 41
2. யாப்பருங்கலக் காரிகை—பாயிர உரை

தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதரந்தி
நஞ்சீயர் தாம்பட்டர் நல்லருளால் — எஞ்சாத
ஆர்வமுடன் மாறன் மறைபொருளை ஆய்ந்துரைத்த
தேயொன் பதினா யிரம்.[3]

என்பர் மணவாள மாமுனிகள். பிரம்மசூத்திரத்திற்கு இராமாநுசர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யம் ஒன்பதினாயிரம் கிரந்தங்களையுடையதாதலின் அத் தொகையளவில் 'ஒன்பதினாயிரப்படி' என்னும் இவ்வியாக்கியானம் எழுந்தது. இதுபற்றிய ஒரு சுவையான் வரலாறு உண்டு.4

பன்னீராயிரப்படி : இதனை அருளிச் செய்தவர் வாதிகேசரி அழகியமணவாளசீயர்.

அன்போ டழகி யமணவா ளச்சீயர்
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்காத் — தம்பெரிய
போதமுடன் மாறன் முறையின் பொருளுரைத்த
தேதமில்பன் னீரா யிரம்.[5]

என்பர் மணவாள மாமுனிகள். பாகவதம் பன்னீராயிரம் கிரந்தங்களையுடையதாதலின், அத்தொகையளவில் இவ் வியாக்கியானம் எழுந்தது. இந்த ஆசிரியரைப்பற்றியும் ஒரு சுவையான வரலாறு உண்டு.[6] முன்புள்ள பெரி யோர்கள் அருளிச் செய்த வியாக்கியானங்களையெல்லாம் கண்டு, அவற்றின் சாரமான பொருட்சிறப்புகளையெல் லாம் சுருக்கி, எல்லார்க்கும் எளிதாகவும் விளக்கமாகவும்

---

3 உ. ர. மா—42.

4. திருவாய் மொழி—ஈட்டின் தமிழாக்கம்—பகுதி-1 பக். (36—37) காண்க.

5. உ. ர. மா—45.

6. திருவாய்—ஈட்டின் தமிழாக்கம்—பகுதி—1 பக் (39—39.) இது இருபத்து நாலாயிரமபடி, முப்பத்து ஆறாயிரப்படி என்னும் வியாக்கியானங்கட்குக் காலத்தாற் பிற்பட்டது. எண் வரிசை நோக்கி இங்கு மூன்றாவதாக எழுதப் பெற்றது.

இருக்குமாறு இவ்வியாக்கியானத்தை அருளிச் செய்தார் சீயர்.

இருபத்துநாலாயிரப்படி : இந்த வியாக்கியானத்தை அருளிச் செய்தவர் பெரியவாச்சான்பிள்ளை. இதனை,

நமபிள்ளை தம்முடைய நல்லருளா லேவியிடப்
பின்பெரிய வாச்சான்பிள் ளையதனால்—இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்ன
திருபத்தி நாலா யிரம்.[7]

என்று உரைப்பர் மணவாள மாமுனிகள். இராமாயணம் இருபத்து நாலாயிரம் சுலோகங்களை உடையதாதலின் அத்தொகையளவில் இவ்வியாக்கியானம் எழுந்தது. நம்பிள்ளையின் நியமனத்தால் 'வியாக்கியான சக்கரவர்த்தி' என்று வழங்கும் பெரியவாச்சான் பிள்ளை எழுதியதாக சுவைமிக்க வரலாறு ஒன்று உண்டு.[8]

முப்பத்தாறாயிரப்படி : இதனை எழுதி உபகரித்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை யாவர்.

தெள்ளிதா நம்பிள்ளை செப்பு நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்—பிள்ளையிந்த
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்த
தீடுமுப்பத் தாறா யிரம்.[9]

என்ற மணவாள மாமுனிகளின் திருவாக்கால் இதனை அறியலாம். பிரம்மசூத்திரத்திற்கு இராமாநுசர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யத்தின் ஆழ்பொருள் எல்லாம் விளங்கும் பொருட்டுச் சுதரிசனபட்டர் என்பவர் சுருதப்பிரகாசிகை என்னும் நூல் ஒன்றினைச் செய்தார்; அது முப்பத்தாறாயிரம் கிரந்தங்களையுடையது; அத்தொகையளவில் இவ்வியாக்கியானமும் எழுந்தது.

---

7. உ. ர. மா 43
8. ஈட்டின் தமிழக்கம்—பகுதி 1—பக் (39—40):
9. உ. ர. மா.—44

இவ்வியாக்கியானத்தை[10] ஈடு' என்ற பெயராலேயே வழங்குவர். ஈடு, கவசம். இம்முப்பதாறாயிரப்படி வியாக்கியானம் கற்போராலும் எழுதுவோராலும் வேற்று மக்களாலும் தன்னிலை திரிந்து மாறுபடாதபடி திருவாய் மொழியினைக் காத்து நிற்றலின் இவ்வியாக்கியனத்திற்கு 'ஈடு' என்ற தனிச் சிறப்புப் பெயரினை நம் பெருமக்கள் வைத்து வழங்கினர். இனி, இது, நம்பிள்ளை நாடோறும் காலட்சேபத்தில் அருளிச் செய்தனவற்றை வடக்குத் திரு வீதிப்பிள்ளையால் எழுதி வைக்கப்பட்டதாதலின் இதனை 'ஈடு' என்று வழங்கினர் என்று கோடலும் அமையும். இடுதல்—எழுதுதல். இனி, இது சுருதப் பிரகாசியினை ஒத்திருத்தலின் இதனை 'ஈடு' என்று வழங்கினர் என்றும், தன்னைக் கற்பார் எல்லாரையும் இறைவனிடத்து ஈடு படச் செய்வதாதலின் 'ஈடு' என வழங்கினர் என்றும் கூறு வது உண்டு. நம்பிள்ளை நாடோறும் காலட்சேபத்தில் அருளிச் செய்து கொண்டு போந்தவற்றை வடக்குத் திரு வீதிப் பிள்ளை எழுதி வைத்தது ஆதலானும் இதற்கு ஆசிரியர் நம்பிள்ளையேயாதலானும் அப்பெரியாரின் திருப் பெயரைச் சேர்த்து இதனை 'நம்பிள்ளை ஈடு' என்றும் வழங்குவர். இதுபற்றியும் ஒரு வரலாறு உண்டு.[11]

திருவாய் மொழி 'பகவத் பிரபந்தம்' என்று கூறப் பவடுது போன்று, இவ்வியாக்கியானங்களின் தொகுதியும் **'பகவத் விஷயம்'** என்று போற்றப்பெறுகின்றது.

வேறு சில உரைகள் : பெரிய வாச்சான் பிள்ளை திரு வாய் மொழிக்கு வியாக்கியானம் இட்டருளியது போலவே ஏனைய பிரபந்தங்கள் அனைத்திற்கும் வியாக்கியானம் செய்தருளினர். பெரியாழ்வார் திருமொழியின் முதல் நான்கு பத்திற்கு இவர் வியாக்கியானம் கிடைக்கவில்லை.

---

10. 'ஈடும் எடுப்பும் இல் ஈசன்' (திருவாய். 1, 6. 3) என்ற விடத்து 'ஈடு' என்ற சொல் 1 ஒப்பு என்ற பொருளில்வந்திருத்தல் காண்க.

11. ஈட்டின் தமிழாக்கம்—பகுதி—1—பக் (43—44).

அந்த நான்கு பத்திற்குமட்டிலும் மணவாள மாமுனிகள் வியாக்கியானம் செய்துள்ளார். **நஞ்சீயர் அழகிய மணவாளச் சீயர், அழகிய மணவாளப் பெருமாள் நயினார்** என்னும் பெரியார்களும் திருப்பாவை, அமலனாதிபிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு ஆகியவற்றிற்கு வியாக்கியானம் இட்டுள்ளனர். மணவாள மாமுனிகள் திருவடி சம்பந்தம் பெற்ற **அப்பிள்ளை** என்பார் இயற்பாவுக்கு அருளிச் செய்த வியாக்கியானமும் உண்டு. மணவாள மாமுனிகளும் பிள்ளை லோகார்ய சீயரும் இராமாநுச நூற்றந்தாதிக்கு வியாக்கியானம் செய்துள்ளனர். இவை தவிர முப்பத்தாறாயிரப்படிக்கு ஜீயர் அரும்பதம், அடையவளைந்தான் அரும்பதம் என்னும் இரண்டு குறிப்புரைகளும் உள்ளன.

பதினெண்ணாயிரப்படி : **பெரிய பரகால சுவாமி** என்பவர் ஆறாயிரப்படி என்னும் உரைக்கு ஓர் உரை வரைந்துள்ளார். இது '**பதினெண்ணாயிரப்படி**' என வழங்குகின்றது. இதில் ஒவ்வொரு சொல்லுக்குப் பொருளும், ஒரு பாசுரத்தின் விளக்கமும் அமைந்துள்ளன.

உரைகளின் நயம் : நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றது போன்று வியாக்கியானங்களும் இறைவனுடைய திருவருளுக்கு முற்றும் இலக்காய் ஆழ்வார்களின் பேரருளுக்கும் பாத்திர பூதர்களாய் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் பேரறிவு படைத்தவர்களாய் இருந்த பெருமக்களால் அருளிச் செய்யப்பட்டவையாதலின், திவ்வியப் பிரபந்தம் போன்றே வியாக்கியானங்களும் அருமை பெருமைகளையுடையன. இவ்வியாக்கியானங்கள் மணிப்பிரவாள நடையில் அமைந்தவை; சுவாநுபவத்தோடு செய்யப்பெற்றவையாதலின் களிப்போர்க்கும் சுவாநுபவத்தை விளைவிக்கக் கூடியவை.

இந்த உரைகளுள் ஈட்டின் நடையழகு தனிச் சிறப்பு வாய்ந்தது; பொருளுணர்வோடு பயிலப் பயில்ப் பேரின்பம்

பயப்பது; சொல்லாற்றல் பொருளாற்றல்கள் அமைந்தது; சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் வனப்பு வாய்ந்தது; கூறப்புகும் பொருளை விளக்குவதற்குக் காட்டப்பெறும் மேற்கோள் பொருள்கட்குப் பொருள் கூறும் முறை எத்தகையோரும் வியக்கத்தக்கது; பதச்சாரம் கூறுவதில் ஈட்டாசிரியர்க்கு ஒத்தாரும் மிக்காரும் இத் தமிழ் நாட்டில் இலர்; ஒரு பதிகத்தோடு மற்றொரு பதிகத் திற்கும், ஒரு பாசுரத்தோடு மற்றொரு பாசுரத்திற்கும் உள்ள பொருள் தொடர்பைக் கூறிச் செல்லும் பாங்கு வேறெவ்வுரையிலும் காண்டலரிது. இவ்வியாக்கியானங்க ளின்றேல் திவ்விய பிரபந்தத்தின் பொருள் சிறப்பினை யெல்லாம் அறிந்து கூறவல்லார் ஒருவரும் இலர்.

இந்த வியாக்கியானங்களில் காணப்பெறும் **ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள்** முதலியன கற்போருக்குக் களிப்பினை நல்கும் பெருவிருந்தாய் இருக்கும். இது கருதியே இவை இந்நூலில் தொகுக்கப்பெற்று விளக்கமும் பொருந்தக் காட்டப்பெறுகின்றன.

ஐதிகங்கள் முதலியன : இந்த நூலில் ஐதிகங்கள், இதி காசங்கள், சம்வாதங்கள் தொகுத்துக் காட்டப்பெற் றுள்ளன. **ஐதிகம்** என்பது, சம்பிரதாயம் அடியாக வந்த ஒரு வார்த்தை; அதாவது முன் நடந்ததைத் தெரிவிப்பது. எ-டு. முற்காலத்தில் **அம்மங்கி அம்மாள்** என்ற ஓர் ஆசிரியர் நோயால் வருந்தியிருக்க, **நஞ்சீயரும் நம்பிள்ளையும்** அவரைக் கண்டு நலம் விசாரிக்க எழுந்தருளியிருந்தனர்; அப்போது அவர் மிகவும் கிலேசப்படுவதைக் கண்டு நஞ்சீயர் 'சுவாமின்! தேவரீர் சாமானிய மனிதரன்றே; எவ்வளவோ பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கிறீர்; குணாநுபவத்தாலல்லது போதுபோக்கி யறியீர்; இப்படி யிருக்க உம்மையும் மற்றவர்களைப் போலே இப்படிக் கஷ்டப் படுத்துகின்றானே (இறைவன்)' என்றாராம். அதற்கு 'அவர், '' 'நீயாள வளையாளமாட்டோமே' என் றன்றோ கலியன் பாசுரம்? எம்பெருமானுக்கு வாழ்க்கைப்

பட்டால் கிலேசப்பட்டுத்தானே இருக்கவேண்டும்?'' என்றாராம். பிறகு வெளியில் எழுந்தருளினபின் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி 'பார்த்தீரா இவருடைய எண்ணத்தை? என்ன பாசுரம் எடுத்துக் காட்டினார்!'' என்று அருளிச் செய்து மகிழ்ந்தாராம். (பாசுரம்-47 காண்க). முன் நடந்ததைப் பின்னர் சொல்வதால் இஃது **ஐதிகம்.** இந்த ஐதிகம் ரஸோக்தியாகவும். வெளிப்படுவதுண்டு. (பாசுரம்-36 காண்க). இது பாசுரப் பொருளுக்கேற்ப அமையுமாறு சொல்லப்பெறும்.

இதிகாசம் என்பது, ஒரு வரலாறு, அல்லது கதைபோல் வருவது. தேனுகன் ஆவி போயுகுமாறு கண்ணன் புரிந்த தீரச் செயலும் (பாசுரம்-90), 'புகர் உருவாகி முனிந்தவனைப் புகழ் வீட' என்பதற்குப் பௌண்ட்ரக வாசுதேவன் வரலாறு காட்டப் பெறுவதும் (பாசுரம்-31), 'நின் கோயில் சீய்த்து என்பதற்குத் திருக்கண்ண மங்கையாண்டான் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி காட்டப்பெறுவதும் (பாசுரம்-230), திருக்கடல் மல்லை ஞானப்பிரானைப் பற்றிய செய்தி விளக்கப்பெறுவதுமானவை யாவும் இதிகாசத்தைச் சேர்ந்தவையாகும். இவையும் பாசுரத்தில் வரும் வரலாற்றுக் குறிப்பை விளக்குவனவாக அமையும்.

சம்வாதம் என்பது, சம்பாஷணை; உரையாடல். எ—டு. 'வீவின்றி நின்றவர்' என்ற தொடரை விளக்குவதற்கு நம்பிள்ளை நஞ்சீயரிடையே நடைபெற்றதைப் போன்றது. அதாவது, ''அர்ச்சுனன் தான் எம்பெருமானைப் பெற்றானோ? இல்லையோ?'' என்று நம்பிள்ளை நஞ்சீயரைக் கேட்க, அதற்கு அவர் அளித்த மறுமொழி : ''அர்ச்சுனன் பெற்றானோ? இல்லையோ? என்ற விசாரம் உமக்கு எதற்காக? யார் யார் பெற்றார்கள்? என்று அவர்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தா நாம் பற்ற வேண்டும்? எம்பெருமானுடைய அருளிச் செயல் என்று இவ்வளவே கொண்டு நாம் பற்ற வேண்டுமேயொழிய, பெற்றவர்

களைப் பார்த்தன்று காணும். குளிர்ந்த தண்ணீர் கண்டால் அது குடித்து விடாய் தீர்க்கின்றோம்; இது குடித்து யார் யார் தாக விடாய் தீர்ந்தார்கள்? என்று விசாரித்துப் பார்த்தா பருகுகின்றோம்? இல்லையே'' என்று அருளிச் செய்தாராம்.[12] இத்தகைய சம்வாதங்களும் பாசுரத்தின் பொருளுக்குப் புதிய ஒளி காட்டுவனவாக இருக்கும்.

சரீரசரீரிபாவனை : வைணவ தத்துவத்தின் உயிராய கருத்துகளில் இது மிகவும் முக்கியமானது. எம்பெருமானார் கோஷ்டியிலே உபயவேதாந்தக் கிரந்தங்கள் காலட்சேபம் நடந்து கொண்டிருக்கும்பொழுது "ஆன்மாவுக்கு ஞான ஆனந்தங்களும் அடிமையும் நிரூபகமாகச் சொல்லப்பெறுகின்றனவே, இவற்றுள் அந்தரங்கமான நிரூபகம் எது? என்று திருவோலக்கத்தில் ஓர் ஆராய்ச்சி நடந்தது. எம்பெருமானாருக்கு இதுதான் உட்பொருள் என்று நன்கு தெரிந்திருந்தாலும் இதனை ஆசாரியர்மூலம் வெளியிடவேண்டும் எனக் கருதி கூரத்தாழ்வானைத் திருக்கோடியூருக்கு அனுப்பி நம்பியிடமிருந்து இதன் பொருளைத் தெரிந்து வருமாறு பணித்தார். ஆழ்வானும் ஆறு மாதங்கள் சேவித்திருந்து கிடைத்தற்கரிய இந்த நிதியைப் பெற்றுவந்தார். அதாவது 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' (திருவாய் 8.8 : 2) என்பதன் பொருளைத் தெரிந்து வந்தார். 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' (திருவிருத் 1) 'அடியேன் சிறிய ஞானத்தன்' (1.5 : 7), 'ஒருவன் அடியேன் உள்ளானே' (8. 8 : 1) இந்த இடத்திலெல்லாம் வெறும் ஆன்மா செயற்பட முடியாதாகையால், அது தேகவிசிஷ்டனான ஆன்மாவையே குறிக்கும்.

---

12. வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது
நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீருண் பவர்'

என்ற கலிப்பா (கலி—62) அடிகளில் வரும் தலைவன் கூற்றோடு வைத்து இஃது எண்ணத் தகும்.

ஆனால் '**அடியேன் உள்ளான் உடல் உள்ளான்**' என்ற இவ்விடத்தில் மாத்திரம் '**அடியேன்**' என்பதற்கு வெறும் ஆன்மாவே பொருளாக **வேண்டிய** நிர்ப்பந்தம் உள்ளது. எம்பெருமான் சீவான்மாவையும் உடல் பொருளையும் உட்பிரவேசித்திருப்பவன் என்பது பொருளாயிற்று 'ஆன்மா' என்பதும் 'அடியேன்' என்பதும் பரியாயமாயிற்று. என்பதுதேறின பொருள். **சரீர-சரீரி பாவனை'** இதனால் விளக்கப்படுகின்றது (பாசுரம்-223 காண்க).

அகப்பொருள் தத்துவம் : ஆழ்வார் பாசுரங்களில் அமைந்த அகப் பொருள் பாசுரங்கட்கு உரையாசிரியர்கள் சமயச் சார்புபற்றிய அற்புதமான தத்துவ விளக்கங்கள் அருளியுள்ளனர். ஆழ்வார்கள் குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் தாமான தன்மையை விட்டும் பிராட்டியாருடைய தன்மையை ஏறிட்டுக் கொண்டும் வேற்று வாயாலே பேசி அநுபவிக்கும் திறம் **தோழிப் பாசுரம், தாய்ப் பாசுரம், மகள் பாசுரம்** என்று மூன்று வகையாக வடிவெடுக்கும் முறை பாசுரம்-37இல் திருமந்திரத்தின் அடிப்படையில் விளக்கப் பெற்றுள்ளது. தோழிப் பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம்-161 இலும், தாய்ப் பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம்-191 இலும், மகள் பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம்-78லும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு ஏறிட்டுக் கொண்டு பேசும் காரணமும் தெளிவாக்கப்பெற்றுள்ளது. மேலும் தூதுபற்றிய தத்துவம் பாசுரம்-183 இலும், மடலூர்தல் பற்றிய கருத்து பாசுரம்-170 இலும் விளக்கம் பெற்றுள்ளன.

பாசுரங்களின் பிரிவினை: பராசரபட்டர் என்ற சமயப் பேரறிஞர் தாம் அருளியுள்ள திருவாய் மொழித் தனியனில்,

வான்திகழும் சோலை
மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆண்ட தமிழ்மறைகள்
ஆயிரமும்

என்று சொல்லியிருப்பதனால் திருவாய்மொழி ஆயிரமும் திருவரங்க நாதன்மீதாகும் என்று ஏற்படுகின்றது. இந்த **ஐதிகம்** எப்படிப் பொருந்தும்? திருவாய்மொழி ஆயிரத்தில் பலபல திவ்விய தேசங்களன்றோ அநுபவிக்கப் பெற்றுள்ளன? அவற்றுள் **'கங்குலும் பகலும்'** (7.2) என்ற திருவாய்மொழியொன்றே அரங்கநாதன் விஷயமாகக் காணப்படா நிற்க, பட்டர் ஆயிரமும் அரங்கநாதன் மீதாவது ஆகும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? என்று முன்பே சிலர் கேட்டார்களாம். அதற்கு மறுமொழி பகர்ந்தவர்கள் '' **'கங்குலும் பகலும்'** என்ற பதிகத்தின் முடிவில் **'முகில் வண்ணன் அடிமேல் சொன்னசொல் மாலை ஆயிரத்திப்பத்தும்'** என்கையாலே திருவாய்மொழி ஆயிரமும் அரங்கநாதன் திருவடிகளுக்கே சமர்ப்பிக்கப்பெற்றது; அதிலிருந்து சில திவ்விய தேசங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டது; ஆனது பற்றியே **'திருவேங்கடத்துக் கிவைபத்தும்'** (திருவாய் 6. 10: 11) என்றும், **'திருமோகூர்க்கு ஈர்த்த பத்திவை'** (ஷை 10, 1: 11) என்றும், **'இவை பத்தும் திருக்குறுங்குடி அதன் மேல்'** (ஷை 5. 5: 11) என்றும் ஆழ்வாரே அருளிச் செய்துள்ளார்'' என்றார்களாம். இப்படியிருக்கும் போது இந்த **ஐதிகம்** அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதாகின்றது (பாசுரம்—241 காண்க).

எம்பெருமான் சிலவற்றுடன் ஒப்பு : உரையாசிரியர்கள் எம்பெருமானை **யானை, நீர், மேகம், இரத்தினம், நிதி—** ஆகியவற்றுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இவை மிகவுக அற்புதமாக உள்ளத்தைத் தொடும் விளக்கங்களாம் அமைந்துள்ளன. இவை முறையே பாசுரங்கள் 58, 104, 86, 195 ஆகியவற்றில் விளக்கம் பெறுகின்றன.

சம்பிரதாயப் பெயர்கள் : வைணவ உரையில் சில பெரியோர்களின் இயற்பெயர்கள் சம்பிரதாயமாக மாறி வழங்கப்பெறும். அநுமன் 'சிறிய திருவடி' யென்றும், கருடன் 'பெரிய திருவடி' என்றும், ஆதிசேடன் 'அனந்தாழ்வான்' என்றும், இலக்குவன் 'இளைய பெருமாள்' என்றும்,

வீடணன் 'விபீடணாழ்வான்' என்றும், சுக்கிரீவன் 'மகா ராசர்' என்றும், சடாயு 'பெரிய உடையார்' என்றும், திருமலை 'திருமலை யாழ்வார்' என்றும், ஆழ்வார் திருநகரியின் திருக்கோயிலிலுள்ள புளிய மரம் 'திருப்புளி யாழ்வார்' என்றும், இராமன் 'பெருமாள்' என்றும், திருவரங்க நாதன் 'பெரிய பெருமாள்' என்றும், ஆள வந்தார் 'பெரிய.முதலியார்' என்றும் சம்பிரதாயப் பெயர்க ளுடன் வைணவர்களின் திருவுள்ளத்தில் இடம் பெறவர். இங்ஙனமே, கூரத்தாழ்வான் 'ஆழ்வான்' என்றும், கிடாம்பீ ஆச்சான் 'ஆச்சான்' என்றும், திருக்குருகைப் பிரான் பிள்ளான் 'பிள்ளான்' என்றும், குருகைக் காவலப்பன் 'அப்பன்' என்றும், பெரியவாச்சான் பிள்ளை 'ஆச்சான் பிள்ளை' என்றும், முதலியாண்டான் 'ஆண்டான்' என்றும் சுருக்கமான பெயர்களால் வழங்கப் பெறுவர்.

எம்பெருமானின் திருக்கழல்கள் : வைணவத் திருத்தலங் களில் திருவரங்கம் **கோயில்** என்றும், காஞ்சி **பெருமாள் கோயில்** என்றும், திருவேங்கடம் **திருமலை** என்றும் சம்பிரதாயமாக வழங்கப்பெற்று வருகின்றன. நம்மாழ் வாரின் முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் திரு வரங்கம், திருவெஃகா, திருவேங்கடம் என்ற மூன்று திருப்பதிகளின் பெயர்கள் மட்டிலும் வருவதால் (28, 26, 31), இச்சிறப்புப் பெயர்கள் பெற்றதாகப் பெரியோர் பணிப்பர். திருவரங்கம் அழகிய மணவாளனின் திருவடி **திருப்பொலிந்த சேவடி** (பெரியாழ், திரு. 5, 4; 7) என்றும், கச்சி நகர் தேவப் பெருமாளுடைய திருவடி '**துயரறு சுடரடி**' (திருவாய் 1. 1: 1) என்றும், திருவேங்கடமுடையானின் திருவடி '**பூவார் கழல்கள்**' (திருவாய் 6. 10; 4) என்றும் சம்பிரதாயத் திருநாமங்களாகப் பெரியோர் பணிப்பர் (பாசுரம்—200) காண்க.

இங்ஙனமே, சரணாகதிக்கு சிறநத எடுத்துக்காட்டாக விளங்கும் ஏழுமலையான் திருவாய் மொழியில் (6. 10; 10) '**நிகரில் புகழாய்**' என்பதால் வாத்சல்யமும், '**உலகம் மூன்று**

உடையாய்' என்பதால் சுவாமித்துவமும், 'என்னை ஆள் வானே' என்பதனால் சௌசீல்யமும், 'நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்பதால் சௌலப் பியமும் தெரிவதாகப் பெரியோர் பணிப்பர் (பாசுரம்—202 காண்க).

தமிழின் ஏற்றம் : கீதையைக் காட்டிலும் திருவாய் மொழி உயர்ந்தது என்பதற்கு ஓர் **ஐதிகம்** காட்டுவர் ஈட்டாசிரியர். கீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்தில் ஒரு சபைக்குச் சென்றால் பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து நம்ப மாட்டாமையாலே 'புறத் திண்ணையிலே கிட' என்பார்கள் என்றும், திருவாய் மொழியைக் கற்ற ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், 'சர்வேசுவரன் அகப்படப் புறப்பட்டு எதிர் கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுதுபடியும் எடுத்துவிட்டு உபசரிப் பார்கள்' என்றும் நம்பி திருவழுதி நாடுதாசர் கூறுவாராம் (பாசுரம்—250 காண்க). இதனால் வடமொழியைக் காட்டி லும் தமிழுக்கு ஏற்றம் உண்டு என்பதாகக் கருதுபவர் உரையாசிரியர்கள் என்று கொள்ளலாம்.

சில வைணவ மரபுகள் : இவற்றையும் ஈண்டு அறிந்து கொள்ளல் நலம்.

(i) **ஈசுவரன் திருமேனி :** கருடனுடைய உடலாய் நிற்கும் வேதத்தின் பொருளாய் நிற்பவன். இவன் திருமேனியில் சீவன் இரத்தினங்களுள் சிறந்த கௌஸ்துப மாகவும், மூலப் பிரகிருதி ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவாகவும், மான் என்னும் தத்துவம் கௌமோதகி என்னும் கதையாக வும், ஞானம் நந்தகம் என்னும் வாள் (கத்தி) ஆகவும், மருள் வாளின் உரையாகவும், தாமசாகங்காரம் சார்ங்கம் என்னும் வில்லாகவும், சாத்விகாகங்காரம் பாஞ்ச சன்னியம் என்னும் சாங்காகவும், மனம் சுதர்சனம் என்னும் சக்கர மாகவும், ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய பத்தும் அம்புகளாகவும், தந்மாத்ரங்கள்

ஐந்தும் பூதங்கள் ஐந்தும் ஆகிய இருவித பூதங்களின்வரிசை யும் வனமாலையாகவும் இப்படி எல்லாத் தத்துவங்களும் எம்பெருமானுக்கு ஆயுதமாகவும் ஆபரணமாகவும் இருப்ப தாகக் கருதுவது வைணவ மரபு[13]. அதாவது எம்பெருமான் சேதநம் அசேதநம் என்னும் தத்துவங்கள் அனைத்தையும் ஆபரணமாகவும் ஆயுதமாகவும் கொண்டுள்ளான்.

பகவானுடைய ஆபரணங்கள் '**திவ்யாபரண ஆழ்வார்கள்**, என்னும் திருநாமத்தால் வழங்கப்பெறும். உலகிலுள்ள மற்ற ஆபரணங்களுக்கில்லாத மென்மை, மணம், அழகு' ஒளி முதலியன இவ்வாபரணங்களுக்கு உண்டு. சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்கள் பகவானை வெறுத்து நிற்பவர் கட்கு ஆயுதங்களாகவும், விரும்பி நிற்பவர்கட்கு ஆபரணங் களாகவும் தோன்றும். ஆபரணங்களுக்கு எங்ஙனம் தோற்றம், அழிவு முதலிய குற்றங்கள் இல்லையோ, அங்ஙனமே ஆயுதங்களுக்கும் இவை இல்லை. நித்திய சூரிகளே **திவ்யாபரணாழ்வார்கள்**, **திவ்வியாயுதாழ்வார்கள்** எனப் பெயர் பெற்றுள்ளனர். இவை பகவானுடைய ஆயுதங்கள் என்னும் நிலைக்கேற்ப ஞானம், சக்தி முதலிய திருக்குணங்களைப் பெற்றுள்ளன.

(iii) **நம்மாழ்வாரின் திருமேனி** : ஆழ்வார்கள் பன்னிருவருள் சடகோபர் '**நம்மவர்**' என்று போற்றத்தக்க பெருமை வாய்ந்து '**நம்மாழ்வார்**' என்ற சிறப்புத் திருநாமத் தால் வழங்கப்பெறுகின்றார். ஏனைய ஆழ்வார்களை நம்மாழ்வாரின் ஒவ்வோர் அவயமாகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும் வழங்குவது மரவு. ஆழ்வாரின் திருமுடி நம்பெருமாள். பூதத்தாழ்வாரைத் தலையாகவும், பொய்கை பேயாழ்வார்களைத் திருக்கண்களாகவும், பெரியாழ்வாரைத் திருமுக மண்டலமாகவும், திருமழிசை யாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப் பாணாழ்வாரையும் திருக்கைகளாகவும், தொண்டரடி

13. தே. பி. 80.

பொடி யாழ்வாரைத் திருமார்பாகவும் திருமங்கை யாழ்வாரைத் திருநாபியாகவும், மதுரகவிகளையும் எம்பெருமானாரையும் திருவடிகளாகவும் பெரியோர் அருளிச் செய்வர். இவருக்குத் திருமுடியாகத் திகழ்பவர் நம்பெருமாள்.

நம்மாழ்வார் திருமால் திருவடியில் எப்போதும் விளங்குகின்றார் என்பது வைணவ சமயக் கொள்கை. அதனால் திருமால் திருக்கோயில்களில் அப்பெருமானைச் சேவிக்கச் செல்வோரின் முடிமீது அவர் திருவடியாக வைக்கப் பெறுவதைச் **'சடகோபன், சடாரி'** என்று வழங்கு கின்றனர். 'சடகோபன்', 'சடாரி' என்பன நம்மாழ் வாரின் திருப்பெயர்களாகும்.

(iii) இராமாநுசரின் திருமேனி : நம்மாழ்வாரைத் தலையாவும், நாத முனிகளைத் திருமுகமாயும், உய்யக் கொண்டாரைக் (புண்டரீகாட்சரைக்) கண்ணாகவும், மணக்கால் நம்பியைக் (இராம மிஸ்ராவைக்) கன்னமாயும், ஆளவந்தாரை (யாமுனாசாரியரை) மார்பிடமாகவும், பெரிய நம்பியைக் கழுத்தாயும், திருக்கச்சி நம்பியைத் திருக்கையாகவும், திருக்கோட்டியூர் நம்பியை ஸ்தன மாயும், திருவரங்கப் பெருமாளரையரை வயிறாகவும், திருமாலையாண்டானை முதுகாயும், கிடாம்பியாச்சானை இடுப்பாகவும், எம்பாரை இடையாயும், பட்டரையும் நஞ்சீயரையும் புட்டகங்களாகவும், நம்பிள்ளையைத் துடையாயும், வடக்குத் திருவீதிப் பிள்ளையை முழங்கால்க ளாகவும், பிள்ளை லோகாசார்யரைத் திருவடியாயும், திருவாய்மொழிப் பிள்ளையைப் பாதரேகையாகவும், மணவாளமாமுனிகளைப் பாதுகையாயும், சேனாபதி ஜீயரை ஊர்த்துவ புண்டரமாகவும் (திருமண்காப்பு) கூரத்தாழ்வானைப் புரிநூலாகவும், முதலியாண்டானைத் திரிதண்ட மாயும், கிடாம்பியாச்சானைக் கமண்டலமாக வும், வடுக நம்பியைக் கல்லாடையாகவும், திருக்குருகைப் பிரான் பிள்ளானைத் தோமாலிகையாகவும், பிள்ளை

யுறங்கா வில்லிதாசரை நிழலாகவும்—இங்ஙனம் இராமாநுசரைச் சர்வாசார்ய சொரூபராகக் கொள்வது மரபு.

கோயில், திருமலை, பெருமாள் கோயில் : திருவரங்கத்து அழகிய மணவாளன் இராமாவதாரக் கூறுடையவன் (தோலாத தனி வீரன் தொழுத கோயில்) என்றும், திருவேங்கடத்துத் திருவாழ்மார்பன் (சீநிவாசன்) கண்ணன் அவதாரக் கூறுடையவன் (கண்ணன் அடியினைச் காட்டும் வெற்பு) என்பதும், அத்திகிரி அருளாளன் இந்த இரண்டு அவதாரக் கூறுகளையுடையவன் என்பதும் வைணவர்களிடையே வழங்கி வரும் கருத்துகளாகும்.[14]

திருக்கோவில் அமைப்பில் : திருக்கோவில் அமைப்பில் சில தத்துவங்கள் விளக்கம் பெறுவனவாக உள்ளன.

(i) திருவரங்க விமானம் ஏழு திருச்சுற்றுகளுக்கும் நடுவில் உள்ளது; பிரணவ ஆதாரமாயுள்ளது. நான்கு திருமறைகளும் சாத்திரங்களும் தூபிகளாயுள்ளன. பரவாசுதேவர் இதிலிருந்து சேவை சாதிக்கின்றார். 'ஓம்' என்ற பிரணவம் விமானமாகவும், 'நமோ நாராயணாய என்பதிலுள்ள ஏழு எழுத்துகள் ஏழு திருமதில்களாகவும் அமைந்துள்ளன.[15] எட்டெழுத்து மந்திரத்தை ஆராய்பவருக்கு இறைவனின் தன்மை புலப்படுவது போல திரு அரங்கத்திற்குச் செல்பவர்கட்கும் இறைவன் நேரே புலனாவான் என்பது கருத்து.

விமானத்தின் முன் பகுதியில் நிற்பது **'காயத்திரி மண்டபம்'**; விஷ்ணு காயத்திரி மந்திரத்தின் அறிகுறியாக 24 தூண்களால் அமைக்கப்பெற்றது (24 தத்துவங்களின் அறிகுறியாக இருப்பனவாகவும் கருதலாம்).

---

14. தே. பி. 81, 82, 83.

15. திருவரங்கத்து மாலை-95

(ii) காஞ்சி வரதராசரைச் (அத்திகிரி[16] அருளாளனைச்) சேவிக்க 24 படிகளை ஏறிச் செல்ல வேண்டும். இவை 24 தத்துவங்களின் குறியீடுகள். அதாவது தந்மாத்திரைகள் 5; ஞானேந்திரியங்கள் 5; கருமேந்திரியங்கள் 5; பூதங்கள் 5; ஆக இவை 20. இவற்றுடன் பிரகிருதி 1, மகான் 1, அகங்காரம் 1, மனம் 1 ஆக நான்கும் சேர 24 தத்துவங்களாகின்றன. இவற்றுடன் புருடன் (சீவான்மா)[17] 1, மகாபுருடன் (பரமான்மா) 1 சேர்ந்து வைணவ தத்துவம் 26 ஆகின்றது.

(iii) திருக்கோட்டியூர் திருக்கோயிலின் விமானம் 'அட்டாங்க விமானம்' என்பது; 96 அடி உயரம் உள்ளது. இதன் நிழல் தரையில் விழுவதில்லை தஞ்சைக் கோபுரத்தின் நிழல்போல. ஒன்றன்மீது ஒன்றாக மூன்று தளங்களையுடையது. மேல் தளத்தில் திசைக்கொன்றாக எட்டு விமானங்கள் உள்ளன. எட்டு விமானங்கள் திருமந்திரத்தின் எட்டெழுத்துகள் போலவும், விமானத்தின் மூன்று தளங்கள் திருமந்திரத்தின் மூன்று பதங்கள் (ஓம்+நமோ+நாராயணாய) போலவும், மூன்றெழுத்துகளுடன் கூடிய (அ+உ+ம=ஓம்) பிரணவம் போலவும் அமைந்திருப்பதாக ஐதிகம்.

---

16. ஹஸ்தி—யானை; கிரி—மலை. 'ஹஸ்திகிரி' தமிழில் 'அத்திகிரி' என்றாயிற்று.

17. புருடன்—புருஷன்; இது சரீரத்தில் வசிப்பவன் என்று பொருள்படும்.

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

துப்புடை யாயர்கள்தம் சொல்வழு வாதொருகால்
தூய கருங்குழல்நம் தோகை மயிலனைய
நப்பின்னை தன்திறமா நல்விடை யேழவிய
நல்ல திறலுடைய நாதனு மானவனே
தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத்
தனியொரு தேர்கடவித் தாயொடு கூட்டிய,என்
அப்ப!எ னக்கொருகா லாடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே.[1]

[துப்புஉடை—நெஞ்சில் கடினத் தன்மை உடையவரான்; ஆயர்கள்—இடையர்கள்; வழுவாது—தப்பாமல்; ஒருகால்—ஒரு காலத்திலே; தூய—அழகியதான; கருங்குழல்—கரிய கூந்தலை; நல்விடை—(கொடுமையில்) நன்றான காளைகள்; அவிய—முடியும்படியாக; திறல்—மிடுக்கு; கடவி—நடத்தி; அப்ப—அப்பனே]

இது கண்ணனின் செங்கீரைப் பருவத்தை வருணிக்கும் பெரியாழ்வாரின் பாசுரம். இதில் ஆழ்வார், "நெஞ்சில் கடினத் தன்மை உடையவரான இடையர்களுடைய வார்த்தையைத் தப்பாமல் ஒரு காலத்தில் கரிய கூந்தலையும் மயில் போன்ற சாயலையும் உடைய நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு காளைகளும் முடியும் படியாகத் தன்

---

1. பெரியாழ். திரு. 1.6;7

னுடைய பரமபதத்தில் செல்லும் படியாகத் தனியே ஒப்பற்ற தேரைக் கடவிக் கைதப்பிப் போன வைதிகன் பிள்ளைகள் நால்வரையும் தாயோடு கூட்டின அப்பனே! செங்கீரை ஆடுக'' என்கின்றார்.

இதில் குறித்த இதிகாசம் : ஒரு வைதிக அந்தணனுக்கு நான்கு குமாரர்கள். முதல் பிள்ளை பிறந்து பூமியைத் தொட்டதும் காணப்பெறவில்லை. இரண்டாவது, மூன்றாவது பிள்ளைகள் நிலைமையும் அப்படியே. பெற்றவளும் கூட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்ன விடத்தில் போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது மூன்று பிள்ளைகளும் போய்விடுகையாலே நான்காம் பிள்ளையைக் கருவுயிர்க்கப் போகும் சமயத்தில் அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளை யையாயினும் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்' என்று வேண்டினான். அதற்குக் கண்ணபிரான் அப்படியே செய்வ தாக வாக்குத் தந்தான். ஆனால், அன்று ஒரு வேள்வியில் தீட்சிதனாக இருக்க வேண்டியிருந்ததால் கருவுயிர்க்கும் இடத்திற்கு எழுந்தருள முடியாத நிலையில் இருந்தான். அருகிலிருந்த பார்த்தன் 'நான் போய் இரட்சிக்கிறேன்' என்று வாக்குத் தந்து அந்தணனையும் கூட்டிக் கொண்டு போய்க் கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றிக் காற்றுகூட நுழையவொண்ணாதவாறு 'சரக்கூடம்' அமைத்துக் காத்துக் கொண்டு நின்றான். அன்று பிறந்த பிள்ளையும் வழக்கப்படி மாயமாய் மறைந்தது. அதனால் மிக்க சோக மடைந்த அந்தணன் அருச்சுனனை மறித்து 'அதமனே, உன்னாலேயன்றோ என் பிள்ளை போம்படி ஆயிற்று; கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்?' என்று நிந்தித்து அவனைக் கண்ணபிரானருகே இழுத்துக் கொண்டு வந்தான். கண்ணன் அதுகண்டு முறுவலித்து 'அவனை விடு, உனக்குப் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகின்றேன்' என்று அருளிச் செய்து, அந்தணனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அருச்சுனனைச் செலுத்தச்

சொல்லி, அத்தேருக்கும் இவர்களுக்கும் திவ்விய ஆற்றலைத் தனது சங்கற்பத்தால் கற்பித்து இவ்வண்டத்துக்கு வெளியே நெடுந்தூரம் அளவும் கொண்டு சென்று, அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தன் நிலமான பரமபதத்தில் தானேபுக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் சுவாதந்திரம் காட்டுவதற்காகவும், கண்ணபிரானது திவ்விய செளந்தரியத்தைக் கண்டு களிப்பதற்காகவும் அழைப்பித்து வந்த அந்தப் பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் ஆதி உருவத்தில் ஒன்றும் குறையாமல் கொண்டு வந்து கொடுத்தருளினன் என்பது வரலாறு. இந்த இதிகாசம் பெரியாழ்வார் திருமொழி 4.8:2லும், பெரிய திருமொழி 5.8:4லும், திருவாய்மொழி 3.10:5லும் வந்துள்ளது.

2

மெச்சூது சங்க மிடத்தான்நல் வேயூதி
பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்
பத்தூர் பெறாதன்று பாரதம் கைசெய்த
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்.[2]

[மெச்சூது—மெச்ச + ஊது—அனைவரும் கொண்டாடும்படி ஊதுகின்ற; வேய்—புல்லாங்குழல்; கை செய்த—அணிவகுத்து செய்த; அப்பூச்சி-அப்படிப்பட்ட (மிகவும் பயங்கரமான) பூச்சி.

கண்ணன் அப்பூச்சி காட்டுதல்பற்றிக் கூறும் பெரியாழ்வார் திருமொழியில் முதல் பாசுரம் இது. அப்பூச்சி காட்டுகையாவது—கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலாகச் செய்யும் பயங்கர பால

2. பெரியாழ். திரு. 2.1:1

சேஷ்டைகள். சிறு பிள்ளைகள் பூச்சி காட்டி விளையாடு வதைப்போல் கண்ணபிரானும் தான் மானுடனாகப் பிறந்ததற்கேற்பப் பூச்சி காட்டி விளையாடியதை அக் காலத்திலுள்ள இடைப் பெண்கள் கண்டு அநுபவித்து உகந்தாப் போலே, பெரியாழ்வாரும் சிறந்த சிந்தனையாலே அச்சேஷ்டிதத்தை நேர்க்காட்சியாகக் காண்பது போல் கண்டு அநுபவித்து இனியராவதைக் காட்டும் திருமொழி இது.

'அத்தூதன்... அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்' என்ற ஈற்றடியைக் குறித்து ஓர் ஐதிகம். இப்பாசுரத்தை நம்பெருமாள் சந்நிதியில் உடையவர் குழுவில் உய்ந்த பிள்ளை என்ற பெயர் கொண்ட அரையர் ஒருவர் அபிநயத்துக் காட்டும்போது 'அத்தூதன்' என்னும்போது கண்ணபிரானையும், 'அப்பூச்சி' என்னும்போது கண் இமையை மடக்கிக்கொண்டு வருவதையும் காட்டி அபிநயித்தார். அப்போது உடையவரின் பின்புறம் எழுந்தருளியிருந்த எம்பார்,[3] தம் திருக்கைகளைத் திருத்தாள்களோடு சேர்த்துக் காட்ட, அரையரும் தாம் முன் அபிநயித்ததை விட்டு எம்பார் காட்டியதைப்போலவே எம்பெருமான் திருத்தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்துக் காட்டினார். இதனைக் கண்ட உடையவர் மிகவும் மனமுவந்து, 'கோவிந்தப் பெருமாள் இருந்தீரோ?' என்றாராம். இதனால் ஏற்படுவதாவது—தூதனாய்த் தன் செளலப்பியத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி இருப்பவன் அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈசுவரத்துவ சின்னங்களைக் காட்டுகின்றான் என்பது; இஃது ஈற்றடிக்கு உள்ளுறைப் பொருள் (ஸ்வாபதேசம்).

---

3. இவர் உடையவரின் ஒன்றுவிட்ட தம்பி; கோவிந்தப் பெருமாள் என்ற திருநாமத்தாலும் வழங்கப்பெறுபவர்.

3

சீமா லிகன்அவ னோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்
சாமா றவனைநீ யெண்ணிச்
சக்கரத் தால்தலை கொண்டாய்
ஆமா றறியும் பிரானே!
அணியரங் கத்தே கிடந்தாய்,
ஏமாற்ற மென்னைத் தவிர்த்தாய்
இருவாட்சிப் பூச்சூட்ட வாராய்[4]

[தோழமை—நட்பு; சாம் ஆறு—செத்துப் போகும் வழி; எண்ணி—ஆலோசித்து; தலைகொண்டாய்—தலையையும் அறுத்தாய்; ஆம் ஆறு—நடக்க வேண்டியவற்றை; அணி—அழகிய; என்னை ஏமாற்றம் தவிர்த்தாய்—எனக்குத் துன்பத்தைப் போக்கினவனே.]

இது பெரியாழ்வார் திருமொழியில் உள்ள ஒரு பாசுரம். ஆழ்வார் யசோதை நிலையிலிருந்துகொண்டு அவள் சொல்லியபடியே "நான் பல்வேறு மலர்களையும் வைத்துள்ளேன்; அவை செவ்வியழிவதற்கு முன்னே நீ அவற்றைச் சூட்டிக்கொள்ள வரவேண்டும்" என்று அக் கண்ணபிரானை அழைத்து இனியராகும் திருமொழியில் இருவாட்சிப்பூ சூட்டிக் கொள்ள வருமாறு அழைக்கின்றார் இப் பாசுரத்தில்.

சீமாலிகன் வரலாறு : மாலிகன் என்பான் கண்ணபிரானின் உயிர்த் தோழன். மேன்மைப் பொருளைத் தரும் 'ஸ்ரீ' என்ற சொல் 'சீ' எனத் திரிந்து வந்து 'சீமாலிகன்'

4. பெரியாழ் திரு. 2.7:8.

என்று அவன் பெயரோடு அமைந்து கிடக்கின்றது. இவன் கண்ணபிரானிடம் பலவகையான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவன்; ஒருவர்க்கும் அஞ்சாமல் தன் முனைப்புக் கொண்டு சாதுசனங்களை இம்சித்துக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட கண்ணன் மிகவும் வருந்தி 'நண்பனாகிய இவனைக் கொல்வது தகாது; ஏதாவது செய்தேயாக வேண்டும்' என்று வருந்தி, ஒருநாள் 'நீ இப்படிச் செய்வது தகாது' என்று அறிவுரை வழங்கினான். அசுர இயல்புள்ள அந்த மாலிகனும் தன் வாயில் வந்தபடி பிதற்றி, "நீ எல்லா ஆயுதங்களைக் கையாளும் முறையைக் கற்பித் தாய்; திருவாழிப் பயிற்சியை மட்டிலும் கற்பித்தாய் இல்லை" என்று கண்ணன்மீது குறை கூறினான். கண்ண னும் 'இதில் பழகுவது உனக்கு முடியாது; எனக்கே அசாதாரணமானது' என்று சொல்ல, அவனும் 'என்னால் முடியாததும் ஒன்று உண்டோ? நீ அவசியம் அப்பயிற்சி யைக் கற்பித்தே ஆகவேண்டும்' என நிர்ப்பந்தித்தான். கண்ணன் அவனையொழிக்க 'இதுதான் தக்க சமயம்' என்று திருஉள்ளம் கொண்டான். சக்கரப் படையை எடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்றிக் காட்டினான் கண்ணன். 'இஃது எனக்கு அரிதாமோ?' என்று மாலிகன் சொல்ல, 'ஆம்; இஃது உனக்கு அரிதேயாகும்' என்று கண்ணன் வற்புறுத்திச் சொல்லவும் அதனை அவன் கேளாமல் அத்திருவாழியை வாங்கிச் சுழற்றி யெறிந்துப் பிடிப்பதாக நினைத்துத் தன் கை விரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துக் கொண்டு நின்றான். அப்போது அத்திருவாழி சுழன்று வருவதற்கு இடம் போதாமையால் அதன் வீச்சு இவன் கையில் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பது கதை. இவ்வரலாறு எந்தப் புராணத்திலும் காணப் படாதது. வான்மீகி முனிவர் நான்முகன் வரத்தினால் பகவதவதார வரலாறுகளைத் தாமாகவே நேரில் கண்டது போலவே, ஆழ்வார் பெருமக்களும் தாமாகவே கண்ட வற்றில் இவ்வரலாறு ஒன்று என்பதாகக் கொள்வர்

பெரியோர். பெரியவாச்சான் பிள்ளையும், இத் திருமொழி யின் 6-ஆம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இதைத் தெளிவாக அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது.

4

மாதவத்தோன் புத்திரன்போய்
மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்த தக்கணையா
உருவுருவே கொடுத்தானூர்
தோதவத்தித் தூய்மறையோர்
துறைபடியத் துளும்பியெங்கும்
போதில் வைத்த தேன்சொரியும்
புனலரங்கம் என்பதுவே[5]

[மாதவத்தோன்—சாந்தீபினி; மறிகடல்—அலை எறியா நின்ற கடல்; தக்கணை—தட்சிணை; உருஉருவே—மரணமடைந்த போதுள்ள உருவம் மாறாதபடி; தோதம்வத்தி—பரிசுத்தமாகத் தோய்த்து உலர்த்தின ஆடை; துறை—படித்துறை; துளும்பி—அலை மோதப் பெற்று; போது—பூ; புனல்—நீர்.]

பெரியாழ்வார் திருவரங்கத்தின்மீது மங்களாசாசனம் செய்த ஒரு திருமொழியின் முதல் பாசுரம். இதில் ஆழ்வார், "கண்ணபிரான் சாந்தீபினி என்னும் அந்தணர்பக்கல் சகல சாத்திரங்களையும் கற்ற பிறகு குருதட்சிணையாகக் கடலில் பல ஆண்டுகட்கு முன்னர் இறந்த மகனை உருமாறாத வண்ணம் கொண்டு வந்து கொடுத்தான். அவன் உறையும் ஊர் திருவரங்கம்" என்கின்றார்.

---

5. பெரியாழ். திரு. 4.8:1.

இதில் குறித்த இதிகாசம் : கண்ணபிரான் கம்சனைக் கொன்று உக்கிரசேனனுக்கு முடிசூட்டிய அன்பு, அவந்தி நகரிலிருந்த **சாந்தீபீனி** என்னும் அந்தணர்பக்கல் சகல சாத்திரங்களையும் கற்றான். குருதட்சிணை கொடுக்கும் நிலையில் இருந்தான். அவ்வாசிரியர் கண்ணனுடைய ஆற்றல் சிறப்பை அறிந்தவராகையால் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு மேற்குக் கடலில் பிரபாச தீர்த்தத் துறையில் நீராடும்போது மூழ்கி இறந்துபோன தன் மகனைக் கொண்டு வந்து தர வேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தார். கண்ணபிரானும் 'அப்படியே செய்கின்றேன்' என்று ஒப்புக்கொண்டு கடல் நீரில் வாழ்கின்ற 'பஞ்சஜனன்' என்ற அசுரனே அவ்வந்தணச் சிறுவனைக் கொண்டு போயினன் என்பதை வருணனால் அறிந்து, கடலில் இறங்கி அவ்வசுரனைக் கொன்று அவன் உடலாகிய பாஞ்ச சன்யத்தை எடுத்து வாயில் வைத்து முழக்கிக் கொண்டு யமபுரிக்கு எழுந்தருளி அங்கு 'யாதனையிற்' கிடந்த அந்தச் சிறுவனை அவன் இறந்தபோது கொண்டிருந்த உருவம் மாறாதபடி கொண்டுவந்து தட்சிணையாகக் கொடுத்தான். ‘‘கடலில் மூழ்கிய குமாரனை மீட்டுக் கொடுத்தருளியதுபோல, சம்சார சாகரத்தில் மூழ்கிய என்னை மீட்டுப் பாதுகாத்தருள வேண்டும்’’ என்பது இப்பாட்டுக்குக் கருத்தாகக் கொள்ளத் தகும். இந்த இதிகாசம் பெரிய திருமொழி 5.8.7 லிலும் வந்துள்ளது.

5

வேயர்தங்கள் குலத்துதித்த
விட்டுசித் தன்மனத்தே
கோயில்கொண்ட கோவலனைக்
கொழுங்குளிர் முகில்வண்ணனை

ஆயர்ஏற்றை அமரர்கோவை
அந்தணர்தம் அமுதத்தினை
சாயைபோலப் பாடவல்லார்
தாமும் அணுக்கர்களே.[6]

[வேயர்—பெரியாழ்வாருடைய குலம்; கோவலன்—கோபாலன்; முகில்—மேகம்; ஆயர் ஏறு—இடையர்கட்குத் தலைவன்; அமரர்—நித்திய சூரிகள்; அந்தணர்—மகரிஷிகள்; சாயை—நிழல்.]

இப்பாசுரம் பெரியாழ்வார் திருமொழியின் இறுதிப் பாசுரமாகும். இந்தத் திருமொழி ஓதுவார்களுக்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுவது. 'வேயர் குலத்தில் தோன்றிய விஷ்ணுசித்தன் இதயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கோபாலனும், மேகவண்ணனும், ஆயர்களின் தலைவனும், நித்திய சூரிகளின் தலைவனும், மகரிஷிகளுக்கு அமுதம்போல் இனியனுமான எம்பெருமானை இத் திருமொழியால் பாடவல்லவர்கள் அப் பெருமானை எப்போதும் நிழல்போல் அணுகியிருக்கப்பெறுபவர்கள் ஆவார்கள்'' என்கின்றார்.

விட்டுசித்தன் : விஷ்ணுவை சித்தத்திலே உடையவர். மற்ற ஆழ்வார்களின் சித்தத்திலும் எம்பெருமான் எழுந்தருளியிருந்தாலும்,

அரவத் தமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரானை[7]

6. *ஷ. 5,4:11.*
7. *ஷ. திரு. 5 2:10.*

என்றும்,

> பனிக்கடலிற் பள்ளிகோளைப்
> பழகவிட்டு, ஓடிவந்து, என்
> மனக்கடலில், வாழவல்ல
> மாயமணாளா நம்பி[8]

என்றும் இவ்வாழ்வாரே சொல் கொள்ளும்படியாக எம்பெருமான் குடும்பத்துடன் வந்து கோயில் கொண் டெழுந்தருளிய ஏற்றம் இவ்வாழ்வார் திருவுள்ளத்திற்கே தனிச் சிறப்புடையதாகும்.

கோயில் கொண்ட கோவலன் : (பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்.) ''திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் இவர் மனத்திலிருக்கின்றகிருஷ்ணன் தான் பிறந்தபடியையும் வளர்ந்தபடியையும் இவரைக் கொண்டு கேட்டான்'' என்பது அநுபவிக்கத் தக்க உரை யாகும்.

ஈற்றடியில் ஓர் ஐதிகம்: ஒரு சமயம் எம்பெருமானார் (இராமாநுசர்) திருக்கோட்டியூர் நம்பியைத் திருவடி தொழுவதற்கென்று அங்கு எழுந்தருளின் காலத்தில், சிலர் **எம்பார்** என்ற ஆசியரிடம் வந்து 'சாயை போலப் பாட வல்லார்' என்ற அடியின் கருத்தை அருளிச் செய்யுமாறு வேண்டினர். அவரும், ''எம்பெருமானாரிடத்தில் இதன் பொருளை நான் கேட்டுணர்ந்ததில்லை; இப்போது அவரைக் கேட்டு உங்களுக்குச் சொல்லுவோம் என்றால், அவர் அருகில் இல்லை. ஆகிலும் இப்போதே உங்கட்குச் சொல்லி யாக வேண்டும்'' என்று எம்பெருமானாரின் திருவடி நிலைகளை எடுத்துத் தம் திருமுடி மீது வைத்துக்கொண்டு 'இப்போது உடையவர் எனக்கு அருளிச் செய்தார்; சொல்லுகின்றேன், கேளுங்கள்' என்று அருளிச் செய்தன ராம். தம்முடைய நிழல் தம்மை விட்டு அகலாதவாறு

---

8. பெரி. 5 4:9.

போல, எம்பெருமானைப் பாடுபவர்கள் அவ் வெம்பெருமானை விட்டு சிறிது நேரமும் அகலாது அவன்றனக்கே அத்தாணிச் சேவகராகப் பெறுபவர் என்பது கருத்து.

6

திருப்பாவை

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்
பந்தார் விரலி!உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்துஏலோர் எம்பாவாய்.[9]

[உந்து—வென்று தள்ளப் படுகின்ற; கந்தம்—மணம்; குழல்—தலைமுடி; பந்துஆர் விரலி—பந்து பொருந்திய விரலை யுடையவள், மைத்துனன்—கணவன்; சீர் ஆர்—சீர்மை பொருந்திய]

இஃது ஆயச் சிறுமிகள் நப்பின்னைப் பிராட்டியை எழுப்புகின்ற பாசுரம்; "இது எம்பெருமானார்[10] விசேஷித்து உகந்த பாட்டு."

இராமாநுசரைத் திருப்பாவை ஜீயர் என்று பெருமையாகப் பேசுவதுண்டு. காரணம், ஆண்டாளின் திருப்பாவையின்மீது இவருக்குத் தனி ஈடுபாடு. இவர் மடாதிபதியாக இருந்தபோதும்கூட தாம் மேற்கொண்டிருந்த துறவு நெறிக்கு இணங்க, பிச்சை எடுத்துப் பசி தீர்த்துக் கொள்வார்; பிச்சை எடுக்கப் போகும்போது திருப்பாவைப்

9. திருப்-18
10. எம்பெருமானார்-இராமாநுசர்

பாசுரங்களை ஓதிக்கொண்டே செல்வார். ஒரு நாள் 'உந்து மதகளிற்றன்' என்ற மேற்குறிப்பிட்ட திருப்பாவைப் பாசுரத்தை ஓதியவண்ணம் பெரிய நம்பிகளின் திருவாசலை நெருங்கி வந்தார். அங்கு வருவதற்கு முன் பாசுரத்தில் பாதிக்கு மேல் ஓதி முடிந்தது.

பந்தார் விரலி! உன்
மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால்
சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்

என்ற பாசுரப் பகுதி இவர் வாயினின்று மிடற்றொலியாக வந்து கொண்டிருந்தபோது இவர் நம்பிகளின் வாசலுக்கு நேரே வந்துவிட்டார்.

இந்தச் சமயத்தில் இல்லத்தினுள்ளே பந்தும் கையுமாக விளையாடிக் கொண்டிருந்தாள் திருமணமாகாத அத்துழாய் என்ற பெரிய நம்பிகளின் திருமகள். கதவு தாளிடப் பெற்றிருந்தது. 'பந்தார் விரலி...வந்து திறவாய்' என்ற பாசுர அடிகள் காதில் விழுந்ததும் பந்தும் கையுமாக இருந்த அத்துழாய் பளிச்சென்று திருக்காப்பு நீக்கினாள். (கதவைத் திறந்தாள்.) ''யாரோ பாடிக்கொண்டு வருகிறாரே'' என்று. 'பந்தார் விரலி'[11] என்ற பாசுரம் வருணிக்கும் அதே கோலத்தோடு மணிக்கதவம் தாள்

---

11. **பந்தார் விரலி** - கிருஷ்ணனேடே பந்தாடி, அவனைத் தோற்கடித்து, அவனை ஒருகையாலும் பந்தை ஒரு கையாலும் அணைத்துக் கொண்டு உறங்கும் நப்பின்னை போகோப கரணமான நாரரயணன் ஒரு கையில்: லீலோபகரணமான பந்து (நாரவர்க்கத்துள் ஒரு பொருள்) மற்றொரு கையில் (நாராயணன் விபூதிமான்; பந்து லீலாவிபூதியில் ஒரு பகுதி) — உபயசம்பத்தத்தால வந்த புருஷகாரம் ஸ்பஷ்டம், செந்தாமரைக்கை — அவன் ஆசைப்படுகிறகை, ஈசுவரஸ்வாதந்திரியத்துக்கு நீங்கள் அஞ்ச வேண்டா என்கின்ற கை—பிரிவு — 150 (அடிக்குறிப்பு)—திருப்பாவை வியாக்யானங்கள் (மயிலை மாதவதாசன் பதிப்பு) — பக் : 249.

திறந்த பெண்மணி இராமாநுசரின் திருக் கண்களுக்கு அந்தப் பாசுரத்தில் வரும் நப்பின்னைப் பிராட்டியாகவே இலக்காயினாள்.

'மலரடி பெயர்த்து வந்து, மெல் விரல்கள் சிவப் பெய்தத் தாள் திறக்கின்றாள் நப்பின்னை!' என்ற ஆனந்தக் காட்சிக்கு இராமாநுசர் உள்ளம் திறை கொடுத்தது; அந்த வாசலில் தம் பொன்னொத்த மேனி புழுதிபடியத் தொண்டனிட்டார் அவளை நப்பின்னைப் பிராட்டியாகவே கருதி. இந்நிலையில் அத்துழாய் பரபரப் புடன் ஓடி நம்பிகளிடம் 'ஜீயர் என்னைக் கணடதும் மூர்ச் சித்து விழுந்தார்' என்று தெரிவித்தாள். உடனே நம்பிகள் ''உந்து மதகளிறு' அநுசந்தமாயிருக்கும்'' என்றார். பிறகு வாசலுக்கு வந்து எம்பெருமானாரைக் கண்டு, 'வாரும் திருப்பாவை ஜீயரே, நானும் ஓதி உணர்ந்திருக்கின்றேன், இப் பாசுரத்தை; ஆனால் உம்மைப்போல் அநுபவித்ததே இல்லை' என்று இவர் பக்தியைப் பாராட்டினார்.

ஆண்டாள் தம் கால எல்லையை மானசீகத்தால் கடந்து கண்ணன் அவதரித்த காலத்துக்குச் சென்று தம்மைக் கோபியருள்ஒருத்தியாகக் கருதிக்கிருஷ்ணாநுபவம் பெறுகின்றாள். இராமாநுசரும் ஆண்டாள் பாசுரத்தை ஓதி உளங் கரைந்து அதே அநுபவத்தைப் பெறுகின்றார். இதை உளவியலார் 'ஒட்ட உணர்தல்' (Empathetic Feeling) என்று கூறுவர். இங்கு ஆண்டாளும் இராமாநுசரும் கோபியருள் ஒருத்தியாகவே ஆய்விடுகின்றனர். இருவரும் கோபியின் உணர்ச்சியைப் பெரிதும் பெறுகின்றனர்.

7

நாச்சியார் திருமொழி

எத்திசை யும்அம ரர்பணிந் தேத்தும்
இருடீகே சன்வலி செய்ய
முத்தன்ன வெண்முறு வற்செய்ய வாயும்
முலையு மழகழிந் தேன்நான்

கொத்தலர் காவில் மணித்தடங் கண்படை
கொள்ளு மிளங்குயி லே,என்
தத்துவ னைவரக் கூகிற்றி யாகில்
தலையல்லால் கைம்மா றிலனே.[12]

[மணிதடம்—அழகிய இடம்; கூகிற்றி—கூவகிற்றி; 'கிற்றி' என்பது—'கில்' என்னும் வினைப் பகுதியடியாய்ப் பிறந்த நிகழ்கால முன்னிலை ஒருமை வினைமுற்று; 'கூவக் கடவையாகில் என்பது பொருள்.]

இது குயிலை நோக்கி ஆண்டாள் பாடியதாகவுள்ள திருமொழியில் (நாச்சியார் திருமொழியில்) உள்ள ஒரு பாசுரம். 'எப்படியாவது அவன் (கண்ணன்) என்னிடம் வந்து கூடும்படி கூவாய் பார்ப்போம்' என்று சொல்லுவதாக அமைந்தது இத் திருமொழி. இந்தப் பாசுரத்தின் கீழ் இரண்டு இதிகாசங்கள் காணக் கிடக்கின்றன.

(1) 'என் தத்துவன்' என்பதற்கு 'என்னுடைய உயிர் நிலைத்திருப்பதற்குக் காரணமானவன்' என்ற பொருள் அருளிச் செய்யப்பட்டுள்ளது வியாக்கயானத்தில். "இக் குயில் கூவியழைக்க வேண்டும்படி அவன் வரத் தாழ்க்கச் செய்தேயும் தன் ஸத்தை அவனென்றிருக்கிறாள் காணும்" என்பது வியாக்கியான ஸ்ரீ சூக்தி. இவ்விடத்தில் நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் ஒரு **சம்வாதமுண்டு.**

நம்பிள்ளை : "மாயாவியான இராவணன், இராமன் தலை யறுப்புண்டு முடிந்தான்" என்று தோற்றும்படி ஒரு மாயத் தலையைக்கொண்டு பிராட்டிக்குக் காட்டினான்.[13] அப்போது பிராட்டி இக்காலத்துப் பெண்டிர்கள் தமது கணவன்மார்களுடைய இறப்பில் சற்றுக் கண்ணீர் பெருக்க

12. நாச். திரு. 5:6
13. இது வால்மீகி ராமாயணத்தில் வரும் நிகழ்ச்சி

விட்டுக் கிடப்பதுபோல் சிறிது துக்கப்பட்டு உயிர் தரித்தாளேயன்றி காட்சியைக் கண்ட அந்தக் கணமே உயிர்போகப் பெற்றிலள். மெய்யான அன்பு இருக்குமாகில் அந்தச் சமயத்தில் கூடவா உயிர் பிரியாமல் இருக்கும்? உயிருக்குயிரான நாயகன் உயிரிழந்தான் என்று மாயத் தலையைக் கண்டும் நம்பின பிறகும் அவர் தரித்திருந்து பிலாக்கணம் (ஒப்பாரி வைத்துப் புலம்புதல்) பாடியழுதாள். அவள் இராமன்மீது கொண்டிருந்த அன்புக்கும் இப்படியிருத்தற்கும் ஒரு தொடர்பும் இல்லைபோல் உள்ளதே'" என விண்ணப்பம் செய்தார்.

நஞ்சீயர் : ''வாரீர், நீர்கேட்டது அழகிதே; 'நாயகன் உயிர்ரோடுள்ளான்' என்று நினைத்துக் கொண்டால் உத்தம நாயகி உயிர் தரிப்பாள் என்றும், 'நாயகன் இறந்து போனான்' என்று நினைத்துக் கொண்டால் அவள் 'உயிர் விட வேண்டும்' என்றும் நீர் கருதியுள்ளீர் போலும். நாயகி உயிர்தரித்திருப்பதற்கும் உயிர்விடுவதற்கும் நாயகனுடைய பிழைத்திருத்தல் மரணித்தல் தெரிந்து கொள்வது காரணமன்று காணும்; பிறநாடு சென்ற நாயகன் வழிநடுவே இறந்து போனானாகில் இந்தச் செய்தியை ஊரிலுள்ள நாயகி தெரிந்து கொள்ள முடியாததால் 'நமது நாயகன் உயிரோடுதான் உள்ளான்' என்று மயங்கியிருக்கும்போது அவன் நலமாக உயிருடனிருப்பதும், அவன் வெளிநாட்டில் நலமாக இருந்தும் சில வம்பர்கள் 'அவன் இறந்தான்' என்று பொய்ச் செய்தி கூறுவதை நம்பி உயிர் விடுவதும் உத்தம நாயகியின் செயல் என்று நினைக்க வேண்டா. உண்மையான நாயக—நாயகியின் உறவு மனமே சாட்சியாக நெஞ்சிற் பதிந்து கிடக்கும். அவன் உயிர் விடும் அதே கணத்தில் இவளுடைய உயிரும் தானாக விட்டு நீங்கும். தம்பதிகளாகிய இருவருடைய நெஞ்சுக்கும் வியக்கத்தக்க அழகுடைய ஒரு தந்திப் போக்குவரத்து இருப்பதனாலேயே அந்தத் தந்தியைக் கொண்டே நாயகியின் உயிர் அந்தக் கணத்திலேயே பிரிந்து போகும்.

மானசத் தந்தி உண்மையான செய்தியை மனத்திற்கு எட்ட வைத்துக் கொண்டிருப்பதனால் அதன் காரணமாக உயிர் போகாமல் தரித்து நிற்கும். பிராட்டியும் இத்தகைய உத்தம நாயகியாதலால் இராவணன் மாயத் தலையைக் காட்டி எவ்வளவு வஞ்சித்த போதிலும், உண்மையில் இராமனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் இருந்தமை யால் அந்த அரக்கனுடைய மாயச் சொல் பயன்படாமல் அவளுடைய மனசாட்சியமே வீறுபெற உயிர்தரித்து நின்றது; ஆதலின் பிராட்டி உயிர்தரித்திருப்பது பெருமாள் உயிர்தரித்திருப்பதற்குக் காரணம் என்று கொள்ளீர்'' என்று மறுமொழி பகர்ந்தார்.

(2) நஞ்சீயரிடம் திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பான பொருள்களைக் கேட்ட முதலிகளில் பெற்றி என்ற ஒரு பெரியார் உண்டு. அவர் திருவாய்மொழியின் சிறப்புப் பொருள்களைப் பல தடவைகள் கேட்டிருந்தாலும் நாச்சி யார் திருமொழிக்கு மட்டிலும் நஞ்சீயரிடம் பொருள் கேட்க வாய்ப்புப் பெற்றிலர். இவர் ஒரு சமயம் திருவணை யாத்திரையாகக் கிழக்கே எழுந்தருளினபோது சில பக்தர் கள் இவரை யண்மி ''சுவாமி, 'தலையலாற் கைம்மாறிலேனே' என்ற விடத்துக் கருத்து விளங்கவில்லை, சுவாமி சாதிக்க வேணும்'' என்று வேண்டினர். அவரும், ''குயிலே! எம்பெருமான் இங்கு வரும்படி நீ கூவவில்லையாகில் அதற்குப் பதில் உதவியாக என் தலையை (அறுத்து) உனக்குத் தந்திடுவேன் என்கிறாள்'' என்று பொருள் கூறி விட்டார். ஆனாலும் 'இதற்குப் பொருள் இவ்வளவே இராது; நஞ்சீயர் சாதிப்பது என்னவென்று தெரிந்து கொள்ள வேணும்' என்ற அவா அவருக்கு இருந்தது. யாத்திரை முடிந்து கோயிலுக்கு (திருவரங்கத்திற்கு) எழுந்தருளினபிறகு நம்பிள்ளையைச் சந்தித்தபோது, ''சுவாமி, அடியேன் சீயர் சந்நிதியிலே திருவாய் மொழிக்குப் பதினொரு முறை பொருள் கேட்டேன்; நாச்சி யார் திருமொழிக்குக் கேட்கப் பெற்றிலேன்; 'தலையலாற்

கைம்மாறிலேனே' என்ற விடத்திற்கு சீயர் அருளிச் செய்வது எங்ஙனே?'' என்று கேட்டார். அவரும், ''நீ செய்யும் உதவிக்கு இத்தலையால் செய்வதொன்றுண்டோ வென்று 'என் தலையை உனக்காக்கி, காலமெல்லாம் உன் காலில் வணங்கி இருப்பேன் என்கிறாள்' என்று சீயர் அருளிச் செய்யும்படி'' என்று நம்பிள்ளை அருளிச் செய்யக் கேட்டு, பெற்றி சுவாமி இதற்கு மிகவும் கொண்டாடி, ''சுவாமி அடியேனுக்கு அடிக்கடிப் பயணம் செய்ய நேரிடு மாகையால் சுவாமி சந்நிதியில் இடைவிடாமல் காத்துக் கொண்டிருந்து அருளிச் செயல்களின் எல்லாப் பொருள் களையும் கேட்கப் பேறில்லாமையால் பல சிறப்புப் பொருள்களை இழந்துவிட நேரிடுகின்றது; அடியேன் வெளியே போனால் 'இதற்கென்ன பொருள்? இதற்கென்ன பொருள்?' என்று பலர் என்னைக் கேட்க வருவர்; அப்போது சுவாமி அருளிச் செய்யும் பொருள் சிறப்பு என் நெஞ்சில் தோன்றும்படி ஆசிகூற வேண்டுமென்று முன்னமே சீயர் சந்நிதியில் அடியேன் வேண்டினேன்; அவரும் 'அப்படியே தோன்றும்' என்று ஆசி கூறினார்; ஆயினும் அடியேனுக்கு அந்த ஆசி பலிக்கக் காண்கின்றிலேன்; சீயர் அருளிச் செய்யும் பொருள் எனக்குத் தோற்றுவதில்லை; அருளிச் செயல்களில் பொருள்கள் குருகுலவாசம் பண்ணிக் குட்டுப்பட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தக்கவையே யன்றி வரம் பெற்று அறிந்து கொள்ள இயலுமா? ஆகை யால்தான் சீயர் அளித்த வரம் 'பாவியேனுக்குப் பலிக்க வில்லை' என்று சொல்லிப் போனார்.''

8

நாறு நறும்பொழில்
மாலிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில்வெண்ணெய்
வாய்நேர்ந்து பராவிவைத்ததேன்;
நூறு தடாநிறைந்த

அக்கார வடிசில்சொன்னேன்;
ஏறு திருவுடையான்
இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ![15]

[நாறு—மணம் கமழ்கின்ற; பொழில்—சோலை; வாய்நேர்ந்து—வாயாலே சொல்லி; பராவி வைத்தல்—சமர்ப்பித்தல்; அக்கார அடிசில்—சருக்கரைச் சோறு.]

இப்பாசுரம் ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியிலுள்ளது. திருமாலிருஞ் சோலைப் பிரானை வழிபடுவதாக அமைந்தது. ''மணம் கமழா நின்ற சோலைகளாலே சூழப்பட்ட திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானுக்கு அடியேன் நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் 'வாசிக கைங்கரிய ரூபமாகச் சமர்ப்பிக்கின்றேன்; இவற்றை அவ்வெம் பெருமான் திருவுள்ளம் பற்றுவானா?'' என்கின்றாள்.

இப்பாசுரத்தைப் பற்றி ஓர் இதிகாசம் உண்டு : *எம்பெருமானார் நாச்சியார் திருமொழி காலட்சேபம் நடத்தும் பொழுது இப்பாசுரம் அளவில் வருங்கால 'ஆண்டாளுடைய எண்ணம் வாய்ச்சொல்லளவில் சென்றதே யொழிய, செயற்படவில்லை. அதனை நாம் தலைக்கட்ட வேண்டும்' என்று கருதி அப்பொழுதே புறப்பட்டுத் திருமாலிருஞ் சோலை மலைக்கு எழுந்தருளி நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் அழகருக்கு அமுது செய்வித்தருளினார் என்றும், அதன் பின்னர் அப்படியே சீவில்லிபுத்தூர் எழுந்தருளி ஆண்டாளை அடிவணங்கி நின்றார் என்றும், அபபிராட்டியும் தன் நினைவறிந்து இவர் நிறைவேற்றிய செயலுக்கு மனமுவந்து 'நம் அண்ணரே!' என்று சொல்லி அர்ச்சாவ*

---

14. நாச். திரு. 9:6.

தார சமாதி கடந்து ஏழடி முன் நடந்து எதிர் கொண்டு அழைத்து தழுவிக் கொண்டாள் என்றும் பெரியோர் பணிப்பர். இதுபற்றியே இராமாநுசருக்குக் **'கோயில் அண்ணன்'** என்ற திருப்பெயரும் நிலைத்து விடுகின்றது. மேலும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே"[15] என்று ஆண்டாள் வாழ்த்தப்படுவதும் அறியத்தக்கது.

இன்னுமோர் இதிகாசம் : நஞ்சீயர் சந்நிதியில் நம்பிள்ளை 'ஒரு பூர்ணகும்பத்துக்கும் அதிகப்படியானவற்றை விரும்பாத எம்பெருமான் விஷயத்தில் நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் சமர்ப்பிக்க வேண்டுமோ?' என்று வினவ, அதற்குச் சீயர், 'திருவாய்ப் பாடியின் செல்வத்திற்கு இஃதெல்லாம் கூடினாலும் ஒரு பூர்ண கும்பத்திற்குப் போராது காணும்' என்று அருளிச் செய்தாராம்.

9

கார்த்தண் முகிலும் கருவிளையும்
காயா மலரும் கமலப்பூவும்
ஈர்த்திடு கின்றன என்னைவந்திட்
டிருடீகே சன்பக்கல் போகேயென்று
வேர்த்துப் பசித்து வயிறசைந்து
வேண்டடிசில் உண்ணும்போ தீதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்
பத்த விலோசனத் துய்த்திடுமின்.[16]

[கார்—கார்காலம்; தண்—குளிர்ந்த; முகில்—மேகம்; கமலம்—தாமரை; வந்திட்டு—எதிரே வந்துநின்று; இருடீகேசன்—கண்ணபிரான்;

15. வாழித் திருநாமம்—ஆண்டாள் வாழித் திருநாமம்.
16. நாச். திரு. 12:6

ஈர்த்திடுகின்றன — வலிக்கின்றன; கயிறு அசைத்து—கயிறு தளர்ந்து; போது—காலம்; உய்த்திடுமின்—கொண்டு சேர்த்து விடுங்கள்.]

தன்னைக் கண்ணன் இருக்குமிடம் கொண்டு சேர்க்குமாறு தன்னிடத்தில் பரிவுள்ளவர்களை ஆண்டாள் கேட்கும் திருமொழியிலுள்ள பாசுரம் இது. இதில் ஆண்டாள், ''கறுத்துக் குளிர்ந்த மேகங்களும், கருவிளைப் பூவும், காயாம் பூவும் கண்ணபிரானுடைய திருமேனிக்குப் போலியாயிருக்கின்றபடியாலும், தாமரைப் பூக்கள் அப்பிரானுடைய திவ்விய அவயவங்களுக்குப் போலியா யிருக்கின்றமையாலும் அவையாவும் 'கண்ணன் பக்கலில் நீயும் போ' என்று என்னை வலிக்கின்றன; பசு மேய்க்கின்ற சிரமத்தாலே வேர்த்து, பசியினால் வருந்தி, வயிறு தளர்ந்து வேண்டிய உணவு உண்ண வேண்டிய காலம் இது' என்று ரிஷி பத்தினிகளின் வரவை எதிர்பார்த்திருந்து நெடு நோக்குக் கொண்டிருக்கும் இடமான பக்தவிலோசனம் என்கின்ற இடத்திற்கு என்னைக் கொண்டு சேர்த்து விடுங்கள்'' என்கின்றார்.

பக்த விலோசநம்: இது யமுனை யாற்றங்கரையருகிலுள்ள ஒரு புண்ணிய புலம். கண்ணனும் பலராமனும் ஒரு நாள் பசுக்களுடனும் இடையர்களுடனும் யமுனை யாற்றங்கரையில் செல்ல நெடும்போது ஆநிரைகளை மேய்த்துக் களைத்து ஆற்றங்கரையில் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தனர். இடைச்சிறுவர்களால் பசிக்கொடுமையைத் தாங்க முடியவில்லை. அவர்கள் கண்ணன் பலராமர்களை நோக்கித் தங்கட்கு உணவு ஏற்பாடு செய்தருளுமாறு வேண்டினர். அவர்கள் நிலையையறிந்த கண்ணன், 'பிள்ளைகாள், அண்மையில் சில அந்தணர்கள் 'ஆங்கிரஸ' என்ற வேள்வியை அநுசரித்து வருகின்றனர். நீங்கள் அவர்களிடம் சென்று என் பெயரையும் என் அண்ணன் பெயரையும் குறிப்பிட்டு 'நாங்கள் இன்னாரால்

அனுப்பப்பட்டவர்கள் என்று கூறி உணவு விரும்புங்கள்; பசி தீரும்' என்று கட்டளையிட்டனுப்பினான்; அவர்களும் அங்ஙனமே அவ்விடம் சென்று விநயத்துடன் இவ்வண்ணம் விண்ணப்பம் செய்து அடிசில் வேண்டினர். ஆயின், அந்த அந்தணர்கள் இந்த ஆயச்சிறுவர்களின் பேச்சைக் கேளா தொழியவே, இவர்கள் மீண்டும் கிருஷ்ண பலராமர்களிடம் திரும்பிச் செய்தியைக் கூறினர். கண்ணபிரான் புன்முறுவல் செய்து, 'பிள்ளைகாள்! அந்த அந்தணர்களின் மனைவிமார் களை அண்மி நாங்கள் இவ்விடத்திலிருப்பதாகச் சொல்லி உணவு கேளுங்கள்; அப்பெண்டிர் தவறாது அளித்திடுவர்" என்று சொல்லியனுப்பினான். அங்ஙனமே இந்த இடைச் சிறுவர்கள் அந்தணர்களின் மனைவிமார்களை நெருங்கி, 'அம்மனையீர், இதோ கண்ணனும் நம்பி மூத்தபிரானும் அண்மையில் பசுக்களை மேய்த்துக் களைத்திருக்கின்றனர்; நாங்களும் அவர்களைச் சேர்ந்தவர்கள்; எல்லோரும் பசி தீர்ந்து மகிழும்படி அமுது படைக்க வேண்டும்' என்று வேண்டினர். அப்பெண்டிர்களும் கண்ணன் பெயரைக் கேட்டதற்கு மகிழ்ந்து தின்பன, உண்பன, நக்குவன, பருகுவன (பட்சம், போஜ்யம், லேகியம், சோஷ்யம்) என்ற நான்கு வகைப்பட்ட உணவு வகைகளையும் நல்ல பாத்திரங்களில் எடுத்துக் கொண்டு கண்ணன் நம்பி மூத்த பிரான் இருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டனர்; தாய்மார், தந்தைமார், மக்கள், உடன்பிறந்தோர், கணவன்மார்— இவர்கள் எவ்வளவு தடுத்தும் அதனைப் புறக்கணித்து பக்தி நிஷ்டையை உடையவர்களைப் விரைந்து வந்து யமுனை யாற்றங்கரைச் சோலையில் கண்ணனையும் நம்பி மூத்தபிரானையும் சேவித்து, கொணர்ந்த உணவு வகை களைச் சமர்ப்பித்துப் பரமானந்த பரவசர்களாய் மீண்டு சென்றனர்; கண்ணபிரான் அவ்வடிசிலை அவ்வாயச் சிறுவர்கட்குத் தந்து தானும் அமுது செய்து மகிழ்ந்தான்.[17]

---

17. பாகவதம் — தசமஸ்கந்தம்—23-வது அத்தியாயத்தில் இவ்வரலாறு விரித்தோதப்பெற்றுள்ளது.

அந்தணப் பெண்டிர் இவ்வண்ணம் நெடுநாள் வரையில் நாடோறும் பகலில் உச்சி வேளையில் உணவு வகைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார்களென்றும், ஒவ்வொரு நாளும் அவர்கள் அடிசில் கொணரும் சமயத்துக்குக் கண்ண பிரானும் களைப்புடன் அவ்வடிசிலை எதிர்பார்த்து அத் திக்கையே நோக்கியிருப்பவனென்றும் பிரசங்கத்தில் அழகிய மணவாள சீயர் விளக்குவர்.

பக்தவிலோசனம் : *'பக்தி' என்ற வட சொல்லுக்கு 'அன்னம்' என்று பெயர்; 'விலோசனம்' என்பதற்குப் 'பார்வை' என்று பொருள். எனவே, இக்கூட்டுச் சொல் சோறு பார்த்திருக்கும் இடம் என்பதாயிற்று.*

10

பெருமாள் திருமொழி

மறந்திகழு மனமொழிந்து வஞ்ச மாற்றி
ஐம்புலன்கள் அடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்து இருமுப் பொழுதேத்தி யெல்லை யில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே.[18]

[மறம்—கொடுமை; திகழும்—விளங்கும்; மாற்றி—போக்கி; இடர்பாரம்—துக்கத்தை விளைவிக்கும் பெருஞ்சுமையாக இருக்கும்; துறந்து—வேரறுத்து; இருமுப்பொழுது—பஞ்ச காலங்கள்; எல்லை இல்லா—அளவிறந்த; தொல்

18. பெரு. திரு. 1:7

நெறி—பழைய மரியாதை; அறம் — தர்ம சிந்தை; கதி—அடையும் பொருள்; நிறம்— அழகு; மாயோன்—எம்பெருமான்; கண்டு— சேவிக்கப் பெற்று: மல்க—ததும்ப.]

'திருவரங்கப் பெருமானை என்று கண்டு மகிழ்வேன் என்னும்' பெருமாள் திருமொழியில் ஒரு பாசுரம். முதல் இரண்டடிகளும் வைணவ லட்சணம் கூறுவன. "ஸ்ரீ வைணவர்கள் கொடுமையில் தோய்ந்து நிற்கும் மனத்தை ஒழிப்பவர்கள்; வஞ்சனைகளைப் போக்குபவர்கள்; கொடிய இந்திரியங்களைப் பட்டிமேயாதபடி அடக்கு பவர்கள்; 'பாரமாய பழவினை பற்றறுத்து' (கமலனா—5) நிற்பவர்கள்; ஐந்து பொழுதிலும் இறைவனைத் துதித்து அளவிறந்த பழைய மரியாதையில், நிலை நிற்பவர்கள். இவர்கட்கு அடையத்தக்க பொருளாய் இருப்பவன் அரங்க நகர் அப்பன். இப்பெருமானைச் சேவிப்பது எந்நாளோ?" என்கின்றார்.

'இருமுப்பொழுதேத்தி' : இரண்டும் மூன்றும் ஐந்து; பஞ்ச கால பராயணர்களாய் என்றபடி. இதன் விளக்கம்: ஒரு நாளின் பகற்பொழுதை பிராத காலம், சங்கவ காலம், மத்தியான காலம், அபராஹ்ன காலம், சாயங்காலம் என்று ஐந்து சிறு பொழுதுகளாகப் பிரித்து இவற்றில் முறையே அபி கமனம், உபாதானம், இஜ்யா, சுவாத்தி யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களை அனுட்டிக்க வேண்டும் என்று பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்களில் விதிக்கப் பெற்றுள்ளது. இரவில் அநுட்டிக்க வேண்டு வதும் யோகா நுஷ்டானமே.

இவற்றின் விவரம் வருமாறு: முதலாறு நாழிகை யாகிய பிராத காலத்தில் தீர்த்தமாடுதல், சந்தியா வந்தனம், செபம் முதலிய காலைக் கடன்களைச் செய்து முடித்துத் தாம் ஆராதிக்க வேண்டிய எம்பெருமானுடைய

சந்நிதியிற் சென்று வலம் வருதல், வணங்குதல், தோத்திரம் முதலியவற்றால் எம்பெருமானை உகப்பித்தல்; இஃது அபி கமன கால நியமம்.

இதற்கு அடுத்த சங்கவ காலத்தில் பகவதாரா தனத்துக்கு வேண்டிய தூய்மையான நீர், சந்தனம், மலர், தூப தீப திரவியங்கள் முதலியவற்றையும் திருமஞ்சனத்திற்கு வேண்டிய பால், தயிர், நெய், தேன் முதலியவற்றையும் அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி, பருப்பு, கறியமுது, சருக்கரை, நெய், தயிர், பழம் முதலிய உணவுப் பொருள் வகைகளையும் சம்பாதித்துத் தொகுத்துச் சித்தம் செய்தல்; இஃது உபாதான கால நியமம்.

மூன்றாவதான மத்தியான காலத்திலே மாத்யாஹ்நிக நீராடலும், மாத்யாஹ்நிகச் சடங்கும் செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதனம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுது செய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை அதிதிகளோடும் பந்துமித்திரர்களோடும் புசித்தல்; இஃது இஜ்யா கால நியமம்.

இதற்கு அடுத்ததான அபராஹ்ந காலத்திலே மோட்ச நெறிக்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிகாச புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும் செய்தல்; இது சுவாத்தியாயன கால நியமம்.

ஈற்றதான சாயங் காலத்திலே, மாலைக் கடனாய சந்தியாவந்தனத்தைச் செய்யத் தொடங்கி பகலவன் மறைந்த பின்பு செபத்தைப் பூர்த்தி செய்து இரவு உணவுக்குப் பிறகு ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளை அடக்கி பிராணாயாமம் செய்து மனத்தைப் பரமான்மாவிடம் நிலை நிறுத்தி பகவத்குணாநுசந்தனாத்தோடு பள்ளி கொள்ளுதல்; இது யோக கால நியமம். இவ்வாறு அநுட்டிக்கும் பாகவதர் பஞ்சகால பராயணர் எனப்படுவர்.

திருச்சந்த விருத்தம்

11

நடந்தகால்கள் நொந்தவோ
நடுங்குஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ
விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்தகாவி
ரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து
பேசுவாழி கேசனே.[19]

[நடந்த—உலகளந்த; ஞாலம்—பூமிப் பிராட்டி; ஏனம்—பன்றி; இடந்த—தோண்டி எடுத்த; மெய்—திருமேனி; விலங்கு—தடையாயிருக்கும்; மால்வரை—பெருத்த மலை; சுரம்—பாலை நிலம்; கடந்த—கடந்து கொண்டு வருகின்ற; கால்—வாய்க்கால்கள்; கரை—கரை மீது; கிடந்த ஆறு—திருக்கண் வளர்ந்தருளுகின்றபடி]

திருமழிசைப்பிரான் அருளிய திருச்சந்த விருத்தத்தில் உள்ளது இப்பாசுரம். இதில் ஆழ்வார், "அழகிய திருவடிகளைக் கொண்டு உலகங்களை அளந்ததனால் உண்டான தளர்ச்சியோ? அன்றி பன்றியுருவாய் நடுங்குகின்ற பூமியை இடந்து கொண்டு வந்ததனாலுண்டான தளர்ச்சியோ?" என்று காவிரிக்கரையின்மீதுள்ள திருக்குடந்தையில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற ஆராவமுதப் பெருமானை வினவு

---

19. திருச்சந்த—61

கின்றார். கண் வளர்ந்தருள்கின்ற காரணத்தை எழுந்திருந்த பேசுமாறு வேண்டுகின்றார்.

இந்தச் சயனத் திருக்கோலத்தைக் குலைத்து அடுத்தக் கணத்திலே தாமும் அநுதாபப்படும்படி நேர்ந்து விடுமோ என்று அஞ்சிய ஆழ்வார் 'வாழி' என்று அந்தச் சயனத் திருக்கோலத்துக்கே உகந்து மங்களாசாசனம் செய்தருள் கின்றார்; ஒரு தீங்கும் இல்லாமல் கண்வளர்ந்தருள்கின்ற இவ்வழகு நித்தியமாய்ச் செல்ல வேண்டுமென்கின்றார்.

ஐதிகம் : திருமழிசைப்பிரான் ஆரா அமுதாழ்வாரை நோக்கி 'கிடந்தவாறு எழுந்திருந்து பேசு' என்று பிரார்த் திக்க, பெருமாளும் பக்தர்களின் அடிமையாதலாலே அப்படியே எழுந்திருக்கப் புக, அது கண்ட ஆழ்வார் அர்ச்சாவதார சமாதி குலைய வொண்ணாதென்று திருவுள்ளம்பற்றி 'வாழி வாழி' என்று மங்களாசாசன முகத்தால் அப்படியே கிடந்தருளும்படியை விரும்ப, ஆராவமுதாழ்வாரும் அவ்வண்ணமே தம்முடைய எழுச்சி முயற்சியை நிறுத்திக் கொண்டாரென்றும் இப்போதைய அர்ச்சாவதார நிலைமையில் இவ்வம்சம் விளங்குமாறு உத்தாந சாயியாக சேவை சாதிப்பதும் இதுபற்றியே என்றும் பெரியோர் ஐதிகம் கூறுவதுண்டு.

திருமாலை

12

வேதநூல் பிராயம் நூறு
 மணிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
 நின்றதில் பதினை யாண்டு

பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே![20]

[வேதநூல்—வேத சாத்திரப் படி; பிராயம்—வயது; புகுவரேனும்—வாழ்ந்திருப்பவர்களே யானாலும்; பாதி—நூறில் பாதி (ஐம்பது); உறங்கிப் போகும்—உறக்கத்தில் கழியும்; நின்ற — மிகுந்த; பதினையாண்டு—ஐம்பது ஆண்டு; அது—நெஞ்சால் நினைக்கவும் தகாத யௌவனாவஸ்தை; பிறவி—பிறப்பு]

தொண்டரடிப் பொடிகள் அருளிய திருமாலையிலுள்ள ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "அரிதரிது மானிடராதல் அரிது" என்பது போல மானிடப் பிறவி என்பது பல பிறவிகளில் ஆயிர நற்றவங்களால் பெறக் கூடியது; அதனை வருந்திப் பெற்றாலும், கருப்பத்திலேயும், பிறந்தவுடனும், நாலு நாள் கழித்தும், சில திங்கள் கழித்தும், சில ஆண்டுகள் கழித்தும் இறக்கக் கூடியவர்கள் பெரும்பான்மையர்; திருமறையில் 'நூறு பிராயம் வாழ்பவன்' (சதாயுர்வை புருஷ:) என்று கூறியுள்ளபடி முழு ஆயுளுடன் வாழக் கூடியவர் மிகச் சிறுபான்மையரே; வினைவயத்தால் சிலர் நூறு ஆண்டு வாழப் பெற்றாலும், அவரது வாழ்நாள் கழியும் வகையை ஆராய்ந்தால் ஒரு நொடிப் பொழுதாவது நற்போதாகக் கழிய வழி இல்லை. பகலவன் மறைந்து மீண்டும் உதிக்குமளவும் உறக்கத்தில் (30 நாழிகை) கழியும் கணக்கில் பாதி ஆயுளாகிய ஐம்பது ஆண்டு உறக்கத்தில் கழிகின்றது; மற்ற பாதி வாழ்நாளில் சிசு நிலையில் சில காலமும், எத்தனைத் தீம்புகள் செய்தாலும் சீறவொண்ணாதபடி செல்வப் பிள்ளைப் பருவமாய்ச் சில காலமும், பிறகு இளமைப் பருவம் வந்து விஷயாந்தரங்களில் மண்டித் திரியும் பருவமாய்ச் சில

20. திருமாலை—3

காலமும், இங்ஙனம் இந்திரியச் சிறையில் அகப்பட்டுத் தடுமாறா நிற்க, இடிவிழுந்தாற் போலே வந்து புகுகின்ற கிழத்தனமாய்ச் சில காலமும், இளமைப் பருவத்தில் செய்த எல்லை கடந்த குறும்புகட்குப் பலனாக எய்தும் பிணிகளால் வருந்துவதாய்ச் சில காலமும், பசியினால் ஒன்றுந் தோன்றாதபடி இடர்ப்படுவதாய்ச் சில காலமும், ஒரு பக்கத்தில் மகன் மரித்தான் என்று கேட்டு அழுவதும், மற்றொரு பக்கத்தில் மனைவி இறந்தாள் என்று கேட்டு அழுவதுமாய் இப்படி சம்சாரத் துன்பங்களில் ஆழ்ந்து செல்லும் நாளாய்ச் சில காலமும் கழிவதால் இத்துன்பங்களை அநுபவித்ததற்கு இன்னும் சிறிது ஆயுள் கடன் வாங்கிக் கொள்ள வேண்டியதாமேயன்றி உள்ள வாழ் நாளில் ஆன்மாவைப்பற்றிச் சிறிதாகிலும் சிந்திப்பதற்குப் பொழுது கிடைப்பதரிது; ஆதலால் இப்பிறவி எனக்கு வேண்டா'' என்கின்றார்.

'அரங்கமா நகருளானே' : ''நித்திய விபூதியும் வேண்டா, லீலா விபூதியும் வேண்டா என்று கூறிய இரண்டு விபூதிக்கும் மேற்பட்டு மூன்றாவது விபூதி என்னும்படியான கோயிலிலே எனக்கு ஓர் இருப்பு அமைக்கலாகாதோ?'' என்பது உட்கருத்து. ''கோயிலில் குடி வாழ்ந்தால் பேதைப் பருவத்தில் உணவூட்டுதலுக்காகிலும், சந்நிதிக்குள் கொண்டு புகுவார்கள்; பால்யாவஸ்தையில் விளையாடும்போதும் பெருமாள் புறப்பாடு அருளிப்பாடு முதலியவற்றை அநுசரிக்கும்படியாயிருக்கும்; இளமைப் பருவம் வந்தால் தான் விரும்பின விஷ யாந்திரங்களைக் காண வேண்டியாகிலும் சந்நிதிக்குள் புகலாயிருக்கும்; மூப்படைந்து உள்ளே புகமாட்டாத நாளைக்கு நம் பெருமாள் இவன் வாசலிலே வந்து நிற்றலாக இருக்கும்; ஆக இப்படிகளாலே கனவிலும் காண்பது பெருமாள் வடிவழகேயாயிருக்குமாகையாலே கோயில் வாசம் அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லா நிற்கும்'' என்பது ஆழ்வார் திருவுள்ளம் என்பதாக ஐதிகம்.

13

மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத் துடைய பேரால்
கத்திர பந்து மன்றே
பராங்கதி கண்டு கொண்டான்
இத்தனை அடிய ரானார்க்
இரங்கும்நம் அரங்க னாய
பித்தனைப் பெற்றும் அந்தோ!
பிறவியுள் பிணங்கும் ஆறே![21]

மொய்த்த—அடர்ந்து கிடக்கின்ற; வல்வினை—கொடிய பாவ ராசி; மூன்றெழுத்து—'கோவிந்த்' என்ற நாமம்; கத்திரபந்து—க்ஷத்திர பந்து; பராங்கதி—சிறந்த பதவி; இரங்கும் — அருள்புரியும்; பித்தனை — அடியாரிடத்தில் மயங்குபவனை; பெற்றும்—தலைவனாகப் பெற்றும்; பிறவி—சம்சாரம்; பிணங்கும்—வருந்துகின்ற; ஆறு—விதம்]

இதுவும் 'திருமாலை'யிலுள்ள ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "கொடிய பாவியான க்ஷத்திர பந்துவும் சிறந்த பதவியைக் கண்டு அநுபவிக்கப் பெற்றான்; இத்தனைப் பாவிகட்கும் அருள்புரிகின்ற அடியார் பித்தினையுடைய அழகிய மணவாளனைத் தலைவனாகப் பெற்றும் சம்சாரத்தில் அகப்பட்டு வருந்துகிற விதம் என்னே!" என்று வியக்கின்றார்.

'மூன்றெழுத்துடைய பேரால்' : இன்ன திருநாமம் என்னாதே இரகசியமாய்ச் சொல்லிற்று—ருசி பிறந்த பின்பு

21. திருமாலை—4

'அந்தத் திருநாமம் என்ன' என்று விரும்பிக் கேட்டால் அப்போதைக்கு உபதேசிப்போம் என்றாம். "மூன்றெழுத்த தனை மூன்றெழுத்ததனால்"22 என்று பெரியாழ்வார் மறைத்தாற் போல.

க்ஷத்திர பந்து : பிராமணர்களுள் அதமனைப் 'பிரஹ்ம பந்து' என்கிறாப்போலே க்ஷத்திரியர்களுள் அதமனை 'க்ஷத்திர பந்து' என்கிறது. "நம் முதலிகள் கோஷ்டியில், 'நாலூரான்' என்றாற் போலே ரிஷிகள் கோஷ்டியில் 'க்ஷத்திர பந்து' என்றால் செவி புதைக்கும்படியாய்த்து இருப்பது" என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

இவன் வரலாறு23 : க்ஷத்திர பந்து கொடிய நடத்தை களையுடையவன; பல்வகைப் பாவங்களே உருவெடுத்தாற் போன்றவன். இவன் தாய் தந்தையர், மக்கள், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவராலும் கைவிடப் பெற்றுக் காட்டில் திரிந்து உயிர்க் கொலை புரிந்து வயிறு வளர்த்துக் காலம் கழித்து வந்தான். இங்ஙனம் நெடுங்காலம் சென்றது. ஒருநாள் மாமுனிவர் ஒருவர் கொடிய நண் பகலில் வெப்பம் தாங்க மாட்டாமல் வழி தப்பிப் போகா நின்றவர் இப்பாவி திரியும் கானகத்தில் புகுந்து இவன் கண்ணுக்கு இலக்காயினர். அவருடைய பரிதாப நிலை யைக் கண்ட இவனுக்குத் தன்னையும் அறியாமல் அவர் பால் இரக்கம் உண்டாயிற்று. அவரிடம் வழி தப்பிப் போவதைச் சுட்டிக் காட்டினான். அவரும் அதனை உணர்வாராயினர். பொறுக்க முடியாத தாக விடாயுடன் அவர் ஒரு தடாகத்தை நாடிச் செல்கையில் அருகே ஓர் அழகிய பொய்கையைக் கண்ணுற்றார். தாப மிகுதியால் தவறி அக்குளத்தில் விழுந்திட்டார். அப்போது அருகி

22. பெரியாழ். திரு. 4.7:10
23. **விஷ்ணு தர்மத்தில் 97-வது அத்தியாயத்தில் இவனைப் பற்றிய வரலாறு விரிவாகக் கூறப் பெற்றுள்ளது.**

யிருந்த கத்திர பந்து தன் கையிலிருந்த வில்லையும் அம்பை யும் எறிந்துவிட்டு அம்மாமுனிவரை நீரினின்றும் அகற்றித் தாமரைக் கிழங்குகளை உணவாக நல்கி அவரது விடா யைப் போக்கி அவரை மகிழ்வித்தான்.

முனிவர் அக்குளக்கரையின் மீதிருந்த ஒரு மரத்து நிழலில் அமர்ந்து இளைப்பாறினர். கத்திர பந்தும் அவரது கால்களைப் பிடித்து அமுக்கி நோவு தீர உபசாரங்களைப் புரிந்தான். முனிவர் அவனுடைய வரலாற்றைக் கேட்க, அவனும் தான் சூரிய மரபில் வந்த விச்வதரன் என்பவருக்கு மகனாய்ப் பிறந்தவன் என்று தொடங்கித் தன்னுடைய பாவச் செயல்களை ஒன்றும் ஒளிக்காமல் அவரிடம் உரைப் பானாயினன். இவற்றைச் செவியுற்ற முனிவரும் அவனை நல்வழிப்படுத்த எண்ணி அவனுடைய தீச்செயல்களை விட்டொழித்து ஆருயிர்களிடம் அன்பு காட்டுமாறு பணித் தார். இவனும் தான் தீய குணங்கட்குப் பிறப்பிடமானவன் என்றும், இது தவிர வேறு நியமனம் பணிக்கப்பெற்றால் அதனைச் சிரமேற் கொள்ளக் காத்திருப்பதாகவும் கூறினான். எப்படியாவது இவனை உய்விக்கப் பேரவாக் கொண்ட முனிவரும் எப்போதும், 'கோவிந்த, கோவிந்த' என்று சொல்லிக் கொண்டிருந்தால் அஃது அவனுக்கு நன்மையைப் பயக்கும் என்று உரைத்துப் போயினர். அது முதலாகக் கத்திர பந்துவும் அத்திரு நாமத்தை இடை விடாது சொல்லிக் கொண்டு காலத்தைப் போக்கினன். சில ஆண்டுகள் கழித்து அவன் காலகதி அடைந்தான். பின் அந்தணர் குலத்தில் முற்பிறப்பு உணர்வுடன் பிறந் தான். அவனுக்குக் கொடிய சம்சாரத்தில் வெறுப்பு உண்டாயிற்று. தனக்கு இவ்வுயர் குலத்தில் பிறவி நேர்ந் ததும், முற்பிறப்பின் நினைவு ஏற்பட்டதும் முன்பு பண்ணின கோவிந்த நாமசங்கீர்த்தனத்தின் பயன் என் பதை உணர்வானாயினன். தனக்கு மேலான தன்மையை விளைவித்த அந்தக் கோவிந்தனையே ஆராதனம் செய்து 'தீண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி

தசையும்' வேண்டா நாற்றமிகும் உடலைவிட்டு 'மாயவன் சேற்றள்ளற் பொய் நிலத்தைக் கடந்து', 'நலமந்தமில்ல தோர் நாடுபுகும்' எண்ணத்துடன் துணிந்து அங்ஙனமே செய்து பரம பாகவதனாகி வீடு பேறும் எய்தினன் என்பது வரலாறு.

14

நமனும்முற் கலனும் பேச,
நரகில்நின் றார்கள் கேட்க,
நரகமே சுவர்க்க மாகும்
நாமங்கள் உடையன் நம்பி;
அவனதூர் அரங்க மென்னாது,
அயர்த்துவீழ்ந் தளிய மாந்தர்
கவலையுள் படுகின் றார்;என்(று)
அதனுக்கே கவல்கின் றேனே.[24]

[நம்பி—பரிபூரணன்; அளிய—அருமந்த; அயர்த்து—மறந்து; வீழ்ந்து—விஷயாந்தரப் படுகுழியில் வீழ்ந்து; கவலை—துக்கம்; கவல்தல்—கவலைப் படுதல்]

இதுவும் திருமாலையில் உள்ள பாசுரம். இதில் ஆழ்வார், " 'நாமங்கள் உடைய நம்பியின் திவ்விய தேசம் திருவரங்கம்' என்று சொன்னாலும் போதும்; இங்ஙனிருக்கவும் இவர்கள் விஷயாந்தரப் படுகுழியில் தலை கீழாக விழுந்து வருந்துகின்றார்கள்" என்று கவல்கின்றார்.

---

24. திருமாலை—12

2. இவன் வரலாறு 'விஷ்ணு தர்மத்தில்' 96-வது அத்தியாயத்தில் கூறப் பெற்றுள்ளது.

இங்ஙனம் கவல்கின்றபோது 'முத்கலன்' என்பானது வரலாற்றையும் குறிப்பிடுகின்றார்.

முத்கலன் வரலாறு : முத்கலன் என்பவன் பெரும் பாவிகளின் தலைவன். அவன் ஒருநாள் கோதானம் செய்யும்போது 'கிருஷ்ணாய' என்று சொல்லித் தானம் செய்தான். பின்னர் அவன் காலகதி அடைந்தபோது யம தூதர்கள் வந்து நெருங்கி அவனை யமனிடம் கொண்டு சென்றனர். யமன் இவனை எதிர்கொண்டு மரியாதை செய்வானாயினன். முத்கலன் யமனிடம் தன்னைப் பாராட்டுவதன் காரணத்தை வினவ, யமனும் கிருஷ்ணன் நாமத்தை ஒரு தடவை சொன்னதை நினைவூட்டினான். யமனுக்கும் முத்கலனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் நரகவாசிகளின் காதில் விழுந்தது. உடனே நரகமும் துக்கானுபவ நிலமாக இருந்த நிலை மாறி ஆனந்தானுபவ நிலமாகி விட்டது. யமன் 'கிருஷ்ணன்' என்ற திருநாமத்தைத் தனக்கு நன்மை செய்யும் என்று கருதி உச்சரிக்க வில்லை; முத்கலன் வேண்டுகோட் கிணங்கி உபதேசிக்கவும் இல்லை; நரகவாசிகளின் காதில் இது விழுந்து அவர்கள் உய்வுபெற வேண்டும் என்று நினைத்தும் சொல்லவில்லை. இதனைக் கேட்பவர்களும், பாவஞ் செய்வதற்குக் கவன்று அதற்குக் கழுவாயாகச் செய்து கொள்ளக் கூடிய காலத்திலும் கேட்க வில்லை. பாவத்தின் பலன்களை அநுபவிக்கும்போது கேட்டனர். அப்போதும் விருப்பத்துடன் கேட்டார்கள் அல்லர்; எதிர்பாராத விதமாகவே அத் திருநாமம் அவர்கள் செவியில் பட்டது. இப்படிப்பட்ட திருநாமம் இவ்வளவு பெருமையுடையது என்பது இவன் வரலாற்றால் தெளிவுறுத்தப் பெற்றது.

வியாக்கியான சூக்தி : ''ஒருவனுடைய அந்திமத சமயத்திலே திருமந்திரத்தை உபதேசித்து 'இத்தைச் சொல்லாய்' என்ன; அவனும் 'ஆமாகில் சொல்லிப் பார்க்கிறேன், ஆமாகில் சொல்லிப் பார்க்கிறேன்' என்று இத்தை அநேகம் உருச்சொல்லித் திருமந்திரம்தன்னைச் சொல்

லாதே செத்துப் போனான்; இரண்டும் அட்சரங்கள் ஒத்திருக்கச் செய்தே[25] சொல்ல வொட்டிற்றில்லையே பாப பலம்'' என்பதை நோக்குக.

15

இனிதிரைத் திவலை மோத
    எறியும்தண் பரவை மீதே
தனிகிடந் தரசு செய்யும்
    தாமரைக் கண்ணன் எம்மான்,
கனியிருந் தனைய செவ்வாய்க்
    கண்ணனைக் கண்ட கண்கள்,
பனியரும்பு உதிரு மாலோ
    என்செய்கேன் பாவி யேனே![26]

[திரை திவலை—அலைகளின் திவலைகள்; இனிது மோத—இனிதாக அடிக்க; எறியும்—கொந்தளிக்கின்ற; பாவை—கடல்; கிடந்து—கண் வளர்ந்தருளி; கனி—கொவ்வைக் கனி; கண்ட—சேவிக்கப் பெற்ற; பனி அரும்பு—குளிர்ந்த கண்ண நீர்த் துளிகள்; உதிரும்—பெருகா நிற்கும்.]

இது திருமாலைப் பாசுரம். இதில், எம்பெருமானைச் சேவிக்கப்பெற்ற ஆழ்வார் கண்களினுடைய களிப்புக்குப் போக்கு வீடான ஆனந்தக் கண்ணீர் பெருகப் பெற்று ''ஐயோ! இக் கண்ணீர் அரும்பரும்பாகத் துளிர்த்துக் கண்களை மறைத்து எம்பெருமானை இடைவிடாது சேவிக்க வொட்டாமல் தடை செய்கின்றனவே! கைக்கு

25. 'ஆமாகில் சொல்லிப் பார்க்கிறேன்' என்பதும் (மெய் யெழுத்து நீக்கி) எட்டெழுத்து; திருமந்திரமும் எட்டெழுத்து.
26. திருமாலை—18

எட்டினது வாய்க்கு எட்டா தொழியும்படி பெரும் பாவத்தைப் பண்ணின நான் இந்தத் துக்கத்திற்கு எங்குப் போய் முறையிட்டுக் கொள்வேன்?'' என்கிறார்.

'அரசு செய்யும் தாமரைக் கண்ணன்': இந்தச் சொற் போக்கால் எம்பெருமான் தனது திருக்கண்ணழகால் அனை வரையும் அகப்படுத்திக் கொள்ளுகின்றான் என்பது விளங்கும்.

'கண்ணனை': பெரிய பெருமாளைச் சேவித்தால், அவதாரத்தில் பிற்பட்டவர்கட்கும் உதவுகைக்காகக் கண்ணபிரான்தான் வந்து கண்வளர்ந்தருள்கின்றான் என்று நினைக்கும்படி இருக்குமாதலால் 'கண்ணனை' என்கின்றார். ''கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன்... அண்டர்கோன் அணியரங்கன்'' (அமல—10) என்றார் திருப்பாணாழ்வாரும். இவ்விடத்தில் பட்டர் அருளிச் செய்யும்படி: ''யசோதைப் பிராட்டி பிள்ளை மனம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசு மொசுப்பெல்லாம் பெரிய பெருமாள் பக்கலில் தோற்றி யிருக்கும்; வசிட்டாதிகளாலே நன்கு பயிற்றப் பட்டவர் களாய் வளர்ந்து வடிந்த விநயமெல்லாம் தோற்றும்படி யான சக்கரவர்த்தித் திருமகனை நினைக்கும்படி இருக்கும். நம் பெருமாளைக் கண்டால்'' என்று. மூலவரைப் **'பெரிய பெருமாள்'** என்றும், உற்சவரை **'நம்பெருமாள்'** என்றும் வழங்குவது மரபு.

16

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி

கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ
என்செய்வேன் உலகத் தீரே![27]

[குடதிசை—மேற்குத் திக்கில்; குணதிசை—கிழக்குத் திக்கில்; பின்பு—பின்புறம்; நோக்கி—பார்த்துக் கொண்டு; அரவு அணை—பாம்புப் படுக்கை; துயிலும் ஆ—அறிதுயில் செய்யும் தன்மையை; கண்டு—காண்பதனால்; ஆலோ—ஐயோ]

இது திருமாலைப் பாசுரம். பெரிய பெருமாள் நான்கு திக்குகளுக்கும் தன்சம்பந்தம் உண்டாகும்படி பாம்பணைப் பள்ளியனாய் அறிதுயில் செய்தருள்வதைச் சேவித்து தனது உடல் நீராய்க் கரைந்து உருகிச் செயலற்றிருத்தலை உலகத்தார்க்கு வியப்போடு அறிவிக்கின்றார் ஆழ்வார்.

பூமியின் படைப்பு மனிதர் விலங்குகள் தாவரங்கள் இவை வாழ்வதற்காக என்றும், ஆகாயத்தின் படைப்பு தேவர்கள் வாழ்வதற்காக என்றும் ஏற்பட்டுள்ளன. திக்குகளின் படைப்பு வீண் என்று நினைக்க வேண்டா; சேதநர்க்குத் தன்மீது அன்பை யுண்டாக்குமாறு எம்பெருமான் தான் பள்ளி கொள்வதற்காகவே திக்குகளைப் படைத்ததும் என்று இப்பாட்டால் கூறுவதாகச் சிறப்புரை தருவர்.

ஐதிகம்: “மேலைத் திக்கு—உபய விபூதிக்கும் தலைமை வகித்தலைத் தெரிவிக்குமாறு தான் சூடின திருவபிடேகத்தை யுடைய திருமுடியை வைப்பதானாலும், கீழைத் திக்கு—சகல லோகமும் உய்விக்கும்படி சரணமடைதற்குரிய தனது திருவடிகளை நீட்டுவதனாலும், வடக்குத் திக்கு—முரட்டு சமஸ்கிருதம் நடையாடுவதாகி

27. திருமாலை—19

ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச் சொல் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கிலுள்ளா ரெல்லாரும் ஈடேறு தற்கு ஏற்பட வேண்டிய பின்னழகையெல்லாம் காட்டுவத னாலும், தெற்குத் திக்கு—தனது அந்தரங்க பக்தனான வீபீஷணாழ்வானுக்காகத் தனது திருக் கண்களை வைத்து அன்போடு நோக்குவதானாலும் என இவ்வாறு நான்கு திக்குகளும் பயன்படும் என்க. விபீஷணாழ்வான் சிரஞ்சீவி யாய் என்றும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றான் என்பது நூற் கொள்கை.''

இப்படி நாற்றிசையிலுள்ளாரும் பயன்பெற வேண்டு மென்று ஒரு வியாஜம் வைத்து எம்பெருமான் பள்ளி கொண்டதும் ஆழ்வார் பொருட்டாகவே ஆயிற்று என்ற கருத்து மூன்றாமடியிலுள்ள 'எந்தை' என்பதனால் தோன்றும்.

17

குரங்குகள் மலையைத் நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட் டோடி,
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலும் போலேன்,
மரங்கள்போல் வலிய நெஞ்ச
வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க் காட்செய் யாதே
அளியத்தேன் அடர்கின் றேனே![28]

[நூக்க—புரட்டித் தள்ளிக் கொண்டு வர; குளித்து —நீரிலே மூழ்கி; தரங்கம்—அலை; அடைக்கல்

28. திருமாலை—19

உற்ற—தூர்க்கையில் ஒருப்பட்ட; சலம்—கபடம்; போலேன் — ஒத்திருக்கின்றே னில்லை; வலிய—கடினமான; அளியத்தேன்—அருமந்த மனிதனான நான்; நெஞ்சு தன்னால் —பாவனையால்; ஆள் செய்யாதே—அடிமை செய்யாமல்; அயர்கின்றேன் — பாழாக்கி னேன்.]

இது திருமாலையிலுள்ள ஒரு பாசுரம். "வானர வீரர்கள் மலைகளைத் தள்ளிக் கொண்டு வருங்கால் கபடமற்ற அணில்களும் நீரில் மூழ்கி உலர்ந்த மணலில் புரண்டு ஓடி உடலில் ஒட்டிக் கொண்ட மணல்களை உதறிக் கடலைத் தூர்க்கையில் பங்கு பெறுகின்றன. அந்த அணில்களைப் போலேயும் ஒத்திருக்கின்றேனில்லை. மரங்களைப்போல் கடின நெஞ்சினையுடைய யான் வஞ்சனையையே தொழிலாகக் கொண்டு அழகிய மணவாளனுக்குப் பாவனையால் கூட அடிமை செய்யாமல் மானிடப் பிறவியைப் பாழாக்கி னேனே" என்று கதறுகின்றார்.

இதிலுள்ள இதிகாசம் : இராமாவதாரத்தில் பெருமாள் இலங்கை நகர் எழுந்தருள்வதற்காகக் கடலில் அணைகட்ட நேர்ந்தது. அப்போது வானர வீரர்கள் மலைகளை உருட்டிக் கொண்டு வந்து கடலைத் தூர்த்தனர். இதனைக் கண்ணுற்ற அணிற்பிள்ளைகள் "இந்த வானரங்கள் தமது ஆற்றலுக் கேற்றவாறு ஏதோ காரியங்களைச் செய்யும் போது நாமும் நமது ஆற்றலுக் கேற்றவாறு இப் பெரிய காரியத்தில் ஒன்றைச் செய்வோம்" என்று தீர்மானிக்கின்றன. உடனே எல்லா அணிற் பிள்ளைகளும் கடலில் மூழ்குதல், அந்த ஈர உடம்புடன் கரைமேலுள்ள உலர்ந்த மணலில் புரள்தல், உடலில் ஒட்டிக்கொள்ளும் மணலைக் கடலில் கொண்டு உதறுதல்—என்று காரியங்களைச் செய்து சேது கட்டும் செயலுக்கு உதவி புரிந்தன. இதனை ஆழ்வார் அருளிச் செய்கின்றார்.

அமலனாதிபிரான்

18

அமல னாதிப்பிரான் அடியார்க்
கென்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை
யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம்வந் தெனகண்ணி
னுள்ளன வொக்கின்றதே.[29]

[அமலன்—பரிசுத்தன்; ஆதி—ஜகத்காரண பூதன்; பிரான்—உபகாரன்; விமலன்—சிறந்த புகழை யுடையவன்; விரை—வாசனை; பொழில்—சோலைகள்; நிமலன் — ஆச்ரயிப்பார்க்கு அரியனவா யிருக்கிற குற்றமற்று, ஆச்ரித பாரதந்திரியத்தை வெளியிட்டு நிற்குமவன்; நின்மலன் — அடியார்களின் குற்றத்தைக் காண்கையாகிற தோஷமில்லாத வத்சலன்; நீதிவானவன்—சேஷ சேஷிமுறைவழுவாதபடி நியாயமே செல்லும் நிலமான பரமபதத்துக்கு நிர்வாககன்]

பெரிய பெருமாள் திருவடிகளில் அழகுமேல் விழுந்து தம்மைப் பரவசமாக்கியவாறு கூறுகின்றார் ஆழ்வார், இதில். அமலன், விமலன், நிமலன், நின்மலன் என்ற நான்கு சொற்களுக்கும் பொருள் ஒன்றே; தாத்பரிய பேதம் மாத்திரம் கொள்ள வேண்டும்.

---

29. அமலனாதி—1

அமலன்—தாழ்ந்த வகுப்பினரான் தாம் சந்நிதிக்குள்ளே புகுவதனால் பெருமாளுக்குப் பெரிய குற்றம் உண்டாகிவிடும் என்று அஞ்சியிருந்தவர் அந்த ஐயம் தவிர்ந்தமை தோற்ற 'அமலன்' என்றார்.

விமலன்—தமது சிறுமையை நோக்காதே தம்மைப் பாகவதர்க்கு ஆட்படுத்தி ஒரு சீரிய பொருளாக ஆக்குகையாலே எம்பெருமானது திருமேனியிற் பிறந்த ஓர் அழகிய புகரை அநுபவிப்பார் 'விமலன்' என்றார்.

நிமலன்—பிரமன் சிவன் முதலானோரும் அஞ்சி அணுக வேண்டும்படியான ஐசுவரியம் இருக்கச் செய்தேயும் அடியார்க்கு எளியனாயிருக்குந் தன்மையை வெளியிட்டு நிற்குமவன் என்பார் 'நிமலன்' என்றார்.

நின்மலன் — அடியார்களின் குற்றங்களைக் காண்கையாகிற குற்றமில்லாதவன் என்றபடி. அடியார்களுடைய குற்றங்களைக் கண்டாலும் அவற்றைப் போக்கியமாகக் கொள்ளுமவனிறே எம்பெருமான்.

ஐதிகம்: பிள்ளை திருநறையூர் அரையரைச் சிலர், "பெரிய பெருமாளை அநுபவிக்க இருந்த இவ்வாழ்வார் திருவேங்கடமுடையான் பக்கல் போவானேன்?" என்று கேட்க, "ஆற்றிலே அழுந்துகிறவன் ஒருகாலைத் தரையிலே ஊன்றினால் பிழைக்கலாமோ என்று காலந் தாழ்க்குமாப் போலே, இவரும் பெரிய பெருமாள் அழகிலே அழுந்துகின்றவராகையாலே, திருமலையில் கால் தாழ்ந்தார்" என்றாராம். "ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரலாறு சொல்லிக் கவிபாட வேணும்; பரமபதத்தில் நின்றும் வடமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே வைகுண்டத்தில் நின்றும் திருமலையிலே தங்கியாய்த்துக் கோயிலுக்கு வந்தது; அவ்வரலாற்றைப் பாடுகிறபடி" என்றும் ஒருகால் அருளிச் செய்தாராம்.

19

உவந்த உள்ளத்தனாய்
　　உலகமளந் தண்டமுற
நிவந்த நீள்முடியன்
　　அன்றுநேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்
　　கடியார்பொழில் அரங்கத் தம்மான்,அரைச்
சிவந்த ஆடையின் மேல்சென்ற
　　தாமென சிந்தனையே[30]

[உவந்த—மகிழ்ச்சியோடுகூடிய; அண்டம் உற—அண்டகடாகத்தளவும் சென்று; நிவந்த—உயர்த்தியை அடைந்த; அன்று—முற்காலத்தில்; நேர்ந்த—எதிர்த்து வந்த; நிசாசரர்—அரக்கர்களை (நிசாசரர்—வடசொல்; இரவில் திரியுமவர் என்பது பொருள்) கவர்ந்த—உயிர் வாங்கிய; வெம்கணை — கொடிய அம்பு; காகுத்தன்—இராமன் (ககுஸ்தன் என்று புகழ் பெற்ற அரசனது குலத்தில் பிறந்தவன்; எருது வடிவங் கொண்ட இந்திரனது முகப்பின் மேலேறிப் போர் செய்யச் சென்றதலால் இவ்வரசனுக்குக் ககுஸ்தன் என்று பெயராயிற்று; ககுத்—முசுப்பு; ஸ்தன் இருப்பவன்); அரை—இடுப்பு; சிவந்த ஆடை — பீதாம்பரம், சிந்தனை—நினைவு; சென்றது—பதிந்து]

முன் பாசுரத்தில் "கமலபாதம் வந்து" என்றதும், இப் பாசுரத்தில் "ஆடையின் மேல் சென்றதாம் என சிந்தனை" என்றதும் உற்று நோக்கத் தக்கவை. முதலில் எம் பெருமான் தானாக ஆழ்வாரை அடிமைகொள்ள மேல்

30. அமலனாதி—2

விழுந்தபடியும், பிறகு ஆழ்வார் ருசிகண்டு தாம் மேல் விழுந்தபடியும் இவற்றால் தோற்றும். ஈன்ற நாகானது (பசுவானது) தன் கன்றுக்கு முதலில் முலைச் சுவை தெரியாமையாலே தானே தன் முலையை அதன் வாயிலே கொடுக்கும்; பின்பு சுவடறிந்தால் நாகு காற்கடை கொண்டாலும் கன்று அதன்மேல் விழும்; அப்படியே திருவடிகள் தானே வந்து போக்கியமானவாறு கூறினர் முதற் பாசுரத்தில்; இதில் தம்முடைய நெஞ்சு சுவடறிந்து மேல்விழுமாறு கூறுகின்றனர்.

உலகம் அளந்த வரலாறு: மாவலி என்னும் அரக்கர் கோமான் தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று மூன்று உலகங்களையும் தன் வசப்படுத்தி அரசாட்சி செய்துகொண்டு செருக்குற்றிருந்தான், அரசு இழந்ததேவர்கள் திருமாலைச் சரணமடைந்துதம்நிலையை மீண்டுப் பெற வேண்டினர். அப்பெருமான் குள்ள வடிவமான வாமனாவதாரங் கொண்டு காசியப முனிவருக்கு ஆதித் தேவியிடம் தோன்றிய அந்தணமாணியாகி, வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டிய அனைத்தையும் கொடுத்து வந்த அந்த மாவலியிடம் சென்று தவம் செய்வதற்கு தன் காலடியால் மூவடி மண் வேண்டினான். மாவலியும் அது கொடுத்தற்கு இசைந்து அவன் வேண்டிய நிலத்தைத் தாரை வார்த்துத் தந்தான். உடனே வாமனன் திரிவிக்கிரமனாக விண்அளாவி வளர்ந்து ஓரடியால் மண்ணுலகத்தையும், மற்றோரடியால் விண்ணுலகத்தையும் அளந்து தானமாகப் பெற்ற பின்னுமோரடி நிலத்திற்கு இடமில்லாதொழியவே அதற்காக அவன் வேண்டுகோளின்படி அவனது முடியில் தன் திருவடியை வைத்து அவனைப் பாதாளத்தில் அழுத்தி அடக்கினன் என்பதாம். மண்ணுலகத்தை அளந்ததில் அதன் கீழுள்ள பாதாள லோகமும் அடங்கிற்று; எனவே எல்லா உலகங்களையும் அளந்தானாயிற்று.

உலகம் அளக்கும்போது அகங்காரிகளோடு வேற்றுமையின்றி எல்லார் தலையிலும் திருவடியை வைத்து அவர்

களை தன்யராக்கப் போகிறோமென்று எம்பெருமான் திருவுள்ளத்திற் கொண்ட உகப்பை 'உவந்த உள்ளத்த னாய்' என் தொடரால் வெளியிடுகின்றார் ஆழ்வார்.

மேற்குறிப்பிட்ட உலகளந்த வரலாற்றைத் திருமங்கை மன்னனும்,

**"தன்உருவம் ஆரும் அறியாமல் தான் அங்குஓர்
மன்னும் குறள்உருவில் மாணியாய்—மாவலிதன்
பொன்இயலும் வேள்விக்கண் புக்கிருந்து போர்வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி
'என்னுடைய பாதத்தால் யான்அளப்ப மூவடிமண்
மன்னா! தருகஎன்று வாய்திறப்ப—மற்றுஅவனும்
"என்னால் தரப்பட்டது' எனறதுமே, அத்துணைக்கண்
மின்னார மணிமுடிபோய் விண்தடவ—மேல்எடுத்த
பொன்னார் கணைகழல்கள ஏழ்உலகும் போய்கடந்து அங்கு
ஒன்றா அசுரர் துளங்க, செலநீட்டி
மனஇவ் அகல்இடத்தை மாவலியை வஞ்சித்து
தன்உலகம் ஆககுவித்த தாளானை"**

என்று அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

20

**துண்ட வெண்பிறை யன்துயர்
தீர்த்தவன், அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர்
மேய அப்பன்**

---

31. பெரிய திருமடல்.

அண்ட ரண்டபகி ரண்டத்தொரு
மாநிலம் எழுமால்வரை முற்றும்
உண்ட கண்டங்கண்டீர் அடியேனை
உய்யக் கொண்டதே[32]

[துண்ட—ஒரு துண்டாயிருக்கிற: வெண் பிறையன் —வெளுத்த சந்திரனை உடையவனான சிவன்; துயர்—பாதகம்; அம்சிறை—அழகிய சிறகையுடைய; பொழில்—சோலைகள்; மேய —பொருந்திய; அண்டர்—அண்டத்துக்குட் பட்ட தேவாதிவர்க்கங்களையும்; அண்டம்— அண்டங்களையும்; பகிரண்டம் — அண்டா வரணங்களையும்; ஒரு மாநிலம் — ஒப்பற்ற மகாப்பிருதிவி; எழுமால்வரை — ஏழு குல பர்வதங்கள்; முற்றும் — அனைத்தையும்; உண்ட—அமுது செய்த; கண்டம்—கழுத்து]

எம்பெருமானின் கண்டம் தன்னை உய்வித்தது என்று கூறிப் பெருமிதம் கொள்ளுகின்றார் இதில் ஆழ்வார்.

துண்ட வெண்பிறையன் துயர் தீர்த்த வரலாறு : ஒரு காலத்தில் பரமசிவன் தன்னைப் போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குவதற்கு இடமாயிருக்கிறதென்று கருதி அவனது சிரமொன்றினைக் கிள்ளி எடுத்து விட்டான். 'பிரம்மஹத்தி தோஷமாக' அக்கபாலம் அப்படியே அவன் கையில் ஒட்டிக் கொண்டது. 'இதற்கு என் செய்வது?' என்று அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவம் தொலையப் பிச்சை எடுக்க வேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையை விட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங் களிலும் சென்று பிச்சை ஏற்றுக்கொண்டே வருந்தித் திரிந்

32. அமலனாதி—6

தும் அக்கபாலம் நிறைந்திலது; தம் கையை விட்டும் நீங்கிற்றிலது. பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயண மூர்த்தியை வணங்கி இரந்தபோது, அப்பெருமான் தன் மார்பினை நகத்தால் கீறி, சிறிது குருதியை 'அட்சயம்' என்று பிச்சையிட்டார். உடனே கபாலம் நிறைந்து அது கையை விட்டு அகன்றது என்பதாகும். இதனால் சீமன் நாராயணனுடைய பரத்துவத்தை வெளியிட்டவாறு. இந்தஇதிகாசம் பெரிய திருமொழி 6.7:9லும் வந்துளது.

பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில், "சந்திரனுடைய க்ஷயத்தைப் போக்கினான் என்றுமாம்" என்ற பொருளும் அருளிச் செய்யப்பெற்றிருப்பதால் "துண்டவெண் பிறையின்" என்றும் ஒரு பாடம் உண்டெனத் தெரிகின்றது.

பின்னிரண்டடிகளில் உள்ள வரலாறு : காரணாவஸ்தையில் எல்லாக் காரியங்களையும் தம் பக்கலில் உபசம்கரித்த பின்பு சிருஷ்டிக்குமாறு, "வெற்றிப் போர் கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி"[33] என்றபடி எல்லாப் பொருள்களையும் பிரளயப் பெருங்கடலில் நின்றும் தப்ப வைத்துத் தன் திருவயிற்றிலே அடக்கி நோக்கின பெருநன்றியையும், இப்போதும் தம்மைச் சம்சார சாகரம் விழுங்காதபடி ஆட்படுத்திக் கொண்ட உபகாராதி சயத்தையும் ஆநந்தமாகப் பேசுகின்றார்.

21

பரிய னாகி வந்த
அவுணன் உடல்கீண்ட, அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்
தமலன் முகத்து

---

33. பெரி. திரு. 11.6:3

கரிய வாகிப் புடைபடர்ந்து மிளிர்ந்து
செவ்வரி யோடி, நீண்டஅப்
பெரிய வாய கண்கள்
என்னைப் பேதைமை செய்தனவே.[34]

[பரியனாகி—பெரிய வடிவு கொண்டு; அவுணன்—இரணியன்; கீண்ட—கிழித்துப் போட்ட; அரிய—அணுக முடியாத; முகத்து—திருமுக மண்டலத்தில்; புடைபரந்து—விசாலமாகி]

எப்போதும் அழகிய மணவாளனின் திருக்கண்களின் பெருமையையே தாம் வாய்வெருவி, பலரும் 'இவன் பேயன்' என்று ஏசும்படியான உன்மத்த நிலையை அடைந்து விட்டதாக அருளிச் செய்கின்றார். ஏழையராவி யுண்ணும் இணைக் கூற்றங்கொலோ அறியேன், ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள் கொலோ அறியேன்'[35] என்று திருக்கண்களில் ஈடுபட்டு நம்மாழ்வார் பட்ட பாடு இவரும் படுகின்றார் போலும்.

அவுணன் உடல்கீண்ட வரலாறு : தனித்தனி தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், பகலிலும் இரவிலும் பூமியிலும், வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமுண்டாகாதபடி வரம் பெற்றவன் இரணியன். இவன் தேவர் முதலியவர்கட்கும் கொடுமைகள் இயற்றித் தன்னையே அனைவரும் கடவுளாக வணங்கி வரும்படி செய்து வந்தான். இவனுடைய மகனான பிரகலாதாழ்வான் இளமை தொடங்கி திருமால் வழிபாட்டாளனாய் வளர்ந்து வந்தான். தந்தையின் கட்டளைப் படி முதலில் 'இரண்யாய நம:' என்று சொல்லிக் கற்காமல் 'நாராயணாய நம;' என்று சொல்லி வந்தான். கடுஞ்

34. அமலனாதி—8
35. திருவாய். 7.7:1

சினங் கொண்ட இரணியன் பிரகலாதனைத் தன் வழியில் இணக்குவதற்குப் பலவாறு முயன்றும் தன் வழிக்கு வராத அவனைக் கொல்லுவதற்குப் பலவாறு முயன்றும் அவன் திருமால் அருளால் இறவாதொழிய, ஒருநாள் மாலை நேரத்தில் 'அடா! நீ சொல்லும் நாராயணன் என்பான் எங்கு உளன்? காட்டு' என்ன, அப்பாலகன், 'தூணிலும் உளன், துரும்பிலும் உளன், எங்கும் உளன்' என்று உறுதியாய்ச் சொல்ல,[36] உடனே இரணியன் 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரில் நின்ற ஒரு தூணைப் புடைக்க, அதிலிருந்து திருமால் உடனே மனித உருவமும் சிங்க உருவமும் கலந்த நரசிம்ம மூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தன் மடிமீது வைத்துக் கொண்டு தனது திருக்கை நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டுப் பிரகலாதனுக்கு அருள் செய்தான் என்பதாம்.

திருமங்கையாழ்வார் இந்த அவதாரத்தில்,

> **பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்**
> **வாயில்ஓர் ஆயிரம் நாமம்**
> **ஒள்ளிய ஆகிப் போத,ஆங் கதனுக்கு**
> **ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகிப்**
> **பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்ப**
> **பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்**
> **தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை[37]**

என்று ஆழங்கால் பட்டதை நாம் அநுபவிக்கின்றோம்.

---

36. இரணியன் இவ்வாறு கேட்டதும் எம்பெருமான் அணுக்கள் தோறும் நரசிங்க வடிவாய் எழுந்தருளியிருக்க, இதனால் சிறிது நேரம் அகில முழுவதும் நரசிங்க கர்ப்பமாய் வரதனைப் பட்டதாக ஒரு வடமொழிக் கவிஞர் கற்பனை செய்கின்றார்.

37. பெரி. திரு. 2.3:8

22

கொண்டல் வண்ணனைக்
　　கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்
　　என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணிய
　　ரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்
　　மற்றொன்றினைக் காணாவே.[38]

[கொண்டல்—மேகம்; வண்ணன்—நிறத்தையுடையவன்; கோவலன்—கோபாலன்; கவர்ந்தான்—கொள்ளை கொண்டவன்; அண்டர்கோன்—நித்தியசூரிகட்குத் தலைவன்; கண்ட—சேவிக்கப்பெற்ற; மற்று ஒன்றினை—வேறு ஒன்றினையும் (பரமபத நாதனையும்); காணா—காண மாட்டா.]

இந்த ஆழ்வார் 'அடியேன்' என்னுமதொழிய இப் பிரபந்தம் தலைக்கட்டுமளவிலும் தம்முடைய பேரும் ஊரும் மறக்கும்படி தாம் பெற்ற அநுபவத்திற்கு இனி ஓர் இடையூறு (விச்சேதம்) வாராதபடி பெரிய பெருமாள் அருள்புரிந்தமையைக் கண்டு வியந்து அப்பெரிய பெருமாளுடைய திருமேனியிலேயே தாம் நீராக ஒன்றியபடியைப் பேசித் தலைக்கட்டுகின்றார்.

ஐதிகம்; கூரத்தாழ்வான் தம் சுந்தர பாஹுஸ்தவத்தில் பண்டு யசோதைப் பிராட்டி முத்தங் கொடுத்த சுவடு இன்றும் அழகர் திவ்விய கன்னங்களில் திகழா நிற்கும் என்று அநுபவித்தாற்போல, இவரும் பண்டு வெண்ணெ

38. அமலனாதி—10

யுண்ட முடை நாற்றம் இன்றும் பெரிய பெருமாள் திருப் பவளத்திலே கமழா நிற்பதாக அநுபவிக்கின்றார்.

தசரத சக்கரவர்த்தி தன்னுடைய அரசு ஐசுவரி யத்தைப் புசிக்கைக்கு 'எனக்கொரு பிள்ளை வேணும்" என்று நோன்புநோற்றுப் பெருமாளைப்பெற்றதைப்போல, நந்தகோபரும் "கானாயன் கடிமனையில் தயிருண்டு நெய் பருக நந்தன் பெற்ற ஆனாயன்"[39] என்றபடியே திருவாய்ப் பாடியில் பால் முதலானவற்றின் நிறைவு அடங்கலும் (கவ்ய ஸம்ருத்தி அடங்கலும்) பாழ்போக வொண்ணா தென்று இத்தை அமுது செய்கைக்காக நோன்பு நோற்றும் பெற்ற பிள்ளையாய்த்து ஸ்ரீ கிருஷ்ணன். பெரிய பெருமாள் கொறுட்டை (உதட்டை) முகர்ந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறா நிற்குமாம்.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

23

அருள்கொண் டாடும் அடியவர் இன்புற
அருளி னான்அவ் வருமறை யின்பொருள்
அருள்கொண் டாயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண் டீர்இவ் வுலகினில் மிக்கதே.[40]

[அருள் — இறைவனின் கருணை; அடியவர்— பக்தர்கள்; இன்புற—களிப்புற; அருள் கொண்டு—பரமகிருபை கொண்டு: ஆயிரம்— ஆயிரம் திருவாய் மொழி; மிக்கது—அதிசயித் துள்ளது]

39.
40. கண்ணி நுண். 8

எம்பெருமானது அருளைக் காட்டிலும் ஆழ்வாரின் அருளே சீரிய தென்கின்றார்.

'அருள்கொண்டாடி அடியவர் இன்புற' : 'கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை, நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையி னால் அருள் செய்தான்'[41] என்றபடி "சகல வேத வேதாங்க நூல்களையும் தந்தருளின் எம்பெருமானுடைய கிருபைக்கு மேற்பட உலகில் வேறொரு கிருபையும் உண்டோ? என்று அந்த பகவத் கிருபையிலே ஈடுபட்டிருந்த பாகவதர்கள், ஆழ்வார் திருவாய்மொழி அருளிச் செய்த பின்னர், ,ஆ! ஆ!! இவ்வளவு இனிமையான திவ்வியப் பிரபந்தம் போன்ற ஒரு நூலையும் இதுவரை ஈசுவரன் நமக்கு அருளவில்லை; இன்றளவும் ஈசுவரனுக்கு மேற்பட்ட கிருபாநிதி யாரும் இல்லையென்று மயங்கிக் கிடந்தோம்; 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தை'[42] அருளிச் செய்த ஆழ்வாருடைய திருவருளுக்கு நிகரான அருளும் இனி உலகிலுண்டோ?" என்று வியந்து மகிழ்ந் தனராம்.

ஐதிகம் : திருவாய்மொழியில் "எண்ணாதனகள் எண்ணும் நம் முனிவர் இன்பம் தலை சிறப்ப, பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி"[43] என்றவிடத்து அருளிச் செய்யும் பொருள் சிறப்பை ஈண்டு அநுசந்திக்க, எண்ண முடியாதவற்றை எண்ணுகின்றவர் களான நம் முனிவர்கள் பேரானந்தம் பெறும்படியாகத் திருவாய்மொழி அவதரித்ததாம். எண்ணாதவற்றை எண்ணுகையாவது என்? எனில்; திருவாய்மொழி அவதரிப்ப தற்கு முன்பு பல பெரியோர் அவை கூடி "எம்பெரு மானுடைய சொரூப குண விக்கிரக விபூதிகளையெல்லாம்

41. பெரி. திரு. 2.8:5
42. திருவாய். 1.5:11
43. ஷை 10.7:5

முற்றும் நிறைவாகப் பேசவல்ல பிரபந்தம் ஒன்று கூட இல்லை; அப்படிப்பட்ட பிரபந்தம் ஒன்று அவதரிக்க வேணு மென்று நாம் எல்லாரும் கூடி எம்பெருமானை வேண்டிக் கொள்ள வேணும்'' என்று பேசி எழுந்து போனார்களாம். அவர்களே திருவாய்மொழி அவதரித்த பின்பு மறுபடியும் ஒரு பேரவை கூட்டி 'எம்பெருமானுக்கு இன்னமும் குண விக்கிரக விபூதிகள் உண்டாக வேணும்' என்றார்களாம். உள்ள குண விக்கிரக விபூதிகளையெல்லாம் திருவாய் மொழியில் பேசி முடித்து விட்டார் ஆழ்வார்—என்பது இதன் கருத்து.

'இன்பம் தலை சிறப்ப' : இங்கு ஈடு; ''திருவாய்மொழி அவதரித்த பின்பு 'அவனுக்குக் குண விபூதிகள் போராது' என்று இருந்த இழவு தீர்ந்து அத்தால் நிரதிசயாநந்தி களாக'' என்பது. 'திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்பு 'எம்பெருமானுக்குள்ள குண விபூதிகளுக்குத்தக்க பிரபந்தம் ஒன்று அவதரிக்கவில்லையே' என்று இழவு பட்டிருந் தார்கள். திருவாய்மொழி அவதரித்த பின்பு அந்த இழவு தீர்ந்து, எம்பெருமானுக்கு குண விக்கிரக விபூதிகள் போராது என்று இழவுற்றாராயினர்' — இதுவே நம் பிள்ளையின் திருவுள்ளம். அதாவது, திருவாய்மொழி அவதரித்த பின்பு எம்பெருமானுக்கு குண விபூதிகள் போராதென்று நினைத்து, முன்னிருந்த இழவு தீரப் பெற்ற தாகக் கொள்ளவேணும்.

பெரிய திருமொழி

முதல் பத்து

24

முற்ற மூத்துக் கோல்துணையா
முன்னடி நோக்கி வளைந்து
இற்ற கால்போல் தள்ளி
மெல்ல விருத்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த
பேய்ச்சி பெருமுலை யூடு,உயிரை
வற்ற வாங்கி உண்ட
வாயான் வதரி வணங்குதுமே!

[முற்ற — பூர்த்தியாக; மூத்து — கிழத்தனம் அடைந்து; முன்அடி—முன்கால்; இற்ற— முறிந்த; இளையாமுன் — அடைவதற்கு முன்னே; வற்ற—மீதியின்றி; வாயான்— திருப்பவளத்தை யுடையவன்]

இது திருமங்கையாழ்வார் திருவதரியை மங்களா சாசனம் செய்துள்ள திருமொழியிலுள்ள ஒரு பாசுரம்[1]. இதில் ஆழ்வார், ''உடலுக்கு எவ்வளவு கிழத்தனம் வரக் கூடுமோ அவ்வளவும் வந்து, நடந்து செல்ல மாட்டாமல் ஒரு கோலைக் கையிலே ஊன்றுகோலாகப் பிடித்துக் கொண்டு முதுகு கூனிட்டுப் போகவே முன்னடியை நோக்கி வளைந்து, முறிந்துபோன காலைக் கொண்டு நடக்க முடியாதது போல ஓரடியும் எடுத்து வைக்க முடியாமல் தடுமாறி, தடிபிடித்துக் கொண்டும் நடக்க மாட்டாமல் திடீரென்று தரையில் விழுந்திருந்து கொண்டு பெருமூச்சு விட்டு இப்படியாகச் சிரமப்படுகின்ற காலம் வந்துவிட்டால் பதரிகாச்ரமத் திருத்தலப் பயணத்தை நெஞ்சால் நினைக்க

1. பெரி. திரு. 1.3;1

வும் முடியாதே; ஆகையால் அப்படிப்பட்ட கேடான நிலைமை வருவதற்கு முன்னே யசோதையின் வடிவு கொண்டு தன்னைக் கொல்ல வந்த பூதனையின் முலையின் வழியாக அவளுடைய உயிரை மீதியின்றிப் பருகின எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற பதரிக்குச் சென்று வணங்குவோம் வாருங்கள்'' என்று அன்பர்களை அழைக்கின்றார்.

'கோல்துணையா' என்ற விடத்து வியாக்கியானத்தில் ஓர் **ஐதிகம்:** நஞ்சீயர் சந்நியாச்ரமத்தை மேற்கொண்ட நிலையில் திரிதண்டம் (முக்கோல்) தரித்துக் கொள்ளும் போது, 'ஓ திரி தண்டமே! நீ எனக்குத் துணையாயிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்ற பொருளையுடைய மந்திரத்தை (**ஸகா மா கோபாய**) உச்சரிக்க வேண்டும் என்று கேட்டு, ''எல்லாவற்றையும் அறிய வல்லவரையும் முழு ஆற்றலையுடையவரையும் பேரறிவுடையவரையுமுள்ள எம்பெருமானையே துணையாகப் பற்ற வேண்டியிருக்க அசேதநமான தண்டத்தை நோக்கி இங்ஙனம் சொல்லும் படியாக நேர்ந்ததே'' என்று சாதித்தாராம். சாத்திர விதிப்படி கோலைத் துணைகொள்ள வேண்டியது அங்கு; கிழத்தனத்தில் கோலைத் துணை கொள்வது ஆற்ற லற்றமையினாலே.

இன்னுமோர் ஐதிகம் : நஞ்சீயர் பட்டர் திருவடிகளுக்கு அந்தரங்கராய் இருக்கின்ற நாளிலே ஒரு கைசிக துவாதசி யன்று பட்டர் பிரம்மரதத்தில் எழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக, 'உத்தமாச்ரமியாய் திரிதண்ட தாரியான உமக்கு இக்காரியம் தகாது' என்று பட்டர் முதலானோர் மறுத்துக் கூற, நஞ்சீயர், ''எனக்குத் துணையாகி என்னை இரட்சிக்க வேண்டும்'' என்கின்ற மந்திரத்தைச் சொல்லி ஏற்றுக் கொண்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதியாகின்றதோ? இக்கோல் எனக்குத் துணை யல்லவோ? சொரூபரட்சணத்துக்கு இக்கோல் இடையூ

றாயின் இஃது எனக்கு வேண்டா'' என்று சொல்லித் திரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய ஆசாரிய பக்தியைக் கண்டு அனைவரும் வியந்தனராம்.

25

கலையும் கரியும்2 : இது சாளக்கிராமத்தின் மீது மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருமொழி.

இதில் உள்ள ஐதிகம் : சௌபரி என்ற ஒரு மாமுனிவன் நீர் நிலையிலிருந்து கொண்டு தவம் புரிந்து கொண்டிருந்தான். அங்கள் மீன்கள் கூடிக் களித்து விளையாடக் கண்டான். தானும் இவ்வாறு குடும்ப வாழ்க்கையில் கூடி நின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டான். மாந்தாதா என்னும் அரசனிடம் சென்று அவனுடைய பல பெண்களையும் தனக்குக் கன்னிகாதானம் செய்யுமாறு வேண்டினான். அரசன் இவனுடைய கிழத்தனத்தையும் குரூர உருவத்தையும் கண்டு இசைய ஒருப்பட வில்லை. எனினும் முனிவன் முனிந்து சபித்துவிடக் கூடும் என்று அஞ்சினான். முனிவனைப் பெண்களிருக்குமிடத்திற்கு அனுப்பி அவர்கள் இசைந்தால்தான் திருமணம் புணர்ப்பதாகக் கூறினான். முனிவன் அங்கு செலலும்போது அழகிய உருவத்தை ஏற்றுக்கொண்டு அப்பெண்கள் முன்னிலையில் நின்றான். அங்கிருந்த ஐம்பது பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு இவன்மேல் விழுந்தனர். முனிவனும் அத்தனைப் பெண்களையும் மணந்து கொள்ள விரும்பித் தமது தவ வலிமையால் ஐம்பது வடிவங் கொண்டு அப்பெண்களை மணந்து கொண்டு மகிழ்ந்திருந்தான் என்பது புராண இதிகாசம். இதுபோலவே எம்பெருமானும் அடியார்களை

2. பெரி. திரு. 1.5

அநுபவிப்பதற்காகப் பலபல திவ்விய மங்கள விக்கிரகங்களை ஏற்றுத் திவ்விய தேசங்கள் தோறும் சந்நிதி பண்ணியிருக்கின்றானாகையாலே ஆழ்வார் எங்கும் புகுந்து மங்களாசாசனம் செய்ய விரும்பி சாளக் கிராமத்திற்குச் செல்லுகின்றார்.

"சௌபரி போகத்துக்கு உறுப்பாக அநேக வடிவங்கொண்டாற்போலே ஆச்ரிதரை அநுபவிக்கைக்கு உறுப்பாக உகந்தருளின நிலங்களெங்கும் புகுந்து சந்நிதி பண்ணிற்றாயிற்று அவன்; இனி இவர் தாமும் 'தானிருந்த ஊரெல்லாம் தன் தாள்பாடி' எங்கும் புக்கு அநுபவிக்கையிலே யாய்த்து அபேட்சை பண்ணியிருப்பது" என்ற வியாக்கியான சூத்தியையும் இங்கே அநுசந்திப்பது.

26

சிலம்படி யுருவிற் கருநெடுங் கண்ணார்
திறத்தனாய் அறத்தையே மறந்து
புலம்படித் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா;
அலம்புரி தடக்கை ஆயனே! மாயா!
வானவர்க் காசனே வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடி அடைந்தேன
நைமிசா ரணியத்து எந்தாய்![3]

[சிலம்பு அடி—சிலம்புகளை அணிந்த கால்கள்; அறம்—தருமம்; புலன் — இந்திரியங்கள்; வாளா—வீணாக; அலம்—கலப்பை; வானோர் —நித்திய சூரிகள்]

நைமிசாரணியத்தின்மீது மங்களாசாசனம் செய்த திருமொழியில் ஒரு பாசுரம். "கலப்பையைத் தரித்த

3. பெரி. திரு. 1.6;2

திருக்கையுடையவனே! ஆச்சரியமான செயல்களையுடைய வனே! தேவாதி தேவனே! நைமிசாரணியத்து எந்தாய்! சிலம்பை அணிந்த அழகிய கால்களையுடையவர்களும் கறுத்து நீண்ட கண்களையுடையவர்களுமான மகளிர் வசப்பட்டு அறத்தையே மறந்து புலன்களால் பெறும் இன்பத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டு வாழ் நாளை வீணாகக் கழித்துக் கெட்டேன். நித்திய சூரிகள் அன்பு பூண்டு ஆச்ரயிக்கப்பெற்ற நின திருவடிகளிலே இன்று வந்து கிட்டப் பெற்றேன்'' என்கின்றார்.

அலம் புரிதடக்கைஆயனே!: பலராமனைக் குறித்தவாறு. 'ஹலம்' என்ற வடசொல் 'அலம்' எனத் திரிந்து நின்று கலப்பையை உணர்த்துகின்றது. கலப்பையும் உலக்கை யும் பலராமனின் ஆயுதங்கள். இரண்டு வரலாறுகள் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

முதல் வரலாறு : ஒரு காலத்தில் பலராமர் அருகில் ஓடு கின்ற யமுனை நதியை நோக்கி, 'ஓ யமுனையே! நீ இங்கே வா; நான் நீராட வேண்டும்' என்று அருளிச்செய்ய, அவ்வமுனை அவர் மதுபான மயக்கத்தால் இப்படிப் பேசு கின்றார் என்று அவர் சொற்களை அவமதித்து அங்கே வரவில்லை. இது கண்ட பலராமர் வெகுண்டு தமது கலப்பையைக் கையிலெடுத்து அதன் நுனியாலே அந் நதியைப்பற்றி இழுக்க அந்நதி தான்போகுவழியைவிட்டு அவர் எழுந்தருளியிருக்கும்வனத்தில் பெருகியது; அத்துடன் தன்னுடைய அழகியமேனியுடன் அவரெதிரில்வந்து அச்சத் தினால் மிகவும் நடுநடுங்கிச் சிறப்பாக வேண்டிக் கொள்ள, பலராமரும் அதனை மன்னித்து அதில் நீராடினார்.

இரண்டாவது வரலாறு: ஒரு சமயம் துரியோதன் அத்தின புரத்தில் தன் மகள் இலக்கணைக்குச் சுயம்வரம் கோடித் தான். கண்ணனின் தேவியரில் ஒருத்தியாகிய சாம்பவதி யின் திருக்குமாரனான சாம்பன் அவளை வலிந்து தூக்கிக்

கொண்டு ஏக, துரியோதனாதியர் அவனை எதிர்த்துப் போர் செய்து அவனைப் பிடித்துக் காவலிட்டு வைத்தனர். இச்செய்தியை அறிந்த பலராமர் தான் அவரை விடுவித்து வருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டு அத்தினபுரம் வந்தார் கௌரவர்கள் அனைவரும் ஒருமித்த குரலாய் அவனை விடுவிக்க மறுத்தனர். இதனால் பலராமர் அளவு கடந்த சினங்கொண்டு எழுந்திருந்து 'குருகுலத்தார் உறையும் இத் திருநகரத்தைக் கங்கையில் கவிழ்த்து விட்டு பூமியில் கௌரவப் பூண்டே அற்றுவிடும்படிச் செய்கிறேன்; பாருங்கள்' என்று கலப்பையை மதிலின்மீதுள்ள நாஞ்சில் என்னும் உறுப்பில் மாட்டி இழுத்தார். இதனால் நகர் முழுவதும் அசைந்து சாயத் தொடங்கவே, அது கண்ட கௌரவர்கள் மனங்கலங்கி சாம்பனை இலக்கணையோடும் பல சிறப்புகளோடும் கொண்டுவந்து விட்டுப் பலராமனை வணங்கினர். இராமனும் அக் கலப்பையை வாங்கி யருளினார்.

27

இரண்டாம் பத்து

இண்டை யாயின கொண்டு தொண்டர்கள்
ஏத்து வாருற வோடும், வானிடைக்
கொண்டு போயிடவும் அதுகண்டெனை
நெஞ்சம் என்பாய்
வண்டு வாழ்வட வேங்கடமலை மீமிசை
கோயில்கொண்டு அதனொடும்,
அண்ட மாண்டிருப் பார்க்
கடிமைத்தொழில் பூண்டாயே.

1. பெரி. திரு. 2.1:3

[இண்டை — பூமாலை; ஏத்துவார்—தோத்திரம் பண்ணுவார்; வான் — பரமபதம்; மீமிசை அண்டம்— நித்திய விபூதி;[

திருவேங்கடத்தை மங்களா சாசனம் செய்யும் திருமொழியில் ஒரு பாசுரம். எண்டிசையுமுள்ள பூக் கொண்டு ஏத்தியுகந்துகந்து, தொண்டரோங்கள் பாடியாட'' (திருவாய் 4.1:8) என்கிறபடி பலவகைப்பட்ட பூக்களைக் கையிலேந்திக் கொண்டுதுதிக்கவல்ல தொண்டர்களையும் அவர்களோடு சம்பந்தம்பெற்ற மற்றுமுள்ளாரையும் எம்பெருமான் ஏற்றுக்கொண்டு பரமபதத்திலே கொண்டு சேர்க்கின்றான் என்கின்ற இந்தச் சிறந்த குணத்தைக் கண்டு 'நெஞ்சே! அத் திருவேங்கடமுடையானுக்குத் தொண்டு பூண்டாயே, என்று உகக்கின்றார் ஆழ்வார்.

இண்டையாயின கொண்டு: 'இண்டை கொண்டு' என்னாமல் இப்படிக் கூறுவதன் கருத்து யாது? எனில்: எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்கிற தூய்மையான நோக்கத்துடன் கொள்ளுகின்ற மலர் எதுவாயிருந்தாலும் குற்றம் இல்லை; 'செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற பூக்களாகவே இருக்க வேண்டுமென்கிற நியதி இல்லை; ஏதேனும் ஒரு பூவாயிருக்கலாம் என்பது தோன்றும். ''பூமாலையென்று பேர் பெற்றவற்றைக் கொண்டு'' என்று வியாக்கியானித்தருளினார் பெரியவாச்சான பிள்ளையும். இதனால் இன்ன பூ என்று அறுதியிடாமல் பூ என்று பெயர் பெற்றிருக்கும் எதுவும் பொருந்தும் என்பதாயிற்று. ''பரிவதில் ஈசனை'' என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை (1,6:1) எடுத்து விளக்கும்போது '**புரிவதும் புகை பூவே**' என்ற சொல் நயத்தைத் திருவுள்ளம்பற்றிப் **பட்டர்** ''இவ்விடத்தில் அகிற்புகை என்றாவது, கருமுகைப் பூ என்றாவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும்

ஒரு புகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுக்கையிட்டுப் புகைக்கலாம்; கண்ட காலிப் பூவும் சூட்டலாம்'' என்று கூறினாராம். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்சீயர் 'கண்ட காலிப் பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது' என்று சாத்திர மறுத்திருக்க 'இப்படி அருளிச் செய்யலாமோ?' என்று கேட்டராம். அதற்கு மறுமொழியாக "சாத்திரம் மறுத்தது மெய்தான்; கண்ட காலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுக்க வில்லை; அடியார்கள் அப் பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே என்று பக்தர்கள் பக்கல் தயையினால் சாத்திரம் நீக்கினதேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவு மில்லை'' என்றாராம்.

திருவாய் மொழிக்குப்பதினெண்ணாயிரப்படி' அருளிய பரகால சுவாமி இந்தச் சம்வாதத்தைக் கண்டு ரசிக்காமல் மறுத்துரைத்ததுபற்றிக் கவலை கொள்ள வேண்டா. 'பக்தி வரம்பு கடந்தால் நூல் வரம்பில்லை' என்றதையும் அருளிச் செயல் தொடையழகையும் நோக்கி ரசப்பொருள் உரைப்பதில் அறிவுடையார்க்குப் பணியன்று என்பதை நாம் உணர்ந்தால் போதும்.

28

முன்னோர் தூது வானரத்தின்
வாயில் மொழிந்துஅரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால்
மாள முனிந்து,அவனே
பின்னோர் தூது ஆகிமன்னர்க்
காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் எனநின்றான்
எவ்வுள் கிடந்தானே.[2]

---

2. பெரி. திரு. 2.2:3

[முன்—இராமாவதாரத்தில்; வானரம்—சிறிய திருவடி; அரக்கன்—இராவணன்; மன்னூர்—சிறந்த இலங்காபுரி; வாளி—அம்பு; மாள—மாண்டு போகும்படி; ஆதி மன்னர்க்கு—பாண்டவர்களுக்கு; தூது—தூதன்; பெரு நிலத்தார்—பூமியிலுள்ளார்.]

திருஎவ்வுளூர்மீது மங்களா சாசனம் செய்யப் பெற்ற பெரிய திருமொழிப் பாசுரம். "திருஎவ்வுள் சயனத் திருக்கோலத்தில் உள்ள எம்பெருமான் யார்? என்னில்: திருவடிக்குத் தூது உரைத்தும், இலங்காபுரியை அழித்தவனும் ஆகிய இராமபிரானும், பாண்டவர்க்காக ஓலை எடுத்துக் கொண்டு தூதுபோன கண்ணபிரானுமே ஆவர்" என்கின்றார் ஆழ்வார்.

பட்டர் : கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பட்டருக்கு இராமாவதாரத்தில் அளவற்ற பட்சபாதம் உண்டு என்பதை எல்லோரும் அறிவர். சிறியாத்தான் என்பவர் பட்டருடைய அருளிச்செயல்களைக் கேட்க விரும்பி ஒரு நாள் அவர் சந்நிதியிலே விடை கொண்டு "சக்கரவர்த்தித் திருமகனாருக்கு எல்லா ஏற்ற முண்டேயாகிலும், அன்பர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன ஏற்றமில்லையே; அந்த ஏற்றம் கண்ணபிரானுக்கேயன்றோ உள்ளது" என்றார்; அதைப் பட்டர் கேட்டருளி "ஓய்! குணக்கடலாகிய இராமபிரானுக்கு தூதுபோதல் அநிஷ்டம் அன்று காணும்; இட்சுவாகு வமிசத்திலே சார்வபௌமனாகப் பிறந்தானாகையாலே இராமன் தூது போகப் பெற்றிலனத்தனை; அந்த அவதாரத்திலே திருவடி அங்குமிங்கும் போவது வருவதுமாய்க் கொண்டு தூதகிருத்தியஞ் செய்து வார்த்தை சொல்லித் திரிந்த ஏற்றத்தைக்கண்டு "நாமும் இப்படி அண்டினவர்களுக்காக தூது போகப் பெற்றிலோமே' என்று திருவுள்ளம் குறைபட்டு அக்குறை தீருகைக்காகவே பின்னை இழிகுலத்தில்

வந்து பிறந்து தூது சென்றான்; க்ஷத்திரியன் என்று நிச்சயிக்கில் தூதுபோக விடமாட்டார்களென்று அத்தை மறைத்து வளர்ந்தான் காணும்; அபிஷிக்தக்ஷத்திரிய குலத்திலே பிறந்தால் 'தூது போ' என்று ஒருவருக்கும் நா எழாதிறே'' என்றருளிச்செய்தாராம். இந்த சம்வாதத்திற்கு இந்தப் பாசுரம் மூலமாயிருக்கும்.

29

வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை அமுதை என்னை ஆளுடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும், மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே[3]

[வேதம்—வேதசொரூபியானவன்; வேதத்தின் பயன்—வேதத்தில் நுவலப் பெற்றுள்ள கருமங்களின் பலன்களைக் கொடுப்பவன்; விழுங்கும்—அநுபவிக்கும்; கோது—குற்றம்; இன்கனி—இனிமையான கனிபோன்றவன்; நந்தனார் களிறு—நந்தன் வயிற்றில் பிறந்த ஆனைக் கன்று போன்றவன்; குவலயத்தோர்—பூமியிலுள்ளோர்; ஏத்தும்—துதிக்கும்; ஆதி—ஜகத் காரண பூதன்; ஆள் — அடிமை; ஒப்பவர்ஒப்புடையவர்; கண்டேன்—சேவிக்கப் பெறறேன்.

3. பெரி. திரு. 2.3:2

திருவல்லிக்கேணியை மங்களா சாசனம் செய்த திரு மொழியில் உள்ள பாசுரம். "வேத சொரூப மானவனும் உபாயங்களையும் பலன்களையும் வேதம் மூலமாகக் காட்டிக் கொடுத்தவனும் முனிவர்களுக்கு இனிய கனி போன்றிருப்பவனும், நந்தன் திருமாளிகையில் யானைக் கன்றுபோல் விளையாடியவனும், குவலயத்தோர் தொழு தேத்தும் ஜகத்காரணபூதனும், அமுதம் போன்றவனும், என்னை அடிமை கொண்டவனுமான எம்பெருமானைத் திருவல்லிக்கேணியில் சேவிக்கப்பெற்றேன்" என்கின்றார்.

நந்தனார் களிறு: நந்தகோபனுடைய திருமாளிகை யில் யானைக் கன்றுபோல் விளையாடினவன். யானை யானது ஒருநாள் கண்டோமென்று திருப்தியாயிருக்க வொண்ணாதபடி நாடோறும் காணவேண்டும் என்னும் விருப்பத்தைஉண்டாக்குவதும், மிக்கசெருக்கையுடையதும், கைக்கு எட்டினாரை நினைத்தபோது எடுத்துக் கழுத்திலே வைத்துக் கொள்வதும், தன்மீது ஏற நினைப்பார்க்குத் தன்னைப் பணிந்துகொடுப்பதும், உதவாதாரை ஆராயாது கிழித்துப் போடுவதும், தன்னைக் கட்டுமாறு தானே கயிற்றை எடுத்துக் கொடுப்பதுமாக இருக்கும்; அவ்வாறே நாடோறும் சேவிக்கத் தக்க வடிவழகும், எப்பொழுதும் இறைவனாயிருக்கும் தன்மை தோன்றக் கொண்டிருக்கும் செருக்கும், நித்திய சம்சாரியொருவன் தன்னைச் சரண மடைந்ததே காரணமாக அவனது குற்றங்களைக் குற்றங்களாகக் கொண்டு தன்னை அவனுக்குக் கொடுத் தால் கேட்பாரில்லாத உரிமையும், கருமம் ஞானம் முதலிய உபாயங்களால் தன்னையடைய விரும்பினவர்க்கும் தன்னைக் கொடுக்கும் சீலமும், தனது அடியார்களின் விரோதிகளை ஆராயாது அழிக்கின்ற விரோதி நிரச சுபாவமும், தன்னைக் கட்டுப்படுத்துமாறு பக்தியைத் தானே தருகின்ற ஆவலை உண்டாக்கும் தன்மையும் உடையவன் எம்பெருமான். ஆதலால் களிறு அவனுக்கு முற்றுவமையாகும்.

30

காண்டவான மென்பதோர் காடமரர்க்
கரையனது கண்டவன் நிற்க, முனே
மூண்டாரழ லுண்ணமு னிந்ததுவும்
அதுவன்றியும் முன்னுல கம்பொறைதீர்த்
தாண்டான்,அவு ணன்அவன் மார்வகலம்
உகிரால்வகி ராகமு னிந்து, அரியாய்
நீண்டான்குற ளாகிநி மிர்ந்தவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே[4]

[அமரர்க்கு அரையன்—தேவர்கட்குத் தலைவன். ஆர் அழல் — அக்கினி பகவான்; மூண்டு உண்ண — மேல்விழுந்து உட்கொள்ளும்படியாக; பொறை தீர்த்து — பாரங்களைத் தீர்த்து; அவுணன்—இரணியன்; உகிர்—நகம்; வகிர் ஆக—இருபிளவாகும்படி; முனிந்து—சீறி; அரிஆய்—நரசிங்கமாய்; நீண்டான்—வளர்ந்திட்டவன்; நிமிர்ந்தவன் — வளர்ந்திட்டவன்]

திருநீர்மலை என்ற திவ்வியதேசத்தை அநுபவிக்கும் திருமொழியில் ஒரு பாசுரம். "இந்திரன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அக்கினி பகவான் காண்டவவனத்தை இரையாக்கிக்கொள்ள நியமித்தவனும், பாரதப் போரில் பூமிபாரங்களைத் தீர்த்து உலகங்களை இரட்சித்தவனும் இரணியனை முடிக்க நரசிங்கமாய் வளர்ந்திட்டவனும், குறளுருவாகி திரிவிக்கிரமனாக வளர்த்திட்டவனுமான எம்பெருமான் கோயில் கொண்ட இடம் திருநீர் மலையாகும்" என்கின்றார் ஆழ்வார்.

---

4. பெரி. திரு. 2.4:2

காண்டவவனம் எரித்த வரலாறு: இஃது இந்திரனுக்கு உரியதாய்ப் பூவுலகிலுள்ள காடு. ஒரு நாள் அக்கினி பகவான் அந்தண வேடம் பூண்டு அருச்சுனனும் கண்ணபிரானும் கூடியிருக்குமிடத்தில் வந்து சேர்ந்தான்; கிருஷ்ணார்ச்சுனர்கள் அவனை நன்கு உபசரித்தனர்; அவன் உணவு வேண்ட, 'வேண்டிய உணவை அளிப்போம்' என்று அவ்விருவரும் உறுதிமொழி கூற, உடனே அவ்வந்தணன் உண்மையில் இன்னானெனத் தெரிவித்துக் காண்டவவனத்தைத் தனக்கு இரையாக அளிக்குமாறு வேண்ட, அவர்களும், 'பல கொடிய அரசர்களும் அரக்கர்களும் துஷ்ட மிருகங்களும் நிரம்பியிருக்கும் இந்தக் காடு அழிந்தொழிவது நன்றே' என்று நிச்சயித்து அக்கினி பகவானை நோக்கி 'அங்ஙனமே உண்பாயாக' என்று அனுமதி தந்ததின் பேரில் அக்கினி அக்காடு முழுவதையும் சூழ்ந்து மனநிறைவு கொள்ளும் முறையில் உண்டனன் என்பது கதை; இது மகாபாரதத்தில் ஆதிபருவத்தில் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. மண்ணின் பாரம் நீங்குவதற்கே வடமதுரைப் பிறந்தவனான கண்ணபிரான் தனது அன்பனான இந்திரன் வருந்தும்படி அவனது காட்டையழிக்குமாறு அநுமதித்தது அவதாரப் பயன் நிறைவேறுவதற்காக என்க; அக்காட்டிலுள்ள அளவற்ற துட்ட மிருகங்ளின் கூட்டங்கள் தொலைந்தொழியும் முகத்தால் பூமியின் பாரத்தைக் குறைத்தருளினன் என்று உணர்க. (இந்த வரலாறு இந்நூல் பாசுரம்-33லிலும் குறிப்பிடப்பெறுகின்றது).

31

புகரார்உரு வாகி முனிந்தவனைப்
புகழ்வீட முனிந்துயி ருண்டு அசுரன்
நகராயின பாழ்பட நாமமெறிந்
ததுவன்றியும் வென்றிகொள வாளவுணன்

பகராதவ னாயிரம் நாமமடிப்
பணியாதவ னைப்பணி யாலமரில்
நிகராயெவன் நெஞ்சிடந் தானவனுக்கு
இடமாமலை யாவது நீர்மலையே[5]

[புகர் ஆர் உரு ஆகி—ஒளி மிக்க உருவையுடையவ னாய்; முனிந்தவன்—சினத்தைக் காட்டினவன் வீட—ஒழிய; அசுரன்—ஆசுரப்பிரகிருதியான அவனுடைய; நாமம்—பேர்; பாழ்பட—அழிந்து போம்படி; அவுணன்—இரணியன்; நெஞ்சு—மார்பு; பணியால்—பிரகலாதனின் சொல் நிமித்தமாக; இடந்தான் — பிளந் தான்]

இதுவும் திருநீர் மலை பற்றிய பாசுரமே. "கண்ணனைப் போலவே திருவாழி திருச் சங்குகள் செல்வித்து அவற்றைத் தரித்து கொண்டதனால் ஒளிமிக்க உருவையுடையவனாய் தன்மீது கோபத்தைக் காட்டியவ னான பௌண்ட்ரக வாசுதேவனை ஒழித்துக்கட்டி அவனு டைய பலநகரங்களையும் அழிந்துபோம்படி, அழித்தவனும் பிரகலரதனுடைய பணியால் தன்னுடைய ஆயிர நாமம் ஒன்றையும் சொல்லாதவனும், தன் திருவடிகளில் வணங்காதவனுமான இரணியனின் மார்பைப் பிளந்தவனு மான எம்பெருமான் கோயில் கொண்ட இடம் திருநீர் மலையாகும்" என்கின்றார்.

பௌண்ட்ரக வாசுதேவன்: *கிருஷ்ணாவதாரத்தில் இந்தப் பெயர் கொண்ட ஓர் அரசன் பிறந்திருந்தான். பல மூடர்கள் திரண்டு 'நீதான் வாசுதேவன்' என்று அவனைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அதனால் அவனும் தருக்குற்றுத் தானே வாசுதேவன் என்று மயங்கி மார்பு*

---

5. பெரி. திரு. 2.4.7

நெறித்துச் சங்கு சக்கரம் கிரீடம் முதலியவற்றைச் செய்வித்துத் தான் அணிந்துகொண்டு தூதன் ஒருவனை அழைத்து, ''நீ கிருஷ்ணனிடம் சென்று என் பெயரைச் சொல்லி 'இன்னான் வாசுதேவனாயிருக்க நீ அவனுடைய சங்கு சக்கரங்களைத் தரிக்கக் கூடாது; இன்று முதல் விட்டு விட வேண்டியது; இல்லையாகில் அவனுடன் போர் தொடுத்து அவனை வென்றாயாகில் தரிக்கலாம்' என்று சொல்ல வேண்டியது'' என்று சொல்லியனுப்பினான். அந்தத் தூதனும் அங்ஙனமே கண்ணனை அடைந்து செய்தியைச் சொல்ல, கண்ணபிரான் சினமுற்றுப் பெரிய திருவடியின் மீதேறிச் சென்று போர் செய்து அப் பௌண்ட்ரக வாசுதேவனைத் தனது திருவாழியினால் தலையறுத்துக் கொழித்தான். அங்ஙனமே அவன் தனக்காக அமைத்துக் கொண்டிருந்த பல நகரங்களையும் நீறுபடுத்தினான்.

32

பாராய துண்டுமிழ்ந்த பவளத் தூணைப்
படுகடலி லமுதத்தைப் பரிவாய்க் கீண்ட
சீரானை, எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினை
போரானைக் கொம்பொசித்த போரேற்றினை
புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே[6]

[பார்—உலகம், படுகடல்—ஆழ்ந்த கடல்; பரிவாய்—கேசியின் வாய்; கீண்ட—கிழித்த; சிந்தை—நெஞ்சு; போர் ஆனை — குவலயா பீடம்; ஒசித்த — முறித்தெறிந்த: புணர்மருதம்—இரட்டை மருத மரங்கள்; கார்ஆனை—கசேந்திரன்; இடர்—துன்பம்]

---

6. பெரி. திரு. 2.5:1

திருக்கடல் மல்லையை அநுபவித்ததன் விளைவாக எழுந்த திருமொழியின் ஒரு பாசுரம். "திருக்கடல் மல்லைப் பெருமான் எப்படிப்பட்டவன்? உலகங்களையெல்லாம் பிரளயத்திலே எடுத்துத் தன் திருவயிற்றிலே வைத்து அவை உள்ளே கிடந்து தளராதபடி பிறகு வெளிநாடு காணஉமிழ்ந்தவன்; பவளத்தூணைப் போன்றவன்; கடலில் நின்றும் கிளர்ந்த தேவபோக்கியமான அமுதம் போன்ற வன்; கிருஷ்ணாவதாரத்தில் தன்னைக் கொல்லக் கறுக் கொண்ட கம்சனால் ஏவப்பட்டுக் குதிரை வடிவங் கொண்டு வந்த கேசி என்னும் அசுரனுடைய வாயைக் கீண்டெறிந்து அவனை முடித்த வீரலட்சுமி பொருந்தியவன்; இப்படிப்பட்ட திவ்விய சேஷ்டிதத்தைக் காட்டி என்னை ஆட்படுத்திக் கொண்டவன்; பக்தர்களின் சிந்தையாகின்ற தோட்டத்தில் முளைத்து அவ்விடத்தி லேயே அபிவிருத்தி யடைகின்ற மதுரமான கரும்பு போலிருப்பவன்; வில்விழா என்ற வியாஜத்தினால் கம்சனால் அழைக்கப்பட்டு அவனுடைய அரண்மனையி னுட்புகும்போது தன்னைக் கொல்லுமாறு நிறுத்தப்பட்டுக் கறுக்கொண்டெதிர்த்து வந்த குவலயாபீடமென்னும் மதயானையின் கொம்பினைப் பறித்தெறிந்து அதனை முடித்த வீரன்; வெண்ணெய் களவு செய்ததற்காக யசோதையினால் உரலோடு பிணைக்கப்பட்டு அதனையும் இழுத்துக்கொண்டு தவழ்ந்து சென்றபோது அசுராவேசம் பெற்று வழியிடையே நின்ற இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன்; பொன்மலைபோல் பளபளவென்று ஒளிவிடுபவன்; முதலையின் வாயில் அகப்பட்டுத் துடித்த கசேந்திராழ்வானுடைய துயரத்தைத் தொலைத்து அவன் கையில் செந்தாமரைப் பூவைத் தனது திருவடிகளில் இடு வித்துக் கொண்டவன்; கற்பகத் தருவைப்போல் விரும்பிய வற்றை யெல்லாம் வழங்கும் வள்ளல்; இப்படிப்பட்ட எம்பெருமானை அடியேன் திருக்கடல் மல்லையில் சேவிக்கப் பெற்றேன்" என்கின்றார் ஆழ்வார்.

கடல் மல்லைத் தலசயனத்து: தலசாயிப் பெருமாள் எழுந்தருளி யிருப்பதனால் தலசயனம் என்று பேர் பெற்றதும்; கடற்கரையிலே உள்ளதுமான மல்லா புரியிலே என்று பொருள் விரித்துக் கொள்க.

மாமல்லபுரத்தில் எம்பெருமான் கொண்டுள்ள திருக்கோலம் சயனத் திருக் கோலங்களில் எந்த வகையிலும்[7] அடங்காது. இங்கு எம்பெருமான் வெறுந் தரையில் படுத்துக் கிடக்கின்றான். படுக்கப் பாயும் இன்றி, தலைக்கு அணையுமின்றித் தரையில் கிடக்கின்றான். இதனைத் **'தலசயனம்'** என்றே வழங்குகின்றனர். இவர் தரையில் எழுந்தருளியிருக்க நேர்ந்ததற்குப் புராண வரலாறு[8] ஒன்றுண்டு.

புராண வரலாறு: புண்டரீகர் என்பவர் ஒரு மாமுனிவர்; திருமாலிடம் அளவற்ற பக்தியுடையார். கடற்கரையில் ஒரு பெரிய பூங்காவனத்தை ஏற்படுத்தி அதில் சிறந்த மலர்களை விளைவிக்கின்றார். அம் மலர்களைப் பாற்கடலில் பாயல் கொண்டுள்ள பரந்தாமனின் திருவடியில் சேர்க்க வேண்டும் என்று பாரிக்கின்றார். பாற்கடலில் அடைவதற்கு இடையிலுள்ள கருங்கடலைக் கடக்க

---

7. **திருக்கோலங்கள் :** எம்பெருமான் பரமபதநாதன் அர்ச்சையில் நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும், கிடந்த நிலையிலும், நடந்த நிலையிலும எழுந்தருளி யிருப்பான். இவற்றுள் அவனது சயனத் திருக்கோலமே (கிடந்த நிலை இருப்பே) கண்டோர் மனத்தைக் கவரத்தக்கது. இந்தச் சயனத் திருக்கோலத்திலும் பலவகை உண்டு 108 திவ்விய தேசங்களில் அவன் கிட்டத்தட்ட இருபதில் அனந்தன்மீது சயனம் கொண்டுள்ளான். இதனைப் புயங்க சயனம் (பாம்பணைப் பள்ளி) என்று வழங்குவர். ஏனைய இடங்களில் உள்ளவை உத்தியோக சயனம், தர்ப்ப சயனம் (புல் படுக்கை), போக சயனம் (இன்பப் படுக்கை), மாணிக்க சயனம், வடபத்திர சயனம் (ஆலிலைப் படுக்கை), வீர சயனம் என்பவையாகும.

8. இது 'பிரும்மாண்ட புராணத்தில்' பரக்க விவரிக்கப் பெற்றுளது

வேண்டும். அக் கடல் நீரைக் கையால் இறைத்து வற்ற அடிக்க முயல்கின்றார் முனிவர். செயல் துரிதமாக நடை பெறுகின்றது. பரந்தாமன் பக்தனின் அன்பு மிகுதியைக் கண்டு வியந்து உவந்து ஒரு முதியவர் வடிவத்தில் அவர் முன்னே வந்து தனக்குச் சிறிது உணவும் நீரும் கூலியாகத் தரின் தான் துணை செய்வதாகக் கூறுகின்றார். புண்டரீகர் அதற்கிசைந்து உணவு கொணர்வதற்கு ஊருக்குள் செல் கின்றார். திரும்பி வந்து பார்க்கும்போது வயோதிகர் கூராழி வெண்சங்கேந்திய கோலத்துடன் தரையில் படுத்துக் கிடக்கின்றார். கடல் நீரும் வற்றியுள்ளது. எறிகடலுக்கும் வழி திறக்கப்பெற்றுள்ளது. புண்டரீகருக்குச் சேவை சாதிபபதற்காகவே பரந்தாமன் இந்தக் கோலத்தில் எழுந் தருளி யிருந்தான. அம் முனிவரின் வேண்டுகோளின்படி அவர் உகந்த தலசயனனாகவே என்றும் நிலையாக மக்களுக்குச் சேவை சாதித்து வருகின்றான் என்பது ஐதிகம்.

33

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டு பட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்றும் ஓதி
மாண்டு,அவத்தம் போகாதே வம்மின் எந்தை
என்வணங்கப் படுவானை, கணங்க ளேததும்
நீண்டவத்தக் கருமுகிலை எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித் தானைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசய னத்தே.[9]

[அவத்தம்—கெடுக்கவல்ல காரியங்கள்; பூண்டு ஏறிட்டுக்கொண்டு; பிறர்க்கு—நீசர்களை; அடைந்து — ஆச்ரயித்து; தொண்டுபட்டு— அடிமை செய்து; பொய் நூலை—புறச் சமய

9. பெரு. திரு. 2. 5: 2.

ஏடுகளை; என்றும்—எப்போதும்; மாண்டு—முடிந்து; அவத்தம் போகாமல்—பாழாய்ப் போகாமல்; கணங்கள்—ஞானியர் கூட்டம்; தொத்து—பூங்கோத்துகள்; கனல்—நெருப்பு; பெய்வித்தான்—புகுவித்தான்.]

இதுவும் திருக்கடல் மல்லைமேல் எழுந்த திருமொழிப் பாசுரம். தலசயனத்துறைவாரைத் தாம் சேவிக்கப் பெற்றதுபோல் உலகிலுள்ளாரெல்லாரும் சேவிக்கப்பெற வேண்டும் என்ற ஆசையினால் 'இங்குச் சேவிக்க வாருங்கள்' என்று மற்றும் பலரையும் அழைக்கின்றார். ஆழ்வார். வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறர்க்கு அடிமைப் பட்டுக் காலத்தைப் பாழாக்குவாரும், புறச் சமயத்தைச் சார்ந்தவர்கள் போன்றவர்களின் திரளிலே புகுந்து சொரூப நாசம் அடைவாருமாகப் பலருண்டாகையாலே அவர்களை யும் விடமாட்டாத காருண்யத்தினால் அவர்களையும் மங்களா சாசனத்திற்கு ஆளாக்கிக் கொள்ளப் பாரிக் கின்றார்.

நின்றவூர் நித்திலத்தை: இரண்டாந் திருமொழியில் (2. 1.) ஆழ்வார் எவ்வுள் கிடந்தானைச் சேவித்த பின்பு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருள்வதற்கு முன்பு திரு நின்ற ஊரைச் சேர்ந்தார். அத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள பத்தராவிப் பெருமாள் (பக்தவத்சலர்) அப்பொழுது ஆழ்வாருக்கு முகம் கொடாமல் பிராட்டியோடு சரச சல்லாபம் செய்துகொண்டு பராமுகமாக இருந்தபடியால், ஆழ்வார் அத் திருப்பதியை விட்டு அப்பால் சென்று திருவல்லிக்கேணியையும் (2.3) திருநீர்மலையையும் (2.4) சேவித்து இப்போது தலசயனப் பெருமாளைச் சேவித்து நிற்கும்பொழுது திருநின்றவூர் எம்பெருமான் திருமகளால் தூண்டப் பெற்று இவ் வாழ்வார் திருவாக்கினால் பாடல் பெற்றுச் சிறப்புறக் கருதிக் கடல் மல்லையில் வந்து சேவை சாதிக்க, இப்போது "**திருநின்றவூர் நித்திலத்தைக்...கண்டது நான் கடல் மல்லைத் தலசயனத்தே**" என்று திருநின்றவூர்ப்

பக்தலத்சலப் பெருமாளையும் சேவிக்கப் பெற்றதாக அருளிச் செய்கின்றார் என்பது பெரியோர்களின் நிர்வாகம்.

'காண்டவத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்த' வரலாறு பெரிய திருமொழி 2. 4: 2 ல் (இந்நூல் பாசுரம் 30இல்), வந்துள்ளது.

34

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
  உலகுய்ய நின்றானை, அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
  விளையாட வல்லானை வரைமீ கானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
  தவநெறிக்கோர் பெருநெறியை வையம் காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டு கொண்டேன்
  கடிபொழில்சூழ் கடல்மல்லை தலசய னத்தே.[10]

[உடம்பு உருவில்—சரீர சரீரி பாவனையிட்டுப் பார்க்குமளவில்; மூன்று ஒன்றாய்—மூன்று தத்துவமும் ஒன்றாய்; அன்று—கண்ணனாகப் பிறந்த அக்காலத்தில்; வித்தகன் ஆச்சரிய பூதன்; வரைமீகானில்—மலையின் மீதுள்ள காடுகளில்; தடம்—தடாகம்; கருமுகில்—காளமேகம்; தவநெறி—கிட்டுகைக்காக மேற்கொள்ளப்பெறும் உபாயம்; பெருநெறி—சிறந்த உபாயம், (சித்தோபாயம்); வையம்—உலகம்; கடுபரி — கடுநடையையுடைய குதிரை; கடி — வாசனை; பொழில் — சோலை.]

---

10. பெரி. திரு. 2.5: 3.

இதுவும் தலசயனப் பெருமாள்மீதுள்ள பாசுரம். **உலகுய்ய...நின்றானை:** பரம்புருடனான எம்பெருமானுக்கு சேதநாசேநங்கள் முற்றும் சரீரமாக உள்ளன என்பது சித்தாந்தம். ஆகவே, சரீர—சரீரி பாவனையாகின்ற விசிஷ்ட வேஷத்தைப் பார்க்குமளவில் வேற்றுமை ஏற்படுவதற்கு வழியின்றியே என்றும் அபேதமாயுள்ளதாகச் சொல்லும்படியாக இருக்கும். உலகில் சரீரத்தோடு கூடிய ஓர் ஆன்மாவைப்பற்றிப் பேசும்போது, சரீரத்தைத் தனிப்பட்ட பொருளாகவும், சரீரியான ஆன்மாவைத் தனிப்பட்ட பொருளாகவும் பிரித்து இரண்டாகப் பேசாமல் இரண்டையும் சேர்த்து ஒரே பொருளாகப் பேசுகின்றோமன்றோ? இந்த ஒன்றிய பேச்சுக்கு சரீர-சரீரி பாவனையாகின்றசம்பந்தமே நிமித்தம்; அதுபோலவே, பிரமன் முதலிய தேவதைகட்கும் எம்பெருமானுக்கும் சரீர-சரீரி பாவனை சம்பந்தம் சாத்திர சித்தமாக இருப்பதால் அந்தச் சம்பந்தத்தையிட்டு நோக்குமளவில் வேற்றுமை தோன்றாது ஒற்றுமை தோன்றும்; இதனையே 'உடம்புருவில் மூர்த்தி வேறாய்' என்பதனால் அருளிச் செய்கின்றார்.

'மூர்த்தி வேறாய் (நின்றானை)' : உண்மையில் சொரூப பேதம் உண்டாகையாலே அதைச் சொன்னபடி. இத்தால் தேறின பொருள் யாதெனில் : "பிரமன் சிவன் இந்திரன் சந்திரன் முதலிய தெய்வங்கள் எல்லாம் நாராயணனே" என்று சாத்திரத்தில் பலவிடங்களில் சொல்லப் பெற்றுள்ளது; அவ்விடங்களை எப்படி நிர்வகிக்க வேண்டுமென்றால், "பிரமன் முதலிய தெய்வங்களைச் சரீரமாகக் கொண்ட சர்வ சரீரியான சீமன் நாராயணன் ஒருவனே" என்று சொல்லிற்றாக நிர்வகிக்கவேண்டும்; தெய்வங்கள் பல உள்ளனவாக எவ்விடங்களில் சொல்லப் பெற்றுள்ளதோ அவ்விடங்களில் சர்வசரீரியான சீமன் நாராயணனைக் காட்டில் சரீரங்களான தெய்வங்களுக்கு உள்ள சொரூப பேதம் சொல்லப்படுவதாக நிர்வகிக்க வேண்டும்—

என்கின்ற இந்தப் பொருள் முதலடியில் காட்டப் பெற்றுள்ளது.

பிரமன், சிவன் முதலிய தெய்வங்களைத் தனிப்படவும் நிறுத்தினது ஏதுக்காகவென்னில்;'படைப்பு அழிப்பு முதலிய உலகச் செயல்கள் நடைபெறுவதற்காக என்பார் ''உலகுய்ய'' என்கின்றார்.

'வரைமீகானில் தடம்பருகு கருமுகிலை' : இந்த இடத்தில் ஒரு சம்வாதம் உண்டு. இந்தச் சொற்றொடருக்கு நஞ்சீயர் பொருள் சொல்லும்பொழுது வேறு விதமாகச் சொல்லா நிற்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளையழகிய மணவாளப் பெருமாளரையர் 'இவ்விடத்திற்குப் பட்டர் அருளிச் செய்யும் பொருள் இப்படியன்றே'' என்று சொல்லி, பட்டர் அருளிச் செய்யும் சிறப்புப் பொருளை நினைப்பித் தாராம்; அதாவது—மலைமீதுள்ள காடுகளில் கண்ணன் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, இளங் கன்றுகள் அங்குள்ள தடாகங்களில் நீர் அருந்தப் போகும் போது நீரில் முன்னே இறங்கிக் குடிக்க அஞ்சுமாம். அக் கன்றுகட்கு நீருண்ணும் விதத்தைப் பழகுவிப்பதற்காகக் கண்ணன் தன்முதுகில் கைககளைக் கட்டிக்கொண்டுகவிழ்ந்து நின்று தண்ணீரமுது செய்து காட்டுவானாம். இங்குக் காட்டிய இச் சொடர் கண்ணனுடைய இச் செயலைக் குறிப்பிடுகின்றது என்பாராம் பட்டர்.

35

ஏனத்தின் உருவாகி
நிலமங்கை எழில்கொண்டான்
வானத்தில் அவர்முறையால்
மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள

கானகத்தின் கடல்மல்லைத்
தலசயனத் துறைகின்ற
ஞானத்தின் ஒளியுருவை
நினைவார்என் நாயகரே. [11]

[ஏனம்—பன்றி; உருஆகி—திருவவதரித்து; நில மங்கை—பூமிப் பிராட்டி; எழில்—அழகு; கொண்டான் — மீட்டுக் கொணர்ந்தவன்; வானத்தில் அவர்-தேவர்கள்; ஏத்தி—துதித்து; வலங்கொள்ள—பிரதட்சிணம் செய்வதற்குப் பாங்காக; கானம்-காடு; ஞானத்தின் ஒளிஉரு —ஞான ஒளிபெருந் திருமேனி; நினைவார்— சிந்திக்கும் பாகவதர்கள்; நாயகர்—தலைவர்]

திருக்கடல் மல்லையில் ஞானப்பிரான் என்ற திருநாமத்துடன் திருக்கோயில் கொண்டிருக்கின்ற எம்பெருமானை மங்களாசாசனம் செய்த திருமொழியில் ஒரு பாசுரம். இதில் திருமங்கையாழ்வார், "பூமியைப் பாயாகச் சுருட்டி சுருட்டி எடுத்துச் சென்ற இரணியாட்சனைக் கொன்று பூமியைக் கொணர்ந்து பழையபடி விரிப்பதற்காகவும், பூமிக்கு நேர்ந்த பிரளயாபத்தைப் போக்கிக் கொள்வதற் காகவும் வராக அவதாரம் செய்தருளினவனும், நித்திய சூரிகளும் இவ்விடத்தில் வந்து வழிபாடுகள் செய்யுமாறு திருக்கடல் மல்லையில் திருக்கோயில் கொண்டிருப்பவனு மான ஞானப்பிரானைத் தியானிக்கும் பாகவதர்களே எனக்குத் தலைவர்; அவர்கட்கே நான் அடிமைப் பட்டிருப்பவன்" என்கின்றார்.

குறிப்பு : வராகப் பெருமானுக்கு 'ஞானப்பிரான்' என்று திருநாமம் வழங்குதல் வைணவ சம்பிரதாயம். அது தோன்றவே பாசுரத்தில் 'ஞானத்தின் ஒளிஉரு' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. நம்மாழ்வாரும், "ஏனத்

---

11. பெரி.திரு. 2.6:3

துருவாய் இடந்தபிரான்...ஞானப்பிரான்''[12] என்று அருளியுள்ளது ஈண்டு நினைக்கத் தக்கது. திருமால் வராக அவதாரமாக வந்த காலத்தில் நெடுங்காலம் காட்டில் விளையாடிப் பொழுது போக்கினதாகப் புராணவரலாறும் உண்டு. இதனைத் திருவுள்ளங் கொண்டே,

> வானத் தெழுந்த மழைமுகில் போல், எங்கும்
> கானத்து மேய்ந்து களித்து விளையாடி
> ஏனத் துருவா யிடந்தஇம் மண்ணினை
> தானத்தே வைத்தான்.[13]

[வானம்—ஆகாயம்: முகில்—மேகம்; கானம்—காடு; இடந்த—கோட்டால் குத்தி எடுத்த; மண் — பூமி; தானத்து — அதன் இருப்பிடத்தில்]

என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்துள்ளமை ஈண்டு எண்ணி மகிழத்தக்கது.

ஞானப்பிரானைப்பற்றிய வரலாறு: திருக்கடல் மல்லையில் அரிசேகரன் என்ற ஓர் அரசன் நாள்தோறும் உச்சிக் காலத்தில் அண்மையிலுள்ள 'திரு இட எந்தை'[14] என்ற திவ்யதேசம் சென்று அங்கு எழுந்தருளியுள்ள ஆதி வராக மூர்த்தியைச் சேவித்துவிட்டு ஊருக்குவந்து திருவாராதனை முடித்தபிறகு உணவு கொள்வது வழக்கம். ஒரு நாள் வராக மூர்த்தி இவ்வரசனின் பக்தியை உலகத்தினருக்கு அறிவிக்கத் திருவுள்ளங் கொண்டார். தானே ஒரு கிழ அந்தணர் உருக்கொண்டு பூமிப் பிராட்டியாரை ஒரு பெண்ணாக அழைத்துக்கொண்டு திருக்கடல் மல்லைக்கு

12. திருவிருத்.99

13. பெரியாழ்.திரு. 2.10:9

14. பிராட்டியாரை இடப்பக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பதால் 'திரு இட எந்தை' என்ற பெயரால் வழங்கி வருகின்றது இத் திவ்விய தேசம்.

எழுந்தருளினார். அப்பொழுதுதான் அரசன் திருவிட வெந்தைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தணர் அரசன் எதிர் சென்று பசிக்கு உணவு தருமாறு கேட்டார். அரசன் தான் திருவிடவெந்தை சென்று திரும்பி வந்த வுடன் அவருக்கு வேண்டுவன நல்குவதாகக் கூறினான். கிழவரோ அச் சமாதானத்தைக் கேட்பதாக இல்லை. ஆகவே, அரசன் அந்தக் கிழவரை வராக மூர்த்தியாகப் பாவித்து உபசரித்துத் திருவாராதனை சமர்ப்பித்தான். உடனே வராக மூர்த்தி அரசனது பக்திக்கு மெச்சி பூமிப் பிராட்டியைத் தனது வலப்புறத்தில் வைத்துக் காட்சி தந்தருளி ஞானோபதேசமும் செய்தார். இந்த நிலையில் தான் திருக்கடல் மல்லையில் எழுந்தருளியுள்ளார்.[15] இங்கு எம்பெருமான் தனது வலக்காலை ஆதிசேடன்மீது வைத்துக்கொண்டும் இடத் துடையின்மீது பூமிப் பிராட்டி யைத் தாங்கிக் கொண்டும் உள்ளார். இதனால் இந்த எம்பெருமான் திருவல எந்தை என்ற திருநாமம் பெறு கின்றார்.

36

கடிகமழு நெடுமறுகில்
கடல்மல்லைத் தலசயனத்து
அடிகளடி யேநினையும்
அடியார்கள் தம்மடியான்
வடிகொள்நெடு வேல்வலவன்
கலிகன்றி யொலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம்
முதல்வர்முத லாவாரே.[16]

---

15. இந்தத் திருக்கோயில் ஒரு குகையினுள் அமைந்துள்ளது. கலங்கரை விளக்கத்தைவிட்டு இறங்கிச் சற்று மேற்குப் பக்கமாகச் செல்லும்பொழுது இந்த வராக மூர்த்தியின் ஆலயம் தென்படு கின்றது. இங்குப் பூசை முதலியன நடைபெறுகின்றன.

16. பெரி. திரு. 2.6:10

[கடி—வாசனை; நெடுமறுகு—நீண்ட வீதி; தலசயனத்து அடிகள்—எம்பெருமான்; நினையும்—தியானிக்கின்ற; வடிகொள்—கூர்மை பொருந்திய; வேல்வலவன்—வேலைக் கொண்டு பொருவதில் வல்லவன்; ஒலிவல்லார்—ஓத வல்லவர்கள்]

திருக்கூடல் மல்லையின்மீதுள்ள திருமொழியின் பலசுருதிப் பாசுரம். "பாகவதர்களின் திருவடிகளையே தியானிக்கும் இந்த ஆழ்வாரின் இத்திருமொழியை ஓத வல்லவர்கள் கிரீடமணிந்த அரசர்களுக்கும் தலைவராகப் பெறுவர்கள்" என்று பயனுரைக்கின்றார் ஆழ்வார்.

முடிகொள்நெடு...முதல் ஆவார் : பாகவத சேஷத்துவமே பரம புருஷார்த்தம் என்று பரம போக்கியமாக அருளிச் செய்து வந்த ஆழ்வார் பலன் சொல்லுமிடத்து அகங்காரத்திற்கு மூல காரணமும் பாகவத சேஷத்துவத்திற்கு இடையூறாகவும் உள்ள இகலோக ஐசுவரியத்தைப் பலனாகச் சொல்லுவதேன்? என்று **நஞ்சீயர் பட்டரைக்** கேட்டாராம். அதற்கு அவர் ரஸோக்தியாக அருளிச் செய்த மறுமொழி; "திருமங்கையாழ்வார் திருவவதரித்த பின்பு தியாச்சியமான ஐசுவரியமும், பரம புருஷார்த்தமாய் விட்டது காணும்; பணமுள்ள விடங்களில் சென்று கொள்ளையடித்து பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணுவராகையாலே ஹேயமான் (கீழான) ஐசுவரியமும் இவ்வாழ்வார் திருவுள்ளத்தால் கருத்தாய் விட்டது" என்பது.

37

"திவளும்வெண் மதிபோல்"[17] (அவதாரிகை) : இது தாய்ப்பாசுரமாக நடப்பது. எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப் பட்டிருக்கும். அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச்

17. பெரி. திரு. 2.7

சொல்லியநுபவத்தல், வடிவழகை வருணித்து அநுபவித்தல், அவன் உகந்தருளிய திவ்விய தேச வளங்களைப் பேசி அநுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீவைணவர்களின் பெருமையைப் பேசி அநுபவித்தல்—என்று இப்படிப் பலவகைப் பட்டிருக்கும் பகவதநுபவம். இவ்வகைகளுள் மிக அழகான மற்றொரு வகையும் உண்டு. அதாவது ஆழ்வார் தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறட்டுக்கொண்டு வேற்றுவாயாலே பேசி அநுபவித்தல். இப்படி அநுபவிக்கும் திறத்தில் தாய்ப் பாசுரம், தோழிப் பாசுரம், மகள் பாசுரம் என்ற மூன்று வகுப்புகளுண்டு. அப்போது ஆழ்வாருக்குப் 'பரகாலர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கி, 'பரகால நாயகி' என்ற பெண்மைப் பெயர் வழங்கப்பட்டு வரும். தாய் சொல்வது போலவும், தலை மகள் சொல்லுவது போலவும், தோழி சொல்வது போலவும் பாசுரங்கள் வெளி வந்தாலும் பாசுரம் பேசுகின்றவர் ஆழ்வாரேயாவர் என்பதைப் பாசுரம் ஓதுவதால் ஏற்படும் பயனைக் கூறும் பதிகங்களில் பெண் குரல் மாறி ஆண் குரல் ஒலிப்பதைக் காணலாம். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பெருகினாலும், அவற்றுக்குப் பிரதானமான பெயர் ஒன்றேயாயிருக்குமாப்போலே, இன்று மூன்று நிலைமைகளாகச் சொல் மாலைகள் வழிந்து புறப்பட்டாலும் பாசுரம் பேசுபவர் ஆழ்வாரேயாவார்.

ஆழ்வார் தரமான தன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக் கொள்வது ஏதுக்காக? என்னில்: ஆழ்வார் தாமாக அத்தன்மையை ஏறிட்டுக் கொள்ளுகிறார் அல்லர்; அந்த நிலை தானே பரவசமாக வந்து சேர்கின்றது. புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலக மடங்கப் பெண் தன்மையாயிருக்கையாலும், சீவான்மாவுக்குச் சுவாதந்திரிய நாற்றமேயின்றி பாரதந்திரியமே வடிவாயிருக்கையாலும் இவ்வகைகளுக்கேற்பப் பெண்ணாக ஏறிட்டுக் கொள்வது வந்தேறியன்று என்றே கொள்ளலாம். தண்டகாரண்யத்தில்

வசித்துவந்த முனிவர்கள் இராமபிரானது அழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையராய்க் கண்ணனைக் கூடினர் என்ற ஐதிகம் உண்டு. ஆழ்வார்கள் அப்படியன்றியே அப்போதே பெண்மையையடைந்து புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர்.

ஆண் பெண் என்ற நிலைகள் சிற்றின்ப நுகர்ச்சிக்கன்றோ ஏற்பட்டவை? பேரின்ப அநுபவத்தில் ஊன்றின ஆழ்வார்கள் பெண்மையை எய்துவதாகவும், 'கொங்கை' முதலிய சொற்களையிட்டுப் பாசுரங் கூறுவதாகவும் நிகழ்கின்றது என்னே? எனின்: வேதாந்தங்களில் குறிப்பிடப் பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்பதை அறிகின்றோம். இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் '**பகவத் விஷய காமம்**' என்று வழங்கப்பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன்மீது கொள்ளும் காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறு பட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷய காமத்திற்கும்' கூறப்பெறும். **தூது, வெறிவிலக்கு, அறத்தொடு நிலை** போன்ற துறைகள் பாசுரங்களில் காணப்பெறுவதைக் கொண்டு இதனைத் தெளியலாம். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று சமயச் சான்றோர் கொள்வர்.

காதல் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப்பெற்றிருப்பதற்குக் காரணம்

என்ன? உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை யுருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல் லத்தைக் கலந்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும், சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத் தினையுடையவர்கட்குக் காட்டப்பெறும் உத்தி முறையாக இறையனார் களவியலிலும் கூறப்பெற்றுள்ளமை[18] ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தல் தகும். ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை என்க.

நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் அருளிச் செயல் களில் நாயகி நிலையில் பேசும் பாசுரங்கள் உள்ளன. திருவாய் மொழியில் இத்தகைய பதிகங்கள் 27 உள்ளன. இவற்றுள் மகள் பாவனையில் பேசியவை 17 பதிகங்கள்; தாய் பாவனையில் பேசியவை 7 பதிகங்கள்; தோழி பாவனையில் பேசியவை 3 பதிகங்கள். இங்ஙனமே, பெரிய திருமொழியில் அகப்பொருள் நுவலும் பதிகங்கள் 23 உள்ளன; திருநெடுந்தாண்டகத்தில் 2 பதிகங்கள்; மடல் 2, ஆக மொத்தம் 27 திருமொழிகள் ஆகின்றன. இவற்றுள் தாய் பாவனையில் உள்ளவை 10; மகள் பாவனையில் உள்ளவை 17; தோழி பாவனையில் ஒன்று கூட இல்லை.

38

திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும்நின் ஆகத் திருப்பது மறிந்தும்
ஆகிலும் ஆசைவி டாளால்

18. இறையனார் களவியல்—நூற்பா 1-இன் உரை காண்க.

குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லுநின் தாள்நயந் திருந்த
இவளைஉன் மனத்தால் என்நினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே![19]

[திவளும் — பிரகாசிக்கின்ற; மதி — சந்திரன்; திருமுகம்—அழகிய முகம்; அரிவை—இளம் பருவமுள்ளவள்; அவள்—பெரிய பிராட்டி யார்; ஆகம்—மார்பு; குவளை—நீலோற் பலம்; பாவை—பதுமை.]

தாய்ப் பாசுரம் : *பெருமானே, பெரிய பிராட்டியார் நின்திருமார்பில் எழுந்தருளியிருப்பதை அறிந்திருந்தும், உன்மீது ஆசை வைத்திருக்கின்றாள். இப்பெண் விஷயத் தில் என்ன நினைத்திருக்கின்றாய்? ஏற்றருளத் திருவுள்ள மா? அல்லது ஏற்றருளாதிருக்கத் திருவுள்ளமா?'' என்று திருத்தாயார் திருவிட எந்தை எம்பெருமானை வினவு கின்றாள்.*

திருவிட எந்தை : *திருவினை இடப்புறத்துத் தாங்கிக் கொண்டிருப்பதால் இந்த எம்பெருமான் 'திருவிட எந்தை' என்று வழங்கப்பெறுகின்றார். எம்பெருமான் திருநாமமே திவ்விய தேசத்திற்கும் ஏற்பட்டுவிட்டது. இந்த எம்பெரு மான் திருமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தை மிகவும் கவர்ந்தவராகக் காணப்பெறுகின்றார். திருமலைக்குச் சென்று ஏழுமலையானை மங்களாசாசனம் செய்யும் பொழுதும் இவர் இந்த ஆழ்வாரின் திருவுள்ளத்தில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.*

'ஏத்துவார்தம் மனத்துள் ளான்,இட
வெந்தை மேவிய எம்பிரான்
தீர்த்தநீர்த் தடம்சோலை சூழ்திரு
வேங்க டம்அடை நெஞ்சமே'[20]

என்ற திருப்பாசுரப் பகுதியால் இதனை அறியலாம்.

---

19. பெரி. திரு. 2.7:1
20. ஷெ 1.8:4

புராண வரலாறு : இத்தலத்து எம்பெருமான் எம்பெருமாட்டியை இடக்கரத்தில் சுமந்து கொண்டிருப்பதற்குப் புராண வரலாறு ஒன்று உண்டு. சம்புத் தீவில் சரசுவதி நதிக்கரையில் குணி என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பணிவிடை செய்வதற்கு ஒரு கன்னிகை தோன்றினாள். முனிவர் சுவர்க்கம் புகுந்த பிறகு கன்னிகை கடுந்தவம் புரிந்தாள். நாரத முனிவர் ஒருநாள் அவளைச் சந்தித்துத் திருமணம் ஆகாதவளுக்குச் சுவர்க்கம் கிடைக்காது என்று தெரிவித்தார். உடனே அவள் முனிவர் குழுவை நாடி தன்னை யாராவது ஒருவர் திருமணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டினாள். காலவ முனிவர் என்பார் அவளை மணம் புரிந்து கொண்டார். ஓர் ஆண்டில் அவளிடம் பெரிய பிராட்டியார் அம்சமாக 360 கன்னிகைகள் தோன்றினர். பின்னர் அவளும் துறக்கம் புகுந்தாள். முனிவர் அக்குழந்தைகளைக் காப்பாற்றும் ஆற்றலின்றிச் சம்புத் தீவிற்கு வந்த அந்தணர்கள் மூலம் திருவிட எந்தை என்ற தலம் இருப்பதை அறிந்து குழந்தைகளுடன் அங்கு வந்தார். நாடோறும் முனிவர் வராக மூர்த்தியைச் சேவித்து வரும் நாளில் கன்னிகையருக்குத் தகுந்த கணவன்மார் கிடைக்க வேண்டுமென்று கவலையுடன் இருந்தார். பரமபதநாதன் ஒரு மாணி வடிவமாக அவரிடம் வந்து அக்கன்னிகையரைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டார். நாளொன்றுக்கு ஒரு கன்னிகை வீதம் திருமணம் புரிந்து கொண்டே வந்தார். ஆண்டு இறுதி நாளில் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எல்லாக் கன்னிகையரையும் ஒன்று சேர்த்து ஒரே கன்னிகையாக்கி அவளைத் தன் இடப்பக்கத்தில் தாங்கி அந்த நாச்சியார் முகமாக எல்லோருக்கும் 'ஞானோபதேசம்' செய்தார்.

360 கன்னிகையரும் ஒருங்கு சேர்ந்து ஓர் உருவான படியால் வராக மூர்த்தி தாங்கிக் கொண்டிருக்கும் நாச்சியாருக்கு அகிலவல்லி நாச்சியார் என்று திருநாமம் வழங்கலாயிற்று (அகிலம்-எல்லாம் ஒன்றானது). ஆண்டும் முடியும்

அளவும் நாடோறும் திருமணம் புரிந்துகொண்டபடியால் வராகமூர்த்திக்கு நித்திய கல்யாணப் பெருமாள் என்ற மறு திரு நாமமும் ஏற்பட்டது. பெருமாளுடைய திருக்கோயி லானதால் நித்திய கல்யாணபுரி என்ற ஊ நக்கு மறுபெயரும், பெரிய பிராட்டியார் அவதரித்த இடமாதலால் ஸ்ரீபுரி என்ற பெயரும், எம்பெருமான் வராக வடிவத்துடன் சேவை சாதிக்கிறபடியால் வராகபுரி என்ற பெயரும் வழங் கலாயின. அந்த 360 கன்னிகையருள் முதல் கன்னிகையின் பெயர் கோமளவல்லி என்பது. ஆகவே, இங்குத்தனிக் கோயில் கொண்டுள்ள தாயாருக்குக் கோமள வல்லி நாச்சியார் என்ற திருநாமமும் ஏற்பட்டது. பிராட்டியாரை இடப்பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்பதால் எம் பெருமான் திருவிடந்தை என்ற திருநாமமும் பெறுகின்றார்.

கொல்லியம்பாவை : 'வல்லில் ஓரி' என்ற சிற்றரச னுக்கு உரியதாய்க் கொல்லி என்னும் பெயர் கொண்ட தான மலையின்கண்ணுள்ள ஒருபெண்பாற் பிரதிமை. இது தேவசிற்பியால் அமைக்கப்பெற்ற அழகிற் சிறந்த பதுமை யாகும். அம்மலையிலுள்ள தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அசுரரும் அரக்கரும் இப்பதுமை யின் சிரிப்பைக் கண்டு மயங்கி உயிர் துறப்பார்களாம் (சித்திரமடல்). அசுரரும் அரக்கரும் அங்கு அணுகும் போது அவர்களது வாடைபட்டவுடனே இது தானே நகை செய்யுமாறு பொறியுள் வைக்கப்பட்டதென்பர். இப்பாவை கண்டார் உள்ளமும் விழியும் கவர்ந்து பெருங்காம வேட்கை உறுவித்து இறுதியில் கொல்லு மென்றும் கூறுவர். இது தெய்வநிர்மாணம் என்ப. ஒரு காலத்தில் திருமகள் தன்முன் போர்க்கெழுந்த அவுணர் மோகித்துவிழும்படி இக்கொல்லியம்பாவை உருக்கொண்டு ஆடினள் என்பதை,

> செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
> திருவின் செய்யோள் ஆடிய பாவையும்[21]

---

21. சிலப். கடலாடு. அடி(60-61)

என்று சிலப்பதிகாரம் கூறும். இக் கொல்லிப்பவை கொல்லி மலையிலுள்ளது என்பதும், தெய்வத்தால் செய்யப்பட்டது என்பதும், அழகில் மிக்கதென்பதும், காற்றினாலும் மழையினாலும் மற்றெவ்வகை ஊறுகளாலும் தன் அழகிய நல் வடிவம் கெடாதென்பதும் நற்றிணையில் காணத்தகும். இப்பாவையின் அழகைத் தலைவியின் நலத்திற்கு உவமை கூறுதல் அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களிலும் சிறப்பாக உண்டு. சீவகசிந்தாமணி, குறுந்தொகை என்ற நூல்களிலும் இப்பாவையைப்பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆகவே, தமிழ்க் கவிஞர்கள் கொல்லிப் பாவையை ஒப்புயர்வற்ற அழகிற் சிறந்த மாதர்க்கு உவமை கூறுதல் மரபு என்பது அறியப்படும். இப்பாசுரத்தில் 'கொல்லியம் பாவை போன்றவள்' என்று கூறாமல் 'கொல்லியம்பாவை' என்றே சொல்லி வைத்தது முற்றுவமை (உருவகம்). 'தாவிவையங்கொண்ட தடந்தாமரை கட்கே' (திருவாய் 6. 9; 9) என்றது போல.

39

ஓதிலும் உன்பேர் அன்றிமற் றோதாள்
உருகும்நின் திருவுரு நினைந்து
காதன்மை பெரிது கையற உடையள்
கயல்நெடுங் கண்துயில் மறந்தாள்

---

22. நற். 185, 192, 201
23. அகம்-62, 209
24. புறம்-251.
25. சீவக. 197, 667
26. குறுந். 89, 100.

பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது
தெள்ளியள் வள்ளிநுண் மருங்குல்
ஏதலர் முன்னா என்னினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே! [27]

[ஓதிலும்-எதைச் சொன்னாலும்; திருஉரு-திரு மேனி; காதன்மை-ஆசை; கயல்-மீன்; துயில்-உறக்கம்; பிள்ளமை - சிறுபிள்ளைத்தனம்; தெள்ளியள்-தெளிவுடையவள்;வள்ளி-கொடி; மருங்குல்-இடை; ஏதலர்-பகைவர்கள்]

தாய்ப் பாசுரம் : ''வாய்திறந்து ஒருசொல் சொல்லுவதே அருமை. அப்படி ஒருகால் வாய்திறந்தாளாகில் 'அம்மா, அண்ணா' என்கின்ற பேச்சை எடுப்பதே இல்லை; 'கோவிந்தா, கோபாலா' என்று உன் பேரையே சொல்லு கின்றாள். இவளை என்ன செய்வதாக நினைத்திருக் கின்றாய்?'' என்று திருத்தாயார் எம்பெருகானை வினவு கின்றாள்.

'ஓதிலும் உன்பேரன்றி மற்றோதாள்' : இந்த அடிக்கு ஓர் ஐதிகம். திருவாய்ப்பாடியில் கண்ணன் பிறந்து வளரும் காலத்தில் ஓர் ஆயமங்கை இடைவிடாது கண்ண பிரானையே சிந்தித்துக் கொண்டு வியாமோகம் அடைந் திருந்தாள்; அது கண்ட அவள் மாமியானவள் அந்த சிந்தனையை மாற்றிவிடக் கருதி, தயிர் நெய்பால் முதலியவற்றை அவளிடம் கொடுத்து 'இவற்றை விற்றுவா' என்று சொல்லியனுப்பினாள். அம்மங்கை கண்ணபிரானை யன்றி வேறொன்றையும் அறியாதவளாகையாலே, மாமியின் நிர்ப்பந்தத்துக்காகக் கூடையைத் தலையிலே சுமந்து கொண்டு ,தெருவழியே நடந்து செல்லும்போது 'தயிர்! நெய்! பால்! என்று விற்பது தவிர்ந்து ''கோவிந்தன் வாங்கலையோ கோவிந்தன்! தாமோதரன் வாங்கலையோ

27. பெரி. திரு. 2. 7; 5.

தாமோதரன்! மாதவன் வாங்கலையோ மாதவன்!'' என்று இங்ஙனே கண்ணனின் திருநாமங்களையே கூவிக் கொண்டு சென்றாளாம், அதுபோலவே இப் பரகால நாயகியும் 'ஓதிலும் உன்பேரன்றி மற்றோதாள்' என்ற வளாக உள்ளாள்.

40

தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை
ஆங்கரும்பிக் கண்ணீர்சேர்ந்த தனபு கூரும்
அடியவருக் காரமுத மானான் தன்னை
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே![28]

[தாங்க அருபோர் - ஒருவராலும் தாங்கமுடியாத கொடியபோர்; மாலி-ஓர் அரக்கன்; பறவை-கருடன்; தராதலத்தோர்-பூமியிலுள்ளவர்கள்; அன்புகூரும்- பக்திபண்ணும்; கண்வளரும்-ஒரு கண் ஏறிவளம் பெற்ற]

திருக்கோவலூரின்மீது மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருமொழியில் ஒரு பாசுரம். திருமங்கையாழ்வார் கூறுவார்: ''திருக்கோவலூரில் அடியேனுக்குச் சேவை சாதித்த எம்பெருமான் எப்படிப்பட்டவன்? என்னில்: பெரியதிருவடியை ஊர்தியாகக் கொண்டு போர்க்களத்தில் புகுந்து திருவாழியினால் மாலி என்னும் அரக்கனது தலையையறுத்தொழித்துச் சாதுக்களை வாழ்வித்தவன்; அடியவர்கட்கு ஆரமுதம் போன்றவன்'' என்று.

28. பெரி. திரு. 2. 10. 4

மாலிபடப் பறவையூர்ந்து : மாலி, மாலிவான், சுமாலி என்னும் அரக்கர் மூவரும் சகோதரர்கள். இவர்கள் திருமாலுடன் போர்புரிந்து தோல்வியுற்ற வரலாறு உத்தர இராமாயணத்தில் ஏழாவது சருக்கத்தில் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. மாலி கருடன் மீதிருந்த திருமாலுடன் போர் புரியும் போது சிறிது பங்கப்பட்டுத் தேரைவிட்டு இழிந்து கதையினால் கருடனை முகத்தில் மோதினான்; இங்ஙனம் புடைபட்ட புள்ளரசன் மிகத்துன்புற்று அவ்வேதனைக்கு ஆற்றாது திருமாலைப் போர்க்களத்தினின்றும் பின்புற மாக எழுந்தருளிக் கொண்டுபோக, திருமால் பாராமுக மாகத் திரும்பியிருக்கையிலும் அவன்மீது தமது சக்கரப் படையை விடுக்க, அது மாலியினுடைய முடியை அறுத்துத் தள்ளியது.

அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான்; இங்கு அடியவர்கள் ஆவார் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் முதலாழ்வார்கள். அவர்கட்குத் 'தேனே பாலே கன்னலே யமுதே' என்றும் படியிருந்தவன் இத்தலத்து எம்பெருமான்.

திருக்கோவலூர் : கோபாலன் (கோவலன்) என்று வழங்கப் பெறும் ஆயனார் எழுந்தருளியிருக்கும் திவ்விய தலமாதல்பற்றி 'திருக்கோவலூர்' என்று திருநாம மாயிற்று.

பாவரும் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு [29]

என்று வரந்தருவார் புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிபாடிய தலம் இது. அதாவது, திவ்வியப்பிரபந்தம் முதன்முதலாகத் தோன்றியது இத்தலத்தில்தான்.

29. வில்லிபாரதம்-சிறப்புப் பாயிரம்-2

இது வரலாறு : ஒரு சமயம் மாலை நேரத்தில், பொழுது சாயும் தருணத்தில், வானம் திடீரென்று இருண்டது. அந்த இருள் உலகத்தைக் கருந்திரையிட்டு மறைத்தது. அத்துடன் நல்ல மழையும் பொழிந்தது. மழையில் நனைந்து கொண்டே வந்த பெரியோர் ஒருவர் ஓர் இல்லத்தில் மழைக்காக ஒதுங்கவும் இரவு நேரத்தைக் கழிக்கவும் இடம்கேட்டார். வீட்டுக்காரர் இடைக்கழியைக் காட்டி அதில் 'ஒருவர் படுக்கலாம்' என்று கூறி இடங் கொடுத்துக் கதவினைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே போய்ப் படுத்துக் கொண்டார். இவர்தான் பொய்கையாழ் வார். மழையோ விடாமல் பெய்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் இன்னொருவர் வந்து அதே வீட்டில் தங்க இடம் கேட்டார். பொய்கையார் 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்' என்று கூறிக் கொண்டே வந்தவருக்கு இடம் கொடுத்தார். இவர்தான் பூதத்தாழ்வார். மேலும் சிறிது நேரம் கழித்ததும் மூன்றாவதாக மற்றொருவர் அதே வீட்டிற்கு வந்து ஒதுங்க இடம் வேண்டினார். இடைக் கழியிலிருந்த இருவரும் 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்; என்று கூறிக் கொண்டே அவரையும் அழைத்துக் கொண்டனர். இப்போது வந்தவர் பேயாழ்வார். இன்கவி பாடும் பரம கவிகளாகிய இம்மூவரும் இறைவனுடைய திருக்குணங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடிய வண்ணம் இருந்தனர். இவர்கள் மூவரும் ஒருவரை யொருவர் முன்பின் அறியாதவர்களே.

இந்நிலையில் குரல் கொடுக்காது இசையவும் பெறாது நான்காமவராக யாரோ ஒருவர் நுழைந்து விட்டார். நெருக்கத்தினால் இது தெரிந்தது. இப் புதியவரைத் தெரிந்து கொள்ள அந்த இருட்டிலும் மழையிலும் விளக்கு

---

30. இக்காலத்தில் இதனை 'ரேழி' என்றுவழங்குவர்; வாயி லுக்கும் வீட்டிற்கும் இடைப்பட்ட ஒடுக்கமான இடம். வடமொழி யில் இது 'தேஹளி'என வழங்கப்பெறும்.

கிடைக்கவில்லை. இந்நிலையில் ,''வையம் தகளியா''[31] என்ற என்ற விளக்கை ஏற்றினார். இந்தப் பாசுரத்தின் மகிமையால் அந்த இடைக்கழியில் பளிச்சென்று ஏதோ ஒரு திரை விலகி எப்படியோ ஒளியும் வந்து விட்டது; புறத்தே கவிழ்ந்து கிடந்த இருளும் நீங்கியது. அதே சமயத்தில் பூதத்தாழ்வார் ''அன்பே தகளியா[32] என்ற ஞானவிளக் கேற்றினார். இந்த விளக்கினால் அகத்தே மண்டிக் கிடந்த உள் இருட்டும் நீங்கியது. உடனே அந்தப் பேயாழ்வார் நான்காவது ஆளைக் கண்டுபிடித்து விட்டார். அந்த எக்களிப்பே ''திருக்கண்டேன்''[33] என்ற பாசுரமாக வடிவங் கொண்டு அந்த 'நான்காவது ஆள் 'திருக்கோவலூர் தீங் கரும்பு' என்று காட்டிவிட்டது.

ஆழ்வார்கள் மூவரும் எம்பெருமானைக் கண்டதும் பக்திப் பெருக்கால் திளைத்துப் போயினர். பொய்கை யாழ்வார் தமது பாடலைத் தொடர்ந்து 'முதல் திருவந்தாதியைப் பாடி முடித்தார்; பூதத்தாழ்வார் தமது பாடல் தொடங்கி 'இரண்டாம் திருவந்தாதி'யை நிறைவு செய்தார். பேயாழ்வார் 'மூன்றாம் திருவந்தாதி' யைத் தலைக்கட்டினார். இங்ஙனம் 'குருபரம்பரை' என்ற நூல் கூறுகின்றது. அஞ்ஞான இருள் அகலப்பெறின் மெய்ஞ்ஞான ஒளி தோன்றி இறைவன் காட்சி அளிப்பான் என்ற உண்மையை முதலாழ்வார்களின் வரலாற்றால் அறிகின்றோம். ''நீயும் திருமகளும்''[34] என்ற பொய்கை யாழ்வாரின் பாசுரமும் இந்த நிகழ்ச்சியை எடுத்துரைப்ப தாக உள்ளது. வேதாந்த தேசிகரும் இந்த நிகழ்ச்சியை,

---

31. முதல். திருவந். 1

32. இரண்.,திருவந். 1

33. மூன். திருவந். 1

34. முதல், திருவந். 86

'பாட்டுக்(கு) உரிய பழையவர்
மூவரைப் பண்டுஒருகால்
மாட்டுக்(கு) அருள்தரும் மாயன்
மலிந்து வருத்துதலால்
நாட்டுக்(கு) இருள்செக நான்மறை
அந்தி நடைவிளங்க
வீட்டுக்(கு) இடைகழிக் கேவெளி
காட்டும்அம் மெய்விளக்கே' [35]

[பழையவர்—முதலாழ்வார்கள்; மலிந்து—அதிகமாக; வருத்துதல்—நெருக்குதல்; மாடு—செல்வமாகிய ஆன்மா; மாயன்—திருமால்; இருள்செக—அஞ்ஞானம் நீங்க; நான் மறை அந்தி—உபநிடதம்; நடை—வழி; வெளி—உபாயங்கள்]

என்று பாராட்டுவர்.

வரிவண்டு...கண்வளரும் : வண்டுகளின் இசைப்பாடலாகிய இன்ப ரசம் பாயப்பெற்று கரும்புகள் கணுக்கள் வளரப் பெறுகின்றனவாம். இனி, 'கண்வளரும்' என்பதற்கு 'உறங்கும்' என்று பொருள் கொள்ளவும் இடமுண்டு. தாவரங்கள் இசையில் ஈடுபடும் என்ற சர் ஜே. சி. போஸின் கொள்கையை எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது இது. கண்ணபிரான் குழலூதிய காலத்தில், சராசரப் பொருள்கள் யாவும் குழலினிசையில் ஈடுபட்டு மெய்மறந்து நின்றது போலவே,வண்டுகள் பாடும் இசையைக் கேட்டு அஃறிணைப் பொருளாகிய கரும்பும் அசைவற்று நிற்கும்படியைச் சொன்னதாகக் கொள்ளலாம்.

மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும்கடை வாய்வழி சோர
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா
எழுதுசித் திரங்கள் போலநின் றனவே [36]

என்றாற் போல.

---

35 தே. பி. —89

36. பெரியாழ்; திரு. 3.6:9

தீங்கரும்பு : இங்குத் தீங்கரும்பாகச் சொன்னது திருக்கோவலூர்ப் பெருமானையே; குழாவரி வண்டிசை பாடும் பாடலாவது மூன்று திருவந்தாதிகள். இந்த அந்தாதிப் பாடல்களின் இசை கேட்டு 'திருக்கோவலூர் தீங்கரும்பு' (இறைவன்) கண்ணுறங்குமாம். வண்டுகளை ஆழ்வார்களாகக் (மூன்று ஆழ்வார்கள்) கொள்ளலாம்.

ஐதிகம்: மூன்று ஆழ்வார்களைக் கரும்பினைப் பிழியும் மூன்றுஆலை உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானைக் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் வேதாந்த தேசிகர் குறிப்பிட்டுள்ளமை[37] ஈண்டு நினைவு கூர்ந்து மகிழத் தக்கது. இச் சுலோகத்திற்கு மேற்குறிப்பிட்ட ஆழ்வார் பாசுரம் அடிப்படையாக அமைந்திருத்தல் வேண்டும்.

மூன்றாம் பத்து

41

இருந்தண் மாநிலம் ஏனம தாய்வளை
மருப்பினி லகத்தொடுக்கி
கருந்தண் மாகடல் கண்துயின் றவனிடம்
கமலநன் மலர்த்தேறல்
அருந்தி, இன்னிசை முரன்றெழும் அளிகுலம்
பொதுளியம் பொழிலூடே
செருந்தி நாள்மலர் சென்றணைந் துழிதரு
திருவயிந் திரபுரமே[1]

[இருதண் மாநிலம் – மிகக்குளிர்ந்த பெரியபூமியை; ஏனம்—பன்றி; வளை மருப்பு — வளைந்த

37. தேஹளீச ஸ்துதி- சுலோகம்-7
1. பெரி. திரு. 3.1:1

கோரப் பல்; ஒடுக்கி — அடக்கி; கண் துயின்றவன்—யோக நித்திரை செய்தவன்; கமலம்—தாமரை; தேறல்—தேன்; அளிகுலம் —வண்டுகளின் கூட்டம்; பொதுளி—நெருங்கி; செருந்தி—சுரபுன்னை; உழிதரு—சஞ்சரிக்கப் பெற்ற]

திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருவயிந்திரபுரத்தைப் பற்றிய திருமொழியில் ஒரு பாசுரம். இந்தத் திருமொழி முழுதும் முன்னிரண்டடிகளில் திவ்விய தேசத்தெம்பெருமான் சிறப்பும், பின்னிரண்டடிகளில் திவ்விய தேசத்தின் சிறப்பும் சொல்லப் பெறுகின்றன. வராக அவதாரம் எடுத்து மாநிலத்தை மீட்டுக் கொணர்த்தவனும், திருப்பாற் கடலில் திருக்கண் வளர்ந்தருள்பவனுமான பெருமான் உறையும் இடம் திருவயிந்திரபுரம். இத்திருத்தலத்தில் பலபல சோலைகள் உண்டு; அவற்றில் திரள் திரளாக வண்டுகள் புகுந்து மதுவைப் பருகிக் களித்து அக்களிப்புக்குப் போக்கு வீடாக இனிய இசைகளைப் பாடிக்கொண்டு உலாவர நின்றன; உலாவும்போது செறியப் பூத்த புன்னை மரங்கள் தென்படவே அவற்றிலும் மதுவைப் பருகிச் சென்றுசேர்கின்றன.

உள்ளுறைப் பொருள் (ஸ்வாபதே சார்த்தம்): 'உளங் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறியதேன்'[2] எனப்படும் பகவத் விஷயமாகின்ற மதுவை விரும்பியும் 'போந்ததென் நெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப் போதில், தண்சீரார் தெளிதேன்உண்டு அமர்ந்திடவேண்டி'[3] என்கிறபடியே ஆசாரிய பாதாரவிந்த மதுவைப் பருகுதலையே விரதமாக உடைத்தாயும் மேல் நோக்கிச் செல்வதற்குச் சாதனமாகிய இரண்டு சிறகுகள் போன்ற

2. பெரி. திரு. 4.3:9

3. இராமா. நூற். 100

கர்மஞானங்களை உடையராகியும் ஸாரக்ராகிகளாயு மிருக்கின்ற ஸ்ரீ வைணவர்களை வண்டாகச் சொல்வது வழக்கம். அப்படிப்பட்ட ஸ்ரீ வைணவர்கள் பகவத் பாகவத போக்கியதைகளை அநுபவித்த ஆனந்தத்திற்குப் போக்கு வீடாக 'பண்கள் தலைகொள்ளப்பாடி'[4] என்கிற படியே நாரதமுனிவர், திருப்பாணாழ்வார், தம்பிரான்மார் முதலானாரைப் போலே இசை பாடுவ துண்டாகையாலே 'இன்னிசை முரன்று எழும்' என்றது. பகவத் பாகவத குணானுபவத்திற்கு வாய்த்த இடங்களே 'பொழில்' எனப் படும். செருந்தி என்ற ஒருவகை மரத்தைச்சொல்லி அதன் மலரிலே சென்றணைவதாகச் சொன்னது 'தன் ஒப்பார் இல் அப்பன் தந்தனன் தனதாள் நிழலே'[5] என்று சொல்லு கிறபடியே சம்சாரமாகிய கொடிய வெய்யிலிலே தபிக்கப் பட்டவர்கட்கு நிழல் தந்து விடாய் தீர்க்கும் நன்மரமாகிய வாசுதேவனுடைய பாதமாமலரிற் சென்று சேர்ந்திருக்கும் இருப்பைச் சொன்னபடி. ஆக, ஸாரக்ராகிகளான (சாரம் அறிந்தவர்கள்) ஸ்ரீ வைணவர்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு பகவத் பாகவத குணாநுபவக் களிப்பாலே யாழினிசை வேதத்தியல்களைப் பாடிக்கொண்டு பகவத் பாதாரவிந்த நிரதர்களாய் வாழுமிடம் திருவயிந்திரபுரம் என்றதாயிற்று.

இவ்வகை உள்ளுறைப் பொருள்களைத் திருவுள்ளம் பற்றியே அந்யாப தேசமாக வண்டுகளென்றும், தும்பிக ளென்றும், கொக்கென்றும், குருகென்றும் லௌகிகப் பொருள்களைக் கொண்டு வருணிப்பதாகச் சில ஆசிரியர் களின் கொள்கையாகும். 'மானேய் நோக்கு நல்லீர்'[6] என்ற திருவாய் மொழிப் பாசுரத்தில் 'தேனார் சோலைகள்' என்றவிடத்து வியாக்கியானங்களில் ''நித்தியப் பிராப்பி யனாய்க் கொண்டு அங்கேயிருக்கிறவன் அடியார்கள்

4. திருவாய். 3.5:2

5. திருவாய். 6.3:9

6. ஷை. 5.9:1

உகந்தது ஒரு பொருளைத் திருமேனியாகக் கொண்டு முகங்கொடுத்து நிற்பது போலே, அங்குள்ளாரும் இங்கே போந்து தாவரங்களாயும், ஜங்கமங்களாயும், விலங்குகளாயும் அவனை விடமாட்டாதே நிற்கிறபடி; நித்தியரும் முத்தரும் பத்தரில், (சம்சாரிகளில்) ருசியுடையாரும் உகந்தருளின நிலங்களைப் பற்றியன்றோ கிடப்பது... உகந்தருளின நிலங்களிலே மெய்யே பிரபத்தி விளைந்தார்க்கு அங்குள்ளவையெல்லாம் உத்தேச்யமாய்த் தோன்றுமிறே... இராமாவதாரத்திலும் ஒரு இலக்குமணன் முதலியோர்கள்,[7] வானரங்களின் உருவத்தை அடைந்தார்கள்;[8] விபீஷணன் முதலியோர் பற்றிக் கிடந்தார்கள்;[9] அது போன்று.''

42

விரைக மகிழ்ந்தமென் கருங்குழல் காரணம்
வில்லிறுத்து அடல்மழைக்கு
நிரைக லங்கிட வரைகுடை யெடுத்தவன்
நிலவிய இடம்தடமார்
வரைவ ளந்திகழ் மதகரி மருப்பொடு
மலைவள ரகிலுந்தி
திரைகொ ணர்ந்தணை செழுநதி
திருவயிந் திரபுரமே.[10]

[விரைகமழ்—மணம் வீசுகின்ற; கருங்குழல்—பிராட்டியார்; நிரை—ஆநிரைகள், வரைகுடை—கோவர்த்தனக் குடை; தடம்—தடாகங்கள்; மதகரி—மதயானைகள்; மருப்பு—தந்தம்; திரை—அலைகள்; அணை—சேருகின்ற; செருநதி—அழகிய ஆறு.]

7. இலக்குமணன் முதலியோர்கள்—நித்தியர்கள்
8. வானரங்களின் உருவத்தை அடைந்தவர்கள்—தேவர்கள்
9. விபீஷணன் முதலியோர்—முமுட்சுக்கள்.
10. பெரி. திரு. 3.1:8

தெய்வநாயகன் பக்கலிலே சீராமனுக்குரிய பராக்கிரமமும் கிருஷ்ணனுக்குரிய பராக்கிரமமும் விளங்க நின்றமையால் அந்த இரண்டு அவதாரங்களின் சேஷ்டிதங்களையும் அநுபவிக்கின்றார் ஆழ்வார்.

கருங்குழல் காரணம் வில்லிறுத்து: முன்னொரு காலத்தில் தேவசிற்பியான விசுவகர்மாவால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டு விற்களுள் ஒன்றைச் சிவபெருமானும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக் கொண்டனர். பின்பொரு காலத்தில் அவ் விற்களுள் சிறந்தது இன்னதென்பதை அறிய விரும்பிய தேவர்களின் வேண்டுகோளால் பிரமன் உருத்திரனுக்கும் விஷ்ணுவுக்கும் போரை மூட்டிவிட, அங்ஙனமே அவர்கள் அவ் விற்களைக் கொண்டு பொருகையில் சிவபிரானது வில் சிறிது முறிபட்டது, அவ்வாறு முறிபட்ட வில்லைச் சிவபிரான் ஜனககுலத்து தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட, அது வமிச பரம்பரையாய் ஜனகமகாராசன் அளவும் வந்தது. இது நிற்க; முறிபடாத மற்றொரு வலிய வில்லை விஷ்ணுவானவர் ரிசீச முனிவனிடம் கொடுத்துச் செல்ல, அஃது அவன் குமாரனான ஜமதக்னியினிடத்தும், அவன் குமாரனான பரசுராமனிடத்தும் பரம்பரையாய் வந்தது. முற்கூறிய சிவதனுசை சீதைக்குக் கன்யாசுல்கமாக ஜனகன் வைத்திருந்தான். இராமன் அந்த வில்லை முறித்துத் தன் பேராற்றலை விளங்கச் செய்து பிராட்டியை மணந்து கொண்டதை யாவரும் அறிவர்.

அடல் மழைக்கு நிரை கலங்கிட...வரைகுடை எடுத்தவன்: திருவாய்ப் பாடியிலுள்ள இடையர்கள் எல்லாரும் கண்ணபிரானுடைய அற்புத சரிதைகளைக் கொண்டு 'இவனே நம் குலக்கொழுந்து; இவன் சொற்படி நடப்பதே நமது கடமை!' என்று உறுதி கொண்டிருந்தனர். இவ்வாறு இருக்கையில் சரத்காலம் வந்தது; அப்போது இடையர்கள் ஆண்டுதோறும் நடத்துவதுபோல் இந்திரனுக்குப் பூசை

செய்யப் பலபல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய் கறிகளும் மற்றுமுள்ள நைவேத்தியப் பொருள்களை யும் அமைப்பதைக் கண்டு கண்ணபிரான், 'ஓ பெரியோர் களே! இவை ஏதுக்காக?' என்றான். அதற்கு அவர்கள், 'அப்பா! இந்திரன் அநுக்ரகத்தினால் காலங்களில் தகுதி யாக மழை பெய்து பசுக்களும் நாமும் சுகமாக வாழ்கின் றோம்; இனி எப்போதும் அந்த இந்திரன் நம்மை இப்படியே காக்க வேண்டும் என்கைக்காக ஆண்டுக் கொருமுறை பொங்கலிடுவதுண்டு; அதற்காக இவை யெல்லாம் சேர்த்து வைத்தோம்' என்றனர். இது கேட்ட கண்ணன் 'நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் காப்பாற்றப்படுகின்றோமோ அதற்கன்றோ பூசை செய்ய வேண்டும்? இக் கோவர்த்தன மலையன்றோ பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுத்துக் காக்கின்றது? இந்திர னால் நமக்கு என்ன பயன் உண்டு? இவற்றை யெல்லாம் நீங்கள் இந்த மலைக்கே பலியிடுங்கள்' என்றான். இடை யர்களும் அப்படியே செய்யத் துணிந்து அவற்றை மலைக்கே பலியிட்டனர். கண்ணபிரான் அந்த மலையில் ஆவேசித்து அவற்றையெல்லாம் தானே அமுது செய்திட்டான். பூசை யிழந்த இந்திரன் சீற்றமுற்றுத் தன் பரிசனங்களான மேகங்களை அழைத்து 'இடைக்குலத்துக்குப் பெரும் தீங்கு விளையும்படிக் கல்மாரி பொழியுங்கள்' எனக் கட்டளை யிடவே, அப்படியே அம் மேகங்கள் வந்து ஏழு நாள் விடா மழை பெய்ய இடையரும் பசுக்களும் கதறிக் கதறிக் கண்ணனையே சரணம் அடைய, கண்ணபிரான் இடைக் குலத்துக்கு அபயமளித்து அந்த மலையைப் பெயர்த்துக் குடையாகத் தூக்கித் தாங்கிக் கோகுலத்தைச் சேர்ந்த சகல பிராணிகளையும் அதன்கீழ் அழைத்துக்கொண்டு சிறிதும் அபாயமின்றிக் காத்தருளினன். ஏழு நாள் இடைவிடாது கல் மாரி பொழிந்தும் யாருக்கும் எவ்விதமான தீங்கும் நேரிடாமையைக் கண்ட இந்திரன் கண்ணனுடைய மகிமைக்கு வியந்து கீழிறங்கி வந்து பணிந்து குற்ற மன்னிப்பு ஏற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் ஏகினன்.

43

கருமுகில் போல்வதோர் மேனி
கையன ஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர் சூழ
ஏழுல கும்தொழு தேத்த
ஒருமகள் ஆயர் மடந்தை
ஒருத்தி நிலமகள் மற்றைத்
திருமக ளோடும் வருவான்
சித்திர கூடத்துள் ளானே.[11]

[கருமுகில்—காளமேகம்; மேனி—உடல்; ஆழி—சக்கரம்; பெருவிறல்—மிக்க சக்தியையுடைய; வானவர்—தேவர்கள்; ஏத்த—துதிக்க; ஆயர் மடந்தை—நப்பின்னை; நிலமகள்—பூமிப் பிராட்டியார்; திருமகள்—பெரிய பிராட்டி யார்.]

தில்லைத் திருச்சித்திர கூடத்துப்பற்றிய திருமொழி யில் ஒரு பாசுரம். எம்பெருமான் தேவிமாரோடு புறப்பாடு செய்யும் நிலையைப் பேசுகின்றது இப் பாசுரம்.

ஆயர் மடந்தை—நப்பின்னைப் பிராட்டி. இவள் கண்ணபிரானது மனைவியரில் தலைமையுடையவள்; கும்பன் என்னும் இடையர் தலைவனது மகள். இவளை மணம் செய்து கொள்ளுவதற்காகவே, இவள் தந்தை கன்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அசுராவேசம் பெற்ற எழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக் கொண்டு சென்று அவற்றின் வலியடக்கித் தழுவினன். நப்பின்னை திருமாலின் தேவியருள் நீளா தேவியின் அம்சமாகப் பிறந்தவள் என்பது வரலாறு.

---

11. பெரி. திரு. 3.3;9

44

நான்முகன்நாள் மிகைத்தருக்கை இருக்கும் வாய்மை
நலமிகுசீர் உரோம சன்மனால் நவிற்றி, நக்கன்
ஊன்முகமார் தலையோட்டூண் ஒழித்த எந்தை
ஒளிமலர்சே வடியணைவீர், உழுசே யோடச்
சூன்முகமார் வளையளைவா யுகுத்த முகத்தைத்
தொல்குருகு சினையெனச்சூழ்ந் தியங்க,எங்கும்
தேன்முகமார் கமலவயல் சேல்பாய் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே.[12]

[நாள்—ஆயுள்; தருக்கை—கர்வத்தை; நக்கன்—உருத்திரன், ஆடையில்லாதவன்; ஊன்—மாமிசம்; தலை ஒடு—கபாலம்; ஊண்—பிச்சை எடுத்தலை; அணைவீர்—சேர்வீர்; உழுசே—உழும் எருதுகள்; சூல்முகம் ஆர்—கருவுயிர்க்கும் தருணம்; தொல்குருகு—பெரிய கொக்கு; வளை—சங்கு; சேல்—மீன்.]

காழிச் சீராம விண்ணகரத்தின்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்ற ஒரு திருமொழி; திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது. ஆயுள் நீண்டிருக்கைப்பற்றி பிரமனது தருக்கையும் உருத்திரனது பிச்சை எடுத்தலையும் தவிர்த்த எம்பெருமான் காழிச் சீராம விண்ணகரில் எழுந்தருளி யிருக்கின்றான். அங்குச் சென்று சேருமாறு பணிக்கின்றார் ஆழ்வார்.

நான்முகன் செருக்கை அடக்கின வரலாறு: *தன் ஆயுள் மிகவும் நீண்டிருத்தல்பற்றி அகங்காரம் கொண்டிருந் தான் நான்முகன். இந்தச் செருக்கை* உரோமேசர் *என்னும் மாமுனிவரால் தொலைத்திட்டான் பரந்தாமன். இந்த*

12. பெரி. திரு. 3.4:2

வரலாறு எந்த இதிகாசப் புராணங்களிலும் கிடைக்க வில்லை. ஆயினும் அழகிய மணவாள சீயர் அருளிச் செய்த விவரம் உரோமேசர் உடல் முழுவதும் கரடிபோல் அடர்ந்த மயிர்களையுடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்டகாலம் வாழ்ந்திருந்து எம்பெருமானைச் சிந்தனை செய்ய வேண்டும் என்ற குதூகலமுடையவராய் நீண்ட ஆயுள் பெறுவதற்காக ஒரு புண்ணிய நதிக்கரையிலிருந்து தவஞ் செய்து கொண் டிருக்கையில் அளவுகடந்த ஆனந்தம் கொண்ட சீமந் நாரா யணன் இவர் முன்னே சேவை தந்தருளி 'உம்முடைய விருப் பத்தைக் கூசாதே வேண்டிக் கொள்ளும்' என்று சோதிவாய் திறந்து அருளிச் செய்ய, மாமுனிவரும் 'இவ் வுடம்போடே உன்னை நெடுங்காலம் வழிபட வேணும் என்ற பேராசை கொண்டிருக்கின்றேன். நான்; அநேகமாயிரம் பிரமாக் களின் ஆயுளை என் ஒருவனுக்குக் கற்பித்தருளினால் மகாப் பிரசாதமாகும்' என்று கைகூப்பி விண்ணப்பம் செய்ய, எம்பெருமான் அப்படியே திருவுள்ளம் உவந்து "மாமுனிவரே! பிரமனின் ஆயுளின் முடிவை நீர் அறிந்ததே; ஒரு பிரமன் காலஞ் சென்றால் உம்முடைய உடம்பினின் றும் ஓர் உரோமம் இற்றுவிழக் கடவது; இப்படி ஒவ்வொரு பிரம்மாவின் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்று வந்து 'இனி உம்முடைய உடம்பில் ஓர் உரோமமும் இல்லை' என்று சொல்லத்தக்க நிலைமை நேருமளவும் நீர் வாழ்ந் திருக்கக் கடவீர்!" என்று வரந் தந்தருளி மறைந் திட்டனன்.

45

பாட்டரவே ரகலல்குல் பவளச் செவ்வாய்
பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலா மின்சொல்
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில்
மரங்கொணர்ந்தான் அடியணைவீர், அணில்கள் தாவ

நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ
நீள்பலவின் தாழ்சினையில் நெருக்கு, பீனத்
தெட்டபழம் சிதைத்துமதுச் சொரியும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே[18]

பட்டு—பட்டுச் சேலை அணிந்துள்ள; அரவுஓர்—பாம்பின் படத்தை யொத்த; அல்குல்—நிதம்பம்; பணை—மூங்கில்போன்று; பிணை—பெண்மான்; பாலாம்—அமுதம் போன்று; மட்டு—தேன்; வானோர்கர் — தேவலோக சோலை; குழலி — சத்தியபாமை; நெடு இலைய—நீண்ட இலைகளையுடைய; பீனம்—பருத்த; தெட்ட — கனியப் பழுத்த; சிதைந்து—நசுங்கி; மது—தேன்; சொரியும்—பொழியும்]

சீராம விண்ணகரம் பற்றிய பாசுரம். சத்தியபாமைப் பிராட்டிக்காக பாரிசாத மரத்தைக் கொணர்ந்த பெருமான் அடியைப்பேண விருப்புடையார்க்குக் காழிச் சீராம விண்ணகரே கதி என்கின்றார் ஆழ்வார்.

தெட்டபழம் : எம்பெருமானார் இத் திவ்வியப் பிரபந்த காலட்சேபம் நடத்தி வரும்போது இவ்விடத்திலுள்ள 'தெட்ட' என்பதற்குச் சரியான பொருள் விளங்கவில்லை என்று அருளிச் செய்து வைத்து, பின்பொருகால் திவ்விய தேச யாத்திரை எழுந்தருளும்போது இத் தலத்தின் சோலை வழியே வந்து கொண்டிருக்க, அங்கே நாவல் மரங்களின்மீது சிறு பிள்ளைகள் ஏறிப் பழம்பறியா நிற்கையில் கீழே இருந்த சில பிள்ளைகள் 'அண்ணே! தெட்ட பழமாகப் பார்த்துப் பறித்துப்போடு!' என்ன, அதனை யாத்ருச்சிகமாகக் கேட்டருளின எம்பெருமானார், 'பிள்ளாய்! தெட்ட பழமென்றால் என்ன?' என்று வினவியருள, 'கனியப்

18. பெரி.திரு. 3.4:8

பழுத்த பழம்' என்று இப்பிள்ளைகள் சொல்ல, உடையவரும் திருவுள்ளம் உவந்து 'இது ஒரு திசைச் சொல் போலவே இருந்தது; நம்மாழ்வாரின் திரு நாவாய்ப் பதிகத்திலே (திருவாய் 9.8:1) "குறுக்கும் வகையுண்டு கொலோ?" என்றதையொக்குமிது என்றருளிச் செய்தாரென்று பெரியோர் பணிப்பர்.

46

'தூவிரிய மலருழக்கி'[14] (அவதாரிகை): இது மகள்பாசுரம். வயலாளி மணவாளன் விஷயமானது. இதில் முதல் நான்கு பாசுரங்களே தூதுரைப்பன; இவற்றிற்கு மேலுள்ளவை எம்பெருமானை நோக்கித் தனது ஆற்றாமையைத் தாமே சொல்லிக் கதறுவன.

இங்கு ஓர் ஐதிகம்; நஞ்சீயர் நோய் வாய்ப்பட்டு இருக்கையில் அவர்தம் சீடர்களில் ஒருவரான பெற்றி என்பவர் உரையாடுகையில் "இப்போது சுவாமிக்கு என்ன திருவுள்ளம்?" என்று கேட்க, அதற்கு நஞ்சீர் 'தூவிரிய மலருழக்கித்' திருப்பாசுரங்களைக் காதால் கேட்கவும், பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து சேவிக்கவும் விருப்பமாயுள்ளது" என்று அருளிச் செய்தார். உடனே பெற்றி வரந்தரும் எம்பெருமாள் அரையர் என்பவரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுவந்து இத் திருமொழியைச் சேவிக்கச் சொல்லிக் கேட்டருளா நிற்கையில் நான்காம் பாசுரம் பாசுரத்திலே,

தானாக நினையானேல்
　　தன்னினைந்து நைவேற்குஓர்
மீனாய கொடிநெடுவேள்
　　வலிசெய்ய மெலிவேனோ?[15]

14. பெரி.திரு. 8.6.
15. பெரி.திரு. 8.6:4

[*தானாக—அவன் தானாகவே; நினையானேல்—என்னை நினையாதிருந்தாலும்; தன் நினைந்து—அவனையே நினைத்துக்கொண்டு; நைவேற்கு—மனந் தளர்ந்திருக்கும் என்னை; ஓர் மீனாய கொடி நெடுவேள்—மன்மதன்; மெலிவேனோ—இளைத்துப் போவேனோ?*]

என்ற அளவில் வந்தவாறே "நோவு படுவதற்கு முன்பே வந்து உதவாமற் போனாலும் நேர்ந்த நோயைப் போக்குவதற்காகிலும் வந்தாலாகாதோ?" என்று அருளிச் செய்து மிகவும் தளர்ந்து வருந்தினர் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. ஆகவே, இத்திருமொழி பகவத் காமுகர்களை நன்கு உருக்கும் என்பது வெள்ளிடைமலை.

47

நிலையாளா! நின்வணங்க
வேண்டாயே யாகிலும்,என்
முலையாள ஒருநாளுன்
அகலத்தால் ஆளாயே,
சிலையாளா! மரமெய்த
திறலாளா! திருமெய்ய
மலையாளா, நீயாளா
வளையரள மாட்டோமே[16]

[*நிலை ஆளா—நிலைபெற்ற அடிச்சியாக; நின் வணங்க-உன்னை வணங்கும்படி; வேண்டாயே யாகிலும்—திருவுள்ளம் பற்றாமற் போனாலும்; முலை ஆள—முலைகள் ஆட்சி செய்யும்படி; அகலத்தால்—மார்பினால்; ஆளாய்—*

16. *பெரி.திரு. 3.6:9*

அவணத்தருள வேணும்; சிலை ஆளா—சார்ங்கவில்லை அடக்கி ஆள்பவனே; மரம் எய்த—சப்தவால மரங்களை; நீ ஆள—உன் ஆளுகைக்குட்பட்டிருக்கும்படி; வளை ஆள—கையில் வளை தங்காமல்]

மகள் பாசுரம்: ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' (திருவாய் 3.3:1) என்றும், 'நியதமும் அத்தாணிச் சேவகமும்' (பெரியாழ். திரு.1.1:8) என்றும் சொல்லுகிறபடி உயிர் உள்ளவரைக்கும் உன் திருவடிகளுக்கு ஆளாகியிருக்க வேண்டுவதே கடமை; ஆயினும், இப்படி நீ திருவுள்ளம் பற்றினாலன்றி, இந்த நித்திய கைங்கரியம் கிடைக்கமாட்டாது; என்னை நித்திய கைங்கரியத்திற்கு ஆளாக்கிக் கொள்ளத் திருவுள்ளமில்லை எனினும், ஒரு நாளாகிலும் உன் திருமேனியை எனக்குத் தந்தாலாகாதோ? இதுவும் நீ செய்ய மாட்டாயாகில், அடியார்களைக் காப்பதற்காகக் கையிலே வில் பிடித்துக் கொண்டிருப்பது எதற்காக? சுக்கிரீவனுக்கு நம்பிக்கை யுண்டாக்குவதற்காக மராமரங்கள் ஏழையும் துளைத்த மிடுக்கையுடையனென்று உன்னைப் புகழ்வது எதற்காக? திருமெய்யத்தில் 'சத்யேசன்' என்று பெயர் படைத்திருப்பது ஏதுக்காக? நான் ஒருத்தி வாழும்படி காரியஞ் செய்யமாட்டாத உனக்கு இப் புகழெல்லாம் பொருந்துமோ?'' என்று பேசுகின்றாள் ஆழ்வார் நாயகி.

ஓர் ஐதிகம் : முற்காலத்தில் அம்மங்கி அம்மாள் என்ற ஓர் ஆசிரியர் நோயால் வருந்தியிருக்க, நஞ்சீயரும் நம்பிள்ளையும் அவரைக் கண்டு நலம் விசாரிக்க எழுந்தருளியிருந்தனர்; அப்போது அவர் மிகவும் கிலேசப்படுவதைக் கண்டு நஞ்சீயர், 'சுவாமின்! தேவரீர் சாமானிய மனிதரன்றே; எவ்வளவோ பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கிறீர்; குணாநுபவத்தாலல்லது போதுபோக்கியறியீர்;

இப்படியிருக்க உம்மையும் மற்றவர்களைப் போலே இப்படிக் கஷ்டப்படுத்துகின்றானே!' என்றாராம். அதற்கு அவர், ''நீயாள வளையாள மாட்டோமே' என்றன்றோ கலியன்பாசுரம்; எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டால் கிலேசப்பட்டுத்தானே இருக்கவேண்டும்'' என்றாராம். பிறகு வெளியில் எழுந்தருளின பின் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி 'பார்த்தீரா இவருடைய எண்ணத்தை? என்ன பாசுரம் எடுத்துக்காட்டினார்;' என்று அருளிச் செய்து மகிழ்ந்தனராம்.

48

கள்வன்கொல் யானறியேன்
　　கரியானொரு காளைவந்து
வள்ளிமருங்குல் என்றன்
　　மடமானினைப் போதவென்று
வெள்ளிவளைக் கப்பற்றப்
　　பெற்றதாயரை விட்டகன்று
அள்ளலம் பூங்கழனி
　　அணி ஆலி புகுவர்கொலோ![17]

[கள்வன் கொல்— திருடனோ; கரியான்-கருநிறத்தவன்; காளை—இளைஞன்; வள்ளிமருங்குல் கொடிபோன்ற இடை; மடமான்— இளமான் போத என்று— வா என்று; அகன்று விட்டொழிந்து; அள்ளல்சேறு; அம்பூ—அழகிய பூக்கள்: கழனி—வயல்]

பரகால நாயகி திருத்தாயாருடன் கண் உறங்கிக் கொண்டிருந்தபொழுது யாரும் அறியாமல் அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டுபோகத்துணிந்த வயலாளி மணவாளன் திருத்தாயார் சிறிது கண்ணயர்ந்த பொழுது அங்ஙனமே அவளைக் கொண்டுசென்று விட்டான். உடனே துணுக்கென்று கண் விழித்துக் கொண்ட திருத் தாயார் படுக்கையைத் தடவிப் பார்க்கின்றாள்; மகளைக்

17. பெரி.திரு. 3. 7: 1

காண்கின்றிலள், தன்மகள் வயலாளி மணவாளனைக் குறித்து வாய்வெருவினபடியை அறிந்தவளாதலின் அப் பெருமானே இவளைக் கொண்டுபோயிருக்க வேண்டும் என்று நினைந்து எழுந்து பார்க்கின்றாள். தான் நினைத்த படியே வயலாளி மணவாளன் தன் மகன் கையைப் பிடித்து கொண்டு செல்வதைத் தன் கண்ணாலே கண்டு வாய் விட்டுப் பேசுவதாக நடக்கின்ற திருமொழியில் முதற் பாசுரம் இது.

திருத்தாயார் சொல்லத் தொடங்கும் போதே 'கள்வன் கொல்?' என்று எம்பெருமானைக் கள்ளனாக ஐயுற்றுச் சொல்லுகின்றாள். 'செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்து ஆட்செய்மின். திருமாலிருஞ் சோலை வஞ்சக் கள்வன், மாமாயன்' அல்லவா? திருத்தாயார் தெருவில் ஓடிவந்து 'கள்வன் கொல்? யானறியேன்' என்று கதறினவாறே இங்கும் அங்கும் அனைவரும் உள்ளார் திரண்டு வந்து சேர்ந்து 'அம்மா! என்ன அநியாயம்? கள்வனாவந்து விட்டான்? யார் அவன்? அவன் கவர்ந்து சென்ற பொருள் யாது? என்று பேரார்வமாய் வினவுகின்றனர். மேலே சொல்லுகின்றாள்; 'கரியான் ஒரு காளை வந்து' என்று தொடங்கி: ''நீலமேக நிறத்தனாய் இளம் பருவமுடைய வனான ஒருவன் என் இல்லத்தினுள் புகுந்து என் மகளைப் 'புறப்படு, புறப்படு' என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகின்றான், காண்மின்'' என் கின்றாள். ''இவள் அணி ஆலி புகுந்திருப்பாளோ?'' என்று ஐயுற்றுக் கூறுகின்றாள் திருத்தாயார்.

இதுபற்றிய இதிகாசம்; பக்தர்களிடையே ஓர் இதி காசம் வழங்கி வருகின்றது. வயலாளி மணவாளன் பரகால நாயகியைக் கவர்ந்து சென்றது மறைவாகவா அல்லது பலரும் அறியவா? என்ற வினா எழுகின்றது அவர்களிடையில். மகளைத் தாய் அணைத்துக் கொண்டு கிடக்கையில் எம்பெருமான் தனிமையில் வந்து யாரும் அறியாவண்ணம் கவர்ந்து சென்றதாகப் பிள்ளை

யமுதனார் உரைத்தாராம்; அதனைக் கேட்டருளி பராசர பட்டர், ''அங்ஙனம் வேண்டா; பலரும் கண்டு கொண்டிருக்கையில் தீவட்டிக் கொள்ளைக் கள்ளர் கொள்ளை கொண்டு போமாப்போலே கொண்டு சென்றதாக உரைப்பது எளிது'' என்று அருள் செய்தாராம்.

''வயலாளி மணவாளன் தானே வந்து அழைத்துக் கொண்டு போனதால் 'திருவாலிக்கே சென்று சேர்ந்தாள்' என்று உறுதியாகச் சொல்லலாமன்றோ? அங்ஙனம் சொல்லாது 'அணி ஆலி புகுவார் கொலோ?' என்று ஐயுற்றுச் சொல்வதற்குக் காரணம் என்ன?'' என்றவினா எழுகின்றது. இதுபற்றிய இதிகாசம் இவ்வினாவிற்கு விடையாக அமையும். ''உண்ணும் சோறு பருகு நீர்'' (6.7)[18] என்று தொடங்கும் திருவாய்மொழியின் நடையும் இத்திருமொழியின் நடையும் ஒரளவு ஒன்றுபோல் வந்துள்ளது. அத்திருவாய் மொழியில் பராங்குச நாயகி தானாகவே எம்பெருமான் உறையும் இடமான திருக்கோளூரை உசாசாக் கொண்டு புறப்பட்டுப் போவதாகச் சொல்லப்பெறுகின்றது; இத்திருமொழியில் எம்பெருமானே வந்து அழைத்துக் கொண்டு போனான் என்று சொல்லப்பெறுகின்றது; இவ்வளவே வேற்றுமை.

ஆராய்ச்சி : ஆளவந்தாருடைய குழுவில் இவ்விரண்டு திருப்பதிகங்களையும் பற்றி ஓர் ஆராய்ச்சி நடைபெற்றது. ''உண்ணும் சோறு' திருவாய் மொழியிலும் மகன்

---

[18] உண்ணும் சோறு பருகுநீர்
  தின்னும்வெற் றிலையுமெல்லாம்
கண்ணன், எம்பெருமான் என்றென்
  றேகண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்
  கவனூர் வினவி
திண்ணம் என்இள மான்புகும்
  ஊர்திருக் கோளூரே

என்ற பாசுரமும் தலைவனது நகர் நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாம் இரங்குதலாக அமைந்துள்ளது.

தாயைவிட்டுச் சென்றாள்; 'கள்வன்' 'கொல்!' என்ற திருமொழியிலும் மகள் தாயை விட்டுச் சென்றாள்; இவ்விருவருள் எந்த மகளுக்காகத் தாய் அதிகம் கவலைப்பட வேண்டும்? —இதுவே ஆய்வுப் பொருள். அப்போது அங்கிருந்த முதலிகள், "பரகால நாயகி தனித்துச் செல்லவில்லை; 'நெடுமால் துணை போயின பூங்கொடியாள்' (பெரி. திரு. 3; 7: 10) என்பதால் தலைமனுடன் சென்றவளாகின்றாள்; ஆகையால் அவளைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. பராங்குச நாயகியோ அப்படித்துணைகியாடு செல்லாமல் தனியே சென்றவளாகையாலே அவளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியுள்ளது" என்றார்கள். இதுகேட்ட ஆளவந்தார், "இப்படிச் சொல்லலாகாது: பராங்குச நாயகி தனியே சென்றாளாகிலும், தான் நினைத்த இடத்திற்குப் போய்ச் சேரவேண்டும் என்னும் ஆவலினால் எப்படியாவது விரைவிற் சென்று சேர்ந்திடுவாள். வழியில் தங்கி அபாயங் களுக்கு உட்படக் காரணம் இல்லை. ஆனதுபற்றியே 'திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூர்க்கே' (திருவாய் 6: 7: 1) என்று ஐயமின்றி உறுதியாகச் சொல்லப் பெற்றது அங்கு; ஆதலின் அவளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பரகால நாயகியும் அப்படித் தனியே சென்றிருப்பாளாகில் அவளும் தான் சேரவேண்டிய திரு வாலியிலே சென்று சேர்ந்தே தீர்வள்; 'திண்ணம் என் இளமான் புகுமூர் திருவாலியே' என்று திருத்தா யாரும் உறுதியாகக் கூறியிருப்பள்; அவளைப் பற்றி யும் கவலைப்பட வேண்டாதிருக்கும். அங்ஙனமின்றி இருவராய்—'தம்பதிகளாய்'—செல்லுகையாலே நாயகனு டைய வடிவழகில் ஈடுபட்டு நாயகி பைத்தியம் பிடித்தும் நாயகியின் வடிவழகில் ஈடுபட்டு நாயகன் பைத்தியம்பிடித் தும் இப்படிஇருவரும் பித்தம் தலைக் கொண்டவர்களாய்ப் போக நேருமாகையாலே செல்லவேண்டிய இடமான திருவாலியில் சென்று சேர்வர் என்று உறுதியாகச் சொல்லு வதற்கில்லை. திருவாலியில் சென்று சேர்வார்களோ?

அன்றியே ஒருவருக்கொருவர் 'பித்துக்கொளிகளாய்ச்' சென்று இலங்கைபோன்ற விரோதிகளின் இருப்பிடத்தில் சென்று சேர்வார்களோ? என்று ஐயுற்றுக் கவலைப்பட வேண்டியுள்ளது. இது தோன்றவே 'அணியாலிபுகுவர் கொலோ?'' என்று ஐயம் ஏற்படுமாறு சொல்லப்பெற்றிருப்பதைக் காண்மின்!'' என்று அருளிச் செய்தாராம். இத்திருமொழியின் பாசுரந்தோறும் ஒருதடவைக்கு ஒன்பது தடவையாக 'அணியாலி புகுவர்கொலோ?' என்று ஐயப்பாடு தோன்றவே சொல்லி இருப்பது பொருந்தும்.

இந்தத் திருமொழியை ஒத்த ஒரு திருப்பதிகம் பெரியாழ்வார் திருமொழியிலும் உண்டு.[19] தன் மகளுக்கு எம்பெருமான் பக்கலிலுள்ள அன்பு மிகுதியைக் கண்ட திருத்தாயார் இவளுக்கு அவனோடு கலவி உண்டாயிற்றென்று தான் அறிந்தபோதிலும், ஊர்ப்பேச்சு தோன்றுவதற்குமுன் இவன்பக்கலில் கொண்டுபோய்ச் சேர்ப்பதே தகுதி என்று உறவினர்கள் சொல்லிக்காட்டியபோதிலும், திருத்தாயார் அவளை அங்ஙனம் கொண்டுசேர்க்கவில்லை. ஆகவே, எம்பெருமானே ஓர் இரவில்தனியாக வந்து ஒரு படுக்கையில் தாயுடன் படுத்திருந்த இவளை எழுப்பித் திருவாய்ப்பாடிக்குக் கொண்டு செல்கின்றான். பிறகு கண் விழித்த திருத்தாயார் படுக்கையில் மகளைக் காணாமல் பலவகையாகக் கதறுகின்றாள். இதனைக் கூறுவது இத் திருமொழி.

திருத்தாயார் பேசுகின்றாள்

நல்லதோர் தாமரைப் பொய்கை
நாள்மலர் மேற்பணி சோர
அல்லியும் தாதும் உதிர்த்திட்டு
அழகழிந் தாலொத்த தாலோ?

---

19. பெரியாழ். திரு. 3.8.

இல்லம் வெறியோ டிற்றதாலோ?
என்மகளை எங்கும் காணேன்;
மல்லரை அட்டவன் பின்போய்
மதுரைப் புறம்புக் காள்கொலோ?[10]

[பொய்கை—குளம்; நாள்மலர்—அப்போது அலந்நந்த பூ: சோர— பெய்ய; அல்லி— உள்ளிதழ்; தாது—மகரந்தம்; வெறிஓடிற்று— வெறிச் சென்றிருந்தது; மல்லர்—சாணூரன், முஷ்டிகன்]

"என் பெண்பிள்ளை நீங்கின வீடு தாமரைப் பூக்களிலுள்ள இதழ்கள் உதிரப்பெற்றதனால் தாமரைப் பொய்கை அழகழிந்து தோன்றுவதுபோலுள்ளது; இவள் போனவிடம் இன்னதென்று தெரியவில்லை; ஒருகால் கண்ணனுடன் கூடித் திருவாய்ப் பாடிக்குச் சென்றிருப்பாளோ?" என்று திருத்தாயார் ஐயமுற்றுக் கூறுகின்றாள். இத் திருமாளிகையில் பெண்பிள்ளை இருந்தது ஓரடி நிலமானாலும் வீடுமுழுவதும் அவளே இருந்ததாகத் தாய்க்குத் தோற்றிக் கிடந்தபடியால் 'இல்லம் வெறியோடிற்றதாலோ?' என்கின்றாள்.

ஐயங்களெல்லாம் இரண்டு இடங்களைப் பற்றிப் பிறக்குமாதலால் இங்குக் கம்சன் இருப்பிடமான மதுரையிற் புகுந்தாளோ? அன்றி, அதன் அருகிலுள்ள திருவாய்ப்பாடியிற் புகுந்தாளோ? என்று ஐயமுற்றதாகக் கொள்க. ஒருவருக்கொருவர் பண்ணுகின்ற காதல் விளையாட்டுகளினால் இருவரும் மயங்கி மெய் மறந்து கம்சன் நகரில் புகுந்தார்களாகில் தீராத் துன்பம் விளையுமே! என்ற ஐயந்தான் நெஞ்சினுள் நடமாடுகின்றதாகக் கொள்க.

---

10. பெரியாழ். திரு. 3.8.1

49

பண்ணேர் மொழியாய்ச்சிய ரஞ்ச வஞ்சப்
பகுவாய் கழுதுக்கு இரங்காது அவள்தன்
உண்ணா முலைமற் றவளாவி யோடும்
உடனே சுவைத்தா னிடம்,ஓங்கு பைந்தாள்
கண்ணார் கரும்பின் கழைதின்று வைகிக்
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து
மண்ணேந் திளமேதிகள் வைகு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே[21]

[மொழி—பேச்சையுடைய; ஆய்ச்சியர்—இடைச்சிகள்; கழுதுக்கு — பேய்ச்சியினிடத்தில்; இரங்காது — நோவு படாமல்; கண்ஆர்—கணுக்கள் நிரம்பிய; கழை—கரும்புத் தடிகள்; வைகி—நகரமாட்டாமல் கிடந்து; தடத்து—தடாகத்தில்; மேதிகள்—எருமைகள்]

திருநாங்கூர்த் திருப்பதிகளுள் ஒன்றாகிய மணிமாடக் கோயில் விஷயமான திருமங்கையாழ்வாரின் திருமொழியில் ஒரு பாசுரம். கண்ணபிரானுடைய சிறு சேவகங்கள் பல இருந்தாலும், முலை கொடுத்துக் கொல்லவந்த பேய்ச்சிக்குத் தப்பிப் பிழைத்தது மிக அருமையாதலால் இந்த வீரச் செயலில் அதிகமாக ஈடுபட்டிருப்பவர்கள் ஆழ்வார்கள்; ஆகவே இதனை அவர்கள் அடிக்கடி வாய் வெருவுவார்கள்.

ஐதிகம் : இப்பாசுரத்தைப் பிள்ளை விழுப் பரையரும் ஆப்பானும் கூடி அநுசந்தித்துப் பொருள் நோக்குங்கால்—மூன்றாம் அடியில் ஒருமுறை 'வைகி' என்று வந்திருக்கிறது; நான்காமடியிலும் 'வைகு' என வந்திருக்கின்றது; இவ்வாறு திரும்பக் கூறுதலுக்குப் பொருளென்? என்று ஐயுற்று

21. பெரி.திரு. 3.8;6

பட்டரைப் பணிந்து கேட்க; "அவ்விடத்து எருமைகளின் சௌகுமார்யம் விளக்கப்பட்டதாகின்றது; முரட்டெருமை களாக இருந்தால் பதறிப் பதறி நடக்கும்; சுகுமாரமான எருமைகளாகையாலே வைகி வைகிக் கிடக்கிறபடி" என்று அருளிச் செய்தாராம். வைகுதல்-விளம்பித்தல்; அதாவது தாமதமாக நடத்தல்.

50

தளைக்கட் டவிழ்தா மரைவைகு பொய்கைத்
    தடம்புக்கு அடங்கா விடங்கா லரவம்
இளைக்கத் திளைத்தீட் டதனுச்சி தன்மேல்
    அடிவைத்த அம்மா னிடம்,மா மதியம்
திளைக்கும் கொடிமா ளிகைசூழ் தெருவில்
    செழுமுத்து வெண்ணெற் கெனச்சென்று, முன்றில்
வளைக்கை நுளைப்பாவையர் மாறு நாங்கூர்
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே![22]

[தளை (தாமரை)—கட்டு விரியாமல் முகையா யிருக்கும் தாமரைப் பூக்களும்; கட்டு அவிழ் தாமரை-கட்டு நெகிழ்ந்து அலர்ந்த தாமரைப் பூக்களும்; பொய்கைத்தடம்—பொய்கையில்; அடங்கா — அடங்காமல்; விடம் கால்— நஞ்சைக் கக்குகின்ற; அரவம் — பாம்பு (காளியன்); திளைத்திட்டு — விளையாடி; நுளைப்பாவையர்—குறத்திகள்]

மணிமாடக் கோயில் விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். "யமுனை மடுவிலிருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்கினியால் கொதிப்பித்துக் கொடுமை புரிந்துவந்த காளியநாகத்தின் கொழுப்பை அடக்கி அதன் தலைமேல் நாட்டியமாடின பெருமான்

22. பெரி.திரு. 3.8:7

உறையும் இடம் திருநாங்கூர் மணிமாடக் கோயில்"" என்கின்றார் ஆழ்வார்.

நெருவில்...மாறு நாங்கூர் : இப்படிப்பட்ட வீதிகளில் குறப்பெண்டிர் அவலீலையாடிக் கிடைக்கிற நன்முத்துகளைக் கூடை கூடையாகக் கொணர்ந்து நாழி நெல்லுக்கு விற்பனை செய்கின்றார்களாம்.

தொனிப்பொருள்: இஃது அவ்விடத்து நிகழ்ச்சியைக் கூறுவதாயினும், இதனால் ஓர் அர்த்தம் தொனிக்கும்; கடலிலே வலைவீசி மீன் பிடித்து வாழ்வான் ஒரு செம்படவன். ஒரு நாள் அவன் மீன்களிடையே விலையுயர்ந்த இரத்தினம் ஒன்று கிடைக்கப் பெற்றான்; அதனுடைய மதிப்பை அவன் அறியமாட்டாதவனாதலால் அந்த இரத்தினத்தைக் கொண்டுபோய் ஒரு வணிகனிடத்தில் மிகக் குறைந்த விலைகூறி விற்றுவிடுகின்றான்; அந்த வணிகன் இரத்தினத்தின் மதிப்பை நன்கு உணர்ந்தவன்; வாணிகமே பிழைப்பாக உடையவன். அவன் அதைக் கொண்டுபோய் ஒரு மாமன்னனிடம் சரியான அதற்குள்ள விலைகூறி விற்றுவிடுகின்றான்; பிறகு அந்த மன்னன் அந்த இரத்தினத்தை விற்பனை செய்ய நினையாமல் அதனைப் பெரியதொரு மாலையில் இணைத்துக் கொள்ளுகின்றான். ஆக, இச் செய்தியில் ஓர் இரத்தினத்திற்கே மூன்று தன்மைகள் உண்டாகின்றன. அற்ப விலைக்கு மாறுதல், உள்ள விலைக்கு மாறுதல், விலைக்கு ஆட்படாமல் சுய அநுபவத்திற்குக் கொள்ளப்படுதல் என மூன்று வகைகள் ஒன்றுக்கே அதிகாரி பேதத்தால் கூடுவதுபோல் நாம் செய்யும் மிக நற்செயல்கட்கும் இங்ஙனே மூன்று தன்மைகள் கூடும். இரத்தினத்தின் மதிப்பை அறியமாட்டாது அதனை அற்ப விலைக்கு விற்கும் செம்படவன் போல், பிரபத்தியின் சீர்மையை அறியமாட்டாத சிற்றறிவாளர் பிரபத்தியைக் கொண்டு ஐசுவர்ய கைவல்யம் போன்ற கீழான பலனை கொள்வர்; இரத்தினத்தை குறைந்த விலைக்குக் கொடாமல் தகுந்த விலைக்குக் கொக்கும் வணிகனைப் போன்ற

மத்தியம அதிகாரிகள் பிரபத்தியை மோட்ச சாதநமாக அபிமானித்து தாழ்ந்த பலனைக் கொள்ளாமல் மோட்ச பலனைக் கொள்வர்; இரத்தினத்தை ஒன்றுக்கும் சாதன மாக்காமல் சொந்த அநுபவத்திற்குக் கொள்ளும் மன்ன னைப்போன்ற உத்தம அதிகாரிகள் பிரபத்தியை ஒன்றுக்கும் சாதனமாகக் கொள்ளாமல் அதனைப் புருஷார்த்தமாக கொண்டு இருப்பர் — இவ்வாறு சம்பிரதாய அர்த்தம் நிர்வகிக்கும் போக்கில் இங்குச் சொன்ன வரலாற்றினால் கீழ்ப்பட்ட அதிகாரிகளின் தன்மை உணர்த்தப்பட்டதாகத் தொனிப்பது காண்க.

நான்காம் பத்து

51

வாளை யார்தடங் கண்உமை பங்கனவன்
சாபமற் றதுநீங்க
மூளை யார்சிரத் தையமுன் அளித்தவெம்
முகில்வண்ண னுறைகோயில்
பாளை வான்கமு கூடுயர் தெங்கின்வண்
பழம்விழ வெருவிப்போய்
வாளை பாய்தடம் சூழ்தரு நாங்கூர்
வண்புரு டோத்தமமே.[1]

[வாளை ஆர்—மீன்போன்ற; தடகண்—விசால மான கண்; வல்சாபம்—வலியசாபம்; நீங்க— தொலையும்படி; மூளை ஆர்—வெறும் எலும் பான; முகில்வண்ணன்—நீலமேக நிறத்தன்; கமுகு—பாக்கு; வன் பழம்—பெரிய காய்கள்; வாளை—மீன்கள்; வெருவி—அஞ்சி; சூழ்ந்தரு —சூழப்பட்ட]

வண்புருடோத்தம் விஷயமான திருப்பாசுரம் இது.

1. பெரி.திரு. 4.2:8

இதிலுள்ள இதிகாசம் : ஒரு காலத்தில் பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனா யிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கிற தென்று கருதி அவனது தலையொன்றினைக் கிள்ளி எடுத்து விட்டான். அக் கபாலம் சிவனது கையில் ஒட்டிக் கொண்டது. இதற்கு என்ன செய்வது? என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில், தேவர்களும் முனிவர்களும் 'இப் பாவம் தொலையப் பிச்சை எடுக்க வேண்டும். என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்று உரைத்தனர். சிவபிரான் பலகாலம் பல தவங்களிலும் சென்று பிச்சையேற்றுக் கொண்டிருந்தே வருந்தித் திரிந்தும் அக் கபாலம் நிறைய வில்லை. பின்பொரு நாள் பதரிகாச்ரமத்தை அடைந்து அங்கெழுந்தருளியுள்ள நாராயண மூர்த்தியை வணங்கி வேண்டியபோது அவர் தன் திருமார்பைக் கீறி வியர்வை நீரை எடுத்துப் பிச்சையிட, உடனே அது நிறைந்து கையை விட்டு அகன்றது. இதே ஆழ்வார் வேறோர் இடத்திலும் (பெரி. திரு. 1.5:8;5.9:4) தொண்டரடிப் பொடியாழ்வார் தன் திருச்சந்த விருத்தத்திலும் (42) இந்த இதிகாசத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

ஐந்தாம் பத்து

54

கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித் துலகம் கைப்படுத்து,
பொள்ளைக் கரத்த போதகத்தின்
துன்பம் தவிர்த்த புனிதனிடம்
பள்ளச் செறுவில் கயலுகளப்
பழனக் கழனி யதனுள்போய்
புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும்
புள்ளம் பூதங் குடிதானே[1]

1. பெரி. திரு. 5.1;2

[கள்ளம்-கபடமுள்ள; வஞ்சித்து-ஏமாற்றி; கைப் படுத்து—கைப்பற்றி; பொள்ளைக் கரத்த—துளைக் கையையுடைய: போதகம்—யானை (கசேந்திரன்): துன்பம்—துயரம்; புனிதன்—பரம பவித்திரன்; பள்ளம் செறு—தாழ்ந் திருக்கும் கழனி; உகள—விளையாடா நிற்க; பழனம் கழனி—நீர் நிலைகளை யுடையவயல்; பிள்ளை—குஞ்சு.]

திருப்புள்ளம் பூதங்குடி[2]யின் மீது மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருமொழியிலுள்ள ஒரு பாசுரம்: திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது. வாமனமூர்த்தி யாய் மாவலி பக்கம் சென்று மூவடி மண் இரந்து பெற்று அவனை வஞ்சித்து மூவுலகையும் தன்கீழ்க் கொண்டவ னும், கசேந்திர ஆழ்வான் 'ஆதிமூலமே!' என்றழைக்க, அரைகுலையத் தலைகுலைய மடுவின்கரைக்கே ஓடி வந்து அதன் துயரைத் தவிர்த்தவனுமான புனிதன் கோயில் கொண்டுள்ள இடம் திருப்புள்ளம் பூதங்குடியாகும்'' என் கின்றார். இத் தலத்தின் வயல் வளம் கூறுவன பின்னடிகள்.

'பள்ளச் செறுவில...இரை தேடும்': முற்காலத்தில் ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப் பாட்டில் ஒரு கேள்வி கேட்டான்; 'பள்ளிச் செறுவில் கயல் உகள' என்றபோதே அவ் விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை வெளிவந்துவிட்டது; அப்படி யிருக்க, ஈற்றடியில், 'புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தா லன்றோ இரைதேட வேண்டும்? கொள்வார் தேட்டமாம் படி குறையற்றுக் கிடக்கும்போது தேடிப் பிடிப்பதாகச்

2. இராமபிரான் சடாயுவைத் தகனம் செய்து அப் புள்ளர சனைப் 'பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம்' (கம்ப ஆரணி. சடாயு உயிர்நீத்த 2 5) புகச் செய்த தலமாதல்பற்றிப் 'புள்ளம் பூதங்குடி' என்ற திருநாமம் பெற்றது.

சொல்லுவது பொருந்தாதன்றோ?' என்று கேட்டான் இதற்கு பட்டர் அருளிச் செய்ததாவது: 'பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை: "பிள்ளைக்கு இரைதேடும்" என்றுள்ளது காண்; அங்குள்ள மீன்களு நில மிதியாலே தூணும் துலாமும்போலே தடித்திருக்கும்; அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்குப் பிடிக்க மாட்டாவாகையால் உரிய சிறிய மீன்கள் தேடிப் பிடிக்க வேண்டுமன்றோ?" என்பது. இதே கருத்து பெரிய திருமொழி 7.5:4லும் வந்துள்ளது.

55

மின்னி னன்ன நுண்மருங்குல்
    வேயேய் தடந்தோள் மெல்லியற்கா
மன்னு சினத்த மழவிடைகள்
    ஏழன் றடர்த்த மாலதிடம்
மன்னு முதுநீர் அரவிந்த
    மலர்மேல் வரிவண் டிசைபாட
புள்ளை பொன்னேய் தாதுதிர்க்கும்
    புள்ளம் பூதங் குடிதானே.[3]

[மின்னின் அன்ன—மின்னலோடு ஒத்த; நுண்—நுட்பமான; வேய் ஏய்—மூங்கில்போல்; மெல்லியற்கா — இளம் பெண்ணுக்காக (நப்பின்னைப் பிராட்டி); அன்று—முன்பொரு காலத்தில்; ஏழ் மழவிடை—ஏழு இளங் காளைகளை; அடர்த்த—வென்றொழித்த, மாலது — பெருமானுடைய; மன்னு — நிலை பெற்றிருக்கும் (வற்றாத); அரவிந்த மலர்—தாமரைப் பூ.]

திருப்புள்ளம்பூதங்குடி விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். "மின்னோடொத்த நுட்பமான இடை

3. பெரி. திரு. 5.6:6

யையும் வேய்போன்று பருத்த தோள்களையுடைய நப்பின் னைப்பிராட்டியை மணம் புணர்ந்துகொள்ள வேண்டி, அவளது தந்தை கன்யாசுல்கமாகக் குறித்திருந்தபடி மிகக் கொடிய ஏழு காளைகளையும் வலியடக்கின எம்பெருமான் திகழுமிடம் திருப்புள்ளம் பூதங்குடியாகும்'' என்கின்றார்

மின்னினன்ன...மெல்லியற்கா : இதன் வியாக்கியானத் தில் ''கருமாரி பாய்ந்தும் அணைய வேண்டுமாய்த்து (நப்பின்னைப் பிராட்டியின்) வடிவழகு'' என்ற ஸ்ரீசூக்தி உள்ளது. கருமாரி பாய்த லென்பது : கச்சிமாநகரில் காமாட்சியம்மன் ஆலயத்தின் குளத்திலே நாட்டப் பெற்றிருந்த மிகக் கூர்மையான இரண்டு சூலங்களிடையே குதித்தலாம். பண்டைக் காலத்தில் ஏதேனும் கோரிக்கை நிறைவேறப் பெறவேண்டுவோர் இவ் வருந்தொழில் செய்வது வழக்கமாம். குடல் கிழிந்து சாகவேண்டும்படி யான இவ்வருந் தொழிலை வெகு சாதுர்யமாகச் செய்து அபாயமொன்று மின்றியே உயிர் தப்பி தம் கோரிக்கை நிறைவேறப் பெறுபவர்கள் மிகச் சிலரேயாவர். மிகக் கடினமான இச் செயலுக்குத் துணிந்தார்களென்றால் இதனால் அவர்கள் பெறவேண்டிய பொருள் மிகச் சிறந்த தென்பது விளங்குமன்றோ? அப்படியே நப்பின்னை திருமேனியின் சிறப்பை விளக்கவந்தது இந்த சொற்றொடர் என்பதை அறிக.

புன்னை பொன்னேய தாதுதிர்க்கும் : திருச்சந்த விருத் தத்தில் ''காண்டமாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும் பழம், புரண்டு வீழ்வாளைபாய் குறுங்குடி நெடுந்த காய் (பாசுரம்-62) என்று அருளிச் செய்திருப்பதை அடியொற்றி அவ் விடித்துக் குளக்கரையில் இற்றைக்கும் ஒரு பனைமரம் வளர்க்கப்பட்டு வருதல்போல இங்கும் 'புன்னை பொன் னேய் தாதுதிர்க்கும்' என்ற ஆழ்வார் திருவாக்கைப் பேணித் திருப்புள்ளம் பூதங்குடி சந்நிதியில் இற்றைக்கும் ஒரு திருப்புன்னை மரம் விளக்கப்பெற்று வருதல் அறியத் தக்கது.

56

துன்னி மண்ணும் விண்ணாடும்
  தோன்றா திருளாய் மூடியநாள்
அன்ன மாகி அருமறைகள்
  அருளிச் செய்த அமலனிடம்
மின்னு சோதி நவமணியும்
  வேயின் முத்தும் சாமரையும்
பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும்
  புள்ளம் பூதங் குடிதானே.4

[துன்னி—நெருங்கி; தோன்றாது—தெரியாதபடி; இருளாய்—ஒரே இருட்டாய்; மூடிய நாள்—மூடிக் கிடந்தநாளில்; அருளிச்செய்த-வெளிப் படுத்தி யருளிய; அமலன்—தூய்மையானவன்; மின்னுசோதி — விளங்குகின்ற தேசுடைய; வேய் — மூங்கில்; சாமரை — சாமரம்; பொன்னி — காவிரி; கொணர்ந்து — தள்ளிக் கொண்டு வந்து; அலைக்கும்—அலை எறியப் பெற்ற.]

புள்ளம் பூதங்குடி விஷயமான பாசுரம். ''அன்னமாகி நான்முகனுக்கு நான்மறைகளை உபதேசித்த எம்பெருமான் கோயில் கொண்டுள்ள இடம் திருப்புள்ளம் பூதங்குடி யாகும்'' என்கின்றார் ஆழ்வார்.

இதிலுள்ள இதிகாசம் : *முன் ஒரு கல்பத்தின் இறுதியில் சதுர்முகன் துயிலுகையில் அவன் முகங்களினின்றும் வெளிப்பட்டு மனித உருவத்துடன் உலவிக் கொண்டிருந்த நான்கு வேதங்களையும் மகா பலசாலியாய் அருந்தவங்கள் இயற்றிப் பெருவரங்கள் பெற்ற சோமுகன் என்னும் அசுரன் கவர்ந்துகொண்டு மூவுலகங்களையும் இருள்மூடப் பண்ணிப் பிரளய வெள்ளத்துள் மறைந்து சென்றான். இதனை யுணர்ந்த திருமால், ஒரு பெரு மீனாகத் திருவவதரித்து*

---

4. *பெரி. திரு. 5.1:9*

மச்சாவதாரம்) அப் பெருங் கடலினுட்புக்கு அவ் வசுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக்கொணர்ந்து, அசாரத்தையும் பிரிக்கும் தன்மையுள்ள அன்னமாய்த் தோன்றி நான்முக னுக்கு உபதேசித்த பெருமான் திருப்புள்ளம் பூதங் குடியி லுள்ளான்.

இந்த வரலாறு இந்நூல் 64 எண்ணுள்ள பாசுரத்தில் விவரமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆண்டுக் கண்டு கொள்க.

57

முன்னில வேழுல குணர்வின்றி இருள்மிக
உம்பர்கள் தொழுதேத்த
அன்ன மாகியன் றொருமறை பயந்தவ
னே!எனக் கருள்புரியே
மன்னு கேதகை சூதக மென்றிவை
வனத்திடைச் சுரும்பினங்கள்
தென்ன வென்னவண் டின்னிசை முரல்திரு
வெள்ளறை நின்றானே.[5]

[முன்—முன்பொருகால்; ஏழுலகு—ஏழுலகங்களும்; உணவு—அறிவு; இன்றி—கெட்டு; இருள் மிக—இருள் சூழ; உம்பர்கள்—தேவர்கள், தொழுது ஏத்த—வணங்கித் துதிக்க; பயந்தவன்—தேடிக் கொணர்ந்தவன; மன்னு—மாறாதே பூத்திருக் கும்; கேதகை—தாழை; சூதகம்—மாமரம்; வனம் — சோலைகளிடையே; முரல — பாடா நிற்க.]

திருவெள்ளறை மீது[6] மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருமொழியிலுள்ள ஒரு பாசுரம். "நான்முகனிட

5. பெரி. திரு. 5.3:8

6. வெள்ளறை—வெண்மையான பாறைகளால் இயன்றமலை அறை—பாறை. இந் நிலையை இன்றும் காணலாம்.

மிருந்து வேதங்களைக் கொள்ளை கொண்டு போன அசுரர்களுக்காக ஹயக்ரீவாவதாரம் செய்து கடலினுட் புகுந்து மதுகைடவர் என்னும் அசுரர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கொன்று வேதங்களை மீட்டுக் கொணர்ந்து ஹம்சரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளினனாதலால் அன்னமாகி அருமறை பயந்த வரலாற்றை இங்கு அநுசந்திக்கின்றார். "அப்படிப்பட்ட அருமையான காரியமொன்றும் என் திறத்துச் சேய்ய வேண்டுவதில்லை; அந்த வேதங்களிலே புருஷார்த்தமாகக் கூறப்பட்டுள்ள கைங்கரியத்தை அடியேனுக்குப் பெறுவித்தருளினால் போதும்" என்கின்றார். (பரிமுகமாய்—ஹயக்ரீவாவதாரம்; அன்னமாகிய—ஹம்சாவதாரம்)

58

கைம்மான மழகளிற்றைக்
கடற்கிடந்த கருமணியை
மைம்மான மரகதத்தை
மறையுரைத்த திருமாலை
எம்மானை எனக்கென்றும்
இனியானைப் பனிகாத்த
அம்மானை, யான்கண்ட
தணிநீர்த்தென் னரங்கத்தே.[7]

[மானம் கை—நீண்ட கையையுடைய; மழகளிறு—இளமையான யானை; கருமணி—நீலமணி; மைமானம்—பசுமை நிறம்; மறை—வேதம்; பனிகாத்த—மழைகாத்த; அணி நீர்—அழகிய தீர்த்தம்.]

அரங்க நகர்மீதுள்ள திருமொழி; திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது. "நீண்ட கையையுடைய யானை போன்றவனும், திருப்பாற் கடலில் கண் வளர்ந்தருள்கின்ற

7. பெரி. திரு. 5.6;1

வனும், வேதங்களில் குறிப்பிடப்பெறுபவனும், எனக்குச் சுவாமியானவனும், எனக்கு எக்காலத்திலும் போக்கியமாக இருப்பவனும், குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவனுமான எம்பெருமானை நான் சேவிக்கப்பெற்றது திருவரங்கத்தில்'' என்கின்றார்.

கைம்மான மழகளிற்றை : ஒரு யானை கைகளையும் கால்களையும் பரப்பிக் கொண்டு கிடப்பதுப் போலப் பள்ளி கொண்டிருக்கும் அழகில் ஈடுபட்டுச் சொல்லுகிறபடி. ''தென்னானாய், வடவானாய், குடபாலானாய், குணபால மதயானாய்''[8] என்று மீண்டும் அருளிச் செய்வர் இவ் வாழ்வார். ''என்னானை என்னப்பன் எம்பெருமான்''[9] என்றார் சடகோபரும். யானைக்கும் எம்பெருமானுக்கும் பலவிதமாக ஒப்புமை உண்டு.

(1) யானை எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அரிய பொருள்போல் பரமானந்தத்தைத் தரும்; எம்பெருமானும் ''அப்பொழுதைக்கப் பொழுது என் ஆராவமுதமே'' (திருவாய். 2.5;4) என்று இருப்பான்.

(2) யானையின்மீது ஏறவேண்டியவன் யானையின் காலைப் பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடம் சேர வேண்டியவர்களும் அவனது திருவடியைப் பற்றியே சேர வேண்டும்.

(3) யானை தன்னைக் கட்டத் தானே கயிறு கொடுக்கும்; ''எட்டினோடி ரண்டெனும் கயிற்றினால்'' (திருச் சந்த. 83) என்றபடி எம்பெருமானைக் கட்டுப் படுத்தும் பக்தியாகின்ற கயிற்றை அவன் தானே தந்தருள் வான். ''மதிநலம் அருளினவன்.'' (திருவாய் 1.1;1)

---

8. திருநெடுந். 10
9. திருவாய். 3.9.1

(4) யானையை நீராட்டினாலும் அடுத்த கணத்திலேயே அஃ அழுக்கோடு சேறும்; எம்பெருமான் சுத்த பவித்திரனாய் சுக்த சத்துவமயனாய் இருக்கச் செய்தேயும் "பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா அழுக்குடம்பும்" (திருவிருத். 1) உடைய நப்போலியருடன் சேரத் திருவுள்ளமாயிருப்பன், வாத்சல்யத்தாலே.

(5) யானையைப் பிடிக்க வேண்டுமானால் பெண் யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

(6) யானை பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கம் வருபவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப் பாதம் பணிந்து" (திருவாய். 4.6;8) என்றபடி பாகவதர் களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

(7) யானையின் மொழியைப் பாகனே அறிவான்; எம்பெருமானின் மொழி திருக்கச்சி நம்பி போல்வாருக்கே தெரியும். பேரருளாளனோடே பேசுபவரன்றோ நம்பிகள்?

(8) யானையினுடைய நிற்றல், இருத்தல், இடத்தல், திரிதல் முதலிய தொழில்கள் பாகனிட்ட வழக்கு; எம்பெருமானும் "கணி கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டா...உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்" என்றும், "கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" (திருச்சந்த. 6·1) என்றும் சொல்லுகின்ற திருமழிசைபிரான் போல்வாருக்கு எல்லாவகையிலும் அடியன்.

(9) யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரம் எறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுது செய்து சேவித்த பிரசாதத்தாலே பலகோடி பக்தவர்க்கங்கள் உய்விக்கக் காண்கின்றோ மன்றோ?

(10) யானைக்குக் கைநீளம்; எம்பெருமானும் 'அலம்புரி நெடுந்தடக்கை ஆயன்'' (பெரி. திரு. 1.6;2) அன்றோ? ''நீண்ட வத்தை; கருமுகிலை'' (பெரி. திரு. 2.5;2).

(11) யானை இறந்த பின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் சாதித்துத் தன்னுடைய சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிகாச புராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதங்களை உதவுகின்றானன்றோ?

(12) யானைக்கு ஒரு கையே உள்ளது; எம்பெருமானுக்கும் கொடுக்கும் கையொழியக் கொள்ளும் கை இல்லையன்றோ? ''விரும்பப்பட்ட பொருள்களைக் கொடுப்பதில் உறுதியான எண்ணமுடையவன்.'' (அர்த்திதார்த்த பரிதாந தீட்தம்)

(13) பாகனுக்கு வாழ்க்கைக்குரிய பொருள்களைச் சம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு உதவுவான்.

இங்ஙனம் பல உவமைப் பொருத்தங்களைக் கண்டு கொள்ளலாம்.

59

வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
　　மற்றோர் சாதியென் றொழிந்திலை,உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
　　செய்த கவினுக் கில்லைகைம் மாறென்று
'கோதில் வாய்மையி னாளொடும் உடனே
　　உண்பன் நான்'என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை அடைந்தேன்
　　அணிபொ ழில்திரு வரங்கத் தம்மானே![10]

10. பெரி. திரு. 5.8;2

[வாதம் — வாயுதேவன்; மர்க்கடம்—குரங்கு; ஒழிந்திலை—விட்டிடாதவனாய்; உகந்து—அன்பு வைத்து; ஆதரம்—ஆசை; தகவினுக்கு—உபகாரங்களுக்கு; கோது—குற்றம்; உடனே உண்பன்—உடனிருந்து உண்பேன்; ஒண் பொருள்—சிறந்த பொருள்.]

திருவரங்கம் விஷயமான திருமொழி இது. சக்கரவர்த்தித் திருமகன் சிறிய திருவடியை ஆதரித்த வரலாற்றை முன்னிட்டுக் கொண்டு சரணம் புகுகின்றார் இதில். விலங்கையும் உட்பட அதன் இழிவு பாராதே ஆட்கொண்டு அதன் பக்கல் சிறப்பான கருணை செய்த பொருளை இப் பாசுரத்தில் எடுத்துக்கூறி ஈடுபடுகின்றார். :"அநுமனிடத்து வரம்பு கடந்து அருள் செய்ததுபோல அடியேனிடத்தும் என் இழிவு பாராதே பேரருள் புரிய வேண்டும்" என்று வேண்டுகின்றபடி.

ஐதிகம் : முன்பெல்லாம் வாழை இலையில் தாமரை இலையிலுள்ளது போலவே இடை நரம்பு இல்லாமலிருந்த தென்றும், இப்பொழுது இராமன் அநுமனைத் தன் எதிரில் அமரச் செய்து தனது இலையில் ஒரு பாதியிலேயே அவன் உண்ணுமாறு அவ்விலை நடுவில் தனது கையால் ஒரு வரையறை கீறினனாக, அது முதல் சங்கற்பத்தால் அவ்விலையில் இடை நரம்பு ஏற்பட்டதென்றும் கூறுவர். இராமபிரான் ஒக்க உண்ட செய்தி வாஸிஷ்ட ராமாயணத்தில் உள்ளது என்பர்.

60

மாக மாநிலம் முழுதும்வந் திறைஞ்சும்
மலரடி கண்ட மாமறை யாளன்
தோகை மாமயில் அன்னவர் இன்பம்
துற்றி லாமையில் 'அத்த!இங் கொழிந்து

போகம் நீயெய்திப் பின்னும்நம் மிடைக்கே
போது வாய்'என்ற பொன்னருள் எனக்கும்
ஆக வேண்டுமென் றடியிணை யடைந்தேன
அணிபொ ழில்தரு வரங்கத்தம் மானே![11]

[மாகம்—பரமாகாசம் எனப்படும் பரமபதம்; மாநிலம்—விசாலமான பூமி; மலரடி—திருவடித் தாமரை; மாமறையாளன்—கோவிந்தசாமி; துற்றிலாமையில்—அநுபவியாமல்; இங்கு ஒழிந்து—சிலகாலம் இவ்விபூதியிலே இருந்து; போகம்—இன்பம்; நம் இடைக்கே—நம்மிடம்; போதுவாய்—வந்து சேரக் கடவாய்]

திருவரங்கத்தைப்பற்றிய திருமொழியில் உள்ள ஒரு பாசுரம். "கோவிந்தசாமியின் கருத்தறிந்து காரியம் செய்ததுபோல அடியேனுக்கும் கருத்தறிந்து காரியம் செய்ய வேணும்" என்று அவனுடைய வரலாற்றை முன்னிட்டுக் கொண்டு சரணம் புகுகின்றார்.

கோவிந்தசாமி : இப்பெயர் கொண்ட அந்தணன் ஒருவன் இதிகாச புராணங்களைப் பலகாலும் கேட்டு அதனால் கண்ணபிரானுடைய சிறு குறும்புகளையும் குரவைகோத்தல் முதலிய திருவிளையாடல்களையும் நேரில் கண்டு களிக்கக் கருத்துடையவனாய் 'இதை எம்பெருமான் பக்கல் வேண்டினால் அப்பெருமான் அருள் செய்யக் குறை இல்லை' என்றெண்ணி "ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து தாம் வாட வாடத்"[12] தவம் செய்கையில் எம்பெருமான் இவனது நினைவின்படியே கிருஷ்ணாவதாரச் செயல்களை யெல்லாம் அவ் வண்ணமே நேரில் காட்டி 'இன்னமும் உனக்கு வேண்டுவதென்?' என்று கேட்டருளினன். அதற்கு

11. பெரி. திரு. 5.8;5
12. பெரி. திரு. 3.2:1

இவன் 'தேவரீரோடு கூடவே அத்தாணிச்சேவகனாயிருந்து நித்தியாநுபவம் பண்ணிக் களிக்க விரும்பியிருக்கிறேன்" என்றான். இவன்றான் ''உன்னுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியும்'[13] எம்பெருமான் அவனுடைய நாபியிலுள்ள உண்மைக் கருத்தை உள்ளபடியே கண்டறிய வல்லவனாதலால் 'இவனுக்கு நம்மோடு நித்தியாநுபவம் பண்ணுகைதான் உண்மையான விருப்பமோ?' என்று ஆராய்ந்து பார்த்தான்; பார்த்ததில் 'இவனுக்கு இந்திரிய இன்பங்களில் இன்னமும் நசைவிட்ட பாடில்லை' என்றறிந்து, 'அந்தணா! நீ இன்னும் சிறிது காலம் இந் நிலத்திலேயே இருந்து இந்திரிய இன்பங்களை ஆசை தீர அநுபவித்துத் தலைக்கட்டி, பின்பு நம்மோடே வரக் கடவாய்' என்று அருளிச் செய்து மறைந்ததாக ஓர் இதிகாசம் உண்டு; அஃது இப் பாசுரத்தில் அருளிச் செய்யப் பெறுகின்றது. (இவ்வரலாறு எந்த இதிகாச புராணங் களிலும் காணப்படாதது.)

இங்கே ஓர் ஐயம்: எம்பெருமான் தன்னடி சேர விரும்புவார் யாரேனும் உண்டா? என்று ஆள் பார்த்துத் திரிகின்றவன், வீடுபேற்றில் நாட்டம் இல்லாதவர்களுக்கும் எவ்வகையிலேனும் நாட்டத்தைப் பிறப்பித்து நித்திய கைங்கரியத்தைத் தந்தருள்பவன் என்ற புகழ் இவனுக்கு உண்டு. இப்படிப்பட்ட எம்பெருமான் 'உன்னோடு கூடவே வர விரும்புகின்றேன்' என்று சொல்லும் ஒரு பேரறிவாளனைப் பெற்றால் பெரு மகிழ்ச்சி கொண்டு 'அப்பா! வாராய்; உன்னையே தேடித் திரிகின்றேன்; கடுகவா போவோம்' என்று ஆதரித்து அழைத்துக் கொண்டு போக உரியவனேயன்றி கெட்ட வழியைக் காட்டி 'ஒழிந்து போ' என்னத் தக்கவனல்லன்; அப்படியிருந்தும், 'கூட வருவேன்' என்ற கோவிந்தசாமியைப்பெருமான் அலட்சியம் செய்து வார்த்தை சொன்னது ஏன்? என்று ஐயுறலாம்.

13. திருமாலை—34

இதற்கு நாமென்ன சொல்ல வல்லோம்? எம்பெருமானுடைய சுவாதந்திரியம் விசித்திரமானது; சம்சாரத்தில் சிறிதும் பற்று இல்லாதவர்களை சம்சாரத்தில் வீழ்த்துகின்றான்; மோட்சத்தில் விருப்பமில்லாதவர்களை மோட்சத்திற்குக் கொண்டு சேர்க்கவும் தனக்குள்ள சுவாதந்திரியத்தை சிலர் திறத்தில் அவன் காட்டுவதுண்டு. இங்கே வியாக்கியான சூக்தி காண்மின்: ''ஈசுவரன் நினைத்தால் விஷய ப்ரவணனாயும் இவ்வாசனையே அறுத்துக் கொண்டு சக்தன் என்னுமிடமும், எத்தனையேனும் பகவத் ப்ரவணரையும் தேக சம்பந்தத்தின் வழியே கொண்டு போய் விநாசத்தைப் பலிப்பிக்கும் என்னுமிடமும் வெளியிட்டது. சாதுக்களுக்கிடையே உபமான பூமியாயிருக்கிற ஸ்ரீபிரகலாதனும் கூட எதிரம்பு கோத்தான்.''

ஆறாம்பத்து

61

மானேய் நோக்குநல்லார்
மதிபோல் முகத்துலவும்
ஊனேய் கண்வாளிக்,
குடைந்தோட்டந் துன்னடைந்தேன்
கோனே! குறுங்குடியுள்
குழகா! திருநறையூர்
தேனே! வருபுனல் சூழ்
திருவிண் ணகரானே! [1]

[மானேய் நோக்கு — மான் பார்வை போன்ற; நல்லார்—மாதர்கள்; மதி—சந்திரன்; வாளி—அம்பு; உடைந்து—அஞ்சி நடுங்கி; ஓட்டந்து—ஓடிவந்து; குழகா—கலந்து கொள்ள நிற்பவனே]

1. பெரி. திரு. 6.1:1

"திருவிண்ணகர்மீதுள்ள பதிகத்திலுள்ள ஒரு பாசுரம். 'பாம்புக்கு அஞ்சி ஓடிவந்து வீழுந்தேன்' என்பாரைப் போலவும், 'இராமன் அம்புக்கு நடுங்கி வந்து விழுந்தேன்' என்பாரைப் போலவும் மாதர்களின் கண்களாகி அம்புக்கு அஞ்சி வந்து நின்றேன்" என்கின்றார். திருவிண்ணகர்—ஒப்பிலியப்பன் சந்நிதி.

திருநறையூர்த் தேனே: "பட்டர் 'திருநறையூர் பெருக்குக்குச் சினையாறு படுகிறது கிடாய்' என்று அருளிச் செய்வர்" என்பது வியாக்கியான ஸ்ரீசூக்தி. இதன் விளக்கம்: திருவிண்ணகர்த் திருப்பதி விஷயமான இத் திருமொழி முடிந்தவுடனே "கண்ணுஞ் சுழன்று"[2] என்ற திருமொழி தொடங்கிச் "சினவிற் செங்கண்"[3] என்ற திருமொழியளவும் நூறு பாசுரங்களாலே திருநறையூரை அநுபவிக்கப் போகிறாரே ஆழ்வார்; அதற்குள்ளே இப்போது 'திருநறையூர்த்தேனே' என்று அத்திருப்பதியைப் பற்றிக் குறிப்பிடுவானேன்? என்று நஞ்சீயர் போல்வார் பட்டரைக் கேள்வி கேட்டனர் போலும்; அதற்குப் பட்டர் அருளிச் செய்த மாற்றம் இது; இதன் கருத்து யாதெனில்: ஆற்றில் பெரு வெள்ளம் வரப்போவதற்கு முன்னே ஆறு பொசிந்து காட்டுவது வழக்கம்; அது போல, நூறு பாசுரங்களாலே திருநறையூர்த் திருப்பதியநுபவமாகிற பெரு வெள்ளம் அண்மையில் வரஇருப்பதால், அதற்கு முன்னடையாளமாகத் 'திருநறையூர்த்தேனே' என்று இவ்வாறு பொசிந்து காட்டுகிறது கிடாய் என்கை. இங்ஙனேஅழகான பொருள் பட்டர் திருவுள்ளத்தில் தானே தோன்றும்.

62

சாந்தேந்து மென்முலையார்
தடந்தோள்புணர் இன்பவெள்ளத்
தாழ்ந்தேன், அருநரகத்
தழுந்தும் பயன்படைத்தேன்

---

2. பெரி. திரு. 6.4
3. ஷை. 7.3

போர்ந்தேன் புண்ணியனே!
உனையெய்தியென் தீவினைகள்
தீர்ந்தேன், நின்னடைந்தேன்
திருவிண் ணகரானே. [4]

[சாந்து—குங்குமம்; தடதோள்— பருத்த தோள்; ஆழ்ந்தேன்—மூழ்கிக் கிடந்தேன்; எய்தி—கிட்டி]

திருவிண்ணகர் விஷயமான திருமொழி; திருமங்கை மன்னன் அருளிச் செய்தது. "கடந்த நாட்களில் அநியாய மாய்க் கெட்டுப் போனேன்; பாழாய்ப் போனேன்; சிற்றின்ப நுகர்ச்சியிலே ஆழ்ந்து நரகத்திலே அழிந்து நசிக்கப் பார்த்தேன்; தெய்வாதீனமாய் மீண்டு உன் திருவடிகளைச் சேர்ந்து உய்யும் வழிகண்டேன்'' என் கின்றார் ஆழ்வார்.

ஓர் ஐதிகம் : "விஷய போகங்களைக் காறியுமிழ்ந்து பகவத் விஷயத்திலே வந்து சேர்ந்த ஆழ்வார் இழிந்த பொருள்களைப்பற்றி 'சாந்தேந்து மென் முலையார்' என்றும், 'தடந்தோள் புணரின்ப வெள்ளம்' என்றும் விரக்தருக்கும் காமம் பிறக்கும் படியாக எதுக்கு வருணித்துப் பேசுகின்றார்?'' என்று சிலர் பட்டரைக் கேட்டார்களாம்; அதற்கு அவர் அருளிச் செய்த மறு மொழி: "உலகத்தில் வாக்குப் படைத்தவர்கள் பலவகைப் படுவர்; சிலர் உள்ளத்தை உள்ளபடியே பேசுவார்கள்; சிலர் சிறந்த. விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினாலும் தங்களுடைய வாக்கின் திறமைக் குறைவினால் குறைபடப் பேசுவார்கள்; சிலர் நாவீறுடைமையினால் அற்ப விஷயங் களையும் கனக்கப் பேசுவார்கள்; இப்படிப் பேச்சில் பல வகையுண்டு. பேசுகிறவர்களின் வாக்கின் போக்கை அநுசரித்து விஷயங்கள் சிறுத்துப் போவதும் பெருத்துப்

4. பெரி. திரு. 6.3:4

போவதும் உண்டு. திருமங்கை யாழ்வாருடைய நாவீறு உலகச் சிறப்பு பெற்றதாகையால் அற்ப விஷயங் களைப்பற்றிப் பேசும்போது பெருக்காறு பெருகுமாப் போலே இருக்குமேயன்றி அவ் விஷயங்களின் சிறுமைக்குத் தக்கபடிசிறுத்திராது இவருடைய சொற்போக்கு. 'வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலை'[5] என்றாப் போலே பெருத்திருக்கும். ஆகவே, அற்ப விஷயங் கள் அற்பமென்பதில் தடையில்லை; இவருடைய வாக்கு பரம கம்பீரமாகையால் அற்ப விஷயத்தையும் கனக்கப் பேசுகிறது'' என்பதாம்.

63

வெள்ளைப் புரவித் தேர்விச
 யற்காய் விறல்வியூகம்
விள்ள, சிந்துக் கோன்விழ
 வூர்ந்த விமலனூர்
கொள்ளைக் கொழுமீன் உண்குரு
 கோடிப் பெடையோடும்
நள்ளக் கமலத் தேறல்
 உகுக்கும் நிறையூரே.[6]

[புரவி—குதிரை; விசயன்—அருச்சுனன்; சிந்து கோன்—சயத்திரதன்; விமலன்—கண்ணன்; குருகு—கொக்கு; நள்ளக் கமலம்—செறிந்த இதழ்களையுடைய தாமரை மலர்; தேறல்—தேன்;]

திருநறையூர்பற்றிய திருப்பாசுரம். பார்த்தனுக்குச் சாரதியாகவிருந்து வெற்றி பெறச் செய்தவனும், சயத்திர

5. பெரி. திரு. 1.6:1
6. ஷை. 6.5:8

தனை முடியச் செய்தவனுமான எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் ஊர் நறையூராகும்.

விறல் வியூகம்...விமலனூர் : இதில் குறித்த இதிகாசம் : பாரதப் பெரும்போரில் பதின்மூன்றாம் நாள் நடைபெற்ற போரில் அருச்சுனனின் அருமை மகன் அபிமன்யுவை துரியோதனின் உடன்பிறந்தவள் கணவன் (சிந்துக்கோன்) சயத்திரதன் கொன்றான். அங்ஙனம் கொன்ற சயத்திரதனை மற்றைநாள் பகலவன் மறைவதற்குள் தான் கொல்லாவிடில் தீப்பாய்ந்து உயிர் விடுவதாக அருச்சுனன் சபதம் செய்தான். இதனையறிந்த பகைவர்கள் பதினான்காம் நாள் பகல் முழுவதும் சயத்திரதனை வெளிப்படுத்தாமல் சேனையின் நடுவே ஒரு நிலவரையில் மறைத்து வைத்திருந்தனர். அருச்சுனனுடைய சபதம் பொய்த்துவிடுமே என்று சிந்தித்த கண்ணன் பகலவன் அவன் மறைவதற்குச் சில நாழிகைக்கு முன்னமே தன் திருவாழியால் மறைத்து விட்டான். அப்பொழுது எங்கும் இருளடைந்ததால் அருச்சுனன் தீப்பாயத் தொடங்கினான்; அதனை எக்களிப் போடுகாண்பதற்குத் துரியோதனாதியருடனே சயத்திரதன் எதிர்வந்து நின்றான். அச்சமயத்தில் கண்ணன் திருவாழியை வாங்கினான்; பகலாயிருந்ததனால் உடனே பார்த்தன் சயத்திரதனைத் தலை துணித்துக் கொன்றான் என்பது வரலாறு.

64

கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்ட காலம்
குலவரையின் மீதோடு அண்டத் தப்பால்
எழுந்தினிது விளையாடும் ஈசன் எந்தை
இணையடிக்கீழ் இனிதிருப்பீர் இனவண் டாலும்

உழும்செறுவில் மணிக்கொணர்ந்து கரைமேல் சிந்தி
உலகெல்லாம் சந்தனமும் அகிலும் கொள்ள
செழும்பொன்னி வளங்கொடுக்கும் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.[7]

[கயல்—மீன்; நெடுவெள்ளம்—பிரளயப் பெரு வெள்ளம்; அண்டத்து—அண்டபித்தியளவும்; இணையடி—இரண்டு பாதங்கள்; செறு—கழனி; மணி—இரத்தினம்]

திருநறையூர் மங்களாசாசனத் திருமொழியில் ஒரு பாசுரம்.

கொழுங்கயலாய்...ஈசன் எந்தை : *இதில் மச்சாவதார வரலாறு அநுசந்திக்கப்பெறுகின்றது. அந்த வரலாறு இது: ஒரு பிரமகல்ப முடிவில் பிரம சம்பந்தமான நைமித்திக பிரளயம் உண்டாயிற்று; அப்பொழுது பூமி முதலிய உலகங்கள் கடலால் சூழப்பெற்று மூழ்கும் சமயத்தில் உறக்கம் தெளிந்தெழுந்து அந்த நீரில் படுக்க முயன்ற நான்முகனது முகத்தினின்றும் வெளிக் 'கிளம்பின நான்கு வேதங்களையும் ஹயக்ரீவன் என்னும் ஓர் தானவன் கவர்ந்து கொண்டு போய்விட்டான்; அப்போது வேதங்கள் தொலைந்தது கண்டு திருமால் ஒரு சிறிய மீன் வடிவு கொண்டார்; அக்காலத்தில் தவத்தின் பெருமையினால் உயிர் வாழ்ந்து கிருதமாலா நதியின் கரையில் திருமாலை நோக்கித்தவம்புரிந்து கொண்டிருந்த சத்திய விரதர் என்னும் ராஜ ரிஷி, அவர் நீர் பருகியே உயிர் வாழ்ந்திருந்தார். அவர் நீர் பருகும்போது அவரது இரண்டு கைகளுக்கிடையில் ஒரு சிறிய மீன் அகப்பட்டுக் கொண்டது. அதனை அவர் நீரில் விட்டார். அப்போது அந்த மீன் 'ஓ முனிவரே, என்னை இப்படி நீரில் விட்டீரே; என் இனத்தார் என்னை விழுங்கி விடுவார்கள்; என்னை நீர் காப்பாற்றியருள வேண்டும்' என்ன; அவர் அதனைத் தன் கமண்டல நீரில்*

7. பெரி. திரு. 6.6;2

எடுத்து விட்டார். அதனுட் புகுந்த அந்த மீன் ஓரிரவுக்குள் கமண்டலத்துக்குள் நிரம்பி மறுநாள் காலையில் 'ஓகருணா நிதியே! நான் எப்படி உம்முடைய கலசத்துக்குள் இடர்ப் பட்டு வாழ்வது? என்மீது அருள் புரியலாகாதா?' என்றது. உடனே அவர் கமண்டலத்தினின்றும் எடுத்துத் தன்னிடத் துள்ள சந்தன நீரில் புகவிட்டார்; உடனே மூன்றடி அளவு வளர்ந்த அந்த மீன் 'என்னை இப்படித் துயருறும்படிவிட்டு வைப்பது அறமா?' என்றது; அன்பு கூர்ந்த அவர் உடனே அதை எடுத்து ஓர் குளத்தினுள் விட்டார். அங்கும் மிக வளர்ந்த அந்த மீன் 'நான் சுகமாக வசிக்க இடம் பெறாமல் வருந்துவது உமது திருவுள்ளத்திற்கு உகப்போ?' என்றது. அதைக் கேட்டுக் கருணை கூர்ந்த அவர் அதனை எடுத்துக் கடலில் விட்டார்; அப்பால் அந்த சத்திய விரதர் அந்த மீனிடத்துப் பெருமயல் கொண்டு அதனை நோக்கி, 'ஓ மீனரசனே! உன்னுடைய வரலாற்றைத் தெரிந்து கொள்ள மிக்க ஆவலுடையவனாக இருக்கின்றேன்; நூறு யோசனை நீளமும் அதற்குத் தக்க பருமனும் வாய்ந்துள்ள நீ யார்? உனது தத்துவத்தை வெளியிட வேண்டும்' என்று கைகூப்பிப் பிரார்த்தித்தார்.

அந்த மச்ச அரசன், 'ஓ மாமுனிவரே! இன்று முதல் ஏழு நாட்களுக்குள் இந்த மூன்று உலகங்களும் மூழ்கிவிடப் போகின்றன; அந்தப் பெரு நீரில் ஒரு விசாலமான ஓடம் வரப் போகின்றது; அந்தப் படகில் சப்த ரிஷிகளும் நீரும் எல்லா ஒஷ்திகளும் எல்லாவகைப் பிராணிகளும் ஏறி மனத்திற்கு வருத்தமொன்றுமின்றி உலாவக் கடவீர்கள்; இப்படிச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது ஒரு பெருங் காற்று வீசும்; அதனால் அந்த ஓடம் பெருநீரில் அலையும்; அப்பொழுது எனது தலையில் முளைத்துள்ள பெரியதொரு கொம்பில் பெரியதொரு பாம்பினால் அந்த ஓடத்தைக் கட்டி விடுக; பிறகு நான் அந்தப் படகுடன் உம்மையும் எல்லாப் பிராணிகளையும் ரிஷிகளையும் சுமந்து கொண்டு அந்தப் பேரிருள் நீங்கும் வரையில் நான் கடலில் சஞ்சரிப்

பேன்; அப்போது எனது பெருமையை நீர் உணர்வீர்' என்று உரைத்துவிட்டு மறைந்தது.

இதனைக் கேட்டிருந்த முனிவர் வியப்புற்று பகவானாலே குறிக்கப்பட்ட அந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்தார். ஏழு மேகங்களின் ஆரவாரத்தால் கடல் கிளர்ந்தெழத் தொடங்கிற்று; பகவான் குறித்த தினத்தில் ஒரு பெரிய ஓடம் அக்கடலில் வரக் கண்டார். எல்லாச் செடி கொடி விதைகளையும் அந்தப் படகிலேற்றித் தாமும் அந்தப் படகிலேறினார்; ஏறி, சப்த ரிஷிகளும் தாமும் பகவானைச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், பெரிய கொம்புள்ள மச்ச உருவங் கொண்ட பகவான் காணப்பட்டார்; ஓர் இலட்சம் யோசனை நீளமும் பதினாயிரம் யோசனை பருமனும் ஒற்றைக் கொம்பும் வெள்ளை நிறமும் எல்லா உலகங்களையும் ஈர்க்கும் உருவமும் வாய்ந்தவராகக் காணப்பட்டார். உடனே சத்திய விரதர் ஒரு பெரிய பாம்பைக் கொண்டு அந்த மச்ச பகவானது கொம்பில் அப்படகைக் கட்டி விட்டார். அந்தப் பெருமான் அதனைச் சுமந்து கொண்டு அண்டகடாகத்தளவும் துள்ளி விளையாடி, பின்பு அசுரர் கவர்ந்து சென்ற வேதங்களையும் மீட்டுக் கொணர்ந்தருளினர். ஆக, இவ்வண்ணம் பிரளயாபத்தினின்றும் பிரஜைகளைக் காத்தருளியதும் வேதங்களை மீட்டுக் கொணர்ந்ததும் மச்சாவதார வரலாறாகும்.

65

ஒளியா வெண்ணெ யுண்டானென்
றுரலோ டாய்ச்சி யொண்கயிற்றால்
விளியா ஆர்க்க ஆப்புண்டு
விம்மி யழுதான் மென்மலர்மேல்

களியா வண்டு கள்ளுண்ணக்
காமர் தென்றல் அலர்தூற்ற
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும்
நறையூர் நின்ற நம்பியே.[8]

[ஒளியா—மறைந்து நின்று; ஆய்ச்சி—யசோதை; விளியா—கோபித்து; ஆர்க்க—கட்ட; ஆப்புண்டு—கட்டுண்டு; விம்மி—விக்கி; கள்—தேன்; அலர்—மலர்; தூற்ற—வீசியிறைக்க]

யசோதைப் பிராட்டி தடாக்களில் சேமித்து வைத்த வெண்ணெய் முதலியவற்றைக் களவு வழியாலே கைப்பற்றி அமுது செய்த குற்றத்திற்காகத் தாம்பினால் கட்டுண்டு விக்கியழுத பரம சுலபன் நறையூர் நம்பியாவான்.

வியாக்கியானத்தில் ஓர் ஐதிகம்: வங்கி புரத்து நம்பி என்பவர் உடையவர் ஸ்ரீபாத்தில் பலகாலும் அநுவர்த்தித்து 'அடியேனுக்கு திருவாராதனப் பிரயோகம் உபதேசிக்க வேணும்' என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் உடையவருக்கு உபதேசிக்க அவகாசம் இல்லாமல் போயிற்று. இப்படியிருக்கையில் ஒருநாள் கூரத்தாழ்வானுக்கும் அநுமந்ததாசர் என்ற ஒருவருக்கும் திருவாராதனக் கிரமம் உபதேசிக்க நேர்ந்து உபதேசித்து முடிகிற சமயத்தில் வங்கிபுரத்து நம்பி அங்கே வந்து சேர்ந்தார்; அவரைக் கண்டவுடன் உடையவருடைய திருவுள்ளம் அஞ்சி நடுங்கிற்று; "இவர் பலகால் கேட்டுக் கொண்டிருந்தும் இவர்க்கு உபதேசியா தொழிந்தோம்; இன்று இவ்விருவர்க்கு உபதேசிக்கும் போதாவது இவரையும் கூட்டிக் கொண்டு உபதேசித்திருக்கலாம்; அதுவும் செய்யப் பெற்றிலோம்; இவ்விருவகைக் குற்றங்களுக்கும் ஆளானோமே" என்று அஞ்சி நடுங்கின உடையவர் வங்கிபுரத்து நம்பியை நோக்கி அழகாக ஒரு வார்த்தையை அருளிச்

8. பெரி. திரு. 6.7:4

செய்தார்; அதாவது—"எனக்கு நெடுநாளாக இருந்த ஓர் ஐயம் இன்று தீரப்பெற்றது; 'ஒளியா வெண்ணெய்யுண்டாய் என்று உரலோடாய்ச்சி ஒண் கயிற்றால், விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மியழுதான்' (பெரி. திரு. 6.7:4) என்றும், 'எழில்கொள் தாம்புகொண்டடிப்பதற்கு எள்கு நிலையும்... அழுகையும் அஞ்சி அந்நோக்கும்' (பெரு. திரு 7:8) என்று ஆழ்வார்கள் அருளிச் செய்கிறார்களே, உண்மையில் இப்படியிருக்குமோ; சர்வ நியாமகனான எம்பெருமான் நியாம்யரானாரிடத்தில் அஞ்சி வருந்தக் கூடுமோ? என்று ஐயம் உண்டாயிருந்தது; இப்போது உம்மிடத்தில் நான் அஞ்சி வருந்தினேனாகையால் அது நடக்கக் கூடியதே என்று துணியப் பெற்றேன்.'' என்றாராம்.

66

வள்ளிக் கொழுநன் முதலாய
மக்க ளோடு முக்கணான்
வெள்கி யோட, விறல்வாணன்
வியந்தோள் வனத்தைத் துணிந்துகந்தான்
பள்ளி கமலத் திடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம்நோக்கி
நள்ளி யூடும் வயல்சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே[9]

[வள்ளிக்கொழுநன் — முருகன்; முக்கணான்— சிவன்; வெள்கி—வெட்கி; விறல்வாணன்—பலமுடைய பாணாசுரன்: வியன்தோள்;—வனத்தைப் பரம்பின தோள்களாகிற காட்டை; துணித்து—அறுத்து; உகந்தான்— திருவுள்ளம்

9. பெரி. திரு. 6. 7; 6

மகிழப் பெற்றான்; கமலம்-தாமரை; பள்ளி—படுக்கை; நள்ளி— பெண்நண்டு; ஊடும்—பிணங்கும்]

திருநறையூர் மங்களாசாசனத் திருமொழியில் ஒரு பாசுரம். "அநிருத்தாழ்வானைச் சிறைப்படுத்தி வைத்த பாணாசுரனின் தோள்களைத் துணித்தும், அவனுடைய காவலராக இருந்த கார்த்திக்கேயன், கரிமுகத்தான் முதலான பரிவாரங்களோடுகூடிய உருத்திரனை முதுகு காட்டி ஓடச் செய்தும் தன்னுடைய பரமபுருஷத்துவத்தை ஒளிர்விடச் செய்து கொண்ட பெருமான் திருநறையூரில் உள்ளான்" என்கின்றார்.

பள்ளி கமலத்திடை ...நள்ளி யூடும் வயல் சூழ்ந்த : தாமரைப் பூவில் பாயல் கொண்டிருந்த ஆண்நண்டின் முகத்தைப் பார்த்துப் பெண்நண்டு பிணங்கும். இதன் ஆழ் பொருளைப் பராசரபட்டர் அழகாக உரைத்தருள்வாராம். ஓர் ஆம்பல் மலரில் நண்டு தம்பதிகள் இனிது வாழ்கின்றன. ஒருநாள் ஆண் நண்டுக்குக் (அலவன்) கருக்கொண்டுள்ள தன்பேடைக்கு (நள்ளி) இனிய பொருள்களைக் கொண்டு வந்து தரவேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. தாமரைப் பூவிலிருந்து மகரந்தத்தைத் திரட்டிக் கொணர்ந்து கொடுக்க நினைந்து மெல்ல நகர்ந்து தாமரைப்பூவை அடைந்தது; அப்போது பகலவன் மறையவே அத்தாமரை மலர் மூடிககொள்ள அதனுள்ளே அகப்பட்டுக் கொண்டது. தாமரையை மலர்த்தி எபபடியாவது வெளிக்கிளம்ப முயன்றும் இயலவில்லை. அடுத்த நாள் கதிரவன் தோன்றும் வரையில் காத்திருக்க வேண்டியதாயிற்று. இரவெல்லாம் மலரினுள்புரணடு பொழுது விடிந்ததும் வெளிப் போந்தது. தாதும் சுண்ணமும் உடலில் ஒட்டிய நிலையில் தன் மனைக்கு விரைந்து வந்து சேர்ந்தது. பகற்பொழுதில் ஆம்பல் மலர் மூடிக்கொளளுமாதலால் ஆண் நண்டு அங்கு வந்து சேரும் சமயமும் பெண் நண்டு கிடக்கும் ஆம்பல்

மலர் முடிக் கொள்ளும் சமயமும் ஒன்றாக இருந்தது. இதனைப் பார்த்தால், ஆண் இரவில் வேறிடத்தில் தங்கி வந்தபடியாலும், உடம்பில் சுவடு இருந்தபடியாலும் ஊடல்கொண்டுக் கதவை அடைத்துக் கொண்டது என்று எண்ணும்படியாக இருந்ததாம். ஒருபுறத்தில் மலர்ந்த தாமரை மலர்களும் மற்றொரு புறத்தில் கூம்பியிருக்கும் ஆம்பல் மலர்களும் விளங்கப்பெற்ற வயலைச் சொன்ன வாறு இது. இவ்வாறு பட்டர் விளக்கம் தந்தவுடனே பிள்ளை நறையூர் அரையர் 'ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னையன்றோ தண்டிப்பது?' என்று கூற, 'என் செய் வோம்? கேள்வி இல்லாதபடி பெண்ணரசு நாடாய்த்தே!' என்று அருளிச் செய்தாராம். இதனால் 'நாச்சியார் கோயில்' புகழ்பெற்ற பெயரைக் குறிப்பிட்டவாராம். (இவ் வூரில் எல்லாவற்றிற்கும் பிராட்டிக்கே முதலிடம். திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே எழுந்தருள்வதும், எம் பெருமான் பின்னே எழுந்தருள்வதும் ஆக இருக்கும். ஆணரசு நாடாகில் கேட்பாருண்டு; பெண்ணரசு நாடாத லால் கேட்பாரில்லை என்று சுவைபடக் கூறியதாம்).

67

பந்தார் விரலாள் பாஞ்சாலி
கூந்தல் முடிக்கப் பாரதத்து
கந்தார் களிற்றுக் கழல்மன்னர்
கலங்கச் சங்கம் வாய்வைத்தான்
செந்தா மரைமேல் அயனோடு
சிவனும் அனைய பெருமையோர்
நந்தா வண்கை மறையோர்வாழ்
நறையூர் நின்ற நம்பியே[10]

10. பெரி. திரு. 6. 7 : 8

[பந்து ஆர்விரலாள்— பந்துபிடித்து விளையாடும் விரலையுடையவள்; பாஞ்சாலி—திரௌபதி; கந்து ஆர்களிறு—மதநீரின் மணம் பொருந்திய யானை; கழல்—வீரக்கழல்; கலங்க—மதி கலங்குமாறு; அயன்— பிரமன்; அனைய—ஒத்த; நந்தா—குறையாத]

திரௌபதியின் விரித்த கூந்தலை முடிப்பதற்காகப் பாரதப்போர் நடத்தின பெருமான் நறையூர் நம்பி என்கின்றார். பந்து கொண்டு விளையாடி விநோதமாகப் பொழுது போக்கப் பிறந்த பாஞ்சாலியைத் துச்சாதனன் பெரியசபை நடுவே இழுத்துவந்து அவமானப் படுத்தினான். அவள் 'இந்தப்பகைவர்களைத் தொலையச் செய்தாலன்றி கூந்தலை முடிப்பதில்லை' என்று சபதம் பண்ண அந்தச் சபதத்தை நிறைவேற்றவே கண்ணன் பாரதப் போரில் ஈடுபட்டான்.

இங்குள்ள இதிகாசம்: "பாண்டவர்களையும் நிரசிக்கப் பிராப்தமாயிருக்க வைத்தது, திரௌபதியுடைய மங்கள சூத்திரத்துக்காக." "அருச்சுனனுக்குத் தூத்யசாரத்தியங்கள் பண்ணிற்றும் பிரபத்தி உபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக" என்ற ஸ்ரீ வசன பூஷண சூத்திரங்கள் இங்கே அறியத்தக்கன.[11]

திரௌபதியை துரியோதனாதியர் பேரவையில் துகிலுரித்து அவமானப்படுத்தியதைப் பாண்டவர்கள் கண்டிருந்தும் அவர்கள் வாளா இருந்ததைச் சூதில் தோற்றமையை நினைத்துப் பொறுத்திருக்கலாம். ஆனால் அவள் கண்ணபிரானைச் சரணமடைந்த பின்பு அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தது பெருங்குற்றம் (பாகவத அபசாரம்), 'எம்பெருமானடியார்களைப் பிறர்மானபங்கம் செய்வதைக்

---

11 ஸ்ரீவசன. 22, 23(புருடோத்தம நாயுடு பதிப்பு)நிரசித்தல்—அழித்தல்

கண்டால் சக்தியுள்ளதனாகில் விலக்க வேண்டும்; சக்தி யற்றவனாகில் வருத்தத்துடன், கண்மறையப் போக வேண்டும்' என்கிற விஷேஷ சாஸ்திர மரியாதையை நோக்கி யாவது—அல்லது— தங்களிடத்தில் கண்ணனுக்குள்ள நட்பு முறைகளை நினைத்து அவனைச் சரணமடைந்தவள் மான பங்கப்படுவதை நாம் பார்த்திருந்தால் நாளைக்கு அவன் முகத்தில் எப்படி விழிப்பது' என்று அஞ்சியாவது விரைந் தெழுந்து விலக்கவேண்டும். அது செய்யாமல் செயலற்று அமர்ந்திருந்தனர். ஆகவே, மானபங்கம் செய்த துரியோ தனாதியர்களைப் போலவே, மானபங்கம் செய்வதைப் பார்த்திருந்த இப்பாண்டவர்களையும் தலையறுத்துப் போட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அவர்களை மாத்திரம் உயிரோடு வாழும்படி வைத்தல் அவளுடைய மங்கலநாண் போகாமைக்காக. அவளுடைய விரித்த தலையைக் காணமாட்டாத கண்ணன் வெறுங் கழுத்தை எப்படிக் காண்பன்? (இதனால் அடியவர்களை அவமானப் படுத்துபவர்களைப் போலவே அந்த அவமானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் தண்டிக்கத்தக்கவர் என்பதும், அப்படித் தண்டனைக்குரியவர்கள் அடியார் களோடு விடவொண்ணாத ஒரு சம்பந்தமுடையவர் களாகில் அவர்களும் அந்த அடியவர்களுக்காக எம்பெரு மானால் இரட்சிக்கப்படுபவர் என்பதும் விளங்கும்). இப்படித் தலையறுத்துப் போடவேண்டும்படியான குற்ற வாளிகளுள் ஒருவன் பார்த்தன். இந்தப் பார்த்தனுக்குக் கண்ணன் இழிதொழில் செய்ததும் பரம ரகஸ்யத்தை (பிரபத்தி நெறியை) உபதேசித்ததும் எல்லாம் இந்த திரௌபதிக்காகவேயாகும். தூதுபோனது போரை விளை விப்பதற்காக. சாரதியாய் நின்றது 'படை எடுக்கக்கூடாது' என்ற எதிரிகளின் வேண்டுகோளுக்கு உடன்பட்டிருந்தமை யால் தேர்க்காலாலே அவ்வெதிரிகளை அழிப்பதற்காக. பிரபத்தியை உபதேசித்தது 'போர் செய்யேன்' என்றிருந்த வனை 'உன்சொற்படி செய்கிறேன்' என இசைவித்துப் போரிலே ஈடுபடுத்துவதற்காக. ஆக இவையெல்லாம்

செய்தது சரணாகதையான இவளுடைய சங்கற்பத்தின் படியே துரியோதனாதியர்களை ஒழித்து இவள் கூந்தலை முடியச் செய்வதற்காகவே என்றதாயிற்று.

68

கல்லார் மதிற்சூழ் கச்சி
நகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லா வுலகும் வணங்க
விருந்த அம்மான், இலங்கைக்கோன்
வல்லா ளாகம் வில்லால்
முனிந்த எந்தை, வீடணற்கு
நல்லா னுடைய நாமம்
சொல்லில் நமோநா ராயணமே[12]

[கல்லார்—கருங்கல்லாலான; நச்சி—வாழவிரும்பி; பாடகம்—திருப்பாடகத்துள்; இருந்த—வீற்றிருக்கின்ற; வல்ஆள்—மிகவும் பலமான; ஆகம்—உடல்; முனிந்த—சீறியழித்த; நல்லான்—நல்லவனுமான]

கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் கச்சியில் திருப்பாடகம் என்னும் திருப்பதியில் வீற்றிருப்பவனும், இராவணனைக் கொன்று வீடணனுக்கு அருள் சுரந்தவனுமான பெருமானின் திருநாமம் எட்டெழுத்து மந்திரமாகும்.

இதிலுள்ள இதிகாசம் : கண்ணபிரான் பாண்டவ தூதனாய்த் துரியோதனனிடம் சென்றபொழுது துரியோதனன் இரகசியமாக தன் சபா மண்டபத்தில் மிகப் பெரிய நிலவறையொன்று தோண்டுவித்து அதனுள் அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே இருக்க வைத்து

12 பெரி. திரு. 6. 10 : 4

அப் படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற் பிளப்புகளால் மேலே மூடி அதன்மேல் சிறந்த இரத்தினாசனமொன்று அமைத்து அந்த ஆசனத்தில் கண்ணனை எழுந்தருளச் சொல்ல, அங்ஙனமே கண்ணன் அதன்மீது ஏறியவுடன் மூங்கிற் பிளப்புகள் முறிபட்டு ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையினுள் சென்றபோது அப்பெருமான் மிகப் பெரிதாக விசுவரூபம் எடுத்துப் பல கைகளையும் கால்களையும் கொண்டு எதிர்க்கவே அப் பிலவறையிலிருந்த மல்லர்கள் அழிந்தனர். அப்போது கொண்ட பேருருவத்திற்கு நினைவாகப் பெரிய திருமேனியுடன் சேவை சாதிக்குமிடம் பாடகம் ஆகும். பாடு + அகலம் = பாடகம்; பெருமையுடைய சந்நிதி.

ஏழாம் பத்து

69

கறவா மடநாகுதன்
 கன்றுள்ளி னாற்போல்
மறவா தடியேன்
 உன்னையே யழைக்கின்றேன்
நறவார் பொழில்சூழ்
 நறையூர் நின்றநம்பி
பிறவாமை யெனைப்பணி
 எந்தை பிரானே![1]

[கறவா—பால்சுரவாத; மடநாகு—இளம் பசுவை; தன் கன்று—அதன் கன்று; உள்ளினாற்போல்—நினைத்துக் கத்துவதுபோல்; மறவாது —

1. பெரி. திரு 7.1:1

மறக்காமல்; எனை—என்னை; பிறாவாமை—சம்சாரத்தில் பிறவாதபடி; பணி—செய்தருளாய்]

"நறையூர்ப் பெருமானே! உன்னை இடைவிடாது அநுபவிப்பதற்கு இடையூறாக விருக்கும் சம்சார சம்பந்தத்தை நீக்குவாய்; கன்றுக் குட்டி தன் தாய்ப்பசு பால் சுரவாவிடில், அதனையே நினைத்துக் கத்துவதுபோலவே பேறு பெறாத அடியேன் ஓயாது உன்னையே சொல்லிக் கதறுகின்றேன்" என்கின்றார்.

ஐதிகம்: பிள்ளை யமுதனார் என்னும் ஆசிரியர் இப் பாசுரத்தின் முதலடிக்குப் பொருள் சொல்ல நினைந்து "கறவா மடநாகு-கறவாத மடநாகானது; தன் கன்று உள்ளினாற்போல்" என்று பொருள் சொல்லப் பார்த்து இப் பொருள் இரண்டாம் அடியோடு சேராமையாலும் வேறு வகையாகப் பொருள்சொல்லப்புரியாமலும் சிறிது வருத்தப் பட்டார். (நாகானது தன் கன்றை நினைக்கு மாப்போலே என்றால் நாகின் நிலையில் ஆழ்வாரான தம்மையும், கன்றின் நிலையில் எம்பெருமானையும் கொள்ள வேண்டி வருவதால் மிகவும் சங்கடப்பட்டார். அப்போது பட்டரிடத்தில் பொருள் கேட்ட ஒருவர் அவ்வமுதனார் கோஷ்டியில் இருக்கக் கண்டு அவரை நோக்கி, "இவ்விடத்திற்குப் பட்டர் நிர்வகிப்பது எங்ஙனே?" என்று கேட்க: 'நாகு' என்பதில் இரண்டாம் வேற்றுமை தொக்கியிருப்பதாகக் கொண்டு, கறவா மட நாகைத் தன் கன்றுள்ளினாற்போல் என்பது பட்டர் நிர்வாகம் என்றாராம். 'நாகு தன்—நாகினுடைய, கன்றானது உள்ளினாற் போல—தாயையே நினைத்துக் கத்துவதுபோலே' என்றுரைப்பதும் உண்டு. நாகு—இளம் பசு. பால் சுரவாத பசுவின் நிலையில் அருள் புரியாத எம்பெருமான் கொள்ளப்பட்டான்; கத்துகின்ற கன்றின் நிலையில் தம்மை வைத்துக் கொண்டார்.

70

வில்லேர் நுதல்வேல்
நெடுங்கண் ணியும்நீயும்
கல்லார் கடுங்கானம்
திரிந்த களிறே
நல்லாய்! நரநா
ரணனே! எங்கள்நம்பி
சொல்லா யுன்னையான்
வணங்கித் தொழுமாறே.[1]

[வில் ஏர்—வில் போன்ற; நுதல்—நெற்றி; வேல் நெடுங்கண்ணி—பிராட்டி; கல் ஆர்—கற்கள் நிறைந்த; கானம்—காட்டில்; திரிந்த—சஞ்சரித்த; களிறே—மத யானை போன்றவனே; நம்பி—பரிபூரணனே; வணங்கி தொழும் ஆறு—விழுந்து சேவிக்கும் முறைமையை; சொல்லாய்—அருளிச் செய்ய வேண்டும்]

இராமபிரானும் பிராட்டியும் கானகம் உலாவின படியைப் பேசி, நரநாராயண அவதாரம் செய்ததைக் குறிப்பிட்டு, சேவிக்கும் முறையை அருளிச் செய்யுமாறு வேண்டுகின்றார் ஆழ்வார்.

நர நாரணனே : முன்னொரு காலத்தில் குரு சிஷ்யக் கிரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் விளக்குதற் பொருட்டு பதரிகாச்ரமத்தில் நரனென்னும் சீடனும் நாராயணன் என்னும் ஆசாரியனுமாகத் திருமால் தானே திருவவதரித்துத் திருமந்திரத்தை வெளியிட்டருளினன் என்பது வரலாறு. "நர நாராயணனா யுலகத்தறநூல் சிங்காமை விரித்தவன் எம்பெருமான்" (10.6:1) என்பர். மேலும், "சம்சாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து,

---

1. பெரி.திரு. 7.1:5

ஈசுவர கைங்கரியத்தையும் இழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே, சம்சாரமாகின்ற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, சர்வேசுவரன், தன் கிருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ் சேரும்படி, தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளினான்''. ''சிஷ்யனாய் நின்றது சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக''[3] என்ற முமுட்சுப்படி சூக்தியையும் காண்க.

71

மன்னஞ்ச ஆயிரந்தோள்
மழுவில் துணித்தமைந்தா
என்நெஞ்சத் துள்ளிருந்திங்
கினிப்போய்ப் பிறரொருவர்
வன்னெஞ்சம் புக்கிருக்க
வொட்டேன் வளைத்துவைத்தேன்
நன்னெஞ்ச அன்னம்மன்னும்
நறையூர்நின்ற நம்பியோ![4]

[மன் அஞ்ச—க்ஷத்திரியர்கள் அஞ்சும்படியாக; மழுவின்—கோடறிப்படையினால்; துணித்த — அறுத்தொழித்த; பிறர் ஒருவர் — வேறொருவர்; வல் நெஞ்சம் — கடினமான நெஞ்சிலே; புக்கு இருக்க—புகுந்து இருக்க; ஒட்டேன்—சம்மதிக்க மாட்டேன்; வளைத்து —தடைசெய்து; நல்நெஞ்சம்— நல்ல இதயம்; அன்னம் — அன்ன மென்னடையாலான பிராட்டி; மன்னும்—பொருந்தி வாழும்.]

---

3. முமுட்சுப்படி-5, 6.
4. பெரி.திரு. 7.2:7

"என் நெஞ்சினுள்ளே வந்த நின்னைப் போகவொட்டேன்" என்ற ஆழ்வாரை மீறிக்கொண்டு புறப்பட்டுப் போக நினைத்த எம்பெருமான் அதற்குறுப்பான தன் மிடுக்கைக் காட்டினான்; அந்த மிடுக்கில் ஒரு குறையும் இல்லை, நான் அறிவேன் பிரானே!' என்று தாமறிந்த பாசுராமாவதாரத்தை விரித்துரைக்கின்றார்.

மன்னஞ்சு...துணித்த மைந்தா : இதிலுள்ள இதிகாசம்; ஆயிரம் கைகளை யுடையவன் கார்த்தவீரியார்ஜுனன்; இவன் ஒரு காலத்தில் சேனையுடன் வனத்திற்குச் சென்று வேட்டையாடிப் பரசுராமனது தந்தையான ஜமதக்கினி முனிவரது ஆச்ரமத்தை அடைந்து அவரநுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில், அவரிடமிருந்த காமதேனு அவருக்குப் பல வளங்களையும் எளிதில் சுரந்தளித்தமை கண்டு, அதனிடம் ஆசைகொண்டு அப் பசுவை அவரநுமதியில்லாமல் வலியக் கவர்ந்துபோக, அதனை யறிந்த அப் பார்க்கவராமர் கடுஞ்சினங்கொண்டு கார்த்த வீரியனுடன் போர் புரிந்து அவனது ஆயிரந் தோள்களையும் தலையையும் தமது கோடறிப் படையால் கொய்து வெற்றி பெற்றனன் என்பது வரலாறு.

72

தாய்நி னைந்தகன் றேயொக்க வென்னையும்
தன்னை யேநினைக் கச்செய்து, தானெனக்
காய்நி னைந்தருள் செய்யும் அப்பனை
அன்றிவ் வையக முண்டுமிழ்ந் திட்ட
வாய னை,மக ரக்குழைக் காதனை
மைந்த னைமதிள் கோவ லிடைகழி
ஆய னை,அம ரர்க்கரி யேற்றையென்
அன்ப னையன்றி யாதறி யேனே.[5]

5. பெரி.திரு. 7.3:2

[தாய் நினைந்த—தன் தாயாகிய பசுவை நினைக்கும்; கன்றே ஒக்க—கன்று போல; தன்னையே நினைக்கச் செய்து—எம்பெருமானாகிய தன்னையே சிந்திக்கும்படி பண்ணி; தான் எனக்குஆய் நினைந்து—எனக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் தானே சிந்தித்து; மைந்தனை—நித்திய இளைஞனை; இடை கழி ஆயன்—இடைக் கழியில் நின்ற கோபாலன்; ஆதரியேன்—ஆதரிக்க மாட்டேன்]

"கன்று எப்பொழுதும் தன் தாயையோ நினைத்துக் கொண்டிருக்குமாப்போல உலகுக்கெல்லாம் தாயாகிய எம்பெருமானை நான் நினைக்குமாறு செய்தவன். நம்முடைய நினைவு மாறினாலும் தான் நினைவு மாறாமல் நம்மை நினைத்திருந்து அருள் செய்பவன், உலகமெல்லாம் பிரளயாபத்துக்குத் தப்பிப் பிழைக்கும்படி தானே பாது காத்தருளின செயல் இதற்கு எடுத்துக் காட்டாகும்" என்கின்றார் ஆழ்வார்.

மதிள் கோவலிடை ஆயனை : "பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவல் பாதிநாள் இரவில், மூவரும் நெருக்கி முகுந்தனைத் தொழுத நன்னாடு"[6] என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார்கள் மூவரும் (பொய்கையார், பூதத்தார், பேயார்) ஒருவரையொருவர் சந்தித்துத் திருவந்தாதிகள் பாடின தலம் திருக்கோவலூர்.

நீயும் திருமகளும் நின்றாயால், குன்றெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா!—வாசல்
கடைகழியா உள்புகா காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி. (முதல். திரு. 86)

---

6. வில்லி பாரதம்—சிறப்புப் பாயிரம்—9

என்ற பொய்கையார் பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றிப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் "உகந்தார் நடுவே புகுந்து நெருக்குமவனை" என்று அருளிச் செய்யப் பட்டுள்ள வாக்கியம் சிந்திக்கத் தக்கது.

73

'கண்சோர வெங்குருதி வந்திழிய
வெந்தழல்போல் கூந்த லாளை
மண்சோர முலையுண்ட மாமதலாய்!
வானவர்தம் கோவே!' என்று
விண்சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு
மணிமாட மல்கு, செல்வத்
தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார்
காண்மின்என் தலைமே லாரே.[7]

[சோர—சுழலவிட்டுத்தளர; குருதி—இரத்தம்; இழிய—பெருக; மண்சேர—மாண்டு போம் படி; வெந்தழல்போல் — நெருப்புப்போல்; விண்சேரும்—ஆகாயத்தில் திரிகின்ற; அகடு—கீழ்வயிறு; உரிஞ்சு—அளாவுகின்ற; மணி மாடம்—திருமாளிகைகள்; மல்கு—நிறைந் திருக்கப்பெற்ற; தண் — குளிர்ந்த; தாள்—திருவடிகள்; தொழுவார்—வணங்குபவர்கள்; என் தலை மேலார்—என் தலைமேல் வீற்றி ருக்க உரியார்]

திருச்சேறையின்மீதுள்ள திருமொழி இது; திருமங்கை யாழ்வார் அருளிச் செய்தது. மதி,,மண்டலத்தளவும்

7. பெரி.திரு 7.4;1.

ஓங்கியிருக்கின்ற மாடமாளிகைகள் நிறைந்த திருச்சேறை யில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நோக்கிப் 'பூதனையை முடித்த சிறு குழந்தாய்!' என்றும், 'நித்திய சூரிகட்குத் தலைவனே!' என்றும் சொல்லி அவனுடைய பரத்துவ சௌலப்பியங்களைப்பற்றி உருகுகின்ற பாகவதர் கள் எவரோ, அவர்கள் என் தலைமேல் வீற்றிருக்க உரியார்'' என்கின்றார்.

ஐதிகம்: ''பிள்ளையழகிய மணவாளரையர் கரையே போகா நிற்க, 'உள்ளே மாமமதலைப் பிரானைத் திருவடி தொழுது போனாலோ?' என்ன, 'ஆர்தான் திருமங்கை யாழ்வாருடைய பசைந்த வளையத்திலே (வளையம்—திருமுடியிலணியும் மாலை) கால்வைக்க வல்லார்?' என்றருளிச் செய்தார்''—இது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானப் பிரவேசத்தில் கண்டது.

விளக்கம்: பிள்ளையழகிய மணவாளரையர் என்பவர் ஏதோ ஒருவேலையாக திருச்சேறை வழியாய் ஓரிடத்திற்கு எழுந்தருள நேர்ந்தது. அவர் திருச்சேறைப் பதியினுட் புகாமல் வயல் வழியே போய்க் கொண்டிருந்தார்; அவரைக் கண்டாரொருவர் 'வயல் வழியே போவானேன்? திருப்பதியி னுள்ளே புகுந்து சாரநாதப் பெருமாளைச் சேவித்துப் போகலாகாதோ?' என்று கேட்டார். அதற்கு அரையர் சமத்காரமாக ஓர் உத்தரம் உரைத்தார்; அது யாதெனில்; ''இத்திருப்பதி விஷயமாகத் திருமங்கையாழ்வார் 'தண் சேறை எம்பெருமான் தாள்தொழுவார் காண்மின் என் தலை மேலாரே' என்றார்; அப்பாசுரத்தின்படி, திருச் சேறை எம்பெருமானைச் சேவிப்பவர்கள் ஆழ்வாரின் திருமுடியின்மேல் ஏற வேண்டியதாகுமே; அது பெருத்த அபசாரம் அல்லவா? அதற்கு அஞ்சியே உள்ளுப்புகாமல் கரையோரமே போகிறேன்'' என்றாராம். இது ரஸோக்தி.

74

நிலையா ளாகவென்னை
　　யுகந்தானை, நிலமகள்தன்
முலையாள் வித்தகனை
　　முதுநான்மறை வீதிதோறும்
அலையா ரும்கடல்போல்
　　முழங்கழுந்தையில் மன்னிநின்ற
கலையார் சொற்பொருளைக்
　　கண்டுகொண்டு களித்தேனே.[8]

[நிலைஆள் ஆக—நிலை நின்ற அடியவனாக; உகந்தானை—உகந்து திருவுள்ளம் பற்றின வனை; ஆள்—ஆளவல்ல; வித்தகனை—சமர்த்தனை; கலைஆர் சொல்பொருளை—சாஸ்திரங்களில் நிறைந்துள்ள சொற்களுக்குப் பொருளாயிருப்பவனை]

திருவழுந்தூர் மங்களாசாசனம் பெற்ற திருமொழியில் ஒரு பாசுரம். ''எம்பெருமான் என்னை நித்திய அடியவனாகத் திருவுள்ளம் பற்றினான்'' என்கின்றார்.

நிலமகள்தன் முலையாள் வித்தகனை : இதற்குப் பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீசூக்தி: ''ஸ்ரீ பூமிப் பிராட்டியினுடைய திருமுலைத் தடத்துக்கு ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல ஆச்சரிய பூதனை'' என்பது. **விளக்கம் :** இதில் ஆனைக்குக் குதிரை வைக்க என்பது சதுரங்க ஆட்டத்தின் முறைமைப் பேச்சு. அவ்வாட்டத்தில் அரசன், மந்திரி, யானை, குதிரை இவை போன்ற பெயர்கள் காய்களுக்கு வழங்கும். யானை துர்ப்பலம் என்றும், குதிரை பிரபலம் என்றும் அதிற்

---

8. பெரி. திரு. 7.6:8

கொள்வர்; அதுபோல இங்கு சிருங்கார சேஷ்டிதங்களில் பூமிப் பிராட்டியை யானையின் இடத்தில் நிறுத்தி எம்பெருமான் குதிரையின் இடத்தில் நிற்பன என்றால் போக கேளிக்கைகளில் பூமிப் பிராட்டிக்குத் தோலாதவன் என்றவாறு. 'முலைஆள் வித்தகனை' என்ற சொல் நயத்தில் கிடைத்த பொருளாம் இது.

75

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர் தாம்பணிந் தேத்தும்
வரனே, மாதவ னே!மது சூதா!
மற்றோர் நல்துணை நின்னலா லிலேன்காண்,
நரனே! நாரண னே!திரு நறையூர்
நம்பீ! எம்பெரு மான்!உம்ப ராளும்
அரனே, ஆதிவ ராகமுன் னானாய்!
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே![9]

[பரன்—பரம புருஷன்; வரனே—சிறந்தவனே; நம்பீ—பரிபூர்ணனே; உம்பர்—தேவர்களை ஆளவல்ல; நின் அலால்—உன்னையொழிய]

அழுந்தூர் விஷயமான திருமொழியிலுள்ள ஒரு பாசுரம்.

திருநறையூர் நம்பீ : இதில் உள்ள ஐதிகம். இந்த ஆழ்வார் வாககினின்றும் திருநறையூர் நம்பி நூறு பாசுரங்கள் பெற்றுக் கொண்டிருந்தும் திருப்தி பெறாதவனாய் மீண்டும் வந்து முகங்காட்டினன் போலும்! இதனால் 'திருநறையூர் நம்பீ!' என்கின்றார். ஆழ்வார் திருநறை

9. பெரி. திரு. 7.7;4

யூர்க்கு எழுந்தருள்வதற்கு முன்பும் எதிர்கொண்டு சென்றான் நம்பி; திருவிண்ணகரில் ஆழ்வார் எழுந்தருளி யிருக்கும்போது நம்பி எதிர்கொண்டு சென்றதனா லன்றோ "திருநறையூர்த் தேனே! வருபுனல்சூழ் திருவிண் ணகரானே!"[10] என்று திருவிண்ணகர்ப் பதிகத்தில் பேசினார்; ஆழ்வார் திருநறையூரினின்றும் மீண்டும் திருவழுந்தூர் செல்லுமளவும் கூட வந்து வழிவிட்டுத் திரும்பினதாலன்றோ "திருநறையூர் நம்பீ...அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே!" என்று பேசுகின்றார் என்று அழகிய மணவாள சீயர் ரஸமாக உபந்யசிப்பாராம்.

எட்டாம் பத்து

76

'சிலையிலங்கு பொன்னாழி'[1] (அவதாரிகை): தாய்ப் பாசுரம். பெண்மகளின் நிலைமையைக் கண்ட திருத் தாயார் 'இவள் கண்ணபுரத்தம்மானைக் கண்டாளாக வேணும்' என்று தெரிந்து கொண்டது எங்ஙனே? என்கின்ற சங்கை நீங்குமாறு பெரியவாச்சான்பிள்ளை தம் வியாக்கி யானத்தில் ஓர் ஐதிகம் அருளிச் செய்கின்றார்: "ராஜேந்திர சோழனிலே ஒரு பிராமணன் மகன் புத்தரோடே சம்ப்ரதாய முண்டாய்ப் பூணு நூலையும் குடுமியையும் அறுத்துப் பொகட்டான்; கூரத்தாழ்வான் அங்கே நடந்த வளவிலே சிகா யஜ்ஞோபவீதங்களைத் தரித்துக் கொண்டு வந்து புகுந்தான்; பிதாவானவன் 'கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?' என்று கேட்டான். புறம்புள்ளார் 'நீ இஃதறிந்தபடி எங்ஙனே?' என்று கேட்க, 'ஆழ்வான்

10. பெரி. திரு. 6.3;3

1. பெரி. திரு. 8.1 (திருக்கண்ணபுரம்)

சந்நிதியில் தமோபிபூதரும் ஸத்வஸ்தராவார்கள் காண்' என்றான்'' என்று.

இதன் விளக்கம்: *இராஜேந்திர சோழன் என்னும் ஊரிலே ஓர் அந்தணனின் மகன் பௌத்தருடன் பழகியதாலே மதிகெட்டுத் தன் பூணு நூலை அறுத்தெறிந்தும் குடுமியைச் சிரைத்தொழித்தும் விரதங் கெட்டவனாய்த் திரிந்து கொண்டிருந்தான்; இப்படியிருக்கையில் ஒருநாள் அவ்வூருக்குக் கூரத்தாழ்வான் எழுந்தருளினார். அந்த அந்தண குமாரனுக்கு ஏதோ இதோபதேசம் செய்தருளினரோ இல்லையோ தெரியாது; ஆழ்வான் அந்த ஊருக்கு எழுந்தருளினது மட்டிலுமே தெரியும். அவன் அப்போதே முன்போல பிராமண இலட்சணங்களுடன் வீடு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட அவனுடைய திருத்தந்தையார் 'பிள்ளாய்! கூரத்தாழ்வானோடு சந்திக்கப்பெற்றாயோ?' என்று கேட்க, அங்கிருந்த சிலர் இதைக் கேட்டு, உண்மையில் ஆழ்வானுடைய அருளாலேயே இவன் திருந்தினான் என்பதை அவர்கள் மாத்திரம் நன்கு அறிந்தவர்களாகையாலே இந்த மருமத்தை இவர் எங்ஙனே தெரிந்து கொண்டார் என வியந்து, 'நீர் இதை எப்படித் தெரிந்து கொண்டீர்?' என்று கேட்டனர். 'ஆழ்வானுடைய சந்நிதானத்தில் தாமசர்களும் சாத்விகர்களாய்த் திருந்துவது வழக்கமன்றோ? நெடுநாளாகத் தாமசனாய்க் கெட்டுப்போன இவன் இன்று சாத்விக புத்தி உண்டாகித் திருந்தினன் என்றால் ஆழ்வானோடே இவன் சந்தித்திருக்க வேண்டுமென்று தோன்றிற்று' என்றாராம் அவனது திருத்தந்தையார்.*

77

'செருவரைமுன னாசறுத்த சிலையன்றோ
கைத்தலத்த' தென்கின் றானால்,
'பொருவரைமுன் போர்தொலைத்த பொன்னாழி
மற்றொருகை' என்கின் றானால்,

'ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலா
என்னப்பா!' என்கின் றாளால்,
கருவரைபோல் நின்றானைக் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொலோ?2

[செருவரை—போர் வீரர்களை; ஆசறுத்த—தொலைத்த; சிலை—வில்; பொருவரை—(சிறகுடன்) போர் செய்த மலைகள்; தொலைத்த—பங்கம் அடைவித்த; ஆழி—சக்கரம்; ஒப்பார்—ஒத்தவர்கள்; கருவரை—அஞ்சன மலை;]

தாய்ப் பாசுரம் : திருக்கண்ணபுரத்து விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். "சார்ங்கத்தைப்பற்றியும் திருவாழியைப்பற்றியும், எம்பெருமானது ஒப்பற்ற தன்மையையும் வாய்வெருவுகின்றாள் என் திருமகள். திருக்கண்ணபுரத்து அம்மானைக் காண நேர்ந்ததோ?" என்று திருத்தாயார் பேசுகின்றாள்.

ஐதிகம் : பண்டு திருக்கண்ணபுரத்து அரையரொருவர் விரோதிகளால் தாம் நோவுபட நேர்ந்த காலத்து சௌரிராஜன் திருமுன்பே சென்று "செருவரைமுன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது," என்று தாளந்தட்டி விண்ணப்பம் செய்ய, பெருமாள் திருவுள்ளம் உவந்தருளி அரையரை நோக்கி, 'ஓய்! நீர் அஞ்ச வேண்டா; ஒருக்கணத்திலே விரோதிகளை முடிக்கிறோம்' என்று அருளிச்செய்து அப்படியே தலைக்கட்டினதாக ஓர் ஐதிகம் வியாக்கியானத்தில் காணப்படுகின்றது.

78

'கரையெடுத்த சுரிசங்கும்'[3] (அவதாரிகை). இது மகள் பாசுரம். திருக்கண்ணபுரத் தெம்மானை சம்ஸ்லேஷித்து

2. பெரி. திரு. 8.1:2
3. பெரி. திரு. 8.1.8

(சேர்ந்து) அநுபவிக்கப் பெறாத பிரிவாற்றாமைக்குப் பரக்கப்பேசுகிற திருமொழி இது. 'வளை இழந்தேனே!' என்று ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்காற் சொல்லிக் கதறுகின்றாள்.

பெற்றோர் அல்லது உறவினர் கூட்டாமலேயே தலைவனுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து, தலைவனுடைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றில் ஈடுபட்டு இருப்பவள் மகள்; குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்' என்னும் பதற்றத்தையுடையவள் இவள். காலக் கழிவினை இவளால் பொறுக்க முடிவதில்லை. திருமந்திரத்தில் பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனாய்) அறுதியிடப்பெற்றவன் எம்பெருமான். எல்லோருக்கும் புகலிடமாக இருப்பவனும் அவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப்பட்ட பின்பு, 'நாராயணாய' என்ற சொல்லினால் கூறப்பெற்றுள்ள எம்பெருமானுடைய சொரூபம், ரூபம், குணம், விபூதி முதலியவற்றின்[4] சேர்க்கையாலுள்ள பெருமையை நினைந்து மகிழ்பவள் இவள். எம்பெருமான் சாத்தியோபாயமாக இருந்தால் தான் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகின்ற பேறு கிடைக்கக்கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் சித்தோபாயமாக இருப்பவன். அதனால் அவனைத் தாமதித்து அநுபவிப்பதற்குக் காரணம் இல்லை; 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெற வேண்டும் என்ற பதற்றத்தை

4. சொரூபம்—ஈசுவரனின் திவ்வியாத்தும சொரூபம்; ரூபம்—பகவானுடைய திவ்விய மங்கள விக்கிரகம்; குணம்—ஆன்ம குணம், விக்கிரக குணம்; ஆன்ம குணங்கள்—ஞானம் சக்தி முதலியன; விக்கிரக குணம்—அழகு, மென்மை முதலியன; விபூதி—நியமிக்கப்படும் பொருள் (ஐசுவரியம்)

உடையவளாக இருக்கின்றாள் இவள். இந்த மனநிலை தான் 'மகள்' (தலைவி) என்று குறிப்பிடப்பெறுகின்றது. இத் திருமொழியிலும் நம்மாழ்வார் திருவாய்மொழி யிலும் மகள் பாவனையில் பேசும் பதிகங்கள் யாவும் இந்த மன நிலையையே குறிக்கின்றன என்பதை இந்தப் பதிகங் களை ஊன்றிப் படிப்பதனால் அறியலாம்.

79

கணமருள மயிலகவு
　　கடிபொழில்சூழ் நெடுமறுகில்
திணமருவு கனமதிள்சூழ்
　　திருக்கண்ண புரத்துறையும்
மணமருவு தோளாய்ச்சி
　　யார்க்கப்போய், உரலோடும்
புணர்மருதம் இறநடந்தாற்
　　கிழந்தேனென் செறிவளையே.[5]

[கணமருவு—திரள் மிகுந்துள்ள; கடிபொழில்—மணம்மிக்க சோலைகள்; நெடுமறுகு—பெரிய வீதி; கனம்—கனகயமான; மணம் மருவு—பரிமளம் பொருந்திய; ஆர்க்க—கட்ட; புணர் மருதம்—இரட்டை மருத மரங்கள்; இற—முறிந்து விழும்படி]

மகள் பாசுரம்: "தயிர் பால் வெண்ணெய் முதலிய வற்றைக் களவு செய்த குற்றத்திற்காக ஓர் அபலையின் (யசோதை) கையினால் உரலோடு சேர்த்துப் பிணிக்கப் பட்ட அசக்தரைப்போலக் கிடந்த நிலையிலும், அப்படிக் கட்டுண்டுத் தளர்நடையிட்டுத் தவழ்ந்து செல்லும் பருவத் திலும், இரட்டை மருத மரங்களை முறித்து அவற்றில்

5. பெரி. திரு. 8.3;4

ஆவேசித்துக் கிடந்த அசுரரை வீழ்த்த வலிமை என்னோ? என்று ஈடுபட்டிருந்த நிலையும் காரணமாகத்தான் தான் வளை இழக்கப்பட்டேனோ?'' என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

புணர்மருதம் இற நடந்த வரலாறு: கண்ணன் குழந்தையா யிருக்கும் காலத்தில் துன்பப்படுகின்ற பல விளையாட்டு களில் ஈடுபடுவதைக் கண்டு கோபித்த யசோதைப் பிராட்டி அவனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஓர் உரலில் பிணித்து விட்டாள். கண்ணன் அந்த உரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருத மரத்தின் நடுவே எழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக் காக நின்று இழுக்கப்பெற்றதால் அம்மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்தன. முன் நாரதர் சாபத்தாம் அம்மரங் களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர மக்கள் இருவரும் சாபம் தீர்ந்து சென்றனர். இந்த இளைஞர்கள் முன்பு ஒரு காலத்தில் பல அப்சர மாதர் களுடன் ஆடையின்றி நீரில் விளையாடிக் கொண்டிருக் கையில் நாரத முனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணத்தால் ஆடை எடுத்து உடுத்தி நீங்கினா ராக, இந்த மைந்தர்கள் மாத்திரம் மதுபான மயக்கத்தால் ஆடையின்றி இருக்க, நாரதர் கடுஞ்சினங் கொண்டு 'மரங்கள் போலிருக்கின்ற நீங்கள் மரங்களாவீர்' என்று சாபம் இட்டனர். உடனே அவர்கள் வேண்டிக் கொண்ட தற்கிணங்கி 'நெடுங்காலம் சென்ற பின்பு திருமால் உங்கள் அருகு அணுகுஞ் சமயத்தில் இவ்வடிவ மொழிந்து முன்னைய வடிவம் பெற்று மீள்வீர்' என்று சாப நீக்கம் கூறிப் போயினர். இப்படிச் சாபத்தினால் மரங்களான இவற்றில் கம்சனால் ஏவப்பெற்ற இரண்டு அசுரர்களும் ஆவேசித்துக் கிடந்தனர் என்பதும் சில புராணங்களில் உண்டு. 'மாயச் சகடும் மருதும் இறுத்தவன்'[6] என்றும்;

---

6. பெரியாழ். திரு. 2.5:2

'கள்ளச் சகடும் மருதும் கலக்கழிய உதை செய்த'[7] என்றும் 'பொய்ம்மாய மருதான அசுரரை'[8] என்றும் பெரியாழ்வாரும் அருளிச் செய்தார்.

80

வாயெடுத்த மந்திரத்தால்
அந்தணர்தம் செய்தொழில்கள்
தீயெடுத்து மறைவளர்க்கும்
திருக்கண்ண புரத்துறையும்
தாயெடுத்த சிறுகோலுக்கு
உளைந்தோடித் தயிருண்ட
வாய்துடைத்த மைந்தனுக்கு
இழந்தேன்என் வரிவளையே.[9]

[வாயெடுத்த—உரக்க உச்சரிக்கப்படும்; தீ எடுத்து—அக்கினி காரியங்களைக் குறைவறச் செய்து; மறை வளர்க்கும்—வேத மரியாதையை ஓங்கச் செய்யும்; தாய்—யசோதை; உளைந்து ஓடு—அஞ்சி ஓடிச் சென்று]

மகள் பாசுரம்: "திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருப்பவனும், கிருஷ்ணாவதாரத்தில் தான் செய்த தீம்புகட்குச் சீற்றம் கொண்ட யசோதைப் பிராட்டி அடிப்பதாகக் கையிற் கோலை எடுக்க, அதற்கு அஞ்சி ஓடும்போது, எதிர்க்கப்படுபவர்கள் வாயில் தயிருண்ட சுவடு இருப்பதைக் காட்டி, 'நீ தயிர் களவு கண்டாயன்றோ?' என்பார்களேயென்று அதை மறைப்பதற்காக அத்தயிர்ச் சுவட்டைத் துடைக்கப் புகுந்து தயிரை முகம் முழுதும்

7. ஷை 2.8:7
8. ஷை 3.1:3
9. பெரி. திரு. 8.3:5

தடவிக் கொண்ட பரம முக்தனுமான பெருமானுடைய குணத்தில் ஈடுபட்டு வளை இழந்தேன்'' என்கின்றாள்.

தயிருண்ட வாய்துடைத்த மைந்தன் : இந்த இடத்தில் ஆழ்வானுடைய அதிமாநுஷஸ்தவ ஸ்ரீ சூக்தி நினைக்கத் தக்கது. அதாவது, ''வெண்ணெயைக் களவு செய்த கண்ணன் உடையவர்கள் தன்னைப் பிடிக்க வருகின்ற சுவடறிந்து கையது வாயதான வெண்ணெயை மறைந்திட வேண்டுமென்றெண்ணி 'வாயிலேயாவது கையிலேயாவது வெண்ணெய் இருக்கக் கண்டாலன்றோ நம்முடைய களவு வெளிப்படும்? கையிலும் வாயிலும் இல்லாதபடியாக்கி விடுவோம்' என்று வெண்ணெயை எல்லாம் உடம்பிலே தடவிக் கொண்டு 'இனி நாம் யாருக்கும் அஞ்ச வேண்டிய தில்லை' என்று அச்சமின்றி வெளியே புறப்பட்டான் என்கிற ஒரு முக்த சேஷ்டிதத்தை அநுசந்தித்து, 'என் நாயனே, இப்படியும் ஒரு மடமையுண்டோ? வெண்ணெய்க் களவை மறைக்க நினைத்து அது நன்கு வெளிப்படும்படி யான காரியம் செய்தாயே! இஃது உண்மையில் மடமை யாலோ அன்றி மடமை அபிநயமா? சொல்லாய் பிரானே!'' என்றார்.

பொருத்தமான ஓர் ஐதிகம் : முற்காலத்தில் ஒரு பையன் அரசன் தோட்டத்தில் புகுந்து மல்லிகை மொக்குகளைக் களவாடிக்கொண்டிருக்கையில் அஃதறிந்ததோட்டக்காரன் அவனைப் பிடித்து அரசவைக்குக் கொண்டு போக இருந்தான். இதனையுணர்ந்த அப் பையன் 'இந்த ஆபத்தில் நின்றும் எங்ஙனே தப்பிப் பிழைப்பது?' என்று கவன்று கொண்டிருக்கையில் இச்செய்தியை அறிந்த அவன் தந்தை 'வாயுண்டானால் பிள்ளை பிழைக்கிறான்' என்று அப்பையனின் செவியில் படுமாறு செய்விக்க, 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றாற்போல தந்தையின் சொற் கருத்தையுணர்ந்த அப் புதல்வன் அந்த மல்லிகை மொக்கு களை மென்று தின்று விட்டான். பிறகு வெறுங் கையனான அவனை என் சொல்லி அரச தண்டனைக்கு ஆளாக்குவ

தென்று திகைத்த தோட்டக்காரன் அவனை விட்டிட்டான் என்ற கதை உண்டு. தின்னக் கூடாதவற்றையும் வருந்தித் தின்று களவை மறைத்துக் கொள்ளும் பிள்ளைகளின் இயல்புதெரிந்திருந்தும் உண்டதயிரின் சுவட்டைநாவினால் நக்கி மறைத்துக் கொள்ளலாமாயிருக்க, அங்ஙனம் செய்யாமல் களவுநன்கு வெளிப்படுமாறு தயிர்ச்சுவடு முகம் எங்கும் தடவிக்கொண்டது பேதைமையின் பணியன்றோ?'' என்று இத்திருக்குணத்தில் உள் குழைந்து வளை இழந்தாள் போலும் பரகாலநாயகி.

81

மாரி மாக்கடல் வளைவணற் கிளையவன்
　　வரைபுரை திருமார்பில்
தாரி னாசையில் போயின நெஞ்சமும்
　　தாழ்ந்ததோர் துணைகாணேன்
ஊரும் துஞ்சிற்று; உலகமும் துயின்றது;
　　ஒளியவன் விசும்பு இயங்கும்
தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;
　　செய்வது ஒன்று அறி யேனே.[10]

[மாரி—மேகம்; வளைவணன்—சங்கு போன்ற வெண்ணிறமுடைய பலராமன்; தாழ்ந்தது—தாமதித்தது; விசும்பு—ஆகாயம்; ஒளியவன்—சூரியன்; மறைந்தன—தெரியவில்லை]

இப்பாசுரம் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது. 'தலைவனைப் பிரிந்த தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்குதல்' என்னும் அகத்துறையில் அமைந்தது. திருமங்கையாழ்வார்—பரகாலர்—நாயகி நிலையிலிருந்து பேசுகின்றார்: ''எம்பெருமான் திருமார்பிலணிந்துள்ள

---

10. பெரி. திரு. 8.5:2

மாலையின்மீதுள்ள ஆசையாலே என் நெஞ்சு என்னை விட்டு அங்குச் சென்றது. அதைப் பெற்றுத் திரும்பி வருதலையும் செய்யவில்லை; அதனைப் பெறுவது அரிது என்று ஆசையை விட்டுவிட்டுத் திரும்பி வந்து விடலாம்; அதையும் செய்யவில்லை. இதுவரையில் எனக்குத் துணை யாக விருந்த என்நெஞ்சும் அகன்றது; உற்ற துணைவனான எம்பெருமானும் என்னை அலட்சியம் செய்துவிட்டான். இப்போது எனக்குந் துணையாவார் ஒருவரும் இல்லை. 'உண்டியே உடையே உகந்தோடும்' உலகினருக்கும், 'உண்ணும் சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்று இருக்கின்ற எனக்கும் எந்த வித பொருத்தமும் இல்லை. என்றாலும் யாருடனாவது எதை யாவது பேசிக் கொண்டு பொழுதைப் போக்கித் தொலைப் போம் என்று பார்த்தாலும் ஊராரும் உலகத்தாரும் தாங்கள் விரும்பிய இன்பங்களைக் குறைவரப் பெற்றுக் களித்துக் குறட்டைவிட்டு உறங்குகின்றனர். உலகப் பொருள்களில் எதையேனும் கண்டுகொண்டாகிலும் இந்தப் பிரிவாற்றாமையை ஒருவாறு ஆற்றுவோம் என்று பார்த் தாலும் பகலவன் தேரோடும் போய் மறைந்தான்; இருள் கௌவிக்கொண்டு விட்டதனால் ஒரு பொருளும் கண்ணுக்குப் புலனாவதில்லை. வெளியுலகிலும் ஒருவரும் இலர். நெஞ்சும் குடிபோயிற்று. நாயகனும் வந்து அணை கின்றிலன். காலமோ துயர் நெடுகும் படியான இராக் காலமாக உள்ளது. என்ன செய்து தரிக்கலாமென்று தெரிய வில்லையே'' என்கின்றாள் பரகாலநாயகி.

ஐதிகம் : முற்காலத்தில் எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்த பிள்ளையுறங்கா வில்லிதாசர் திருநாட்டுக் கெழுந்தருள, அவரைப் பிரம்ம ரதத்ததில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு செல்ல, அவருடைய தேவியாரான பொன்னாச்சி பிரிவாற்றாமைப் பாசுரமாகிய இத் திரு மொழியை அநுசந்திக்கத் தொடங்கி, முதற் பாசுரம் அநுசந்தித்து இரண்டாவதான இப் பாசுரம் அநுசந்திக்கும்

அளவில் முன்னே பிரம்ம ரதம் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்பவர்கள் விரைந்து செல்லுகையாலே திருந்தேர் மறைய, அதற்குத் தகுதியாகப் பொன்னாச்சி யின் அநுசந்தானம்,

தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;
செய்வதொன் றறியேனே.

என்று முடிய, அப்போதே பொன்னாச்சியின் உயிரும் தன்னைடவே விட்டு நீங்கிப் போயிற்று. இந்த ஐதிகம் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தில் காணப் பெறுகின்றது.

82

ஏழு மராமரம் துளைபடச் சிலைவளைத்
திலங்கையை மலங்குவித்த
ஆழி யான், நமக் கருளிய அருளொடும்
பகலெல்லை கழிகின்றதால்
தோழி! நாமிதற் கென்செய்தும்! துணையில்லை
சுடர்படு முதுநீரில்
ஆழ ஆழ்கின்ற ஆவியை அடுவதோர்
அந்திவந் தடைகின்றதே![11]

[ஏழு மராமரம்—ஏழு மராமரம்; சிலை—வில்; மலங்குவித்த—கலங்கப் பண்ணின; சுடர்—சூரியன்; படு—தான்தோன்றின; முதுநீர்—கடல்; ஆழ—மறைந்து போக; அடுவது—முடிப்பதன]

மகள் பாசுரம் : "எம்பெருமான் அருளும் போயிற்று; பகற்பொழுதும் போயிற்று; உயிரை முடிப்பதாகவுள்ள மாலை வந்து சேர்ந்து விட்டதே" என்று பொழுது கண்டு இரங்குகின்றாள் பரகாலநாயகி.

11. பெரி. திரு. 8.5:5

ஏழு மராமரம் துளைபடச் சிலை வளைத்து: இதிலுள்ள இதிகாசம்: இராமன் வாலிக்கு அபயம் அளித்த பின்னரும் சுக்கிரீவன் மனம் தெளியாமல் வாலியின் பேராற்றலைப் பற்றிப் பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத்து துளைத்ததையும், துந்துபியின் உடல் எலும்பை ஒரு யோசனை தூரம் தூக்கியெறிந்ததையும் குறித்துப் பாராட்டிக் கூறி, இவ்வாறு பேராற்றல் அமைந்தவனை வெல்வதுகூடுமா? என்றுசொல்ல, அது கேட்ட இலக்குவன், 'உனக்கு நம்பிக்கை இல்லையாயின் இப்போது செய்ய வேண்டுவது என்ன?' என்று கேட்க, அதற்குச் சுக்கிரீவன், 'இராமபிரான் நீறு பூத்த நெருப்பு போலத் தோன்றினும், வாலியின் வல்லமையை நினைக்கும்போது ஐயம் உண்டா கின்றது; ஏழு மராமரங்களையும் துளைத்து இந்தத்துந்துபி யின் எலும்பையும் இருநூறு விரற்கடை தூரம் தூக்கி எறிந்தால் எனக்கு நம்பிக்கை உண்டாகும்' என்று சொல்ல, சுக்கிரீவனுக்கு நம்பிக்கை உண்டாகுமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கடை விரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோசனைத் தூரத்திற்குஅப்பால் எறிய, அதனைக் கண்ட சுக்கிரீவன் 'முன்பு உலரா திருக்கையில் வாலி இதனைத் தூக்கியெறிந்தான்; இப் போது உலர்ந்து போன இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று' என்று கூற, பின்பு இராமன் ஓரம்பை ஏழு மராமரங்களின்மேல் ஏவ, அஃது அம்மரங்களைத் துளைத்த தோடு ஏழுலகங்களையும் துளைத்துச் சென்று மீண்டு இராமனது அம்பறாத் தூணியை அடைந்தது என்பது வரலாறு.

83

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப்
பொன்ற அன்று புள்ளூர்ந்து
பெருந்தோள் மாலி தலைபுரளப்
பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை,

இருந்தார் தம்மை யுடன்கொண்டங்
கெழிலார் பிலத்துப் புக்கொளிப்ப,
கருந்தாள் சிலைக்கைக் கொண்டானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே.[12]

[அன்று—முன் ஒரு காலத்தில்; வெம்சமத்து—கொடிய போர்க்களத்தில்; பொன்ற—முடியும் படியாக; புள்—கருடப் பறவை; பெருதோள்—வலியதோள்; புரள—புரளும் படியாக; போந்த அரக்கர்—அவனைத் தவிர மற்ற அரக்கர்கள்; பிலத்து—பாதாளத்தில்; புக்கு ஒளிப்ப—புகுந்து மறைய; கருந்தாள் சிலை—வயிரம் பற்றித் திண்ணிதான சிலை]

திருக்கண்ணபுரம் மங்களாசாசனத் திருமொழியில் ஒரு பாசுரம். "பொருந்தா அரக்கர்களைக் கொன்று, மாலியின் தலை நிலத்தில் புரளும்படி செய்து, ஏனையோர்கள் பிலத்து வழியாக பாதாளம் புகுந்து மறையும்படி செய்த சக்கரவர்த்தித் திருமகனின் இருப்பிடம் கண்ணபுரம் ஆகும்" என்கின்றார்.

இதில் அடங்கியுள்ள இதிகாசம் : சுகேசன் என்பவன் ஓர் இராக்கதன். அவனுக்கு மாலியவான், மாலி, சுமாலி என்ற மூன்று மைந்தர்கள். இவர்கள் தவம் புரிந்து பெருமை பெற்று இலங்கையில் குடி புகுந்து திருமணம் புரிந்து கொண்டு பல மக்களைப் பெற்றதும், தேவர்கள் சிவபெருமானை அடைக்கலம் புகுந்து அவர் சொன்ன உபாயத்தினால் ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைந்ததும், அவர் அவர்கட்கு அபயமளித்ததும்; அது தெரிந்து அரக்கர்கள் கோபங் கொண்டு படையெடுத்து தேவ லோகம் சென்றதும், அப்பொழுது கேசவன் கருடன்மேல் இவர்ந்து அங்கு வந்து தோன்ற அரக்கர்கள் அவரைச்

12. பெரி. திரு. 8.6:2

சூழ்ந்து அம்புமாரி பொழியப் புகுந்ததும், பிறகு அரக்கர் கட்கும் திருமாலுக்கும் மாபெரும் போர் நிகழ்ந்ததும், அதில் மாலி மரணமடைந்ததும் மற்ற மாலியவான் சுமாலி என்னும் இருவரும் திருமாலுடன் போர் புரிந்து தோற்றதும் உத்தர இராமாயணத்தில் கூறப் பெற்றவை. இந்த மூவருள் ஒருவனான சுமாலியின் மகளான கைகசிக்கு இராவணன் முதலியோர் பிறந்தனர் என்பது அறியத் தக்கது.

84

மலங்கு விலங்கு நெடுவெள்ளம்
    மறுக அங்கோர் வரைநட்டு
இலங்கு சோதி யாரமுதம்
    எய்து மளவோர் ஆமையாய்
விலங்கள் திரியத் தடங்கடலுள்
    சுமந்து கிடந்த வித்தகனை
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்
    தடியேன் கண்டு கொண்டேனே[18]

[மலங்கு—மீன் சாதிகள்; விலங்கு—தடுமாறும் படியாக; மறுக—குழம்பும்படியாக; வரை—மலை; எய்தும் அளவு—தோன்றும் வரையில்; தடகடல்—பெரிய கடல்; கலங்கல் முந்நீர்—கலக்கமுள்ள கடல்]

திருக்கண்ணபுர விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். "கூர்மாவதாரம் செய்த பெருமானைத் திருக் கண்ணபுரத்தில் சேவிக்கப் பெற்றேன்" என்கின்றார்.

இதிலுள்ள இதிகாசம் : முன் ஒரு காலத்தில் இந்த ஆண்டகோளத்துக்கு அப்பால் உள்ள திருமால் உலகம்

18. பெரி. திரு. 8.8;2

சென்றாள் ஒரு வித்தியாதர மகள். அவள் திருமகளைப் பாடியதால் ஒருபூமாலை சம்பாவனை செய்யப் பெற்றாள். அதனைத் தன் வீணையில் தரித்துக் கொண்டு பிரம லோகம் வழியாகத் திரும்பி வருகையில் துர்வாச முனிவர் எதிர்ப்பட்டார். விஞ்சை மகள் அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள். அதன் பெருமையை உணர்ந்த அம்முனிவன் அதனைத் தன் சிரமேற் கொண்டு தேவலோகத்துக்கு வருகையில், அங்கு உல்லாசமாகத் தன் வெள்ளை யானையின்மீது பவனி வந்து கொண்டிருந்த இந்திரனைக் கண்டான். அவனுக்கு அந்த மாலையைக் கை நீட்டிக் கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியின்மீது வைத்தான். அவ்விலங்கு அதனைத் துதிக்கையால் இழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அது கண்ட முனிவன் கடுஞ்சீற்றங் கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற நினது ஐசுவரியங்கள் எல்லாம் கடலில் மறைந்து விடக் கடவன' என்று சபித்தான். உடனே தேவர் செல்வம் யாவும் ஒழிந்தன; ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணம் அடைந்து, அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி, அசுரர்களையும் துணைக் கொண்டு மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் பெரும் பாம்பைக் கயிறாகக் கொண்டு பாற் கடலைக் கடையலாயினர்; அப்பொழுது மத்தாகிய மந்தர கிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவம் எடுத்து அம் மலையின்கீழே சென்று அதனைத் தன் முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்தி விடாமல் கடைவதற்குப் பயன்படும்படியாக அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தான் என்பது கூர்மாவதார வரலாறு.

85

மீனோ டாமை கேழலஅரி
குறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய், பினனும் இராமனாய்த்
தாமோ தரனாய்க் கற்கியும்
ஆனான் தன்னை, கண்ணபுரத்
தடியன் கலியன் ஒலிசெய்த
தேனா ரின்சொல் தமிழ்மாலை
செப்பப் பாவம் நில்லாவே.[14]

[கேழல்—வராகம்; தான்—இராமன்; தாமோ தரன்—கண்ணன்; கற்கி—கல்கி அவதாரம்; செப்ப—ஒலிக்க]

கண்ணபுரத்து விஷயமான திருமொழியிலுள்ள ஒரு பாசுரம். பத்து அவதாரங்களையும் அநுசந்திக்கத் தொடங்கிய ஆழ்வார் இந்த நிகமனப் பாசுரத்தில் கல்கி அவதாரத்தை அநுசந்திக்கின்றார்.

கல்கி அவதாரம் : *கண்ணன் தன் சோதிக்கெழுந்தருளியதும் பூவுலகில் கலியின் ஆட்சி தொடங்கியது. கொடுமைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன; நிலமங்கை இவற்றைத் தாங்க மாட்டாமல் இதுகாறும் செய்ததுபோல் திருமாலைச் சரணம் அடைவாள்; அவரும் தானே மீண்டும் அவதரித்துத் துயர் தீர்ப்பதாகவும் கூறுவார். எதிர்காலத்தில் வடதிசையில் சம்பளம் என்ற சிற்றூரில் வைதிகோத்தமனான விஷ்ணுயசஸ் என்பவரின் மனைவியாகிய சுமதி என்பாள் கருவிற்புகுந்து பன்னிரண்டு ஆண்டு உறைவார். பிறகு வைகாசி வளர்பிறையில் துவாதசியன்று அவதரிப்பார். வியாசர் முதலிய பெரியோர்கள் அக்குழந்தைக்குக் கல்கி என்று பெயரிடுவர். பிறகு கல்கி*

14. பெரி. திரு. 8.8:10

பகவன் பரசுராமனிடம் குருகுலவாசம் செய்து வேதங்களைக் கற்று ஆயுதப் பயிற்சியும் பெறுவார்: 'தரும பரிபாலனம் செய்வதே' குருதட்சிணை என்று பரசுராமன் அளிப்பார். பின்னர் தந்தையிடம் அநுமதி பெற்று விசுவசித், அசுவமேதம் முதலிய யாகங்களைப் புரிவார். முதலில் பௌத்தர்களை ஒழிப்பார்; பின்னர் யவநர்களை ஒழித்துக் கட்டுவார். இத்தேசங்களில் தன்னைப் பின் தொடர்ந்து வரும் அரசர்கட்கு முடி சூட்டுவார். இதனால் கலி மிகவும் சீற்றமுற்று அதர்மம், அஞ்ஞானம் முதலியவற்றுக்கு அதிஷ்டான தேவைகளாக இருப்பவர்களைக் கூட்டிக் கொண்டு எம்பெருமானுடன் போர் புரிவான். கல்கி பகவான் அவனைப் பல வகைகளிலும் பங்கப்படுத்துவார்; அவனை வெட்டப் போகுந் தருணத்தில் அவன் பகவான் பாதங்களில் பணிந்து தன்னுயிரை மாத்திரம் தப்ப வைத்துக் கொண்டு இவ்வுலகை விட்டு ஓடிப்போய் ஒளிந்து கொள்வான். அதன்பின் அவன் தோழர்களாகிய கோகன் விகோகன் என்ற இருவர் எம்பெருமானோடு போர் புரிவார். எத்தனை அடி அடித்தாலும் அவர்கள் மாய்வதில்லை. இருவரையும் ஒரே காலத்தில் கொல்ல வேண்டும் என்பதை நான்முகன்மூலம் அறிந்து அவர்கள் இருவர் தலையிலும் ஒரே சமயத்தில் அடிக்க அவர்கள் மாண்டு போவார்கள். இப்படியாக கல்கி பகவான் உலகிலுள்ள தீயோர்களையெல்லாம் கொன்று மறத்தை வேரறுத்து அறத்தை நிலை நாட்டிக் கிருத யுகத்தைத் தோற்றுவிப்பார். பின்னர் தம் பெற்றோர்கட்கு வீடுபேறு நல்கி அவதாரப் பயனைத் தலைக் கட்டின பிறகு பதரிகாச்ரமத்திற்கு எழுந்தருளி மற்றவர்களைப்போல் யோகாசனம் செய்து திருவாழி திருச்சங்கு முதலிய திவ்வியாயுதங்களோடும் கூடிய தமது தெய்வத் திருமேனியுடன் காட்சி அளிப்பார். இந்நிலையில் பரமபதத்திலிருந்து அனந்தன், கருடன், விஷ்வக்சேநர் முதலிய நித்திய சூரிகள் பூர்ண கும்பம் ஏந்தி சாமகானம் ஒலித்துக் கொண்டு வந்து தம்

திருவடி தொழுவர். அதன்பின் தம்முடைய சோதிக்கு எழுந்தருள்வார்.

86

கைம்மான மதயானை
    யிடர்தீர்த்த கருமுகிலை
மைம்மான மணியை
    மணிகொள் மரகதத்தை
எம்மானை யெம்பிரானை
    யீசனை யென்மனத்துள்
அம்மானை, அடியேன்
    அடைந்துய்ந்து பிழைத்தேனே.[14]

[மானம் கை—நீண்ட துதிக்கை; இடர்—துயரம்; கருமுகில்—காளமேகம்; மை—மை நிறம்; மானம் மணி—பெருவிலை பெறும் நீல இரத்தினம்; மரகதம்—பச்சைமணி; உய்ந்து—பிழைத்து]

திருக்கண்ணபுரத்துச் சௌரிராஜன்மீது மங்களா சாசனத் திருமொழியில் ஒரு பாசுரம். “கண்ணபுரத் தம்மானுக்கன்றி அடியேன் வேறொருவருக்கு உரியேனல் லேன்” என்கின்றார் ஆழ்வார்.

மை மான மணியை : இரத்தினத்திற்கும் எம்பெருமா னுக்கும் பல நிலைகளில் ஒப்புமை உண்டு.

(1) இரத்தினத்தைச் சொந்தமாகவும் அநுபவிக்கலாம்; விற்பனை செய்து வேறு பொருள்களையும் பெறலாம். அப்படியே எம்பெருமானைப் புருஷார்த்தமாகவும்

14. பெரி. திரு. 8.9:1

கொள்ளலாம்: அவனை உபாயமாக்கி ஐசுவரியகைவல் யார்த்திகளான வேறு புருஷார்த்தங்களையும் பெறலாம்.

(2) இரத்தினத்தின் மதிப்பை அறியாதவன் அற்ப விலைக்கு விற்பன்; மதிப்பறிந்தவன் உள்ள விலைக்கு விற்பன்; உத்தம அதிகாரி அதனை விற்பனை செய்யாமல் மார்பி லணிந்து அநுபவித்து மகிழ்வன். இங்ஙனமே எம்பெருமா னைக் கொண்டு ஐசுவரியம் போன்ற கீழான பலன்களைக் கொள்வாரும், அவனை மோட்சோபாயமாக்கிக் கொண்டு மோட்ச புருஷார்த்தத்தைக் கொள்வாரும், அவனை 'எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே' என்று தாமே அநுபவிப்பவர்களுமாக இருப்பார்கள்.

(3) இரத்தினத்தை இழந்தவன் கதறியழுவான். எம் பெருமானை இழந்தவனும் அப்படியே. இராமரத்தினத்தை இழந்த பரதன் அவையில் கதறியழுதானன்றோ? 'பழுதே பலபகலும் போயின என்று அஞ்சி அழுதேன்'[15] 'இன்பத்தை இழந்த பாவியேன் என தாவி நில்லாதே'[16] 'உன்னைக் காண்பான் நான் அலப்பு ஆய் ஆகாயத்தை நோக்கி யழுவன்'[17] என்றிப்படியெல்லாம் கதறியழுவார்கள்.

(4) இரத்தின முடையவன் மார்பு நெறிப்பன். எம் பெருமானைக் கைக் கொண்டவர்களும் "எனக்கு யாரும் நிகரில்லையே"[18] "மாறுளதோ இம் மண்ணின் மிசையே"[19] "எனக்கென்னினி வேண்டுவதே"[20] "இல்லையெனக் கெதிரே"[21] என்று செருக்கிப் பேசுவார்கள்.

15. முதல் திரு. 16
16. பெரு. திரு. 7;4
17. திருவாய் 5.8:4
18. இராமா. நூற். 47
19. திருவாய் 6.4;9
20. ஷெ. 6.4;4
21. பெருந்தொகை—18. 88

(5) இரத்தினம் பெற்றுள்ளவனை உலகமெல்லாம் தொடரும். எம்பெருமானைக் கைக் கொண்டவனையும் அப்படியே.

(6) இடையில் ஒரு புருஷனைக் கொண்டே இரத்தினம் வாங்கப்படும்; புருஷகாரமின்றி எம்பெருமானைப் பெற முடியாது. "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து."[22]

(7) இரத்தினத்திற்கு சில சில ஆதாரங்களில் (ஆச்ரயங்களில்) மதிப்பு அதிகப்படும். எம்பெருமானுக்கும் அப்படியே. ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளில் அன்றோ எம்பெருமானுக்கு மதிப்பு அதிகம்.

(8) இரத்தினம் ஒளியை விட்டு இராது; எம்பெருமானும் பிராட்டியை விட்டு இரான்.

(9) இரத்தினத்திற்கு ஒளியால் மகிமை; எம்பெருமானுக்கும் பிராட்டியால் ஏற்றம்.

(10) இரத்தினத்திற்கு ஒளியால் ஏற்றமென்றாலும், இரத்தினத்தின் சுதந்திரப் பெருமைக்கு ஒரு குறை இல்லை; எம்பெருமானுக்கும் அப்படியே.

(11) இரத்தினம் கடல், மலை முதலிய இடங்களில் உள்ளது. எம்பெருமானும் திருப்பாற் கடல், திருமலை முதலான இடங்களில் உள்ளான்.

(12) இரத்தினம் எவ்வளவு உயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம் படி இருக்கும்: எம்பெருமானும் பரத்துவத்தை மறைத்து சௌலப்பியத்தைக் காட்டுகின்றவனன்றோ?

(13) இரத்தினம் பெற்றவர்கள் இரவும் பகலும் கண்ணுறங்கார்; எந்த வேளையில் யார் கொள்ளை கொள்

22. திருவாய். 4.6:8

வரோ என்று துஞ்சாதிருப்பார்கள்; எம்பெருமானைப் பெற்றவர்களும் அப்படியே. "கண்ணாரக் கண்டுகழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே"[23] என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கம் இல்லை; கண்ட பின்பும் இல்லை.

இப்படிப் பல உவமைப் பொருத்தங்களைக் கண்டு கொள்க.

87

தருமான மழைமுகிலைப்
 பிரியாது தன்னடைந்தார்
வருமானம் தவிர்க்கும்
 மணியை அணியுருவில்
திருமாலை அம்மானை
 யமுதத்தைக் கடல்கிடந்த
பெருமானை, அடியேன்
 அடைந்துய்ந்து பிழைத்தேனே.[24]

[தரு—கற்பகத்தரு; மான—பெரிய; தன் அடைந்தார்—தன்னை வந்து பணிந்தவர்கள்; தவிர்க்கும் — போக்குகின்றவன்; உரு—வடிவம்]

திருக்கண்ணபுர மங்களாசாசனப் பதிகத்திலுள்ள ஒரு பாசுரம். "சௌரிராசன் திருவடியை அடைந்து உய்ந்து பிழைத்தேன்" என்கின்றார்.

23. திருவிருத். 97

24. பெரி. திரு. 8.9;3

பிரியாது தன்னடைந்தார் வருமானம் தவிர்க்கும்; தன் அடியார்க்கு ஏதேனும் அவமான முண்டானால் ஆனைத் தொழில்களும் செய்து அதனைப் போக்கியருள்பவன் எம்பெருமான்.

ஓர் இதிகாசம்: சூரிய வமிசத்து அரசர்களில் அம்பரீஷன் என்பான் ஒருவன்; இவன் பரமபகவத் பக்தன். இவனைப் பாதுகாக்க எம்பெருமான் தன் திருவாழியாழ் வானை எப்போதும் இவ்வரசனுடைய மாளிகையிலேயே கோயில் கொண்டிருக்கும்படி வைத்திருந்தான். இவன் பாகவதாராதன ரூபமாய் ஓராண்டுத் தலைக்கட்ட வேண்டியதான துவாதசி விரதமொன்றை அநுட்டித்து வந்தான். இந்த விரதம் முடிவாகும் துவாதசியன்று சிறப்பாக அந்தணர்கட்குத் தட்சிணை கொடுத்து அவர்க ளுடைய நியமனம் பெற்றுக் கொண்டு முதலுணவு (பாரணை) பண்ணப்புகும் அளவில் துர்வாச முனிவர் அதிதி பூசை பெற்றுக் கொள்ள அங்கு வந்து சேர்ந்தார். மிகச் சிறந்த தபோநிதியாகிய இந்த அதிதி எழுந்தருளி னதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி கொண்டு உபசாரங்களை விதிப்படி நடத்தினான். பின்னர் தாரணை கோஷ்டியில் கலந்து கொள்ளுமாறு வேண்டினான். முனிவரும் அதற் கிசைந்து 'மாத்யாஹ்நிக அநுட்டானங்களை நிறைவேற்றி வருகிறேன்' என்று கூறி யமுனைக்குச் சென்றார்; சென்றவர் அநுட்டானங்களில் மிக ஊன்றித் தாமதிக்கை யில் துவாதசித் திதி கழிந்து போகும் தருணம் வரவே, சங்கல்ப பூர்வமாக இந்த விரதத்தை அநுட்டித்து வந்த அரசன் 'துவாதசி திதி முடிவதற்கு முன்பு பாரணை செய்யாவிடில் விரதத்திற்குக் குறைவு வரும்; எழுந்தருளின அதிதியை அலட்சியம் செய்து பாரணை செய்தால் பெரும் பாவம் விளையும்; இங்ஙனம் தர்ம சங்கடமாக நேர்ந்து விட்டதே! இதற்கு என்ன செய்வோம்!'' என்று மிக்க கவலை கொண்டான். வல்லவர்களான அந்தணர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் சொற்ப தீர்த்த பாரணை

செய்துவிட்டு பிரசாத பாரணைக்காக துர்வாச முனிவரை எதிர்பார்த்திருந்தான்.

தாமதித்து வந்த முனிவர் தம்மை அவமதித்து அரசன் தீர்த்த பாரணை செய்துவிட்டதாகக் கருதி மிகுந்த சீற்றங் கொண்டு தம் தலையிலிருந்து ஓர் சடைமயிரைக் களைந் தெடுத்து அதனால் காலாக்நி யோடொத்த ஒரு பெண் பூதத்தை உண்டாக்கி அம்பரீஷனை நலியுமாறு ஏவினார். மிகப் பயங்கரமாய்த் தன்னை நோக்கி விசைத்து வருகின்ற அதனைக் கண்டும் அம்பரீஷன் சிறிதும் மனங்கலங்காது எம்பெருமானையே சிந்தித்திருந்தான். இவனுடைய பாதுகாவலின் பொருட்டு மாளிகையில் நிறுவப் பெற்றிருந்த சக்கரத்தாழ்வான் அந்தப் பூதத்தை நீறாக்கி விட்டது மல்லாமல் துர்வாச முனிவரையும் தொடரத் தொடங் கியது. முனிவர் எத்திசையும் உழன்றோடியும் புகல் பெறாமல் திருமால் திருவடிகளில் வந்து விழ, ஶ்ரீமந் நாரா யணனும் "அம்பரீஷர் திருவடியே உமக்குப் புகல்" என்று காட்டிக் கொடுக்க, முனிவரும் அரசனையே சரணம் புகுந்து உயிர் பிழைத்து வாழ்ந்தார்.

ஒன்பதாம் பத்து

88

வில்லால் இலங்கை
மலங்கச் சரம்துரந்த
வல்லாளன் பின்போன
நெஞ்சம் வருமளவும்
எல்லாரும் என்றன்னை
யேசிலும் பேசிடினும்
புல்லாணி யெம்பெருமான்
பொய்கேட் டிருந்தேனே.[1]

1. பெரி. திரு. 9.4:5

[மலங்க — கலங்கியழியும்படி; சரம் — அம்பு; வல்லாளன் — பெருவீரன்; என் தன்னை— என்னை; ஏசிடினும்—பழித்தாலும்; பொய்— பொய்யுரை]

மகள் பாசுரம் : *"புல்லாணி சென்று தொழுவோம் என்று ஆசைப்பட்டிருந்த நமக்குத் துன்பப் படுவதே பலனாகத் தேறிற்றே! எஞ்ஞான்றும் துயருற்றிருப்பதே நமது விதி போலும்!" என்று தோழியை நோக்கிக் கூறுகின் றாள் பரகால நாயகி.*

'புல்லாணி எம்பெருமான் பொய் கேட்டிருந்தேனே' : *எம் பெருமானைத் தவிர மற்றோர்கள் மெய்யுரையே சொல்லு வார்களானாலும் அவற்றால் நமக்கு விளைவதொன்றும் இல்லை; எம்பெருமானது வார்த்தை பொய்யேயானாலும் அது தவிர வேறொன்று நமக்குப் புகல் இல்லை என்கிறாள் என்க. "இராமாவதாரத்தில் மெய்யும் கிருஷ்ணாவதாரத் தில் பொய்யுமே நமக்குத் தஞ்சம்" என்று ரஸோக்தியாக பட்டர் அருளிச் செய்வதுண்டு. பொய்யாகிலுமாம் மெய்யா கிலுமாம்; அதில் ஒரு விசாரம் இல்லை; 'எம்பெருமா னுடையது' என்னுமத்தனையே கொண்டு தரித்திருப்பவர் ஆஸ்திகர்.*

89

அக்கும் புலியின் அதளும்
உடையார் அவரொருவர்
பக்கம் நிற்க நின்ற
பண்பர் ஊர்போலும்
தக்க மரத்தின் தாழ்ச்சினை
யேறி, தன்வாயில்
கொக்கின் பிள்ளை வெள்ளிற
வுண்ணும குறுங்குடியே,[2]

---

2. பெரி.திரு. 9.6;1

[அக்கு—எலும்பு; அதள்—தோள்; உடையார்—உடையாராகிய சிவபிரான்; பக்கம்—அருகே; பண்பர் — சீலகுணம் உடையார்; தக்க—தகுந்ததான; தாழ்சினை—தாழ்ந்த கிளை; வெள்ளிறா — வெள்ளிறா என்னும் மீனை; தாய்—தாய்க்கொக்கு.]

திருக்குறுங்குடி விஷயமான திருமொழியிலுள்ள ஒரு பாசுரம். 'எம்பெருமானுக்கு ஆகாதாரில்லை' என்கின்றார். 'நானே ஈசுவரன்' என்று அபிமானித்திருக்கும் ஒருவனுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கின்றவன் அநுகூலராய்ச் சென்று கிட்டுகின்ற நமக்கு முகாந்திரம் சொல்ல வேணுமோ? என்பது உட்கருத்து.

இதில் உள்ள இதிகாசம் : ஒருகாலத்தில் சிவபெருமான் தன்னை மதியாத தாருக வனத்து முனிவர்களுடைய கருவத்தைப் பங்கம் செய்யவும் அவர்தம் மனைவிமார்களின் கற்பு நிலையைச் சோதிக்கவும் கருதித் தான் ஒருவிட வடிவங்கொண்டு அவர் இல்லந்தோறும் சென்று பிச்சை கேட்கும் நிலையில் தன்னை நோக்கிக் காதல் கொண்ட அம்முனி பத்தினிகளின் கற்பு நிலையைக் கெடச் செய்ய, அது கண்டு பொறாமல் சீற்றம் கொண்ட அம்முனிவர்கள் அபிசார யாகமொன்று செய்து அவ் வோமத் தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயல்கள், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்கொன்று வரும்படி ஏவ, சிவபெருமான் தன்மீது பொங்கிவந்த நாகங்களை ஆபரணங்களாக்கிக் கொண்டான்; பூதங்களைக் கணங்களாகக்கொண்டான்; மானைக் கையிலேந்திக்கொண்டான்; புலித்தோலை உரித்து ஆடையாகத் தரித்துக்கொண்டான். முயல்களை முதுகிற் காலால் ஊன்றி வெண்டலையைக் கையால் பற்றிச் சிரமேல் அணிந்து இங்ஙனம் அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்து விட்டனன் என்பது கதை.

90

தேனுகன் ஆவி போயுக அங்கோர்
செழுந்திரள் பனங்கனி உதிர
தானுகந் தெறிந்த தடங்கடல் வண்ணர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
வானகச் சோலை மரகதச் சாயல்
மாமணிக் கல்லதர் நிறைந்து
மானுகர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குவதும் வாமட நெஞ்சே![3]

[தேனுகன்—தேனுகாசுரன்; ஆவி—உயிர்; போய் உக—தொலைந்து போவதற்காக; ஓர் செழு திரள் — அழகாகத் திரண்டிருந்த; தான் எறிந்து—அக் கழுதையைப் பனங் கனி மேலெறிந்து; மாமணிகல் அதர்—நீலப்பாறை வழிகளில் (புகுந்து); நிறைந்து — நிறைய இருந்து; நுகர் — மேயப்பெற்ற; சாரல்— பக்கங்கள்]

திருமாலிருஞ்சோலை விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வணங்கு தற்காகத் தன் நெஞ்சை வருமாறு பணிக்கின்றார் ஆழ்வார்.

தேனுகன் ஆவி......யுதிர : இதிலுள்ள இதிகாசம். கம்சனது ஏவுதலால் கழுதை வடிவம் கொண்டு காட்டுக் குள்ளே கண்ணபிரானை நலிவதற்காக வந்தவன் தேனுகன் என்னும் அசுரன். கண்ணபிரான் பலராமனோடும் இடைச் சிறுவர்களோடும் மாடு மேய்த்துக் கொண்டு, பழங்கள் அழகாக மிகுதியாய்ப் பழுத்து மணம் வீசிக்கொண்டிருந்த ஒரு பனங்காட்டை அடைந்து அப் பனம்பழங்களை விரும்பி உதிர்த்துக்கொண்டு வருகையில் அவ் வனத்துக்குத் தலைவ

3. பெரி. திரு. 9.8:7

னும் கம்சன் பரிவாரத்தில் ஒருவனுமான கழுதை வடிவங் கொண்ட தேனுகாசுரன் சினங் கொண்டு ஓடி வந்து எதிர்த்துப் போர் செய்ய உடனே கண்ணன் அதிலாகவ மாக அதன் பின்னங்காலிரண்டினையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிரிழக்கும்படிப் பனைமரத்தின் மேலெறிந்து அழித்தனன் என்பது வரலாறு.

91

வலம்புரி யாழியனை
வரையார்திரள் தோளன்றன்னை
புலம்புரி நூலவனைப்
பொழில்வேங்கட வேதியனை
சிலம்பிய லானுடைய்
திருமாலிருஞ் சோலைநின்ற
நலந்திகழ் நாரணனை
நணுகுங்கொலென் நன்னுதலே![4]

தாய்ப் பாசுரம் : திருமாலிருஞ் சோலைமலை விஷய மான பாசுரம். அண்டினவர்கட்கு ஆபத்து வரும்பொழுது தாமதமின்றிக் காத்தற்காக திருவாழி திருச்சங்கை எப் போதும் திருக்கைகளில் ஏந்தியுள்ளவனும், அந்தத் திருப் படைகளின்றியும் காக்கவல்ல தோள் மிடுக்கை யுள்ளவ னும், காக்காதொழியினும் விட வொண்ணாதபடி பூணு நூலையணிந்த அழகு வாய்ந்தவனும், இரட்சிய வர்க்கம் தேடித் திருவேங்கட மலையில் வந்து நிற்பவனும், 'அது தானும் பரத்துவத்தோடொக்கும்' என்று சொல்ல வேண்டும்படி மிக நீசனார்க்கும் முகங்கொடுத்துக்கொண்டு திருமாலிருஞ்சோலையிலே வந்து நிற்கையாகின்ற நீர்மையி லேற்றத்தையுடையவனுமான சீமந் நாராயணனை என் மகள் நண்ணப்பெறுவாளோ?'' என்கின்றாள் திருத் தாயார்.

4. பெரி. திரு. 9.9;9

'சிலம்பியலாறுடைய திருமாலிருஞ் சோலை : 'சிலம்பு' என்று சொல்லையிட்டு வளர்க்கப்படுகின்ற ஆறு; 'நூபுர கங்கை' என்று வடமொழிப் பெயர்பெறும். திருமால் உலகளந்த காலத்தில் மேலே சத்தியலோகத்திற் சென்ற அப் பெருமானது திருவடியைப் பிரமன் தன் கைக் கமண்டல நீரால் கழுவி விளக்க, அக் காற்சிலம்பினின்று தோன்றியதால் 'சிலம்பாறு' என்ற பெயராயிற்று. இனி, 'சிலம்பாறு' என்பதற்குத் 'திருக்கண்ணபுரம் சுவாமி ரஸோக்தியாக ஒரு பொருள் படிப்பதுண்டு. ஆழ்வான் அருளிய சுந்தரபாஹுஸ்வத்திலுள் ஒரு ஸ்லோகத்தை அடிப்படையாகக்கொண்டு இப்பொருள் அமைகின்றது. கின்னரப் பெண்மணிகள் திருமாலிருஞ் சோலைத் தாழ்வரையில் வந்து நம்மாழ்வாரது திருவாய்மொழிப் பாசுரங்களை இசைபாட[5] 'மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ'[6] என்று கூவின அவ்வாழ்வாரது பாசுரங்களைக் கேட்ட குன்றும் உருகிப் பெருகாநின்றது என்று அருளிச் செய்தமையால் "குன்றே உருகி ஆறாயிற்று என்ற காரணங்கொண்டு சிலம்பாறு என்னதாயிற்று" என்று அருளிச் செய்வர்.

92

'எங்கள் எம்மிறை எம்பிரான்'[7] : (அவதாரிகை). இது திருக்கோட்டியூர் என்ற திருப்பதி விஷயமான திருமொழி. மணிமுத்தா ஆற்றங்கரையிலுள்ள இந்தத் திருப்பதி முற்காலத்தில் கதம்ப முனிவரின் புண்ணிய ஆசிரமமாக இருந்தது; இந்த முனிவரின் சாபத்தினால் துட்டர் ஒருவரும் கிட்டவர முடியாமலும் இருந்தது. முன்பு இரணியன் மூவுலகங்களையும் அரசாண்டபோது தேவர்

---

5. பெரி திரு. 9 8:9
6. திருவாய். 6.5:9
7. பெரி. திரு. 9.10

களை நைகின்றான். தேவர்கள் அந்த அசுரனை முடிப்ப தற்கு வேண்டிய உபாயத்தை ஆலோசிப்பதற்குத் தகுதி யானதும் ,திருப்பாற் கடலைப்போலவே ஆலோசிப்பதற்கு ஏகாந்தமானமாயும், பாற்கடலில் ஆதிசேடன்மீது அறி துயில் கொள்ளும் பரந்தாமனைப் போலவே, இத்தலத்து எம்பெருமானும் சேஷசாயியாயும் இருந்தபடியால் மும் மூர்த்திகளும் தேவர்களும் சூழ்ந்து ஆழ்ந்து ஆலோசிக்க இவ்விடத்தைத் தேர்ந்து எடுத்து ஒன்று கூடுகின்றனர். திருமால் நரசிங்க அவதாரம் எடுத்துத் தன் வள்ளுகிரால் இரணியனை வதைப்பது என்று முடிவு செய்கின்றனர். தேவர்கள் யாவரும் கோஷ்டியாகச் (கூட்டமாகச்) சேர்ந்து ஆலோசித்த இடமாதலின் இதனைக் கோஷ்யூர் என்று வழங்குகின்றனர். 'திரு' என்ற அடையுடன் இவ்வூர் 'திருக்கோட்டியூர்' என்று திருநாமம் பெற்று வழங்க லாயிற்று.

"பெயர்க் காரணம்பற்றி நம் யுக்தியும் செயற்படு கின்றது. 'திருக்கோட்டியூர்' என்பதைத் திருக்கு + ஒட்டி + ஊர் எனப் பிரித்து 'பிறவியில் செய்த வினைகளை + நீக்கும் எம்பெருமான் + கோயில் கொண்டுள்ள தலம்' என்று நம் மனம் எண்ணிப் பொருள் காண்கின்றது. மேலும், 'கோட்டம்—கோயில்; கோயிலையும் விமானத் தையும் கொண்ட ஊர்' என்று பொருள்கொள்ளவும் முயல் கிறது. இன்னும், 'கோஷ்டி—கூட்டம்; வித்துவான்கள் கூட்டம் நிறைந்திருக்கும் ஊர்' என்று பொருள் காணவும் முற்படுகிறது."[8]

சைவப்பற்றும் திருமால் வெறுப்பும் கொண்ட சோழ அரசனது கொடுமையினால் திருவரங்கம் பெரியகோயிலில் ஸ்ரீவைணவ ஆசாரியர்கள் அச்சமின்றி வாழ்வதற்கு இயலாத காலத்தில் கூரத்தாழ்வானும் அத்தலத்தைவிட்டுச் சிலகாலம் திருமாலிருஞ் சோலையில் வாழ்ந்ததுபோல,

8. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்—பக்.3.

அவரது திருக்குமாரரான பட்டர் இத்தலத்தில் நெடுநாள் வாழ்ந்த சிறப்பும், எம்பெருமானாரும் கூரத்தாழ்வனும் இத் தலத்திற்கு எழுந்தருளித் திருக்கோட்டியூர் நம்பியிடம் பெரு நிதி பெற்ற சிறப்பும் சிந்தித்தற்குரியவை.

93

எங்க ளெம்மிறை யெம்பிரா னிமையோர்க்கு
நாயகன்,ஏத் தடியவர்
தங்கள்தம்மனத் துப்பிரி யாதருள் புரிவான்,
பொங்குதண் ணருவி புதம் செய்யப்
பொன்களே சிதறும் இளங்கொளி
செங்கமல மலரும் திருக்கோட்டி யூரானே[9]

[இறை—சுவாமி; எம்பிரான்—எமக்கு உபகாரகன்; இமையோர்—நித்திய சூரிகள்; ஏத்தும்—துதிக்கும்; பொங்கு— மேன்மேலும் கிளர்க்கின்ற; புதம் செய்ய—தாவிப்பாய]

திருக்கோட்டியூர் விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். 'எங்களிறை' என்றோ 'எம்மிறை' என்று அருளிச் செய்தால் போதுமாயிருக்க, 'எங்களெம்மிறை' மன்பா னேன்? இது கூறியது கூறல் அன்றோ? என்னில்: 'எங்களுக்கே இறை' என்று உறுதியான தேற்றம் தோற்றச் சொல்லவேண்டுவது ஆழ்வார்க்கு விவட்சிதமாதலால், இரட்டித்துச் சொல்லப்பட்டதென்க. 'பிறர்க்கும்'எமக்கும் பொதுவான சுவாமியல்லன் எமக்கே அசாதாரண சுவாமி' என்கிற இதற்குக் கருத்துயாதெனில்: பரவாசு தேவனா யிருக்கும் இருப்பு நித்திய முத்தர்களின் அநுபவத்திற்காக; வியூக நிலை பிரமன் முதலானோருடைய கூக்குரல்

9. பெரி. திரு: 9. 10 1

கேட்கைக்காக. இராமகிருஷ்ணாதி விபவாவதாரங்கள் அக்காலத்திலிருந்தவர்கள் யொழிந்தன; அந்தர்யாமியா யிருக்கும் இருப்பு பிரகலாதாழ்வான் போல்வார்க்குப் பயன் அளிக்கும். அர்ச்சாவதார நிலையொன்றே எமக்குப் பிழைப்பு. சம்சாரிகளின் முகங்கொடுக்கைக்காக அன்றோ இஃது ஏற்பட்டது? குருடர்க்கு ஏற்பட்ட இடத்திலே விழி கண்ணர் புகுரலாமோ? விழிகண்ணர்க்கு ஏற்பட்ட இடம் குருடர்க்கு உதவுமோ? ஆகையாலே எமக்கே அசாதாரண சேவியமாக வாய்த்தது திருக்கோட்டியூர் நிலை என்கின்றார். பதியே பரவித் தொழும் தொண்டர்களனை வரையும் ''எங்கள்'' என்றதில் கூட்டிக்கொள்க.

94

காவல னிலங்கைக் கிறைகலங் கச்சரம்
செலவுய்த்து, மற்றவன்
ஏவலம்தவிர்த் தான்என்னை யாளுடை எம்பிரான்
நாவலம்புவி மன்னர் வந்து வணங்க
மாலுறை கின்றதிங்கென
தேவர் வந்திறைஞ்சும் திருக்கோட்டி யூரானே[10]

[காவலன்—'நானே காப்பவன்' என்று அகங்காரம் கொண்டிருந்த; கலங்க-முடியும் படியாக; சரம்- அம்பு; செலஉய்த்து— செலுத்தி; ஏவலம்— அம்பு செலுத்தும் சாமர்த்தியத்தை; தவிர்த் தான்—தொலைத்தவனும்; நாவலம்—சம்புத் தீவிலுள்ள; வந்து—தெரிந்து வந்து; வணங்க ஆச்சரியிக்க]

திருக்கோட்டியூர் விஷயமான திருமொழியில் ஒரு பாசுரம். ''சர்வேசுவரன் ஒருவன் உளன் என்றும், அவனுக்கு

10. பெரி. திரு. 9. 10: 6

அடிமைப்பட்டு உய்தல் நம்முடைய இயல்பு என்றும் உணரப் பெறாமல் தானே சர்வ இரட்சகனாக அகஸ்கரித்திருந்த இராவணன் 'இன்றளவும் நாம் அநுபவியாதிருந்த அவமானம் இன்று அநுபவிக்கலாயிற்றே! இன்னமும் என்னவாகுமோ?' என்று மனந்தளும்பும்படியாக அவன் மீது அம்புகளைப் பொழிந்து அவனுடைய மிடுக்கைத் தவிர்த்தவனும், இப்படிப்பட்ட வீரச்செயலுக்கு என்னைத் தோற்பித்து அடிமை கொண்டருளினவனுமான எம்பெருமான் திருக்கோட்டியூரான்'' என்கின்றார்.

[நாவலம் புவிமன்னர்...] உப்புக்கடல், கருப்புக்கடல், கள்ளுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நீர்க் கடல் என்ற ஏழுகடலாலும் சூழப்பெற்ற ஏழுதீவுகளும் முறையே ஜம்பூத்வீபம், ப்லட்சத்வீபம், சால்மலி த்வீபம் குசத்வீபம், க்ரௌஞ்ச த்வீபம், சாகத்வீபம்,புஷ்கர த்வீபம் என்ற பெயர்களால் வழங்குகின்றன. இவற்றுள் ஜம்பு த்வீபம் மற்றஎல்லாத் தீவுகளுக்கும் நடுவில் உள்ளது. இதன் நடுவில் மேரு என்னும் பொன்மலையுள்ளது. இதனைச் சுற்றியுள்ள இளாவ்ருத வருஷத்தில் (ஒருநாடு) படைக்கப் பெற்றுள்ள நான்கு மலைகளைச் சுற்றி நாற்றிசையிலும் நான்கு மரங்கள் உள்ளன; அவற்றிலொன்றாகிய நாவல் மரம் ஜம்புத்வீபமென்று இத்தீவின் பெயர் வழங்குதற்குக் காரணமாயிற்று என்று புராணம் கூறும் (ஜம்பு-நாவல்) மற்றைத் தீவுகள் கர்மபலன் அநுபவத்திற்கே உரியவையாகையாலும், இத்தீவு பலன்களுக்குச் சாதனமான கருமங்களை அநுட்டித்தற்கு உரிய இடமாகையாலும் இத்தீவு ஒன்றே சிறப்புறும். இத்தீவில் நவம கண்டமான பாரத வருஷத்துக்கன்றோ இவ்வுரிமை உள்ளதென்னில்: ஆம்; இத்தீவுக்குக் கண்டம் முக்கியமானவைபற்றி அச்சிறப்பு இத்தீவுக்கு உள்ளதாகச் சொல்லக் குறை இல்லை. இத்தீவில் மானிடப் பிறவி படைப்பது அரிய பெரிய தவங்களின் பயனாம் என்பர். அப்படிப்பட்ட தவங்களைச் செய்து இத்தீவில் பிறந்து அரசர்களாக வாழ்பவர்கள்

திருக்கோட்டியூரை வந்து வணங்காதிரார்கள்; அவர்கள் வணங்குவதைக் கண்ட இந்திராதிதேவர்கள் இவ்விடத்தில் தேவசந்நிதானம் உண்டென்று உணர்ந்து தாங்களும் வந்து இறைஞ்சுவார்களாம்.

பத்தாம் பத்து

95

'ஒரு நல் சுற்றம்:'[1] (அவதாரிகை) ஆழ்வாருக்கு இவ்விருள்தருமா ஞாலத்தில் இருப்புசகிக்க முடியாதாகித் (அஸ்ஹ்யமாகி) திருநாடு செல்ல விரைவு உண்டாயிற்று. எம்பெருமான் இவருக்கு இவ் விபூதியில் சில திருப்பதி களைக் காட்டி, இவர்தம் ஆசையை மறைத்திட, இவரும் திவ்விய தேசாநுபவத்தாலே களித்துப் பொழுது போக்கி நின்றார். இனி, பழைய ஆசையே இவருக்குத் தலை எடுத்தது; அஃதாவது இக் கொடு உலகினின்றும் நலமந்த மில்லாததோர் நாடாகிய பரமபதத்திற்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பம் கிளர்ந்தது. 'எம்பெருமான் இனி நம்முடைய எண்ணத்தைத் தலைக்கட்டியல்லது நில்லான்' என்ற உறுதியும் தோன்றிற்று. பயணம் புறப் படுவதாகவே பாரிப்புக்கொண்டார். பிறந்தகத்தில்நின்றும் புக்ககம் புறப்படுகின்ற பெண்பிள்ளை தான் நெடுநாள் வாழ்ந்த இடத்தில் தன்னோடு மிகவும் முகம் பழகியிருந்த மிக்க அன்புடைய சில பெண்பிள்ளைகளைச் சந்தித்து அவர்களிடம் பணிந்து,'நங்காய் நான்போய், வருகின்றேன்; மாதே, நான் போய் வருகின்றேன்' என்று சொல்லி வரச் சில குறடுகள் ஏறியிறங்குமாபோல, இவ்வாழ்வாரும் தம் புக்கமாகிய பரமபதத்தின் பயணத்திற்குப் பூர்வாங்கமாகத் தமது மிக்க ஈடுபாட்டிற்கிடமான சில திருப்பதிகளிலே

1. பெரி. திரு. 10.1

சொல்லிக் கொள்வதாக நுழைந்து புறப்படுகின்றார் இத் திருமொழியில்.

மற்ற திருமொழிகள் எல்லாவற்றையும் விட இத் திருமொழி மிகச் சிறப்பாக இருக்கும்; ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டிரண்டு திருப்பதிகளாக (நிகமனப் பாசுரம் தவிர்த்து) ஒன்பது பாசுரங்களிலே பதினெண் திருப்பதிகளை அநுபவிக்கும் அழகு மற்றைத் திருமொழியொன்றுக்கும் இல்லையன்றோ?

96

'இரக்கமின்றியெங்கோன்'[2]: (அவதாரிகை) சென்ற திருமொழியில் நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்திற்குச் செல்ல வேண்டும் என்ற இவருடைய விருப்பத்தை நிறைவேற்றாமல் எம்பெருமான் இன்னும் இவரைக் கொண்டு உலக நன்மையின் பொருட்டு இன்னும் பல பாசுரங்கள் பாடுவிக்கத் திருவுள்ளம் பற்றித் தனது திவ்விய அவதார சேஷ்டிதங்களை அநுபவிக்கத் தக்கனவாகக் காட்டி கொடுத்தான். அவற்றில் இலங்கைப் போர்க்களத்தில் இராவணன் உயிர் துறந்த பின்னர் மாண்டு போனவர்களுள் மிகுந்திருந்த அரக்கர்களும் தங்கள் தங்கள் உயிருக்கு மன்றாடும் நிலைமையில் பெருமாளுடைய வெற்றிச் செல்வத்தை எடுத்துரைத்துப் பாசுரமிட்டு மகிழ வேண்டும் என்ற ஆசை ஆழ்வாருக்குக் கிளர்ந்தது. அந்த வெற்றியைத் தம் வாயாற் பேசாமல் அரக்கர் பேசும் பாசுரமாக அருளிச் செய்கின்றார். இத் திருமொழிப் பாசுரங்கள் எல்லாம் 'தடம் பொங்கத்தம் பொங்கோ' என்ற முடிவினைக் கொண்டு இறுகின்றன. ''தோற்றவர்கள் தோல்வியாலே பறையடிக்க ஆடுவதொரு கூத்துண்டு; அந்தசப்தாநுகாரம்'' என்று பெரிய வாச்சான் பிள்ளையும் அருளிச் செய்துள்ளார்.

2. பெரி. தி௫. 10.2

97

இரக்க மின்றியெங் கோன்செய்த தீமை
இம்மையே யெமக் கெய்திற்றுக் காணீர்
பரக்க யாமின் றுரைத்தேன் இராவணன்
பட்ட னன் இனி யாவர்க் குரைக்கோம்
குரக்கு நாயகா காண்! இளங் கோவே?
கோல வல்வி லிராம பிரானே!
அரக்க ராடழைப் பாரில்லை நாங்கள்
அஞ்சி னோந்தடம் பொங்கத்தம் பொங்கோ[3]

[இரக்கம்—ஈர நெஞ்சு; எங்கோன்—இராவணன்; தீமை—அபசாரம்; பரக்க—விரிவாக; குரக்கு நாயகர்—வாநர சேனாதிபதிகள்; இளங்கோ—இளைய பெருமாளே; ஆடு அழைப்பார்—வெற்றியைச் சொல்லிக் கூவுவார்.]

வானர வீரர்களையும் இளைய பெருமாளையும் விளித்து இலங்கையசுரர்கள் தங்கள் தோல்வியும் இவர்கள் வெற்றியும் தோற்றச் சொல்லிக் கூத்தாடுகின்றனர்.

அரக்க ராட அழைப்பாரில்லை: 'இராக்கதரில் இனி ஆடுபோல் கூப்பிடக் கடவாரில்லை' என்று நஞ்சீயா நம்பிள்ளைக்குப் பொருள் பணிக்க, அதனை நம்பிள்ளை கேட்டு 'ஆடு என்று வெற்றிக்கும் வாசகமாதலால் இந்த இராக்கத சாதியில் வெற்றி சொல்வாரில்லை; (அதாவது) தோற்றோம் தோற்றோம் என்று தோல்வி சொல்ல வல்லார் உண்டேயொழிய வெற்றியைச் சொல்லிக்கொள்ள வல்லாரில்லை—என்று பொருள் கூறலாகாதோ?' என்ன, நஞ்சீயரும் இதைக் கேட்டருளி 'இது பொருந்தும் பொருள்; இப்படியே சொல்லிக் கொள்ள அமையும்' என்று நியமித்தருளினராம்.

---

3. பெரி. திரு. 10.2:1

98

புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப் போதில்
பொங்கெ ரிக்கிரை கண்டவன் அம்பின்
சரங்க ளேகொடி தாயடு கின்ற
சாம்ப வானுடன் நிற்கத் தொழுதோம்
இரங்கு நீயெமக் கெந்தைபி ரானே!
இலங்கு வெங்கதி ரோன்றன் சிறுவா!
குரங்கு கட்கர சே!எம்மைக் கொல்லேல்!
கூறி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ![4]

[புரங்கள் — முப்புரங்கள்; மாத்திரை—கணப் பொழுது; எரிக்கு—நெருப்புக்கு; அடுகின்ற—பொசிகின்றான்; உடனிற்க—புருஷகாரமாக நிற்க; இரங்கு—இரங்கியருள்க]

சாம்பவானைப் புருஷகாரமாகக் கொண்டு சுக்கிரீவ மகாராசரைச் சரணம் புகுகின்றார்கள்.

புரங்கள் மூன்றும் பொங்கெரிக்கிரை கண்ட; இதில் உள்ள இதிகாசம். முற்காலத்தில் தாரகாசுரனுடைய புதல்வர்கள் ஆன வித்யுமாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் மூவரும் மிக்க தவம் செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று வானத்துப் பறந்து செல்லும் தன்மை வாய்ந்த மூன்று பட்டணங்களை அடைந்தனர். மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த விடங்களில் பறந்து சென்று பல விடங்களின் மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வந்தனர். இத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர், முனிவர் முதலானாருடைய வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திர சூரியர்களைத் தேர்ச் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகா மேருவை

4. பெரி. திரு. 10.2:9

வில்லாகவும், ஆதிசேடனை வில்நாணாகவும், திருமாலை வாயுவாகிய சிறகமைத்து அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக் கொண்டு போருக்குத் தயாராகச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பினின்று உண்டான தீயினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்.

இலங்கு வெங்கதிரோன்றன் சிறுவா! : இதிலுள்ள இதிகாசம்: மேருமலையில் நான்முகம் யோகம் பயின்று கொண்டிருக்கையில் அவர் கண்களில் நீர்த்துளி ததும்பியது; அதை அவர் கையாலெடுத்துக் கீழே எறிந்தனர். இந்நிலையில் அஃது ஒரு குரங்காக மாறியது. அக்குரங்கு நான்முகனுக்கு ஒப்பான மகிமையும் மிக்க வேகமும் உடையோனாகி அம்மலையில் மலர்களும் கனி வகைகளும் நிறைந்த மரங்களடர்ந்த வனங்கள்தோறும் தாவித் திரிந்து விளையாடிக் காலங் கழித்தது. அஃது ஒருநாள் நாவறண்டு நிற்வேண்டி அம்மலையின் வடபால் சென்றது. அங்கு ஓர் தடாகத்தைக் கண்டு அதன் கரையில் நின்று தண்ணீரை எட்டிப் பார்த்தது. அதனுள் தன் நிழல் தோன்றுவதைக் கண்ணுற்றுத் தனக்குப் பகையான மற்றொரு வானரம் அக்கயத்தினுள் குடிகொண்டு தன்னை இகழ்கின்றது எனக் கருதியது; அதனை வெல்வான் வேண்டி அம்மடுவில குதித்தது. குளத்தில் விழுந்து மெல்ல நீந்திக் கரையேறியதும் அஃது ஓர் அற்புதமான அணங்காக மாறியது. காண்போர் மனத்தைக் கவரவல்ல பொற்கொடியென ஒரு பெண்மணி தனது வடிவழகினால் எல்லாத் திசைகளையும் ஒளிபெறச் செய்து கொண்டு அப் பொய்கைக் கரையில் நிற்குங்கால் தேவேந்திரன் நான்முகனிடம் சென்று அவரையடிபணிந்து பூசித்துத் திரும்பி அவ்வழியாக வந்து கொண்டிருந்தான். அதே சமயம் சூரிய பகவானும் எங்கும் சுற்றித் திரிந்து இந்த அழகி நிற்குமிடத்தருகே வரலாயினன். இந்த இரண்டு தேவர்களும் அந்தப் பெண்மணியை ஒரே காலத்தில் கண்ணுற்றுக் காமப் பரவசர்களாகி மெய்மறந்து

மனங் கலங்கி நின்றனர். உடனே இந்திரனது விந்து வெளிப்பட, அதனை அவன் அவளது தலையில் விழுமாறு செய்தனன். அஃது அவ்வாறு முடிமீது விழாது வாலில் வீழ்ந்தது. தேவர்களின் விந்து ஒருபொழுதும் வீணாவ தில்லை யாதலின், உடனே அது மிக்க பலசாலியான ஒரு வானரமாக மாறியது. வாலினின்று தோன்றிய காரணத் தால் அது வாலி என்று பெயர் பெற்றது. ஆதித்தனும் அவ்வாறே அனங்கனுக்கு வசமாகித் தனது விந்துவை அவளது கழுத்தில் வீழ்த்தினான். க்ரீவையில் (கழுத்தில்) வீழ்ந்த அவ்விந்து சுக்கிரீவன் எனப் பெயர் பெற்ற வானர மாகி விட்டது. இந்த வரலாறு உத்தர ராமாயணத்தில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது.

99

ஏத்துகின்றோம் நாத்தழும்ப;[5] (அவதாரிகை) : இத்திரு மொழியும் இலங்கை அரக்கர்களின் பாசுரமாகவே செல்லு கின்றது. தோன்றவர்கள் தங்கள் தோல்விக்கு ஈடாக ஆடுவதொரு கூத்துக்குக் **குழமணிதூரம்** என்று பெயர் போலும். இக்கூத்தை யாடுகின்ற அரக்கர்களின் நிலைமை யிலே நின்று இராமனுடைய வெற்றியைப் பேசி அநுபவிக் கின்றார் ஆழ்வார். 'பொங்கத்தம் பொங்கோ' (105) வுக்கும் இத்திருமொழியில் வரும் 'குழமணி தூரம்' என்பதற்கும் இலக்கணமும் இலக்கியமும் இந்த ஆழ்வாரின் அருளிச் செயல்களே போலும்.

100

சந்த மலர்க்குழல் தாழத்
தானுகந் தோடித் தனியே
வந்துஎன், முலைத்தடந் தன்னை
வாங்கிநின் வாயில் மடுத்து,

---

5. பெரி. திரு. 10.2:1

நந்தன் பெறப்பெற்ற நம்பீ!
நானுகந் துண்ணும் அமுதே,
எந்தை பெருமானே! உண்ணாய்
என்னம்மம் சேம முண்ணாயே.[6]

[சந்தம் மலர்—செவ்விப் பூக்கள்; குழல்—திருக் குழல் கற்றை; தாழ—அலைய; தனியே—பலராமனை விட்டுத் தனியே; உகந்து ஓடி வந்து—மகிழ்ச்சியுடன் (என்பக்கல்) ஓடி வந்து; வாங்கி—பிடித்து; உண்ணாய்—உண்ண வேண்டும்; வாயில் மடுத்து—உன் வாயில் நிறைத்து; அமுதே—அமுதமாயிருப்ப வனே; சேமம்—சேமத்தளிகை]

"கண்ணபிரானே, குழலலைய ஓடி வந்து என் முலைகளை உன்வாயில் மடுத்துப் பாலுண்ண வேண்டும்" என்று அழைக்கின்றாள். இங்கு ஆழ்வார் தன்னை யசோதை நிலையிலிருந்து கொண்டு பேசுகின்றாள். "தன்னேராயிரம் பிள்ளைகளோடு" இவன் தளர் நடையிட்டு விளையாடுகிறவனாகையாலே அவர்களையும் பலராமனையும் விட்டுத் தனியே வரவேண்டு மென்றழைக்கின்றாள். 'முலைத் தடம் தன்னை வாங்கி நின்வாயில் மடுத்து'[7]— என்ற ஓர் ஆசை யசோதைக்கு இருந்தது போலும்; தன் கையாலே முலையை எடுத்துக் கண்ணபிரானது திருப் பவளத்தில் வைப்பதைக் காட்டிலும் அவன் தானே பிடித்து வாயில் மடுத்து உண்ணப்பெறில் அதிலே ஒரு தனிப்பட்ட இன்ப உணர்வு கண்டனள் போலும்.

'நந்தன் பெறப் பெற்ற நம்பி!'. 'நந்தன் பெற்ற நம்பீ,' என்றால் போதாதோ? 'பெறப் பெற்ற' என்பானேன்?

6. பெரி. திரு. 10.4;1
7. பெரியாழ். திரு. .1;1

என்னில்: ஈசுவரனுக்கு இது கிடைத்ததற்கரியது. கிடைத்தல் என்பது தோற்றுவதற்காகவே இப்படி அருளிச் செய்யப் பெற்றது என்பர். நந்த கோபன் பிள்ளையாகப் பெறும்படியான பாக்கியம் பெற்றவனே! என்றவாறு. இவனுடைய பிறப்பினாலே நந்தகோபனுக்கு ஏற்றம்; நந்தகோபனுக்குப் பிள்ளையாகப் பிறந்ததனால் இவனுக்கும் ஏற்றமன்றோ? என்று நம் ஆசார்யர்கள் நிர்வகிக்கிறபடி. எம்பெருமானுடைய காரணமில்லாத அருளுக்கு இலக்காகப் பெற்ற ஏற்றம் 'நந்தன்' என்ற சொல்வடிவத்திலேயே விளங்கும். மெய்யாகவே இவனை மகனாகப் பெற்ற வசுதேவனை எடுத்துக் கொள்வோம்; வசுதேவன் என்றால் பணத்தால் விளங்குபவன் என்று பொருள். நந்தன் என்றால் ஆனந்தப் படுபவன் என்று பொருள். உலகில் பணக்காரனாகஇருப்பவனுக்கெல்லாம் ஆனந்தமுடைமை இன்றியமையாததன்று; பணக்காரன் துக்கமுடையவனாகவும் ஏழைஆனந்தமுடையவனாகவும் இருக்கக்;காண்கின்றோம். வசுதேவன் கண்ணபிரானைப் பெறுதற்கு நெடுங்காலம் உபாயாநுஷ்டானம் செய்தவனாதலால் கண்ணனுடைய முகத்தைக் கண்ட மாத்திரத்தில் அவனுடைய நோன்பின் பலன் முற்றுப் பெற்றதாகி அவன்தானே பிள்ளையைத் தலைமேல் சுமந்துகொண்டுபோய் நந்தகோபலனிடத்தில் விட வேண்டியதாயிற்று. நந்தகோபன் ஒருவித உபாயாநுஷ்டானத்தையும் நெஞ்சிலும் நினையாதவனாயிருந்தவனாதலால் அவனுக்கு ஆனந்தமே நித்தியமாகச் சென்றது. அப்படிப் பட்டவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தது எம்பெருமான்றனக்கு ஆனந்தம். பிறப்பே காரியமாக இருக்கும் சம்சாரிக்குப் பிறவாமை ஏற்றமாவது போல, பிறவாத பெருமானுக்கு பிறப்பு ஏற்றமாகின்றதென்னும் சுவைப் பொருளும் இங்கு உணரத்தக்கது. தனக்குக் கிடையாததைப் பெறுகையன்றோ அவனவனுக்கு ஏற்றம்?

பதினோராம் பத்து

101

அன்னை முனிவதும் அன்றி
லினகுரல ஈர்வதும்
மன்னு மறிகட லார்ப்ப
தும்வளை சோர்வதும்
பொன்னங் கலையல் அன்ன
மென்னடைப் பூங்குழல்
பின்னை மணாளர் திறத்த
மாயின பின்னையே[1]

[முனிவது—சீறிச் சொல்வது; ஈர்வதும்—இம்சிப்பதும்; மன்னும்—எப்போதும்; மறிகடல்—அலை மடியப்பெற்ற கடல்; ஆர்ப்பது—ஒலிப்பது; வளை சோர்வது—கைவளையல்கள் கழல்வது; பொன்கலை— பொன்னாடையணிந்த; பின்னை—நப்பின்னை—மணாளர்; நாயகர்]

மகள்பாசுரம்: "நான் பகவத்விஷயத்தில் கைவைப்பதற்கு முன்னர் தாய் என்னை ஒருசொல்லும் பொடிந்து சொல்லியறியாள்; அன்றில் பறவையின் குரல் முன்பு கேட்கப்படும் போது செவிக்கு மிக இனிதாக இருந்தது; அப்போது கடலோசைதானும் காது கொடுத்துக் கேட்கக் கூடியதாக இருந்தது; உடலும்பூரித்து வளைகள் நெருக்குண்டிருந்தன. இப்போது அநுபவிக்கின்ற கஷ்டங்களில் ஒன்றும் நாம் முன்பு அநுபவித்ததே இல்லை. பின்னை மணாளரான எம்பெருமான் திறத்திலே நெஞ்சு செலுத்தப்பெற்ற பின்பே தாய் சீறிச் சொல்லும் படியாகவும் அன்றிலின் குரல் நலியும்

1. பெரி, திரு. 11. 2: 5

படியாகவும் கடலோசைக்கு நோவுபடும்படியாகவும் கை வளைகள் கழலும்படியாகவும் பெற்றேன்'' என்கின்றாள்.

வியாக்கியான ஸ்ரீசூக்தி: 'பூர்வபரங்களுக்குச் சேர்த்தி போராதாகிலும் பிள்ளையுறங்கா வில்லிதாசர் 'பின்னை மணாளர் திறத்தோமான பின்பன்றோ இவை இப்படி யாயிற்று: சாமான்யனென்று இடுமீடெல்லாம்இடவமையும் என்பாரைப்போலே அவரோடே ஒருசம்பந்தம் சொல்லி நலிகிறவை நலிந்தாலென்? என்பாராம்'' என்பது.

பாதக பதார்த்தங்களால் நோவுபட்டு வருந்திப் பேசுகின்ற இத்திருமொழியிலே இப்பாசுரத்திற்குப் பிள்ளை யுறங்கா வில்லிதாசர் அருளிச் செய்யும் கருத்து சந்தர்ப்பத் தோடு அவ்வளவு பொருந்தாதாயினும் சுவையுடைத்தா யிருக்கும். அவர் அருளிச் செய்யும் கருத்து என்? எனில்: அன்னை முனிவதும் அன்றிலின் குரல் ஈர்வதும் மன்னுமறி கடலார்ப்பதும் வளை சோர்வதும் நாம் பின்னைமணாளர் திறத்திலே ஈடுபட்டிருக்கிறோமென்கிற காரணத்தில் தானே; அந்தக் காரணம் பற்றியாகில் அவை நமக்கு உத்தேச்யமே—என்பதாம்.

''சாமான்யனென்று இடுமீடெல்லாம...என்பாரைப் போலே' என்ற வியாக்கியானத் தொடரிலுள்ள ஐதிகம். முற் காலத்தில் திருமாலிருஞ்சோலையில் சாமானியரென்றும் சோழியரென்றும் இருவகுப்பினர் சந்நிதி கைங்கர்யாதி விஷயமாக அடிக்கடிப் பிணக்குண்பர்; அதனால் ஒருவர்க் கொருவர் கைகலந்து வலிதாக அடித்துக் கொள்ளுதலும் உண்டாம்; ஒரு சமயத்தில் மிக இருட்டான இடத்தில் (சந்நிதி வலம் வரும்போது) கைகலந்து போர்நடக்கையில் ஒருசோழியர் மற்றொரு சோழியரை வலிதாகப் புடைத்தார்; புடைப்பவருடைய மிடற்றோசையைக் கண்டிருந்த புடையுண்பவர் 'ஐயோ! நான் சோழியனா யிற்றே! என்னை எதுக்கு அடிக்கின்றீர்!' என்று கதற, அது கேட்ட அவர், 'அப்படியா? தெரியாது அடித்துவிட்டேன்'

சாமானியரென்று மயங்கி அடித்து விட்டேன்' என்று கூற, அதுகேட்ட இவர் 'அப்படியாகில் இன்னமும் அடியும்; சாமானியனென்று என்னை எவ்வளவு அடித்தாலும் அத்தனையும் எனக்கு உத்தேசயமே' என்றாராம். அது போல பகவத் விஷயத்தில் ஈடுபட்டேன் என்கின்ற காரணத்தினால் அன்னை முனிவது முதலான கஷ்டங்கள் எனக்கு நேர்வனவாகில் தாராளமாக நேரட்டும் என்ப தாகப் பிள்ளையுறங்கா வில்லிதாசருடைய தாத்பரியம் காண்க. இதனால பகவத் விஷயத்தில் ஆழ்வார் நாயகிக்கு உள்ள காதலின் உறைப்பு வெளியாகும்.

102

பேயிருக்கும் நெடுவெள்ளம் பெருவிசும்பின்
மீதோடிப் பெருகுகாலம்
தாயிருக்கும் வண்ணமே யும்மைத்தன்
வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்
போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வம்
கொண்டாடும் தொண்டீர், பெற்ற
தாயிருக்க மணைவெந்நீர் ஆட்டுதிரோ
மாட்டாத தகவற் றீரே![2]

நெடுவெள்ளம்—மகாப் பிரளயம்; பெருவிசும்பு—ஆகாயம்; பெருகுங் காலம்— பிரவகித்த காலத்திலே; தாய் இருக்கும் வண்ணமே— பெற்ற தாய் போல(ப்பரிந்து); உய்யக் கொண்டான்— உய்வித்தருளின பெருமான்; போயிருக்க— வெறுக்கும் படியாக; புது தெய்வம்—மற்றொரு சிறு தெய்வத்தை; மணை வெந்நீர் ஆட்டுதிரோ— மணைக்

2. பெரி. திரு. 11: 6: 6

கட்டைக்கு உபசாரம் செய்கின்றீர்கள்;
தகவு—இருக்கம்]

''மனிதர் முதலானோர் ஒருவரும் இல்லாமையாலே பேய் பிசாசுகளே இருக்கும் படியாக மகாப்பிரளய வெள்ளம் அண்டகடாகத்தின் மேலும் சென்று பெருகப் புகுந்த காலத்தில், பெற்ற தாய்போலப் பரிந்து வந்து விஷயங்களையெல்லாம் வாரித் திரட்டித் திருவயிற்றிலே வைத்து உய்விப்பித்தவரான எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும்படியாக அவனைத் துதித்தல் பிராப்தமாயிருக்க அது செய்யாமல் அவன் திருவுள்ளம் வெறுக்கும்படியாகச் சில சிறு தெய்வங்களை நீங்கள் கொண்டாடுவது பெற்ற தாய்க்கு ஓர் உபசாரமும் பண்ணாமல் விட்டிட்டு அறிவற்ற தொரு மணைக் கட்டைக்கு உபசாரம் பண்ணுவது போலிரா நின்றது'' என்று இழித்துரைக்கின்றார்.

பெற்ற தாயிருக்க மணைவெந்நீ ராட்டுதிர்: 'மணை' என்றது அசேதனப் பொருள்களையெல்லாம் சொன்ன படி. 'வெந்நீராட்டுதிர்' என்றது உபசாரங்கள் பலவற்றை யும் உள்ளடக்கிக் கூறியதாகும். 'மணை வெந்நீர் ஆட்டு மாப்போலே செய்கின்றீர்' என்று சொல்லவேண்டுமிடத்து (அவாய் நிலையாக) உவமையை உள்ளடக்கிச் சொல்லி யிருப்பதன் கருத்து யாதெனில்; சிறு தெய்வங்கள் வழிபாடு செய்வதற்கும் மணை நீராட்டுவதற்கும் யாதொரு வேறு பாடும் இல்லை. 'இதுதான் அது, அதுதான் இது' என்ற இரண்டுக்குமுள்ள பேதமின்மையைக் காட்டினபடியாம். மகளிர் கருவுயிர்த்தவுடனே, பெற்ற அத்தாயையும் குழந்தையையும் நீராட்டுவித்தல் மலைநாட்டு வழக்கமாக முற்காலத்தில் இருந்ததாம். கருவுயிர்த்தவுடன் தாயை நீராட்டுவது பலவகை இன்னல்கட்குக் காரண மாவதால் அத்தாய்க்குப் பதிலாக ஒரு மணைக் கட்டையை நீராட்டுவிப்பது இடைக்காலத்து வழக்கமாக இன்றைக்கும் நடைபெற்று வருகின்றதாம். இதனைத் திருவுள்ளம்பற்றி

ஆழ்வார் அருளிச் செய்துள்ளதாகச் சில பெரியோர்கள் பணிப்பர். நம்மாழ்வாரும் திருவாசிரியத்தில் "ஈன்றோ ளிருக்க மணைநீராடி"3 என்று அருளிச் செய்திருத்தல் ஈண்டு நினைக்கத்தக்கது.

திருநெடுந்தாண்டகம்

103

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்தாய்
செந்நிறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி
அந்தரத்தில தேவர்க்கும அறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால மறவா தென்றும்
வாழுதியேல வாழலாம் மடநெஞ்சமே[1]

[முதல்வன் தன்னை—காரணபூதனாய்; கால்—காற்று: செம்திறத்த—செவ்விய; திங்கள்—சந்திரன்; ஞாயிறு — சூரியன்; அந்தி—முடிவிலே; மந்திரத்தை — சர்வேசுவரனை; மறவாது — இடை விடாது; என்றும்—எப்பொழுதும்]

எம்பெருமானைத் தாம் அநுபவித்ததில் மனநிறைவு பிறவாமையால் ஒருபோதும் தன்னைவிட்டு பிரியாத திருவுள்ளத்தைத் தன்னோடு சேர்த்து அநுபவிக்குமாறு வேண்டுகின்றார் ஆழ்வார்.

செந்நிறத்த தமிழோசை வடசொல்லோடு : ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தை முன்னே சொல்லித் தமிழைப்

3. திருவாசிரியம்—6
1. திருநெடுந். 4

பின்னே சொல்ல பிராப்தமாயிருக்க, தமிழை முன்னே சொன்னதற்குக் காரணம் என்? எனில்; தமிழ் வேதமானது வடமொழி வேதம்போலல்லாமல் சர்வாதிகாரமாயிருத்த லாலும்,

செய்யதமிழ் மாலைகள்நாம்
தெளிய ஓதி
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே[2]

என்ற வேதாந்த தேசிகரின் திருவாக்குப்படி தெளிவாகப் பொருள்களை விளக்குதலாலும், ஸ்வரூபத்திற்குச் சேர்ந்த வையும் சேராதவையுமாகிய கண்ட பொருள்களையும் பேசுகின்ற வடமொழி வேதம் போலல்லாமல், ஸ்வரூபத் திற்குச் சேர்ந்தவற்றையே பேசுதலாலும் இன்னமும் இப்படிப் பட்ட தனிச் சிறப்பைக் கொண்டு சமஸ்கிருத வேதத்தினும் தமிழ் வேதம் சிறந்ததென்பது விளங்க முந்துறச் சொல்லப் பட்டதாகக் கொள்க. இன்னும் வட மொழி 'முரட்டு சமஸ்கிருதம்' என்று பேர் பெற்றிருக்கும்; இஃது அங்ஙனமல்லாமல் 'ஈரத்தமிழ்' என்றும் 'செவிக்கினிய சொல்' என்றும் சிறப்புறுதல்பற்றி 'செந்திறத்த' என்று சிறப்பிக்கப்பட்டது.

ஐதிதம்—1. இந்நூல் பாசுரம் 183. (திருவாய்.5.8:7) இல் காண்க.

ஐதிகம்—2 இந்நூல் பாசுரம் 244 (திருவாய். 9.2:8) இல் காண்க.

104

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒணதுறைநீர் வெஃகா வுள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய், உலக மேத்தும்

2. தே.பி, 40

காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதென் நெஞ்சி னுள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே![3]

[நீரகம், ஊரகம், காரகம், கார்வானம்—இவை காஞ்சி உலகளந்த பெருமாள் சந்நிதியில் உள்ள திவ்விய தேசங்கள்; நிலாத்திங்கள் துண்டம் என்ற இது காஞ்சி ஏகாம்பர நாதர் கோயில் திருச்சுற்றில் உள்ளது; கள்வன்—இது காஞ்சி காமாட்சியம்மன் திருக்கோயி லினுள் உள்ளது; நெடுவரை—திருவேங்கட மலை; வெஃகா என்பது சொன்னவண்ணம் செய்த பெருமாள் சந்நிதி]

இங்கு ஆழ்வார் பல திருப்பதிகளின் திருநாமங்களைச் சொல்லிக் கதறுகின்றார்.

நீரகத் தாய் : *நீரின் இயல்பை உடையவனான எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல்பற்றி இத் தலத்திற்கு '*நீரகம்*' என்று திருநாமமாயிற்று. இவ்விடத்து எம்பெருமானை 'நீரகத் தாய்!' என விளிக்கின்றார்.*

நீர்க்கும் எம்பெருமானுக்கும் இயல்பாக உள்ள ஒற்றுமை:

(1) *நீர் பள்ளத்திலே பாயும்; மேட்டிலிருந்து பாய்வது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்த வரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோர் என்று மார்பு நெறித்திருப்போரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும்போது ஞானத் தால் சிறந்தோம் என்றிருக்கும் வீடுமரையும், குலத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொரு*

3. . திரு நெடுந். 8

ளாக மதியாமல் இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவ ராகத் தம்மைக் கருதியிருந்த விதுரருடைய திருமாளிகை யிலே தானாகவே சென்று அமுது செய்தருளினான் கண்ண பிரான். ஆகவே பள்ளத்தையோடிப் பெருங்குழியே தங்கும் இயல்பு ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமானின்றி ஒரு காரியமும் ஆகாது. ஒருவன் விரும்பினதை வேறொருவன் விரும்பாதபடி உலகம் வெவ் வேறு விருப்பத்தையுடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியேயாக வேண்டும்; அதுபோலவே எம்பெருமா னையும்.

(3) நீருக்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி. எம் பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியாயிருக்கும். "நீரிலே நெருப்புக்கிளருமாப்போல குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந் தால்"[4] என்ற முமுட்சுப்படி திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேண்டும். "தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரண் இல்லை"[5] என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கி வைக்கவும் ஓட விடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் இயல்பும் அப்படியே; ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்துப் புசிக்க நின்றான் எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூது நடந்தான்.

---

4. முமுட்சு—127.
5. பெரு.திரு. 5:1

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயுமிருக்கும்; தனிப்படத் தானே குடிக்கத்தக்கது மாயிருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்துவம் உபேயத் துவம் என்ற இரண்டு தன்மைகள் உண்டல்லவா? எம்பெரு மானைக் கொண்டு வேறு பலன்களைப் பெறவிரும்புவாரும் எம்பெருமான் தன்னையே புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) அன்னம் முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைச் சகிக்கும்; அதாவது காய்கனி கிழங்கு வேர் பலா முதலிய வற்றால் உடலைப் பாதுகாக்கலாம்; நீரானது அப்படி பிரதிநிதியொன்றையும் சகிக்க மாட்டாது; நீருக்கு நீரே வேண்டும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணாநுசந்தாநத்தாலும் போது போக்குதல் அரிது. "ஒரு நாள் காண வாராயே"[6] "அடியேன் தொழ வந்தருளே"[7] என்று பிரார்த்தித்துப் பெற்றே தீர வேண்டும்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது; அப்படி நீர்வேறொன்றை விரும்புவதன்று. எம்பெருமானும் அப்படியே; உபயாந்தரங்களுக்கு எம்பெருமான்வேண்டும்; எம்பெருமான் இவற்றை விரும்பாதவன். "உன்னலல் லால் யாவராலும் ஒன்றுங் குறை வேண்டேன்"[8]

(9) கொள்ளும் பாத்திரங்களின் வேறுபாடின்றி நீர் தான் குறைய நில்லாது;எங்கும் நிரம்பியிருக்கும். எம்பெரு மானும் "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் வள்ளல்"[9] கொள்வார் குறையேயத்தனை. ஐசுவரியமே போதும் என்பாரும் கைவல்யமே போதுமென் பாருமாகக் குறையக் கொள்வார் குற்றமேயாகும்.

6. திருவாய்.8.5;1
7. ஷை. 5.7:6
8. ஷை. 5.8:3
9. ஷை. 3.9:5

(10) நீர் ஐவகைப் பட்டிருத்தல்போல என் பெருமானும் ஐவகைப்பட்டிருப்பன். எங்ஙனேமென்னில்; (1)பூமிக்குள்ளே பதிந்து கிடக்கும் நீர்; (2) ஆவரண நீர்; (3) பாற்கடல்.நீர், (4) பெருக்காற்றுநீர்; (5) தடாகங்களில் தேங்கும் நீர்—என ஐவகைப் பட்டிருக்கும். பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என எம்பெருமானுடைய நிலைமைகளும் ஐவகைப்படும்.

(11) நீரானது பரிசுத்தமாயினும் தான் இருக்கும் இடத்திற்குத் தக்கதாய்க் கொள்ளத் தக்கதாயும் விடத் தக்கதாயும் இருக்கும். அப்படியே தேவதாந்தரங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் விடத் தக்கவனாகவும் கூராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் கொள்ளத்தக்கவனாகவும் உண்மை தெளிவாகும்.

(12) நீர் தோண்டத்தோண்டச் சுரக்கும்; 'கொள்ள மாளா வின்பவெள்ளங் கோதில் தந்திடும்'.[10]

(13) நீர் தனக்கொரு பயனின்றியே பிறர்க்காகவே இருக்கும்; எம்பெருமானும் அவனைச் சேர்ந்தவையும் அவனை அடைந்தவர்க்காகவே இருக்கும்.

(14) நீர் தானாகப் பெய்யவேண்டுமேயன்றி ஒருவரால் வலிந்து பெய்விக்க முடியாதது; எம்பெருமான் இயல்பும் அபபடியே.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உயிர் வாழப் பயன்படுவதாகாது; எம்பெருமானும் சாத்திரங்களிலிருந்து ஆசாரியர் முகமாக வந்தே அடையத் தக்கவனாகின்றான்.

(16) வசிட்ட சண்டாள வேறுபாடின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெருமானும் 'நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'[11] என்றும்,

10. திரு. 4.7:2
11. திரு.6.10:10

'கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்'[12] என்றும் சொல்லுகின்றபடியே பெரியார் சிறியார் என்றும் வேற்றுமையின்றி ஒக்க அடையலாம்படி இருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் இருப்பினும் உள்புகுந்து விடும்; எம்பெருமானுக்குச் சிறிது வியாஜமே போதும். 'திருமாலிருஞ் சோலை மலையென்றேன்; என்னத், திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்'[13]

(18) தீர்த்தச் சிறப்புகளிலே நீருக்கு மகாத்மியம் அதிகம். எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே தெளித்துக் கொள்வது, முதுகில் கொட்டுவது, உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல் வாக்கினால் கருமந் தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால், வேட்கை மீதூர வாங்கி'[14] விழுங்குவார்கள் எம்பெருமானையும்.

(20) நீர் வேண்டியவன் துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பன்; 'சூராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'[15] என்பர்.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமும் மிதக்கும்; எம்பெருமான் பக்கலிலும் பிரமாவாய் இழந்து போதல், இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யக் காணா நின்றோம். 'நேரே, கடிகமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அயன்'[16], 'மருவுநின் திரு

12. நான். திருவந். 47
13. திருவாய். 10.8:1
14. திருக்குறுந். 4.
15. திருவாய் 6.9:1
16. முதல். திருவந்—56

நெற்றியில் சுட்டியசைதர மணிவாயிடை முத்தம் தருத லும், உன்தன் தாதையைப் போலும் வடிவு கண்டு கொண் டுள்ளம் உள்குளிர, விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கு மவ்வுரையும், திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே'[17] என்பன அடைவே பிரமாணம். பகவத் குணங்களில் சிறுமா மனிசர் அமிழ்தலும், 'ஊன்மல்கி மோடு பருப்பார் வாய்க்கரையில் நிற்றலும்'[18] கொள்க.

'உலகமேத்துவம் காரகத்தாய்' : காரகம் என்கிற திவ்விய தேசமும் திருக்கச்சி மாநகரில் உலகளந்த பெருமாள் சந்நிதி யில் உள்ளது. மேகத்தின் இயல்பு போன்ற இயல்புடைய வனவாழும் இடமாதல்பற்றி இத்தலத்திற்குக் காரகம் என்று திருநாமமாயிற்று என்பர்.

எம்பெருமானுக்கு மேகத்தோடு ஒற்றுமை பல நிலைக ளால் உய்த்துணரத்தக்கது.

(1) பெய்யவேண்டும் இடமளவுஞ் சென்று பெய்யும் மேகம்; எம்பெருமான் "வந்தருளி யென்னெஞ்சிடங் கொண்ட வானவர் கொழுந்து"[19] என்று ஆங்காங்குச் சென்று அநுக்கிரகிப்பன்.

(2) மின்னலுள்ள காலம் நீர் நிரம்பியிருக்கும் மேகம்; எம்பெருமானுக்கும் பிராட்டியோடு கூடியிருக்கும் காலத் தில் கிருபாரசம் விஞ்சியிருக்கும். "இவள் சந்நிதியாலே காகம் தலை பெற்றது; அஃது இல்லாமையால் இராவணன் முடிந்தான்"[20] என்ற முமுட்சுப் படியின் திவ்விய சூக்தியும் காண்க.

---

17. பெரு.திரு. 7:5
18. சிறுமாமனிசர் (திருவாய். 8.10:3); ஊன்மல்கிமோடு பருப்பார் (ஷை.3:5.7)
19. திருவாய். 5.7:7
20. முமுட்சு-135

(3) மொண்ட இடத்திலும் பெய்யும் மேகம்; தனக்கு உபதேசித்தவர்களுக்கும் உபதேசிக்குமவன் எம்பெருமான். வசிட்டாதிகளுக்கும் ஞானப் பிரதானம் பண்ணினான் இராமபிரான். சித்திரகூடத்தில் வசிட்டன் பெருமாளிடம் சில தர்மசூக்குமங்கள் கேட்கப் பெற்றானாயிற்று.

(4) பெய்யப்பெறாத காலத்திலே வறக்கும் மேகம்; நெஞ்சுலர்ந்து பேசினானன்றோ எம் பெருமானும், திரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப் பெறாத குறைக்காக.

(5) இன்ன காலத்திலே மேகம் பெய்யுமென்று அறுதியிடவல்லார் எவரும் இலர்; பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாதொழியவும் பெய்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காலத்தில் எண்ணாததாகவும் வந்து பெய்யவும் கடவது மேகம்; எம்பெருமான் படியும் அப்படியே; ''வந்தாய்போல வாராதாய்! வாராதாய்போல்வருவானே.''[21] திரௌபதிக்கு ஆபத்திலே வந்து முகங்காட்டா தொழிந்தான்; விரும்புதலை எதிர்பாராமல் ''தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக் கொண்டான்.''[22]

(6) 'வனத்திடரை எரியாக வெட்டியாயிற்று. நீ மழை பெய்தாக வேண்டும்'[23] என்று வளைப்பிட வொண்ணாது மேகம்; எம்பெருமான் படியும் இங்ஙனமாயிறே." 'பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான் எண்ணிலா வழியூழித் தவஞ் செய்தார் வெல்கி நிற்ப, விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக் கன்றருளை யீந்தவனிறே'[24]

(7) ஜலஸ்தல விபாகமின்றியே பெய்யும் மேகம்; 'வேடன் வேடுவிச்சி, பட்சி, குரங்கு, சராசரம், இடைச்சி,

---

21. திருவாய் 6.10;9
22. திருமாலை-35
23. இரண். திருவந்·16
24. திருமாலை-44

இடையர், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர், அவன் மகன், அவன் தம்பி, ஆனை, அரவம், மறையாளன், பெற்ற மைந்தன்"[25] என்னும்படியிறே பகவத் விஷயீகாரம் பெற்றவர்களிருப்பது.

(8) மேகம் சரத்காலத்தில் பெரு முழக்கமிட்டுப் போய்விடும், மழை பெய்யாது; பெய்யுங்காலத்தில் ஆடம்பரமறப் பெய்யும். எம்பெருமான் குசேலனுக்கு அருள் செய்தபடி இங்ஙனேயிறே.

(9) விராடபர்வ காலட்சேபத்துக்கு வரும் மேகம்; பகவத் விஷய காலட்சேபங்களிலே வந்து நிற்பான் எம்பெருமான். ஸ்ரீசைலேச தயாபாத்ர (தனியன்) என்று வந்தானிறே அரங்கநாதன் பெரிய ஜீயர் கோஷ்டியிலே.

(10) சுத்திகளிற் பெய்து முத்தாக்கும் மேகம்; அடியார்க்கு இன்ப மாரியாகிய (திருவாய். 4: 5: 10) கடாட்ச தாரையும் ஆழ்வார்கள் ஆசாரியர்களிடத்தே பிரவகித்து மிக்க பயன் விளைக்குமிறே.

(11) "விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்கள்"[26] இத்யாதிப்படியே தூதுவிடப்படும் மேகம்; எம்பெருமான்றானும் 'இன்னார் தூதனென நின்றான் (பெரி திரு. 2.2.3); கோதைவேல் ஐவர்க்காய் மண்ணகலம்

---

25. ஆசா. ஹ்ரு. 229 (புருடோத்கம நாயுடு பதிப்பு) (வேடன்—குகன்; வேடுவிச்சி—சபரி; பட்சி—சடாயு: குரங்கு—சுக்ரீவன்; சராசரம்—அயோத்தியில் வாழும் சராசரம்; இடைச்சி—சிந்தயந்தி; இடையர் — ததிபாண்டன்; தயிர்த்தாழி — ததிபாண்டனுடைய தாழி; கூனி — கிருஷ்ணாவகாரத்தில் கண்ணனுக்குச் சந்தனம் தந்தவள்; மாலாகாரர்—கண்ணன் காலத்து பக்தர்; பிணவிருந்து—இதையிட்ட கண்டாகர்ணன்; வேண்டடிசில் இட்டவர்—பக்த விலோசனத்து ரிஷிபத்தினிகள்; அவன்மகன்—பிரகலாதன்; அவன் தம்பி—வீடணன்; ஆனை—கஜேந்திராழ்வான்; அரவம் — சுமுகன்! மறையாளன் — கோவிந்தசாமி; பெற்ற மைந்தன் — மார்க்கண்டேயன் ஆக பதினெண்மர்)

26. நாச். திரு. 8;1

கூறிடுவான். தூதனாய் மன்னவனால் சொல்லுண்டானிறே.'' (ஷி 11.5:7)

(11)மழைபெய்ய எல்லா மரங்களும் தளிர்க்கும்; எருக்கிலை போல்வன வீழ்ந்தொழியும்; ஆகவே, மழை சிலர்க்குத் தீங்கு, சிலர்க்கு நன்மை. எம்பெருமான் படியும் அப்படியே. ''கஞ்சன் நாள் கவர்கருமுகில்; எந்தாய்''[27] ''தாயர் மகிழ ஒன்னார் தளர''[28] இத்தியாதி.

(13) ''எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்''[29] என்கிறபடியே பயிரகள் வேறு புகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும் மேகம்; ''களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்''[30] என்று அநந்ய கதிகளால் எதிர்பார்க்கப்படுகை ஒக்குமிறே,

(14) ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை''[31] என்கிறபடியே அன்னத்தின் அபிவிருத்திக்கு ஏதுவாகையாலே போக சாதனமாயும் விடாய் தீரப் பருகுகையாலே ஸ்வயம் போக்கியமாயுமிருக்கும் மேகம்; அடைவிப்பானாயும் அடையப்படுபவனாயுமிறே எம்பெருமான் இருப்பது-

(15) எத்தனை கண்ணநீர் விழ விட்டாலும் விருப்பமில்லாதவன் என்று வாளா கிடக்கும் மேகம்;பரதாழ்வான் பலருடனே சித்திர கூடத்தருகே போந்து கண்ண நீரை விழவிட்டு வேண்டினவிடத்தும் தன் மனோரதம் பெறாமலே மீண்டானிறே.

---

27. பெரு. திரு 7:10
28. பெரியாழ். திரு.1.7;11
29. பெரு, திரு. 5:7
30. திருவாய். 5. 8:8
31. குறள்—12

105

மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கும் மகரம்சேர் குழையும் காட்ட
என்னலனும் என்னிறையும் என்சிந்தையும்
என்வளையும் கொண்டென்னை யாளுங் கொண்டு
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே
புனலரங்க மூரென்று போயினாரே32

[மின் இலங்கு—மின்னல்போல; கரி-குவலயாபீடம்; கைத்தலம்—கை; தன் அலர்ந்த—தன் நிலத்திற் காட்டிலும்; தாழ்ந்து இலங்கு—தாழ்ந்து விளங்குகின்ற; மகரம்சேர் குழை—மகர குண்டலங்கள்; நலன்— அழகு; நிறை—அடக்கம்; சிந்தை—நெஞ்சு; வளை—வளையல்கள்; ஆளும் கொண்டு—அடிமைகொண்டு; பொன் அலர்ந்த — பொன்போல; நறு—பரிமளம் மிக்க; செருந்தி — சுரபுன்னை; பொழில்—சோலை; புனல்—நீர்வளம் மிக்க]

"எம்பெருமான் தன்பக்கலிலுள்ள அனைத்தையும் என்பக்கலிலுள்ள எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு போய் விட்டார்" என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

"பொன்போலே மலர்ந்து பரிமளம் மிக்கிருந்துள்ள பூவையுடைய சுரபுன்னைப் பொழிலினூடே உபயகாவேரி நடுவிலுள்ள திருவரங்கம் பெரியகோயில் நம்மூர் என்று சொல்லிக்கொண்டே போயினார்" என்கின்றாள்.

வியாக்கியான சூக்தி "திருநகரில் நின்றும் கோயிலளவும் செல்லப்பொழிலாய்க் கிடந்ததோ என்னில்:ஒரு காளமேகம் வர்ஷித்துக் கொண்டும் போகா நின்றால் கண்டவிட

32. திரு நெடுந் 25

மெங்கும் தளிரும் முறியுமாகாதோ?'' என்று பட்டர் அருளிச் செய்வர்'' என்று.

முற்காலத்தில் விக்கிரம சோழன் என்பானொரு அரசன் தமிழில் ரசிகனாயிருந்தான்; அவனது திருச்சபையில் வைணவப் புலவர்களும் சைவசிகாமணிகளும் அடிக்கடிச் செல்வதுண்டு: ஒருகால் இரு சமயத்துப் புலவர்களும் கூடியிருந்தபோது அவ்வரசன் ''தலைமகள் பிரிந்தபோது தலைவி இன்னாப்போடே சொல்லும் பாசுரம் எங்ஙனே இருக்கிறது? சொல்லுங்கள்; கேட்போம்''என்று இரு வகுப்பினரையும் கேட்டானாம். வைணவ வித்துவான் 'மின்னிலங்கு திருவுருவும் பெரியதோளும்'' என்று தொடங்கி இப்பாசுரத்தை எடுத்துச் சொன்னார்; சைவ வித்துவான் ''எலும்பும் சாம்பலும் உடையவன் இறைவன்'' என்று தொடங்கி ஒரு செய்யுளைச் சொன்னான்; இரண்டையும் கேட்டு அவன் 'நெஞ்சில் கிலாய்ப்போடே சொல்லச் செய்தேயும் மின்னிலங்கு திருவுருவும் நெஞ்சு பிணிப்புண்ணுமாறு சொன்னவளே உண்மையில் தலைமையுடையவள்; மற்றொருத்தி பிணந்தின்னி' என்றானாம்.

திருவாய் மொழி

திருவாய் மொழி

முதல் பத்து

106

திருவாய்மொழியின் அவதாரிகை:மகாப்பிரவேசம்: 'திருமகள் கேள்வன்'—ஒன்றில் அசித்தைப் பற்றிப் பேசும் ஈட்டாசிரியர் "முக்குணரூபமான என்னுடைய இந்தப் பிரகிருதியானது என்னால் உண்டுபண்ணப் பட்டது; ஒருவராலும் கடக்க முடியாதது; ஆயின் என்னையே சரணமாக அடைகின்றவர்கள் இதனைத் தாண்டுகின்றனர்" என்ற கீதையின் சுலோகத்தைக் காட்டி, 'நான் பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப் போகாது; என்னையே கால் கட்டி அவிழ்த்துக் கொள்ள வேண்டும்' என்று இறைவன் கூறுவதை எடுத்துக் காட்டுவர். இந்தத் கருத்தினையே ஆழ்வாரும்,

பொல்லாஆக்கையின்
புணர்வினை அறுக்கல்அறா;
சொல்லாய், யான்உன்னைச்
சார்வதுஓர் சூழ்ச்சியே [2]

என்று அருளிச் செய்தார். "ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப்போவதில்லை; சர்வசக்தி. கர்மங்கட்குத் தகுதியாகப் பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி அவிழ்த்துக் கொள்ளும் இத்தனைகாண்" என்றார் பிள்ளைதிருநறையூர்அரையர்.[4]

---

1. கீதை 7; 14
2. திருவாய் 3: 2: 3
3. சர்வசக்தி—எல்லா ஆற்றல்களையுமுடையவன்; இறைவன்.
4. அவதாரிகை-பக் 14

107

உயர்வற உயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மன்னே[5]

[உயர்வுஅற— தன்னைப் பார்க்கிலும் உயர்ச்சி இல்லாதபடி; நலம்—கல்யாண குணங்கள்; யவனவன்—யவனொருவனோ; மயர்வு அற அஞ்ஞானம் நசிக்கும்படி; மதிநலம்—ஞானத்தையும் பக்தியையும்; அருளினன்— கிருபை பண்ணினவன்; அயர்வு அறும்— மறப்பு இல்லாத; அமரர்கள்— நித்திய சூரிகள்; அதிபதி—தலைவன்; துயர்அறு —துக்கங்களைப் போக்குகின்ற; சுடர்—ஒளிமிக்க; தொழுது— வணங்கி; எழு —கடைத்தேறுக]

ஆன்ம உபதேசத்தைக் கூறும் முதல் திருவாய்மொழியில் இது முதல் பாசுரம். இதில் ஆழ்வார், "என் மனமே, தேவர்கள் முதலிய மற்றையோருடைய மேன்மைகள் முழுதும் இல்லையென்று கூறும்படி மேன்மேல் உயர்ந்து கொண்டே செல்லுகின்ற நற்குணங்களையுடையவன் யாவனோ, அவன் என்னிடத்துள்ள அறிவின்மையாவும் நீங்க, பக்தியின் நிலையை அடைந்த அறிவைத்தந்தான்; அந்த அறிவைத் தந்தவன் யாவனோ, அவன் மறதி என்பது சிறிதுமில்லாத நித்திய சூரிகட்குத் தலைவன்; அந்நித்திய சூரிகட்குத் தலைவன் யாவனோ, அவனுடைய எல்லாத் துன்பங்களையும் நீக்குகின்ற ஒளிபொருந்திய திருவடிகளைத் தொழுது பிறவிப் பெருங் கடலினின்று எழுவாய்" என்கின்றார்.

5. திருவாய். 1:1: 1

'உடையவன்': அநந்த கல்யாண குணங்களை உடையவன் என்று கூறுதலோடமையாது, இவற்றைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டும் படியாக இருப்பவன்; இதனால் இக் குணங்கள் இடையில் தோன்றியவை அல்ல; இறைவன் தன்மையோடு சேர்ந்தவைகளாக இருப்பன என்பதைத் தெரிவித்தபடி. ஆழ்வான்[6] பிள்ளைப் பிள்ளையைப் பார்த்து "நிர்க்குணம் என்பார் மிடற்றைப் பிடித்தாற் போல ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே!" என்று பணித்தான்.

'மதி நலம்': ஞானம் பக்திகள் இரண்டனையும் தந்தான் என்று கூறுவாரும் உளர். "இனி, நலம் மதி என முன் பின்னாகக் கூட்டி நலமான மதியென்று பொருள் கொண்டு, முளைக்கும்போதே வயிரம்பற்றி முளைக்கும் பொருள்களைப்[7] போலே பக்தியின் உருவத்தை அடைந்த ஞானத்தைத் தந்தான் என்கிறார்' என்று பட்டர் அருளிச் செய்வர். கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகக் கூடியது பக்தி. அந்தப் பக்தியின் நிலையிலே இறைவ னுடைய திருவருள் நிற்க, பின்னர்த் தொண்டு செய் வதற்குக் காரணமாய் முன்னே உண்டான பக்திதான் இவ்வாழ்வாருடைய பக்தி. "ஆழ்வார் பிரபந்நரோ? பக்தி நிஷ்டரோ?" என்று எம்பாரைச் சிலர் கேட்க, "ஆழ்வார் பிரபந்நர்; பக்தி இவர்க்கு தேக யாத்ரா சேஷம்" என்று அருளிச் செய்தார். எவ்வாறு? எனின்: நாம் அனைவரும் பிரபந்நர்களாக இருப்பினும், ஓராண்டிற்கு அல்லது ஆறு மாதங்கட்கு வேண்டும் உணவுப் பொருள்களை முன்னரே தேடிக் கொள்ளுகின்றோ மன்றோ? அது போன்று, "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே"[9] யாவன் இவர்க்கு.

---

6. ஆழ்வான்—கூரத்தாழ்வான்.
7. பொருள்—கருங்காலி மரம் போன்றவை.
9. திருவாய். 6.7:1

108

நின்றனர் இருத்தனர்
    கிடந்தனர் திரிந்தனர்,
நின்றிலர் இருந்திலர்
    கிடந்திலர் தெரிந்திலர்,
என்றுமோர் இயல்வினர்
    எனநினைவு அரியவர்;
என்றுமோர் இயல்வொடு
    நின்றவெம் திடரே.[10]

[என்றும்—எப்போதும்; இயல்வினர்—இயற்கையை யுடையவர். இயல்வொடு—இயற்கையோடு; திடர்—திடமான பிரமாணத்தால் சொல்லப் பட்டவர்.]

ஆன்ம உபதேசம்பற்றிய முதல் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "நிற்றல், நில்லாமை; இருத்தல், இராமை; கிடத்தல், கிடவாமை; திரிதல், திரி யாமை; என ஒன்றிற்கொன்று மாறுபட்ட தொழில்களை உடையவராதலால், எப்பொழுதும் ஒரே தன்மையினை உடையவர் என நினைத்தற்கு அரியவர்; அப்படி நினைப்ப தற்கு அரியர் என்னும் தன்மை எப்பொழுதும் மாறு படாமல் ஒரே நிலையோடு கூடியிருக்கின்றவர்; நான்மறை களால் பரம்பொருள் இவனேயென்று உறுதி செய்யப்பட்ட திடத்தையுடையவர்; அவர் என் தலைவராவர்" என் கின்றார்.

'நின்றனர்... திரிந்திலர்' : தொழில் செய்தல் செய் யாமைகளைக் காட்டுகின்ற இச்சொற்கள் அவற்றிற்கு நிலைக்களமான உயிர்களைக் காட்டி, அவ்வுயிர்கட்கு இறைவனை யொழியப் பிரிந்து நிற்றலாதல் தோன்றுத லாதல் இல்லாமையாலே, இறைவனையும் காட்டுகின்றன.

---

10. திரு. 1.1:6

ஆகலின், இச்சொற்கள் இவற்றோடு கூடியிருக்கின்ற இறைவனையே காட்டுகின்றன. ஆயின், 'தொழில் செய்வதற்காயின் இறைவன் திருவருள் வேண்டும்; தொழில் செய்யாதிருப்பதற்கு அவன் அருள் வேண்டுமோ?' என்று எம்பாரைச் சிலர் கேட்க, அவர் 'சுவர்க்கத்தினின்றும் விழுகின்ற திரிசங்குவைச் சக்திமான் நிற்கச் சொல்ல நிற்க வேண்டிற்றுக் கண்டாயே! அப்படியே, நிவர்த்திக்கும் அவன் வேணுங்காண்' என்று அருளிச் செய்தார்.

109

'விடுமின்'[11] என்ற திருவாய்மொழியின் முன்னுரையிலிருந்து. இத்திருவாய்மொழி உலகிற்கு உபதேசம் செய்வதாக அமைந்தது. முதல் திருவாய்மொழியில் தாம் அடைந்த இறைவனுடைய பரத்துவம் பற்றிய நுகர்ச்சி:

> எப்பொழுதும் நாள்திங்கள்
> ஆண்டூழி யூழிதொறும்
> அப்பொழுதைக் கப்பொழுதென்
> ஆரா அமுதமே.[12]

என்னும்படி, என்றும் புதியதாகவே இருக்கும். இந்த நுகர்ச்சியின் இன்பப் பெருக்கு தனியே நுகருமதன்றிக்கே இருந்தது; ஆதலால்; 'நாம் ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொண்டு நுகர்தற்கு ஆளாவார் யாவர்?' என்று நினைந்து சம்சாரிகள்பக்கல் கண் வைத்தார்; தாம் இறைவன்பால் காதல் கரை புரண்டு நிற்பது போன்று அவர்கள் ஐம்புல வாசையில் அறிவு மயங்கி இருந்தார்கள்; கண்டதும், அவர்கள் கேட்டினை நீக்கியல்லது நிற்க வொண்ணாத நிலையினை அடைந்தார். என்னை? எனின்: 'வைஷ்ணவ

11. ஷெ. 2.5:4
12. திருவாய் 1 2

தர்மம்' அதுவாதலின். 'ஒருவனுக்கு வைணவத்வமுண்டு, இல்லையென்னுமிடம் தனக்கே தெரியுங்காண்' என்று நஞ்சீயர் பலகாலும் அருளிச் செய்வர்; அதாவது—பிறர் அநர்த்தம் கண்டால் 'ஐயோ!' என்று இரங்குவானாகில், அவன் 'நமக்கு பகவத் சம்பந்தம் உண்டு' என்று இருக்க அடுக்கும்; 'இத்தனையும் வேண்டும் பட்டிடுவானுக்கு' என்றிருந்தானாகில் அவன் 'நமக்கு பகவத் சம்பந்தம் இல்லை' என்று இருக்க அடுக்கும் என்பதாம்.

110

அடங்கெழில் சம்பத்து
அடங்கக் கண்டுஈசன்
அடங்கெழில் அஃதென்று
அடங்குக உள்ளே.[13]

[அடங்க எழில்—முற்றிலும் அழகியதான; சம்பத்து—விபூதி; கண்டு—பார்த்து; அடங்க-அதெல்லாம்; ஈசன் அஃது—எம்பெருமானுடையது; எழில்—சம்பத்து; உள்ளே—அந்த விபூதிக்குள்ளே; அடங்குக—செருகிப் போக]

உலகிற்கு உபதேசம் செய்யும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். ஆழ்வார் இதில், "கட்டடங்க அழகியதான செல்வம் முழுவதையும் பார்த்து, அஃது இறைவனுக்கு அடங்கிய செல்வமாகும் என்று நினைந்து அச்செல்வத்திற்குள் நீயும் அடங்குக" என்கின்றார்.

பட்டர்: எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள உறவை உணர வேண்டும்: அதாவது சம்பந்தஞானமே வேண்டுவது. எங்ஙனம்? எனில்: ஒரு வணிகன் தன் மனைவி கருவுற்றிருக்

13. திருவாய். 1.2:7

கும் காலத்தில் பொருள் தேடும் விருப்பினால் வெளிநாடு சென்றான்; அவளும் கருவுயிர்த்தாள்; மகனும் தக்க வயது அடைந்து தனக்கும் தந்தையின் வாணிகமே தொழிலாகப் பொருள் தேடப் போனான்; இருவரும் தத்தமக்கு வேண்டிய சரக்குப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு பந்தலில் தங்கினார்கள்; அஃது அவ்விருவருக்கும் இடம் போதாமையால், அம்பறுத்து எய்ய வேண்டும்படி விவாதமுண்டான சமயத்தில், இருவரையும் அறிவானொருவன் வந்து, 'இவன் நின் தந்தை; நீ இவன் மகன்' என்று அறிவித்தால் கீழ் இழந்த நாட்களுக்குச் சோகித்து இருவர் சரக்குமொன்றாய், அவன் காப்பாற்றுகின்றவனாய், இவன் காப்பாற்றப் படும் பொருளாய்க் கலந்து விடுவார்களன்றோ? அது போன்று 'சீவான்மாவும் பரமான்மாவும் உடலாகின்ற ஒரு மரத்தைப் பற்றியிருந்தால் ஒருவன் இருவினைப் பயனை நுகரா நிற்பன்; ஒருவன் நுகர்வித்து விளங்கா நிற்பன்; அவன் ஏவுகின்றவன்; நாம் ஏவப்படும் பொருள்'[14] என்னும் முறையறிவே பொருந்தலாமன்றோ?

ஓர் அரச குமாரன் பூங்கா ஒன்றினைக் கண்டு புக அஞ்சினால், 'இஃது உன் தந்தையினுடையது காண்!' என்னவே, நினைந்தபடி நடந்து கொள்ளலாமன்றோ? ஆன பின்னர், 'அவனுடைய உடைமை இவையெல்லாம்' என்னும் நினைவே வேண்டுவது; தானும் அதற்குள்ளே ஒருவனாகச் சேரலாம்' என்கின்றார்.

11

ஒடுங்க அவன்கண்
ஒடுங்கலும் எல்லாம்
விடும்பின்னும் ஆக்கை
விடும்பொழு தெண்ணே.[15]

---

14. இருக்கு வேதம்.
15. திருவாய் 1.2;9

[ஒடுங்க—சென்று சேர; அவன்கண்...எம்பெருமான் பக்கலில்; எல்லாம் ஒடுங்கலும்—(ஆன்மாவை) ஒடுங்கப் பண்ணுவதான அவித்யை முதலானவையெல்லாம்; விடும்—நீங்கும்; பின்னும் — அதற்குப் பிறகு; ஆக்கை—உடல்; விடும்பொழுது—தொலையும் நாளை; எண்—எதிர்பார்த்திருப்பது]

உலகிற்கு உபதேசம் கூறும் திருவாய்மொழியில் உள்ள ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "அவ்விறைவனிடத்தில் சென்று சேரவே, உங்களிடத்தில் வந்து சேர்ந்திருக்கின்றனவெல்லாம் தாமாகவே விட்டு நீங்கும்; அதற்கு மேல், உயிரானது உடலைவிட்டு நீங்கும் காலத்தை எண்ணி இரு" என்கின்றார்.

செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்தவர்கள் எம்பெருமானையே பற்றுக்கோடாகப் பற்றின அடியார்களேயாவர். இங்கு ஓர் ஐதிகம். ஓர் அயனத்தினின்று குன்றத்துச் சீயர் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தில் புக, அவருடைய சிறு பேரைச் சொல்லி, 'சிங்கப்பிரான்! இன்று அயனங்காண்' என்ன, திருவுள்ளத்தில் ஓடுகின்றது இன்னது என்று அறியாமையாலே அவர் பேசாதிருக்க, 'உயிர் உடலை விட்டு நீங்கும் அந்திக் காலத்தில் பலம் கண்ணழிவற்ற பின்பு நடுவு விரோதியாய் செல்லுகிற நாளில் ஓராண்டு கழியப்பெற்ற இஃது உனக்கு ஒன்றாய் யிருந்ததில்லையோ!' என்று அருளிச் செய்தார்.

இஃது, உயிர் உடலை விடுகின்ற காலத்தை எண்ணிக் கொண்டிருந்ததற்கு ஐதிகம்.

112

எண்பெருக் கந்நலத்து
ஒண்பொருள் ஈறில
வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே.[16]

[எண்பெருக்கு—அளவிறந்த; அநலத்து—அப்படிப் பட்ட ஞானம் முதலிய குணங்களையுடைய; ஒண்பொருள்—சிறந்த பொருளாகிய ஆன்ம வர்க்கத்தையும்; ஈறு—முடிவு; வண்புகழ்—திருக்கல்யாண குணங்கள்; திண்கழல்—கை விடாத திருவடிகளை; சேர்—ஆச்ரயிப்பது]

உலகிற்கு உபதேசம் செய்யும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் "எண்ணாலே மிக் கிருப்பனவாய் (மிகப் பலவாய்) ஞானத்திற்கு நிலைக்கள மாய் ஞானமாய் அழிவற்றனவாய் இருக்கின்ற உயிர்களை யும், அழிவற்ற வளவிய புகழ்களையுமுடைய நாராயண னது உறுதியான திருவடிகளைச் சேர்வாய்" என்கின்றார்.

இப்பாசுரம் திருமந்திரார்த்தம் என்னுமிடம் ஆழ்வா னுடைய இதிகாசத்தினால் நன்கு விளங்கும். அது வருமாறு! அழகிய மணவாளன் திருவருளால் ஆழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்கள் அவதரித்தனர். ஆழ்வான் அக்குமாரர் கட்கு நாமகரணம் முதலிய செய்வித்ததற்கு உடையவர் கடவர் என்றெண்ணித் தாம் ஒன்றும் செய்யாதிருந்தார். நம்பெருமாள் திருவருளால் ஆழ்வானுக்கு இரண்டு குமாரர் கள் உதித்ததாகப் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த உடையவர் அக்குழந்தைகள் பிறந்த பதினோராம் நாளிலே சீடர் குழாத்துடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளித் தமது முக்கிய சீடர்களில் ஒருவரான எம்பாரை நோக்கிக்

16. திருவாய் 1.2:10

'குழந்தைகளை எடுத்துக்கொண்டு வாரும்' என்று கூற; அவர் அங்ஙனமே பிரபந்த குலக் கொழுந்தான அக் குழவிகளை எடுத்து வரும்போது கண்ணெச்சில் முதலியன தாக்காதபடி இரட்சையாகத் துவயம் என்னும் மந்திர இரத்தினத்தை அநுசந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர். அவர் மிகக் களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கத் தம் திருக்கண்களால் குளிரக் கடாட்சிக்கும்போது அத் தெய்விக சிசுக்களின் ஒளிச் சிறப்பினைக் கண்டு வியப்புக் கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் துவயம் பரிமளிக்கின்றதே; இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவினார். எம்பாரும் 'குழந்தைகட்குக் காப்பாகத் துவய அநுசந்தானம் செய்து கொண்டு வந்தேன்' என்று சொல்ல, உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரை நோக்கி, 'நீர் இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்ததற்கு முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசாரியராகக் கடவீர்' என்று நியமித்து விட்டார்.

இக்குமாரர்களிருவருக்கும் ஒருகால் திருவாய்மொழிப் பொருள் சொல்லிவரும்போது 'எண்பெருக்கந் நலத்து' என்ற பாசுரத்தளவும் வரப் பணித்து, இப்பாசுரம் வந்த வளவிலே இது திருமந்திரார்த்தத்தை விவரிக்கிறதாதலாலும், மந்திரார்த்தம் ஆசாரியரிடத்தில்தான் கேட்டறிய வேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசாரியர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, அதனை விரைவில் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தங்கள் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்கும் இடத்தைக் குறித்துப் போகப் புக்க வளவில், ஆழ்வான் யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற் கொண்டு அவர்களை யழைத்து, 'இன்ன போது இன்னார் இருப்பார்; இன்னார் போவார் என்பது தெரியாது; ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று திருமந்திரத்தைச்

சொல்லி இப்பாட்டின் பொருளையும் விவரித்து, 'இப் பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங் கள்' என்று பணித்தருளினார்.

113

''பத்துடை அடியவர்''[17] : இத்திருவாய்மொழியில் எம் பெருமானது சௌலப்பியம் (எளிமைக் குணம்) அருளிச் செய்யப்பெறுகின்றது. எளிமையே உய்வு பெறுவதற்கும் கேடுறுவதற்கும் காரணம் என்பதற்குக் காட்டும் ஐதிகம்: ''சர்வேசுவரன் அரியன் என்றால் சம்சாரத்தில் ஆள் பற்றாது என்று அவன் எளிமையை விவரமாகச் சொல்லிக் கொண்டு போந்தோம்; அதுதானே இவர்களுக்கு 'இத்தனை எளியனோ' என்று விடுகைக்கு உடலாயிற்று; அவ்வெளிமைதானே ஆதரிக்கைக்கு உடலாயிற்று உமக்கு ஒருவருக்குமே!'' என்று எம்பாரைப் பார்த்து உடையவர் அருளிச் செய்தார்.

114

நாளுநின் றடுநம பழமைங்
கொடுவினை யுடனே
மாளும்,ஓர் குறைவில்லை மனனக
மலமறக் கழுவி
நாளுநந் திருவுடை யடிகள்தம்
நலங்கழல் வணங்கி
மாளுமோர் இடத்திலும் வணக்கொடு
மாள்வது வலமே.[18]

---

17. திருவாய். 1.3
18. ஷெ 1.3:8

[நாளும்நின்று — எப்போதும் விடாது நின்று; சுடும்—வருத்துகின்ற; நம் பழமை ஆம் கொடு வினை—நாம் அறிந்தே நமக்கென்று தேடின பழமையாகிய மிகவும் கொடிய பாவங்கள்; உடனே மாளும்—ஆச்ரயித்தவுடனே தொலையும்; மனனகம்—மனத்திலுண்டான; மலம் அற—அழுக்கு ஒழியும்படி; கழுவி—பரிசுத்தப் படுத்தி; நாளும்—நாள்தோறும்; நம்—நமக்கென்றே உரிய; திருவுடை அடிகள் தம்—எம்பெருமானுடைய; நலம்கழல் — அழகிய திருவடிகள்; வணங்கி—ஆச்ரயிக்க; மாளும் ஓர் இடத்திலும்—உடலை விடுகின்றகாலத்திலும்; வணக்கொடு—வணக்கத்தொடு; மாள்வது—முடிவது; வலம்—நன்று]

அடியவர்க்கு எளியவன் என்று கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "(பற்றப்படும் இறைவன் இவனோ மற்றையவரோ என்று) மனத்திலிருக்கும் ஐயமாகிய குற்றம் ஆறும்படி நீக்கித் தூய்மை செய்து, நம்முடைய திருமகள் கேள்வனுடைய நற்றாளை நாள் தோறும் வணங்க, எக்காலத்தும் நிலைபெற்று வருத்தும் நம்முடைய பழமையான மிகக் கொடிய வினைகள் உடனே அழியும்; அதற்கு மேல் ஒருகுறையும் இன்று. உயிர் உடலை விட்டு நீங்கும் இறுதிக் காலத்தும் வணக்கத்தோடு உயிரை விடுதல் சிறப்பினை உடையதாம்" என்கின்றார்.

நாளும் நம் திருவுடை அடிகள்தம் நலங்கழல் வணங்கி: இதற்கு ஒரு சம்வாதம் அருளிச் செய்கின்றார் நம்பிள்ளை. அதாவது 'சர்வேசுவரனை அடைந்தானாகில் அவன் பலனைக் கொடுக்கின்றான்; பிராட்டியைத் துணையாகப் பற்றவேண்டுவது ஏன்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'அவனையடையும் இடத்தில், இவன் குற்றம் பாராதே தன் நிழலிலே இவனை வைத்து அவன் பக்கல் முகம் பெற்ற

வாறே குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப் பற்ற வேண்டும்' என்று கூறி 'நாளும் நம் திருவுடை அடிகள் தம் நலங்கழல் வணங்கி' என்னா நின்றது கண்டீரே' என்று அருளிச் செய்தார் பட்டர்.

115

'அஞ்சிறைய மடநாராய்'[19] : இது மகள் பாசுரம். இது காமான தன்மையழிந்து ஒரு பிராட்டி நிலையை அடைந்த வராய், மகிழ்ச்சியால் கூறும் பாசுரம் போய் ஆற்றாமை யாலே[20] கூறும் பாசுரமாய்ச் செல்லுகின்றது.

இங்கு ஓர் ஐதிகம் : முற்காலத்தில் சிற்றறிஞன் ஒருவன், 'பற்றற்ற பரமஞானிகளும் போற்றத்தக்கனவாக இருக்கின்றன; உண்மைப் பொருளை உள்ளவாறு எடுத்துரைக்கின்றன' என்று இத்திருவாய் மொழியளவும் பாடம் கேட்டு, இத்திருவாய்மொழி வந்த அளவில், 'இது காமுகர் வாக்கியமாக இருக்கின்றது' என்று கை விட்டுப் போனானாம். வேதாந்தங்களில் விதிக்கப்படுகின்ற பகவத் காமமே இப்படிப்பட்ட பாசுரங்களாகப் பரிணமித்ததென்று அவன் அறிந்திலன், கருவிலே திரு இல்லாமையாலே—என்று நம் பிள்ளை வருந்திப் பேசுவர்.

வியூகத்தில் தூது : இத் திருவாய்மொழி வியூகத்தில் தூது விடுவது. 'கடல் ஆழி நீர் தோற்றி அதனுள்ளே கண் வளரும், அடல்ஆழிஅம்மானைக் கண்டக்கால்'[10] என்பதால் வியூகத்தில் தூது என்பது அறியக் கிடக்கின்றது. தலைவனோடு கலந்து பிரிந்த ஒரு பிராட்டியின் நிலைமையை ஏறிட்டுக் கொண்ட ஆழ்வார் (அதாவது பராங்குச நாயகி) அவ்வெம்பெருமான் விரைந்து வரக்

---

19. திருவாய் 1.4.

20. ஆற்றாமை — பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமை.

காணாமையாலும், அவனைப் பிரிந்து தான் ஆறியிருக்க மாட்டாமையாலும், தானே அவன் இருப்பிடம் நோக்கிச் செல்லுவதற்கு இயலாதபடி மேனி மெலிந்து கிடக்கையாலும் இராவணமாயையால்வரும் ஐயமும் இல்லாமையாலே கண்ணிற்கண்ட நாரை, குருகு வண்டு முதலிய பறவைகளைத் தூது விடுகின்றார்.

இங்கே பட்டர் அருளிச்செய்வதொரு வார்த்தையுண்டு: "சக்கரவர்த்தித் திருமகனார் (இராமபிரான்) திருவவதரித்த பின்பு வாரஜாதி வீறு பெற்றதுபோல, ஆழ்வார்கள் திருவவதரித்த பின்பு பட்சி ஜாதி வீறு பெற்றது" என்பது. இராமபிரான் 'முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்தது போல'[21] ஆழ்வார்கள் 'அஞ்சிறைய புட்கள் தமை' ஆழியானுக்குத் தூது விடுகின்றார்கள் என்க.

116

என்செய்ய தாமரைக்கண்
　　பெருமானார்க்கு என்தூதாய்
என்செய்யும் உரைத்தக்கால்?
　　இனக்குயில்காள்! நீர்அலீரே?
முன்செய்த முழுவினையால்
　　திருவடிக்கீழ் குற்றேவல்
முன்செய்ய முயலாதேன்
　　அகல்வதுவோ? விதியினமே[22]

[செய்யதாமரை—செந்தாமரை; கண்—திருக்கண்களையுடைய; என்செய்யும்—என்ன தீமையைச்செய்யும்; இனக்குயில்கள்—கூட்டமான குயில்கள்; நீர்அலீரே—(நெடுநாளாகப் பழகிப் போந்த) நீங்களல்லீர்களோ; முழுவினை—பெரும் பாவம்; குற்றேவல்—அடிமைத்

21. பெரி. திரு. 2.2:3
22. திருவாய் 1.4:2

தொழில்; முன்—முன்மை; இனம்—இன்னமும்; அகல்வதுவோ — விலகியிருப்பதோ; விதி—முறைமை]

இப்பாசுரம் நம்மாழ்வார் அருளிச் செய்தது: மகள் பாசுரமாக நடப்பது; தூதுப் பாசுரமாக அமைந்தது; இது வியூகத்தில் தூது. சீதாப் பிராட்டியை ஆயிரக்கணக்கான வானரங்கள் தேடுவதைப்போலவே, தன் கண்களில் கண்டவற்றையெல்லாம் தூது போகுமாறு ஏவுகின்றாள் பராங்குசநாயகி. பறவைகளைத் தூதுவிடுத்த ஐதிகத்தைக் குறிப்பிடும் பட்டர், "சக்கரவர்த்தித் திருமகனார் திருவவதரித்த பின்பு வானர ஜாதி வீறு பெற்றது போல ஆழ்வார்கள் திருவவதரித்த பின்பு பட்சி ஜாதி வீறு பெற்றது" என்று சுவையுடன் அருளிச் செய்வர்.

பிரிவாற்றாமையுடன் இருக்கும் பராங்குசநாயகி நெய்தல் நிலத்தில் இருக்கின்றாள். பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலன்றோ? முன் பாசுரத்தில் நாரையைத் தூது போகுமாறு இரந்த தலைவி அங்குப் போனால் சொல்ல வேண்டிய செய்தியைச் சில குயில்கட்குச் சொல்லுகின்றாள். ஒருவரை அழைத்துவிட்டு மற்றொருவருக்குச் செய்தி சொல்லுகின்ற போக்கிலிருக்கும் ஆழ்வார் நாயகியின் மிகுதியான கலக்கம் இதனால் நன்கு புலனாகும். இவள் பிரிந்த பொருளுக்கும் (எம்பெருமான்) நாட்டார் பிரிந்த பொருளுக்கும் (சொத்து, பணம், பெண் முதலியவை) வேற்றுமையுள்ளதனால் பகவத் விஷயத்தின் ஏற்றம் தெளிவாகின்றது.

பாசுரத்தில் ஆழ்வார் நாயகி "கூட்டமாகச் செல்லுகின்ற குயில்காள்! நீங்கள் நெடுநாளாகப் பழகியவர்களல்லவா? செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடைய என்னுடைய பெருமானிடத்தில் எனக்குத் தூதாகிச் சென்று, நான் கூறுவதனைக் கூறின் குற்றம் யாதுண்டாம்? முற்பிறவியில் செய்த நிறைந்த பாவங்களால் திருவடிகளில் அண்மையிலிருந்து செய்யும் அடிமைத்

தொண்டு புரிவதற்கு முற்பிறவியிலேயே முயலாத யான் இன்னமும் அகன்று போவதுவோ முறை? என்று கேளுங்கள்'' என்று குயில்களை நோக்கிக் கூறுகின்றாள்.

முழுவினை—பெரும்பாவம்; சென்ற காலம் அனைத்திலும் செய்த பாவங்கள். 'முழுவினை' என்பதற்கு நம்பிள்ளை காட்டும் ஓர் ஐதிகம்; பராசரபட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்த காலத்து அங்குத் தெற்காழ்வான்23 கோளரியாழ்வான் என்று இருவர் வாழ்கின்றனர். இவர்களுள் கோளரியாழ்வான் நற்குண நல்லொழுக்கமுடையவன்; தெற்காழ்வான் சாதாரணமாகக் காணப்பெறும் ஒரு மனிதன். இருவரும் ஒரு சிறப்பான நன்னாளன்று ஒரு புண்ணிய தீர்த்தக் கரையில் சந்திக்கின்றனர். கோளரியாழ்வான் தெற்காழ்வானை நோக்கி, "அப்பா இன்று புண்ணிய தினம் ஆயிற்றே. இன்றாகிலும் ஒரு முழுக்கிடமாட்டாயோ?'' என்கின்றான். அதுகேட்ட தெற்காழ்வான், "முழுக்கிட வேணுமென விதிக்கின்ற உன் அபிப்பிராயம் என்னுடைய பாவங்கள் இந்த முழுக்கினால் சில தொலையக்கூடும் என்பதுதானே; அந்தோ! என்னுடைய பாவம் திருக்கோட்டியூர் தெற்காழ்வார் கையில் உள்ள திருவாழியாலே போக்கினால் போகுமேயன்றி ஒன்றிரண்டு முழுக்கால் போகக் கூடியது அன்றுகாண்!'' என்கின்றான். இந்தச் சொற்கள் பட்டருடைய திருச்செவியில் விழுந்த அளவில் "ஆ! ஆ!! எவ்வளவு ஆத்திகனாயிருந்தால் இந்த வார்த்தை சொல்ல முடியும்! இவனை மேலெழுந்தவாரியாகப் பார்த்து நாத்திகன் என்று நினைத்திருந்தோமே. இவ்வளவு பேசும் பரிபாகமுடையவனா இவன்!'' என்று மிகவும் ஈடுபட்டதாக வரலாறு.

நாயகி நிலையிலிருக்கும் ஆழ்வார் "கொம்மை முலைகள் இடர் தீரக் கோவிந்தர்க்கோர் குற்றேவல்''24

23. திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர்.

24. நாச். திரு. 13:9

என்று ஆண்டாளைப்போல் 'முலையாலணைக்க' என்று சொல்ல வேண்டியிருந்தும், 'திருவடிக் கீழ்க் குற்றேவல்' என்று சொல்லுகின்ற அழகு காண்மின்! இங்கே நம் பிள்ளை ஈடு: "பிராமணர் பிச்சேறினாலும் ஓத்துச் சொல்லுமாப்போலே இவர் பிராட்டியானாலும் முலையா லணைக்க நினையார்; திருவடிகளில் அணையத் தேடும் அத்தனை" என்பதாக. வேதமோதிய அந்தணனுக்குப் பைத்தியம் பிடித்தாலும் வேதத்யயனமே சொல்லித் திரிதல்போல் ஆழ்வாருக்கு நிலைமை மாறினாலும் பாசுரம் பேசும் முறைமை மாத்திரம் மாறவில்லை என்று ஈண்டு அறியத்தக்கது. "தேறியும் தேறாதும் மாயோன் திறத்தினளே இத்திருவே"[25] என்பதும் ஈண்டு அநுசந்திக்க வுரியது.

117

என்னீர்மை கண்டிரங்கி
இதுதகா தென்னாத
என்னீல முகில்வண்ணர்க்
கென்சொல்லியான் சொல்லுகேனோ?
நன்னீர்மை யினியவர்கண்
தங்காதென் றொருவாய்ச்சொல்
நன்னீல அகன் றில்காள்!
நல்குதிரோ? நல்கீரோ?[26]

[நீர்மை — இயல்பு; இரங்கி — மனம் இரங்கி; தகாது—தகுதியன்று; நீலமுகில்—நீலமேகம்; இனி — இனிமேல்; அவர்கண்—(பராங்குச நாயகியாகிய) அவளிடத்தில்; நல்நீர்மை—நல்லுயிர்; நல்குதிரோ, நல்கீரோ?—சொல்லு வீர்களோ? மாட்டீர்களோ]

25. திருவாய். 4.4:7 (தாய்ப் பாசுரம்)
26. திருவாய். 1.4:4

மகள் பாசுரம் : பறவைகளைத் தூதுவிடும் நம்மாழ்வார் திருவாய்மொழியிலுள்ள பாசுரம். மகன்றில் பறவைகளை நோக்கிப் பராங்குச நாயகி பேசுகின்றாள்; "நல்ல நீல நிறத்தினையுடைய மகன்றில் பறவைகளே! எனது தன்மையைக் கண்டிருந்தும், இரங்கி, பிரிந்து தங்கியிருத்தல் தகாது என்று நினையாத நீலமுகில் போன்ற நிறத்தினையுடைய என்னுடைய தலைவர்க்கு என்ன வார்த்தையினை நான் சொல்லப் போகின்றேன்; நல்ல உயிரானது இனி அத்தலைவியின் பொருட்டு அவளிடத்தில் தங்கியிராதென்று ஒரு வார்த்தை சொல்லுதலைச் செய்வீர்களா? மாட்டீர்களா?" என்கின்றாள். (மகன்றில் என்பது நீர் வாழ் பறவை).

'**என் நீர்மை கண்டிரங்கி' :** பட்டர் காலத்தில் ஒரு தமிழ்ப் புலவர் அவரிடத்தில் வந்து இப்பாசுரத்தின் முதலடியில் ஓர் ஆட்சேபம் செய்தாராம்; அதாவது—இது பிரிந்திருக்கும் நிலைமையில் சொல்லுகின்ற பாசுரமேயன்றிக் கூடியிருக்கும் நிலைமையில் சொல்லுகின்ற பாசுரமன்றே; பிரிந்திருக்கும் காலத்தில் தலைவியின் தன்மைகளைத் தலைமகன் பிறர் சொல்லக் காதால் கேட்கலாமேயன்றிக் கண்ணால் நேரில் காண முடியாதன்றோ? ஆகவே, "என் நீர்மை கேட்டிரங்கி இது தகாது என்னாத" என்று பாசுரமிருக்க வேண்டியது உசிதமாயிருக்க, "என் நீர்மை கண்டிரங்கி" என்று எப்படிச் சொல்லலாம்? என்று மறுப்பு தெரிவித்தாராம். பட்டர் அதைக் கேட்டு, 'புலவரே! நன்கு வினவினீர்;

புல்லிக் கிடந்தேன்
புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே
பசப்பு.[27]

என்ற திருக்குறளும்,

27. குறள்—1187

ஊருண் கேணி உண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பசத்த லானே.[28]

என்ற குறுந்தொகைச் செய்யுளும் உமக்குத் தெரியாது போலும்' என்று சொல்லி அவற்றைப் பரக்க விளக்கிச் சமாதானப்படுத்தினாராம்.

பிரிவாற்றாமையினால் மகளிரின் மேனியில் தோன்றும் நிற வேறுபாடு 'பசலை நிறம்' எனப்படும். தலைவனை விட்டுப் பிரிந்த காலத்தில் தலைவியின் உடலில் இந்த நிறவேறுபாடு தோன்றுவது வியப்பன்று; ஓர் அமளியில் படுத்துக் கூடியிருக்கும் போதே ஒரு கணகாலம் கை நெகிழ்ந்த அளவில் இந்தப் பசலை நிறம் படர்கின்றதென்றால் பிரிந்த நிலைமையில் கேட்க வேண்டியதில்லையன்றோ?

பட்டரிடத்தில் ஆட்சேபம் செய்த தமிழ்ப் புலவருக்கு இப்போது என்ன சமாதானம் ஆயிற்றென்னில்; இப்பாடல் பிரிவுக் காலத்தில் சொல்லுவதானாலும் கூடியிருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவத்தையே நினைப்பூட்டுவதாதலால் கேட்டிரங்கி என்ன வேண்டியதில்லை: கண்டிரங்கி என்றே சொல்லதகும் என்பது தெளிவாயிற்று.

118

நல்கித்தான் காத்தளிக்கும்
பொழிலேழும் வினையேற்கே
நல்கத்தான் ஆகாதோ
நாரணனைக் கணடக்கால்

28. குறுந்—399

மல்குநீர்ப் புனல்படப்பை
இரைதேர்வண் சிறுகுருகே
மல்குநீர்க் கண்ணேற்கோர்
வாசகங்கொண் டருளாயே.[29]

[நல்கி—தந்து (அநுக்ரகித்து); பொழில் ஏழும்—ஏழு உலகங்களையும்; நல்கத்தான் ஆகாது—கிருபை பண்ணலாகாது; மல்கும் நீர்—நிறையும் நீர்; படப்பை—தோட்டக் கூறு; வாசகம்—செய்தி]

இது நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரம். இது தூதுப்பதிகப் பாசுரம். பராங்குச நாயகி சிறுகுருகை நோக்கிப் பேசுகின்றாள். "பெருகி நீர் வழியும் தோட்டங்களில் இரையாகிய மீன்களைத் தேடுகின்ற சிறு குருகே! உலகங்கள் ஏழினையும் தானே விரும்பி அவற்றிற்கு விருப்பமில்லாதனவற்றை நீக்கிக் காப்பாற்றுகின்ற நாராயணனைக் கண்டக்கால், 'எனக்குத் திருவருள் புரிதல் தான் தகாததோ?' என்று கூறி, அவர் கூறுகின்றதொரு வார்த்தையைக் கேட்டு வந்து அழுத கண்களையுடைய எனக்குச் சொல்லியருளல் வேண்டும்" என்கின்றாள்.

'அருளாய்' : தான் சனககுல சுந்தரியாக இருந்தும், பறவைகளை நோக்கி 'அருளாய்' என்கின்றாள்; அப்பறவைகளால் தனக்குக் கிடைப்பது பகவத் விஷயம் ஆகையாலே. இதிலுள்ள ஓர் ஐதிகம்: பட்டர் காலத்தில் 'நம்பி ஏறு திருவுடையான்' என்ற திருநாமம் கொண்ட ஒரு சாத்தாத ஸ்ரீவைணவர் இருந்தார்; அவர் பரமபதிக்க, அந்தச் செய்தியைக் கொண்டு வந்து பட்டர் சந்நிதியில் விண்ணப்பம் செய்ய வந்தவர் 'ஏறுதிருவுடையதாசர் திருநாட்டுக்கு நடந்தார்' என்றாராம். பட்டர் துணுக்குற்று எழுந்து

29. திருவாய். 1.4:5

நின்று, அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும் படிக்குத் திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்ன வேண்டாவோ?'' என்று அருளிச் செய்தாராம்.

119

நீயலையே சிறுபூவாய்
  நெடுமாலார்க் கென்தூதாய்
நோயெனது நுவலென்ன
  நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை
  தளர்ந்தேன்நான் இனியுனது
வாயலகில் இன்னடிசில்
  வைப்பாரை நாடாயே.[30]

[அலையே — அல்லவா; நோய் — பிரிவாற்றாமையாகிய நோய்; நுவல் — சொல்; நுவலாதே — சொல்லாமல்; இருந்தொழிந்தாய் — வாளா இருந்து விட்டாய்; சாயல் — ஒளி; மணிமாமை - அழகியநிறம்; தளர்ந்தேன் — இழந்தேன்; இன் - மதுரமான; அடிசில் — இரை; வைப்பாரை — ஊட்ட வல்லவர்களை; நாடாய் — தேடிக் கொள்]

ஆழ்வார் நாயகி நாகணவாய்ப் புள்ளை நோக்கிப் பேசுவது இப்பாசுரம். இதுவும் தூது உரைப்பது. ''நாகணவாய்ப் பறவையே, அடியரானார்க்கு இரங்கும் பெரும் பித்தரான தலைவர்க்கு என் தூதாகிச் சென்று, என் நோயினைத் தெரிவிப்பாய் என்று கூறினேன்; நீயோ கூறாதொழிந்தாய். அதனால் காரியத்தைக் கெடுத்தது நீயன்றோ? இப்பொழுது யான் சாயலும் அழகிய மாமை நிறமும்

30 திருவாம்.1. 4: 8

நீங்கப் பெற்றேன் (யான் இல்போது முடியப் புகாநின்றேன்). இனிமேல் உனக்கு நின் வாயலகில் இன் அடிசில் ஊட்டு வாரைத் தேடிக் கொள்வாய்'' என்கின்றாள்.

'சாயல்' என்பது சமுதாய சோபை; இது வடமொழியில் லாவண்யம் எனப்படும். மாமை—அழகு; இதன் நிறம் மாந்தளிர் (குறுந், 331), அசோகந்தளிர் (கலி-15) ஆம்பலின் நார் உரித்த மெல்லிய தண்டு (நற் 6) இவற்றின் நிறத்தைப் போன்றது என்று கூறுவர்.

> உள்ஊரும் கிந்தைநோய் எனக்கே தந்துஎன்
> ஒளிவளையும் மாநிறமும் கொண்டார் இங்கே

என்று திருமங்கை மன்னன் (திரு நெடுந்-23) கூறுவதையும் அவரே,

> மணிகழுநீர் மருங்கலரும்
> வயலாளி மணவாளன்
> பணிஅறியேன்; நீசென்று, என்
> பயலைநோய் உரையாயே

என்று பகர்வதையும் (பெரி. திரு. 3.6:2) காண்க. அடிசில் என்பது, உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற் கெல்லாம் பொதுப் பெயராகும்.

இப்பாசுரத்தில் ஓர் ஐதிகம்: பெரியதிருமலை நம்பி[31] என்னும் ஓர் ஆசிரியர் 'வெண்ணெய்க்காடும் பிள்ளை' என்ற கிருட்டிணன் திருமேனியை ஆராதித்து வந்தார்; அவர் திருவாராதனம் சமர்ப்பிக்க ஆற்றலற்று அந்திமதசையை எய்தினார். ஒருநாள் பிள்ளைப் பெருமாள் சந்நிதி முன்பு தண்டன் சமர்ப்பித்து, திருத்திரையை நீக்கச்செய்து,

31. இராமாநுசரின் ஆசிரியர்களில் ஒருவரான திருமலை நம்பி வேறு; இவர் வேறு.

சாயலொடு மணியாமை
 தளர்ந்தேன்நான் இனிஉனது
வாயலகில் இன்னடிசில்
 வைப்பாரை நாடாயே

என்று கைகூப்பி விண்ணப்பம் செய்ததாக வரலாறு. "அடியேன் ஆசாரியன் திருவடி அடையாநின்றேன்; இனி திருவாராதனம் கண்டருளப் பண்ணுவாரைத் தேடிக் கொள்வாய்" என்பது குறிப்பு.

120

மானேய் நோக்கி மடவாளை
 மார்பிற் கொண்டாய் மாதவா
கூனே சிதைய உண்டையில்
 நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா
வானார் சோதி மணிவண்ணா
 மதுசூ தாநீ யருளாய்உன்
தேனே மலருந் திருப்பாதம்
 சேரு மாறு வினையேனே[32]

[மானேய் நோக்கி— மானின் பார்வை போன்ற பார்வையினையுடையளாகிய திருமகள்; கோவிந்தன்—சீராமன்; பூமியைக் காப்பவன்; கோ—பூமி; வான் —மோட்ச உலகம்; மதுசூதன் மதுஎன்ற அரக்கனைக் கொன்றவன்]

இது நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலுள்ள பாசுரம், "மானின் பார்வை போன்ற பார்வையினை யுடையளாகிய திருமகளை மார்பில் தரித்திருப்பதால் மாதவன் என்னும் பெயரினை யுடையவனே! கூனியின் கூன்நிமிர்த்த

32. திருவாய் 1.5;5

கோவிந்தனே! பரமபதம் நிரம்பும்படியான நிறைந்த ஒளியையுடைய நீலமணி போன்ற நிறத்தையுடையவனே! மது என்னும் அரக்கனைக் கொன்றவனே! உன்னுடைய தேன்மலர்கின்ற திருவடித் தாமரைகளை பாவியான அடியேன் சேரும்படி திருவருள் புரிவாய்'' என்பது பாசுரத்தின் பொருள்.

இந்தப் பாசுரத்தில் ''கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்'' என்பதற்கு இரண்டு வரலாறுகளைக் கூறுவர் வியாக்கியாதாக்கள்.

(1)இராமாவதாரத்தில் ;வனவாசத்திற்குக் காரணமான கூனியைச் சொல்லும்போது இளமையில் சுண்டுவில் கொண்டு திரிகின்ற காலத்தில் பெருமாள் லீலாரசம் அநுபவித்தார் என்பதுஒருவரலாறு. இப்போது ,கோவிந்தா என்பதற்குப் பூமியைக் காப்பவன் என்பது பொருள். இங்கு கூனே சிதைய—(மந்தரையின்) கூன் முன்னும்பின்னும் தள்ளுண்ணும்படியாக (நோவு அடையும்படியாக); உண்டைவில்—சுண்டு வில்லைக் கொண்டு; நிறத்தில்—மருமத்திலே; தெறித்தாய்—எய்தாய். இவ்வாறு பொருள் கொள்ள வேண்டும்.

(2)கிருட்டிணாவதாரத்தில்: பலராமனும் கண்ணபிரானும் வில்விழவுக்கென்று கம்சனால் அழைக்கப் பெற்று மதுரைக்குச் செல்லுங்கால், அரசவீதியில் சந்தனக் கிண்ணத்தைக் கையிலேந்தி வருகின்ற மங்கைப் பருவமுடைய கூனியைக் கண்டு ''நங்காய், யாருக்கு நீ இந்த பூச்சுக்கொண்டு செல்லுகின்றாய்?'' என்று கண்ணன் பரிவுடன்கேட்க; கண்ணனின் திருக்கண்களால் மனம்கவரப் பட்ட அவள், ''அழகனே. நான் நைகவக்கிரை என்பவள். கம்சனுடைய வேலையாள். சந்தனம் முதலிய பூச்சுகள் சித்தம் செய்வதற்காக நியமிக்கப் பெற்றவள்.'' என்றாள். கண்ணன் ''எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குத் தருக'' என்றவுடன் அவளும்

அப்படியே அன்புடன் அதனைத் தன் திருமேனியில் பூசி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சிப் பெருக்கினாலே நடுவிரலும் முன்விரலும் கொண்ட தன் நுனிக் கையினாலே அவளது மேல்வாய்க்கட்டையைப் பிடித்து தன் திருவடிகளால் அவளது கால்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணல் நிமிர்த்து அவளை மகளிற் சிறந்த உருவினளாக்கியருளினன் என்பது கதை.

இந்த இரண்டாவது சமாதானத்தை நம்பிள்ளை: 'அன்றிக்கே, தீம்பு சேருவது கிருஷ்ணனுக்கே யாகை யாலே போம் பழியெல்லாம் அமணன்தலையோடே என்னுமாப்போலே அவன் தலையிலே ஏறிட்டுச் சொல்லுதல்' என்று குறிப்பிடுவர். அதாவது—'கூனே சிதைய உண்டை நிறத்தில் தெறித்தாய்' என்று இராமபிரா னுடைய சரிதையைச் சொல்லிவிட்டுக் குணக் கடலாகிய இராமபிரான் இப்படிப்பட்ட ஒரு தீம்பு செய்ததாகச் சொல்வதற்குத் திருவுள்ள மில்லாமல்,

'பல்லாயிரம் இவ்வூரில்
பிள்ளைகள் தீம்பு செய்வார்
எல்லாம் உன்மேலன்றிப் போகாது'[33]

என்று யசோதைப் பிராட்டிவாக்கில் வைத்துப் பெரி யாழ்வார் பேசுவது போல ஊரில் நடைபெறும் தீம்புகளை யெல்லாம் தனக்கே கொள்ளப் பிறந்த கண்ணபிரான் மேலே இந்தத்தீம்பையும் ஏறிட்டு விடலாமென்று ஆழ்வார் திருவுள்ளம்பற்றிப் போலும் 'கோவிந்தா'' என்று கிருஷ்ணனை நினைந்து பேசுகின்றார்.

'போம்பழியெல்லாம் அமணன் தலையோடே' என்ற நம்பிள்ளை சூக்தியில் அடங்கிய வரலாறு இது: கள்ளன் ஒருவன் அந்தணன் ஒருவன் வீட்டில் சுன்னமிட்டான்.

---

33. பெரியாழ். திரு. 2. 8: 5

அந்தச் சுவர் அன்றைக்குத்தான் வைக்கப்பெற்ற ஈரச் சுவராகையால், சுவரால் அமுக்கப்பெற்று கள்ளன் மாண்டு போனான். இந்நிலையில் கள்ளனின் உறவினர் வந்து அந்தணனைப் பழிதர வேண்டுமென்று நிர்ப்பந்தித்தனர். பின்னர் இரு திறத்தாரும் அரசன்பக்கல் சென்றனர். அந்த அரசனோ அறிவற்றவன்: மூர்க்கன். அவன் அந்தணனை நோக்கி, "அந்தணா, நீ ஈரச்சுவர் வைத்ததனாலன்றோ அவன் முடிந்தான். ஆகையால் நீ பழிகொடுக்க வேண்டும்" என்றான். அந்தணன், "ஐயா, இது எனக்குத் தெரியாது; சுவர் வைத்த பணியாளைக் கேட்கவேண்டும்" என்று பதிலிறுத்தான். பின்னர்ப் பணியாளை வரவழைத்து, "நீ தானே ஈரச்சுவர் வைத்தாய்; நீதான் பழிதரவேண்டும்" என்று சொல்ல, அவனும், "தண்ணீர் விடுகின்றவன் அதிகமாக விட்டிட்டான்; நான் இதற்குப் பொறுப்பல்லன்" எனத் தப்பித்துக் கொண்டான். பின்னர்த் தண்ணீர்விட்டவனை அழைத்து விசாரித்தபோது அவன், "குசவன் பெரும்பானையைத் தந்தான்;அதனால் நீர் அதிகமாயிற்று; நான் என்ன செய்வேன்?" என்று கூறி நழுவினான். குசவன் அழைத்து விசாரிக்கப் பெற்றான். அவனும், "என்னால் வந்ததன்று; நான் பானையைச் சிறிதாகவே செய்ய நினைத்தேன்; அதனைச் செய்து கொண்டிருந்தபோது ஒரு வேசி போகவரத் திரிந்தாள்; என் கவனம் கலைந்தது. அவளைப் பார்க்கின்ற பராக்கிலே பானை பெருத்து விட்டது. நானென்ன செய்வேன்?" என்று மறுமொழி கூற, பிறகு தாசியை அழைத்து விசாரிக்கும்போது, அவளும், "என்னால் வந்ததன்று; வண்ணான் என் சேலையை விரைவில் தராமையாலே நான் போகவரத் திரிந்தேன்" எனப் பதில் கூறிவிட்டாள். பிறகு வண்ணான் அழைத்து விசாரிக்கப் பெற்றான். அவனும், "ஐயனே, நான்இதற்குப் பொறுப்பல்லேன்; துணிதுவைக்கும் துறையிலே கல்லின் மீது ஓர் அமணன் (திகம்பர சாமி) உட்கார்ந்திருந்தான். எவ்வளவு உரப்பியும் அவன் எழுந்து செல்லவில்லை; பிறகு அவனாகவே எழுந்து சென்ற பிறகு சேலையைத்

தோய்த்துத் தரவேண்டியதாயிற்று. நான் என்ன செய்வேன்? அந்தஅமணனே தாமதத்திற்குக்காரணன் ஆவான்" என்று பதிலுறுத்தான். பின்னர் அந்த அமணனைத்தேடிப் பிடித்துக் கொணர்ந்து, "நீயன்றோ இத்தனையும் செய்தாய்? நீதான் பழிகொடுக்க வேண்டும்" என்று அரசன் கட்டளையிட, அவன் மௌனியாகையாலே ஒன்றும் விடை கூறாதிருந்தான். மூடஅரசன், "உண்மையில் பழிதன்னிடத்திலுள்ளதனால்தான் இவன் வாய்திறந்திலன்; இவனே குற்றவாளி" என்று தீர்மானித்து அவன்தலையை அரியக் கட்டளையிட்டான். இக்கதை அந்யாயதந்ய சரிதத்திலுள்ளது.

அமணன் குற்றம் செய்யாதிருக்கவும் பழி அவன் தலையிலே ஏறினாப்போல கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீம்பும் அவன் தலையில் ஏறுமென்று விநோதமாகக் காட்டப் பெற்றது.

121

பரிவதில் ஈசனைப் பாடி
விரிவது மேவல் உறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப்
புரிவது வும்புகை பூவே.[34]

[பரிவது இல்—துன்பமற்ற; பாடி—துதி செய்து; விரிவது—சொரூப மலர்ச்சியை; மேவல்—பெறவேண்டுமென்கின்ற; பிரிவகை—விலகிப் போதல்; நல்நீர்—நல்ல தீர்த்தம்; தூய்—சமர்ப்பிப்பது; புரிவது (மீண்டும்) சமர்ப்பிப்பது; புகை—தூபம்; பூ—மலர்]

34. திருவாய் 1.6:1

இது நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரம். எம்பெருமான் பரிபூர்ணனன் ஆகையாலே எளிதில் ஆராதிக்கத் தக்கவன் என்கின்றார். அதாவது, குற்றமென்பது சிறிதும் இல்லாத இறைவனை வாயினாற்பாடி ஆன்ம சொருபத்தின் மலர்ச்சியைப் பெறுதலில் உறுதியை உடையவர்களே! பிரிதற்கு வகை இல்லாமல், நீங்கள் செய்ய வேண்டுவதும் நல்ல நீரைத் தூவிப் புகையைப் புகைத்துப் பூவை அவன் திருவடிகளில் இடுதலே யாகும்'' என்கின்றார்.

'புரிவதுவும் புகை பூவே': இதிலுள்ள ஐதிகம். பராசர பட்டர் இந்தப் பாசுரத்தை உபந்யசிக்கும்போது, ''இவ்விடத்தில் அகிற்புகை என்றாவது கருமுகைப் பூ என்றாவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுகை[35]யிட்டுப் புகைக்கலாம்; கண்ட காலிப் பூவும் சூட்டலாம்'' என்றாராம். இதைச் செவிமடுத்த நஞ்சீயர் '' 'கண்டகாலிப் பூவே எம்பெருமானுக்குச் சாத்தலாகாது' என்று சாத்திரம் மறுத்திருக்க, இப்படி அருளிச் செய்யலாமோ?'' என்று வினவ, அதற்குப் பட்டர் அருளிச் செய்த ரஸோக்தி: ''சாத்திரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப் பூ எம்பெருமானுக்கு ஆகாது என்று மறுத்தபடியன்று; அடியார்கள் அப்பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே என்று பக்தர்கள் பக்கலில் தயையினால் சாத்திரங்கள் தவிர்த்தனவே யன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை.

கண்ணார் துழாயும் கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்முன் கண்டக்கால்![36]

[கள்ஆர்—தேன் பொருந்திய; கணவலர்—அலரி மலர்; முள்ஆர்—முள் பொருந்திய; முளரி—தாமரைப் பூ; ஆம்பல்—ஆம்பல் மலர்]

---

35. செதுகை — தச்சன் செதுக்குகின்ற சிராய்; கூளம்—பதர்.

36. பெரி. திரு. 11. 7: 6

என்று இறைவனுக்கே உரிய திருத்துழாயோடு அதற்கு வேறுபட்ட பூக்களையும் ஒரு சேர எடுத்துத் திருமங்கை மன்னன் அருளிச் செய்தது கண்டீரே! இதனால் இறைவன் பொருளில் ஏற்றத் தாழ்வு பார்ப்பதின்று என்பது விளங்குமே! மற்றும், பிரகிருதி சம்பந்தமில்லாத பொருள் தான் வேண்டுமென்று இருந்தானாகில் 'புள்ளாய் ஓரேன முமாய்' அவதரிப்பானோ? வைகுண்டத்திலிரானோ?'' என்று அருளிச் செய்தாராம்.

பின்னர் நஞ்சீயர் வராக புராணம் பார்த்துக் கொண்டு வரும்போது 'வராக நாயனார்க்கு முத்தக்காசை (கோரைக் கிழங்கு) அமுது செய்விப்பது' என்று அதில் கூறப்பெற்றிருத்தலைக் கண்டதும், 'இஃது என்ன மெய்ப் பாடுதான்!' என்று மிகவும் ஈடுபட்டதாகவும் வரலாறு.

122

அமுதம் அமரர்கட் கீந்த
நிமிர்சுடர் ஆழி நெடுமால்
அமுதிலும் ஆற்ற இனியன்
நிமிர்திரை நீள்கட லானே.[37]

[அமரர்கள்—தேவர்கள்; ஈந்த—கொடுத்த; நிமிர் சுடர்—வளர்க்கின்ற ஒளி; ஆழி—சக்கரம்; நிமிர் திரை—அலை எறிகின்ற; நீள்கடல்—விசாலமான கடல்; அமுதிலும்—அமுதத்தை விட; ஆற்ற இனியன்—மிக்க இனிமையுடையவன்]

எம்பெருமான் ஆராதனைக்கு எளியவன் என்று கூறும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார்,

37. திருவாய். 1.6;6

"மிக்கு உயர்ந்த அலைகளையுடைய நீண்ட திருப்பாற் கடலில் அறிதுயில் செய்கின்றவன், அமுதத்தைத் தேவர் கட்குக் கொடுத்த, நிமிர்ந்து விளங்குகின்ற பிரகாசத்தை யுடைய சக்கரத்தைத் தரித்த நெடுமால்; அவன் அமுதத் தைக் காட்டிலும் மிக்க இனிமையுடையவன் ஆவான்" என்கின்றார்.

'அமுதிலும் ஆற்ற இனியன்': தேவர்கள் வாசி அறிவார்களாகில் இவனையன்றோ பற்றுதல் வேண்டும்? ஆற்ற இனியன்—மிகவும் இனியன். நம்பி திருவழுதி நாடு தாசர்—'இத் தேவ சாதி வெறும் மரையோ?[38] உப்புச் சாறு[39] கிளருவது எப்போதோ? என்று கவிழ்ந்து பார்த்துக் கிடப்பதே இவன் அழகையும் இனிமையையும் விட்டு!' என்பராம்.

123

மாயன்என் நெஞ்சில் உள்ளான்,
மற்றும் எவர்க்கும் அதுவே;
காயமும் சீவனும் தானே;
காலும் எரியும் அவனே;
சேயன், அணியன், எவர்க்கும்
சிந்தைக்கும் கோசரன் அல்லன்;
தூயன் துயக்கன் மயக்கன்
என்னுடைத் தோளிணை யானே.[40]

[மாயன்—ஆச்சரியன்; மற்றும் யவர்க்கும்—வேறு யாருக்கேனும்; காயம் — உடம்பு; சீவன்-உயிர்; கால்—காற்று; எரி—நெருப்பு; சேயன்-

38. மரை—மான் விசேடம்
39. உப்புச் சாறு—அமிருதம்
40. திருவாய். 1.9;6

தொலைவிலுள்ளவன்; அணியன் — அருகில் உள்ளவன்; எவர்க்கும்—எப்படிப் பட்ட ஞானி களுக்கும்; சிந்தை—மனம்: கோசரம் அல்லன் —எட்டாதவன்; தூயன்—பரிசுத்தன்; துயக் கன்—சந்தேக ஞான முடையவன்; மயக்கன்— விபரீத ஞான முடையவன்; தோள் இணை— இரண்டு தோள்கள்]

இப்பாசுரம் நம்மாழ்வார் அருளிச் செய்தது; திருவாய் மொழியிலுள்ளது. இத் திருவாய்மொழி ஆழ்வாரோடு எம்பெருமான் கலந்த வகையைப் பேசுவது. ஆழ்வா ருடைய திருமுடியிலே வீற்றிருக்க வேண்டும் என்று நினைத்த எம்பெருமான், பார்த்தனுக்குத் திவ்வியமான கண்களைக் கொடுத்து உலகமே உருவமாக இருக்கும் தனது தன்மையைக் காட்டியது போன்று, இவ்வாழ்வார்க் கும் தன்னை அநுபவிக்கைக்கு ஈடான விடாயைப் பிறப் பித்துப் (பக்தி ரூபாபந்ந ஞானத்தை விளங்கச் செய்து) பரமபதத்தில் உள்ளாரோடு பரிமாறுவது போன்று[41] பரிமாறக் கோரித் தன்னை அநுபவிக்கின்றான்.

ஆழ்வாருடைய திருமுடியிலே வந்து வீற்றிருக்க வேண்டும் என நினைத்த எம்பெருமான் முதலடியிலே அது செய்தால், நிதிகண்ட பிறவி வறியவன்போலே மகிழ்ச்சிப்

---

41. அதாவது, பிராட்டிமாரோடு பரிமாறுவது— தேவியர் என்னும் முறையாலே; திருவடியோடு பரிமாறுவது—வாகனம் என்னும் முறையாலே; திருவனந்தாழ்வானோடு பரிமாறுவது—படுக்கை என்னும் முறையாலே. இப்படி அவர்களோடு ஒரே முறையாலே பரிமாறும் பரிமாற்றங்களெல் லாம் இவர் ஒருவரோடு பரிமாறுகின்றான் (நித்திய சூரிகள் எல்லார் பக்கலிலும் பண்ணும் விருப் பத்தை ஆழ்வார் பக்கலில் பண்ணா நின்றான் என்பதாம்.)

பெருக்குத் தாங்கமாட்டாமல் தளர்ந்திடுவர் என்று கருதி, சுற்றுப் பக்கத்தில் முதலில் நின்று, அடுத்தடுத்து அருகிலும், ஒட்டியும், ஒக்கலிலும், இதயப் பகுதியிலும், தோளிலும், நாவிலும், கண்ணுள்ளேயும், நெற்றியிலும் இறுதியாக உச்சியிலும் நின்றான். ஆக, இங்ஙனே பொறுக்கப் பொறுக்கச் செய்த செயலை அநுபவித்து ஈடுபடுகின்றார் ஆழ்வார் இத்திருவாய்மொழியில்.

இங்குள்ள பாசுரத்தில் ஆழ்வார், "எம்பெருமான் என் மார்பிலிருந்து தோளிணைக்கு ஏறிவிட்டான்" என்கின்றார். "ஆச்சரியமான குணங்களையும் செயல்களையு முடையவன் என் நெஞ்சிலே தங்கியிருக்கின்றான்: இஃது என்ன சேராச் சேர்த்தி? இதனை வேறு எவரேனும் பெற்றாருளரோ? எல்லா உடல்களும் எல்லா உயிர்களும் தானே யாவான்; காற்று நெருப்பு முதலான ஐம்பெரும் பூதங்களும் அவனே யாவான்; தன் முயற்சியால் காண விழைவார்க்கு அப்பாற்பட்டவன்; அவன் அருளால் காண இருப்பார்க்கு அண்மையிலிருப்பவன்; எத்துணைப் பெரிய ஞான முடையார்க்கும் சிந்தையால் நினைப்பதற்கும் ஒண்ணாதவன்; யசோதை முதலானவர்க்கும் பரம் பொருள் என்ற வாசனையு மில்லாத தூய எளிமையினை யுடையவன்; நானல்லேன் என்றிருந்த என் மனத்தை மாற்றினவன்; என்னோடு கலந்தவனான இறைவன் என் தோள்களில் இருக்கின்றவனானான்" என்று பேசுகின்றார் ஆழ்வார் இத்திருப்பாசுரத்தில்.

இவ்விடத்தில் அரும்பத உரையில் கண்ட ஓர் ஐதிகம்: முற்காலத்தில் பட்டருடைய காலட்சேப கோஷ்டியில் சாத்திர ஞானமுடைய ஓர் அந்தணன் பலகாலும் வந்து போவதுண்டு; அவனைக் கண்டால் பட்டர் ஆதரவு காட்டா மல் சாமானியமாகப் பேசி அனுப்பி விடுவார். சாத்திர ஞானம் முதலியன இல்லாத ஒரு ஸ்ரீவைணவனும் வந்து போவதுண்டு; அவரைக் கண்டால் மிகவும் அருள்காட்டி

ஆதரித்துக் கொண்டு எழுந்தருளியிருப்பர். இந்த இரண்டு விதப் போக்குகளையும் பலகாலும் கூர்மையாகக் கவனித் தார் ஒருவர். பட்டரை நெருங்கி வந்து சேவித்து, 'சுவாமி, தேவரீருடைய கோஷ்டிக்குப் பலகாலும் வந்து போகும் சாஸ்திரி மகா வித்துவான்; மிக்க புகழ் படைத்தவர்; அவர் வந்தால் சாதாரண உபசரணை; மற்றொரு சாது ஸ்ரீ வைணவர் வரக் கண்டால் மிகவும் அன்புடன் உபசரணை. மதிப்பு தர வேண்டிய இடத்தில் சாதாரண உபசரணையும் கவனியாதிருக்க வேண்டிய இடத்தில் மிக்க உபசரணையும் செய்தருள்வதற்குக் காரணம் அருளிச் செய்வீர் என வேண்டினார். அதற்கு பட்டர், "அவர்கள் இருவரும் எப்போதும் போலவே நாளையும் வருவார்கள்; அப்போது நீரும் பார்த்திரும்; வேறுபாட்டை நீரே அறிந்து கொள்வீர்" என்று மறுமொழி பகர்ந்தார்.

மறுநாள் காலையில் அந்தணன் முதலில் வந்து சேவித் தான். பட்டர் அவனை எப்போதும்போலே வினவியருளி, "நீர் யாரைத்தான் பரத்துவமாக அறுதியிட்டிருப்பது?" என்று கேட்க, அவன், "சில பிரமாணங்கள் நான்முகனைப் பரத்துவமாகப் பேசிகின்றன; சில பிரமாணங்கள் உருத் திரனைப் பேசுகின்றன; சில பிரமாணங்கள் விஷ்ணுவைப் பேசுகின்றன; ஆகவே, பிரமாணங்களெல்லாம் இப்படி மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றன; இந்நிலையில் தத்துவ நிர்ணயம் எப்படிப் பண்ணுவது? அவரவர்களுடைய அபிமானத்தின்படி சொல்லிக் கொள்ள வேண்டியதுதான்" என்று விடையளித்தான். அவன் சென்ற பின்னர் அந்த சாது ஸ்ரீவைணவர் வந்தார். அவரை நோக்கி, "தேவரீர் யாரைத்தான் பரத்துவமென்றிருப்பது?" என்று பட்டர் வினவ, அவரும் "சிரீயபதி நாராயணனே பரத்துவமென்றும் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றும் பலகாலும் அருளிச் செய்துள்ளீர்கள்; இது தவிர, அடியேன் வேறொன்றும் அறியேன்" என்று விடையிறுத்தார். பட்டர் அவரையும் அனுப்பிவிடுகின்றார்.

பின்னர், முன்னர் வினாவை எழுப்பிய சுவாமியை நோக்கி "வேறுபாடு கண்டீரோ? யாருக்கு மரியாதை தர வேண்டும்? நீரே சொல்லும்" என்ன, அவரும் வியப் பெய்திப் போனார். "தூயன் துயக்கன் மயக்கன்" என்ற இடத்திற்கு இஃது ஏற்ற விளக்கம் ஆகும்.

124

கண்ணுள் ளேநிற்கும்
காதன்மை யால்தொழில்,
எண்ணி லும்வரும்
என்னினி வேண்டுவம்,
மண்ணும் நீரும்
எரியும்நல் வாயுவும்
விண்ணு மாய்விரி
யும்எம் பிரானையே?42

[கண்ணுள்ளே நிற்கும்—நான் காணும்படியாக இருப்பவன்; காதன்மையால் — பக்தியோடு (பிரிவில் தரிக்கமாட்டாத பக்தி); தொழில்—தொழுதால்; எண்ணிலும்—ஒன்று, இரண்டு என்று எண்ணினாலும்; என் இனி வேண்டுவம் —இனிமேல் என்ன குறை; விரியும்—பரவி யிருக்கும்; எம்பிரானை—எம்பெருமானை.]

இது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம். ஈசுவரன் காரணமின்றிச் செய்யும் உபகாரத்தைப் பேசும் திருவாய்மொழியில் வருவது. "ஐம்பெரும் பூதங்களின் உருவமாய் விரிகின்ற எம்பெருமான், பரம பக்தியோடு வணங்கினால் வணங்குகின்றவர்களுடைய கண்களில் நிற்பான்; ஒன்று இரண்டு என்பன முதலாக எண்ணுமிடத் தும் வருவான்; இறைவன் தன்மை இதுவான பின்னர் நாம்

42. திருவாய். 1.10;2

அவனிடத்தில் இரந்து வேண்டும் குறை யாது உள்ளது?'' என்கின்றார் ஆழ்வார்.

பரம பக்திக்கும் எண்ணுதற்கும் ஒக்க முகங் காட்டுதல் இறைவனது சொரூபம். இறைவன் இவ்வான்மா பக்கல் வெறுப்பின்மைக்குக் காலம் பார்த்திருந்து முகங்காட்டுவானான பின்பு இவனுக்கு என்ன குறை உண்டு? இவற்றால் வெறுப்பின்மை ஒன்றுமே பேற்றுக்கு வேண்டுவது; அதற்குப் புறம்பான யோக்கியதை அயோக்கியதைகள் பயனற்றவை என்பது கருத்து.

இப்பாசுரத்தின் கட்டுரையில் காணப்படும் ஐதிகம் : 'இவ்விடத்தில் வேல் வெட்டிப் பிள்ளைக்கு பிள்ளை அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது' என்பது. வேல் வெட்டிப்பிள்ளை என்பவர் நம்பிள்ளையின் மாணாக்கர்; பிள்ளை, நம்பிள்ளை. வேல்வெட்டிப் பிள்ளை நம்பிள்ளையைப் பார்த்துப் 'பெருமாள் கடலைச் சரணம் புகுகின்ற காலத்தில் கிழக்கு இருத்தல் முதலான சில நியமங்களோடே சரணம் புக்கார்; ஆதலின் இப் பிரபத்தி உபாயம் வேறு சாதனங்களைப்போன்று சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ?' என்று கேட்க; 'அரசரான இராகவர் கடலைச் சரணம் அடைவதற்குத் தக்கவர்' என்று பெருமாளுக்கு உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வான்; அவன்தான் பெருமாளைச் சரண்புகுகின்ற இடத்தில் 'கடலில் ஒரு முழுகிட்டு வந்தான் என்றில்லை;' ஆக, இத்தால் சொல்லிற்றாயிற்று என் என்னில்: பெருமாள் இட்சுவாகு குலத்தராய் ஆசாரத்தில் மேம்பட்டவராகையாலே, சில நியமங்களோடு சரணம் புக்கார்; ஸ்ரீவிபீஷணாழ்வான் இராக்கதர் குலத்தவனாகையாலே நின்றநிலையிலே சரணம் புக்கான்; ஆகையாலே யோக்கியனுக்கு அயோக்கியதை சம்பாதிக்க வேண்டா; அயோக்கியனுக்கு யோக்கியதை சம்பாதிக்க வேண்டா; ஆகையால் சர்வாதிகாரம் இவ்வுபாயம்'' என்று அருளிச் செய்தார். பகவானுடைய பிரபாவத்தை அறிந்த

நன் ஞானமுடையாருக்கு 'இதுவே பொருள்' என்று தோன்றும்; 'கேவலம் கிரியாமாத்திரத்திற்கே பலத்தைக் கொடுக்கும் ஆற்றலுள்ளது' என்று இருப்பார்க்கு 'இப் பொருள் பொருத்தமன்று' என்று தோன்றும்.

இரண்டாம் பத்து

125

ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேறன்னை மீதிட நிமிர்ந்துமண் கொண்ட
மாறனின் மிக்குமோர் தேவும் உளதே[1]

[ஏறு-இடபம்; அதனையுடையவன் ஏறன்-சிவன்; பூவன்—பூவைப் பிறப்பிடமாக உடையவன் நான்முகன்; 'விண்தொழ — விண்ணவர்கள் தொழ; விண்—இடவாகு பெயர்; மேல் தன்னை—மேலுலகத்தை; மீதிட—மேலிடும் படி; நிமிர்ந்து—வளர்ந்து; மண்—பூமி; மால் —திருமால்]

இப்பாசுரம் திருமாலின் பரத்துவத்தை அவதாரத்தில் எடுத்து காட்டுவதாக அமைந்த திருவாய்மொழியிலுள்ளது. இதில் ஆழ்வார், "இடப ஊர்தியையுடைய சிவனையும், தாமரை மலரில் பிறந்த நான்முகனையும், தாமரைப்பூவில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாரையும் வேறுபாடின்றி அயர்வறு அமரர்கள் தொழும்படி தனது திருமேனியில் வைத்து, மேலேயுள்ள உலகங்களுக்கெல்லாம் மேலே செல்லும்படி வளர்ந்து உலகத்தை அளந்து கொண்ட அறப் பெரிய தெய்வத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கூறத் தக்க வேறு தெய்வமும் உளதோ? இல்லை" என்கின்றார்.

1. திருவாய். 2. 3: 3

மூவரையும் திருமேனியில் வைத்திருக்கும் நிலை திருமாலின் பரத்துவ நிலையாகும். 'அடியும்படிகடப்ப தோள் திசைமேல் செல்ல, முடியும் விசும்பு அளந்த'' (முதல் திருவந்-17) திரிவிக்கிரம அவதாரத்தில் பரத்துவ நிலை பளிச்சிடுவதைக் கண்டு மகிழலாம்.

சௌசீல்யத்தாலும்,[2] மூவடியால் உலகங்களையெல்லாம் அளத்தலாகிய அதிமானுஷ்ய சேஷ்டிதங்களாலும் இவனே முழுமுதற் கடவுள் என்று தெரிவித்தபடி.

திரண்டமரர் தொழுதேத்தும்
திருமால்நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும்
இருள்தீர நடந்தனையே.[3]

இங்கு 'இருள்தீர' என்றதன் பொருள் ஊன்றி நோக்கி மகிழத் தக்கது. ''எல்லார் தலைகளிலும் காலை வைத்தவனை இறைவன் என்னவோ? இவன் காலிலே துகையுண்டவர்களை இறையவர் என்னவோ?' என்கின்றார். இருள்—பரம்பொருள் அவனோ? பிறரோ? என்று ஐயுறும் அஞ்ஞானம்.

விண்தொழ வேறின்றித் தன்னுள் வைத்து-வேறு பொருள்களிலும் மனத்தைச் செலுத்துகின்ற பிரமன் சிவன் இவர்கட்கும் வேறிடத்தை மனத்தைச் செலுத்தாத பெரிய பிராட்டியாருக்கும் ஒக்க முகங் கொடுத்து வைக்கின்ற சீல குணத்தை நினைத்து விண்ணவர்கள் தொழ நிற்பார்கள்.

2 சௌசீலயம் — சீலகுணம். ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாக உடையவன், அங்கு நின்றும் சம்சாரி சேதநர் நின்றவிடத்தே வந்து அவதரித்து எளியனாமிடத்து 'சிறியாரளவிலே நம்மைத் தாழவிட்டோமே!' என்று தன் திருவுள்ளத்திலுமின்றியிருத்தல்.

3. சிலப், மதுரைக். ஆய்ச்சியகுரவை — முன்னிலைப் பரவல்-3

ஐதிகம் : 'பிரமன் முதலானோர் எப்போதும் திரு மேனியைப் பற்றியிருப்பர்களோ?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'ஒரே ஆபத்துகளிலே திருமேனியில் இடங் கொடுக் கிறான்; அந்நீர்மை விடமாட்டாமையாலே ஆழ்வார்கள் அதனையே வாய்புலற்றுகிறார்களத்தனை' என்று அருளிச் செய்தார்.

126

தேவும் எப்பொருளும் படைக்கப்
பூவில் நான்முகனைப் படைத்த
தேவன்எம் பெருமானுக்கு அல்லால்
பூவும் பூசனையும் தகுமே?[4]

[தேவும்—தேவர்களையும்; பூவில் — திருநாபிக் கமலத்தில்; தேவன் — பரதெய்வம்: எம் பெருமான்—எனது சுவாமி: பூசனை—திருவா ராதனம்; தகுமே—தகுமோ]

இது நம்மாழ்வார் அருளியது; திருவாய்மொழியிலுள்ள பாசுரம். எம்பெருமானின் பரத்துவத்தை அவதாரத்தில் எடுத்துக் காட்டும் திருவாய்மொழியில் உள்ளது. இப் பாசுரம். "தேவர்களையும் மற்றை எல்லாப் பொருள் களையும் உண்டாக்குவதற்குத் தனது திருவுந்தித் தாமரையி னின்றும் நான்கு முகங்களையுடைய பிரமனைப் படைத்த ஒளியினையுடையவனான எம்பெருமானுக்கல்லாமல் ஏனை யோர்க்கு மலர்களும் மலர்களால் அருச்சித்து வணங்கும் வணக்கமும் தகுவதாகுமோ? (ஆகாது என்றபடி)" என்கின் றார் ஆழ்வார்.

இப் பாசுரத்தைப்பற்றிய இதிகாசம் கோவிந்தர் இராமா நுசரின் சிற்றன்னையின் திருக்குமாரர். இவர் யாதவப் பிரகாசரோடு காசி யாத்திரையாகச் சென்றிருந்தபோது, கங்கையாற்றில் தீர்த்தமாடுங்கால், கோவிந்தருக்கு ஓர்

4. திருவாய் 2.2.4

இலிங்கம் கிடைத்தது. இந்த இலிங்கத்தைத் திருக்காளத்தி அருகில் ஒரு சிற்றூரில் பிரதிட்டை செய்து பக்தி செலுத்தி வந்தார். வரதராசருக்குத் திருக்கச்சி நம்பி போல வேங்கடநாதனுக்குத் திருமலை நம்பி என்பதை நன்கறிந்த இராமாநுசர் அவரைக்கொண்டு கோவிந்தரைத் திருத்த நினைத்தார். இராமநுசரின் கட்டளைப்படி திருக்காளத்தி சென்று வழக்கமாகக் கோவிந்தர் நீராடவும் பூக்கொய்யவும் வந்து கொண்டிருந்த குளத்தின் கரையில் போய்க் காத்துக்கொண்டிருந்தார் தம் சீடர்களுடன். கோவிந்தர் பூப்பறிக்கும் இடத்தில் தம் சீடர்கட்கு இப்பாசுரத்தின் சிறப்புப் பொருளை அழகாக உபதேசித்தருளினார். பூப்பறித்துக்கொண்டே இவற்றைச் செவிமடுத்த கோவிந்தர்,

'பூவும் பூசனையும் தகுமே?'

என்றஅடியின் பொருள் காதில் பட்டதும், 'தகாது தகாது' என்று தாம் விடை கூறிக்கொண்டே பூக்குடலையை விட்டெறிந்து திருமலை நம்பிகளின் திருப்பாதத்தில் வந்து சேர்ந்தார். பின்னர் கோவிந்தரை இராமாநுசரிடம் போகுமாறு கட்டளையிட்டுத் தாம் திருமலைக்குத் திரும்பி விட்டார். கோவிந்தர் இராமாநுசரைத் திருவரங்கத்தில் சந்தித்து இராமாநுசரிடம் திரிதண்டமும் காவியாடையும் பெற்றுத் துறவியானார். கோவிந்த பட்டரைக் கோவிந்தப் பெருமாள் என்று குறிப்பிட்டனர், திரு அரங்கத்துப் பாகவதர்கள்.

127

ஒத்தார்மிக் காரை இலையாய மாமாயா,
ஒத்தாயெப் பொருட்கு முயிராய்,என் னைப்பெற்ற,
அத்தாயாய்த் தந்தையா யறியாதென அறிவித்த
அத்தா,நீ செய்தன அடியே னறியேனே.[5]

5. திருவாய். 2.3:2.

[ஒத்தார்—சமானமானவர்கள்; மிக்கார்—மேற்பட்டவர்கள்; ஒத்தாய்—ஒப்பாக அவதரித்தவன்; அத்தா—மகோபகாரகனானவனே.]

இது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம், அடியார் குழாத்தைக் கூடும் ஆசையுற்று உரைக்கும் திருவாய்மொழிப் பாசுரத்தில் ஒன்று. இதில் ஆழ்வார், "ஒத்தவர்களும் உயர்ந்தவர்களும் இல்லாத மிகப் பெரிய ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடையவனே! அவ்வப் பொருள்கட்குத் தக்க நிலைகளை யுடையவனாகி வந்து அவதரித்தவனே! சுவாமியே! என்னுடைய உயிராகி, என்னைப் பெற்ற அந்தத் தாயாகித் தந்தையுமாகி, அறியாதனவற்றை யெல்லாம் அறியச் செய்து நீ செய்த காரியங்களை அறியேன்'' என்கின்றார்.

'அகன்ற நம்மை அவன் திருவடிகளில் சேர விட்டது நெஞ்சு என்றாலும், அந்த நெஞ்சையும் இசைவித்த சர்வேசுவரனைக் கொண்டாடும் இந்தப் பாசுரத்தில் ஓர் ஐதிகம்: எம்பெருமானாருடைய காலட்சேப கோஷ்டியிலே இப்பாசுரம் வந்த அளவில், 'இவ் வான்மாவுக்கு முதல் குரு யார்?' என்று ஒரு வினா எழுந்தது; அவன் குழுமி யிருந்த முதலிகளில் (பெரியோர்கள்) சிலர் 'ஆசாரியன்' என்றார்கள்; மற்றும் சிலர் 'ஆசாரியனுடைய ஸ்ரீபாதத்திலே கொண்டு சேர்த்த ஸ்ரீவைஷ்ணவன் முதல் குரு' என்றார்கள் முடிவில் எம்பார் அருளிச் செய்ததாவது: '' 'இசைவித்து என்னை உன் தாள் இணைக் கீழ் இருத்தும் அம்மானே'[6] என்று ஆழ்வாரே அருளிச் செய்கையாலே, அகவாயில் இருந்து இசைவித்த சர்வேசுவரனே முதல் குரு: ஆசாரியன் அழைத்தாலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவன் அழைத்தாலும் இவன் மாட்டேனென்று சொல்லி விட்டால் செய்யலாவதில்லை; அப்படிச் செய்யாமல் இசைவித்தது சர்வேசுவரனுடைய கிருத்திய மிறே' என்பதாக.

---

6. திருவாய். 5.8:9.

128

சேர்ந்தார் தீவினைகட்
  கருநஞ்சைத் திண்மதியை,
தீர்ந்தார் தம்மனத்துப்
  பிரியா தவருயிரை,
சேர்ந்தே போகல்கொடாச்
  சுடரை அரக்கியைமூக்
கீர்ந்தா யை, அடியேன்
  அடைந்தேன் முதல்முன்னமே.[7]

[சேர்ந்தார்—பக்தர்கள்; தீவினை—கொடிய பாவம்; திண்மதி—திடமான எண்ணம்; தீர்ந்தார்—தனக்கே அற்றுத் தீர்ந்தவர்கள்; அவர் உயிரே—அவர்கட்கு உயிரா யிருப்பவன்; சுடர்—ஒளியுருவாயுள்ளவன்; ஈர்ந்தாயை—அறுத்தவனை; முதன் முன்னம் — அநாதி காலம்.]

இப்பாசுரம், அடியார் குழாத்தைக் கூடும் ஆசையுற்று ஆழ்வார் உரைத்தலைக் கூறும் திருவாய்மொழியிலுள்ளது. இதில் ஆழ்வார், "தன்னை யடைந்தவர்களுடைய தீவினைகட்குக் கொடிய நஞ்சாக இருப்பவனும், அவ் வடியார்கட்குத் தன்னாலும் அசைக்க வொண்ணாத அறிவினைக் கொடுக்குமவனும், தன்னை யொழியச் செல்லாதவர்களுடைய மனத்தினின்றும் பிரியாமல் அங்கே தங்கியிருந்து அவர்களுடைய உயிரைச் சிற்றின்பங்களால் சோர்ந்து போகும்படி விடாத ஒளியுருவ மானவனும், சூர்ப்பணகையினுடைய மூக்கினை யறுத்தவனும் ஆன உன்னை உனக்கு அடியவனான நான் இவ்வுயிர் உள்ள அன்றே அடைந்தேனே யன்றோ?" என்கின்றார்.

---

7. திருவாய். 2.3:6.

திண்மதியை : திண்ணியதான மதியைக் கொடுக்குமவனை என்றபடி. இதிலுள்ள **இதிகாசம் :** முன்பு அம்பரீடன் எம்பெருமானை நோக்கித் தவம் செய்தான். அவனுடைய திடமான எண்ணத்தைச் சோதிக்கும் பொருட்டு எம்பெருமான இந்திரன் வேடத்தைத் தரித்துக் கொண்டு அவன் எதிரே வந்து நின்று, "வேண்டும் வரத்தைப் பெற்றுக் கொள்க' என்று சொல்ல, அது கேட்ட அம்பரீடன், "இந்திரனே, நான் உன்னை ஆராதிப்பவன் அல்லன்; என்னுடைய சமாதி பங்கம் பண்ணாது போக மாட்டாயோ? உன்னைக் கும்பிடுகின்றேன, போ" என்றானாம். திண்ணிய மதி இப்படி இருக்கும் என்று காட்டியபடி. இறைவன்தானே அழிக்கப் பார்த்தாலும் அழிக்க வொண்ணாதபடியாக இருக்கும் என்றவாறு—இந்த வரலாறு பாசுரம்—169 லும் வந்துள்ளது.

129

ஆடி யாடி யகங்க ரைந்திசை
பாடிப் பாடிக்கண் ணீர்மல்கி எங்கும்
நாடி நாடி நரசிங்கா வென்று
வாடி வாடுமிவ் வாணுதலே.[8]

இது நம்மாழ்வார் நாயகி நிலையிலிருந்து கொண்டு பேசும்திருவாய்மொழிப் பாசுரம். 'தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் தலைவனை நோக்கிக் கூறுதல்' என்ற பாவனையில் அமைந்தது. "ஒளிபொருந்திய நெற்றியினையுடைய இவள் நின்றவிடத்தில் நில்லாமல் பலவிடங்களிலும் உலாவி மனமும் கரைந்து, இசையோடு பலகாலும் பாடிக்கொண்டு, கண்களில் நீர் நிறையப் பெற்று எல்லா இடங்களிலும் தேடித்தேடி, 'நரசிங்கனே!' என்று மிகவும் வாடா நின்றாள்" என்று திருத்தாயார் சொல்லுகின்றாள்.

---

8. திருவாய். 2.4:1.

'ஆடியாடி' என்றது தன் மகளின் சேட்டைகளைச் சொன்னபடி. 'எம்மானைச் சொல்லிப் பாடி எழுந்தும் பறந்தும் துள்ளுகின்ற' (திருவாய் (3.5;1) சேட்டைகள் உண்டல்லவா? அவற்றைச் சொன்னவாறு நெஞ்சு நீர்ப் பண்டமாக உருகுகின்றபடி சொல்லுகிறது 'அகங் கரைந்து' என்று. அப்படி நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகி நிற்கும்போது ஆற்றாமையாலே கூப்பிடுகின்ற கூப்பீடு அழகியதொரு இசையாகத் தலைக்கட்டி யிருப்பதாலே 'இசைப்பாடிப் பாடி' என்றது. ஆயின் கூப்பீட்டைப் பாட்டு என்னலாமோ? எனின்: ஆற்றாமையாலே துடித்த துடிப்பு ஆடலானாற்போலே 'பண்ணை வென்ற இன்சொல் மங்கை' (திருச்சந்த-105) யாதலின் ஆற்றாமையாலே கூப்பிட்ட கூப்பீடு பாட்டாய் விழா நின்றது. 'பாடிப் பாடி' என்ற அடுக்கு, முதல் கூப்பீடு போலன்றி, இரண்டாம் கூப்பீடு தளர்ந்திருந்தலையும் தெரிவிக்கும்.

'அகங் கரைந்து' என்று சொன்னபடி உருகின மனத் தத்துவமானது இசையாய் வழிந்தது போக எஞ்சி நின்ற பகுதி கண்ணீராய் வழிந்தோடுகையாலே கண்ணீர் மல்கி எனப்பட்டது. 'எங்கும் நாடி நாடி' என்பதால் திக்குகள் தோறும், கண்களைச் சுழல விட்டுப் பார்த்தபடியே இருக்கின்றாள் என்பது தெரிவிக்கப்பெறுகின்றது. எம்பெருமான் ஆபத்தில் வந்து உதவத் தவறமாட்டா னாகையாலே கிடீரென்று ஓடிவந்தே தீருவேன் என்று அறுதியிட்டுச் சுற்றிலும் பார்த்தபடியே இருக்கின்றாள். பராசர பட்டர் இந்த அடியை உபந்யசிக்கும்போது 'பராங்குசநாயகி தன் சேலையையும் உதறியுதறிப் பார்க்கிறாள் காணும்' என்று அருளிச் செய்வாராம். இதற்குக் கருத்து என் எனில்: ஆழ்வார் 'கடல்மலி மாயப் பெருமான் கண்ணன் என் ஒக்கலையானே' (திருவாய் 1.9:4.) என்று அருளிச் செய் திருக்கையாலே அதனை அடியொற்றிய ரசோக்தி இது. இந்த ரசோக்தி அநுபவித்து மகிழத் தக்கது.

'நரசிங்கா என்று வாடிவாடும்' என்ற தொடர் 'பிரக லாதனைப்போலே ஒரு தம்பம் இல்லாதபடி இருக்கை யாலே கொம்பை இழந்த தளிர்போலே வாடும் 'முதல் வாட்டம் தளிர்' என்று கூறத்தக்கவாறு உள்ளது, அடுத்த மணித்துளியில் வாட்டம், 'வாடி வாடும்' என்கின்றாள்.'' என்ற பொருளைத் தெரிவிக்கின்றது. இன்னும் இத் தொடரில் ''தமப்பன் பகையானாலோ உதவுவது, நீர் பகையானால் உதவலாகாதோ? ஞான நிஷ்டர்க்கோ உதவுவது, பக்தி நிஷ்டர்க்கு உதவலாகாதோ? ஆண் களுக்கு உதவுவது, பெண்களுக்கு உதவலாகாதோ? சேராத வடிவு[9] சேர்த்து உதவினால் உதவுவது, இருந்தபடியே உதவ லாவார்க்கு உதவலாகாதோ? ஓர் அதிகாரி நியதி, ஒரு கால நியதி, ஓர் அங்க நியதி என்று நிர்ப்பந்தம் வேண்டுமோ இவளுக்கு? இவளுடைய இரட்சணத்திற்கு ஏதேனும் முகம்[10] பண்ணவேண்டுமோ?'' என்ற தொனிப் பொருளும் தோன்றும். மேலும் 'வாடுவாடும்' என்கையாலே முடியும் படியான நிலைமை நேர்ந்த அளவிலும் நப்பாசையினால் உயிரை ஒருவாறு தரித்து வைத்துக்கொண்டு இருக் கின்றமை தோற்றுவிக்கப் பெற்றது.

இவ்வாணுதல்—ஒளியுடன் கூடிய நுதலையுடைய இவள். 'இவ்வழகுக்கு இலக்கானார் படுவதை இவள் படுவதே!' என்பாள் 'வாடும் வாணுதல்' என்கின்றாள். இவள் முடிந் தால், உம்முடைய மேன்மையாலே 'இன்னம் இப்படிப்பட்ட தொரு வடிவத்தை உண்டாக்கிக் கொள்ளலாம்' என்றிருக் கின்றீரோ? என்பது திருத்தாயாரின் உட்கோள். இந்நிலை யில் இவளை 'வாணுதல்' என்னக் கூடுமோ? என்னில்: 'ஊனில்வாழ் உயிரில்'[11] கலவியாலுண்டான் புகர் இன்னம்

9. சேராத வடிவு—மனித வடிவும் விலங்கு வடிவும்.

10. பிரகலாதனைக் காத்தற்குச் சிங்க முகத்தை அடைந்தது போன்று, இவளைக் காத்தற்கு வேறு முகம் கொள்ளவேண்டாம் என்றபடி.

11. திருவாய். 2.3.

அழிந்ததில்லையாதலின் இவ்வாறு கூறுகின்றாள். அம்பு பட்டு முடிந்தாரையும் நீரிலே புக்கு முடிந்தாரையும் திருமுகமண்டலத்தில் நிழலிட்டுத் தோற்றுவதை அறியக் கூடுமாதலின் 'குணாதிக விஷய விரகத்தாலே வந்த இழவு' என்னுமிடம் 'முகத்தின் எழிலே தெரியா நின்றது' என்பது பெற வைக்கப்பெற்றது.

ஐதிகம் : குணாதிக விஷயமாகையாலே [12] முடிந்து பிழைக்கவும் ஒட்டாது; 'பரதாழ்வான் இன்னம் ஒருகால் அவ்விராமபிரானுடைய முகத்தில் விழிக்கலாமாகில், அருமந்தபிராணனைப்பாழே போக்குகிறது?என்'என்று இராச்சியத்தையும் தொட்டுக்கொண்டு கிடந்தான் அன்றோ?

130

திருவுடம்பு வான்சுடர்;செந்
    தாமலரைகண்; கைகமலம்;
திருவிடமே மார்வம்;
    அயனிடமே கொப்பூழ்;
ஒருவு இடமும் எந்தை
    பெருமாற் கரனே; ஓ!
ஒருவுஇடமும்ஒன் றின்றியென்
    னுள்கலந் தானுக்கே.[13]

[திரு உடம்பு—திருமேனி; வான்சுடர்—திவ்விய ஒளி; கமலம்—தாமரைப் பூ: திரு இடம்—பிராட்டிக்கு இருப்பிடம்; கொப்பூழ்—நாபி; அயன்—நான்முகன்; ஒருவு இடம்—நீங்கின இடம்; அரன்-உருத்திரன்; என்னுள் கலந்தானுக்கு—என்னோடு சேர்ந்தவனுக்கு]

12. "விலட்சண விஷயத்தைப் பிரித்தால் முடிகையும் அரிது; ஜீவிக்கையும் அரிது; வைலட்சண்யம் ஜீவிக்க வொட்டாது, நசைமுடியவொட்டாது" என்பது இருபத்து நாலாயிரப்படி (பெரியவாச்சான் பிள்ளை)

13. திருவாய் 2.5:2

இறைவன் ஆபரணாதிகளுடன் வந்து கலக்க ஆழ்வார் மகிழ்தலை எடுத்துக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "வெற்றிடம் சிறிதும் இல்லாதபடி என்னுள் கலந்தவனான எந்தை பெருமானுக்கு அழகிய திருமேனி பகலவனைப் போன்றுள்ளது; திருக்கண்கள் செந்தாமரை மலர்களையொத்துள்ளன; திருமகளுக்கு இருப்பிடம் திருமார்பு ஆகும்; பிரமனுடைய இடம் திருவுந்தித் தாமரையாகும்; ஒழிந்த மற்றையிடம் சிவன் இருக்கும் இடமாகும்" என்கின்றார்.

ஐதிகம் : இப்பாசுரத்தை அநுபவிக்கும்போது நஞ்சீயர் மிகவும் ஈடுபட்டு அருளிச் செய்வதொரு வார்த்தை யுண்டு; அதாவது "'எம்பெருமானுக்கு விக்ரகமில்லை, விபூதியில்லை' என்கின்றவர்கள் முன்பே ஆப்த தமரான ஆழ்வார் 'திருவுடம்புவான்சுடர்' என்னப் பெறுவதே! 'ஈசுவரனுக்கு விக்ரகமில்லை, குணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்காத பாவமில்லை; அவர்களைச் சார்ந்து அதனைக் கேட்கவிராதபடி பெருமான் நமக்குச் செய்த உபகாரம்போலே வேறொரு உபகாரமும் இல்லை" என்று அருளிச் செய்வாராம்.

எம்பெருமான் வந்ததும் ஆழ்வாரோடே தன் திருமேனியை அணைத்து நின்ற கையாலே அந்த ஊற்றின்பம் கொண்டாடி 'திருவுடம்பு வான் சுடர்' என்கின்றார். உடனே குளிரக் கடாட்சித்தருளினானாகையாலே 'செந்தாமரை கண்' என்கின்றார். கண்ணழகைக் கொண்டு பரத்துவம் கொண்டாடி 'இப்பரம புருடன் எங்கே, நாம் எங்கே' என்று நைச்சியம் பாவித்து இறாய்த்த வளவிலே கையாலே பிடித்திழுத்தானாதலால் 'கை கமலம்' என்கின்றார்.

இவன் கேட்பாரில்லாதவனாய் நம்மிடம் வந்தானல்லன்; பிராட்டி முதலானவர்களும் இவனுடைய திருமேனியில் ஒவ்வோரிடங்களைப் பற்றிச் சத்தை பெறுபவர்க

ளாக இருக்கின்றார்கள் என்பதை இரண்டு மூன்றாம் அடிகளில் அருளிச் செய்கின்றார். தாமரைப பூவில் பிறந்த பிராட்டியும் இவன் திருமார்பைப் பற்றிக்கொண்டு 'அகலகில்லேன் இறையும்' (திருவாய் 6.10:10) என்று கிடக்கின்றாள்; பதினான்கு உலகமும் படைக்கும் நான்முகனோ திருநாபிக் கமலத்தை 'விடேன்' என்றிருக்கின்றான்; நீங்கின இடமோ உருத்திரனுடையதாயிரா நின்றது.

131

ஆணல்லன்; பெண்ணல்லன்;
    அல்லா அலியுமல்லன்;
காணலும் ஆகான்;
    உளனல்லன; இல்லையல்லன;
பேணுங்கால், பேணும்
    உருவாகும்; அல்லனுமாம்;
கோணை பெரிதுடைத்தெம்
    பெம்மானைக் கூறுதலே.[14]

[அல்லா—இவ்விரண்டும் அல்லாத; பேணுங்கால்—விரும்பின காலத்து; பேணும்—விரும்பின.]

இத் திருவாய்மொழியில் ஆழ்வார் "எம்பெருமானைப் பேசித் தலைக் கட்டுவது மிகவும் மிறுக்காக (ஆயாசமாக) உள்ளது" என்கின்றார்.

ஈட்டிலுள்ள இதிகாசம் : "அப் பரம் பொருள் தேவன், அசுரன், விலங்கு இவைகளாக இல்லை, பெண்ணாகவும் இல்லை, அலியாகவும் இல்லை, ஆணாகவும் இல்லை, வேறுபட்ட மற்றைப் பொருளாகவும் இல்லை, குணமாக இல்லை, கிரியையாக இல்லை, சேதநனுமாக இல்லை, அசேதநனுமாக இல்லை," என்று இருக்கு வேதம் ஆரண்யகம் (2:2), பாகவதம் (8.3:24) என்னும் வேத-

14. திருவாய். 2.5:10

புராண வாக்கியங்களை மேற்கோள் காட்டி இப் பாசுரத்தைப் பட்டர் உபந்யசித்துக் கொண்டிருக்கையில் அருகிருந்து கேட்டிருந்த ஒரு தமிழ்ப் புலவர், "சுவாமீ! உலகத்திலுள்ள பொருள்கள் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்றில் சேர்ந்ததல்லது இருக்க மாட்டாவே; எம்பெருமான் இந்த மூன்று படியிலும் சேர்ந்திலன் என்றால் சூன்யம் என்று சொன்னபடியாகுமே; பிரம்மம் சூன்யம் என்றோ ஆழ்வார் அருளிச் செய்வது?" என்று கேட்க, அதற்கு விடையாகப் பட்டர் "பரப்பிரம்மம் சூன்யப் பொருள் என்று சொல்வது ஆழ்வாருக்கு உடன்பாடாகில் சொல் இலக்கணத்துக்குப் (இயலறிவுக்குப்) பொருத்தமாக 'ஆணல்ல, பெண்ணல்ல, அல்லா அலியுமல்ல' என்று ஆழ்வார் அருளிச் செய்திருப்பர். அங்ஙனமின்றி, 'அல்லன் அல்லன் அல்லன்' என்றே (ஆண்பாலுக்குரிய 'அன்' விகுதியையிட்டு) அருளிச் செய்திருக்கையாலே 'எம்பெருமான் சாமான்ய புருஷனல்லன், புருஷோத்தமன்' என்று தெரிவிக்கப் பட்டதாகாதோ?" என்று அருளிச் செய்தார். ஒரே சாதியிலுள்ள மற்றைப் பொருள் வேறான சாதியிலுள்ள மற்றைப் பொருள் இவற்றினின்றும் விலக்கிக் காட்டியது உளங்கொள்ளத் தகும்.

132

சிக்கெனச் சிறிதோர் இடமும், புறப்படாத்
தன்னுள்ளே உலகு கள்
ஒக்கவே விழுங்கிப் புகுந்தான்; புகுந்ததற்பின்
மிக்க ஞான வெள்ளச்சுடர் விளக்கு ஆய், துளக்கு
அற்று, அமுதம் ஆய், எங்கும்
பக்கம்நோக்கு அறியான், என் பைந்தாமரைக்
கண்ணனே.[15]

---

15. திருவாய். 2.6:2

[சிக்கென — உறுதியாக; புறப்படா—வெளிப்பட்டிராமல்; ஒக்க—சமமாக; புகுந்தான்-நுழைந்தான்: மிக்க — மிகுந்த; துளக்கு—ஐயம்; எங்கும்—எவ்விடத்திலும்; பக்கம் நோக்க அறியான்—திரும்பிப் பார்ப்பதுமின்றியேயிரா நின்றான்]

இது திருவாய்மொழிப் பாசுரம். ஆழ்வார் இறைவனைச் சிக்கெனப்பிடித்ததைத்தெரிவிப்பது. இப் பாசுரத்தில் எம்பெருமான் தன்னுடன் கலந்து மிக்க ஒளிபெற்று வேறு போக்கிடமற்றுத் தன் பக்கலிலேயே படுகாடு கிடக்கின்ற படியைப் பேசுகின்றார் ஆழ்வார்: "அழகிய தாமரை மலர் போன்ற திருக் கண்களையுடைய என் இறைவன் மிகச் சிறிய இடமும் புறம்பு போகாதபடி உலகுகளைத் தன் நினைவிற்குள்ளே ஒரே விதமாக அடக்கி, வெளியில் புலப்படாதபடி என் மனத்திற் புகுந்தான்; புகுந்த பின்னர், ஞான வெள்ளத்தால் வந்த மிக்க ஒளியையுடையவனாய் நடுக்கமும் தீர்ந்து, அமுதம்போன்று இனியனாய் ஓரிடத்திலும் பக்கத்தைப் பார்க்கின்றிலன்" என்கின்றார்.

'எங்கும் பக்க நோக்கறியான்' என்றவிடத்து ஈட்டில் ஓர் ஐதிக உரையாடல்; மணக்கால் நம்பி ஆளவந்தாரைச் சிறந்த கடைக்கண் நோக்கால் ஆட்கொண்ட பிறகு ஒரு நாள் "குருகைக் காவலப்பனிடத்தில் ஒரு யோக இரகசியம் உண்டு" என்று ஆளவந்தார்க்குத் தெரிவித்தார். அந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேரவா எழுந்தது ஆளவந்தாரிடம். உடனே காவலப்பன் எழுந்தருளி யிருந்த கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்றார். அப்போது காவலப்பன் ஒரு குட்டிச் சுவரில் யோகத்தில் எழுந்தருளி யிருந்தார். அவருடைய சமாதி நிலைக்கு ஊறு விளைவிக்க வொண்ணாது என்று எண்ணிய ஆளவந்தார் அவருக்கு இப்பால் நின்றார். யோக நிலையில் இருந்த அப்பனும் திருப்பிப் பார்த்து, "இங்குச் சொட்டைக்

குலத்தார்[16] யாரேனும் வந்தாருண்டோ?" என்று வினவினார். உடனே ஆளவந்தார் 'அடியேன்' என்று எழுந்தருளி வந்து காண்கின்றார்; தண்டம் சமர்ப்பிக்கின்றார். "அடியேன் இங்கு வந்து தேவரீருக்குத் தெரியாதபடி பின்னே நின்றேன். தேவரீர் அறிந்தது எப்படி?" என்று வினவ, அதற்குக் குருகைக் காவலப்பன் அருளிச்செய்த வார்த்தை—"எம்பெருமானும் நானுமாக அநுபவித்துக் கொண்டிருந்தால் பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருங்கி அணைத்தாலும் அவளது முகத்தைக் கூடப் பாராத சர்வேசுவரன் என் கழுத்தை அமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப் பார்த்தான்; அப்படி அவன் பார்க்கும் போது சொட்டைக் குலத்திலே சிலர் வந்திருக்க வேண்டும் என்றிருந்தேன்" என்றார். ஆழ்வார் பக்கலில் எம்பெருமான் பண்ணியிருந்த சிறப்பான கடைக்கண் நோக்கு அவர்க்குப் பிறகு, நாதமுனிகளின் திருவமிசத்தில் பெருகத் தொடங்கிற்று என்பது ஈண்டு அறியத்தக்கது. "எங்கும்பக்க நோக்கறியான்" என்ற விடத்திற்கு இது மிகப் பொருத்தமான உரையாடல்.

133

"கேசவன்தமர்" [17] என்ற திருவாய்மொழியில் பேசப்படும் பொருள்: எம்பெருமான் யாரிடத்து அருள் செய்தாலும் அவ் வருளை அவர்களிடத்திலேயே நிறுத்தி விடாமல் அவர்களோடு சம்பந்தம் பெற்றவர்கள் பக்கலிலும் பெருகச் செய்யும் இயல்பினன் என்பது இதில் முக்கியமாகப் பேசப் பெறுகின்றது. சர்வேசுவரன் ஆழ்வாரோடே வந்து கலந்த கலவியால் பிறந்த பிரீதி தம்மொருவரளவிலு மன்றிக்கே

---

16. சொட்டைக் குலம்—நாதமுனிகளுடைய திருவமிசம். ஆளவந்தார் நாதமுனிகளுக்குத் திருப்பேரனார்.

17. திருவாய். 2.7

தம்மோடு பரம்பரையாகச் சம்பந்த முடையாரளவும் பெருகினபடியைக் கண்டு, 'இஃது இறைவன் என் பக்கல் செய்த பட்சபாத மிகுதியன்றோ?' என்று இனியராய், தம்மை அங்கீகரிக்கைக்கு ஈடான குணங்கள் செயல்கள் முதலியவற்றை அநுசந்தித்து அதற்கு வாசகமான பன்னிரு திருப் பெயர்களாலே அவனைப் பேசி அநுபவிக்கின்றார்.

சர்வேசுவரன் ஆழ்வாரை அங்கீகரித்தால், சம்பந்தி சம்பந்திகளையும் அங்கீகரிப்பான் என்? எனில்: சர்வேசுவரன் ஒருவனை விஷயீகரித்தால் அது பின்னை அவனளவிலே நில்லாதேயன்றோ? "இருடிகள் குடியிருப்பை அழித்தான்; மைதிலியைப் பிரித்தான்; நம் உயிர்நிலையிலே நலிந்தாற்போதே ஸ்ரீ ஜடாயு, மகாராஜரை நலிந்தான்; இவையெல்லாம் செய்யமாட்டானோ இவன் இனி; இவன் ஜீவிக்கின்ற நாளிலே 'நாம்செய்யும் நன்மை இவன்விலக்காதொழிவதுகாண்' என்றிருந்தோம்; அஃது அந்நாளில் பெற்றிலோம்: நாம் தேடியிருந்தது முந்துற முன்னம் சிந்திக்கப் பெற்றோம்; இவன் நாம் செய்யும் நன்மைவிலக்காதானான வளவு பிறந்த இன்றும் இழக்க வேண்டுமோ? வேண்டுவன செய்யப் பாரும்: நீர் இறாய்த் திருந்தீராகில், 'குடல் தொடக்குடையாரிலே ஒருவன் செய்யு மித்தனையன்றோ, நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய, நீர் கடக்க நில்லீர்'" என்றார் பெருமாள். இங்ஙனம், ஸ்ரீ பீஷ்ணாழ்வான் பக்கலிருந்த அன்பு இராவணனளவும் சென்றது "மகாராஜர்க்குச் சத்துரு"[18] என்று வாலியைக் கொன்றபின்னர், மகாராஜர் கண்ணநீர் பொறுக்கமாட்டாமல் "விடப்பட்ட கண்ண நீரை உடையவரானார்"[19] என்கின்றபடியே, தாமும் கண்ணநீர் விழவிட்டார். "மங்களகுணமுள்ள மாலாகாரரே! உம்முடைய மனமும் எக்காலமும் தர்மத்தில் செல்லப் போகிறது, உம்முடைய வமிசத்தில் நீண்ட ஆயுள்

18. மகாராஜர்—சுக்கிரீவன்.

19. ஸ்ரீராமா—கிஷ்கிந். 23:24.

உண்டாகப் போகிறது''[20] என்கின்றபடியே, ஸ்ரீ மாலா காரர்[21] பக்கல் அங்கீகாரம் அவர் சந்தானத்தளவும் சென்றது. ஸ்ரீகண்டா கர்ணன்[22] பக்கல் பண்ணின விஷயீ காரம் அவன் தம்பியளவும் சென்று ''நீ அவனுக்கு நல்லை யாகில் 'அவன் முன்னாகப் போ' [23] என்று அருளிச் செய் தான். ஆக, இன்னோரன்ன சரிதைகளால் உணர்தல் தகும்.

134

ஈதேயான் உன்னைக்
கொள்வதெஞ் ஞான்றும்;என்
மைதோய் சோதி
மணிவண்ண! எந்தாய்!
எய்தா நின்கழல்
யான்எய்த, ஞானக்
கைதா; காலக்
கழிவுசெய் யேலே.[24]

[ஈதே—இஃதொன்றே; எஞ்ஞான்றும்—என்றைக் கும்; உன்னை—தேவரீர் இடத்தில்; கொள் வது — பிரார்த்திப்பது; எய்தா — பெறுதற் கரிதான; எய்த—அடையும்படியாக; ஞானம் கை—ஞானமாகிய கையை; காலம் கழிவு— காலதாமதம்; செய்யேல்—செய்யவேண்டா.]

---

20. விஷ்ணு 4. 5.19: 27.

21. கம்சன் கட்டளைப்படி கிருஷ்ணனையும், பலராம னையும் வில் விழவுக்கு இட்டுக்கொண்டு வந்தவர்.

22. கண்டா கர்ணன் —

23. 'அவன் முன்னாகப் போ' என்றது, அவனை முன்னிட்டுக்கொண்டு போ என்றபடி.

24. திருவாய். 2. 9:2.

'புருஷார்த்த நிர்ணயம்' பற்றிய திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் "என்னுடைய, கருமை படிந்த ஒளியையுடைய மாணிக்கம் போன்ற நிறத்தை யுடைய எந்தையே! எப்பொழுதும் யான் உன்னிடத்தில் கேட்பது இதேயாம்: எது? எனில்: தனது முயற்சி கொண்டு அடைய முடியாத உனது திருவடிகளை யான் அடையும்படி ஞானமாகிய கையைக் கொடு; காலம் நீட்டித்தல் செய் யாதே" என்கின்றார்.

ஞானக் கைதா: என்றவிடத்து ஈடு: "எம்பார்க்கு ஆண்டான் அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்று. இதன் விவரணம் வருமாறு: முதலியாண்டான் ஒரு கால் திருநாராயணபுரத்தில் (கர்நாடக மாநிலத்தில் உள்ளது) எழுந்தருளி யிருக்கையில் அவருடைய சீடரான ஸ்ரீ வைணவர் ஒருவர் கோயிலிலே வந்து எம்பார் சந்நிதி யிலே கைங்கரியம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது ஒருநாள் சில ஸ்ரீ வைணவர்களுக்கு எம்பார் திருவிலச்சினை சாதிக்க இருக்கையில் இந்த ஸ்ரீ வைணவரும் தமக்குச் சாதிக்கும்படி வேண்டினார்; அப்போது எம்பார் 'உமக்கு விசேஷ சம்பந்தமுண்டோ?' என்று அவரை வினவ, அவரும் 'தேவரீருடைய சம்பந்தமே சம்பந்தம்' என்று அவர் விண்ணப்பம் செய்ய, அவ்வளவிலே எம்பார், 'இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீ பாதத்தவர்' என்றறியாமல் இவருக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக் கொண்டு கைங்கரியங்களும் கொண்டு எழுந்தருளி யிருக்கை யில் ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே எழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீ வைணவர் ஆண்டானை வந்து சேவிக்க, ஆண்டானும் முன்புபோலே இவரைக் கொண்டு வேண்டும் கைங்கரியங்களைக் கொண்டிருக்க, அப்போது எம்பாரும் அறிந்து ஆண்டான் பக்கலிலே எழுந்தருளி, 'கனக்க அபசாரப்பட்டேன்' என்று அருளிச் செய்தார். இவருடைய திருவுள்ளத்தில் ஊடாடும் கிலேசத்தை

அறிந்து அப்போது ஆண்டான் அருளிச் செய்த வார்த்தை இது: ''ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக் கும் எளிதா யிருக்குமிறே; அப்படியே யாகிறது' என்றா ராம். இங்குக் கை கொடுப்பதாவது ஞானம் அளிப்பது. இதற்காகவே இந்த சம்வாதம் இங்குக் காட்டப்பெற்றது. சம்சார சாகரத்தில் அழுந்தினவர்களுக்கு இரண்டு ஆசாரி யர்களாக விருந்து 'ஞானக் கை' கொடுப்பது நன்றுதானே என்பது முதலியாண்டானது திருவுள்ளம்.

135

'எனக்கேயாட் செய்யெக்
காலத்தும்' என்று என்
மனக்கே வந்திடை
வீடின்றி மன்னி
தனக்கே யாக
எனைக்கொள்ளும் ஈதே;
எனக்கே கண்ணனை
யான்கொள் சிறப்பே.[25]

[ஆள்செய்—அடிமைசெய்; மனக்கே வந்து—மனத்தில் எழுந்தருளி; இடைவீடு இன்றி—இடைவிடாமல்; மன்னி—நிலை பெற்றிருந்து; தனக்கேயாக — தனக்கே உரியனாம்படி; எனை—என்னை; கொள்ளும்—அங்கீகரித் தருளும்; எனக்கே—என் சொரூபத்திற்குத் தகுதியாக; யான் கொள்—யான் விரும்பு கின்ற.]

'புருஷார்த்த நிர்ணயம்' பற்றிய திருவாய்மொழியில் இஃது உயிரான பாசுரம். இதில் ஆழ்வார், ''எல்லாக் காலத்திலும் எனக்கே அடிமை செய்வாய் என்று என்

25. திருவாய். 2.9;4

மனத்தின்கண் வந்து பிரிதலின்றி நிலை பெற்று நின்று தனக்கே நான் உரியனாம்படி என்னை ஏற்றுக் கொள்ளு மிதுவே எனக்குத் தகுதியாகக் கண்ணனிடத்தில் யான் விரும்பிக் கொள்ளும் பயனாகும்'' என்கின்றார்.

ஆட்செய், எனக்கு ஆட்செய், எனக்கே ஆட்செய், எக்காலத்தும் எனக்கே ஆட்செய்—என்று பிரித்துரைத்து கவிதை யநுபவத்தின் கொடுமுடிக்கு இட்டுச் சென்று பக்திச் சுவையின் பேரின்பத்தைக் காண்க. ''என்னை நியமித்துக் கொண்டு என் நெஞ்சினுள்ளே படுகாடு கிடக்க வேண்டும்; நிலாத் தென்றல், சந்தனம், தண்ணீர் முதலிய பொருள்கள் போலத் தனக்கேயாக என்னைக் கொள்ள வேண்டும்; இவ்வளவே யான் விரும்பும் புருஷார்த்தம்''[26] என்கின்றார்.

''சர்வேசுவரன் மூன்று விதமான சேதநரையும் சொரூபத்திற்குத் தகுதியாக அடிமை கொள்ளுகின்றான்; நாமும் அப்படியே சொரூபத்திற்குத் தகுதியான பேறு பெறுவோமே! என்று அருளிச் செய்கின்றார்'' என்று இவ்விடத்தில் அருளிச் செய்வர் ஈட்டாசிரியர். ''முத்தரும் நித்தியரும், தாங்களும் ஆனந்தித்து அவனையும் ஆனந்திப் பார்கள்; பத்தர் தாங்கள் ஆனந்தியாமல் அவனை ஆனந் திப்பிப்பர்: 'இன்புறு விளையாட்டுடையான்' (திருவாய் 3.10;7) அன்றே.

இப்பாசுரத்து ஈட்டின் ஐதிகம்: 'மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே என்று பிரார்த்திப்பானேன்? திருவுள்ளமான படி செய்கின்றான் என்றிருக்கை யன்றோ அழகியது' என்று பிள்ளை நறையூர் அரையர் எம்பாரைக் கேட்க, அதற்கு அவர் அருளிச்செய்த மறுமொழி இது: ''நீர் கேட்பது வாஸ்

---

26. புருஷார்த்தம்—புருஷன் + அர்த்தம்; புருஷன்—ஆன்மா; அர்த்தம்—பொருள்—ஆன்மா அடைய வேண்டிய பொருள்; அதாவது வீடுபேறு.

தவமே; பிராப்ய ருசி இங்ஙனே பிரார்த்திக்கப் பண்ணு கிறது'' என்று ''எம்பெருமானுடைய திருமார்பிலே இடை விடாது எழுந்தருளியிருக்கின்ற பிராட்டி வாளா இருக்க லாமே; அப்படியிராமல் 'அகலகில்லேன் இறையும்' (திருவாய். 6.10;10) என்று வாய்க்கொரு முறை சொல்லிக் கொண்டிருக்கின்றாளே, அது ஏன்? அது விஷய ஸ்பாவம் படுத்துகிற பாடு என்னில், இது பிராப்ய ருசி படுத்துகிற பாடு என்று கொள்ளீர்'' என்றும் அருளிச் செய்தார்.

136

வலஞ்செய்து வைகல் வலங்கழி யாதே
வலஞ்செய்யும் ஆய மாயவன் கோயில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ் சோலை
வலஞ்செய்து நாளும் மருவுதல வழக்கே [27]

[நலம் செய்து—வலிமை உண்டாக்கிக் கொண்டு; வைகல்—எப்பொழுதும்; கழியாதே—வீணாகப் பாழ்படுத்தாமல்; வலம்—நன்மை; ஆய—பசுக்களையுடைய; ஆ—பசு; மாயவன்—திருமகளையுடையவன்; மா—திருமகள்; வலம் செய்யும்—பிரதட்சிணம் செய்யும்; நாளும்—நாடோறும்; மருவுதல்—பொருந்தியிருத்தல்; வழக்கு—நியாயம்]

இது நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரம் 'திருமாலிருஞ்சோலை மலையை வணங்குக' என்று கூறும் திருவாய் மொழியிலுள்ளது. இதில் ஆழ்வார், ''வலிமையை வளர்த்து நாடோறும் அவ்வலிமையை மற்றைய விஷயங் களுக்கு வீணாகப் பாழ்படுத்தாமல், நமக்கு நன்மையையே செய்தருளா நின்ற கோபாலனுடைய கோயிலாகி நித்திய சூரிகளும் வந்து வலம் செய்கின்ற திருமாலிருஞ்சோலையை

27. திருவாய். 2.10:8

நாளும் வலம் செய்து சென்று சேர்தல் நியாயமாகும்'' என்கின்றார்.

'வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கு'—என்ற அடியில் ஓர் ஐதிகம். ''ஒரு சமயம் பிள்ளை நறையூர் அரையரும் பட்டரும் பிரதட்சிணம் பண்ணிக் கொண்டு வருகையில் நான் பின்னே சேவித்துக் கொண்டு போனேன்; அல்லாதார் கடுங் குதிரைப்போல் வாரா நிற்க, இவர்கள் திருக் கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக் கொண்டு வந்தார்கள்'' என்று அருளிச் செய்வர் நஞ்சீயர்.

மூன்றாம் பத்து

137

மழுங்காத வைந்நுதிய
சக்கரநல் வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான்
புள்ளூர்ந்து தோன்றினையே;
மழுங்காத ஞானமே
படையாக மலருலகில்
தொழும்பாயார்க் களித்தாலுன்
சுடர்ச்சோதி மறையாதே?[1]

[மழுங்காத—மழுங்குதல் இல்லாத; வைநுதிய—கூர்மை பொருந்திய வாயையுடைய; வலத்தையாய்—வலக்கையிலுடையாய்; புள்—கருடன்; மழுங்காத—சங்கல்ப ரூப; மலர் உலகம்—அகன்ற உலகம்; தொழும்பு ஆயார்—அடியவர்கள்; அளித்தால்—உதவினால்; மறையாதோ?—குன்றி விடாதோ?]

1. திருவாய். 3.1;9

திருமாலிருஞ்சோலை அழகரது வடிவழகில் ஆழ்வார் ஈடுபடுவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "மழுங்குதல் இல்லாத கூர்மையான நுனியையுடைய சக்கரத்தைச் சிறந்த வலத்திருக்கையிலே யுடையவனாகி, தொழுகின்ற அன்பையுடைய யானையைக் காக்கும் பொருட்டுக் கருடப் பறவையினை ஊர்ந்து வந்து தோன்றினையே; அங்ஙனமிருக்க, குறைதலில்லாத ஞானத்தையே கருவியாகக் கொண்டு, பரந்த உலகத்திலே உனக்கு அடிமைப்பட்ட அடியார்க்குத் திருவருள் செய்தால் உனது பேரொளியானது மறையாதோ?" என்கின்றார்.

ஐதிகம் : திருவரங்கம் பெரிய கோயிலில் பெரிய திருவத்யயந உத்சவத்தில் இப்பாசுரத்தைச் சேவியா நின்ற அரையர், 'உன் சுடர்ச்சோதி மறையாதே' என்ற அளவிலே, கோஷ்டியிலிருந்த சிற்றாட் கொண்டான் என்பார் 'மறையும், மறையும்' என்றாராம்.

138

ஒழிவில் காலமெல்லாம்
    உடனாய் மன்னி
வழுவிலா அடிமை
    செய்ய வேண்டும்நாம்
தெழிகு ரல்அரு
    வித்திரு வேங்கடத்து
எழில்கொள் சோதி
    எந்தைதந்தை தந்தைக்கே.[2]

[ஒழிவு இல்—ஓய்வில்லாத; உடன் ஆய்—கூடவே இருந்து; மன்னி—நிலைத்து நின்று; வழு—குற்றம்; தெழிகுரல்—கம்பீரமான ஓசை; தெழித்தல்—ஒலித்தல்; எழில் கொள்—நிறம்

2. திருவாய். 3.3:1

பெற்றது; எந்தை தந்தை தந்தை—என் குல நாதனான பெருமாள்]

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரம். "மிக்க ஒலியோடு கூடிய அருவிகளையுடைய திருவேங்கடத்து எழுந்தருளியிருக்கின்ற அழகினைக் கொண்ட ஒளியுருவனும் என் குலநாதனுமான பெருமாளுக்கு எல்லையில்லாத காலமெல்லாம் எல்லாவிடத்திலும் உடனிருந்து ஒன்றும் குறையாதபடி எல்லா அடிமைகளையும் செய்ய வேண்டும்" என்கின்றார் ஆழ்வார்.

'ஒழிவில் காலமெல்லாம்' ; ஓர் ஐதிகம்: "ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் இந்திருவாய் மொழியைப் பாடப் புக்கால் 'ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்...' என்று இங்ஙனம் நெடும்போதெல்லாம் பாடி, மேல் போகமாட்டாதே அவ்வளவிலே தலைக் கட்டிப் போவாராம்" என்று. இதனால் அரையர் ஆழ்வாருடைய நிலைமையை அப்படியே அடைந்து கைங்கரியத்தில் தமக்குரிய ஈடுபாட்டைக் காட்டியருளினர் என்பது பெறப்படும்.

'வேங்கடத்து எழில்கொள் சோதி' : வானார் சோதியையும் நீலாழிச் சோதியையும் வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு இவ்வாறு கூறுவர். வானார் சோதி—பரமபத நாதன்; நீலாழிச் சோதி—பாற்கடல் நாதன். வானார் சோதி பகல் விளக்குப் பட்டிருக்கும்; நீலாழிச் சோதி கடல் கொண்டு கிடக்கும்; வேங்கடத்து எழில் கொள் சோதி குன்றத் திட்ட விளக்காயிருக்கும்; 'வேங்கடமேய விளக்கே'[3] யன்றோ?

பாசுரத்தின் ஐதிகம் : எம்பெருமானார் இத்திருவாய் மொழியை அருளிச் செய்யும்போது அந்தக் காலட்சேப கோஷ்டியில் நூற்றுக்கணக்காக எழுந்தருளியிருந்த சீடர்

3. பெரி. திரு. 4.7;5

களை நோக்கி, ''ஆழ்வார் பாரித்த குறை தீரத் திருவேங் கடமுடையான் பரிசரத்திலேயிருந்து நித்திய கைங்கரியம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுண்டா?'' என்று வினவியருள, குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிருக்கு அஞ்சி விடை கூறாதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து 'அடியேனுக்கு நியமித்தருள வேண்டும்' என்றார். இது கேட்டு உகந்த எம்பெருமானார் 'நீரொருவரே ஆண் பிள்ளை' என்று போரப் பொலியக் கொண்டாடித் தழுவி யருளி விடை கொடுத்தருளினர்; அது முதலாக அனந்தாண் பிள்ளை என்று அவர் புகழுடன் வழங்கப்பெற்றார்.

இராமாநுசருடைய மாணாக்கராகிய இவர் 74 சிம்மா சனாதிபதிகளுள் ஒருவர். இவர் திருமாலைக்குச் சென்று அங்கு ஓர் ஏரியை வெட்டி அதற்கு 'இராமாநுசன் புத்தேரி' என்ற பெயரை அமைத்தவர். ஒரு நந்தவனத்தை உண்டாக்கி அதிலிருந்து மலர்களைப் பறித்து திருவேங்கட முடையானுக்கு நாடோறும் மலர்க் கைங்கரியம் செய்து கொண்டு வந்தவர். ஒருநாள் மலர் கொய்கையில் நல்ல பாம்பு ஒன்று இவர் கையிலே தீண்ட, அதற்குப் பரிகாரம் ஒன்றும் செய்யாது மீண்டு, நீராடி, பின்னரும் சென்று மலர்களைக் கொய்து மாலை தொடுத்துத் திருவேங்கட முடையானைச் சேவிக்கச் சென்றார். அவ்வளவில் இறைவன் அர்ச்சகர்மீது ஆவேசித்து, 'நஞ்சு தீர்க்க வேண்டா என்றிருந்ததென்னை?' என்று கேட்டருள, இவரும் 'கடியுண்ட பாம்பு வலிதாகில் திருக்கோனேரியில் தீர்த்தமாடித் திருவேங்கடமுடையானைச் சேவிக் கின்றேன்; கடித்த பாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்த மாடி வைகுண்ட நாதனைச் சேவிக்கின்றேன் என்றிருந் தேன்' என்று பதிலிறுத்த பரமயோகி. திருவாய்மொழிக்கு ''ஏய்ந்த 'பெருங்கீர்த்தி'' என்ற தனியனை அருளிச் செய் தவர். கூரத்தாழ்வானுக்குப் பின் பிறந்தவர் என்று இவரைக் கருதுவர்.

139

வேங்க டங்கள்மெய்ம்
மேல்வினை முற்றவும்;
தாங்கள் தங்கட்கு
நல்லன வேசெய்வார்
வேங்க டத்துறை
வார்க்கு நமவென்னல்
ஆங்க டமை, அ
துசுமந் தார்கட்கே.[4]

[வேம்—வெந்துபோம் (அழிந்து போம்); கடங்கள்—அநுபவித்தே தீர்க்க வேண்டிய பாவங்கள் (பிராரத்தம்); மேல் வினை—இனி விளையக் கூடிய பாவங்கள் (ஆகாமியம்); முற்றவும்—எல்லா பாவங்களும்; தாங்கள்—அடியவர்களான தாங்கள்; தங்கட்கு—தங்கள் சொரூபத்திற்கு; நல்லனவே — தகுதியான வற்றையே; செய்வார்—செய்யப் பெறுவர்கள்; வேங்கடத்து—திருமலையில்; உறை வார்க்கு—கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கு; நம எனல்—நம; என்று சொல்லுவதாகின்ற; ஆம் கடமை அது—அந்தக் கடமையை; சுமந்தார்க்கு — வகிக்கிறவர்கட்கு]

'திருவேங்கடமுடையானுக்கு அடிமை செய்ய வேண்டும்' என்பதுபற்றிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கின்றவர்க்கு வணக்கம் என்று சொல்லுதல் எளிதில் செய்யக் கூடிய காரியமாம்; அதனைச் சுமந்தவர்கட்கு தீர்க்கக் கூடிய கடன்களும் சரீர சம்பந்தங் காரணமாக வருகின்ற நல்வினை தீவினைகளும் வெந்து அழிந்து

4. திருவாய் 3.3:6

விடும்; அடியார்களாகிய தாங்கள, தங்கட்குத் தக்கதான கைங்கரியத்தையே செய்வார்கள்'' என்கின்றார்.

வேம் கடன்கள் மெய்ம்மேல் வினை முற்றவும் —கடன்கள் மேல் வினை முற்றவும் வேம் (இது) மெய் என்று அந்வயித்துப் பொருளுரைக்க. கடங்கள்—கடன்கள். எம்பெருமான் நாம் செய்த பாவங்களை மன்னித்தருள்வது மாத்திரம் அன்றிக்கே பகைவர்கள் மேலும் போக்குவான். எத்தனையோ பிறப்புகளில் சஞ்சிதங்களாய் மலை மலையாய்க் குவிந்து கிடக்கும் பாவங்கள் நம்முடைய சிறிய முயற்சியால் தொலைந்திடுமோ என்று சிலர் ஐயுற்றார்களாம்; அவர்கட்குப் பட்டர் ஸ்ரீஸூக்திகளுடன் ஓர் இதிகாசம் எடுத்துரைத்தாராம்; இராமபிரான் கடலரசனை நோக்கி மூன்று நாள் தரை கிடந்து தவம் செய்தார்; அவ்வளவில் கடலரசன் முகம் காட்டா தொழியவே சீறிச் சிவந்து அக்கடல்மீது அம்பு தொடுத்து நின்றார். அதுகண்டு கடலரசன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து, அவன் நாலடி வர நின்றபோது, 'உனக்காக அம்பு தொடுத்தேன்" என்றுரைக்க நாணப்பட்டு, 'உன் விரோதிகளைச் சொல்லுக. அவர்கள்மீது இவ்வம்பைச் செலுத்துகின்றேன்'' என்று சொல்ல, அப்படியே அவன் தன் விரோதிகள் இருக்குமிடம் குறிப்பிட அங்கே அம்பைச் செலுத்தி உபகாரம் செய்தாரென்று வான்மீகி இராமாயணத்தால் அறிகின்றோம்.[5] வணங்கிய மாத்திரத்தில் சேதநன் பண்ணின பாவங்களையெல்லாம் மறப்பான் இறைவன் என்பதற்கு இந்த இதிகாசம் சான்று. இவ்விடத்தில் இன்னுமோர் ஐதிகத்தையும் அருளிச் செய்வர் பட்டர்: "பண்டு தலை மயிர் இல்லாத ஒருவன் நெல் அளந்து கொண்டு நின்றான்; அங்கே ஒருவன் சென்று 'மயிரைப்

5. கம்பரா. உயுத்த வருணனை வழி வேண்டும் படலத்தில் 64-80 செய்யுட்களில் இந்த வரலாற்றைக் காணலாம்.

பேணாமல் நீர் தனியே நின்று நெல் அளக்கிறீரே!' என்ன, 'வந்தது என்!' என்ன, 'ஒன்றுமின்று; கணடு போக வந்தேன்' என்ன, ஆகில் 'ஒரு கோட்டையைக் கொண்டு போகலாகாதோ?' என்று எடுத்துவிட, அவன் அதனைக் கொண்டு வருகின்ற காலத்தில் எதிரே ஒருவன் வந்து 'இது பெற்றது எங்கே?' என்ன, 'உன்தனை மொட்டைத் தலையன் தந்தான்' என்ன, அவன் சென்று அங்கேயுள்ள அவனைக்கண்டு 'இன்னான் உம்மைவைது போகின்றானே!' என்று அதனைக் கூற, 'அடா! என் நெல்லையும் கொண்டு என்னையும் வைது போவதே!' என்று தொடர்ந்து வர, அவன் திரும்பிப் பார்த்து 'ஏன்தான் குழல்கள் அலைய அலைய ஓடிவாரா நின்றாய்!' என்ன, 'ஒன்றுமின்று; இன்னும் ஒரு கோட்டை கொண்டு போகச் சொல்ல வந்தேன்' என்றானாம்; அப்படியே, கடலை முகங்காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலைப் பிடிப்பது கோலைத் தொடுப்பதாக நிற்க, அவன் வந்து முகங்காட்டினவாறே 'உனக்கு அம்பு தொடுத்தோம்' என வெட்கி, 'உன் பகைஞரைச் சொல்லு, நாம் இதனை விட' என்றார் அன்றோ?

140

சுமந்து மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு
அமர்ந்து வானவர் வானவர் கோனொடும்
நமன்றெ ழுந்திரு வேங்கடம் நங்கட்குச்
சமன்கொள் வீடு தருந்தடங் குன்றமே.[6]

[சுமந்து—ஏந்தி; மாமலர்—சிறந்த பூக்கள்; நீர்—தீர்த்தம்; சுடர்—தீபம்; தூபம்—தூபத்தையும்; வானவர்—தேவர்; வானவர்கோன்—

---

6. திருவாய். 3.3:7

இந்திரன்; நமன்று—வணங்கி; சமன்கொள்—ஒத்ததாக; வீடு—மோட்சம்]

திருவேங்கடமுடையானுக்கு அடிமை செய்ய வேண்டும் என்று கூறும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "தேவர்கள் இந்திரனோடும் வந்து சிறந்த பூக்களையும் தண்ணீரையும் விளக்கையும் வாசனைப் புகையையும் தாங்கிக் கொண்டு வணங்கி எழுகின்ற திருவேங்கடமானது நமக்கு ஒத்ததாகவுள்ள வீடு பேற்றினைத் தரக் கூடிய பெரிய மலையாகும்" என்கின்றார்.

'வானவர் வானவர் கோனொடும் நமன்று எழும் வேங்கடம்' என்பதற்கு நித்திய சூரிகளும் சேனாதிபதியாழ்வானும் பொருந்தி இப்படி ஆராதனைக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வணங்கி எழுகின்ற திருவேங்கடம் என்னவுமாம். இனி, 'வானவர் வானவர் கோன்' என்பதற்கு தேவர்களும் தேவர்கட்குத் தலைவனான நான்முகனும் என்று பொருள் கூறலுமாம்.

சுமந்து மாமலர்...கொண்டு : மாமலர் நீர் சுடர் தூபம் இவற்றைச் சுமந்து கொண்டு என்னவுமாம்; அன்றி மாமலர் சுமந்து, நீர் சுடர் தூபம் கொண்டு என்னவுமாம். ஆக, ஒரு கருமுகை மாலையேயாகிலும் 'இத்தைக் கண்டருளக் கடவனே! சாத்தியருளக் கடவனே! நம்மை விசேட கடாட்சம் பண்ணியருளக் கடவனே!' என்றிருக்கின்ற இவர்கள் அன்பின் மிகுதியால் கனத்துத் தோன்றுமாதலின் 'சுமந்து' என்கின்றார். இனி, அன்புடையவன் இட்டதாகையாலே சர்வேசுவரன் தனக்கு கனத்துத் தோன்றுமாதலின் 'சுமந்து' என்கின்றார் என்னுதல்.

சுமந்து : அநுகூலன் இட்டது கனத்துத் தோன்றும் என்பதற்கு ஓர் ஐதிகம் காட்டுகின்றார். ஸ்ரீ ஜகந்நாதத்தில் எம்பெருமான் செண்பகப் பூவை உகந்து சாத்திக் கொள்வது வழக்கம். இதனையறிந்த சில அரச குமாரர்கள் செண்

பகம் கொண்டு சாத்துவதற்குக் கடைவீதி ஏறச் சென்றனர். அங்குப் பூவெல்லாம் விற்றுப் போய் ஒரே ஒரு பூ மாத்திரம் மிகுந்திருந்தது. அப் பூவுக்கு ஒருவருக்கொருவர் செருக்காலே விலையை மிக ஏற்ற, அவர்களில் ஒருவன் நினைக்க வொண்ணாதவாறு பொருளை மிகக் கொடுத்து அதனை வாங்கிக் கொண்டு வந்து சாத்தினான்; அன்று இரவில் அவனுடைய கனவில் 'நீ இட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்க முடிகிறதில்லை' என்று அருளிச் செய்தானாம் எம்பெருமான்.

141

சாதிமா ணிக்கம் என்கோ?
சவிகொள்பொன் முத்தம் என்கோ?
சாதிநல் வயிரம் என்கோ?
தவிவில்சீர் விளக்கம் என்கோ?
ஆதியஞ் சோதி யென்கோ?
ஆதியம் புருடன் என்கோ?
ஆதுமில் காலத் தெந்தை
அச்சுதன் அமல னையே.[7]

[சவிகொள்— ஒளியையுடைய; சவிகொள்— நீரோட்டமுள்ள; முத்தம்-முத்து; தவிவுஇல் சீர்—அழிதல் இல்லாத ஒளியையுடைய; ஆதி எல்லாப் பொருள்கட்கும் முந்தி இருப்பதாய்; அம்—அழகிய; சோதி—தேசோமயமான திருமேனி; ஆதி-தலைவனாகிய; அம்—(ஆனந்தம் முதலிய குணங்களால்) இனியவளானः புருடன்—பரமபுருடன்; ஆதும் இல்காலத்து—யாதொரு உபாயமும் இயலாத காலத்தில்; எந்தை—தந்தை; அச்சுதன்—நழுவவிடாதவன்]

7. திருவாய் 3. 4; 4

'ஆன்மாக்கள் அனைத்தும் அவனே என்று விளக்கும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார் ''எனக்கு ஒரு துணையில்லாத சம்சார தசையிலே தன்னோடு உண்டான சம்பந்தத்தை அறிவித்தவன், என்னை நழுவ விடாதவன், குற்ற மற்றவனான எம்பெருமானைச் சாதிமாணிக்கம் என்பேனோ? ஒளியைக்கொண்ட பொன் என்பேனோ? குணம் பொருந்திய முத்தம் என்பேனோ? உயர்ந்த சாதிவயிரம் என்பேனோ? கெடுதல் இல்லாத விளக்கு என்பேனோ? உலகத்திற்குக் காரணமான அழகிய பேரொளிப் பிழம்பான பரமபதம் என்பேனோ? முதன்மை பெற்ற அழகிய பரமபுருடன் என்பேனோ? யாது என்பேன்?'' என்கின்றார்.

ஐதிகம்; ஒருவன் எம்பெருமானை நினைப்பதற்கு எனக்கு ஒரு விரகு சொல்ல வேண்டும்' என்று ஒரு பெரியோரைக் கேட்க அதற்கு அவர், 'நான் உனக்கு அது சொல்லுகின்றேன்; நீ எனக்கு அவனை மறப்பதற்கு ஒரு விரகு சொல்ல வல்லையோ?' என்றாராம். இதற்குக் கருத்து: உலகத்துப் பொருள்கள் யாவும் பெயரையும் உருவத்தையும் பெற்று வழங்கப் பெறுவது. எம்பெருமான் அவ்வப் பொருள்களில் பிரவேசித்து நிற்பதனாலேயாதலால், ஏதேனும் ஒரு பொருள் தோற்றும் போதும் ஞானிகட்கு அவனை முன்னிட்டே தோற்றும் என்பது. இவ்வாறு எல்லாப் பொருள்களும் எம்பெருமானுடைய சம்பந்தத்தைப் பெற்றிருந்தாலும் சிறந்த மாணிக்கம் முதலியவைகளில் அவ்வெம்பெருமானது அம்சம் மிக்கிருக்கும் என்று கருதி ஆழ்வார் இப்பாசுரத்தில் எம்பெருமானை மாணிக்கம் முதலிய சிறந்த பொருள்களாகப் பாராட்டி அநுபவிக்கின்றனர்.

மேலும், பகவானினின்றும் வேறு பட்டிருக்கின்ற எல்லாப் பொருள்களுக்கும் அவனையொழியப் பொருளாதல், பெயரடைதல் முதலிய தன்மைகள் இல்லாமையாலே, யாதேனும் ஒரு பொருள் தோன்றும்போதும்

அவனை முன்னிட்டுக் கொண்டாயிற்றுத் தோன்றுவது. சாதி குணங்களுக்குப் பிரிந்து ஸ்திதியாதல் தோன்றுதலால் இல்லாமை போன்று, பொருள்களாயிருந்தும் அவனை யொழியப் பிரித்து ஸ்திதியாதல் தோன்றுதலாதல் இல்லாமை போன்று, பொருள்களாயிருந்தும் அவனை யொழியப் பிரிந்து ஸ்திதியாதல் தோன்றுதலால் இல்லை யாம்படி இருக்கின்றனவேயன்றோ, பிரமாண பலத்தாலே[8] ஆயின் நமக்கு விசேஷணாம்சம்[9] ஒழிய விசேஷ்யாம்சம் தோன்றவில்லையே? எனின்; மற்றையோர்க்கு விசேஷ ணாம்சம் தோன்றுகின்றமை போன்று, விசேஷ்யம் தோன் றுகின்ற படியாயிருக்கும் இவர்களுக்கு. ஆயின், இவர் களுக்கு விசேஷணாம் சத்தால் கருத்து இல்லையோ எனின் விசேஷணாம்சத்தில் தாத்சர்யமின்றிக்கே இருக்குமதுவு மன்றியே, விசேஷண விசேஷ்யங்கள் இரண்டிலும் விசேஷ யமேதோன்றுகிறதாயிற்று விசேஷயப் பிராதாந்யத்தாலே இதுவன்றோ வேதாந்த கேள்வி ஞான முடையார்க்கு இருக்கும்படி. 'வேதாந்தத்தைக் கேட்டதனால்தான் ஞானம் நிறைவு பெறுகின்றது' வேதாந்த சங்கிரகம் என்னா நிறைதன்றோ? இதனால் எல்லாப் பொருள்களும் பிரகாரமாகத்[10] தான் பிரகாரியாயிருக்கும் படியைச் சொல்லுகிறது,

---

8. 'யஸ்ய ஆத்மா சரீரம் யஸ்ய பிருதிவி சரீரம்'—என்ற பிரமாணத்தைத் திருவுள்ளம்பற்றி இவ்வாறு சொல்லிப் பெற்றது,

9. விசேஷண அம்சம்—இறைவனுக்குப் பிரகாரமாக இருக்கின்ற உலகத்துப் பொருள்கள். விசேஷ்யம்—பிரகாரி யான இறைவன்.

10 பிரகாரம்—அடை

11 பிரகாரி—அடைகொளி

142

மொய்ம்மாம் பூம்பொழில் பொய்கை
முதலைச் சிறைப்பட்டு நின்ற
கைம்மா வுக்கருள் செய்த
கார்முகில் போல்வண்ணன் கண்ணன்
எம்மா னைச்சொல்லிப் பாடி
எழுந்தும் பறந்தும்துள் ளாதார்
தம்மால் கருமென் சொல்லீர்
தண்கடல் வட்டத் துள்ளீரே![13]

[மொய்—நெருங்கின; மா—பெரிய; சிறைப்பட்டு கவ்வப்பெற்று; கைமா—யானை; சொல்லி பாடி—புகழ்ந்து பாடி: துள்ளாதார்—கூத்தா டாதார்; என்கருமம்—என்ன பயன்: தண்—குளிர்ந்த; கடல்வட்டம்—கடல் சூழ்ந்த பூ மண்டலம்]

'திருமாலுக்கு அன்பு செய்தாரை ஆதரித்தலும், அன்பி லாதாரை நிந்தித்தலும்பற்றிய திருவாய்மொழியின் முதற்பாசுரம். இதில் ஆழ்வார்,'' ''வண்டுகள் மொய்க் கின்ற பூக்களையுடைய சோலையாற் சூழப்பட்ட பொய் கையிலுள்ள முதலையால் பிடிக்கப்பட்டு நின்ற கைம்மா வுக்குத் திருவருள் புரிந்த கார் காலத்து எழுந்த மேகம் போன்ற நிறத்தையுடையவன் கண்ணன் எம்மானான எம் பெருமானைச் சொல்லிப்பாடி எழுந்தும் பறந்தும் துள்ளா தவரால் காரியம் யாது? குளிர்ந்த கடலாற் சூழப்பெற்ற பூமியில் உள்ளவர்களே! நீங்களே சொல்லுங்கள்'' என்கின்றார்.

எம்பெருமானுடைய பேரருள் பொலிவு பெறும் இந்த வரலாற்றைஅநுசந்தித்தால் மனம்மொழி மெய்கள்விகாரப்

---

13. திருவாய். 3; 5 : 1

படாதிருக்க வொண்ணுமோ? எம்மானைச் சொல்லிப்பாடி, எழுந்தும் பறந்தும் துள்ளவேண்டும் படியாகுமே; அங்ஙனம் ஆகப் பெறாதவர்கள் இவ்வுலகில் பிறப்பதனாலும் இருப்பதனாலும் என்ன பயன்?

இங்கேநம்பிள்ளைஈடு: "பட்டர் இவ்விடத்தை அருளிச் செய்யும்போது, 'அவன் நூறாயிரம் செய்தாலும் விக்ருதராகாதிருக்கும்போதும் நாமே வேணும்; நமக்கு ஒரு ஆபத்து உண்டானால் இருந்தவிடத்தில் இருக்க மாட்டாமல் விக்ருதராம்போதும் அவனே வேணும்' என்று அருளிச் செய்தார்" என்பதாம். எம்பெருமானைப் போன்ற பரமதயாளு இல்லை; அவனது தலையில் ஈடுபட மாட்டாத நம்மைப் போன்ற வன்னெஞ்சரும் இல்லை என்றபடி.

143

வம்பவிழ கோதை பொருட்டா
    மால்விடை யேழும் அடர்ந்த
செம்பவ ளத்திரள் வாயன்
    சிரீதரன் தொல்புகழ் பாடிக்
கும்பிட்டு நட்டமிட் டாடிக்
    கோகுகட் டுண்டுழ லாதார்
தம்பிறப் பாற்பயன் என்னே
    சாது சனங்க ளிடையே?[14]

[வம்பு—நறுமணம்; கோதை—நப்பின்னை; மால் விடை— பெரிய காளை; அடர்ந்த வலி யடக்கிய; திரள்வாய் — திரண்ட இதழை யுடையவன்; தொல்புகழ்— உண்மையான புகழ்; நட்டம் இட்டு ஆடி—கூத்தாடி; கோகு

14. திருவாய். 3: 5: 4

உகட்டு—அடைவுகேடு தலை மண்டையிட்டு; உழலாதார்—திரியாதார்; சாதுசனங்கள்—நன் மக்கள்]

'திருமாலுக்கு அன்பு செய்பவரை ஆதரித்தலும் அன்பிலாரை நிந்தித்தலும்'பற்றிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "நறுமணத்தோடு மலர் மாலையையுடைய நப்பின்னைப் பிராட்டி காரணமாகப் பெரிய இடபங்களேழனையும் கொன்றவன் செம்பவளத் திரள் வாயன், சிரீதரன்; அவனுடைய சுவாபாவிகமான புகழ்களைப்பாடி, வணக்கத்தோடு நடனத்தையும் செய்து திரியாதவர்களுடைய பிறப்பால் நன்மக்கள் நடுவில் என்ன பயன் உண்டு?" என்கின்றார்.

'பயன் என்னே சாதுசனங்களிடையே' என்றவிடத்து ஈட்டு ஸ்ரீசூக்தி, "திருப்புன்னைக்குக் கீழே ஒருவரிருக்குமிடத்திலே நம்முதலிகள் பத்துப்பேர் கூட நெருக்கிக் கொண்டிருக்கச் செய்தே கிராமணிகள் மயிரெழுந்த பிசல்களும் பெரிய வடிவுகளும் மேலே சுற்றின இரட்டைகளுமாய் இடையிலே புகுந்து நெருக்குமாபோலே காண்! என்று அருளிச் செய்வர் பிள்ளைப் பிள்ளை" என்பது.

இதன்கருத்து: திருவரங்கம் பெரிய கோயிலில் திருப் புன்னை மரத்தின்கீழே நம் முதலிகள் இருந்து சாத்தி ரார்த்த விசாரங்கள் செய்தருளா நிற்பர்கள்; அவற்றைக் கேட்டுக் களிக்க வேண்டும் என்கின்ற ஆசையினால் நெருக் கமான அவ்விடத்திலும் பல ஸ்ரீ வைணவர்கள் ஒருவர் மேல் ஒருவராக நெருக்கிக் கொண்டு நின்று கேட்பார் களாம்; ஸ்ரீ வைணவர்கள் எத்தனைபேர் நெருக்கினாலும் வருத்தம் இல்லை; அந்த நெருக்கத்தைக் கண்டு சாமானிய மக்களும் அங்குத் தங்களுக்கு ஏதோ இலாபம் கிடைப்ப

---

15 பிள்ளைப் பிள்ளை—இவர் கூரத்தாழ்வான் திருவடி சம்பந்தம் பெற்றவர்களில் ஒருவர்.

தாக மயங்கி, மொச மொசவென்று மயிர்கள் நெருங்கிய தோள்களும் பெரிய சரீரமும் தலைப்பாகையுமாய் அங்கே புகுந்து நெருக்குவது வழக்கமாம்; அது எப்படி அஸஹ்ய மோ அப்படியே சாத்விகமக்களிடையே பாபிகள் பிறந் திருப்பதும் அஸஹ்யம் என்பதாயிற்று.

144

சாது சனத்தை நலியும்
 கஞ்சனைச் சாதிப் பதற்கு
ஆதியஞ்சோதி யுருவை
 அங்குவைத் திங்குப் பிறந்த
வேத முதல்வனைப் பாடி
 வீதிகள் தோறுந்துள் ளாதார்
ஓதி உணர்ந்தவர் முன்னா
 என்சவிரப் பார்ம னிசரே?[16]

[சாதுசனம்—சாத்விகர்; நலியும்-துன்பப்படுத்தின; சாதிப்பதற்கு-தண்டிப்பதற்கு; ஆதி அம்சோதி —நித்தியமாய் அப்ராக்ருத தேசோ மயமான; அங்கு — பரமபதம்; இங்கு—இந்த நிலம்; துள்ளாதார் — களித்துத் திரியாதவர்கள்; ஓதி உணர்ந்தவர்—மாஞானிகள்; முன்னா— முதற்கொண்டு; என்சவிப்பார் — அஜபம் செய்வது என்னோ; மனிசரே — மானிட கோடியிற் சேர்ந்தவர்களே]

"திருமாலுக்கு அன்பு செய்பவரை ஆதரித்ததும் அன்பிலாரை நிந்தித்தலும்" பற்றிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "நன் மக்களை வருத்திய கம்சனைக் கொல்லுவதற்காக ஆதியஞ் சோதி உருவை

16 திருவாய் 3. 5: 5

அங்கு இருக்கிறபடியே தன் பக்கலில் வைத்துக் கொண்டு இங்கே பிறந்த வேத முதல்வனைப் பாடி வீதிகள் தோறும் துள்ளாதவர்கள், ஓதி உணர்ந்த ஞானிகளின் சந்நிதியில் எதனைச் சபிப்பார்கள்? இவர்கள் மனிதர்களா?[17] (அல்லர்)'' என்கின்றார்.

சாதுசனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு: எம்பெருமான் தன்னளவில் ஆசுரப் பிரகிருதிகள் எத்தனை அபசாரப் பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீற மாட்டான்; தன்னடியவர் பக்கல் அபசாரப் படுமளவில் அவ்வபராதிகளைப் பங்கப்படுத்தியே தீருவன் என்பது நூற் கொள்கை.

''ஈசுவரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்கள் எல்லாம் பாகவத அபசாரம் பொறாமையென்று ஜீயர் அருளிச் செய்வர்''[18] என்பது ஸ்ரீவசன பூஷணத்தின் வாக்கியம். அதாவது—சங்கல்ப மாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வகிக்க வல்ல சர்வ சக்தியான சர்வேசுவரன் தன்னை அழிய மாறி இதர சஜாதீயனாய் அவதரித்துக் கைதொடானாய் நின்று செய்த இராவண, கம்ச, சிசுபாலாதி நிரசன ரூபமான அதிமானுஷ்ய கிருத்தியங்களெல்லாம் பிரகலாதன், மகரிஷிகள், வாசுதேவ தேவகிகள் முதலான பாகவதர் திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் சகியாமையாலே என்று நஞ்சீயர் அருளிச் செய்வாராம்.

---

17. மனிதரே—அவர்கள் மனிதர் கோடியில் சேர்ந்தவர்களோ? ''மானிடர் அல்லரென்று எம்மனத்தே வைத்தேனே'' (பெரி. திரு. 11.7:9) என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்திற்கு இதுவே மூலம்.

18. ஸ்ரீவசன, 196. ஜீயர்—நஞ்சீயர்; ஆனைத் தொழில் — மனிதர்களுடைய செயல்கட்கு அப்பாற்பட்ட செயல்.

'வீதிகள்தோறும் துள்ளாதார்' மனிதர்கள் உள்ள பெருந் தெருவேயன்றி, குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு ஆடாதார். இதிலுள்ள ஐதிகம்: இங்கே மிளகாழ்வான் வார்த்தையை நினைப்பது (14(-இல் காண்க).

145

நீர்மையில் நூற்றுவர் வீய
ஐவர்க் கருள்செய்து நின்று
பார்மல்கு சேனை அவித்த
பரஞ்சுட ரைநினைந் தாடி
நீர்மல்கு கண்ணின ராகி
நெஞ்சங் குழைந்துநை யாதே
ஊனமல்கி மோடு பருத்திருப்பர்
உத்தமர் கட்கென்செய் வாரே [19]

[நீர்மை—ஈர நெஞ்சு; இல்—இல்லாதவர்களான; வீய — மாளும்படியாக; பார்மல்கு — பூமி பாரமாயிருந்த; அவித்த—தொலைத்தருளின; ஆடி—கூத்தாடி; மல்கு—நிறைந்த; குழைந்து —உருகி; ஊன் மல்கி—உடல் தடித்து; மோடு —வயிறு; உத்தமர்—பாகவதர்]

'திருமாலுக்கு அன்பு செய்பவரை ஆதரித்தலும் அன்பிலாரை நிந்தித்தலும்' பற்றிய திருவாய்மொழிப் பாசுரம். இதில் ஆழ்வார், "நற்குணமில்லாத துரியோதன் முதலிய நூற்றுவரும் அழிய, பாண்டவர்கட்குத் திருவருள் புரிய நின்று, பூமியில் நிறைந்த சேனையை அழித்த பரஞ்சோதியை நினைத்து ஆனந்தத்தால் கூத்தாடி நீர் நிறைந்த கண்களையுடையவர்களாகி மனம் கட்டுக் குலைந்து சரீரமும் நிலைகுலையாமல் சதை மிகும்படியான

19. திருவாய் 3.5;7

வயிற்றினை வளர்ப்பவர்கள், உத்தமர்களான பாகவதர் கட்கு என்ன காரியத்துக்கு உறுப்பாவர்?'' என்கின்றார்.

'உத்தமர்க்கு என் செய்வாரே?' : எப்போதும் பகவத் குணங்களை அநுசந்தித்துக்கொண்டு வளர்ந்து வடிந்த சரீரங்களையுடைய ஸ்ரீ வைணவர்கட்கு ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொள்வதற்குப் பகவத் குணரனுபவத்திலே தகாத துணையாக இருக்கப் போகிறார்களோ?

இங்கே நம்பிள்ளை ஈடு : ''ஜன்மத்துக்குப் பிரயோ ஜனம் வைணவர்களுக்கு உறுப்பாமதுவே யென்றிருக் கிறார். ஈசுவரன் தன்னையும் தன் விபூதியையும் ததீய[20] சேஷமாக்கியிறே வைப்பது'' என்பது.

இங்கே ஓர் இதிகாசம் : கூரத்தாழ்வானும் பெரிய நம்பியும் சோழ ராஜ சபைக்கு எழுந்தருளி 'சிவாத் பரதரம் நாஸ்தி' (சிவாத—சிவத்தைக் காட்டிலும்; பரதரம்—மேலானது; நாஸ்தி—இல்லை) என்றதற்கு 'த்ரோண மஸ்தி தத; பரம்' (தத—அக்குருணி என்னும் முகத்தல் அளவையைக் காட்டி லும்; பரம்—மேலானதாய்; த்ரோணம்—பதக்கு என்னும் முகத்தல் அளவை: அஸ்தி இருக்கிறது) என்று கையெழுத் திட்டபோது பெரிய நம்பிக்கு ப்ராணாந்தமான ஆபத்து நேர்ந்தது. ஆழ்வான் மடியிலே சாய்ந்து கிடக்கச் செய்தே பெரிய நம்பி திருநாட்டுக்கு எழுந்தருளினார். அப்போது சிலர் 'அநாதப் பிரேத சம்ஸ்காரம்' (தகனம் செய்தல்) செய்து ஸுக்ருதம் பெறலாமென்றெண்ணி அவ்விடத்தே வந்து பார்க்கையில், ஆங்கு ஆழ்வான் எழுந்தருளியிருப்பது கண்டு தங்களுக்கு அங்குக் காரியம் ஒன்றுமில்லாமை யுணர்ந்து திரும்பிப்போகையில், ஒருவரையும் குறை சொல்லி யறியாத கூரத்தாழ்வான் அவர்களை நோக்கி இங்ஙனம் கூறினராம்; ''பயல்களே, வைணவனுமாய் ஒருவனுமில்லா தான் ஒருவனைத் தேடிப் பிரதிபத்தி[21] பண்ணப் பார்க்கின்

20. ததீயர்—அடியார்

தீர்களோ நீங்கள்? ஈசுவரனும் ஈசுவர விபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித்கரிக்க இருக்க, வைணவனுமாய் ஒருவனுமில்லாதானுமா யிருப்பானொருவனை (திக்கற்றவனை) நீங்கள் எங்ஙனே தேடிப் பெறுவீர்கள்?'' என்றாராம்.

இந்த இதிகாசம் இங்கு எதற்காக அருளிச் செய்யப் பட்டதென்னில்; 'உத்தமர்கட்கு என் செய்வாரே' என்ற இடத்திற்கு வியாக்கியானம் அருளிச் செய்யா நின்ற நம்பிள்ளை, 'ஈசுவரன் தன்னையும் தன் விபூதியையும் ததீய சேஷமாக்கியிறே வைப்பது'' என்று அருளிச் செய்தார்; அவ்வர்த்தித்துக்கு ஆப்த சம்வாதமாக ஆழ்வானுடைய வார்த்தையை உதாகரிக்க வேண்டி இந்த ஐதிகத்தை அருளிச் செய்தார் என்க. ''ஈசுவரன் தன்னையும் தன் விபூதியையும் ததீய சேஷமாக்கி வைக்கிறான்'' என்கின்ற இதனை அருளிச் செய்யத்தான் மூலத்தில் என்ன ப்ரசக்தி யுள்ளதென்னில்;'ஊன் மல்கு மோடு பருப்பார் உத்தமர்க்கு என் செய்வாரே' என்றதில் தொனிக்கும் பொருள் அது. உத்தமர்க்கு எம்பெருமானே தானும் தன் விபூதியுமாய்க் கிஞ்சித்கரிக்க ஸஜ்ஜனாயிருக்க, 'சில பாபிகள் அந்தப் பாக்கியம் இழந்தார்களாவதே!'' என்ற அநுதாபத்தின் மேல் அது வக்தவ்யமாயிற்று.

146

வார்புனல் அந்தணண் அருவி
வடதிரு வேங்கடத் தெந்தை
பேர்பல சொல்லிப் பிதற்றிப்
பித்தரென் றேபிறர் கூற
ஊர்பல புக்கும் புகாதும்
உலோகர் சிரிக்கநின் றாடி
ஆர்வம் பெருகிக் குனிப்பார்
அமரர் தொழப்படு வாரே.22

21. பிரதிபத்தி—சம்ஸ்காரம்; தகனம் செய்தல்.
22. திருவாய். 3.5;8

[வார்புனல்—சிறந்த தீர்த்தங்கள்; அம்—அழகிய; வட திருவேங்கடம்—வடக்குத் திருமலை; பல பேர்—பல திருநாமங்கள்; உலகோர்—உலக மக்கள்; ஆடி—நடனம் ஆடி; ஆர்வம் பெருகி—ஆசை விஞ்சி; குனிப்பர்—தொழப் படுவார்]

இது நம்மாழ்வார் அருளியது; திருவாய்மொழியி லுள்ள ஒரு பாசுரம். பகவத் குணங்களில் ஈடுபட்டுக் களித்துப் பரவச சரீரர்களாக இருப்பவர்களைக் கொண் டாடியும் அஃது இல்லாதாரை நிந்தித்தும் செல்லும் திருவாய்மொழியில் உள்ள இப்பாசுரத்தில் "திருவேங்கட முடையானுடைய நீர்மைக்கு ஈடுபடுவாரைக் கொண்டாடு கைக்கு நாம் யார்? நித்திய சூரியகளன்றோ இவர்களைக் கொண்டாடுவார்கள்?" என்கின்றார்.

பித்தர் என்றே பிறர் கூற : என்பதன் பொருளை அநுபவித்து மகிழும் போது,

அத்தா அரியே என்று
உன்னை அழைக்க
பித்தா என்று பேசுகின்
றார் பிறர் என்னை

என்ற பெரிய திருமொழியையும்,[23]

பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும்

என்ற பெருமாள் திருமொழியும்[24] ஈண்டு அநுசந்திக்கத் தக்கன. வைணவர்கள் அங்கீகாரம் பெறுமதிலும் வைண வர்களல்லாதார் வசை கூறிக் கைவிடுவதே மிகவும்

23. பெரி. திரு. 7.1;8
24. பெரு. திரு. 3;8

உத்தேச்யமென்பது பெரியோர்களின் கொள்கை. "வைணவர்களுடைய விஷயீகாரத்திலும் வைணவர்க ளல்லாதார் இகழுகையே புருஷார்த்தமென்பது கருத்து" என்றார் நஞ்சீயரும் ஒன்பதினாயிரம் படியில். விபீஷணாழ் வான் இராம கோஷ்டியில் தனக்கு விஷயீகாரம் கிடைக்கா மற் போனாலும் அரக்கர் திரளில் தனக்குத் திரஸ்காரம் கிடைத்ததே பரம பாக்கியம் என்று நினைப்பது போன்றிருந்தது.

இங்கு ஓர் இதிகாசம்: ஈட்டில் 'மிளகாழ்வான் வார்த்தை' என்று வருகின்றது. அரசன் பலபேர்களுக்குக் கிராம பூமிகள் தானம் செய்வதாக மிளகாழ்வான் கேள்விப் படுகின்றான். இவனும் தானம் பெறச் செல்லுகின்றான். அவனைப் பார்த்து, "உனக்கு தானம் கொடுப்பதில்லை" என்று அரசன் சொல்ல, அது கேட்ட மிளகாழ்வான், "பிரபுவே, எனக்கு மாத்திரம் கொடுக்க முடியாதென் கைக்குக் காரணம் என்ன? வேதமோ சாத்திரமோ எதில் தேர்வு வைத்தாலும் நான் தேர்வு கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்" என்கின்றான். இதனைச் செவிமடுத்த அரசன், "உமக்கு அந்த யோக்கியதைகள் இல்லை என்று நான் சொல்லவில்லை" என்கின்றான். உடனே மிளகாழ் வான், "ஆனால் ஏன் தானம் கொடுக்க மாட்டேன் என்கின்றாய்?" என்று கேட்க, அரசன் "நீர் ஸ்ரீ வைஷ்ணவ ராகையாலே உமக்குக் கொடுக்க நான் விரும்புகின்றி லேன்" என்று மறுமொழி தருகின்றான். உடனே மிளகாழ்வான் பரமானந்தம் அடைந்து கூத்தாடுகின்றான். வைணவத்துவம் ஏதுவாக அந்த அவைணவன் கைவிட்டது தானே தமக்குப் பரம புருஷார்த்தமா யிருந்ததாகக் கருது கின்றான். பிறர் கூற என்ற சொற்றொடரின் அழுத்தம் தான் இந்த இதிகாசத்திற்குக் காரணம் என்பது கருத்து.

147

தோற்றக் கேடவை யில்ல வனுடை
யான வன்ஒரு மூர்த்தியாய்ச்
சீற்றத் தோடருள் பெற்ற வன்அடிக்
கீழ்ப்புக நின்ற செங்கண்மால்
நாற்றத் தோற்றச் சுவையொ லிஉறல்
ஆகி நின்றஎம் வானவர்
ஏற்றை யேயன்றி மற்றொ ருவரை
யானி லேன்எழு மைக்குமே[25]

[தோற்றம்—பிறப்பு; கேடு—இறப்பு; இல்லவன்—இல்லாதவன்; உடையான்—உடையவன்; ஒரு மூர்த்தி—ஒப்பற்ற நரசிங்க மூர்த்தி; சீற்றத்தோடு—சீறியிருக்கும் நிலைமையிலே; அருள்—கருணை; உறல் — ஊற்றுணர்ச்சி; வானவர் ஏறு—தேவாதி தேவன்; எழுமைக்கும்—எல்லாக் காலத்திலும்; யான் இலேன்—யான் புகலாக உடையேன் அல்லேன்]

மமகாரங்கள் அற்றபடியைக் கூறினவாறு.

'அர்ச்சாவதாரமே எளிது' எனக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார் "பிறப்பு இறப்பு என்பவை இல்லாதவன் தோற்றக் கேடுகளையுடைய பொருள்களையெல்லாம் தனக்கு உடைமையாக உடையவன் கர்மமடியாக வரும் பிறவியில்லாதவன், ஒப்பற்ற நரசிங்க உருவமாகிச் சீற்றத்தோடு இருக்குங் காலத்தில் திருவருளைப் பெற்றவனான பிரகதாழ்வான் திருவடிகளிலே அணையும்படியாக நின்ற சிவந்த கண்களையுடைய மால், நாற்றம் உருவம் சுவை ஒலி ஊறு இவையாகின்ற எம் வானவர் ஏறு ஆகிய இறைவனையேயன்றிக்

25. திருவாய் 3.6;6

காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் வேறொரு தெய்வத்தை யான் உடையேனல்லேன்" என்கின்றார்.

'சீற்றத்தோடு அருள் பெற்றவன்' : இது பிரகலாதாழ்வானைச் சொன்னபடி; நரசிம்ம பகவானுக்கு இரணியன் மேல் அளவு கடந்த சீற்றம் பொங்கிச் செல்லுகையில், சிறுக்கனான பிரகலாதாழ்வான் எங்ஙனே அணுகி நிற்க வல்லனாயினான்? என்று எம்பெருமானாரைச் சிலர் கேட்டார்களாம். அதற்கு அவர் அருளிச் செய்த விடை; "சிம்மம் ஆனைமேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி இருக்குமன்றோ?" என்றாராம். 'ஆச்ரித வாத்சல்யத்தாலே அவர்கள் விரோதிமேலே சீறின சீற்றமானால் பின்னை அவர்களுக்கு அணையவொண்ணாதபடி இருக்குமோ?' என்று அருளிச் செய்தார் என்றபடி. இவ்விடத்திற்குப் பொருத்தமாக,

> இழவு தரியாதோர் ஈற்றுப்பிடி
> இளஞ்சீயர் தொடர்ந்து முடுகுதலும்
> குழவி யிடைக்காலிட் டெதிர்ந்துபொரும்
> கோவர்த் தனமென்னும் கொற்றைக் குடையே'[26]

என்ற பெரியாழ்வார் திருமொழி நோக்கத்தகும்.

148

> துயர மேதரு துன்ப இன்ப
> வினைக ளாய்அவை அல்லனாய்
> உயர நின்றதோர் சோதியாய் உல
> கேழும் உண்டுமிழ்ந் தான்தனை
> அயர வாங்கும் நமன்த மர்க்கரு
> நஞ்சி னைஅச்சு தன்தனைத்
> தயர தற்கும கன்தனை யன்றி
> மற்றி லேன்தஞ்ச மாகவே,[27]

26. பெரியாழ். திரு. 3.5;2
27. திருவாய் 3.6:8

[துயரம்—பரிதாபம்; அவன் அல்லனாய்—அவற்றுக்குத் தான் வசப்படாதவனாய்; அயர வாங்கும்—மோகிக்கும்படி உயிரை அபகரிக்கின்ற; நமன்தமர்க்கு—யமபடர்களுக்கு; அரு—மீட்க முடியாத; தஞ்சம்—பற்றுக்கோடு.]

'அர்ச்சாவதாரமே எளிது' எனக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரமாகும் இது. இதில் ஆழ்வார், "துன்பத்தையே தரும் பாவங்களும் புண்ணியங்களுமாய், அவை அல்லாதவனுமாய், உயர்ந்து நின்றதாய் ஒப்பற்றதாயுள்ளதே தேஜோ ரூபமான திருமேனியையுடையவனாய், ஏழு உலகங்களையும் உண்டுஉமிழ்ந்தவனாய், மயங்கும்படியாக உயிரைக் கொள்ளுகின்ற யமபடர்க்குப் போக்குதற்கரிய விஷயமாயிருப்பவனாய், தன்னையடைந்தவர்களை நழுவவிடாதவனாயுள்ள சக்கரவர்த்தித் திருமகனையல்லாமல் தஞ்சமாக வேறு ஒருவரை உடையேன் அல்லேன்" என்கின்றார்.

'அன்றி மற்று இலேன் தஞ்சமாகவே'; இவ்விடத்தை பட்டர் அருளிச் செய்யும்போது, நஞ்சீயர் 'இவர் புக்க இடம் எங்கும் இப்படியே சொல்லுவார்; இவர்க்கு இது பணியேயன்றோ?' என்ன, 'இவர் மற்றோர் இடத்தில் தலை நீட்டுவது பாவநத்வத்தைப்[28] பற்ற; இவர் தஞ்சமாக[29] நினைத்திருப்பது சக்கரவர்த்தித் திருமகனையே' என்று அருளிச் செய்தார்.

பட்டர் இராமாவதாரத்தில் பட்சபாதத்தாலே அருளிச் செய்யுமது கேட்கைக்காக, சிறியாத்தான் 'பெருமாளுக்கு[30] எல்லா ஏற்றங்களும் அருளிச் செய்ததேயாகிலும், பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன

---

28. பாவனத்வம்—பரிசுத்தமாம் தன்மை.
29. தஞ்சமாக—போக்கியமாக;
30. பெருமாள்—இராமன்.

கிருஷ்ணனுடைய நீர்மை இல்லையே சக்கரவர்த்தித் திருமகனுக்கு' என்ன, 'அதுவோ பெருமாள் தூது போகாமையன்று காண்; இட்சுவாகு வமிசத்தினரைத் தூதுபோகவிடுவார் இல்லாமை காண்' என்று அருளிச் செய்தார்.

"எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப் போருவது வெண்ணெய்க் காடும் [31]பிள்ளையன்றோ? இங்ஙனம் இருக்கவும் ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்கரவர்த்தித் திருமகனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து கொடுத்தாராய் அவரைப் பார்த்து 'என் ஒருவனையே சரணமாகப் பற்று' என்று தேவையிடாதார்[32] எழுந்தருளினார் என்றாராம். ஆபிமுக்கியத்தாலே[33] பெறலாம் என்றால், அவ்வாபிமுக்கியந்தானும் பரம பக்தியைப் போன்று அரிதாயிருக்குமன்றோ இச்சேதநனைப் பார்த்தால். 'இத்தலையில் ஆபிமுக்கியத்திற்கு மேற்பட வேண்டா" என்று சொல்லுகிறவையெல்லாம், பற்றப்படுகின்ற சர்வேசுவரனுடைய நீர்மையைப் பற்றச் சொல்லுகிறது; இவனுக்கு வேண்டுவன சொல்லப்புக்கால் 'மகாவிசுவாசம் முன்னாக' என்ன வேண்டும்படியாக இருக்குமன்றோ? "ஒரு சிறாயை[34] நம்பி ஆறுமாதங்கட்கு வேண்டும் சோறும் தண்ணீரும் ஏற்றிக் கொண்டு கடலிலே இழியா நின்றான்; அதைப் போன்ற விசுவாசமாகிலும் வேண்டாவோ பகவத் விஷயத்தைப் பற்றுவார்கட்கு" என்று அருளிச் செய்வர்.

---

31. வெண்ணெய்க்காடும் பிள்ளை—கிருஷ்ணன்.

32. தேவையிடாதார் — விதிக்காதவர்; ஸ்ரீராமபிரான்

33. ஆபிமுக்கியம் — எதிர்முகமாயிருக்கும் தன்மை; அநுகூலமாயிருத்தல் என்றபடி. அபிமுகம்—எதிர்முகம்.

34. சிறாய்—கப்பல்

149

ஆளும் பரமனைக் கண்ணனை
 ஆழிப்பிரான் தன்னை
தோளும்ஓர் நான்குடைத் தூமணி
 வண்ணன்எம் மான்தன்னைத்
தாளும் தடக்கையும் கூப்பிப்
 பணியும் அவர்கண்டீர்
நாளும் பிறப்பிடை தோறுஎம்மை
 யாளுடை நாதரே.[35]

[ஆளும்—ஆள்கின்ற; ஆழு—திருவாழியாழ்வானை யுடைய; பிரான்—உபகாரகன்; தூமணி—பரிசுத்தமான நீலமணி; தாள்—கால்; நாதர்—தலைவர்]

'அடியார்களின் அடியார்களுக்குத் தாம் அடியவர்' எனக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "ஆளுகின்ற மேலானவனை, கண்ணபிரானை சக்கரத்தைத் தரித்த உபகாரத்தை உடையவனை, ஒப்பற்ற நான்கு தோள்களையுடைய பரிசுத்தமான நீலமணி போன்ற நிறத்தையுடையவனான எம்பெருமானைத் தாளும் தடக்கையும் கூப்பி வணங்குகின்ற அவர்கள்தாம் பிறப்புகள்தோறும் எப்பொழுதும் எம்மை அடிமையாக வுடைய தலைவர் ஆவர்" என்கின்றார்.

'தோளு மோர் நான்குடை' பட்டர் திருக்கோட்டியில் எழுந்தருளியிருக்கும்போது அனந்தாழ்வான் திருத்தலப் பயணமாக அங்கு எழுந்தருளினர்; அப்போது பட்டரை நோக்கி "பரமபதத்தில் எம்பெருமான் நாற்றோளனாய் எழுந்தருளியிருக்கின்றானோ? இருதோளனாய் எழுந்தருளி யிருக்கின்றானோ?" என்று கேட்க எல்லாம் அறிந்த

---

35. திருவாய். 3.7:2

அனந்தாழ்வானுக்கு நாம் ஐயம் தீர்த்ததாக ஆக வொண்ணாது என்று கருதிய பட்டர், "ஏகாயநர்[36] இரு தோளன் என்னா நின்றார்கள்; நம்முடையவர் நாற்றோளன் என்னா நின்றார்கள்" என்று மறுமொழி கூற, உடனே, "இரண்டிலும் வழி ஏது?" என்ன, "இரு தோளன் என்று தேறினால் பெரிய பெருமாளாக[37] அநு சந்திக்கின்றோம்; நாற்றோளன் என்று தேறினால் பெருமாளாக அநுசந்திக்கின்றோம்" என்று அருளிச் செய் தார். பெரிய பெருமாள் "கையினார் சுரிசங்கனலாழியர்' (அமலனாதி-7) என்ற திருப்பாணாழ்வாரின் பாசுரப்படி நாற்றோளானாயிருக்கவும் அறிவிலிகளான நம்போலிய ருக்கு இருதோளனாகத் தோற்றுவதுபோல், பரமபதநாத னும் சிலருடைய அறிவுக்கு இருதோளனாகத் தோற்றக் கூடும். நான்காய்த் தோன்றுகைக்கு நாற்றோளனாய் அவதரித்தானோ? எனின்: "ஆதியஞ்சோதியை அங்கு வைத்து இங்குப் பிறந்த" (திருவாய் 3.5:5)விடத்து நாற்றோளனாயன்றோ அவதரித்தது? 'மறைத்துக்கொள்க" (வசுதேவர் கூற்று-பாகவதம் 5:3) என்ன, மறைத்துக் கொண்டான் மற்றைத்தோள்களை.

நிலாத்துக்குறிப் பகவர் பட்டரை நோக்கி, 'ஸ்ரீ வைகுண்டத்தில் நாற்றோளனாக' இருக்கும் என்னு மிடத்திற்குப் பிரமாணமுண்டோ? என்ன, "பிரகிருதி மண்டலத்திற்கு மேலேயுள்ள ஸ்ரீவைகுண்டத்திலிருப்பவர் சங்கு சக்கரம் கதை இவற்றைத் தரித்திருப்பவர், போஷகர்' என்று உண்டாயிருந்ததே என்ன, வேறு பதில் சொல்ல முடியாமையாலே வேறுபட்டவராயிருக்க, 'பிரமாணப்போக்குஇதுவாயிருந்தது பொறுக்கலாகாதோ?' என்று அருளிச்செய்தார்.

---

36. ஏகாயநர்—துவைதிகள்.

37. பெரிய பெருமாள்—திருவரங்கநாதன்; பெருமாள் —இராமபிரான்.

'தாளும் தடக்கையும் கூப்பி' : இதிலுள்ள நுட்பம் கண்டறியத் தக்கது. தாள் கூப்புகையாவது என்ன? தடக் கை கூப்புகையாவது என்ன? என்று ஆராய்ந்து காண வேண்டும். இவையிரண்டாலும், ஆகிஞ்சந்யமும்[38] அநந்யகதித்துவமும்[39] தெரிவிக்கப்பட்டவாறாம் தாள்களைக் கூப்பிவிட்டால் 'வேறெங்கும் எனக்குப் போக்கிடமில்லை' என்று சூசனையாதலால் அதனால் அநந்யகதித்துவம் தெரியும்; கைகூப்பிவிட்டால் 'என் கையில் ஒன்றும் இல்லை' என்கின்ற சூசனையாதலால் அதனால் ஆகிஞ்சந்யம் தெரியும்; ஆக, அகங்கார மமகாரங்கள் அற்றபடியைக் கூறினவாறு.

150

நாதனை ஞாலமும் வானமும்
    ஏத்தும் நறுந்துழாய்ப்
போதனைப் பொன்னெடுஞ் சக்கரத்து
    எந்தை பிரான்தன்னைப்
பாதம் பணியவல் லாரைப்
    பணியுமவர் கண்டீர்
ஓதும் பிறப்பிடை தோறு எம்மை
    யாளுடைய யார்களே

---

38. ஆகிஞ்சந்யமாவது—கர்ம ஞான பக்திகளிலும் அவற்றுக்கு ஏதுவான ஆத்ம குணங்களிலும் அந்வயமின்றிக்கே, அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலேதான் பரிபூர்ணனாயிருக்கிற இருப்பையும் தன்னுடைய சொரூபம் சர்வப்பிரகாரத்தாலும் ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்திரமாய் இருக்கிற இருப்பையும் அநுசந்தித்து, நம் காரியத்திற்கு நாம் கடவோம்' என்றிருக்கை.

39. அநந்யகதித்துவமாவது — "களையாய் துன்பம் களையாதொழிவாய், களைகண் மற்றிலேன்" (திருவாய். 5.8:8) என்கின்றபடியே சர்வேசுவரனையொழிய இரட்சகர் வேறு இலர் என்றிருக்கை.

40. திருவாய் 3. 7. 3.

[நாதனை—சுவாமியை; ஞாலம்—பூமி; பொன்—அழகிய; நெடு—நீண்ட; பாதம்—திருவடி; பணிய—வணங்க; பணியும்—வணங்கும்; ஓதும் பேசப்படுகின்ற; ஆள் உடையார்—அடிமை கொள்பவர்கள்.]

இது நம்மாழ்வார் திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரம். பாகவதசேஷத்துவத்தைக் கூறுவது, இதில் "எம்பெருமானுடைய தோளும் தோள் மாலையுமான அழகிலே தோற்றவர்களான பாகவதர்களுக்கு பக்தரா யுள்ளவர்கள் எனக்கு சுவாமிகள்" என்கின்றார். அதாவது, "தலைவனை, பூமியும் தெய்வ உலகமும் ஏத்து கின்ற நறுமணம் பொருந்திய திருத்துழாய் மலரைத் தரித்தவனை அழகிய நீண்ட திருவாழியை வடைய எந்தையை, எல்லார்க்கும் உபகாரகனைப் பாதங்களை வணங்குகின்ற அடியார்களை வணங்குகின்ற அடியார்கள் தாம் பேசப்படுகின்ற பிறப்புகளியெல்லாம் எம்மை அடிமை கொண்டவர்களாவார்கள்" என்கின்றார்.

பாகவதசேஷத்துவம் அருமையிலும் அருமை என்ப தற்கு இப்பாசுரத்தை விளக்கும் ஈட்டுரையில் ஓர் ஐதிக முள்ளது. பிள்ளையாத்தான் என்பவர் ஆசாரிய நிலையி லுள்ளவர். இவர் இல்லறத்திலுள்ள ஆசாரியர்களிடத்தில் பணிந்திருந்து பொருள் சிறப்புகளை அறியத் திருவுள்ளம் இல்லாதவர். இவர் ஒருநாள் நஞ்சீயர் பக்கலில் வந்து, "அடியேனுக்குத் திருவாய்மொழி ஓர் உரு அருளிச் செய்ய வேண்டும்' என்று விண்ணப்பித்தார். இதனைக் கேட்ட நஞ்சீயர் "நம்பிள்ளை பக்கலில் கேட்டால்தான் தமக்கு விளக்கமாகத் தெரியும்; அங்கே சென்று கேளும்" என்று அருளிச் செய்ய, அதுகேட்ட இவர், "நம்பிள்ளை யிடத்தில் கேட்பதனால் அவரை நான் தண்டச் சமர்ப்பிக்க வேண்டிய தாகுமே; அதனைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் சுவாமி பக்கலில் பிரார்த்திக்கின்றேன்" என்கிறார். இதுகேட்ட

நஞ்சீயர் "அப்படி ஒரு நிர்ப்பந்தம் இல்லல" என்று சொல்லிக் கொண்டே நம்பிள்ளையை வரவழைத்து, "இவனுக்குப் பாங்கானபடி ஓர் திருவாய்மொழி சொல்லும்" என்று நியமித்தருளுகின்றார். நம்பிள்ளையும் ஆசாரியாரின் நிய மனத்தைத் தலைமேற்கொண்டு அப்படியே அருளிச் செய்து வருகின்றார். இத்திருவாய்மொழியளவும் கேட்டு வந்த பிள்ளையாத்தான் "பாகவதர்களின் பெருமை இப்படியன்றோ இருப்பது?" என்று தேறி, அதுவரையிலும் தாம் இருந்த நிலைமைக்கு மிகவும் வருந்தி, அன்று முதல் நம்பிள்ளையிடத்தில் அளவு கடந்த பக்தி காட்டப்புகு கின்றார்; நம்பிள்ளை அதற்கு இசையாதொழிகின்றார். உடனே அவர் நஞ்சீயரிடம் சென்று, "பாகவதரின் பெருமை தெரியாமல் முன்பு அப்படிச் சொன்னேன்; பொறுத்தருள வேண்டும்; இனி அடியேன் வணங்குவதற்கு இசையும் படி நம்பிள்ளை இசைந்திருக்குமாறு சுவாமி நியமித்தருள வேண்டும்" என்று நிர்ப்பந்தித்துப் போந்தார் என்பது வரலாறு.

பாகவதசேஷத்துவம் அருமையிலும் அருமை என்ப தற்கு மற்றும் ஓர் ஐதிகம் காட்டுவர் ஈட்டாசிரியர். வீரப் பிள்ளையும், பாலிகைவாளிப் பிள்ளையும் என்ற இருவர் நஞ்சீயர் பாதத்தில் ஏகாந்தராய், தங்களிலே செறிந்து போந்தார்களாய்த் தேசாந்தரம் போனவிடத்தே வெறுப் புண்டாய்த்தங்களில் வார்த்தை சொல்லாதேயிருக்க, இவர் களைப் பார்த்து, "பிள்ளைகாள்![41] பொருள் இன்பங்கள் தியாச்சியம் அல்லாமையோ, பகவத் விஷயம் அராட்டுப் பிராட்டாயோ[42] ஒரு ஸ்ரீ வைஷ்ணவனும் ஸ்ரீ பாதங்களில் வார்த்தை சொல்லாதே வெறுத்து இருக்கிறது?" என்ன, இருவரும் எழுந்திருந்து தெண்டனிட்டுச் சேர்ந்தவர் களாய்ப் போனார்கள்.

---

41. தியாச்சியம்—விடப்படுவது,
42. அராட்டுப்பிராட்டு—போரும் போராதது.

151

அடியார்ந்த வையமுண் டாலிலை
அன்ன வசஞ்செய்யும்
படியாதும் இல்குழ விப்படி
எந்தை பிரான்தனக்கு
அடியார் அடியார் தம்மடி
யார்அடி யார்தமக்கு
அடியார் அடியார் தம்மடி
யார்அடி யோங்களே.[43]

[அடிஆர்ந்த — (திரிவிக்கிரமாவதாரத்தில் தன் திருவடி சம்பந்தம் பெற்றதான, வையம்—உலகம்; அன்னவசம்—வயிறார உண்டதனால் வரும் உறக்கம்; படி-உபமானம்; குழவிப்படி-சிறு குழந்தைப் பருவமுடைய; அடியோங்கள்—அடிமைப் பட்டவர்கள்]

"அடியார்களின் அடியார்க்குத் தாம் அடியவர் என்று கூறும் திருவாய்மொழிப் பாசுரம் இது. இதில் ஆழ்வார் "திருவடிகளுக்கு அழகான பூமியை உண்டு உண்ட உணவுக்கு அநுகுணமாகக் காரியத்தைச் செய்த ஒப்புஒன்றுமில்லாத இளமை பொருந்திய திருமேனியையுடைய எந்தைபிரானுக்கு அடியார் அடியார்தம் மடியார் அடியார் தமக்கு அடியார் அடியார்தம் மடியார்கட்கு அடியோம் யாம்" என்கின்றார்.

'அடியார் ......யோங்களே'' "இப்போதும் தம்முடைய ருசிக்கு அவதியுண்டாய் இவ்வளவிலே நின்றாரல்லர்; சந்தஸ்ஸில் இதுக்கு இவ்வருகுபோகவொண்ணாமே நின்றதித்தனையிறே''—செய்யுளின் நிர்ப்பந்தத்தை நோக்கி இவ்வளவிலே தலைக்கட்டினாரத்தனையல்லது 'இவ்வளவு

43. திருவாய் 3. 7:10

சேஷத்துவம் நமக்குப் போதும்' என்றெண்ணி முடித்தாரல்லர் என்றவாறு.

''இப்படி வைணவர்களை விரும்பினால் இது லௌகிகரோடு சேராதிருந்ததாகில் ஆழ்வார் விரும்பினதை விச்வஸித்தோமாகின்றோம் என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்''—என்பது ஈடு முப்பத்தாறாயிரம். இதன்கருத்து யாதெனில்; இந்தப் பதிகத்தில் ஆழ்வார் அருளிச் செய்தபடியே நாம் அநுட்டிப்பதாகக் கொண்டால் லோகவிருத்தமாகுமே; ''எத்தனை நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும்'' (3. 7:9.) இத்யாதிகளால் அருளிச் செய்யப் பெறுகின்ற அர்த்தம் லோகாநுட்டானத்திற்கு அமையாதே என்கின்ற சங்கையின்மீது அருளிச் செய்கிறபடி. நாம் அநுட்டிக்கும்படியான பாக்கியம் பெறாதொழியினும் 'இங்ஙனே ஆழ்வார் பாரித்திருந்தார்' என்று விச்வாஸத்தோடே அநுசந்தித்தாலும் போதும் என்றபடி.

152

உளனாக வேஎண்ணித் தன்னையொன்
றாகத்தன் செல்வத்தை
வளனா மதிக்குமிம் மானிடத்
தைக்கவி பாடியென்
குளனார் கழனிசூழ் கண்ணன்
குறுங்குடி மெய்ம்மையே
உளனாய எந்தையை எந்தைபெம்
மானை ஒழியவே[44]

[உளன்ஆய்-சத்தானவனாக; ஒன்று-ஒருபொருள்; எண்ணி—நினைத்து; வளனா—மேம்பாடாக; மதிக்கும்—எண்ணியிருக்கும்; மானிடம்—அற்ப

44. திருவாய். 3. 9. 2

மனிதர்கள்; குளன்ஆர்—குளங்கள் நிறைந்த; கண்—இடமகன்ற; நன்—நல்ல; மெய்ம்மை—உண்மை; ஒழிய—தவிர]

'மானிடைரைப் பாடாது மாதவனை ஏத்துமாறு' கூறும் திருவாய்மொழியில் உள்ளது இப்பாசுரம் "கல்யாண குணசம்பத்துக்களையுடைய எம்பெருமானைவிட்டு அற்ப சம்பத்துகளையுடையவர்களைக் குறித்துக் கவிபாடுவாரை நிந்தித்தலை" நுவல்கின்றது. "குளங்கள் நிறைந்த கழனிகள் சூழ்ந்துள்ள இடமகன்ற நல்ல குறுங்குடியில் சௌலப்பியம் முதலிய குணங்களை ஒளிர்விட்டுக்கொண்டு கோயில் கொண்டுள்ள எந்தையை, எந்தைக்குப் பெருமானை ஒழிய, தன்னை உளனாகவே கொண்டு ஒரு பொருளாக எண்ணித் தன்செல்வத்தை மிக உயர்ந்ததாக மதித்திருக்கும் இம்மானிடத்தைக் கவி பாடுவதால் பயன்யாது?" என்கின்றார்.

இந்தப் பாசுரத்தின் ஈட்டுரையில் ஓர் ஐதிகம்: கலப் பிரம்ம தேசத்தில் கரிகால் சோழ பிரம்மராயன் என்ற ஒரு பிரபு இருந்தான். இவன்திருவாய்மொழிக்குவியாக்கியானம் எழுதினான். இதனை நஞ்சீயரிடம் காட்டி மதிப்புரை வாங்கப் பார்த்தான். "அவன் எழுதினது நன்றாக இல்லையாயினும், மிகவும் நன்றாகவே உள்ளதுஎன்று சொல்லியாக வேண்டும்; இல்லையென்றால் அவன் பிரபுவாதலால் ஏதேனும் தீங்கிழைக்கக்கூடும்" என்று ஐயுற்றார் நஞ்சீயர். "உத்தமாச்ரமியான நாம் இதில் அகப்பட்டுக் கொள்வானேன்?" என்றெண்ணி நம்பிள்ளையை நோக்கி "நீர் இவ்வுரையை நோக்கி மதிப்புரை தருக" என்று நியமித்தார். சீயருடைய திருவுள்ளத்தையறிந்த பிள்ளையும் அங்ஙனே அவ்வுரையை வாசிக்கக் கேட்டு அவனுடைய மனம் உகக்குமாறு பாராட்டிக் கூறவேண்டுமென்று கருதி "இவ்வுரை ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்துக்குப் பொருத்தமாக மிக நன்றாகவே அமைந்துள்ளது" என்று அருளிச் செய்தார். அதுகேட்டு அந்த உரைகாரன்

(இராயன்) "ஆழ்வார் வேறொரு காரியமுமில்லாமல் பிரபந்தம் பாடினார்; நான் ஊர்க்காரியங்கள் பலவற்றையும் நோக்கிக் கொண்டே இடைஇடையில் இதை எழுதினேன்; ஆதலால் ஆழ்வார்க்கும் எனக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டு என்று ஆலோசித்தருளவேண்டும்" என்றானாம். தன்னையொன்றாகத் தன் செல்வத்தை வளனா மதிக்கும்" என்ற இடத்திற்கு இது மிகவும் பொருத்தமான ம்வாதமாக (உரையாடலாக) அமைகின்றது.

153

இடரின்றி யேயொரு நாளொரு
போழ்தில்எல் லாவுல கும்கழிய
படர்புகழ் பார்த்தனும் வைதிக
னும்உடன் ஏறத்திண் தேர்கடவி
சுடரொளி யால்நின்ற தன்னுடைச்
சோதியில் வைதிகன் பிள்ளைகளை;
உடலொடும் கொண்டு கொடுத்தவ
னைப்பற்றி ஒன்றுந் துயரிலேனே.[45]

[இடர்—இடைஞ்சல்; கழிய—அப்பால் போகும்படியாக; பார்த்தன் — அருச்சுனன்; வைதிகன்—வைதிக அந்தணன்; திண்தேர்—திடமான தேர்; கடவி—செலுத்தி; சோதியில்—பரஞ்சோதி எனப்படும் திருநாட்டில்; உடலொடும் — உடம்போடும்; பற்றி — அடைந்து.]

'திருமால்சீர் பரவப்பெற்ற தனக்கு ஒரு குறையும் இல்லை' என்று கூறும் நம்மாழ்வார் திருமொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "ஒரு நாளில் ஒரு முகூர்த்தத்தில், துன்பம் இல்லாமல் எல்லா உலகங்கட்கும் அப்பால்

45. திருவாய். 3.10:5

படர்ந்த புகழையுடைய அருச்சுனனும் வைதிக அந்தண னும் தன்னுடன் ஏறி வரும்படியாகத் திண்ணிய தேரைச் செலுத்தி, ஒளிப் பிழம்பாயுள்ள தனது பரமபதத்தில் தங்கி யிருந்த அந்தணனுடைய பிள்ளைகளைச் சரீரத்தோடும் கொண்டு வந்து கொடுத்த இறைவனை அடைக்கலமாக அடைந்து சிறிதும் துயர் உடையேன் அல்லேன்'' என்கின் றார். இப் பாசுரத்திலுள்ள இதிகாசம்: இந்நூல் பாசுரம்—1இல் காண்க.

'உடலொடுங் கொண்டு கொடுத்தவனை' என்ற இடத்தை விளக்கும்பொழுது பட்டர், ''காலத்தால் உண்டாகின்ற மாறுபாடுகள் ஒன்றும் இல்லாத தேசமாகை யாலே, கொண்டு போகின்ற போதைப்படியில் ஒன்றுங் குறையாதபடி கொண்டு வற்து கொடுத்தவன். அன்றிக்கே பூசின மஞ்சளும், உடுத்தின பட்டும், இட்ட சுவடிப் பூணு நூலும், இட்ட காதுப் பணிகளுமான ஒப்பனையில் ஒன்றும் குறையாதபடி கொண்டு வந்து கொடுத்தவன்'' என்றா ராம். அது கேட்டவர்கள், ''இப் பிள்ளைகள் பிறந்த கணத்திலேயே கொண்டுபோகப்பட்டவர்களாக வன்றோ சொல்லுகின்றது'' என்று பட்டரைக் கேட்க; அவரும், ''இருடி புத்திரர்களாகையாலே, பிறக்கிறபோதே அவற றோடு பிறப்பர் காணும்'' என்று அருளிச் செய்தாராம். ரஸோக்தியை அநுபவித்து மகிழ வேண்டும்.

நான்காம் பத்து

154

'நண்ணாதார் முறுவலிப்ப[1]': இந்தத் திருவாய்மொழி யின் அவதாரிகையில் கண்டது: பேறு பெறுவதற்கு எப்படி அவன் கை பார்த்திருக்க வேண்டுமோ, அப்படியே முடி கைக்கும் அவன் கை பார்த்திருக்க வேண்டுமாகையாலே

1. திருவாய். 4.9

'எம்பெருமானே! என்னை நீதானே முடித்திடாய்' என்கின்றார். ஆழ்வாருடைய ஆர்த்தி பேச்சுக்கு நிலமல்லாபடி பெருகின்மை இத் திருவாய்மொழியில் விளங்கா நின்றது.

ஆழ்வாருடைய ஆர்த்திக்கு மூன்று காரணங்கள் உண்டு. எம்பெருமானோடு கலவி பெறாமல் பிரிந்து படும் ஆர்த்தி ஒன்று; சம்சாரிகளோடு சகவாசம் பொறுக்க வொண்ணாததால் அத்தால் வரும் ஆர்த்தி ஒன்று; இந்திரியங்கள் விஷயங்களிலே கொண்டுபோய் மூட்டி அநர்த்தங்களை விளைவிக்கையாலே அத்தாலே வரும் ஆர்த்தி ஒன்று. இவற்றுள் எம்பெருமானுடைய பிரிவினால் வந்த ஆர்த்தி "ஏறாளும் இறையோனும்" (4.8) என்ற திருவாய்மொழியில் கண்டது. இந்திரியங்களால் வரும் ஆர்த்தி "உண்ணிலாவிய ஐவரால்" (7.1) என்கின்ற திருவாய்மொழியில் காணலாகும். சம்சாரிகளிடையே சகவாசம் பொறுக்க வொண்ணாமையிலாகும் ஆர்த்தி இத் திருவாய்மொழியில் காணலாகும்.

இத் திருவாய்மொழியின் அவதாரிகையை எம்பார் ஒருவகையாகவும் ஆழ்வான் ஒருவகையாகவும் யோசிப்பார்களாம்.

எம்பார் யோசனை : "உன்னை யொழியப் புறம்பே பேறும் இழவுமா யிருக்கிற சம்சாரிகள் நடுவே இருக்கின்ற இருப்பால் படுகின்ற கிலேசமானது உன்னைப் பிரிந்திருந்து படுகின்ற கிலேசத்தளவல்ல; உன் பிரிவை ஒருவாறு ஆற்றலாம்; இந்த மகா பாபிகளான சம்சாரிகளின் இடையே இருப்பதாகின்ற கிலேசம் ஒருவிதத்தாலும் ஆற்றப் போவதில்லை; ஆதலால் இவ் விருப்பைத் தவிர்த்தருள வேண்டும்" என்று பிரார்த்திப்பதாக உள்ளது.

ஆழ்வானுடைய யோசனை : தம்முடைய ஆற்றாமைக்கு சம்சாரிகளில் யாரேனும் கூட்டாவார் உளரோ என்று உலகத்தாருடைய செயல்களை ஆய்ந்து சம்சாரிகளை நோக்கினார்; அவர்கள்தாம் சர்வேசுவரனிடத்தில் ஈடு

பட்டவராய் இருப்பது போன்று, ஐம்புல இன்பங்களில் ஈடுபட்டவராய் அவற்றினுடைய பேறு இழவுகளே லாபா லாபமாம்படி இருந்தார்கள்; அதனைக் கண்டவாறே, வாளேறு காணத் தேளேறு மாய்ந்தாற்போலே,2 தம் இழவை மறந்தார்; இவர்களுடைய துக்கமே நெஞ்சில் பட்டது; உடனே எம்பெருமானை நோக்கி, "பிரானே, இவர்களை இப்படித் துடிக்கவிடலாமா? 'நீ சர்வேசுவ ராய்ப் பேர் அருட்கடலாய்ச் சம்பந்தமுள்ளவனுமாய் இவர்களின் கிலேசம் அறிந்து போக்குவதற்குத் தக்க ஞான சக்திகளை யுடையையுமாயிருக்க, இவர்கள் இங்ஙனம் கிடந்து நோவு படுகை போருமோ? இவர்களைக் கரை மரம் சேர்க்க வேண்டும்' என்று அவன் திருவடிகளைப் பிடிக்க, எம்பெருமான், "இவர்களை அசேதனங்களாக நான் எப்படிக் கொள்ள முடியும்? இவர்கள் உண்டி உடை முதலானவற்றைக் கொள்ளாமலில்லை; அவற்றிலே நல்லன வற்றையும் தீயனவற்றையும் ஆராய்ச்சி செய்ய வல்லவர்க ளாயு மிருக்கின்றனர்; அப்படிப்பட்ட இவர்கள் விஷயாந் திரங்களைக் காட்டிலும் நம்முடைய வாசியை அறியாதே இருந்தார்களே யன்றால், இவர்கள் தொலைந்து போகிற படியே தொலைந்து போகட்டும் என்று கைவிடுவது தவிர வேறு நம்மால் செய்யலாவதுண்டோ? இப் பாவிகளைப் பற்றின கவலையை விட்டிடும்" என்று சமாதானம்செய்ய, அது கேட்ட ஆழ்வார், "பிரானே, ஆகில் இப்படிப்பட்ட வர்களின் நடுவே என்னை ஏன் வைத்திருக்கின்றாய்? இவ் விடத்தில் நின்றும் என்னை முன்னம் வாங்க வேண்டும்" என்ன, எம்பெருமான், "ஆழ்வீர், உம்மை முன்னமே வாங்கி விட்டேன் காணும்; சம்சாரிகளோடு பொருந்தாத படி உம்மைச் செய்து வைத்திருக்கின்றேன் அல்லவா? இவ் வுலக யாத்திரையைச் சிந்தித்ததனால் உமக்குண்டான

2. 'வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போலே' (இறை. களவியல். சூத் 2. உரை காண்க.)

கிலேசமெல்லாம் தீரும்படி ஒன்று காட்டுகின்றேன், காணும்'' என்று சொல்லிப் பரமபதத்தில் அயர்வறும் அமரர்கள் அடிமை செய்யப் பெரிய பிராட்டியாரும் தாமுமாக இருக்கின்ற இருப்பைக் காட்டிக் கொடுக்க,

ஒண்டொடியாள் திருமகளும்
நீயுமே நிலாநிற்பக்
கண்டசதிர் கண்டொழிந்தேன்
அடைந்தேன்உன் திருவடியே. (4.9:10)

என்று அநுசந்தித்துத் தரித்துக் கிருதார்த்தராய்த் தலைக் கட்டுகின்றார் என்பதாம்.

ஆழ்வாருடைய பேர் அருளைக் குறிக்கும் இந்த நிர்வாகம் பரம தயாளுவான ஆழ்வான் தன்மைக்குச் சேரும் என்பதற்கு ஓர் ஐதிகம் காட்டுவர் ஈட்டாசிரியர்; ஆழ்வான் ஓரிடத்தே வழிபோகா நிற்க ஒரு பாம்பினாலே பிடிக்கப் பட்ட தவளை கூப்பிடா நிற்க, 'இது யார் அறியக் கூப்பிடு கின்றதோ?' என்று மோகித்தாராம். ''அரவவாய்க் கோட்பட்ட மண்டூக ஒலி கேட்டு மதியெல்லாம் உள்கலங்கி மயங்கி நின்ற பெருமானார்'' என்று பின்புள்ளாரும் பேசினார்கள்.

155

கண்ணி யெனதுயிர் காதல்
கனகச் சோதி முடிமுதலா
எண்ணில பல்கல ன்களும்
ஏறும் ஆடை யும்அஃதே
நண்ணி மூவுல கும்,ந
விற்றுங் கீர்த்தியும் அஃதே
கண்ணன் எம்பிரான் எம்மான்
கால சக்கரத் தானுக்கே.[3]

3. திருவாய். 4.3:5

[கண்ணி—மாலை; காதல்—ஆசை; கனகம்—பொன்; சோதி—ஒளி; முடி—கிரீடம்; எண் இல்—கணக்கற்ற; பல்கலன்கள்—பல திருவாபரணங்கள்; ஏலும்—ஏற்றதான; அஃதே—அந்தக் காதலே: நண்ணி—கிட்டி; நவிற்றும்—துதிக்கின்ற; கீர்த்தி—புகழ்; அஃதே—அந்தக் காதலே.]

'எம்பெருமானது சேர்க்கையால் பெற்ற இன்பத்தைக் கூறும்' திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "காலத்தை நடத்துகின்ற சக்கரத்தையுடையவனான எம்மானும் எம்பிரானுமான கண்ணபிரானுக்கு, என்னுடைய உயிரானது அவன் அணிந்து கொள்ளுகின்ற மாலையாயிராநின்றது. அவன் உடுத்தியிருக்கின்ற பொன்மயமான ஒளி பொருந்திய திருமுடி முதலான எண்ணற்ற பலவித ஆபரணங்களும் என் அன்பேயாயிராநின்றது; பொருந்திய பீதாம்பரமும் அந்த அன்பேயாகும்; மூவுலகத்தாரும் பொருந்திச் செல்லுகின்ற கீர்த்தியும் அந்த அன்பேயாகும்" என்கின்றார்.

'ஏலும் ஆடையும் அஃதே': இவ்விடத்தில் ஈட்டில் ஓர் ஐதிகம் உண்டு; அதாவது—"ஒருநாள் ஒரு வைணவ வண்ணாத்தான், திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக் கொண்டு வந்து (சலவை செய்து கொண்டு வந்து) எம்பெருமானார்க்குக் காட்ட, அவரும் முழு மன நிறைவு அடைந்து அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைப்பிடித்துக்கொண்டு புக்கு, 'நாயன்தே! இவன் திருவரைக்குத் தகுதியாம்படி வாட்டினபடி திருக்கண் சாத்தியருளவேணும்' என்று சொல்லி இவற்றைக் காட்டியருள, பெருமாளும் கண்டு உகந்தருளி உடையவரை நோக்கி 'வாரீர்! இவனுக்காக, முன்பு வண்ணானொருவன் நம் திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவாய் மலர்ந்தருளினார்" என்று. வண்ணான் முன்பு செய்த குற்றமாவது: கண்ணபிரானும் பலராமனும் அக்ரூர

ரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளினபோது அவ்வூரிலுள்ள இராஜ வீதியில் கம்சனுடைய வண்ணான் துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, இவ்விருவரும் அவனிடத்தில் ஆடை விரும்ப, அவன் கொடாதொழிந்தது.

156

உய்வு பாயமற் றின்மைதேறிக்
கண்ணன் ஒண்க ழல்கள்மேல்
செய்ய தாமரைப் பழனத்
தென்னன் குருஊர்ச் சடகோபன்
பொய்யில் பாடல் ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
வையம் மன்னி வீற்றிருந்து
விண்ணும் ஆள்வர் மண்ணூடே.[4]

[உய்வு உபாயம்—தரிக்க விரகு; மற்று—வேறு வழியினால்; தேறி—துணிந்து; தண் கழல்கள்—அழகிய திருவடிகள்; பழனம்—நீர் நிலம்; வையம்—பூமண்டலம்; மன்னி—நெடுங்காலம் பொருந்தி; மண்ணூடே—இந்நிலத்திலேயே; விண்ணும் — பரமபதத்தையும்; ஆள்வர்—பெறுவர்.]

'எம்பெருமானது சேர்க்கையால் எய்திய இன்பத்தைக் கூறும்' திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. ஆழ்வார் இதரல், "செந்தாமரைமலர்கள் நிறைந்துள்ள வயல்களால் சூழப்பட்ட தெற்குத் திசையிலேயுள்ள சிறந்த திருக்குருகூரிலே அவதரித்த சடகோபர், நன்னெறி சேர்தற்குரிய வழி வேறு இல்லாமை தெளிந்து கண்ணபிரானுடைய சிறந்த திருவடிகளின்மேலே சாத்திய பொய் இல்லாத பாசுரங்கள் ஆயிரத்துள் இவை பத்துப் பாசுரங்களையும் கற்று வல்லவர்கள் பூவுலகில் பலகாலம் தங்கியிருந்து இவ்

4. திருவாய். 4.3:11

வுலகத்தில் இருந்து கொண்டே பரமபதத்தையும் ஆட்சி புரிவர்'' என்கின்றார்.

'வையம் மன்னி வீற்றிருந்து' : என்ற இடத்தில் ''நம்மைப் போலே வாய்புகு சோறாகப் பறி கொடாதே; பலகாலம் பூமியிலே ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே 'நாட்டாரோடு இயல் ஒழிந்து' என்கின்றபடியே, தங்கள் வேறுபாடு தோன்ற இருக்கப் பெறுவர்கள்'' என்று (நஞ்) சீயர் உருத்தோறும் அருளிச் செய்வர். பால்யத்தில் பட்டரைப் பறி கொடுத்தவர் அன்றோ இவர்?

நஞ்சீயர் பட்டர் திருவடி சம்பந்தம் பெற்றபின்பு நெடுங்காலம் பட்டரிடம் அர்த்த விசேடங்கள் கேட்டு இன்புற வேண்டுமென்று இருந்தார்; இருக்கையில் பட்டர் திருநாட்டுக்கெழுந்தருள நேர்ந்துவிட்டது. இதுவே இவர் தம் வருத்தத்திற்குக் காரணம்.

இன்னொரு குறிப்பு : பட்டர் இருபத்தெட்டு (அல்லது முப்பத்து இரண்டு) அகவையில் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்று சிலர் கூறுவதுண்டு. இதற்குப் போதுமான சான்று கிடைத்திலது; ஆராய்ந்து பார்க்குமளவில் பட்டர் ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயது வரை எழுந்தருளியிருந்தார் என்று கூறுவதற்குச் சான்றுகள் உள்ளன. நூற்றிருபது திருநட்சத்திரம் (வயது) எழுந்தருளியிருந்த எம்பெருமானாரை நோக்குமிடத்து பட்டர் எழுந்தருளியிருந்தது மிகவும் சிறிது காலமே என்று சொல்லலாம்படி உள்ளது என்பர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காரச்சாரிய சுவாமிகள்.

157

திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே என்னும்;
உருவுடை வண்ணங்கள் காணில்
'உலகளந் தான்' என்று துள்ளும்;

கருவுடைத் தேவுஇல்கள் எல்லாம்
'கடல்வண்ணன் கோயிலே' என்னும்;
வெருவிலும் வீழ்விலும் ஓவாக்
கண்ணன் கழல்கள் விரும்புமே. [5]

[திரு—செல்வம்; திருமால்—திருமகள் கொழுநன்; உரு உடை—அழகிய வடிவங்களையுடைய; வண்ணங்கள்—பொருள்கள்; துள்ளும்—ஆடுவாள்; கருஉடை—திருமேனி உடைய; தேவு இல்கள் — தேவாலயங்கள்; வெருவிலும்— அஞ்சிய போதிலும்; வீழ்விலும்—மோகித்த போதும்; ஓவா—ஒழியாதவளாகி; விரும்பும்— பேண நின்றாள்.]

தாய்ப் பாசுரம்: பிரிவாற்றாது போலிப் பொருள்களைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைத்தலாக வரும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில், "செல்வத்தையுடைய அரசர்களைக் கண்டால் திருமகள் கேள்வனைக் கண்டேன் என்பாள்; அழகுபொருந்திய வடிவங்களைக் கண்டால் உலகத்தையெல்லாம் அளந்த திரிவிக்கிரமன் என்று துள்ளுவாள்; படிமங்களையுடைய கோயில்கள் எல்லாம் கடல் போன்ற நிறத்தையுடைய திருமால் கோயில்களே என்பாள்; தெளிவுடையளாய்ப் பந்துக்களுக்கு அஞ்சின காலத்திலும் மயங்கின காலத்திலும் இடை விடாமல் கண்ணபிரானுடைய திருவடிகளை விரும்பா நின்றாள்" என்று திருத்தாயார் தன் மகள் நிலையைக் கூறுகின்றார்.

'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்': "அரசன் சாமமந்தன் தலையிலே அடியையிட்டு யானைக் கழுத்திலே ஏறும்போது நாதமுனிகள் கண்டு, 'சர்வேசுவரன் பிரமன் முதலியோர் தலையிலே

5. திருவாய். 4.4:8

அடியிட்டுப் பெரிய திருவடியின் மீது ஏறும்படி இது வன்றோ?' என்று சொல்லி மோகித்தாராம். ஓரரசனைக் கண்டு அவர் பின்னே தொடர்ந்து போனார் என்று சொல்வதும் உண்டு. ''அரசன் தன் சேனையோடே கங்கை கொண்ட சோழபுரத்து ஏறப் போகச் செய்தே, பெரிய முதலியார்[6] மன்னனார்[7] திருவடிகளில் சேவித்திருக்கும் போது, ஒரு பெண் பிள்ளை வந்து, 'நம் அகத்திலே ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்ணுமாக வந்து புகுந்தார்கள்' என்று சொன்னபொழுது, 'பெருமாளும் இளைய பெருமாளும் பிராட்டியும் ஐந்திர வியாகரண பண்டிதனும்'[8] என்று புத்தி பண்ணிப் பின் தொடர்ந்து போய், முன்னே போகின்றவர்கள் 'போகின்றார்கள், போகின்றார்கள்' என்று கேட்டுக் கீழை வாசலில் சென்ற பொழுது 'இப்படிப் போகின்றவர்களைக் கண்டீர்களோ' என்று கேட்க, அவர்கள் 'கண்டிலோம்' என்ன, அதுவே காரணமாக திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

158

விரும்பிப் பகவரைக் காணில்,
'வியலிடம் உண்டானே' என்னும்;
கரும்பெரும் மேகங்கள் காணில்
'கண்ணன்' என்று ஏறப் பறக்கும்;
பெரும்புல ஆநிரை காணில்
'பிரானுளன்' என்றுபின் செல்லும்;
அரும்பெறல் பெண்ணினை மாயோன்
அலற்றி அயர்ப்பிக்கின் றானே![9]

---

6. பெரிய முதலியார்—நாதமுனிகள்;
7. மன்னனார்—காட்டு மன்னார் கோயில் என்ற ஊரிலுள்ள திருமால் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்.
8. ஐந்திர வியாகரண பண்டிதன்—அநுமன்.
9. திருவாய். 4. 4:9

[பகவர்—பகவானுக்கு அடிமைப்பட்டவர்; சந்நியாசிகள்; விரும்பி— ஆதரவு கொண்டு பேணி; வியல் இடம்—அகன்ற உலகம்; ஏறப்பறக்கும்—மேலே எழுந்து பறப்பதற்கு அமரா நிற்பாள்; பெருபுலம் — பெரியனவாவும் காட்சிக்கு இனியனவாயும் உள்ள; ஆநிரை—பசுக்கூட்டம் பிரான்—உபகாரகன்; பெறல் அரு-பெறுவதற் அரியளான; அலற்றி—வாய்விட்டு அலரும்படி பண்ணி; அயர்ப்பிக்கின்றாள்—மயங்கச் செய்கின்றாள்]

இதுவும் தாய்ப் பாசுரமே. இதில், "பகவானுக்கு அடிமைப் பட்ட துறவிகளைக் கண்டால் விரும்பி, அகன்ற உலகத்தை யெல்லாம் புசித்த திருமால் என்பாள்; கரிய பெரிய மேகங்களைக் கண்டால் கண்ணபிரான் என்று கூறிக் கொண்டு மேலே எழுந்து பறப்பதற்குப் பாராநின்றாள்; பெரியவனவாயும் காட்சிக்கு இனியனவாயும் இருக்கிற பசுக்கூட்டங்களைக் கண்டால் கண்ணபிரான் அவற்றினி டையே இருக்கின்றான் என்று அவற்றின்பின்னே செல்லு வாள்; பெறுதற்கரிய என் பெண்ணினை மாயவன் வாய் விட்டு அலறும்படி செய்து மயங்கச் செய்கின்றான்'' என்று தன் மகள் நிலையைத் திருத்தாயார் கூறுகின்றார்.

,கரும்பெரும் மேகங்கள் காணில்;' இங்கே ஓர் இதிகாசம் ஈட்டில் அருளிச் செய்யப்பெறுகின்றது. இராஜேந்திர சோழன் என்றஊரில் திருவாய்க்குலத்தாழ்வார் என்ற பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். அவர் கார்காலத்தில் ஒரு நாள் பயிர் பார்க்கவென்று புறப்பட்டு வயலருகில் சென்ற பொழுது மேகத்தைக் கண்டவுடன் மோகித்து விழுந்தார்; இவர் விழுந்ததைக் கண்டு நின்ற குடிமகன் ஓடிவந்து அவரை எடுத்தக்கொண்டு வந்து இல்லத்திலேவிட்டு, இவர் தன்மையை அறிந்திருந்தும் இந்நாளிலே இவரை வயல்

பார்க்கப் புறப்பட விடலாமோ?' என்றான். மேகத்தைக் கண்டு பகவானாகவே எண்ணி மோகித்து விழுதல் பக்தர்களுக்கு உள்ளதென்று இதனால் விளங்குகின்றது.

இவ்விடத்தில் பெரிய திருவந்தாதியிலுள்ள,

கொண்டால்தான் மாலவரைதான்
மாகடல்தான் கூர்இருள்தான்
வண்டுஅறாப் பூவைதான்
மற்றுந்தான கண்டநாள்
கார்உருவம் காண்தோறும்
நெஞ்சுஓடும்—கண்ணனார்
பேர்உருஎன்று எம்மைப்
பிரிந்து.[10]

பூவையும் காயாவும்
நீலமும் பூக்கின்ற
காவிமலர் என்றும்
காண்தோறும் பாவியேன்
மெல்ஆவி மெய்மிகவே
பூரிக்கும்—அவ்வவை
எல்லாம் பிரான்உருவே
என்று.[11]

என்ற இரு பாசுரங்களும் அநுசந்தேயம்.

159

அயர்க்கும்; சுற்றும் பற்றிநோக்கும்
அகலவே நீள்நோக்குக் கொள்ளும்;
வியர்க்கும்; மழைக்கண் துளும்ப,
வெவ்வுயிர்க் கொள்ளும்; மெய்சோரும்;

10. பெரிய திருவந். 49; 11. ஷெ. 73

பெயர்த்தும் 'கண்ணா!' என்று பேசும்;
'பெருமானே! வா' என்று கூவும்;
மயற்பெருங் காதல்என் பேதைக்கு
என்செய்கேன் வல்வினை யேனே.[12]

[அயர்க்கும்—மயங்குவாள்; சுற்றும் — சுற்றிலும்; அகல—பார்த்த கண்ணைஓட்டி; நீள்நோக்கு —நெடும் பார்வை; வியர்க்கும் — வியர்த்து நிற்பாள்; வெம் — வெவ்விதாக; உயிர்க் கொள்ளும்—நெடுமூச்செறிகின்றாள்; மெய்— உடல்; சோரும்—வாடுவாள்; பெயர்த்தும்— —பின்னையும்; பேசும்—கூப்பிடுவாள்; மயல் —பிச்சேறும்படி; பேதைக்கு — சொற்கேளா பெண்ணுக்கு; வல்வினையேன் — கொடிய பாவியாகிய யான்]

இதுவும் தாய்ப் பாசுரம். அதில் ''என் மகள் மயங்குவாள், பின்னர் நாற்புறத்திலும் பலகாலும் பாரா; நிற்பாள் விரிந்து செல்லும்படி நீண்ட தூரம் பார்ப்பாள்; பின்னர் வியர்த்து நீராக நிற்பாள்: குளிர்ந்த கண்களில் நீர் துளும்பும் படி பெருமூச்சு எறிவாள்; தளர்வாள்; மீண்டும் 'கண்ண பிரானே!' என்று பேசுவாள்; 'பெருமானே வா' என்று கூவுவாள்; பெரிய காதலால் மயக்கம் கொண்ட என் பெண்ணிற்கு வல்வினையேன் என் செய்வேன்?'' என்று திருத்தாயார் பேசுகின்றாள்.

'வல்வினையேன்' என்ற இடத்து ஈட்டில் ஓர் ஐதிகம்: ''இவளை இப்படிக் காணும்படி மகாபாபத்தைப் பண்ணினேன். ஆழ்வான் திருநயனங்கள் நோவுபட்ட பின்பு எம்பெருமானார் திருவுள்ளம் நோவுபட்டாப்போலே காணும் திருத்தாயார் திருவுள்ளமும் படுகின்றது.'' என்பதாக.

---

12. திருவாய். 4. 4:10

160

நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும்
　　இன்பனை ஞாலத்தார்
தமக்கும் வானத் தவர்க்கும்
　　பெருமானைத் தண்தாமரை
சுமக்கும் பாதப் பெருமானைச்
　　சொல்மாலைகள் சொல்லுமாறு
அமைக்க வல்லேற்கு இனி யாவர்நிகர்
　　அகல்வா னத்தே.[13]

[நமக்கும்—சம்சாரிகளான நமக்கும்; நங்கை—பெரிய பிராட்டியார்; இன்பன்—இன்பம் அளிப்பவன்; ஞாலத்தார்—லீலா விபூதியில் உள்ளவர்கள்; வானத்தவர் — பரமபத வாசிகள்; பெருமான்—தலைவன்; பாதம்—திருவடிகள்; சொல்லும் ஆறு—சொல்லும் படியாக; அமைக்க வல்லேற்கு—அமைதியையைப் பெற்ற எனக்கு; அகல் வானம்—அகன்ற நித்திய விபூதி: நிகர்—ஒப்பாவார்.]

'எம்பெருமான் இருப்பைக் கண்டு இன்புற்றல்' பற்றிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "தன்திருவடிகளை இன்றுவந்து பற்றிய சம்சாரிகளாகிய நமக்கும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியாருக்கும் இனியவனானவனும், பூவுலகிலுள்ளவர்கட்கும் நித்திய சூரிகட்குத் தலைவனும், குளிர்ந்த தாமரை மலராலே சுமக்கப்படுகின்ற திருவடிகளையுடைய பெருமானுமான சர்வேசுவரனைச் சொல்மாலைகள் சொல்லும் படியாகத் தரிக்கவல்ல எனக்குப் பரமபதத்திலேயுள்ள நித்தியசூரிகளுக்குள் இனி ஒப்பாவார் யாவர்?" என்கின்றார்.

13. திருவாய் 4.5:8

'நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனை' : எம்பெருமான் பிரீதிபண்ணுமிடத்தில் 'அகலகில்லேன் இறையும்' என்று கூறும் பிராட்டியிற் காட்டிலும் அதிகமாகவே நம்மிடத்தில் பண்ணுவன் என்பது ஈண்டு அறியத் தக்கது. இங்கே ஈட்டு ஸ்ரீசூக்தி காண்மின் : "இன்பனாமிடத்தில் முற்பாடு இங்கேயாய்ப் பின்பாயிற்று அவளுக்குச் சிநேகித்திருப்பது."

வரலாறு : இலங்கையிலேயுள்ள சுவேல மலையில் பெருமாள் எழுந்தருளியிருக்கும்போது இராவணன் கோபுர சிகரத்தே வந்து தோன்றினான். 'இராஜத் துரோகியான பயல் திருமுன்பே நிற்பதும் நீதியோ?' என்று மகாராஜர்[14] அவன்மேலே எழப் பாய்ந்து வென்று வந்த போது பெருமாள் அவரைப் பார்த்து, "இராஜாக்கள் இப்படிப் பட்ட சாகசக் காரியங்களைத் தாங்களே செய்ய மாட்டார்கள்" (ஸ்ரீராமா. யுத். 41:2) என்றது, சிலர் மேல் விழ வேண்டினால், சேனைத் தலைவர்கள் நிற்க அரசரோ மேல் விழுவார் என்கின்றார் என்றபடி. "உனக்கு ஓர் அனர்த்தம் விளையுமாகில், பின்னை சீதாப்பிராட்டிதான் எனக்குக் கிடைத்தென்ன?' என்றார். இதனால், பிராட்டி பக்கலிற் காட்டிலும் அடியவர் திறத்தில் எம்பெருமானுக்குள்ள அன்பின் கனம் அறிய எளிதாகின்றது.

மேலும், "ஸ்ரீராமபிரான் உலகங்களுக்கெல்லாம் நாதனாக இருந்தும் சுக்கிரீவனை நாதனாக இச்சிக்கின்றார்" (ஸ்ரீராமா. கிஷ். 4:18) என்னா நின்றதேயன்றோ? கிடைப்பது கிடையாதொழிவது இச்சியா நின்றார். "அத்தகைய இந்த ஸ்ரீராமபிரான் சுக்கிரீவனைச் சரணமாக அடைந்தார்" (ஸ்ரீராமா. கிஷ். 4:20) என்னா நின்றதேயன்றோ? "நீர் மகாராஜரான தரம் குலைய அவன் ஒரு

14. மகாராஜர்—இவ்வாறு சுக்கிரீவனைக் குறிப்பது வைணவ மரபு.

வார்த்தை சொல்லுமாகில் நீர் தேடிப் போகின்ற சரக்குத் தான்[15] நமக்கு என்ன செய்ய?'' (ஸ்ரீராமா. யுத்த. 41:4) என்றாரேயன்றோ?

இதற்குக் காட்டும் ஐதிகம் : 'ஸ்ரீவிபீஷணாழ்வானைப் புகுரவொட்டேன்' என்கிறார் மகாராஜர்; 'இவன் புகுரா விடில் நாம் உளோமாகோம்' என்கின்றார் பெருமாள். இப்படி இருவரும் மாறுபடுவதற்குக் கருத்து என்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, அவர் 'இருவரும் சரளமாகப் பற்றினவர்களை விடோம் என்று மாறுபடுகிறார்கள் காணும்' என்று அருளிச்செய்தார். ''சுக்கிரீவம் சரணம் கத!'' என்றதனை நடத்தப் பார்த்தார் மகாராஜர்; ''இராகவம் சரணம் கத:' என்றதை நடத்தப் பார்த்தார் பெருமாள் என்றபடி. அங்ஙனமாயின், மகாராஜர்க்குத் தம்மை அடிமையாக நினைத்திருக்கும் நிலைகுலையாதோ? எனின்; ஆகையாலேயன்றோ 'வானரங்களுக்குத் தலைவனே! இவனை அழைத்துக்கொண்டு வா' என்று அவரை இடுவித்து அழைத்துக்கொள்ள வேண்டிற்று.

161

''தீர்ப்பாரையாம் இனி''[16] : (அவதாரிகை). இது தோழி பாசுரம். ஆழ்வார் தாமான தன்மையை இழந்து ஒருதலைமகளாம் நிலைமையை எய்தி, அது தன்னிலும் தம் வாயாலே சொல்லமாட்டாமல் வேற்று வாயாலே சொல்ல வேண்டித் தோழியின் பேச்சாகச் சொல்லுகின்றது இத் திருவாய்மொழி. வெறிவிலக்குத் துறையிலே அவதரித்தது இது. தோழியின் பேச்சாகச் சொல்லுவதற்கு ஒரு தத்துவம் உண்டு.

திருமந்திரம் 'ஓம் நமோ நாராயண' என்பது. 'ஓம்' என்ற 'பிரணவம் ஆன்மாவின் அடிமைத் தன்மையையும்

---

15. 'தேடிப்போகிற சரக்கு' என்றது சீதாப் பிராட்டியை.

16. திருவாய் 4.6.

(சேஷத்துவத்தையும்), 'நமஸ்ஸு' ஒருவனையே பிரதான மாகக் கொண்டிருக்கும் தன்மையையும் (பாரதந்திரியத் தையும்), 'நாராயணாய' என்பது ஆன்மா இறைவனுக்குப் புரியவேண்டிய அடிமைத் தொழிலையும் (கைங்கரியம்) உணர்த்துகின்றன என்பது இம்மந்திரத்தின் விளக்கம்.

மேலும், இவற்றுள் பிரணவம் பிரிந்திருக்கும் நிலையில் 'அ', 'உ', 'ம' என்ற மூன்று எழுத்துகளைக் கொண்டது. இம்மூன்று எழுத்துகளும் முறையே இருக்கு, யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களின் உயிர்நிலையான எழுத்துக ளாகும். ஆகவே, பிரணவம் சகல வேத சாரமாகின்றது. இந்த மூன்று எழுத்துகளும் மூன்று சொற்களாக நின்று மேற்கூறிய மூன்று பொருள்களையும் தெரிவிக்கும். அஃதாவது, அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந் துள்ள வேற்றுமை ('ஆய' என்பது) அடிமைத் தன்மையை யும் (சேஷத்துவம்) உகாரம் அந்த அடிமைத் தன்மை மற்ற வருக்கில்லாமல் எம்பெருமானுக்கே உரியதாயிருக்கும் தன்மையையும் (அநந்யார்ஹத்துவம்), மகாரம் ஞானவா னாகிய சீவான்மாவையும் தெரிவிக்கின்றன. இங்ஙனம் ஆன்மாக்கள் யாவும் சீமன் நாராயணனுக்கே அடிமை என்ற உணர்வுடன் கூடிய மனநிலை தோழியின் கூற்றாக வெளியிடப்பெறுகின்றது என்பது ஆன்றோர் துணிபு. திருவாய்மொழியில் தோழியின் பாசுரமாக வரும் மூன்று பதிகங்களும்[17] பிரணவத்திலுள்ள உகாரத்தின் பொரு ளான அநந்யார்ஹத்துவத்தை வெளியிடுகின்றன.

அகப்பொருள் இலக்கியத்தில் வரும் தோழியின் பங்கு மிகப் பெரிது. அவளே தலைவியைத் தலைவனுடன் கூட்டி வைப்பதற்குக் கருவியாக இருப்பவள்.[18] அங்ஙனமே பகவத்

---

17. திருவாய் 4.6:6.5: 8. 9. திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் தோழியின் பாசுரமாக ஒன்றும் இல்லை.

18. இங்குத் தலைவன் தலைவியை அடையவேண்டும் என்று துடித்து நிற்பான். தோழி இங்கிதம் அறிந்து தலைவியுடன் கூட்டிவைப்பாள்.

விஷயகாமத்திலும் தோழியே தலைவனுடன் தலைவி சேர் வதற்கு வழி வகுப்பாள்.[19] தடுத்துநிற்கும் தாய் முதலி யோரைப் பதமறிந்து பக்குவப்படுத்துவாள். தோழிப் பாசுரங்கள் யாவும் இம்முறையிலேயே செல்வதை அறியலாம்.

162

திசைக்கின்ற தேயிவள் நோயிது
மிக்க பெருந்தெய்வம்
இசைப்பின்றி நீரணங் காடும்
இளந்தெய்வம் அன்றிது
திசைப்பின்றி யேசங்கு சக்கரம்
என்றிவள் கேட்கநீர்
இசைக்கிற்றி ராகில்நன் றேஇல்
பெறுமிது காண்மினே[20]

[திசைக்கின்ற—திகைக்கின்ற, அறிவு மயங்குகின்ற; பெருந்தெய்வம்—பராத்பரமான தெய்வம்; இசைப்பு—தகுதி, பொருத்தம்; அணங்கு—வெறி; இளம் தெய்வம்— சிறுதெய்வம்; திசைப்பு— மனக்குழப்பம்; கேட்க— காதில் விழும்படியாக; இசைக்கின்றீர் ஆகில்— சொல்ல வல்லீர்களானால்; நன்றே—நலமாகவே; இல்பெறும்—இல்இருப்புப் பெறும்படி யாகும்; இல்—சரீரம் (உயிருக்கு வீடாக இருப்பது).]

---

19. இங்கும் தலைவனை அடையவேண்டும் என்று துடித்து நிற்பாள். தோழி இங்கிதம் அறிந்து தலைவனுடன் சேர்வதற்கு வழிவகுப்பாள்.

20. திருவாய் 4. 6: 2

இத் திருவாய்மொழி 'வெறிவிலக்குத்' துறையில் அமைந்தது. ஆழ்வார் தாமான தன்மையை இழந்து ஒரு தலை மகள் நிலைமையை எய்தி, அந்நிலையிலும் தம் வாயால் சொல்லமாட்டாமல் வேற்று வாயாலே சொல்ல வேண்டித் தோழியின் பேச்சாகச் செல்லுகின்றது.

இப்பாசுரத்தில் தோழி, "சிறுதெய்வங்களைக் குறித்துப் பண்ணும் சாந்திகளால் இவளுடைய நோயைப் போக்குதல் அரிது; எம்பெருமானுடைய இலட்சணங் களைச் சொல்லில் இவளைப் பெறலாம்" என்கின்றாள். அதாவது, நீங்கள் இப்படியும் அறிவுகெட்டு மயங்கலாகுமா? இவளுடைய நோய் மிக்க பெரிய தெய்வம் காரணமாக வந்தது; நீங்கள் பொருத்தமில்லாமல் அணங்கு ஆடுகின்ற புன்சிறு தெய்வங்கள் காரணமாக வந்ததன்று என்பதை உணர்ந்து மயக்கமல்லாமல் 'சங்கு சக்கரம்' என்று இவள் கேட்கும் படியாகச் சொல்வீர்களாகில் நலம் பயக்கும்; இவளும் இச்சரிரத்தையே இடமாகப் பெறுவாள்; இதனை நீங்களே காணுங்கள்" என்கின்றாள்.

பாகவதர்களுடைய திருமாளிகையிலே புன்சிறு தெய்வங்கள் வந்து புகுரமாட்டா என்பதற்கு ஐதிகம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர்: "பிள்ளையுறங்காவில்லி தாசருடைய குடிமகன் (படியாள்) ஒருவனுக்கு, ஐயனார் ஏறிவந்து நலிந்தவாறே, 'உனக்கு வேண்டுவதுஎன்?' என்று கேட்க, 'எனக்குப் பாலும் பழமுமாக உண்ணவேணும்; சாந்தும் புழுகும் பூசவேணும்; நல்லபுடைவையை உடுக்க வேணும்; நல்ல ஆபரணம் பூணவேணும்; தண்டு (பல்லக்கு) ஏறவேணும்; அணுக்கன் (குடை) இடவேணும்' என்ன, அவர்களும் 'அப்படியே செய்கிறோம்' என்று பிள்ளையின் திருமாளிகையிலே வந்து, சாந்து, புழுகு, ஆபரணம் முதலானவைகளை வாங்கிக்கொண்டு போய் அவற்றை அலங்கரித்துச் சாந்தியும் செய்துவிட்டு வந்த அவ்விரவு, பண்டையிலும் இருமடங்கு அதிகமாக அவனை வலிக்க, 'இஃது என்?' என்று கேட்க, 'பிள்ளை சாத்திக்கொள்ளு

கின்ற வற்றைபெல்லாம் கொண்டு வந்தீர்கள்; அவர்க்குச் சாத்துகின்ற அணுக்கனை இட்டீர்கள்: நான் அதன்கீழ்ப் போவேனோ? என்னை வெயிலிலே கொண்டு போனீர்கள்; என்உடம்பிலே நெருப்பை வழியட்டினாற்போலே அவர் சாத்துகிறவற்றைப் பூசினீர்கள்; அரிகண்டம் இட்டாற் போலே அவர் சாத்துகிற ஆபரணத்தைப் பூட்டினீர்கள்; நீங்கள் செய்த செயலுக்கு இவனைக் கொண்டல்லது போகேன்' என்று வலித்ததாம்.

இப்பாசுரத்தின் ஈட்டுரையில் மற்றோர் ஐதிகம் பாரா பட்டர் காலத்தில் ஆய்ச்சிமகன் என்றொரு பாகவதர் இருந்தார்; அவர் நோவு கண்டு உணர்ச்சியற்றுக் கிடக்கும் நிலையில் பட்டர் அவரைப் பார்க்க எழுந்தருளினாராம். அப்போது அந்த ஆய்ச்சிமகன் அடியோடு அறிவு நடையாடாதபடி இருப்பதைக் கண்டு பட்டர் அவர் அழகிய மணவாளனிடத்தில் மிக்க பக்தியுடையவர் என்பது காரணமாக அவருடைய திருச்செவியில் 'அழகிய மணவாளப் பெருமானே சரணம்'' என்றாராம்; அதனால் அவருக்கு உணர்ச்சி உண்டாகி நெடும் போதெல்லாம், 'அழகிய மணவாளப் பெருமானே சரணம்' என்று நாவினால் நவிற்றிக்கொண்டே திருநாட்டுக்கு எழுந்தருளினாராம். ''திசைப் பின்றியே சங்கு சக்கரம் என்றிவள் கேட்க நீர் இசைக்கின்றீர்'' என்பதற்கு இந்த நிகழ்ச்சி பொருந்துகின்றது.

163

தணியும் பொழுதில்லை நீரணங்
காடுதிர் அன்னைமீர்
பிணியும் ஒழிகின்ற தில்லை
பெருகுமிது வல்லால

மணியின் அணிநிற மாயன்
தமரடி நீறுகொண்டு
அணிய முயலின்மற் றில்லைகண்
டீர்இவ் அணங்குக்கே[21]

[தணியும் பொழுது—சிறிதும் ஓய்வு; நீர்—நீங்கள்; அணங்கு—வெறியாட்டு; பிணியும்—நோயும்; ஒழிகின்றது—தீர்கின்றது; இது அல்லால்—இது மாத்திரமேயன்றி; மணியின்— நீலமணியிற் காட்டில்; அணிநிறம்—அழகிய நிறம்; மாயன் தமர்— பாகவதர்கள; அடிநீறு— பாததூளி; அணிய—இடுவதற்கு; மற்று—பிறிது என்னும் பொருளில் வந்தது]

இத்திருவாய் மொழிப் பாசுரமும் வெறிவிலக்குப் பாசுரமே. ''அந்தோ! சிறு பிள்ளைகள் போல் நீங்கள் செய்கின்றீர்களே! ஏதாவது ஒரு காரியத்தைச் சிறு பிள்ளைகள் செய்யும்போது அதன் தகுதியின்மைகண்டு பெரியோர்கள் மறுத்தால், அப்பிள்ளைகள் அக்காரியத்தையே மேன்மேலும் பிடிவாதமாய் வலிந்து செய்வது வழக்கமாதல் போலவே, நீங்களும் நான் மறுப்பதை ஏதுவாகப் பிடிவாதம் கொண்டு வெறியாட்டை விடாது செய்கின்றீர்களே! இதனால் பிணி ஒழியாததோடு பெருகி நிற்பதையும் காண்கின்றோமே'' என்கின்றாள் முன்னிரண்டு அடிகளில்.

பின்னிரண்டு அடிகளில்: ''நீலமணி வண்ணனான எம் பெருமானுடைய வடிவழகில் ஈடுபாடு கொண்ட பாகவதர்களின் பாத தூளியைக் கொண்டுவந்து......'' என்று இவள் தொடங்கும் போதே தாய்மார்கள் ''... இவ்வரும் பொருள் நமக்குக் கிடைக்க வழி ஏது? மிகவும் அரிதானபொருளைச் சொல்லுகின்றாயே; இதனைச் சம்பாதிப்பது சிரம

21. திருவாய். 4. 6: 6

மாயிற்றே'' என்று சொல்ல, "அன்னைமீர்! மாயன்தமரடி நீறுதன்னைக் கொண்டுவர வேண்டும்; இவளுக்கு அதை இடவேண்டும்?என்று மனத்தால் எண்ணினாலும் போதும்; அவ்வளவிலேயே நோய் தீர்ந்ததாகும், பாருங்கள்'' என்கின்றாள்.

'மனத்தால் எண்ணினால் மட்டிலும் போதுமா?' என்ற ஐயத்திற்குப் பரிகாரமாக ஈட்டில் 'ஆநுகூல்யஸ்ய சங்கல்ப பிராதிகூலஸ்யவர்ஜனம்'22 என்ற பிரபத்தியின் அங்கங் களைக் காட்டும் பாஞ்சராத்ரப் பிரமாண சுலோகத்தை எடுத்துக் காட்டித் தெளிவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆநு கூல்யத்தைப்பற்றின எண்ணம் போது மென்றும், பிராதி கூல்யத்திலோ வென்னில், 'அதை விடுவோம் என்கின்ற எண்ணம் போதாது, விட்டே தீரவேண்டும்' என்றும் விளக்கப் பெற்றுள்ளது. இதுபோலவே இங்கு மாயன் தமரடி, நீறு கொண்டு இடவேண்டுமென்ற முயற்சியளவே போதும் என்றும், பரிகாரதாகச் செய்துவருகின்ற கீழான காரியங்களை விடுவோம் என்று எண்ணினால் மட்டிலும் அமையாது, கடுகவிட்டே தீரவேண்டும் என்றும் தெரி வித்தவாறு அறியத் தக்கது.

இங்கே வைணவ பாததூளியின் சிறப்பினைப்பற்றின ஓர் ஐதிகம் : அகளங்க நாட்டாழ்வான்[23] வண்டலங்கார

22. வர்ஜனம்—அடியோடு நீக்குதல்

23. இவன் சோழப் பேரரசில் உறையூரைத் தலை நகராகக் கொண்டு ஒரு பகுதியை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன். இவனுக்கு இராமானுசர் பஞ்ச சம்ஸ்காரங்க ளைச் செய்வித்து சீடனாக ஆட்கொண்டார். அகளங்கன் 'அகளங்க நாட்டாழ்வான்' என்றதாஸ்ய நாமம் பெற்றான். இவனைக் கோயிறபணியாளர்களுக்கெல்லாம் மேலதிகாரி யாக்கினார். இந்தச் சீடனின் தலைமையில் திருவரங்கம் ஒருகோயில் நகரமாகவும், திருவிழா நகரமாகவும் வளர லாயிற்று.

தாசர் செண்டலங்கார தாசர்[24] என்ற இரண்டு ஸ்ரீவைணவர்களோடு ஓரிடத்திற்குச் செல்லுகையில் வழியில் ஓர் அமணன் பாழி (சமணர் கோயில்) தென்பட்டது: அப்போது இரவு நேரம். அக்கோயில் வாசலில் சிங்கப்பதுமை இருப்பதைக்காட்டி அவ்வாழ்வான் 'பகவத் சந்நிதி சேவியுங்கள்'' என்று வேடிக்கையாகச் சொல்ல, அவர்களும் அதை மெய் என்று எண்ணி சேவித்தார்கள். சேவித்த பிறகு இஃது அமணன் பாழி என்று அறிந்தவாறே மோகித்து (மயக்க முற்று) விழுந்தார்களாம். அப்போது அருகேயிருந்த பிள்ளையுறங்கா வில்லிதாசர் தம்முடைய பாத தூளியை அவர்களுக்கு இட அவர்களும் மோகம் தெளிந்து எழுந்தார்களாம்.

இன்னோர் ஐதிகம் : திருக்கொட்டாரத்தின் அருகே கைந்நிரை[25] கட்டிக் கொண்டிருக்கின்ற நாளிலே நஞ்சீயர் இத் திருவாய்மொழியை ('தீர்ப்பாரையாமினி" என்பதை) அருளிச் செய்யும்போது ''தேர்ப்பாகனார்க்கு (4. 6. 1) என்று நோய்க்கு நிதானம் சொன்னாளாகில், அத்தேர்ப்பாகனை இட்டு நீக்கிக் கொள்ளாமல் 'மாயன் தமர் அடிநீறுகொண்டு அணிய முயலின்' என்று இதனைப் பரிகாரமாகச் சொல்லுவாள் என்? நோக்கு நிதானம் ஒன்றும், பரிகாரம் ஒன்றுமேயாயோ இருப்பது?'' என்று நான் நம்பிள்ளையைக் கேட்டேன்; ''மோர்க்குழம்பு இழியாதே மோகித்துக் கிடந்த சமயத்தில் சுக்கு இட்டு ஊதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்துப் பரிகரிப்பாரைப் போலே, 'தேர்ப் பாகனார்க்கு' என்னும் போதே அவரைக் கொண்டுவந்து காட்டப்பெறாமையாலே, முற்பட இவ் வழியாலே தேற்றிப் பின்னை அவரைக் கொடுவந்து காட்டுவதாகக் காணும்'' என்று அருளிச் செய்தார்.

---

24. இவர்கள் இருவரும் வில்லிதாசரின் மக்கள்: வண்டவலலி செண்டவல்லி என் திருநாமம் உடையவர்கள். இராமாநுசரால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகு இந்தத் தாஸ்ய நாமம் பெற்றனர்.

25. கைந்நிரை—நிரைச்சல்.

164

உன்னித்து மற்றொரு தெய்வம்
தொழாளவ னையல்லால்
நும்மிச்சை சொல்லிநும் தோள்குலைக்
கப்படும் அன்னைமீர்!
மன்னப் படும்மறை வாணனை
வண்துவ ராபதி
மன்னனை, ஏத்துமின் ஏத்துத
லும்தொழு தாடுமே.[26]

[உன்னித்து—நினைத்து; தொழாள்—தொழுவது இல்லை; நும் இச்சை—உங்களுடைய மனம் போனபடியே; மன்னப்படும் — நித்தியமாக விளங்குகின்ற; மறைவாணன் — வேதங்களி னால் போற்றப்படுபவன்; ஏத்துமின்—துதி யுங்கள்; ஆடும்—களித்துக் கூத்தாடுங்கள.]

தோழி பாசுரம் : 'வெறிவிலக்கு' என்ற அகத்துறையில் அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். ஆழ்வார் தாமான தன்மையை இழந்து ஒரு தலைமகள் நிலைமையை எய்தி, அது தன்னிலும் தம் வாயாலே சொல்லமாட்டாமல் வேற்று வாயாலே சொல்ல வேண்டித் தோழியின் பேச் சாகச் செல்லுகின்றது இப் பாசுரம்.

தலைவனின் பிரிவாற்றாது மிக வருந்திய தலைமகளது வடிவ வேறுபாட்டினைக் கண்ட தாய்மார்கள் 'இவள் இங்ஙனம் மெலிவதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபின்படி ஆய்ந்து 'இவளுக்கு முருகக் கடவுள் ஆவே சித்த தொழியப் பிறிதொன்றுமில்லை' என்று கூற அது கேட்ட தாயர் உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து

26. திருவாய். 4.6:10

அவனைக் கொண்டு ஆவேசமிடுவிப்பதும் சிறு தெய்வங் களுக்கு உரிய பலிகளை இடுவிப்பதும் செய்ய, அதற்குத் தலைமகள் மிகவும் வருந்தா நிற்க, அச்சமயத்தில் அவளது துன்பத்தின் உண்மையான காரண முணர்ந்த தோழி அந்த முயற்சிகளைக் கண்டித்துக் கூறுகின்ற பாசுரமாகச் செல்லு கின்றது இது.

இதில் தோழி பேசுவது : ''சர்வேசுவரனை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தை நினைத்து வணங்கமாட்டாள் இவள்; இங்ஙனமிருக்க, உங்களுக்கு விருப்பமானவற்றை யெல்லாம் சொல்லி உங்களுடைய தோள்களை வருந்திக் கொள்ளுகின்ற தாய்மார்களே! என்றும் நிலைத்திருக்கின்ற வேதங்களால் சொல்லப்பெறுகின்றவனும், வளப்பம் பொருந்திய துவாரகைக்கு நாதனுமான சர்வேசுவரனைத் துதியுங்கள்; துதி செய்த அளவிலே அவனைத் துதி செய்து ஆடுவாள்'' என்கின்றாள்.

ஐதிகம் : துவாரபதி என்பது கண்ணன் ஆண்ட தலை நகரம். தஞ்சைமா வட்டத்திலுள்ள 'இராஜமன்னார் கோயில்' என்ற ஊரிலுள்ள இராஜமன்னார் சந்நிதியில் இப் பாசுரம் மிக்க சிறப்புப்பெற்று வரும்.

165

அப்ப னே!அட லாழி
யானே! ஆழ்கட லைக்கடைந்த
துப்ப னே!உன் தோள்கள்
நான்கும் கண்டிடக் கூடுங்கொலென்று
எப்பொழு தும்கண்ண நீர்கொண்
டாவி துவர்ந்து துவர்ந்து
இப்பொ ழுதேவந் திடாயென்
றேழையேன் நோக்குவனே.[27]

---

27. திருவாய் 4.7:5

[அடல்—வீரத்தன்மை வாய்ந்த; ஆழி—சக்கரம்; துப்பனே—சமர்த்தனே; கண்டிட—சேவிக்க; கண்ணநீர்—கண்ணீர்; துவர்ந்து—உலர்ந்து.]

'திருமாலை வந்தருளுமாறு தம் குறைகூறி வருந்தி' ஆழ்வார் அழைத்தலைக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "எந்தையே! வலிமை பொருந்திய திருவாழியை யுடையவனே! ஆழ்ந்துள்ள திருப்பாற்கடலைக் கடைந்த வலிமையை யுடையவனே! உன்னுடைய தோள்கள் நான்கனையும் கண்டதாய்விடக் கூடுமோ? என்று எப்பொழுதும் கண்ணும் கம்பலையுமாய் நின்று என் உயிரும் பசையற உலற, இந்தக் கணத்திலேயே வரவேணும் என்று விரும்பி, அறிவில்லாத யான், நீ வரக் கூடிய திசையைப் பார்ப்பேன்" என்கின்றார்.

ஏழையேன் நோக்குவனே': இந்த இடத்தில் ஓர் ஐதிகம் உண்டு. சோழராஜன் சபையில் திருக் கண்களை இழந்த கூரத்தாழ்வானை உடையவர் காஞ்சி வரதராஜ னைப்பற்றி ஒரு ஸ்தவம் பணிக்கும்படி நியமித்தார்; பேரருளாளன் வரந் தரும் பெருமாள் என்று பேர் பெற் றிருக்கையாலே திருக்கண் தந்தருள்வன் என்று திருவுள்ளம் பற்றி அப்படி நியமித்தருளினார். ஆசாரிய நியமனத்தை அடியொற்றி ஆழ்வானும் வரதராஜஸ்தவம் என்றதொரு நூலை அருளிச் செய்து அதை உடையவர் திரு முன்பே விண்ணப்பம் செய்து வருகையில் அதிலுள்ள 'நீலமேகநிபம்' என்று தொடங்கும் சுலோகரத்தினத்தைத் திருச்செவி சாத்தின உடையவர் "ஆழ்வான்! இப் பாசுரம் கேட்டால் பெருமாள் இரங்காமையில்லை; உன் முகத்தைத் காட்டு பார்ப்போம்" என்றாராம். கனிந்த சொற்களுக்கு எம்பெருமான் காட்சி தந்தே தீருவன் என்று அன்பர்கள் நம்புவதற்கு உறுப்பான ஐதிகம் இது.

166

மணிமாமை குறை வில்லா
　　மலர்மாதர் உறைமார்பன்
அணிமானத் தடவரைத்தோள்
　　அடலாழித் தடக்கையன்
பணிமானம் பிழையாமை
　　அடியேனைப் பணிகொண்ட
மணிமாயன் கவராத
　　மடநெஞ்சால் குறைவிலமே.[28]

[மணிமாமை—அழகிய நிறம்: குறைவு இல்லா—நிரம்பி யிருக்கப் பெற்ற; மலர்மாதர்—பெரிய பிராட்டியார்; அணி மானம்—அழகியதாய்ப் பெருத்து: அடல் — கொல்லுதல்; ஆழி — சக்கரம்; மானம்—அளவு; பிழையாமே—தப்பாதபடி; பணி கொண்ட — அடிமை கொண்ட; மணி—நீல மணி; கவராத—விரும்பாத.]

இது மகள் பாசுரம்: எம்பெருமான் விரும்பாதவை களால் தமக்குப் பயன் இல்லை என்று தலைவி கூற்றாக அமைந்த பாசுரம் இது. இதில், ''மணி போன்ற ஒளியை யுடைய அழகிலே யாதொரு குறையும் இல்லாத பெரிய பிராட்டியார் நித்திய வாசம் செய்கின்ற மார்பையுடைய வனும், அழகிய பெருமை பொருந்திய விசாலமான மலை போன்ற தோள்களையும் பகைவர்களைக் கொல்லுகின்ற சக்கரத்தைத் தரித்த திருக்கரத்தையும் உடையவனும், கைங்கரியத்தின் அளவிலே தவறாமல் அடியேனை அடிமை கொண்ட நீலமணி போன்ற நிறத்தையுடைய மாயவனு மான சர்வேசுவரனால் விரும்பப்படாத மடநெஞ்சால் ஒரு காரியத்தை யுடையோம் அல்லோம்'' என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

---

28. திருவாய் 4.8:2

பணி மானம் பிழையாமே: கைங்கரிய விருத்திகள் தப்பாதபடி. இங்கு ஈட்டில் ஓர் ஐதிகம். "எம்பெருமானார் திருமடத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுது செய்யா நிற்க, அவர்களுக்குத் தீர்த்தம் பரிமாறுகின்ற கிடாம்பி ஆச்சான் நேரே நின்று பரிமாறாமல், ஒரு பக்கமாய் சாய்ந்திருந்து பரிமாறினாராம்; அத்தை உடையவர் கண்டு ஓடி வந்து முதுகில் அடித்து, 'உடோ, இப்படியா பரிமாறுவது? நேரே நின்றன்றோ பரிமாற வேணும்' என்று சிட்சிக்க' அப்போது ஆச்சான் "பணி மானம் பிழையாமே அடியேனைப் பணி கொண்டருளிற்றே!" என்று உகந்தாராம்.

இன்னும் ஓர் ஐதிகம்: 'கவராத மடநெஞ்சால் குறைவிலமே' என்ற இடத்தில் நஞ்சீயர் அருளிச் செய்வதொரு வார்த்தை உண்டு. 'கோவை வாயாள்' (திருவாய் 4.3) என்ற திருவாய்மொழியில்[29] 'பூசுஞ்சாந்து என் நெஞ்சமே" (4.3:1) என்னும்படி, அன்று அப்படி விரும்பினவன் இன்று இப்படியே உபேட்சிக்கையாலே, 'நாயகன் வரவு தாழ்த்தான்' என்று அவன் முன்னிலையில் சாந்தைப் பரணியொடு உடைப்பாரைப்போலே, 'என் நெஞ்சு எனக்கு வேண்டா என்கின்றாள்' என்பது.

இதில் நெஞ்சின் காரியமான நினைவினைச் சாந்தாகச் சொன்னதை நோக்கி இவ்வாறு பேசுகின்றாள். நெஞ்சைச் சாந்துப் பரணியாகக் கொண்டு (பரணி-சிமிழ்), 'சாந்தைப் பரணியொடு உடைப்பாரைப்போலே' என்று எடுத்துக் காட்டு அருளிச் செய்கின்றார். நெஞ்சு பரணியாகவும், அதிலுண்டான நினைவு சாந்தாகவும் கொள்ள வேண்டும். இதன் ரஸோக்தி அநுபவித்து மகிழத்தக்கது.

---

29. இத் திருவாய்மொழி எம்பெருமானது சேர்க்கையால் பெற்ற இன்பத்தைக் கூறுவது. ஆழ்வார் தானான தன்மையில் பேசுவது.

167

காட்டிநீ கரந்துமிழும்
நிலநீர்தீ விசும்புகால்
ஈட்டிநீ வைத்தமைத்த
இமையோர்வாழ் தனிமுட்டைக்
கோட்டையினிற் கழித்தெனைஉன்
கொழுஞ்சோதி உயரத்துக்
கூட்டரிய திருவடிக்கண்
எஞ்ஞான்று கூட்டுதியே.[30]

[காட்டி—(உண்டாக்கிக்) காட்டி; கரந்து—மறைத்து; உமிழும் — வெளிப்படுத்தும்; விசும்பு—ஆகாயம்; கால்—காற்று; ஈட்டி—ஒன்றாகத் திரட்டி வைத்து; இமையோர் வாழ் தனி முட்டை—பிரம்மாண்டம்; கழித்து—அப்புறப் படுத்தி; கொழுசோதி—மிக்க ஒளி; எஞ்ஞான்று — என்றைக்கு; கூட்டுவாய்—கூட்டிக் கொள்வாய்]

'உலக இயற்கையில் வெறுப்புற்ற ஆழ்வார், திருவடி சேர்க்குமாறு எம்பெருமானை வேண்டுகின்ற' திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், எம்பெருமானை நோக்கி, "நீ உலகத்தை உண்டாக்கிக் காட்டிப் பிரளயம் வந்தவாறே உண்டு மறைத்துப் பிரளயம் நீங்கினவாறே வெளிநாடு காண உமிழ்ந்த, நிலமும், நீரும், தீயும், ஆகாயமும், காற்றும் ஆகிய ஐந்து பூதங்களையும் சேர்த்துச் சமைத்து வைத்த தேவர்கள் வாழ்கின்ற ஒப்பற்ற அண்டமாகின்ற கோட்டையினின்றும் நீக்கி என்னை உன்னுடைய மிக்க ஒளியோடு கூடிய பரமபதத்திலே பெறுதற்கு அரிதான திருவடிகளிலே எப்பொழுது கூட்டுவாய்?" என்கின்றார்.

---

30. திருவாய். 4.9;8

உமிழும் முட்டை, வைத்து அமைத்த முட்டை, இமையோர் வாழ் முட்டை, தனி முட்டை என்று தனித்தனியே கூட்டி நயம் காண்க. முட்டை—அண்டம்; கொழுஞ்சோதி உயரம்—பரமபதம்.

இமையோர் வாழ்தனி முட்டைக் கோட்டையினிற் கழித்து: 'கோட்டை' என்பது, புறம்புள்ளாரால் புகுதர ஒண்ணாததுமாய், உள் உள்ளாரால் புறப்படவும் ஒண்ணாதே, புக்க விடமும் புறப்பட்ட விடமும் தெரியாததாயிருக்குமேயன்றோ? அப்படியே இந்த சம்சாரமும் இருத்தலின் இதனைக் 'கோட்டை' என்கின்றது. "என் மாயை ஒருவராலும் தாண்ட முடியாதது" (கீதை 7;14) என்றானேயன்றோ தானும்.

என்னை : இக்கோட்டையிலே அகப்பட்டுப் புறப்பட வழி தெரியாதிருக்கின்ற என்னை.

இப்பாசுரத்தின் ஈட்டில் ஒரு வார்த்தை : "பிள்ளை நறையூர் அரையர், ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்க ஒண்கிறதில்லை; ஒரு சர்வ சக்தி கர்மத்திற்குத் தகுதியாகப் பிணைத்த பிணையை அவனைக் கால் கட்டாதே, இவ் வெலி எலும்பானான சம்சாரியால் அவிழ்த்துக் கொள்ளப் போமோ? என்று பணிப்பர்" என்பதாம்.

168

பேச நின்ற சிவனுக் கும்பிர
　　மன்றனக் கும்,பிறர்க்கும்,
நாய கன் அவ னே;க பாலநன்
　　மோக்கத்துக் கண்டுகொள்மின் ;

தேச மாமதிள் சூழ்ந்தழ காய
திருக்குரு கூரதனுள்,
ஈசன் பாலோர் அவம்ப றைதல்
என்னாவ திலிங்கியர்க்கே?[31]

[பேச நின்ற—பரதெய்வமாகப் பேசப்படுகின்ற; பிறர்—மற்றுமுள்ள தேவதைகள்; கபாலம்—பிரமனது மண்டையோடு; மோட்சம்—விடுபடுதல்; தேசம்—ஒளி; மா—சிறந்த அழகு, ஆய—அழகு பெற்றதான; அவம்—பயன் இன்மை; இலிங்கியர் — அநுமானத்தைப் பிரமாணமாகக் கொண்டவர்கள்; அவர்களாவார்; பாசுபத, நையாயிக, வைசேடியர்கள்; லிங்கமாவது ஹேது; அநுமானம் என்கை]

'எம்பெருமான் எல்லா தேவர்கட்கும் மேம்பட்டவன்' என்று கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "பேசப்படுகின்ற சிவபெருமானுக்கும் பிரமனுக்கும் மற்றைத் தேவர்கட்கும் தலைவன் அவனே யாவன்; இதனைக் கபாலம் விடுபட்ட சரிதையாலே கண்டு கொள்ளுங்கள். ஒளி பொருந்திய பெரிய மதில்கள் சூழ்ந்து அழகாக இருக்கின்ற திருக்குருகூர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளி யிருக்கின்ற சர்வேசுவரன் விஷயத்தில் பயனில்லாத சொற்களை ஏற்றிப் பேசுதல் அநுமானத்தைப் பிரமாணமாகவுடையவர்கட்கு என்ன பயனைத் தருவதாம்" என்கின்றார்.

கபாலம் விடுபட்ட சரிதை : இந்த இதிகாசம் இந்நூல் பாசுரம்-20-இல் காண்க.

ஓர் அவம் பறைதல் : மற்றுமுள்ள க்ஷேத்ரஜ்ஞரோடு ஒக்க ஸ்ரீமந் நாராயணனுக்கு ஈசுவரத் தன்மை இல்லை என்பதற்குச் சாதகமாக ஏதேனும் போலி யுக்திகளைச்

31. திருவாய். 4.10;4

சொல்லுமது. அவற்றைத் தம் வாயால் சொல்லமாட்டாமையால் 'அவம்' என்கின்றார். தங்கள் கூட்டத்தில் இரகசியமாகச் சொல்லுமது ஒழிய எல்லாரும் அறியச் சொல்லுதல் இல்லையாதலின் 'பறைதல்' என்கின்றார். இதற்குப் பிரமாணம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர்: மகாபலி பிரகலாதாழ்வான் பக்கலிலே வந்து "இராஜ்யமுடைய ஒளிமழுங்கி வாரா நின்றது; என் பலமும் குறைந்து வாரா நின்றது; இதற்கு அடி என்?" என்ன, 'நீ சர்வேசுவரன் பக்கல் பண்ணின அபராதத்தாலே காண்' என்ன, "இந்த விஷ்ணு எவன்" என்பது போன்ற விருப்பு இல்லாத வார்த்தைகள் சிலவற்றைப் பேச, "எனது தலையை அறுப்பதைக் காட்டிலும் பெரிது இந்த வார்த்தை" என்கிற படியே, என் தலையை அறுத்து என்கையிலே தந்தாயாகில் 'என் பேரன் செய்த உபகாரம்" என்று இருப்பேன் யான்; "என் முன்னே பகவானை நிந்தை செய்தாய்; நீ இராஜ்யப் பிரஷ்டனாவாய்' என்று சபித்து விட்டான்; இதனை இப்படியே பட்டர் அருளிச் செய்தவாறே, 'பிரகிருதி புருஷ விவேகம் பண்ணியிருக்கின்ற இவன் ஆன்மாவுக்குக் குறைவு வருவது ஒன்றனைச் சபியாமல் "இராஜ்யத்திலிருந்து நழுவினவனாய் விழுவாயாக" என்று சபிப்பான் என்? என்று கேட்க, 'நாயைத் தண்டிக்கையாவது, மலத்தை விலக்குகை யன்றோ? சாந்தை விலக்குகை அதற்கு விருப்பம் இல்லாதது அன்றே? ஆகையாங், இவனுக்கு அநிஷ்டம் செய்கையாவது இதுவே யன்றோ?' என்று அருளிச் செய்தார்.

169

ஓடி ஓடிப் பல்பி றப்பும்
பிறந்துமற் றோர்தெய்வம்
பாடி யாடிப் பணிந்து பல்படி
கால்வழி ஏறிக்கண்டீர்

கூடி வானவர் ஏத்த நின்ற
திருக்குரு கூரதனுள்
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு
அடிமை புகுவதுவே.32

[ஓடி ஓடி—சம்சார சாகரத்தில் ஓடி ஓடி; பல்படி கால்—பரம்பரை பரம்பரையாக; கூடி—திரண்டு; ஏத்த—துதித்து; புள்—கருடன்]

'எம்பெருமான் எல்லாத் தேவர்கட்கும் மேம்பட்டவன்' எனக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "வேறு ஒரு தெய்வத்தைப் பாடியும் ஆடியும் வணங்கியும் பலப்பல வகைகளாலே சாத்திரங்கள் கூறிய வழிகளிலே சென்று திரிந்து திரிந்து பல பிறப்பும் பிறந்து அதன் பலன்களைக் கண்டீர்கள்; ஆன பின்பு, தேவர்கள் ஒருங்கு கூடித் துதிக்கும் படியாகத் திருக்குருகூர் என்னும் திவ்விய தேசத்திலே, நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி யிருக்கின்ற ஆடு புள் கொடியையுடைய ஆதிமூர்த்திக்கு அடிமை புகுங்கள்" என்கின்றார்.

'மற்று ஓர் தெய்வம் பாடி ஆடிப் பணிந்து': முமுட்சுகள் இதர தெய்வங்களைப் போற்றமாட்டார்கள் என்பதற்குக் காட்டப்பெற்ற அநுஷ்டானம்; "ஒருவன்33 பகவானைத் தியானம் செய்து கொண்டிருக்கையில், 'இவன் சமாதியிலே நின்ற நிலையை அறிய வேண்டும்' என்று பார்த்துச் சர்வேசுவரன் இந்திரன் வேடத்தை மேற்கொண்டு ஐராவதத்தில் ஏறி வந்து முன்னே நின்று, 'உனக்கு வேண்டுவது என்?' என்ன, 'ஒரு புழுவும் தானுமாய் வந்து நிற்கின்றவன் யார்?' என்றான்; 'சர்வேசுவரன் பெரிய திருவடியை மேற்கொண்டு வந்தான்' என்னுமிடம் அறியானே

32. திருவாய். 4.10;7

33. ஒருவன்—அம்பரீடன் பாசுரம்: 126-லும் இந்த வரலாறு காட்டப்பெற்றுள்ளது.

யன்றோ? கொண்டு வந்த வேடம் இதுவாகையாலே, வந்தவனைப் பார்த்து 'நீ யாவன் ஒருவனை ஆச்ரயித்து இந்தச் செல்வம் முழுவதும் பெற்றாய், அப்படிப் பட்டவனைக் காண நான் ஆச்ரயிக்கிறது. இப்படி வழியிலே போவார்க்கெல்லாம் பச்சையிட்டுத் திரியுமவன் அல்லேன் காண்; இப்போது முகம் காட்டாதே போக வல்ல பிரானே! உன்னைக் கும்பிடுகின்றேன்' என்றானே யன்றோ?

இன்னோர் ஐதிகம்: பகவானிடத்தில் சரணாகதி செய்து ஞானாதிகராயிருப்பாரொருவர் (திருமழிசைப் பிரானை) இருந்து தம்முடைய ஆடையைத் தைத்து நின்றாராய், அவ்வளவிலே தேவியும் தேவனுமாகப் போகா நிற்க, இவர் அநாதரித் திருந்தாராய், 'தேவியானவள், நீர் சர்வாதிகராயிருக்க உம்மைக் கண்ட இடத்தில் இவன் அநாதரித்துக் காலை நீட்டிக் கொண்டிருந்தானே' என்ன, தேவனும் 'அவன் பகவத்பக்தன் போலே காண்' என்ன, தேவியும் 'அதுதான் இருக்கிறபடி அறிவோம்' என்ன, இருவரும் இவர் பக்கலிலே வந்து, 'நீ என்? தேவர்களை மனிதர்கள் கண்டால் அவர்களிடம் சென்று வேண்டும் வரங்களும் வேண்டிக் கொள்ளக் கடவர்களாக இருப்பார் கள்; நீ நம்மைக் கண்ட இடத்தில் நீட்டின காலை முடக்குதல், சில உபகாரங்களைச் செய்தல், சிலவற்றை வேண்டிக் கோடல் செய்யாமல் இருந்தாயே' என்ன, 'அழகிது! அவையெல்லாம் செய்யக் கடவன்; மோட்சம் தரலாமோ?' என்ன, 'அது நம்மாலே செய்யலாமதன்று; பகவானிடத்தில் சரணாகதி செய்து அவன் திருவருளாலே பெறவேண்டும்' என்ன, 'ஆகில், இன்று சாவாரை நாளை இறக்கும்படி பண்ணலாமோ?' என்ன, 'அது கர்மங் களுக்குத் தகுதியாக அன்றோ இருப்பது; நம்மால் செய்யப் போகாது' என்ன, 'ஆகில் நீ செய்யுமது இந்தஊசி போகும் வழியே நூலும் போகும்படி அநுக்ரகித்து நடக்குமித்தனை

என்ன, தேவனும் கோபத்தாலே நெற்றியிற் கண்ணைக் காட்ட, இவரும் காலிலே பல கண்களை உண்டாக்கிக் காட்டினார்' என்ற சரிதம் இங்கு அநுசந்திக்கத் தகும்.[34]

'அடிமைப் புகுவதுவே' : யயாதி சரித்திரத்தைப் பட்டர் வாசித்துக் கொண்டிருக்கும்போது பிள்ளை விழுப் பரையரும் ஆப்பான் திருவழுந்தூர் அரையரும், 'வேதத்தின் பொருளை அறிதற்குக் கருவியாக வெளிப்போந்த பிரபந் தங்களில் இஃது எந்த அர்த்தத்தைவிரித்துப் பேசுகின்றது?' என்று கேட்க, 'புன்சிறு தெய்வங்கள் தம்மைத்தாமே ஆச்ரயித்துப் பெற்றாலும், பிறர்பக்கல் ஓர் உயர்வு கண்டால் அதுபொறுக்க மாட்டார்கள் என்றும்,ஈசுவரனே, 'பிறர் வாழ்வு நம்வாழ்வு' என்று நினைத்திருப்பான் என்றும் சொல்லிஆனபின்பு;மற்றைத் தேவர்கள் வணங்கத்தக்கவர் அல்லர், இவன் ஒருவனுமே வணங்கத்தக்கவன் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகின்றது' என்று அருளிச் செய்தார். இந்த ஐதிகம் 'அடிமைப் புகுவதுமே' என்ற தொடருக்குப் பொருத்தமானது.

இனி, மற்றைத் தேவர்களை அடைவதனால் ஒருவித பயனும் இல்லை என்றாலும் பகவானை அடைந்தவர்க்குப் பலத்தில் தடை உண்டாயிற்றே? என்று எழும் ஐயத்தை நீக்குகின்றார். 'யாதவர்கள் முடிவிலே வந்தவாறே வாட்கோரையை இட்டு ஒருவரையொருவர் எறிந்து முடிந்து போனார்கள்' என்று கேட்டவாறே, 'கிருஷ்ணன் இவர்கள் விஷயமாகச் சங்கநிதி பதுமநிதி தொடக்கமான வற்றைக் கொண்டுவந்து கொடுத்துச் செய்யாதன இல்லை; பின்னையும் முடிவிலே வந்தவாறே இப்படியே யாய் இருந்தது; 'நாம் பகவானை வணங்குகிற வணக்கத் துக்கும் பலம் அங்ஙனே ஆகின்றதோ? என்று அஞ்சி யிருந்தோம்' என்ன, 'அங்ஙன் ஆகாது; அஞ்ச வேண்டா; அவர்கள், 'இவன் என் தோழன், மைத்துனன்' என்று சரீர

34. இதன் விரிவை அவர் திவ்விய சரிதையை நோக்கி அறிக.

சம்பத்தத்தைக் கொண்டு விரும்புகையாலே அவர் களுக்குத் தேகம் எல்லையாய்விட்டது; நாம் சொரூப ஞானத்தாலே, நித்தியனான ஆன்மாவுக்கு வகுத்த பேறு பெறவேணும் என்று பற்றுகையாலே பேறும் உயிர் உள்ள வரையிலும் இருக்கும்' என்று அருளிச் செய்தார்.

ஐந்தாம் பத்து

170

''மாசறு சோதி'' : 'மகள் பாசுரமாக அமைந்த இது மடலூர் தலை மேற்கொள்ளுவதாக அமைந்தது. 'அபிமத விஷயத்தைப்2 பிரிந்து ஆற்றமாட்டாதார் மடல் எடுக்கக் கடவர்கள்'என்று ஒன்று உண்டு என்பதைத் தமிழர் சொல் லிப் போருவது. சீலத்தாலும் வயதாலும் குடிப்பிறப்பாலும் வடிவழகாலும் செல்வத்தாலும்[3] குறைவற்று இருப்பவர் களான இருவர், அவர்களில் 'அறிவு நிறை ஓர்ப்பு கடைப் பிடி' என்பன போன்று சொல்லுகிற நாயகனுடைய இலட்சணங்கள் நாயகனும் உடையனாய், 'நாணம், மடம்,

---

1. திருவாய். 5.3
2. அபிமத விஷயம்—தம் காதலுக்குரிய பொருள்
3. பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.
—தொல். பொருள். மெய்ப்-25

ஒத்த கிழவனும் கிழத்தியும காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே
—தொல். பொருள் களவி-2

பெருமையும் உரனும் அடூஉ மேன —ஷை-7

அச்சமும நாணும் மடனுமுந் துறத்த
நிச்சமும பெணபாற் குரிய என்ப. —ஷை-8

அச்சம், பயிர்ப்பு' என்பன போன்று சொல்லுகின்ற[4] நாயகியினுடைய இலட்சணங்கள் நாயகியும் உடையளாய், இப்படி இருவரும் குறைவற்று இவர்கள் தாமும் தக்க குமரப் பருவத்தையுடையவர்களுமாய் இருக்க, இவர்களைப் புறம்பே கூட்டுவார் ஒருவரும் இன்றிக்கே இருக்க, இவனும் தெய்வாதீனமாக 'வேட்டைக்கு' என்று புறப்பட, இவளும் 'பூக்கொய்து விளையாட' என்று உத்தியாவனத்திற்குப் புறப்பட, அவ்விடத்திலே தெய்வம் கூட்டுவிக்க, இருவர்க்கும் கண் கலவி (யாழோர் கூட்டம்) உண்டாக, சிலர் காரணமாக வந்த கலவி அல்லாமையாலே, பிரிவோடே முடிவுற்றுப் பிரிய, குணாதிகர்களாகையாலே இருவருக்கும்[5] ஆற்றாமை விஞ்சி, ஒருவரை ஒழிய ஒருவர்க்குச் செல்லாமை பிறக்க, இருதலையையும் அழித்தாகிலும் பெறப் பார்ப்பது.

---

4. "தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்பன குணம். அறிவு என்பது, எப்பொருளாயினும் அப்பொருட்கள் நின்று அம்மெய்ம்மையை உணர்வது. நிறை என்பது, காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பு என்பது, ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல். கடைப்பிடி என்பது, கொண்ட பொருள் மறவாமை. இனித் தலைமகட்கு நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன குணம். நாண் என்பது, பெண்டிற்கு இயல்பாகவே உள்ளதொரு தன்மை. மடம் என்பது, கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. அச்சம் என்பது, பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பு என்பது, பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை"—என்பது இறையனார் களவியலுரை (நூற்-2).

5. ஆற்றாமை விஞ்சுதல் இரண்டு தலைக்கும் ஒக்குமாயினும் செல்லாமை ஒரு தலைக்கே விஞ்சி இருக்கும் என்று கொள்க.

மடல் ஊர்தல்[6] என்பதுதான், தலைவியைப் பிரிந்த ஆற்றாமையாலே தலைவன் தலைவியை ஒரு படத்திலே எழுதி வைத்தகண் வாங்காதே அவ்வுருவைப் பார்த்துக் கொண்டு பனை மடலைக் குதிரையாகக் கொண்டு, தலைவியைப் பிரிந்தது தொடங்கிக் கண்ட போக உபகரணங்கள் எல்லாம் நெருப்பினாலே கற்பிக்கப்பட்டதாகத் தோற்ற, ஊணும் உறக்கமும் இன்றிக்கே, உடம்பிலே துளி நீரும் ஏறிட்டுக் கொள்ளாதே, தலை மயிரை விரித்துக் கொண்டு திரியா நின்றால், இத்தீயச் செயலைக் கண்ட அரசர் முதலானோர் 'கெட்டோம் இவனுக்கு ஒரு பெண்ணினிடத்தில் இத்துணை அன்பு இருப்பதே!' என்று அவர்கள் அவனை அத்தலைவியோடு கூட்டக் கூடுதல்; இல்லையாகில், இதுவே காரணமாக இரண்டு தலையிலுள்ள உறவினர்களும் கைவிட, அலக்குப் போர்[7] போலே ஒருவர்க்கு ஒருவர் புகலாய் அங்ஙனம் கூடுதல்; தலைவியானவள் குணங்களாற் சிறந்தவளாயிருப்பாளேயாகில் பழிக்கு அஞ்சி கூடக் கூடுதல். இவை இத்தனையும் இல்லையாகில் முடிந்து போதல் செய்கையாகின்ற சாகசமான ஒரு தொழில் விசேடமாயிற்று.

இது தன்னை, ''கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார் மேல்''[8] என்று உயிரின் அளவல்லாதபடி ஆற்றாமை கரைபுரண்டாலும் மகளிர் மடலூரக் கடவர்கள் அல்லர்; நாயகன் தன் ஆற்றாமையாலே மடல் எடுக்க உலகின்மேல் வைத்துச் சொல்லுவான்:

---

6. இங்குக் கலித்தொகை நெய்தற்கலியில் 21 முதல் 24 முடியவுள்ள நான்கு பாடல்களையும் அவற்றின் உரைகளையும் படித்து அறிதல் தகும்.

7. அலக்குப் போராவது, சேவகர்கள் ஈட்டிகளை ஒன்றோடு ஒன்று எதிர்த்து வைத்தல்.

8. தொல். பொருள். அகத்திணை-35. நச்சினார்க்கினியர் உரை மேற்கோள்.

பின் 'நான் வரை பாயப் புகா நின்றேன், மடல் எடுக்கப் புகா நின்றேன்' என்று தோழிக்கு வந்து அறிவிப்பான்; அறிவித்த பின்னரும் அவள் கூட்டிற்றிலளாகில் பின்பு அவன் இது செய்யக்கடவன்; இத்தனையல்லது மகளிர்[9] மடல் எடுக்கக் கடவர்கள் அல்லர் என்று இங்ஙனமே ஒரு மரியாதை காட்டினார்கள் தமிழர்கள்: இங்கு அங்ஙன் அன்றிக்கே, பிராட்டிதான் மடல் எடுப்பதாக இரா நின்றது; தமிழர் 'மகளிர் மடல் எடுக்கக் கடவர் அல்லர்' என்று சொன்ன இது, சேரும்படி என்? என்னில்; அவர்கள் ஒரு தலையிலேதான் அதனை இசைந்தார்களே, அப்படி இசைகைக்குக் காரணம், ஆற்றாமையே; அவ்வாற்றாமை இருவர்க்கும் ஒத்த பின்பு ஒருவர்க்கு மாத்திரம் ஒதுக்குவார் யார்? இதற்கு ஒரு மரியாதை காட்டுகையாவது, ஆசைக்கு ஒரு வரம்பு இட்டார்களாமித்தனை. அப்போது பின்னை 'அரசர் ஆணைக்கு நிற்க வேணும்' இன்றேல் 'வேலியடைத்தால் நிற்க வேணும்' என்று இப்படி நில்லாமல் மகளிர் மடல் எடுப்பதில் ஈடுபடுகையாலும், ஆற்றாமை இரண்டு தலைக்கும் சமம் ஆகையாலும் மகளிர் மடலூரத் தட்டு இல்லை. வரம்பு அழியவாகிலும் முகங்காட்டி வைத்துக் கொண்டு தரிக்க வேண்டும்படியாய் இருப்பது ஒரு விஷயம் புறம்பு இல்லையே; இங்ஙனம் இருப்பார் சிலரைக் கற்பித்துக் கொண்டார்கள் இத்தனையே.[10]

---

9. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (குறள்-1136)
எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல
பொற்புடை நெறிமை இன்மையான
(தொல பொருள்—அகத்திணை-38)

10. மடன்மா பெண்டிர் ஏறார்; ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலை.
பன்னிரு பாட்டியல்—சூத். 714)
இச்சூத்திரத்தால் கடவுளரைத் தலைவராக வைத்துப் பாடுமிடத்து மகளிரும் மடல் ஏறுவர் என்பது பெறப்படுதலைக் காண்க.

இவர்தாம் 'மடல் எடுக்கக் கடவேன்' என்று துணிந்த துணிவுக்கு மேற்பட அநுட்டிக்க வேண்டுவது இல்லை யன்றோ குணாதிக விஷயம் ஆகையாலே.[11] ஆற்றாமையை யும் உண்டாக்கி அம்பும் தொடுக்க வேண்டும்படியான விஷயத்தை அன்றே இவர் பற்றியது. கடலைப் பெருமாள் சரண் புக்க இடத்தில் அக்கடல் தானாக வந்து முகம் காட்டாமையாலே நாலு மூன்று அம்பைவிட, உடம்பிலே பாதி வெந்தபின்பே யன்றோ வந்து முகங்காட்டியது; இங்கு அது வேண்டாமையாலே "ஓ இலக்குமணா, வில்லைக் கொண்டு வா,, ஆசீ விஷத்திற்கு (பாம்புக்கு) ஒப்பான பாணங்களைக் கொண்டு வா, சமுத்திரத்தை வற்றச் செய்யப் போகிறேன், வானர வீரர்கள் கால்களால் நடந்து செல்லட்டும்"[12] என்றதைப் போன்று "மடல் ஊர்வேன்" என்று அச்சம் உறுத்தி முகம் காட்டுவித்துக் கொள்ளப் பார்க்கிறார். தம்முடைய சொரூபத்தில் கலக்கம் தொடர்ந்து நிற்கச் செய்தேயும் அவனுடைய குணஞானத்தில் கலக்கம் இன்றிக்கே இருக்கிறது காணும் இவர்க்கு.

---

11 எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான.

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் (தொல். பொருள், அகத்திணை-38) விசேட உரையில் நச்சினார்க்கினியர்;

கடலன்ன கடந்த ராயினும் பெண்டிர்
மடல்ஏறார் மைந்தர்மேல் என்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்பின் கலிவஞ்சி யார் கோமான்
வேட்டமா மேற்கொண்டே போழ்து.

என்றாராலோ எனின்; 'இது மடம் ஏற்றன்று; ஏறுவல் எனக் கூறிய துணையேயாம' என்பர். இதனால் மகளிர் 'மடல் ஏறுவேன்' என்று கூறும் வழக்கு உண்டு என்பது தெளில் தரும்.

12. ஸ்ரீராமா. யுத்.21:22

'ஏறாளும் இறையோனும்' (திருவாய். 4:8) என்ற திருவாய்மொழியில் அவனுக்கு உறுப்பு அல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்று முடித்துக் கொள்ளப் பார்த்த இடத்தில் அது தம் கையது அன்றிக்கே, அவன் உளனாக இஃது அழியாததாய் இருந்தது; இனி அத்தலையே பிடித்து வேர்ப்பறறோடே அழிக்கப் பார்க்கின்றார்; உண்டாம் போதும் அத்தலையாலே உண்டாய், இல்லையாம் போதும் ஒன்றும் இல்லையாம்படி அன்றோ வஸ்துவின் சொரூபந்தான் இருப்பது. 'உயிரினால் குறை இலம்'(4.8:10) என்றார் அங்கு; இங்கு உயிர்க்கு உயிரினால் குறை இலம் என்கின்றார். 'ஏறு ஆளும் இறையோனும்" என்பதில் அவனுக்கு உறுப்பு அல்லாத நானும் என்னுடைமையும் வேண்டாஎன்றார்: இதில், எனக்கு உறுப்பு அல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டா என்கின்றார்.

'உண்டாம்போதும் அத்தலையாலே உண்டால்' என்பதற்கு, அவன் சத்தை காரணமாக இத் தலையில் சத்தை உண்டாதலை எங்கே கண்டோம்? என்ன, அதற்குச் சம்வாதம் காட்டுகிறார். இராவணன் மாயா சிரஸைக் காட்டினபோது பிராட்டியும் மற்றைப் பெண்கள் மனத்தோடு படாமலே, அழுமாறு போன்று, தன் ஆற்றாமையாலே கூப்பிட்டு, சத்தையோடே இருந்தாள், இவ் வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பான் ஏன்?' என்று பட்டரைச் சிலர் கேட்க, "ஜீவனத்திற்கும் முடிதலுக்கும் நிமித்தம், ஞான அஞ்ஞானங்கள் அல்ல; அத் தலையில் சத்தையும் அஃது இல்லாமையும் ஆயிற்று; அதற்கு அழிவில்லாமையாலே இருந்தாள்" என்று அருளிச் செய்தார்.

171

அன்னைஎன் செயில்என்? ஊரென்
சொலில்என்? தோழிமீர்!
என்னை யினியுமக் காசை
யில்லை; அகப்பட்டேன்

முன்னை அமரர் முதல்வன்
வண்துவ ராபதி
மன்னன் மணிவண்ணன் வாசு
தேவன் வலையுளே.[13]

[இனி—இனிமேல்; என்னை—என் திறத்தில் (வேற்றுமை மயக்கம்); ஆசைஇல்லை—ஆசை வைக்க நியாயம் இல்லை; அமரர் முதல்வன்—நித்தியசூரியின் முதல்வன்; வண்—அழகிய; மணி வண்ணன் — நீல மணி வண்ணன்; வலையுள்—வலையினுள்ளே]

இது மகள் பாசுரம். பிரிவாற்றாமை மேலீட்டால் தலைமகன் காதல் கைமிக்கு மடலூரத் துணிதலைக் கூறும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் நாயகி, "தோழியர்களே, முற்பட்டவர்களான நித்தியசூரி களுக்குத் தலைவனும் வளம் பொருந்திய துவாரகையென் னும் திவ்விய தேசத்திற்கு அரசனும் மணிவண்ணனுமான வாசுதேவனுடைய வலையுள் அகப்பட்டேன்; ஆதலால், இனி தாயானவள் எந்தக் காரியத்தைச் செய்தால் என்ன? ஊரிலுள்ள மக்கள் எந்தப் பழிச் சொற்களைக் கூறினால் என்ன? என்பக்கல் உங்களுக்கு ஆசை வேண்டாம்" என் கின்றாள்.

'வலையுள்...அகப்பட்டேன்' : வாசுதேவனாகிய வலை யிலே அகப்பட்டேன் என்றும், வாசுதேவனுடைய வலை யிலே அகப்பட்டேன் என்றும் பொருள் பெறும்; வலை யாவது தன்பக்கலில் அகப்பட்டாரை வேறு இடத்திற்குப் போகவொட்டாமல் செய்வதாதலால் எம்பெருமானை வலையாகக் கூறுதல் பொருந்தும்.

'பாலால் இலையில் துயில்கொண்ட
பரமன் வலைப்பட் டிருந்தேனை'[14]

13. திருவாய். 5.3:5

14. நாச்.திரு. 13:2

என்று ஆண்டாளும். எம்பெருமானுடைய வலை என்று பொருள் கொள்ளும்போது திருக்கண்களை வலையாகக் கொள்ளலாம்.

'உகவையால் நெஞ்சம் உள்ளுருகி
உன்தாமரைத் தடங்கண் விழிகளின்
அகவலைப் படுப்பான்'[15]

என்று ஆழ்வார் நாயகி மேலும் கூறுவாள்.

'வலை' என்பது நோக்கையும் புன்முறுவலையும் காட்டுவதற்கு ஈட்டுரையில் காணப்பெறும் ஐதிகம்; ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் (இப் பாசுரத்தைப் பாடும்போது) வலையாக அபிநயித்துப் பாடா நிற்க, எம்பெருமானார் திருக் கண்களைக் காட்டி யருளினார். 'கார்த்தண் கமலக்கண் என்னும் நெடுங்கயிறு' என்னக் கடவதன்றோ? அநுகூலம்போலேயிருந்து தப்பாதபடி அகப் படுத்திக் கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன்'' என்பது.

172

வலையுள் அகப்படுத் தென்னைநன்
னெஞ்சம் கூவிக்கொண்டு,
அலைகடல் பள்ளி அம்மானை
ஆழிப்பிரான் றன்னை;
கலைகொள் அகலல்குல் தோழீ!
நம்கண்க ளாலகண்டு
தலையில் வணங்கவும் ஆங்கொலோ
தைய லார்முன்பே.[16]

[வலையுள் — குணசேஷ்டிதங்களாகிய வலையுள்; அகப்படுத்து—சிக்கிக்கொள்ளும்படி செய்து;

15. திருவாய். 6.2:9 (இதுவும் மகள் பாசுரம்)
16. திருவாய். 5.3:7

கூவிக்கொண்டு — அடியறுத்து அழைத்துக் கொண்டு; அலைகடல்—அலை எறிகின்ற கடல்; ஆழி—சக்கரப்படை; கலை—சேலை; அகல்—அகன்ற; அல்குல்—நிதம்பம்; தலையில்—தலையால் (வேற்றுமையக்கம்); தையலார்—மகளிர்]

மகள் பாசுரமே; மடலூர்வதைக் கூறுவதுவே இதுவும். ''ஆழ்வார் நாயகி பேசுகின்றாள்: ''கலையைக் கொண்டிருக்கின்ற அகன்ற அல்குலையுடைய தோழீ! வலையிலே என்னையும் அகப்படுத்திச் சிறந்த மனத்தையும் அழைத்துக் கொண்டு அலைகளையுடைய கடலிலே பள்ளிக் கொண்டிருக்கின்ற அம்மானாகிய ஆழிப்பிரான் தன்னை, இந்தப் பெண்களுக்கு முன்பு நம் கண்களாலே கண்டு தலையாலே வணங்கவும் ஆகுங்கொல்லோ?'' என்று.

'தலையில் வணங்கவும் ஆங்கொலோ?' : என்றவிடத்து ஈட்டில் சுவைமிக்க ஓர் ஐதிகமுள்ளது. இராசேந்திர சோழன் என்ற இடத்தில் இப்பாசுரத்தைக் கூரத்தாழ்வான் மாலை நேரத்தில் கூடிய சபையொன்றில் உபந்யசித்தருளா நிற்கையில் ஆமருவிநிரை மேய்த்தான் நம்பியார் என்ற பெயர் கொண்ட நூறுவயது நிரம்பிய பெரியார் ஒருவர் நடுநடுங்க எழுந்திருந்து நின், ''ஆழ்வான்! தலைமகள் தலையாலே வணங்கப் பெறுமோ?' என்று கேட்க, அதற்கு ஆழ்வான், 'இதில் என்ன ஐயம்? சிஷ்டாசாரம் காணும்; ஸ்ரீஜனக ராசன் திருமகள் அநுட்டித்தாள் காணும்' என்று சொல்லி இராமாயண சுலோகம் ஒன்றை[17] எடுத்து விரிய விளக்கினாராம்.

---

17. ஸ்ரீராமா. சுந்தர. 38:56

ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்

பிராட்டி பெருமாளைத் தான் தலையாலே வணங்கின தாகச் சொல்லும்படி திருவடியிடத்துக் கூறியிருக்கின்றாள். இங்கே ஒன்று ரஸோக்தியாகச் சிலர் சொல்லுவதுண்டு. பெருமாள் வனவாச காலத்தில் சித்திரகூடத்தில் எழுந்தருளியிருக்கும்போது பாதுகை பெருமாளைப் பிரிந்து வடக்கே சென்றது; பிராட்டி அதற்குப்பிறகு பெருமாளைப் பிரிந்து தெற்கே செல்ல நேர்ந்தது. பெருமாளை விட்டுப் பிரிந்ததென்னுமிடம் பாதுகைக்கும் பிராட்டிக்கும் ஒத்திருந்தாலும், பாதுகை இராஜ்யாபிஷேகம்பெற்று மிகுந்த செல்வ சிறப்பை அநுபவியா நின்றது; பிராட்டி எழுநூறு அரக்கிமார்களிடையே கிடந்து பலவகை இடர்களும் பட நேர்ந்தது. இதனைப் பிராட்டி ஆலோசித்துப் பார்த்தாள். பெருமாளுடைய திருவடி சம்பந்தம் பெற்றபேறு பாதுகைக்கு இருந்ததனாலே அது சிறப்புபெற்றது; தாம்பத்தினியான முறைமையாலே தந்தையின் கட்டளைப்படிக் கையைப் பிடிக்க நேர்ந்ததனாலே பாதுகைக்குண்டான சிறப்பு தமக்கு வாய்க்கவில்லை; இதுவரை பெருமாளுடைய திருவடி சம்பந்தம் பெறாத குறைதீர இன்று ஆசாரியர்மூலம் அதனைப்பெற்றிடுவோம் என்று கருதியே 'வேண்டினாள் தொழுது' என்று சொல்லியனுப்பியதாக அறிகின்றோம்.

173

இரைக்கும் கருங்கடல் வண்ணன்
கண்ண பிரான் தன்னைக்
விரைகொள் பொழில்குரு கூர்ச்சட
கோபன் சொன்ன

(17. தொடர்ச்சி)

தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழுது என்று விளம்புவாய்
(கம்பரா. சுந்தர. சூளா.35)

என்ற கம்பன் வாக்கையும் காண்க.

விரைகொளந் தாதி யோரா
யிரத்துள் இப்பத்தும்
உரைக்கவில் லார்க்கு வைகுந்த
மாகுந்தம் ஊரெல்லாம்.[18]

[இரைக்கும்—ஒலிக்கின்ற; விரைகொள்—பரிமளம் மிக்க; பொழில்—சோலை; நிரைகொள்—ஒழுங்குகளைக் கொண்ட; உரைக்க—ஓத; தம் ஊர் எல்லாம்—தம் இருப்பிடம் எல்லாம்; வைகுந்தம்—பரமபதம்.]

மகள் பாசுரம் : 'மடலூர்தலைப்பற்றிப் பேசும்' திருவாய்மொழியின் பலசுருதிப் பாசுரம். ''ஒலிக்கின்ற கரிய கடல் போன்ற நிறத்தை உடையவனான கண்ண பிரானை, மணம் மிக்க சோலைகளால் சூழப் பெற்ற திருக்குருகூரில் அவதரித்த சடகோபர் அருளிச் செய்த நிரை நிரையாக அமைந்திருக்கின்ற அந்தாதியான ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களை யும் ஓத வல்லவர்களுக்குத் தாங்கள் தாங்கள் இருக்கின்ற ஊர்கள் எல்லாம் வைகுந்த மாநகரமாகும்'' என்று இத் திருவாய்மொழியைத் தலைக் கட்டுகின்றார்.

'இரைக்கும் கருங்கடல் வண்ணன்' : என்றதற்கு இரண்டுபடியாக அருளிச் செய்வர்கள். வண்ணம் என்று நிறத்துக்கும் தன்மைக்கும் பெயர்; நிறத்தைச் சொல்லும் போது மடலூர்ந்தாகிலும் பெற வேண்டும்படியான வடிவழகு சொல்லிற்றாகின்றது. தன்மையைச் சொல்லும் போது, பிரக்ருதத்தில் கடலுக்கும் எம்பெருமானுக்கும் துல்லியமாகச் சொல்லக் கூடிய தன்மையாதெனில்: இங்கே இன்சுவைமிக்க ஈட்டு ஸ்ரீ சூக்தி காண்மின்! ''அனந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர் திருநாராயண புரத்திலிருந்து வந்து பட்டரிடத்தில், ''வில்லைக் கொண்டு

18. திருவாய். 5.3:11

வா; ஆசீவிஷத்திற்கு[19] ஒத்த அம்புகளையும் கொண்டு வா''[20] என்றபோது கடல்கீழ் மண் கொண்டு மேல் மண் எறிந்தாப் போலேயாயிற்று, இவள் 'மடலூர்வன்' என்ற துணிவைக் கேட்டு அவன் தன் சர்வாதிகத்துவம் கலங்கின படி என்று அருளிச் செய்தார். கடலரசனை நோக்கிப் பெருமாள் சரணாகதி பண்ணச் செய்தேயும் அவன் முகம் காட்டாவிட்டவாறே இளைய பெருமாளை நோக்கி 'இலட்சுமணா, வில்லைக் கொண்டு வா' என்று நியமித்தருளியவுடனே கடல் கலங்கினது இராமாயணப் புகழ் வாய்ந்தது. சீராமன் அம்பு தொடுக்க நினைத்ததும் ஆழ்வார் 'மடலூர் வேன்' என்றதும் துல்யமாகையாலே (இப்போது கடல் வண்ணனான எம்பெருமான்) 'மடலூர் வேன்' என்ற சொல்லைக் கேட்டவுடனே கலங்கினானாயிற்று. ஆக, இத்தன்மையிலே சாம்யம் என்று அனந்தாழ்வான் திருவுள்ளம் பற்றினபடி.

174

எங்ங னேயோ அன்னை
 மீர்காள்! என்னை முனிவதுநீர்
நங்கள் கோலத் திருக்கு
 றுங்குடி நம்பியைநான் கண்டபின்
சங்கி னோடும் நேமி
 யோடும் தாமரைக் கண்களோடும்
செங்க னிவாய் ஒன்றி
 னோடும் செல்கின்றதுஎன் நெஞ்சமே.[21]

[எங்ஙனேயோ—எப்படிப் பொருந்தும்; முனிவது—சீறுவது; கோலம்—அழகிய; கண்டபின்—சேவிக்கப் பெற்ற பின்பு; நேமி—திருஆழி.]

19. ஆசீ விஷம்—பாம்பு
20. ஸ்ரீ இராமா. யுத்த. 21:22
21. திருவாய். 5.5:1

மகள் பாசுரம் : உருவெளிப்பாடு[22] கண்ட தலைவி தாயரை மறுத்துரைக்கும் திருவாய்மொழியிலுள்ள முதற் பாசுரம். இதில் ஆழ்வார் நாயகி, "தாய்மார்களே, நீங்கள் என்னைச் சினந்து கொள்வது எப்படி? நம்முடைய அழகிய திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியை நான் பார்த்த பிறகு, என்னுடைய நெஞ்சமானது, நம்பியின் திருக்கைகளிலேயுள்ள சங்கோடும் சக்கரத்தோடும் தாமரை போன்ற திருக்கண்களோடும் சிவந்த கோவைக் கனி போன்ற ஒப்பற்றதாயிருக்கின்ற திரு இதழோடும் செல்கின்றது. நான் என் செய்வேன்?" என்கின்றாள்.

முனிவது... எங்ஙனேயோ : என்று கூட்டி பாவம் அருளிச் செய்கின்றார். புத்திரர்களாகவுமாம், சிஷ்யர்களாகவுமாம், பகவத் விஷயத்தில் ஓர் அடிவர நின்றவர்கள் சிலாகிக்கத் தக்கவர்களத்தனை அன்றோ? இதற்குச் சமவாதம் காட்டுகின்றார். "கூரத்தாழ்வார்[23] ஓரளவிலே நங்கையார்[24] எம்பெருமான் திருவடியை அடைந்த பிறகு 'இன்னமும் ஒரு திருமணம் செய்து கொள்வோமோ' என்று ஆராய்ந்து 'இதுதான் கிரமத்தில் வந்து ஆழ்வானுக்கு'[25] விரோதமாகத் தலைக்கட்டும்; "இனித் தான் பிரம்மசாரியாகவாவது இல்லறத்தானாகவாவது வானப்பிரஸ்தனாகவாவது சந்நியாசியாகவாவது ஒருவன் இருக்க வேண்டும்; ஆபத்து இல்லாத சமயத்தில் ஒருநாள் கூட ஓர் ஆச்ரமத்திலும் சேராதவனாக இருக்கக் கூடாது" என்று

22. உருவெளிப்பாடு — மானச சாட்சாத்காரம். கண்ணுக்குக் காட்சியாகாமல் நெஞ்சுக்கு நேர் பொருளாகத் தோற்றுவது. இது பிராட்டி நிலைமையில் நின்று பேசுந் திருவாய்மொழி.

23. கூரத்தாழ்வார்—இவர் கூரத்தாழ்வானின் திருத் தந்தையார்.

24. நங்கையார்—கூரத்தாழ்வாரின் தேவியார்.

25. கூரத்தாழ்வான் — கூரத்தாழ்வாரின் திருமகன்.

சாத்திரம் சொல்லா நின்றது; இந்தச் சாத்திரத்தின் தாற்பரியத்தை அருட்டிப் போமோ? பாகவத பர்சர்யையைச் செய்வோமோ? என்று ஆராய்ந்து 'அந்தச் சாமான்ய தர்மத்திற் காட்டில் இந்த விசேஷ தர்மமே பிரபலம் என்று திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்தார்.

175

நிறைந்த வன்பழி நம்குடிக்
  கிவள்என்று அன்னை காணக்கொடாள்
சிறந்த கீர்த்தித் திருக்கு
  றுங்குடி நம்பியை நான்கண்ட பின்
நிறைந்த சோதி வெள்ளஞ்
  சூழ்ந்த நீண்டபொன் மேனியொடும்
நிறைந்தென் னுள்ளே நின்றொ
  ழிந்தான் நேமியங் கையுளதே[26]

[நிறைந்த—நிலைத்து நிற்கக் கூடிய; வன்பழி—பெருத்தபழி; காணக் கொடாள்—சேவிக்கத் தடையாய் நிற்கின்றாள்; நிறைந்த— பரிபூர்ணமான; சோதிவெள்ளம்—பிரகாசத்தின் கூட்டம்; மேனி—திருமேனி; என் உள்ளே என்நெஞ்சினுள்ளே; நிறைந்து— வியாபித்து; நின்று ஒழிந்தான்—நின்று விட்டான்; நேமி—திருவாழி]

மகள்பாசுரம். 'உருவெளிப்பாடு கண்ட தலைவிதாயரை மறுத்துரைப்பதைக் கூறும்' திருவாய்மொழியில் ஒரு பாசுரம். ஆழ்வார் நாயகி பேசுகின்றாள்: "இவள் செய்கின்ற காரியம் நம் குடிக்குக் கொடிய பழியைத் தருவ

26. திருவாய் 5. 5. 7

தாகும்' என்று திருத்தாயார் நம்பியை நான் காண்பதற்கு விடுகின்றிலள்; சிறந்த புகழையுடைய திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின் நிறைந்த பேரொளியின் கூட்டத்தாலே சூழப்பட்ட நீண்ட அழகிய திருமேனியோடும் என் மனத்திற்குள்ளே நிறைந்து நின்று விட்டான்; திருச்சக்கரமும் அழகிய கையிலே உள்ளது'' என்பதாக.

'நிறைந்தவன்பழி...காணக்கொடாள்': இங்கே பழியாகச் சொல்லுகிறது, ஸ்வாப தேசத்திலே, இவ்வுலக இன்பம் அவ்வுலக இன்பம் என்னும் வேறுபாடு அற இரண்டிற்கும் அவனே கடவன் என் அவன் கையைப் பார்க்குமது ஒழிய அவற்றிற்காகத் தான் செய்யும் முயற்சியை என்று கூறத் திருவுள்ளம்பற்றி 'தன்முயற்சி பழி' என்பதற்கு ஐதிகம் காட்டுகின்றார். ''கூரத்தாழ்வானின் திருத்தேவியாராகிய ஆண்டாள் ஒரு நாள் பட்டரையும் சீராமப்பிள்ளை யையும் காட்டி, 'இவர்கள் திருமணத்தைச் செய்வதற்குரிய பருவத்தை அடைந்தார்கள்; பேசாதே இருக்கிறது என்?' என்ன, ஆழ்வானும், 'ஆகில், நாளை பெருமாள் பாடே போனவாறே வரக் காட்டு' என்று கூற, அவர்களையும் கொண்டு திருமுன்பே நிற்கச் செய்தே, பெருமாள் அருளப் பாடிட்டு, 'ஒன்று சொல்லுவாய் போலே இருந்தாயே!' என்று திருவுள்ளமாக, 'இவர்கள் திருமணத்திற்குரிய பருவத்தினர் ஆனார்கள்' என்று சொல்லா நின்றார்கள்'' என்ன, 'நாமே ஒத்ததான இடத்தில் சம்பந்தம் செய்து தருகின்றோம்' என்று அருளிச் செய்ய, பிற்றைநாள் கன்னியைக் கொண்டு நீர்வார்த்தார்கள். ஆக, 'அத்தலையாலே வருவதுஒழிய, தாம்தாம் ஒன்றை ஆசைப்படுகையும் கூடப்பழி' என்று இருக்கும் குடிகாணும்.'' என்பது.

இதனால் இவ்வுலக இன்பத்திற்காகவும் கூட, ஈசுவரனையொழிய, தானாகவே ஒரு முயற்சியைச் செய்தல் ஸ்வரூபத்திற்கு விரோதம் என்று தோற்றுகையாலே, அவ்வுலக இன்பத்திற்குத்தான் முயற்சி செய்தல் ஸ்வரூபத்

திற்கு விரோதமாகின்ற காரணத்தால் தாழ்வாம் என்பது சொல்லாமலே போதரும்.

நீண்டபொன்மேனியொடும் நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்' என்ற விக்கிரக வியாப்திக்கு ஐதிகம் அருளிச் செய்கின்றார் ஈட்டாசிரியர்: "ஒருநாள் நஞ்சீயர் கோயிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே திருக்குருகைப் பிரான்பிள்ளானைக் கண்டு, 'ஈசுவரனுக்கு ஸ்வரூப வியாப்தியேயோ உள்ளது, விக்கிரக வியாப்தியும் உண்டோ?' என்று கேட்க, அவரும், 'சர்வ விஷயமாக ஸ்வரூப வியாப்தியே உள்ளது; உபாசக விஷயத்தில், அவர்கள் பற்றுக் கோடாகப் பாவித்த விக்கிரகத்தோடே எழுந்தருளியிருக்கும். இனி ஸ்வரூப வியாப்திக்குப் பிரமாணம் கண்ட இடம் சாமானிய விஷயமாகின்றது. விக்கிரக வியாப்திக்குப் பிரமாணம் கண்டஇடம் விசேஷ விஷயமாகின்றது'" என்று பணித்தாராம்.

176

வந்தருளி யென்னெஞ்
   சிடங்கொண்ட வானவர்
   கொழுந்தே, உலகுக்கோர்
முந்தைத்தாய் தந்தையே!
   முழுஏழுலகும் உண்டாய்!
செந்தொ ழிலவர்
   வேத வேள்விஅறாச்
   சிரீவர மங்கலநகர்
அந்தமிழ் புகழாய்!
   அடியேனை அகற்றேலே[27]

27. திருவாய். 5. 7: 7

[வந்தருளி— (பரமபதம் முதலியவற்றை விட்டு) எழுந்தருளி; இடம் — இருப்பிடமாக; உலகுக்கு—இந்த உலகுக்கு; செந்தொழிலவர் சிறந்த அநுட்டானங்களையுடைய வைணவர்கள்; அறா—இடையறாமல்; சிரீவரமங்கலம் வானமாமலை; அந்தம்இல்— முடிவில்லாத; அகற்றேல்—புறப்புபடுத்தா தொழிக]

'வானமாமலைப் பெருமானது அருளை வேண்டும்' திருவாய்மொழியில் ஒரு பாசுரம். "பரமபதத்திலிருந்து வந்து என நெஞ்சினை இடமாகக் கொண்டவானவர் கொழுந்தே! இந்த உலகங்கட்கு ஒப்பற்ற பழமையான தாயும் தந்தையுமானவனே! எல்லா உலகங்களையும் பிரளய காலத்தில் உண்டவனே! பயன் கருதாத கைங்கர்யத்தையுடைய ஸ்ரீ வைணவர்களுடைய வேத ஒலியும் யாகங்களும் நீங்காமல் இருக்கின்ற சிரீவர மங்கல நகரிலே எழுந்தருளியிருக்கின்ற எல்லை இல்லாத புகழையுடையவனே! உனக்கு அடிமைப்பட்டுள்ள அடியேனை நீக்காமல் இருக்கவேண்டும்'' என்கின்றார் ஆழ்வார் இதில்.

'வந்தருளி என்நெஞ்சிடங் கொண்ட' என்ற இடத்தில் நம்பிள்ளை ஈட்டு சூக்தி பரம போக்கியமானது. அது வருமாறு: "பட்டர் ஸ்ரீ புஷ்பயாகம்[28] அணித்தானவாறே, நஞ்சீயரைப் பலகாலும் இயல் கேட்டருள்வர்; ஒரு கோடையிலே திருவீதியிலே நீரைவிட்டு எழுந்தருளியிருந்து 'இப்பாசுரத்தை இயல் சொல்லும்' என்று சீயரை அருளிச்

28. புஷ்ப யாகம்—இது ஒருவிதயாக விசேடம். பிரம்மோத்சவத்தின் முடிவில் (பத்தாவது உத்சவம்) பெருமாளுக்கு எதிரில் மண்டலங்கள் போட்டு, அதில் மற்றைப் பொருள்களையும் நெருப்பையும் கலவாமல், புஷ்பங்களையே கொண்டு அர்ச்சனை செய்வதுபோன்று யாகம் செய்வது என்பர். இது, திருவரங்கத்தில் பிரம்மோத்சவத்தில் இன்றும் செய்யப்பெற்று வருகின்றது.

செய்து, தாம் இதனை அநுசந்தித்திருந்து பின்பு தாமும் இப்பாசுரத்தை இயல் சொல்லி, 'இயமம் நியமம் முதலிய கிரமத்தாலே தியானம் செய்யத் தக்க சர்வேசுவரனை மனனம் செய்து புறம்புள்ள பராக்கை அறுத்து அநுசந்திக்கப் புக்காலும் சுக்கான் பரல் போன்று இருக்கக் கூடிய நெஞ்சுகளைப் பதம் செய்யும்படி, தார்மிகரா யிருப்பார்[29] இறை சில ஈரச்சொற்களைப்[30] பொகட்டுப் போவதே!' என்றருளிச் செய்தார். நஞ்சீயர் இவ் வார்த்தையை உருத்தோறும் அருளிச் செய்வர்'' என்று அருளிச் செய்வர்.[31]

வந்தருளி : நான் விரும்பாதிருக்க வந்தருளி. வெவ்வேறு தீவுகளிலுள்ள வஸ்துக்கள் இரண்டே அன்றோ சேர்கின்றன. பரமபத நிலையானவனும், சம்சாரத்தை இருப்பிடமாக வுடையவரும், இந்த இருவருமே அன்றோ கூடுகின்றனர். உத்தேசிய வஸ்து இருந்த இடத்து ஏற இவன்தான் போக வேண்டியவனாக இருக்க, அது பெறாவிட்டால் இருவரும் பாதிப் பாதி வழிதான் வரப் பெற்றார்களோ? 'வந்தருளி' என்று நெஞ்சுளுக்கிச் (ஈடுபட்டுச்) சொல்லுகிறாரன்றோ? ஆப்பான் திருவழுந்தூர் அரையர் கையிலே தாளத்தை வாங்கி 'வந்தருளி, வந்தருளி...' என்று மேலே போக மாட்டாதே பாடுவராம். ஈடுபாட்டுக்கு இதுவும் ஒரு சம்வாதம் ஆகும்.

177

ஆரா அமுதே அடியேன் உடலம்
நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்கு
நின்ற நெடுமாலே

---

29. தார்மிகர்—ஆழ்வார்கள் 30. ஈரச் சொற்கள்—பக்திரசமான திருவாய் மொழி முதலிய பிரபந்தங்கள். 31. அருளிச் செய்வர் என்றது நம்பிள்ளையை.

சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கடந்தாய்
கண்டேன் எம்மானே![32]

[ஆரா — தெவிட்டாத; உடலம் — சரீரம்; நின்பால் — உன் திறத்தில்; நீர்ஆய் — நீர்ப்பண்டமாக; அலைந்து — வியாகூலப்பட்டு; கவரி — சாமரம்; ஏர்ஆர் — அழகு பொருந்தி; கோலம் — திருமேனி; திகழ் — விளங்க; கிடந்தாய் — சாய்ந்தருளினாய்]

திருகுடந்தை எம்பெருமான்மீது மங்களாசாசனம் பெற்ற திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "எம்மானே! தெவிட்டாத அமுதே! அடியேனுடைய உடல் உன் விஷயத்தில் அன்புதானே தனக்கு உருவமாகிப் பின்பு தண்ணீராகி ஒரு நிலையில் நில்லாமல் கரையும்படி உருக்குகின்ற நெடுமாலே! சிறப்புப் பொருந்திய செந்நெற்பயிர்கள் சாமரையைப் போன்று வீசுகின்ற செழுமை பொருந்திய நீரையுடைய திருக்குடந்தை என்னும் திவ்வியதேசத்தில் அழகு பொருந்திய ஒப்பனையானது விளங்கும் படியாகச் சயனித்திருக்கின்றவனே! என் கண்களாலே கண்டு அநுபவிக்கப் பெற்றேன்" என்கின்றார்.

'ஆரா வமுதே' : உண்ண உண்ணத் தெவிட்டாத திருப்தி பிறவாத அமுதம். கடலில் உப்புச்சாறு[33] குடிப்பார்க்கு தேவயோனியில் பிறக்கவேண்டும், பிரம்மச்சரியம் அநுட்டிக்கவேண்டும், இத்தனையும் இருந்தால் ஒரு தடவை உண்ணக் கூடியதாக இருக்கும்; இஃது அங்ஙன்

32. திருவாய். 5. 8. 1

33. உப்புச்சாறு — திருப்பாற்கடலில் தோன்றிய அமுதம்.

அன்றிக்கே, சர்வாதிகாரமுமாய், எப்பொழுதும் உண்ணக் கூடியதாய், பிரம்மச்சரியம் முதலானவற்றினின்றும் நழுவுதலால் வரும் குற்றங்களையும் தானே போக்கக் கூடியதாக இருக்கும்.

இத் திருப்பெயர் போக்கியம் என்பதற்கு ஈட்டில் காணப் பெறும் ஐதிகம் : வடநாட்டில் லோக சாரங்க மகாமுனிகள் வசித்துக் கொண்டிருக்கும்போது, இங்கேயுள்ள ஒருவன் அங்கு ஏறச் செல்ல, "பிள்ளாய், தென்னாட்டில் சிறப்பு என்ன?" என்று கேட்க, 'திருவாய்மொழி என்ற ஒரு பிரபந்தம் அவதரிக்க, அதனைச் சீடர்கள் மேற்கொண்டு போரக் கொண்டாடிக் கொண்டு போகா நின்றார்கள்' என்ன, 'அதிலே உனக்குப் போவதொரு பாசுரத்தைச் சொல்லிக் காணாய்' என்ன, 'ஆராவமுதே' என்கிற இத் துணையே எனக்குப் போம்' என்ன, 'நாராயணன் முதலிய நாமங்கள் கிடக்க, இங்ஙனேயும் ஒரு பெயர் உண்டாவதே' என்று அதனைக் காண மிக்க ஆவலுடையவராய், 'இச் சொல் நடையாடுகின்ற தேசத்து ஏறப்போவோம்' என்று அப்பொழுதே புறப்பட்டுப் போந்தார்.

178

'மானேய் நோக்கு' :[34] (மகள் பாசுரம்). இது தானான தன்மை நீங்கி பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பராங்குச நாயகி நிலையில் இருந்து கொண்டு, பேசும் திருவாய்மொழி. எம்பெருமானோடே கலந்து பிரிந்து அந்தப் பிரிவாற்றாமையாலே நோவு படுகின்றாள் பிராட்டி. அவள் தன்னுடைய குடிப் பிறப்பு முதலியவற்றையும் பாராமல், திருவல்லவாழ் ஏறப் புறப் பட்டுப் போகப் புக, இதனை அறியும் தோழிமார் வந்து 'இது காரியம் அன்று; நம் தலைமைக்குப் போராது காண்' என்று இதம் சொல்லி மீட்கப் பார்க்க, 'இனி நீங்கள்

34. திருவாய். 5. 9 (அவதாரிகை காண்க).

சொல்லுகிறவற்றால் நான் பெற்றது என்; அவ்வூரில் திருச் சோலையும், அங்குண்டான பரிமளத்தைக் கொய்து கொண்டு புறப்படுகிற தென்றலும், அங்கே தேனைக் குடித்துக் களித்துப் பாடா நின்றுள்ள வண்டுகளினுடைய இனிதான மிடற்றோசையும், ஊரிலுண்டான வைதிகக் கிரியைகளின் கோலாகலங்களும் நகர சம்பிரமங்களும்-இவையெல்லாம் நீங்கள் என்னை மீட்க நினைப்பதைப் போன்று 'அங்கே போரு போரு' என்று அழையா நின்றன; ஆனபின்பு 'நீங்கள் சொல்லுகிறவற்றால் பெற்றது என்' என்று தன் துன்பத்தை அவர்களுக்கு அறிவுறுத்தி அவர் களை வேண்டிக் கொண்டு, 'திருவல்லவாழிலே நான் நினைத்தபடியே போய்ப்புக்குப் பரிமாறவல்லேனே' என்று அவர்களுக்குச் சொல்லுகிறாளாகின்றது.

இங்கு ஈட்டில் இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டப் பெறுகின்றன.

ஒன்று: ''இதுதான் நான் அநுபவித்தேன்' என்று நஞ்சீயர் அருளிச் செய்வர். பட்டர் திருவடிகளை ஆச்ரயித்த பின்பு ஒருகால் மேல் நாட்டுக்கு எழுந்தருளி பெரிய விரைவோடே 'திருநாளுக்கு[35] உதவ வேணும்' என்று வர, திருக்கரம்பன் துறையளவிலே[36] வந்தவாறே நினைவின் றிக்கே காவிரி பெருகிக் கிடக்க, இராத் திருநாள் எழுந் தருளி இங்குண்டான சம்பிரமங்களெல்லாம் செவிப்படுவது வந்து புகுரப் பெறாதொழிவதாய்க் கொண்டு 'போர நோவு பட்டோம்' என்று அருளிச் செய்வர்.

---

35. திருநளே—திருவரங்கத்தில் மார்கழித் திங்களில் நடைபெறும் அத்யயன உத்சவத்தை (பகல் பத்து இராப் பத்து)

36. இப்போது 'உத்தமர் கோயில்' என வழங்கும் திவ்வியதேசம். திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து ஆறு கல் தொலைவிலுள்ளது.

இரண்டு: ஏகதத்விதத்ரிதர்கள் சுவேத தீபத்தைச் சென்று கிட்டி, உள்ளுப் புகுகைக்குத் தகுதி இல்லாமை யாலே புறம்பே நின்று, அங்குள்ளார் எம்பெருமானைக் கண்டு படுகிற சம்பிரமத்தைச் செவியாலே கேட்டு நிற்பது, கண்ணாலே காணப் போகாதொழிவதாய்க் கிடந்து பட்டாற்போலே கிடந்து கூப்பிடுகிறாராயிற்று இவரும்.

179

மானேய் நோக்குநல்லீர்!
　　வைகலும்வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும்
　　மதுமல்லிகை யுங்கமழும்
தேனார் சோலைகள்சூழ்
　　திருவல்ல வாழுறையும்
கோனாரை, அடியேன்
　　அடிகூடுவ தென்றுகொலோ?[38]

[மான்ஏய்—மான்போன்ற: வைகலும்—எப்பொழுதும்; வினையேன்—பாவியான நான்; மெலிய—இளைக்கும்படியாக; வான்ஆர்—விண்ணை அளாவிய; மது—தேன்;]

இது நம்மாழ்வார் திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரம்; திருவல்லவாழ் என்ற திவ்வியதேசத்தின் மீதுள்ளது. இதில் ஆழ்வார்நாயகி "மான் நோக்கை யுடைய பெண்களே, வினையேன் நாள்தோறும் மெலியும் படியாக விண்ணை முட்டும் வளமான பாக்கு மரங்களும் தேன் பொருந்திய மல்லிகையும், மணம் வீசும் தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவல்லவாழ் என்னும்

---

37. ஏகதத்விதத்ரிதர்கள் — பிரமாவினுடைய மானச புத்திரர்களான இருடிகள்.

38. திருவாய். 5.9:1

திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானின் திருவடிகளில் அடியேன் சேர்வது என்று கொல்?'' என்கின்றான். திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியரை நோக்கித் தலைமகள் கூறுவதாக அமைந்தது இத் திருவாய் மொழி.

'வான் ஆர் வண்கமுகும் மதுமல்லிகை கமழும் தேனார் சோலைகள்' : ''இவ்வாற்றாமையோடே இருந்து சோலையைக் கவிபாடுகிறது, உள்ளே நிற்கின்றவனைப் போன்று இவையும் இனிய பொருள்களாக இருக்கையால் அன்றோ? மனத்தினை உள்முகமாக்கி அநுபவிக்கமாட்டாதார்க்கு, தன்னை அவர்களின் கண்களுக்கு இலக்காக்கிக் கொண்டு உபாய வஸ்து நிற்கிறார்போலே காணும் இவையும்? யாவர்க்கும் தொழு குலமான சர்வேசுவரனுடைய உபாய பாவத்தில் நிலைபோலே, நித்தியப் பிராப்பியனாய்க் கொண்டு அங்கே இருக்கின்றவன், அடியார்கள் உகந்தது ஒரு பொருளைத் திருமேனியாகக் கொண்டு முகங் கொடுத்துக் கொண்டு நிற்பதுபோலே, அங்குள்ளாரும் இங்குப் போந்து தாவரங்களாயும் விலங்குகளாயும் அவனை விடமாட்டாதே நிற்கிறபடி. நித்தியரும் முக்தரும் சம்சாரிகளில் ருசியுடையாரும், உகந்தருளின நிலங்களைப் பற்றியன்றோ கிடப்பது?''—என்பது ஈட்டுரை.

ஓர் ஐதிகம் : ஜனநாதப் பிரம்ம நாயர் திருமுடிக் குறையிலே[39] ஒருமரத்தை வெட்ட முனைந்தார். இதனை எம்பார் கேட்டு: 'அல்லாலப் பெருமாளே! ஈசுவரவிபூதியை அழிக்கப் பார்த்தாயோ?' என்ன, இவர் சொல்லும் வார்த்தையைக் கேட்கைக்காக ''ஈசுவர விபூதி அல்லாத இடம் உண்டோ?' என்ன, 'அவைபோல் அல்ல காண் இவை;

39. திருமுடிக்குறை — பெருமாளுடைய திருமுடிப் பிரதேசமான உபய காவேரியின் மத்திய பிரதேசம்.

சர்வபௌமனான இராஜாவும் தேவியுமாக முற்றூட்டாகக்[40] குடநீர் வார்த்து ஆக்கும் சோலைபோலே, பெருமாளும்பெரிய பிராட்டியாருங்கூடக் கைதொட்டு ஆக்குமவைக் காண்' என்று அருளிச் செய்தார்.

மற்றோர் ஐதிகம் : 'பிரமாணத்தாலே பிரபத்தி விளையக் கண்ட இடம் உண்டோ? என்ன, அதற்கு ஐதிகம் காட்டுவாராகத் தொடங்குகிறார். பிரமாணத்தை நம்பினவனுக்கு இங்ஙனமல்லது எண்ணம் இல்லையன்றோ? நல்லான, பட்டர் திருவடிகளை ஆச்ரயித்து நெடுங்காலம் சேவித்து, பின்னர் மரணதசையிலே பட்டர் எழுந்தருளி என் நினைத்திருந்தாய்?' என்ன, அதற்கு அவன், '' 'ஒரு சர்வ சக்தி உபகரிக்கும்போது இங்ஙனம் கனக்கவாகாதே உபகரிப்பது" என்று நினைத்திருந்தேன்'' என்ன, அதற்குப் பட்டர் அது என், உன்தேசத்தைவிட்டு உறவினர்களை விட்டு நெடுந்தூரம்போந்து இங்ஙனம் நோவுபட்டுத் திருவடி சேரக் கிடந்தாயாகில் இங்கு உபகாரம் என்?" என்ன, அதற்கு நல்லான், 'வேறு தேசத்திலே இருந்து பொருள் அல்லாதவனாய் விழுந்துபோகக் கடவனாக இருந்த என்னை இவ்வளவும் அழைப்பித்து, உம்முடைய திருவடிகளை அடையச் செய்து ருசியை விளைப்பித்து, இத்தேசத்திலே உம்முடைய கண் வட்டத்திலே சரீரம் நீங்கும் படி செய்தானே' என்ன, பட்டரும், 'ஆனாலும், தானாக அபிமானித்த சரீரம் போகாநிற்க, நீ இங்ஙனம் நினைத்திருந்தது என் கொண்டு?' என்ன, அதற்கு நல்லான், 'பிரமாணங் கொண்டு நினைத்திருந்தேன்' என்றான்.[41]

---

40. முற்றூட்டு—பூர்ண அநுபவம்

41. 'அகவாயிலே இருந்து இசைவித்த சர்வேசுவரன் பிரதம குரு' என்று அருளிச் செய்தார் (எம்பார்)—127வது) பாசுரம் காண்க (திருவாய். 2.3:2)

மேலும், 'ஆசாரிய லாபம் பகவனாலே, (ஸ்ரீவசன்.438) என்ற ஸ்ரீவசன பூஷண ஸ்ரீ சூக்தியையும் அதற்கு மணவாள மாமுனிகள் அருளிய சிறப்புரையையும் கண்டு தெளிக.

180

'பிறந்தவாறும்'42 (அவதாரிகை) அர்ச்சாவதாரங்களிலே தம் அபேட்சிதம் பெற ஆசைப்பட்டவர் அவ்வாசை நிறைவேறப்பெறாமையாலே 'அவதாரங்களிலே செல்லு கின்றார். இது பொருந்துமோ? விபவாவதாரங்களை இழந்தார்க்கும் இழவு தீரவன்றோ அர்ச்சாவதாரம் அமைந்திரா நின்றது; இங்கே இழந்து வைத்து அங்கே செல்லுகையாகிற இது என்னே! என்னில்: அர்ச்சாவதாரத்தில் குளிர நோக்குதல், வினவுதல், அணைத்தல் செய்யலாகாதென்று சங்கல்பித்திருக்கையாலே 'சத்திய சங்கல்பனுடைய சங்கல்பம் குலையும்படி அதிக நிர்ப்பந்தம் செய்யக் கடவோம் அல்லோம்' என்று அர்ச்சாவதாரத்தில் கையொழிந்தார். விபவாவதாரத்தில் அப்படி ஒரு நிர்ப்பந்தம் இல்லாமையாலும் அக்ரூரன் முதலானார்க்கு ஸர்வஸ்வதானம் பண்ணின படியை அநுசந்திக்கையாலும் அது காலவிப்ரக்குஷ்டம் என்பதிலே புத்தி செலுத்தாமல் அங்கே போருகிறார்.

இங்கு ஈட்டு ஸ்ரீசூக்தி: 'ஆழ்வார்கள் எல்லாரும் கிருஷ்ணாவதாரம் என்றவாறே போர மண்டியிருப்பர்கள்; இதற்குக் காரணம் ஏன்?' என்று பட்டரை (நஞ்சீயர்) கேட்க, (அதற்கு அவர்) ஒருவனுக்கு உண்டான துக்கம் சில நாட்கள் கழிந்தால் பொறுக்கலாம்; அணித்தானால் ஆறியிருக்கப் போகாதே யன்றோ? அப்படியே, அல்லாத அவதாரங்களைப் போல் அன்றிக்கே, சமகாலமாகையாலே, 'ஒரு செவ்வாய் கிழமை43 முற்படப் பெற்றிலோம்; பாவியேன்! 'பல்லிலே பட்டுத் தெறிப்பதே' என்னும் இழவாலே வயிறெரித்தலையாயிருக்கும்?' என்று அருளிச் செய்தார். இனித்தான், இராமாவதாரத்தில், தமப்பன்

42. திருவாய். 5.10

43. செவ்வாய்க் கிழமை—செவ்வாயினுடைய சாரம்; 45 நாள்

சம்பரனைக் கொன்றவனாய், ஏக வீரனாய் இருப்பான் ஒருவன்; பிள்ளைகள்தாம் ஆண் புலிகள்; குடிதானே வன்னியம்44 அறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாடுகளையெல்லாம் 'ஒரு மார்வு எழுத்தாக்கிக் கொண்டிருப்பர்கள்'; ஆகையால் எதிரிகள் என்ற சொல்லும் இல்லை; இங்கு அங்ஙன் அன்றிக்கே, தமப்பன் ஒரு சாது விருத்தன்; பிறந்தது கம்சன் சிறைக் கூடத்திலே; வளர்ந்ததும் அவனகத்து அருகே; ஸ்ரீ பிருந்தாவனத்திலே எழும் பூண்டுகள் அகப்பட அசுரமயமாயிருக்கும்; ரட்சகர்களானவர்கள்[45] ஓர் அடி தாழ நிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று. இவன்தன் படிகள் இருப்பன; அப்படியானால் வயிறு எரியாதே செய்வது ஏன்? இவர்கள்; அக்காலத்திலே உணர்ந்து நோக்கப் பெற்றிலர்கள், அவ்விழவுக்கு இன்று இருந்து நோவு படுகிறார்கள். அவர்களிலே ஒருவரான இவர் சொல்லும்படியன்றோ இது, 'தெரிந்துணர்வு' என்ற திருப்பாசுரம்;[46] மாயா மிருகத்தின்[47] பின்னே சென்று இளைத்து மீண்டு எழுந்தருளினபோது அடிசுட்டுப் பொறுக்கமாட்டாமையாலே தழைகளை முறித்துப் பொகட்டு அவற்றிலே நின்று ஆறி எழுந்தருளினார் என்று கேட்டு; பாவியேன்! அன்று உதவி அத்திருவடிகளிலே என

44. வன்னியம்—குறும்பரான பகைவர்கள்.

45. 'ரட்சகர்' என்றது நம்பி மூத்த பிரானை.

46. தெரிந்துணர்வொன் றின்மையால்
  தீவினையேன் வாளா
 இருந்தொழிந்தேன் கீழ்நாள்கள்
  எல்லாம்—கரந்துருவின்
 அம்மானை அந்நான்று
  பின்தொடர்ந்த ஆழியங்கை
 அம்மானை ஏத்தாது
  அன்று,
என்பது பெரிய திருவந்தாதி-82.

47. மாயா மிருகம்—மாரீசனாகிய மாய மான்.

தலையை மடுக்கப் பெற்றிலேன்;[48] *'ஒரு பயனுமின்றியே கழிந்தனவே யன்றோ அநாதி காலம் எல்லாம்' என்று நொந்தாரன்றோ? இப்படியே யன்றோ கழிந்தவற்றிற்கு இவர்கள் வயிறு எரியும்படி. 'திருநீல மணியார் மேனியோடு என் மனம் சூழ வருவாரே' என்றும் வயிறு பிரித்தாரன்றோ இவர்?*[49]

181

கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப்புரம்
புக்க ஆறும் கலந்தசுரரை
உள்ளம பேதம்செய் திட்டுயி
ருண்ட உபாயங்களும்
வெள்ள நீர்ச்சடை யானும் நின்னிடை
வேறலாமை விளங்க நின்றதும்
உள்ளமுள் குடைந்தென் உயிரை
உருக்கி உண்ணுமே[50]

---

48. புலையாம் பிறவிபிறந் தென்செய்தோம்
பொன்னி பொன்கொழிக்கும்
அலையார் திருவரங்கத்து எம்பிரான்
நமதன் னைமொடும்
தொலையாத கானம்க டந்தஅந்நாள்
தடந்தோறும் புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே! கழல்
தீண்டு கைக்கே.

இது திருவரங்கக் கலம்பகம்—16; இது ஒரு புடை ஒப்பு நோக்கமாகும்.

49. தணியா வெங்நோய் உலகில்
தவிர்ப்பான் திருநீல
மணியார் மேனியோடு என்மனம்
சூழ வருவாரே, என்பது *திருவாய். 8.3:6*

50. *திருவாய் 5.10:4 (ஆசிரியத் துறை)*

[கள்ளவேடம்—புத்தர் வேடம்; புரம்—திரிபுரம்; கலந்து—செறிந்து; உள்ள பேதம்—மன வேறு பாடு; உபாயம்—விரகு; வேறு அலாமை—வேறுபாடின்றி; உள்குடைத்து—அவகாகித்து; உயிர்—ஆன்மா; உருக்கி—நீர்ப்பண்டமாக்கி]

'ஆழ்வார் தாம் எம்பெருமானைச் சேர்ந்து அநுபவிக்கும் நிலையைச் செய்யுமாறு அவனை வேண்டும்' திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. ஆழ்வார் இதில், "வஞ்சனை பொருந்திய வேடத்தைக் கொண்டு சென்று திரிபுரத்திலே புகுந்த விதமும், அங்குள்ள அசுரர்களோடு கலந்து அவர்களுடைய மனங்களை வேறுபடுத்தி உயிர்களைப் போக்கிய உபாயங்களும், கங்கையைத் தரித்த சடையையுடைய சிவபிரானும் உன் பக்கம் வேறு அல்லாதபடி விளங்க நின்றதும் என் மனத்திற்குள்ளே புக்கு என் உயிரை உருக்கி முடிக்கின்றன" என்கின்றார்.

கள்ள வேடத்தை... உபாயங்களும் : இதில் பௌத்தாவதாரக் கதை அடங்கியுள்ளது. அக்கதை வருமாறு: சில அசுரர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தனர்; அப்போது சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி, 'உங்கட்கு வேண்டியதென்ன?' என்று கேட்க, அவர்களும் 'ஒருவராலும் வெல்ல முடியாத மூன்று பட்டணங்கள் எங்கட்கு வேண்டும்' என்றனர். அதற்குச் சிவபிரான் 'அப்படியே உண்டாகுக; அந்தப் பட்டணங்கள் மூன்றும் ஒன்றோடொன்று கூடாமல் திரியக் கடவன்; மூன்றும் ஓரிடத்தில் கூடும்பொழுது உங்கட்கு பேராபத்து விளையும்; பேணிக் கொள்ளுங்கள்" என்று கூறி மறைந்து போயினன்.

பின்பு இரும்பு, வெள்ளி, பொன் இவற்றாலான மூன்று பட்டணங்கள் தனித்தனியே உண்டாயின. அசுரர்கள் அவற்றிலிருந்து கொண்டு தேவர்களையும், அவர்களை நோக்கி வேள்வியியற்றும் அந்தணர்களையும் பலவாறு நலிந்து கொண்டிருந்தனர். வேள்வி முதலியன நடை

பெறாததனால் அவிசு கிடைக்காமற் போகவே தேவர்கட்கு வலியொடுங்கிற்று; மிகவும் சிரமம் ஏற்பட்டது. பிறகு நான்முகன் முதலியோர் அனைவரும் கூடிச் சிவனிடம் சென்று 'பெருமானே, எங்கட்கு அவிசு இல்லா தொழிந்தது. வேள்வி நடத்துகின்ற ஊர்களிலே அசுரர்கள் அப்பட்டணங்களுடன் சென்று நலிகின்றனர்; இத்துன்பம் பொறுக்க முடியாதிருத்தலால் அவர்களை உடனே அழித்தொழிக்க வேண்டும்' என்று வேண்டினர். அதற்குச் சிவபெருமான் 'நச்சு மரமாகிலும் நட்ட மரங்களை வெட்டுவாருண்டோ? அவர்களை ஒழிக்க என்னலாகாது' என்று கூறி விட்டார்.

பிறகு அனைவரும் கூடி திருப்பாற்கடலை அடைந்து பாலாழி எம்பெருமானைக் கண்டு அவனிடம் தங்கள் கோரிக்கையினை எடுத்துரைத்தனர். திருமால், 'நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களை ஒழிக்கலாகாதோ?' என்று கேட்க, அதற்கு அவர்கள், 'எம்பெருமானே, அந்த அசுரர்கள் சில தர்மங்களை அநுட்டிப்பது, சில வேள்விகளை இயற்றுவது என்பது போன்ற சில நற்செயல்களையும் புரிகின்றார்களாதலின் அவர்களை எங்களால் வெல்ல முடியாது' என்றனர். உடனே திருமால், 'ஆனால் நான் அவர்களை ஒழிக்கின்றேன். நீங்கள் உம் இருப்பிடம் சேர்வீர்களாக' என்று விடை கொடுத்தனுப்பிவிட்டு தான் ஒரு பௌத்த கிழவனாக வேடம் பூண்டு ஓர் ஏட்டுச் சுவடியைக் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு பவித்திரம் அணிந்து கொண்டு அவ்வசுரர்களின் பட்டணங்களுக்குச் சென்று பரமதார்மீகனென்று அனைவரும் கருதும்படியாக நடந்து வந்தான்; அப்போது அவர்கள் ஒரு வேள்வி இயற்றத் தொடங்கினர். காஷ்டம், அவிசு முதலியன சேமித்து வைத்திருந்தனர். கள்ள வேடத் திருமால் அங்குச் சென்று, 'இந்த சமித்துகள் எதற்கு?' என்று கேட்க, அவர்கள், 'ஓமம் பண்ணுவதற்கு' என்று விடையிறுத்தனர். திருமால், 'ஐயோ காஷ்டம் தின்னப் பிறப்பதிற்காட்டிலும் புல்லைத் தின்று பசுவாய்ப் பிறப்பது

நலமே' என்றான். பிறகு 'இந்த அவிசு எதற்கு?' என்று வினவ, அவர்கள், 'தேவர்களுக்குக் கொடுக்க' என்று சொன்னார்கள். இதனைக் கேட்ட கள்ள வேடத் திருமால், 'அயலூருக்குச் செல்லும் ஒருவன் எடுத்துச் செல்லும் கட்டமுதை, வேறொருவன் கையிலே இட்டு வைத்துத் தான் போனால் அவன் உண்ட சோறு இவனுக்கு வந்து உதவினாலன்றோ தேவர்கட்குக் கொடுக்கும் அவிசும் உங்களுக்கு உதவும்' என்றான். பிறகு 'இந்த ஆடுகள் எதற்கு? என்று கேட்க, அவர்களும் 'வபையை எடுத்து ஓமம் பண்ண' என்று அசுரர்கள் செப்பினர். கள்ள வேடத் திருமால், 'ஆனால் ஆட்டு வாணியனைப் பரம தார்மிக னாகக் கொள்ளலாம் போலும்' என்றான். இப்படியே பலப்பல குறும்புச் செயல்களாலே அவர்களைக் குழம்பும் படி செய்ய, அவர்களும் அவன் சொல்லியவற்றில் நம்பிக்கை கொண்டு வேள்வி இயற்றுவதை விட்டு அறவழி செல்லும் அக்கறை குறைந்து உருத்திரனையும் திட்டத் தொடங்கினர்.

இந்நிலையில் கள்ள வேடத் திருமால் உருத்திரனிடம் சென்று 'அசுரர்கள் உன்னைத் திட்டுகிறார்கள்' என்று கூற, உருத்திரனும் அதனைக் கேட்டுச் சீறிச் சிவந்து அவர் களைக் கொல்லத் திருவுள்ளங் கொண்டான். பூமியைத் தேராகவும், சந்திர சூரியர்களைத் தேர் உருளைகளாகவும், நான்மறைகளை நான்கு குதிரைகளாகவும் நான்முகனைத் தேரோட்டுபவனாகவும் மகாமேருவை வில்லாகவும் ஆதிசேடனை நாணாகவும் கொண்டு போர் நடத்தினான். (இந்த வரலாறு விஷ்ணு புராணத்தில் மூன்றாவது அமிசத் தில் உள்ளது).

வெள்ள நீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும் : ''அளவிட முடியாத பராக்கிரமத்தை உடைய வனும், பூஜ்யனுமாயிருக்கிற சிவனுக்கு, சர்வவியாபியான விஷ்ணுவானவர் அந்தர்யாமியாக இருக்கிறார்; அப்படி இருப்பதனாலே, அந்தச் சிவன், திரிபுரங்களை அழிக்கும்

மாலத்தில் வில்லை வளைத்து நாணை ஏற்றுதலாகின்ற அந்தக் காரியத்தே மிகவும் பொறுத்துக் கொண்டான்'' என்பது பாரதம் கர்ணபர்வம்.

'சர்வேசுவரன் அந்தராத்மாவாய் நிற்கையிலே செய்தான்' என்றதனால் பலிதமான சிவனுடைய உயர்வு பகவானுக்கு அதீனப்பட்டது என்றதற்கு ஐதிகம். ''பண்டு ஓர் அரசன் 'சிவனே பரம் பொருள்' என்று எழுதி 'எழுத்திட்டுத் தாருங்கோள்' என்ன, அப்படிப் பலரும் எழுதி எழுத்திடா நிற்கச் செய்தே கூரத்தாழ்வான், 'வாராய், நீ இந்த ஓலை கெடாமே நோக்கி வைத்தால் அன்றோ இவனுடைய பரத்துவம் சாதிக்கலாவது; நீ நினைக்கிற தேவதைக்கு உண்டான உயர்வுகள் 'சர்வேசுவரனாலே' என்று பிரமாணங்கள் சொல்லா நின்றன; ஆன பின்னர், இன்று, நீ சொல்ல நான் எழுத்திட்டுப் போகிறேன். நாளை ஓர் அறிவுடையவன்[51] (விவட்சிதன்) தோன்றி 'இவன் அறிவீனனாய் இருந்தானே!' என்னக் கேட்பதில் 'இன்று நீ நினைத்ததைச் செய்து கொள்ள மாட்டாயோ?" என்றார்.

---

51. இங்கு,

அவத்தப்புன் சமயச்சொற் பொய்யை மெய்யென்று
அணிமிடறு புழுத்தான்தன் அவையின் மேவிச்
சிவத்துக்கு மேற்பதக்குண் டென்று தீட்டும்
திருக்கூர வேதியர்கோன் செவ்வி பாடப்
பவத்துக்கம் பிணிநீங்க நரகந் தூரப்
பரமபதம் குடிமலியப் பள்ளி கொள்ளும்
நவத்துப்புச் செங்கனிவாய்க் கரிய மேனி
நம்பெருமாள் அரங்கேசர் ஆடீ ரூசல்

—சீரங்க நாயகர் ஊசல்-20

என்ற திருப்பாசுரம் நினைத்தல் தகும்.

182

நின்ற வாறும் இருந்த வாறும்
கிடந்த வாறும் நினைப்பரியன
ஒன்றலா உருவாய் அருவாய்நின் மாயங்கள்
நின்று நின்று நினைக்கின் றேனுன்னை
எங்ங னம்நினை கிற்பன், பாவியேற்
கொன்றுநன் குரையாய் உலகமுண்ட ஒண்சுடரே![52]

[நின்றவாறு—ஆங்காங்கு நின்ற படிகள்; இருந்த வாறு—வீற்றிருக்கின்ற படிகள்; கிடந்த ஆறு சயனித்திருக்கின்ற படிகள்; ஒன்று அலா உருவாய் — பலபடியாய்; அருஆய — உருத் தெரியாத; நின்றுநின்று — சிறிது சிறிதாக; நினைக்கிற்பன்-நினைக்க வல்லவேன்; ஒன்று—ஒரு விரகு; உரையாய்—அருளிச் செய்ய வேண்டும்.]

ஆழ்வார் தாம் சேர்ந்தநுபவிக்கும் நிலையைச் செய் என எம்பெருமானை வேண்டும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் ஆழ்வார், "பிரளய காலத்தில் உலகத்தைப் புசித்த ஒண்சுடரே! நின்றவாறும் இருந்த வாறும் கிடந்தவாறும் நினைத்தற்கு அரியனவாய் இருக் கின்றன; ஒரு படித்தாகாத உருவத்தையுடையையாய் அநுபவித்தற்கு உருத்தெரியாதவனா யிருக்கின்ற உன் னுடைய செயல்களை நின்று நினைக்கின்றேனாகிய நான் உன்னை எப்படி நினைப்பேன்? பாவத்தைச் செய்த எனக்குச் சிறந்தது ஓர் உபாயத்தைச் சொல்லுவாய்" என்கின்றார்.

நின்றவாறும்...நின் மாயங்கள் : இவர் ஈடுபடுவது அடியார் பொருட்டுச் செய்த செயல்களுக்கு. ஆகையாலே,

52. திருவாய். 5.10:6

அவன் அடியார் பொருட்டுச் செய்யும் செயல்களுக்கு ஐதிகங்கள் காட்டுகின்றார்.

முதல் ஐதிகம் : போரப் பாட வல்லாராயிருப்பார் ஒருவர், வடக்குநின்றும் 'பெருமாளைத் திருவடி தொழ வேண்டும்' என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் தீர்த்தத்தின் அன்றிருந்து திருமாலையைப் பாடி[53] முடித்துப் பெருமாளை மத்தகஜங்களை ஏத்துமாறு போலே ஏத்தி வசமாக்கிச் சபதம் கொண்டு "நாயன்தே! தேவர் திருவடிகளுக்குப் போர நல்லான் ஒருவன், எழுநூற்றுக் காதம் வழிகடந்து தேவரைத் திருவடி தொழ வேண்டும் என்று வருகிறது; இவனை அழைத்துக்கொண்டு சம்பாவனை செய்தருள வேண்டும்" என்று வேண்ட, பெருமாளும் "அப்படியே செய்கின்றோம்" என்று திருவுள்ளமாய் அருளப் பாடிட்டு, திருப்புன்னைக்[54] கீழ்நின்றும் அவர் நின்றவிடத்தளவும் செல்ல நாலு கோல்தறை திருக்கைத்தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பம் செய்வார்களை யெல்லாம் அருளப் பாடிட்டு 'வாரீர்கோள், இவன் வந்த தூரத்துக்கெல்லாம் போருமோ நாம் இவனுக்குச் செய்த தரம்' என்று திருவுள்ளமானார்.

இரண்டாம் ஐதிகம் : அநுகூலரை அங்கீகரிக்குமாறு போன்று, குற்றம் பொருந்திய நம்மை அங்கீகரிக்கக் கூடுமோ? என்ன, புருஷகார பலத்தாலே கூடும் என்பதற்கு ஐதிகம் காட்டுகின்றார். ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாக வாட்டி (துவைத்து) எம்பெருமானார்க்குக் கொண்டு வந்து காட்ட, போரத் திருவுள்ள முகந்தாராய் இவனையும் கூடக்கொண்டு;பெருமாள் பாடே புக்கு, 'நாயன்தே! இவன், திருவரைக்குத் தகுதி

---

53. தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த பிரபந்தம்.

54. திருவரங்கநாதன் திருக்கோயில் தல விருட்சம்.

யாம்படி இவற்றை வெளுப்பித்தபடி; பார்த்தருளவேண்டும்" என்று காட்ட, கண்டு போரஉகந்தருளி எம்பெருமானாரை அருளப்பாடிட்டு, 'இவனுக்காக, கம்சனுடைய ஈரங்கொல்லி (வண்ணான்) நம் திறத்திற் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவுள்ளமானார்,

ஆறாம் பத்து

183

'வைகல் பூங்கழிவாய்'[1] இது மகள் பாசுரமாக அமைந்தது. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் தூதுவிடும் பதிகங்கள் நான்கு உள்ளன. இவை யாவும் 'மகள் பாசுரமாகவே' அமையும். 'தூது விடுபவள் தலைவியேயன்றோ? 'அஞ்சிறைய மடநாரய்' (1.4) — இது வியூகத்தில் தூது; 'பொன்னுலகாளீரோ' (6.8)—இது பரத்துவ, அந்தர்யாமித்துவத்தில் தூது; 'எங்கானல் அகங்கழிவாய' (9.7)—இஃது அர்ச்சையில் தூது; 'வைகல் பூங்கழிவாய்' (6.1)—இது விபவத்தில் தூது என்பதாக அறுதியிடப்பெற்றுள்ளது. மணவாளமாமுனிகள் தம் நூற்றந் தாதியில் 'வைகல் திருவண் வண்டூர் வைகும் இராமனுக்கு' (61) என்று அருளிச் செய்ததும் இது கருதியே. திருவண் வண்டூரில் தூது விடுகின்றபடியால் 'இஃது அர்ச்சாவதாரத்தில் தூது' என்று கொள்ளலாமோ என்னில்; இத்திருவாய்மொழியின் பாசுரம் ஒன்றில்,

> மாறில் போரரக் கன்மதிள்
> நீரெழச் செற்றுகழ்ந்த
> 'ஏறு சேவக னார்க்கென்னை
> யும்உளள் என்மின்களே' (1)

1. திருவாய். 6.1. (அவதாரிகை)

என்று அமைந்திருக்கும் படியை நோக்கியும், அர்ச்சாவதாரப் பதிகம் வேறொன்று (9.7) இருப்பதை நோக்கியும் ஆசாரியர்கள் இதனை 'விபவாவதாரத்தில் தூது' என வகை செய்தது மிகவும் பொருத்தம் என்பது போதரும்.

ஆழ்வார் திருமொழிகளில் அவர்கள் தாமான தன்மையை விட்டுப் பிராட்டியாரின் நிலையை ஏறிட்டுக் கொண்டு பாசுரங்கள் அமைக்கப்பெற்றிருக்கும். பெரும் பாலும் ஆழ்வார் நாயகிகள் புள்ளினங்களையே தூது போக்குவர். குருகினங்கள், நாரைகள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, மயில், பூவை, அன்றில்கள், வண்டினங்கள் முதலியவை தூதுவிடும் பொருளாக அமைந் திருப்பதைக் காணலாம். இவற்றைத் தவிர, வாடை மேகம் நெஞ்சு போன்றவையும் இவர்கள் பாசுரங்களில் தூதுப் பொருள்களாக அமைந்திருப்பதையும் கண்டு மகிழ லாம். இங்ஙனம் பறவைகளைத் தூது விடுவதற்கு உட் பொருள் உண்டு. 'ஆசாரிய ஹ்ருதயம்' என்னும் நூல்.

> "சோப்பாரைப் பட்சிகளாக்கி ஜ்ஞாந கர்மங்களைச் சிறகு என்று, குரு ஸப்ரமசாரி புத்ர ரஷ்ய ஸ்தாநே பேசும்"

> *[ஸப்ரமசாரி—ஒரு சாலை மாணாக்கர்; ஸ்தாநே—இடத்தில்]*

என்று குறிப்பிடும். 'விண்ணோர் பிரானார், மாசுஇல் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே'[3] என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளமையால் பகவத்விஷயத்தில் கொண்டு சேர்க்குமவர்கள் பறவைகளாகக் கொள்ளப் பெறுவர். இரண்டு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ,

2. ஆசா-ஹ்ரு—150
3, திருவிருத்—55

அங்ஙனமே ஞானம், ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப் பெறுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை. எனவே, ஞானத்தையும் அநுட்டானத்தையும் சிறகுகளாகக் கொள்ளல் வேண்டும். ஆசாரியர்களும், ஒரு சாலை மாணாக்கர்களும், புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயகனாரின்[4] திருவுள்ளமாகும்.

உறவு இல்லாத பறவைகள் தன் காரியம் செய்யக் கூடுமோ? என்ன, தன் பக்கத்தில் வாழ்கின்ற பறவைகளை, 'ஒரே இடத்தில் வசிப்பதால் வந்த சம்பந்தமே நம் காரியம் செய்து தலைக்கட்டுகைக்கு உறுப்பு' என்று பார்த்து அவற்றின் கால்களிலே விழுந்து போகவிடுகின்றாள்.

ஐதிகம்: நஞ்சீயர் இத் திருவாய்மொழி அருளிச் செய்யப் புக்கவாறே, உருத்தோறும் அருளிச் செய்யும் வார்த்தை. ''பாண்டவர்கள் காரியத்துக்காகத் தன்னை[5] ஒக்கி அவர்கள் படுகின்ற வியசனமெல்லாம் படுகிறார் காணும் இவரும்; அவர்கள்தாய் ஒரு தர்மஆபாசம் (போலி தர்மம், தர்மப் போலி) உண்டு என்று இருக்கையாலே வியசனப்பட்டார்கள்; இவர்க்கு ஆழ்வார்க்கு அதுவுமின்றிக்கே இருக்க என் செய்யப்படுகிறார்'' என்று அருளிச் செய்வர்.

184

வைகல் பூங்கழிவாய் வந்து
மேயும் குருகினங்காள்!
செய்கொள் செந்நெலுயர் திருவண்
வண்டூர் உறையும்

4. இவர் 'ஆசாரிய ஹிருதயம்' என்ற நூலின் ஆசிரியர்.
5. தன்னை என்றது 'கண்ணபிரானை.'

கைகொள் சக்கரத்தென் கனிவாய்
மானைக் கண்டு
கைகொள் கூப்பிச் சொல்லீர்
வினையாட்டியேன் காதன்மையே.[6]

[வைகல்—எப்போதும்; பூ—அழகிய; கழிவாய்—நீர்நிலம்; செய் கொள்—கழனி நிரம்பிய; கனிவாய்—கனிபோன்ற இதழ்; கண்டு—நேரில் பார்த்து; வினையாட்டியேன்—பாவமுடையவனான என்னுடைய]

மகள் பாசுரம். பறவைகளைத் தூதுவிடும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் நாயகி, "அழகிய உப்பங்கழிகளிலே நாடோறும் வந்து மேய்கின்ற கூட்டமான குருகுகளே! வயல்களிலே நிறைந்திருக்கின்ற செந்நெற் பயிர்கள் ஓங்கி வளர்கின்ற **திருவண் வண்டூர்**[7] என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற, திருக்கரத்திலே கொண்டிருக்கின்ற சக்கரத்தையும் கோவைக் கனி போன்ற வாயினையுமுடைய எம்பெருமானைக் கண்டு வினையேனுடைய காதலின் தன்மையைக் கைகூப்பி வணங்கிச் சொல்லுங்கள்" என்கின்றாள்.

உள்ளுறை : எல்லாக் காலங்களிலும் இன்பம் நுகரும் இடங்கட்குத் தாங்களே சென்று தங்களைப் பிரியில் தரியாத அன்புடைய சீடர்களுடனே கூடப் பகவானுடைய குணங்களை அநுபவம் பண்ணுகின்ற தூய்மையான இயல்புடைய ஆசாரியர் ஒருவரை விளித்துத் தனக்கு இறைவனோடு சம்பந்தம் வேண்டும் என்று அடிபணிந்து கேட்டல் இதற்கு உள்ளுறையாகும்.[8]

---

6. திருவாய் 6.1:1
7. மலைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று.
8. ஆசா. ஹிரு. 154-ல் இந்த உள்ளுறையின் விரிவு காணலாம்.

பண்டைய முதலிகள் 'பத்தாம் பாசுரத்தில் (6.1;10) பிரணய ரோஷம் (ஊடல்) தோற்றச் சொல்லுகிறாள் என்று நிர்வகிப்பார்கள். ஆனால் பட்டர், 'பாசுரந் தோறும் இலாம் (ஊடல்) தோற்றச் சொல்லுகிறாள்' என்று அருளிச் செய்வர். காரணம், 'உணர்த்த ஊடல் உணர்ந்து' (6.1:5) என்று ஊடலைக் கூறுகின்ற பாசுரத்தை ஒட்டியது.

185

போற்றி யானிரந்தேன் புன்னை
மேலுறை பூங்குயில்காள்!
சேற்றில் வாளை துள்ளும்
திருவண்வண் டூர்உறையும்
ஆற்றல் ஆழி கங்கை
அமரர்பெரு மானைக் கண்டு
மாற்றம் கொண்டருளீர் மையல்
தீர்வதொரு வண்ணமே.[9]

[இரந்தேன் — வேண்டுகிறேன்; உறை — வாழ்கின்ற; வாளை—வாளை மீன்கள்; துள்ளும்—களித்து உகளும்; ஆற்றல் ஆழி—சக்தி மிகுந்த திருவாழி; மையல்—வியாமோகம்; மாற்றம்—நல்வார்த்தை]

மகள் பாசுரம் : *பறவைகளைத் தூதுவிடும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில், "புன்னை மரத்தின் மேல் தங்கியிருக்கின்ற அழகிய குயில்களே! யான் போற்றி இரந்தேன்; சேற்றிலே வாளை மீன்கள் துள்ளி விளையாடுகின்ற திருவண் வண்டூர் என்னும் திவ்விய தேசத்தில் நித்திய வாசம் செய்கின்ற பெருமிடுக்கினையுடைய சக்கரத்தை அழகிய கையிலே தரித்திருக்கின்ற நித்திய சூரிகளுக்குத் தலைவனான, எம்பெருமானைக் கண்டு, என் மயக்கம் நீங்குவதற்கு உரியது ஒரு தன்மையாக மறு*

9. திருவாய். 6.1;6

மாற்றத்தைக் கொண்டு வாருங்கள்'' என்று பேசுகின்றாள் ஆழ்வார் நாயகி.

'புன்னை மேலுறை பூங்குயில்காள்': 'வளர்த்ததனால் பயன் பெற்றேன்'[10] என்னும்படியாக ஆசிரியர் பக்கலிலேயே வளருமவர்கள் (ஸ்வாப தேசத்தில்) குயிலாகச் சொல்லப்படுவார்கள். குயில்கட்கு வடமொழியில் 'பப்ருதம்' என்று பெயர்; காக்கைக் கூட்டிலே கொண்டு விடப் பெற்று அவற்றால் போஷிக்கப்பட்டு வளருமவை என்றபடி, அதுபோலே பரனான ஆசார்யனால் போஷிகப் பட்டு வளரும் குருகுல வாசிகளைச் சொல்லிற்றாகின்றது.

'புன்னை மேலுறை' என்றது 'புன்னையின் கீழுறை, என்றவாறு. இதில் ஒரு சிறப்புப் பொருள் உணடு. நம் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஒருமிடறாக ஈடுபட்ட தலமாகிய திருவரங்கம் பெரிய கோயிலில் திருப்புன்னை மரம் நெடுநாளாக இருப்பது யாவரும் அறிந்ததே. பட்டரும் 'ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில்' இப்புன்னை மரத்தை வருணிக்கின்றார். முன்புள்ள நம் முதலிகள் எல்லாரும் இப்புன்னையின் கீழிருந்து பகவத் விஷயார்த்தம்பற்றி ஆய்வு நடத்தினர் என்று தெரிவதால் இங்கு ஆழ்வார்கள் அன்னவர்களையே விளிக்கின்றனர் என்று கொள்ளத்தகும். பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வாரும் 'மாம் பொழில் தளிர் கோதிய மடக்குயில் வாயது துவர்ப்பு எய்தத், தீம்பலங்கனி தேனது நுகர்''[11] என்று குயில்களின் ஓர் இயல்பை அருளிச் செய்கின்றார். முதலில் மாந்தளிர்களில் வாய் வைத்ததனால் வாய்துவர்ப்புப் போக, அந்தத் துவர்ப்பு நீங்குதற்காகப் பலாப்பழத் தேனைப் பருகுவதாகச் சொல்லுகிற இதனால், முதலில் சாமானிய சாத்திரங்களில் வாய் வைத்துப் பிறகு சிறப்பான சாத்திரங்களில் இன்பமாகப் போது போக்கும் படியைச் சொல்லுவதாக அமைகின்றது.

---

10. திருநெடுந். 14
11. பெரி. திரு. 5.3:4

186

குழகி எங்கள் குழமணன் கொண்டு
கோயின்மை செய்து கன்மமொன் றில்லை
பழகியாம் இருப்போம் பரமேஇத் திருவருள்கள்
அழகி யாரிவ் வுலகுமூன் றுக்கும்
தேவி மைதகு வார்ப லருளர்
கழகம்ஏறேல் நம்பீ! உனக்கும்இளை தேகன்மமே.[12]

[குழகி—லீலா ரசம் கொண்டாடி; குழமணன்—மரப்பாச்சி; கோயின்மை — கேட்பாரற்ற செயல்கள்; கன்மம்—காரியம்; திருஅருள்கள்—ஆசைப் பெருக்கான காரியங்கள்; அழகியார்—அழகிற் சிறந்தவர்கள்; தேவிமை—தேவிகளாக இருக்கும் தன்மை; கழகம்—திரள், கூட்டம்; கன்மம்—செய்கை; இளைதே—இளமைப் பருவத்திற் குரியது[

'மகள் பாசுரம்': தலைவன் தாழ்த்து வரக்கண்ட தலைவி ஊடல் கொண்டுரைத்தலாகிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம். ''வசீகரித்தற்குரிய செயல்களைச் செய்து எங்களுடைய குழமணனை எடுத்துக்கொண்டு மேன்மை தோன்றப் பேசுவதனால் ஒரு பயனும் இல்லை; நாங்கள் முன்னரே இவற்றில் பழகி இருக்கின்றோம்; நீ செய்கின்ற இந்தத் திருவருள்கள் எங்கள் அளவேயோ! இந்த மூன்று உலகங்கட்கும் உம்மோடு தக்க முடிசூடத் தக்கவர்களாகிய அழகினையுடையவர்கள் பலர் உளர்; நம்பீ! எங்கள் கட்டத்தில் ஏறாதே; உனக்கும் இஃது இளமைப் பருவத்திற் குரிய செயலேயாம்'' என்கின்றாள் பராங்குச நாயகி.

'கழகம் ஏறேல் நம்பீ' : நீ எத்தனை பேரைத் தீண்டி வந்திருப்பாயோ தெரியாது; மேல் விழுந்து தீண்டாதே

12. திருவாய் 6.2;6

கொள் என்றவாறு. இவர்கள் 'கழகம் ஏறேல்' என்ற வாறே அவன் செயலற்றவனாய் நின்படியை அநுசந்தித்துப் பட்டர் ஈடுபட்ட படியைக் காட்டுகின்றார்; ''இவ்விடத்தே பட்டர் அருளிச் செய்வது ஒருவார்த்தை உண்டு. அதாவது, சமஸ்த கல்யாண குணாத்மகனாய் உபய விபூதி யுக்தனாய் சர்வாதிகனாய் சர்வ நியந்தாவா[13] யிருக்கின்ற சர்வேசுவரன் நான்கு இடைப் பெண்கள் இருந்த இடத்தே புக்கு அல்லது நிற்க மாட்டாத செல்லாமை விளைய, அவர்கள், 'நீ இங்குப் புகுதாராய் கொல்?' என்ன, விலங்கு இட்டாள போலே பேரவும் திரியவும் மாட்டாதே தடுமாறி நின்றான் என்கிற சௌசீல்யம் தங்களையும் இவர்களையும் ஒழிய ஆர் அறிந்து கொண்டாட வியாசர் முதலாயினோர் எழுதி வைத்துப் போனார்களோ?' என்று அருளிச் செய்வர். 'எல்லாரையும் நியமிக்கிற சர்வேசுவரன் சிலரால் நியமிக்கும்படி எளியனானான் என்றால், 'இது மெய்' என்று கைக்கொள்ளுவாரைக் காண முடியாதன்றோ? சாஸ்திரங்கள் எல்லாம் நியமிக்கிறவன் நியமிக்கப்படுகிற வர்கள் என்று பாகுபடுத்தி ஒருங்க விடா நிற்க, அத்தலை இத்தலையாகச் சொல்லுகின்றதன்றோ இது!''

187

பிணக்கி யாவையும் யாவ ரும்பிழை
யாமல் பேதித்தும் பேதி யாதது,ஓர்
கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்,
இணக்கி யெம்மையெந் தோழி மார்வினை
யாடப் போதுமின் என்னப் போந்தோமை
உணக்கி நீவளைத்தால் என்சொலார்உக வாதவரே! [14]

---

13. சர்வநியந்தா—எல்லாரையும் நியமிக்கிறவன்.

14. திருவாய். 6.2:8

[பிணக்கி—ஒன்றாகச் சேர்த்து; பிழையாமல்—மாறிப் போகாதபடி; தேவயோகி—விலங்கு யோனி முதலிய பேதங்களைப் பண்ணின இடத்தும்; பேதியாதது—அவற்றின் கண் உள்ள குற்றங்கள் சொரூபத்திற்குச் சேதம் வராதபடியான; ஓர் கணக்கில்—ஒப்பற்ற எல்லையில்லாத; ஞானம்—சங்கல்ப ரூப ஞானம்; இணக்கி—இசைவித்து; உணக்கி—நெருக்கி; வளைத்தால்—தகைந்தால்; உகவாதவர்—வேண்டாதவர்]

தலைவன் காலம் தாழ்த்துவரக் கண்ட தலைவி ஊடல் கொண்டு உரைப்பதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். "அழிக்குங் காலத்தில் அசேதநங்களையும் சேதநங்களையும் ஒன்றாகச் சேர்த்து, பின், படைக்குங் காலத்தில் ஓர் ஆன்மாவின் கர்ம பலத்தை மற்றோர் ஆன்மா அநுபவியாதபடி படைத்தும், வேறுபடாததாகிய ஒப்பற்ற எல்லையில்லாத கீர்த்தி வெள்ளத்தினையுடைய கதிர் ஞானத்தினையே திருமேனியாக உடையவனே! எம் தோழிமார் எம்மை இசையச் செய்து விளையாடுவதற்கு வாருங்கோள் என்ன, வந்த எங்களைத் துவளச் செய்து நீ வளைத்தால் விருப்பமில்லாதவர்கள் என்ன சொல்ல மாட்டார்கள்?" என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

'உணக்கி நீ வளைத்தால்': இதனைத் திருவுள்ளம் பற்றி இவன் அவர்களை வளைத்துக் கிடக்கும்போது இவன் மிறுக்கு[15] காரணமாக அவர்கள் போகப் புக்கார்களாக வேண்டும் என்று கூறும் முகத்தால் இவ்வாறு கூறுவர். கிட்டி நின்று இவர்களைச் சில மிறுக்குகளைச் செய்யப் புக்கான்; 'இங்கே இருக்கில் அன்றோ இவை எல்லாம் செய்வது' என்று பார்த்து, ஒருவர் ஒருவராகப் போகப் புக்கார்கள்; 'இதுவோ பார்த்தபடி!' என்று வழியைப்

15. மிறுக்குகள்—நிஷ்டூரமான வார்த்தைகள்.

பற்றி இரு விலங்காகக்[16] கிடந்தான். பூஞ்சோலையாகை யாலே வழி ஓர் அடிப்பாடாய் இருக்குமன்றோ?

ஐதிகம்: இப்பாசுரத்தை நஞ்சீயர் அருளிச் செய்யா நிற்கச் செய்தே, அங்கே இருந்தவரான ஆப்பான் 'இவர்கள் இவனைக் கடந்து போனார்களாகில் செய்வது ஏன்?' என்று கேட்க, 'அது யார் காரியம்? பின்னை இரண்டதா தில்[17] ஒன்று சித்திக்கும் என்று அன்றோ அவன்தான் கிடந்தது!' என்று அருளிச் செய்தார்.

188

கண்டவின்பம் துன்பம்
கலக்கங்களும் தேற்றமுமாய்,
தண்டமும் தன்மையும்
தழலும் நிழலுமாய்
கண்டுகோ டற்கரிய
பெருமானென்னை யாள்வானூர்
தெண்டிரைப் புனல்சூழ்
திருவிண்ணகர் நன்னகரே.[18]

[கண்ட—உலகம் கண்ட; தேற்றம்—தெளிவு; தழல்—வெப்பம்; நிழல்—தட்பம்; ஊர்—திவ்விய தேசம்; தெண்திரை—தெளிந்து அலையெறிகின்ற; நல்நகர்—அழகிய நகர்]

தம்மை வசீகரித்தவன் சர்வேசுவரனே என்று கூறுவ தாக அமைந்த திருவாய்மொழிப் பாசுரம். "அநுபவிக் கின்ற இன்பமும் துன்பமுமாகி, கலக்கமும் தேற்றமுமாகி, சீற்றமும் அருளுமாகி, நெருப்பும் நிழலுமாகிக் கண்டு

16. இரு விலங்கு—பெரு விலங்கு.
17. தகைவுபட்டு நிற்கையாதல், கடந்து போகும் போது தீண்டுதலாதல்.
18. திருவாய். 6.3:2

கொள்வதற்கு அரியவனாகிய பெருமானாகி, என்னை ஆள்கின்றவனுடைய ஊரானது, தெளிந்த அலைகளை யுடைய புனலால் சூழப்பெற்ற திருவிண்ணகரம் என்னும் நல்ல நகரமாகும்'' என்கின்றார் ஆழ்வார்.

ஓர் ஐதிகம்: ஞானிகட்கு எல்லாம் பரம் பொருள் மயமாகவே தோன்றும் என்பதற்கு ஈட்டாசிரியர் காட்டும் ஐதிகம்: ''நல்லாரும் நம்பி ஸ்ரீ சேநாபதிதாசரும் கூடத் திருமலைக்குப் போகா நிற்க, ஸ்ரீ சேநாபதிதாசர் ஒரு சோலையிட்டுத் தூற்றை அடிக்க, அதைக் கண்ட நல்லார், 'அர்த்தகாம நிமித்தமான துவேஷம் இதனோடு இன்றிக்கை இருக்க, ஒரு காரணமும் இல்லாமல் ஈசுவரனுடைய விபூதியை நலிவதே!' என்ற வார்த்தையை நினைப்பது''

189

மண்மிசைப் பெரும்பாரம் நீங்கவோர்
பாரத மாபெ ரும்போர்
பண்ணி, மாயங்கள் செய்து
சேனையைப் பாழ்பட நூற்றிட்டுப்போய்
விண்மி சைத்தன தாம
மேபுக மேவிய சோதிதன்தாள்
நண்ணி நான்வணங் கப்பெற்
றேன்எனக் கார்பிறர் நாயகரே?[19]

[மண்மிசை — பூமியின்மீது; பாரம் — சுமை; மாபெரும்போர் — மகாபாரத யுத்தம்; பண்ணி—உண்டாக்கி; மாயங்கள்—ஆச்சரியச் செயல்கள்; நூற்றிட்டு—முடித்து; நூறுதல்—கொல்லுதல்; விண்மிசை—பரமாகாசத்தில்; மேவிய — பொருந்தின; தர்மம் — தாண

19. திருவாய். 6.4:10

விசேடம்; சோதிதன் — பெருமானுடைய நண்ணி—கிட்டி; நாயகர்—தலைவர்]

'கண்ணனது அவதாரச் செயல்களைப் பேசப் பெற்றமைக்குக் களிப்பதாகக், கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார். ''பூமியின் மேலே பெரிய பாரம் நீங்கும்படி ஒப்பற்ற மிகப் பெரிய பாரதமாகிய போரைச் செய்து ஆச்சரியமான காரியங்களைச் செய்து சேனைகள் பாழ்படும்படியாக மந்திரித்துப் போய்ப் பரமாகாசமான தன்னுடைய வைகுண்ட லோகத்தைச் சென்று அடைந்த பரஞ்சோதியினுடைய திருவடிகளைச் சேர்ந்து நான் வணங்கப் பெற்றேன்; எனக்குத் தலைவர் வேறு யாவர் உளர்?' என்கின்றார்.

'விண்மிசைத் தன தாமமேபுக மேவிய சோதி' : இந்த இடத்தில் ஈட்டில் ஓர் ஐதிகம் காட்டப் பெற்றுள்ளது. அதாவது—நம்பெருமாள் சந்நிதியில் ஒரு பிரம்மோத்சவம் முடிந்த அன்று நாயிறுபோது[20] ஆண்டானும்[21] எம்பாரும் சந்தித்து ''யான் எனது என்னும் செருக்கினால் மலின மாக்கப்பட்ட (மலினம் — குற்றம்)வராயிருப்பார் பத்து கோடி பேர் நடுவே அதி சுகுமாரமான திருமேனியைக் கொண்டு பத்து நாள் எழுந்தருளி, அபாயம் இல்லாமல் புக்கருளப்பெற்றபடி கண்டதே!'' என்று ஒருவரை யொருவர் தண்டன் இட்டுத் தழுவிக் கொண்டார்களாம்' அதை நஞ்சீயர் கண்டிருந்து வெளியிட்டருளினார்.

190

இரங்கி நாடொறும் வாய்வெ ரீஇயிவள்
கண்ண நீர்கள் அலமர
மரங்க ளும்இரங் கும்வ கை'மணி
வண்ண வோ!' என்று கூவுமால்

20. நாயிறுபோது—சூரியன் படுகின்ற மாலை நேரத்தில்.
21. ஆண்டான்—முதலியாண்டான்.

துரங்கம் வாய்பிளந் தானு றைதொலை
 வில்லி மங்கல மென்று,தன்
கரங்கள் கூப்பித் தொழுமவ் வூர்த்திரு
 நாமங் கற்றதற் பின்னையே.[22]

[இரங்கி — நெஞ்சழிந்து; வாய்வெரீஇ — வாய் வெருவி; கண்ணநீர்கள்—கண்ணீர்; அலமர— சுழல; கூவும்—கூப்பிடா நின்றாள்; துரங்கம்— குதிரை; தொலைவில்லி மங்கலம்—நவதிருப் பதிகளில் ஒன்று (இரட்டைத் திருப்பதி); கரங்கள்—கைகள்]

தோழி தாயரை நோக்கித் தலைவியின் நிலைமையைக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் திருத் தாயார், "இவள் நாள்தோறும் இரங்கி வாய் வெருவிக் கண்களிலே நீர் தேங்கும்படியாக மரங்களும் இரங்கும்படி 'மணிவண்ணா!' என்று கூவுகின்றாள்; பேசுதற்குக் கற்றுக் கொண்ட பிறகு, கேசி என்னும் அசுரனது வாயினைப் பிளந்த எம்பெருமான் நித்திய வாசம் செய்கின்ற திருத் தொலைவில்லி மங்கலம் என்று சொல்லித் தன்னுடைய கைகளைக் குவித்துத் தொழுவாள்" என்கின்றாள்.

'மரங்களும் இரங்கும் வகை' என்றது, பகவத் விஷயத் தில் ஈடுபாடில்லாமையாலே அசேதநப் பிராயர்களான அறிவிலிகளும்கூட ஈடுபடும்படியாயிற்று என்கை. சேதநம் என்றும், அசேதநம் என்றும் வேறுபாடு அற அழியும்படி காணும், இவள் வாய்விட்டுக் கூப்பிடும்படி. 'மரங்களும் இரங்கக் கூடுமோ?' என்று எம்பாரைச் சிலர் கேட்டார் களாம். அதற்கு அவர், அருளிச் செய்த விடை: "இத் திருவாய்மொழி அவதரித்த அன்று தொடங்கி பாவ சுத்தி இல்லாத எத்தனை பேர்களுடைய வாயிலே இது புகுந்த தென்று தெரியாது; இங்ஙனே இருக்கச் செய்தே, இயமம் நியமம் முதலிய யோக உறுப்புகளாலே பதஞ் செய்யப்

22. திருவாய். 6 5:9

பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதே இருக்கிற நெஞ்சுகளும் இன்று அழிகிறபடி கண்டால் சம காலத்தில் மரங்கள் இரங்கச் சொல்ல வேண்டுமோ?" என்பது.

"மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்;
மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்."[23]

என்று அவதாரத்தில் திருக்குழல் ஓசையில் பட்ட எல்லாம் இத்துன்ப ஒலியிலே படுமாயின.

191

"உண்ணும் சோறு பருகுநீர்"[24]; தாய்ப் பாசுரம். உள்ளுறைப்பொருளாக அறிய வேண்டியது இது: பெண் பிள்ளையைப் பெற்று வளர்ப்பவள் தாய். அப்பெண் தக்க வயதை அடைந்ததும் பேராண்மைக்கு இருப்பிடமாகவுள்ள தலைவனிடம் கழிபெருங் காதலை உடையவளாகின்றாள். அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேர வேண்டும் என்று பதறுகின்றாள். ஆனால் அவளது பதற்றத்தைத் தடுத்து நிறுத்துகின்றாள் தாய். தலைவனே தலைவி இருக்கும் இடத்திற்கு வர வேண்டும் என்பது நடைபெற வேண்டிய ஒழுங்கு முறை என்றும், அங்ஙனமின்றித் தலைவியே தலைவன் இருக்கும் இடத்திற்கு புறப்படுவது குல மரியாதைக்குச் சிறிதும் பொருந்துவதன்று என்றும் நினைக்கின்றாள் தாய். சித்தோபாயனமான எம்பெரு மானைப் பற்றினவர்கள் பேற்றைத் தாமதித்துப் பெறு தலில் காரணமில்லாமையாலே அதனை விரைவில் பெற வேண்டும் என்கின்ற ஆவலைப் பிறப்பித்து அதனால் படி

---

23. பெரியாழ். திரு. 3.6:10

24. திருவாய். 6.7 (அவதாரிகை).

கடந்து நடக்க வேண்டி வந்த அளவில் இது பிரபந்தர் குடிக் கட்டுப்பாட்டுக்குச் சேராததென்று விலக்கி 'எம் பெருமான் தானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்க வேணும்' என்று சொல்லித் துடிப்பை அடக்கப் பார்க்கின்றவள் தாய். அஃதாவது 'நம: பதத்திற் கூறப்பெற்ற உபாய எண்ணமாகிய (அத்யவசாயமாகிற) பிரஜ்ஞாவஸ்தையைத்[25] தாய் என்பதாகக் கொள்ளல் வேண்டும். இதனை மேலும் விளக்குவது இன்றியமையாததாகின்றது. திருமந்திரத்தின் இரண்டாவது சொல்லாகிய 'நம:' என்பது இந்நிலையைக் குறிக்கின்றது. இச் சொல்லை ந+ம: என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'ம' என்பது வடமொழியில் 'எனக்கு உரியவன்' என்றும், 'ந' என்பது 'அல்லன்' என்றும் பொருள்படுகின்றன. அஃதாவது, 'எனக்கு நான் உரியவன் அல்லன்' என்ற பொருள் கிடைக்கின்றது. இதனால் 'நான் பிறனுக்கு (ஈசுவரனுக்கு) உரியவன்' என்பது பெறப்படுகின்றது. இம்முறையில் இச்சொல் ஈசுவர பாரதந்திரியத்தைத் தெரிவிக்கின்றது. இன்னும் விளக்கிக் கூறினால் இச்சொல் ஞானத்தினால் ஏற்படும் சுதந்திரத் தன்மையை ஒழிக்கின்றது. அதன் காரணமாக ஏற்படும் 'தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியும்' என்ற எண்ணத்தையும் நீக்குகின்றது. இனி, இவனைக் காத்து இரட்சிப்பவன் ஈசுவரனே ஆகின்றான் என்ற துணிவு பிறக்கின்றது; அஃதாவது, ஈசுவரனே உபாயம் என்று பொருள் கிடைக்கின்றது இந்த மன நிலைதான் 'தாய்' என்று குறிக்கப்பெறுகின்றது. திருவாய்மொழியில் தாய் பாவனையில் பேசின ஏழு பதிகங்களும் ஈசுவரபாரதந்திரியத்தையும், அவனே உபாயமாகின்றான் என்ற கருத்தையும் தெரிவிக்கின்றன. ஆழ்வார்க்குப் பேற்றில் 'பதற்றம்' விளைந்தமை ஒரு பக்கத்திலும் அவனுடைய பேற்றுக்கு 'நாமோ பதற்றப்படுவது?' என்று

25. பிரஜ்ஞாவஸ்தை—மூன்று காலத்தையும் அறியும் அறிவின் நிலை; அவஸ்தை—நிலை.

ஆறி அடங்கியிருத்தல் பிராப்தம் என்று அத்தியவசாயம் செல்லுகின்றமை ஒரு பக்கத்திலும் ஆக இவ்விரண்டும் கலந்து பரிமாறுகின்றமை இங்கு இத் திருவாய்மொழியில் தெரிகின்றது.

திருமங்கையாழ்வாருடைய 'கள்வன் கொல்'[26] என்ற திருமொழி ஒருபுடை இத்திருவாய் மொழியோடு ஒத்திருக்கும். வயலாளி மணவாளன் பரகால நாயகியின் கையைப் பிடித்துக் கொண்டு போகின்றபடியைக் கண்ணாலே கண்டு தாய் சொல்வதாக அமைந்தது அங்கு. இங்கு அவ்வாறின்றி மகளுடைய தனிப்போக்கைத் தாய் சொல்வதாக அமைந்துள்ளது.

ஆளவந்தார்கோஷ்டியில் 'உண்ணும்சோற்றில்' திருவாய் 6.7, பிராட்டிக்கு அஞ்சவேண்டுவது அதிகமோ, 'கள்வன் கொல்லில்' (பரிதிரு 3.7) பிராட்டிக்கு அஞ்ச வேண்டுவது அதிகமோ? என்று ஆய்வு நிகழ்ந்ததாம். 'உண்ணும் சோற்றில்' மகள் தனியே போனமை. சொல்லுகின்றது; 'கள்வன் கொல்லில்' இருவராய்ப் போனமை சொல்லுகின்றது. இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெரிய வேண்டுவது அத்தனை அவசியமன்றே; தனியே போனவளுக்கன்றோ அதிகம் வயிறெரிய வேண்டுவது'' என்று அங்கிருந்த முதலிகள் சிலர் சொன்னார்களாம். அப்போது ஆளவந்தார், ''அங்ஙனன்று காண்மின்; தனியே போனவளைப்பற்றி ஒரு பயமும் இல்லை; இருவராய்ப் போனவிடத்திற்குத்தான் வயிறெரிய வேண்டும்'' என்று அருளிச் செய்தாராம். இதன்கருத்து: தனியே போனவள் தன்னுடைய இலட்சியமான இடத்திற்கு அபாயமின்றிச் சென்று சேர்ந்திடுவாள். இருவரும் ஒருவருக் கொருவர் வியாமோகத்திற்கு ஊற்றுவாயாகையாலே ஒருவரால் ஒருவர் மயங்கி விழுந்து என்னாகுமோ? என்று வயிறெரிய வேண்டிற்றாகும் என்பதாம்.

26, பெரி. திரு 3.7

ஈடு ; "ஆனாலும் எங்கேனும் போகிலும் இருவராயல்லதிராது அங்கு; தனியே போனவிவள் என்படுகின்றாளோவென்று மிகவும் நொந்து கூப்பிடுகின்றாள் இவளுடைய திருத்தாயார்."

192

உண்ணும் சோறு பருகுநீர்
  தின்னும்வெற் றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்
  றேகண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்
  கவனூர் வினவி
திண்ணம் என்னிள மான்புகு
  மூர்திருக் கோளூரே[27]

[மல்கி—பெருகி; மண்ணினுள் — பூமண்டலத்துள்ளே; சீர்—சிறப்பு; வினவி—விசாரித்து; புகும் ஊர்—சேர்ந்த இடம்; திண்ணம் உறுதி]

தாய்ப்பாசுரம்: தலைவனது நகர்நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒருபாசுரம் இது. இதில், "உண்ணுகின்ற சோறும், பருகுகின்ற நீரும் தின்னுகின்ற வெற்றிலையும் எல்லாம் கண்ணனாகிய எம்பெருமான் என்று என்றே கண்கள் நீராலே நிறைய, பூமியிலே அவனுடைய கல்யாண குணங்களையும் வளத்தால் மிக்கவனான எம்பெருமானுடைய திவ்விய தேசத்தையும் கேட்டுக்கொண்டு என்னுடைய இளமான் புகும் ஊர் திருக்கோளூர் என்னும் திவ்விய தேசமாகும்; இது நிச்சயம்" என்று திருத் தாயார் கூறுகின்றாள்.

27. திருவாய் 6. 7: 1

'கண்கள் நீர்மல்கி': இவள் மயர்வற மதிநலம் அருளப் பெற்று உலகத்தையெல்லாம் திருத்துகையாலே இவள் திருத்தின நாடெல்லாம் இவள் கண்ணும் கண்ணீருமாக இருக்கும் இருப்பையே தங்களுக்குத் தாரக, போஷக, போக்கியங்களாக நினைத்திருப்பர்கள் என்னும் இடம் தோற்ற இவர்களுடைய உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் இருக்கிறபடி. இவள் முகத்தாலே காணும் இவர்களுக்கு ஜீவனம். தன் ஜீவனத்துக்குப் போகிறவள் எங்கள் ஜீவனத்தைக் கொண்டு போக வேணுமாமோ? ஒருவன் பகவத் குணங்களிலே ஈடுபட்டவனாய்க் கண்ணும் கண்ணீருமாயிருக்க, அவனைக் கண்டு கொண்டிருக்கவன்றோ அடுப்பது. 'சேயரிக்கண், அழுநீர் துளும்ப அலமருகின்றவாழியரோ'[28] என்று சேதநராகில் மங்களாசானம் செய்யக் கடவது. கண்ணும் கண்ணீருமாய் இருக்கிற இருப்பைக் கண்டு கொண்டிருத்தலே புருஷார்த்தம் என்கைக்கு ஈட்டாசிரியர் ஓர் ஐதிகம் காட்டுகின்றார்: "பிள்ளைத்திருநறையூர் அரையரோடே மூன்று திருவாய் மொழி கேட்டேன்; அதில் எனக்கு ஒருவார்த்தையும் போகாது; ஒரு திருவாய்மொழியைச் சொன்னவுடனே அவர் சிதிலராய்க் கண்ணும் கண்ணீருமாய் இருக்கும் இருப்பை நினைத்திருப்பன்" என்று அருளிச் செய்வர் நஞ்சீயர்.

ஈசுவரனே தாரகபோஷக போக்கியங்கள் எல்லாமாக இருப்பான் என்பதற்கும் ஓர் ஐதிகம் காட்டுவர். அனந்தாழ்வான் சோழ குழாந்தகனிலே பயிர்த்தொழில் செய்து கொண்டிருப்பவனான ஒரு ஸ்ரீ வைணவனைக் கண்டு "உம்முடைய ஊர் எது?" என்று கேட்க, அதற்கவன், 'என்னுடைய ஊர் திருக்கோளூர்' 'என்ன ஆழிவான், 'அங்கு நின்றும் போந்தது என்?' என்று மீண்டும் கேட்க, அவனும் 'தேகயாத்திரை நடவாமை போந்தேன்' என்ன,

28. திருவிருத். 2

அதைக் கேட்ட ஆழ்வான் 'அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்க மாற்றிலையோ? நிலைநின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயேயன்றோ!' என்றானாம்.

'புகுமூர்' இந்த இடத்து ஈடு; ''காட்டுத் தீயிலே அகப் பட்டவன் பொய்கையும் பொழிலும் தேடிப் புகுமாப் போலே சம்சாரமாகிற பாலை நிலத்தில் காட்டுத்தீயிலே அகப்பட்டவனுக்கு இகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும் போலேயிறே. புகுமூர் என்கையாலே புக்கார் புகுமூர் அன்றென்கை''

எம்பெருமானார் திவ்விய தேச யாத்திரையாக தெற்கே எழுந்தருளுகையில் திருக்கோளூர் எழுந்தருளா நின்றார்; அப்போது அங்கு நின்றும் வெளியேறுகின்றளோர் அம்மை யாரைக்கண்டு 'எங்கு நின்றும் புறப்பட்டபடி?' என்று கேட்க, அதற்கவள், 'திருக்கோளூரில் நின்றும்' என்று மறு மொழிகூற, அதுகேட்டு எம்பெருமானார், 'அவ்வூரில் புக்க பெண்களும் போகக் கடவராய் இருப்பார்காளா?" என்று அருளிச் செய்தாராம். 'புகுமூர்' என்ற சந்தையின் சுவடறிந்து அருளிச் செய்தபடி இது. 'என் இளமான் மண்ணினுள் புகும் ஊர் திருக்கோளூரே... திண்ணம்': இவள் போய்ப்புகும் ஊர் திருக்கோளூரே; இது நிச்சயம். 'எந்த ஊர் சென்றாள்?' என்பதனை அறியாத இவள் 'திண்ணம்' என்கிறது எங்ஙனே? என்ன, அதற்கு விடையாக, 'இவ்வூரில் பெண் பிள்ளைகள் காணாவிட்டால் கோயி லுக்குள் தேடுமத்தனை அன்றோ?'

193

மேவி நைந்து நைந்துவிளை
யாடலுற்றாள் என்சிறுத்
தேவி; போய், இனித் தன்திரு
மால்திருக் கோளூரில்

பூமியல் பொழிலும் தடமும்
அவன்கோயி லுங்கண்டு
ஆவியுள் குளிர. எங்ஙனே
யுகக்குங்கொல் இனறே?[28]

[மேவி—ஈடுபட்டு; நைந்து— இளைத்து; விளை யாடல் உறாள்—விளையாட்டில் பொருந்தா தவளாய்; சிறுதேவி—மகள்; போய்—சென்று; பொழில் — சோலை: தடம் — தடாகம்: கோயில்—சந்நிதி; கண்டு—பார்த்து; ஆவி— நெஞ்சு; உகக்கும் கொல்—களித்திருப்பாள்]

தாய்ப்பாசுரம். தலைவனது நகர் நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. இதில் திருத் தாயார், "என்னுடைய இளமை பொருந்திய பெண்ணானவள், அவனை மனத்தாலே அடைந்து அதனாலே மனமும் உடலும் உருக்குலைந்து விளையாடு தலைச் செய்யாள்; இனிச் சென்று, தனது திருமால் எழுந் தருளியிருக்கின்ற திருக்கோளூர் என்னும் திவ்விய தேசத்தில் இருக்கின்ற பூக்கள் நிறைந்த சோலைகளையும் குளங்களையும் அவனுடைய திருக்கோயிலையும் உயிர் குளிரும்படியாகக் கண்டு இன்று எப்படி மகிழ்கின்றாளோ?' என்கின்றாள்.

'கண்டு' இங்கே இருந்து மானச அநுபவமத்திரமே யாய்க் கிலேசப் பட்டவள் கண்ணாரக் கண்டு. அவள் கோயிலைக் கண்களாலே காண்கையே புருஷார்த்தம் என்பதற்கு இரண்டு ஐதிகங்கள் காட்டுகின்றார் சட்டாசிரியர்.

ஐதிகம் ஒன்று: 'பிள்ளை திருநறையூர் அரையரும் பட்டருமாக உள்ளே வலம்வராநிற்க, இட்ட அடி மாறி

29. திருவாய் 6. 7: 5

இடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப்போலே பார்த்து வாழ்ந்து கொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டு அநுபவித்தேன்' என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

'ஐதிகம் இரண்டு : 'ஆச்சானும் ஆண்டானுமாகக்[30] கிழக்கே நடக்கின்றபோது, திருப்பேர் நகருக்குக் கிழக்குப் போகவும் மாட்டாதே, ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே, திருப்பேர் நகரான் கோயிலைப் பார்ததுக் கொண்டு இருந்தார்களாம்'.

'ஆவி உள்குளிர': இவ்விடத்தைப் பட்டர் அருளிச் செய்யா நிற்கச் செய்தே மேல்எழ அருளிச் செய்தாராய், அங்கே இருந்தவரான சீராமப்பிள்ளை[31] "சீயா, எம்பார் அருளிச் செய்யும்போது 'ஆவி உள்குளிர' என்று முகந்துகொண்டு அருளிச் செய்யும்படி கேட்டறிகை இல்லையோ?" என்று அருளிச்செய்தார். 'ஆவி உள் குளிர' என்று சந்தையை மேலெழுந்த வாரியாகச் சொல்லி

---

30. ஆச்சான் —கிடாம்பி ஆச்சான்: ஆண்டான்— முதலியாண்டான்.

31. சீராமப்பிள்ளை— பட்டருடைய திருத்தம்பியார். 'சீயர்' என்பது பூஜ்யவார்த்தை. "திருத்திய குணத்தினால் இறைஞ்சிச்சீய என்று" மேருமந்தர புராணத்து வரும் தொடருள் (638) இப்பொருளில் இச்சொல் வழங்குதல் ஈண்டு அறியத்தகும். இப்பெயர் வைணவ சந்நியாசிகட்குச் சிறப்புப் பெயராக வழங்குகின்றது. ஆனால், முற்காலத்தே இப்பெயர் சிவாசாரியரான பிராமணர்கட்கும் பயின்று வந்தது என்பது, "சோளகி மடத்து ஜீயர் சந்தானம் புஷ்பகிரிஜீயர், ஜீயர் விசுவேசுவர சிவாசாரியர்" என்ற சாசனத் தொடர்களால் தெளிவாம்.)M.E.R. 564 of 1916 S.I. I. vi —p. 193, புதுக்கோட்டைச்சீமைச்சாசனத் தொகுதி பக்.111). எம்பார்— பட்டருடைய ஆசாரியர்; எம்பெருமானாருடைய சீடர்.

விடாமல் 'உள்குளிர' என்று ஆழ்ந்து ஊற்றத்தோடு உறைப்பாக அநுசந்திக்க வேண்டுமென்று ஆசாரியர்கள் சிட்சிப்பார்கள்,

194

காரியம் நலலகை ளவைகாணில்
   என் கண்ண னுக்கென்று
ஈரியா யிருப்பா ளிதெல்லாம்
   கிடக்க இனிப்போய்
சேரி பல்பழி தூயிரைப்பத்
   திருக்கோ ளூர்க்கே
நேரிழை நடந்தா ளெம்மை
   யொன்றும் நினைத்திலளே.33

[காரியம்—பொருள்கள்கள்; ஈரியாய்—அன்புள்ள வளாய்; சேரி—தெரு; தூவாய்—தூவி, தூற்றி; நேரிழை—நேரிய ஆபரணங்களை அணிந்த வள் (பெண்)]

தாய் பாசுரம் : தலைவனது நகர் நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குவதாக அமைந்த திருவாய் மொழியிலுள்ள பாசுரம் இது. ''என் நேரிழை, சிறந்த பொருள்களைக் கண்டால் என் கண்ணபிரானுக்கு என்று சொல்லிக்கொண்டு அன்புள்ளவாய் இருப்பாள்; இவை எல்லாம் கிடக்க, சேரியிலுள்ளார் எல்லாரும் பலவகைப் பட்ட பழிகளைத் தூற்றி இரைக்கும்படியாக இனிச் சென்று திருக்கோளூர்க்கே நடந்தாள்; என்னைச் சிறிதும் நினைத்தாள் இல்லை'' என்று திருத்தாயார் கூறுகின்றாள்.

---

32. முகந்து கொண்டு-மண்டி அநுபவித்துக்கொண்டு.

33. திருவாய். 6.7:9

'நேரிழை நடந்தாள்': இழை என்று ஆபரணத்திற்குப் பெயர். நேர்த்தியான ஆபரணங்களை அணிந்துள்ள என் மகள் மெல்லிய அடிகளைக் கொண்டு நடந்தாளே! தன் மகளின் சௌகுமார்யத்தை அநுசந்தித்திருக்கும் திருத் தாயார் 'ஐயோ! நடந்தாளே!' என்கின்றாள். நடந்து செல்லுகிறபோதே முன்னும் பின்னும் ஆபரண ஸந்நிவேச ஸௌந்தர்யாதிசயத்தைத்தான் காணப்பெறாத இழவும் தொனிக்கும். 'நடந்தாள்' என்கிற சொல் சம்பிரதாயத் தில் 'எழுந்தருளினாள்' என்பதற்குப் பரியாயமாக வழங் கும். ஆனதுபற்றியே ஈட்டில் அருளிச் செய்தது பாரீர்! "(நடந்தாள்) தன் பெண்பிள்ளையேயாகிலும் 'திருக் கோளூரிலே போக' என்று நாலடி புறப்பட்ட இவளை இங்ஙன் அல்லது சொல்ல வொண்ணாதே அன்றோ? தன் மகளை எங்ஙனே சினக்க நினைத்திருக்கிறாள்தான்! வயிற்றில் பிறக்குவுமாம், சிஷ்யர்களாகவுமாம்; பகவத் விஷயத்தில் தொடர்புடையவர்கள் உத்தேசியராமித் தனை.

இவ்விடத்தில் ஈட்டிலுள்ள ஓர் ஐதிகம்: "ஒரு நாள் நம்பிள்ளையை, சீயர், கோஷ்டியிலே வைத்துப் போரக் கொண்டாடியருளி 'தன் சிஷ்யனைத் தான் கொண்டாடா நின்றான்' என்றிராதே கொள்ளர்மின்!; 'கணபுரம் கை தொழும், பிள்ளையைப் பிள்ளை என்று எண்ணப் பெறு வரே'34 என்று பண்டு சொன்னாரும் உளர் காணுங்கோள்" என்று அருளிச் செய்தார்.

மற்றோர் ஐதிகம்: "அம்முணி ஆழ்வான் தன் சிஷ்யனைத் தான் தெண்டனிடா நிற்குமாம்; 'இது என்?' என்று கேட்க, 'அல்லாத வைஷ்ணவர்களை ஒழுக்கத்தாலே அறிய வேணும்; இவர் நான் அறிய வைணவர் என்று ஆதரிப்பன்" என்றான்."

34. பெரி. திரு. 8.2:9

195

வைத்த மாநிதி யாம்மது
சூதனை யேயலற்றி
கொத்தலர் பொழில்சூழ் குருகூர்ச்
சடகோபன் சொன்ன
பத்து நூற்றுள் இப்பத்து
அவன்சேர்த்திருக் கோளூர்க்கே
சித்தம் வைத்துரைப் பார்திகழ்
பொன்னுல காள்வாரே.[35]

[வைத்தமாநிதி—சேமித்து வைத்த மகாநிதி; அலற்றி—வெருவி: பொழில்—சோலை; பத்து நூறு—ஆயிரம்; அவன் சேர்—அவன் எழுந்தருளி யிருக்கின்ற; சித்தம்—மனம்; திகழ்—விளங்குகின்ற; பொன் உலகு—பரம பதம்.]

மகள் பாசுரத்தில் ! ஆழ்வார் தானான தன்மையில் பேசி இப்பதிகம் ஓதுவார் அடையும் பயனைக் கூறித் தலைக்கட்டுவது இப்பாசுரம் : "சேமித்து வைத்த சேம நிதி போன்ற மதுசூதனையே பற்றி, பூங்கொத்துகள் மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த சடகோபராலே அலற்றி அருளிச்செய்யப்பெற்ற பத்து நூற்றுள் இந்தப் பத்துப் பாசுரங்களையும் அவன் சேர்ந்திருக்கின்ற திருக்கோளூரிலே சித்தத்தை வைத்து உரைப்பவர்கள் விளங்குகின்ற பரமபதத்தை ஆள்வார்கள்" என்கின்றார் ஆழ்வார்.

35: திருவாய். 6.7:11

'வைத்தமா நிதி': "எய்ப்பினில் வைப்பினைக், காசினை மணியை"[36] என்று திருமங்கை மன்னன் பணிப்பதுபோல், தளர்ந்தார் தாவளமாய், எய்ப்பினில் வைப்பாய், 'உண்டு' என்ன உயிர் நிற்கும்படியாய், உடையவன் காலிலே எல்லாரும் விழும்படியாய், உடையவனுக்கு அற விட்டு ஜீவிக்கலாய், 'அறவிட்டு ஜீவித்தான்' என்று ஏசாத படியாய், அவன் தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதுமாய்,[37] உடையவனுக்கு ஒன்றுக்கும் கரைய வேண்டாத படியாய், எல்லாம் தன்னைக் கொண்டே கொள்ளலாய், எல்லா ரசங்களும் போகங்களும் தன்னைக் கொண்டே கொள்ளலாய், இந்தவிதமான குணங்களையுடைத்தா யிருக்கையைப் பற்ற 'நிதி' என்கிறது. 'மாநிதி' என்றது, அழியாநிதி என்றபடியாய், அத்தால் தன்னைக் கொண்டே எல்லாம் கொள்ளா நின்றால் தனக்கு ஒரு குறை அற்று இருக்கை. அல்லா நிதி மாண்டு நிற்குமே.

நிதியும் வைத்தமா நிதியும்: இந்த இரண்டும்பற்றிய சிந்தனையோட்டம்: புதைத்து வைக்கப்பெறும் பொருள் 'நிதி' எனப்படும். தைத்திரீய உபநிடதத்தினால் எம்பெருமான் நிதியாக அறியப்படுவன். நிலத்தினுள் புதைத்து வைத்து ஆளவேண்டியதா யிருக்கும் நாட்டிலுள்ள நிதி; எம்பெருமானாகின்ற நிதி அங்ஙனமின்றி நெஞ்சிலே புதைத்து ஆளத் தக்கது என்ற வேற்றுமை கண்டு மகிழத் தக்கது.

நிதியானது தன்னை யடைந்தவர்களை இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது; எந்த நேரத்தில் யார் கொள்ளை கொள்வரோ என்ற அச்சத்தால் துஞ்சா திருப்பர் நிதியுடையார். எம்பெருமானும் அப்படியே;

---

36. பெரி. திரு. 7.10:4 (திருக்கண்ணமங்கை பற்றிய பாசுரம்.

37. 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்' என்பது குறள் (குறள்—751)

'கண்ணாரக் கண்டு, கழிவதோர் காதல் உற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே'[38]. காண்பதற்கு முன்பும் உறக்கம் இல்லை; கண்டாலும் காதல் மிகுதியால் உறங்குவதில்லை; நிதியானது 'சித்தாஞ்சனம்' அணிந்த சில பாக்கிய சாலிகட்கே கிடைக்கும்; எம்பெருமானும் 'பக்தி சித்தாஞ்சனம்' பெற்ற ஆழ்வார்கள் போன்ற சில பாக்கியசாலிகட்கே கிடைப்பன்.

நிதியுடையவன் மார்பு நெறிப்பன்; எம்பெருமானைக் கைக்கொண்டவர்களும் 'எனக்கு ஆரும் நிகரில்லையே'[39] 'மாறுளதோ இம் மண்ணின் மிசையே' [40] 'இல்லையெனக் கெதிரில்லை யெனக், கெதிரில்லையெனக் கெதிரே'[41] என்று செருக்கிப் பேசுவார்கள். நிதி படைத்தவனை உலகமெல்லாம் போற்றிப் புகழும். எம்பெருமானைக் கைக்கொண்டவர்களையும் அறிஞர் புகழ்வர்.

நிதியை இழந்தவன் கதறி யழுவன்; எம்பெருமானை இழந்தவனும் அப்படியே. சீராமனாகிய வைத்தமா நிதியை இழந்த பரதாழ்வான் சபையில் கதறி யழுதானன்றோ? 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி, அழுதேன்'42 'இன்பத்தை இழந்த பாவியேன் என தாவி நில்லாதே'43 'எழில்கொள் நின் திருக்கண்ணின் நோக்கந் தன்னையும் இழந்தேன் இழந்தேன் இழந்தேன் இழந்தேனே'44, ''உன்னைக் காண்பான் நான் அலம்பு ஆய் ஆகாயத்தை நோக்கி யழுவன்'[45], 'என் சொல்லிப் புலம்பு

38. திருவிருத். 97.
39. இராமா. நூற். 47
40. திருவாய் 6.4;9
41. பெருந்தொகை—1838.
42. முதல். திருவந். 16
43. பெரு. திரு. 7:4
44: ஷை. 7:7
45. திருவாய். 3,8:4

வனே'[46] என்று இப்படி யெல்லாம் கதறி யழுவார்கள். எம்பெருமானுடைய சிந்தனையை இழந்து ஒரு கணப் பொழுது கழியப் பெற்றாலும் கள்வர் எல்லாச் சொத்து களையும் கொள்ளை கொண்டால் எப்படிக் கதறி யழக் கூடுமோ அப்படிக் கதறி அழவேண்டும் என்பர்.

196

பொன்னுல காளீரோ
புவனிமுழு தாளீரோ
நன்னலப் புள்ளினங்காள்
வினையாட்டியேன் நானிரந்தேன்
முன்னுல கங்களெல்லாம்
படைத்தமுகில் வண்ணன் கண்ணன்
என்னலங் கொண்டபிரான்
றனக்கென்நிலை மையுரைத்தே![47]

மகள் பாசுரம் : திருநாடு முதலியவற்றில் தலைமகள் பறவைகளைத் தூதுவிடுவதாக அமைந்த திருவாய்மொழி யில் முதல் பாசுரம். இதில், "சிறந்த குணங்களையுடைய பறவைக் கூட்டங்களே! தீவினையேனாகிய நான் உங்களை இரக்கின்றேன்; ஆதிகாலத்தில் எல்லா உலகங்களையும் படைத்த முகில்வண்ணனும் கண்ணபிரானும் என்னுடைய நலத்தையெல்லாம் கொண்ட உபகாரகனுமான எம்பெரு மானுக்கு, என்னுடைய நிலைமையைச் சொல்லுங்கோள்; அவ்வாறு சொல்லி, நீங்கள் செய்த உதவிக்குக் கைம் மாறாகப் பரமபதத்தையும் மற்றுமுள்ள எல்லா உலகங் களையும் நான் கொடுக்க நீங்கள் ஆளுங்கோள்" என்கின் றாள் பராங்குச நாயகி.

46. திருவிருத். ௪6-
47. திருவாய். 6.8:1

பொன்னுலகு ஆளீரோ : எம்பெருமான் திறத்தில் புருஷகாரக் கிருத்தியம் பண்ணுபவர்களுக்கு உபய விபூதியையும் பரிசளித்தாலும் போதாது என்கின்ற சாஸ்திரார்த்தம் இப்பாசுரத்தில் தெளிவாகின்றது. ஈசுவரனுக்குரியதான உலகங்களைக் கொடுப்பதற்கு இவளுக்குப் பிராப்தி உண்டோ? என்ன, 'உண்டு' என்று திருவுள்ளம் பற்றி, இதற்கு மூன்று வகையாக விடை அருளிச் செய்கின்றார்.

(1) ஈசுவரனுடைய விபூதியானது பிரிவு நிலையில் அவனையும் தன்னையும் சேர்த்தார்க்குப் பரிசிலாகக் கண்டது என்று இருக்கின்றாள். இது முதல் விடை.

(2) இரண்டு விபூதிகளும் ஒரு மிதுனத்திற்கு அடிமையன்றோ? இது இரண்டாவது விடை.

(3) காதலனைப் பிரிந்து சேர்ப்பாரைத் தேடித் திரிகின்ற இவள், சேர்ப்பிப்பார்க்கு இரண்டு உலகங்களையும் கொடுக்கிறாள் அன்றோ, அவனை நினைத்திருந்த கனம். இது மூன்றாவது விடை.

வினையாட்டியேன் நான் இரந்தேன் : ஆழ்வார் நாயகி தூது செல்ல வேண்டும் என்று இரக்கின்றாள் அல்லள்; 'உபய விபூதியையும் உங்களுக்கு நான் கொடுக்க நீங்கள் அவற்றை ஆள வேண்டும்' என்கின்றாள். எம்பெருமானார் கோஷ்டியில் ஓர் ஆராய்ச்சி செய்தார்களாம்: இவள் உபய விபூதியையும் கொடுத்து விட்டாளாகில் அவன் வந்தால் தானும் அவளும் எங்கிருப்பதென்று. அப்பொழுது அனந்தாழ்வான் பணித்தாராம்—இக்குருவி காட்டின இடத்தே என்று. இரசிகர்களின் சங்கையும் சமாதானமும் அநுபவிக்கத்தக்கனவா யிருக்கும்.

தன்னையும் தன்னுடைமையையும் இவர் இட்ட வழக்காக்கி இவர்க்கு அவன் பரதந்தரனாயிருக்கையாலே,

இவர் கொடுக்கலாம் என்னுமதனை ஓர் ஐதிக முகத்தால் விளங்குகின்றார். இஃது ஐதிகம் : அருளாளப் பெருமாள் எம்பெருமானார் நோவிலே, பிள்ளை உறங்கா வில்லி தாசரைக் கொண்டு ஆழ்வான் புக, 'ஆழ்வான் செய்த நெஞ்சாறல் ஆறுவது ஆளவந்தார் ஸ்ரீபாதத்து ஏறப் போனால் அன்றோ' என்ற வார்த்தையை நினைப்பது.[48]

197

என்மின்னு நூல்மார்வன்
 என்கரும்பெரு மானென்கண்ணன்
தன்மன்னு நீள்கழல்மேல்
 தண்துழாய்நமக் கன்றிநல்கான்
கன்மின்கள் என்றும்மையான்
 கற்பியாவைத்த மாற்றம்சொல்லி
சென்மின்கள் தீவினையேன்
 வளர்த்தசிறு பூவைகளே.[49]

---

48. அருளாளப் பெருமாள் எம்பெருமானார், கூரத்தாழ்வான், பிள்ளை உறங்கா வில்லிதாசர் இம்மூவரும் எம்பெருமானார்க்கு மாணாக்கர்கள். 'ஆழ்வான் செய்த நெஞ்சாறல்' என்றது, கூரத்தாழ்வானுக்குப் பரமபதத்தைக் கொடுக்கும் சக்தி இருந்தும், அருளாளப் பெருமாள் எம்பெருமானார்க்கு அதனைக் கொடாமல், அவர் படும் துன்பத்தை அவர் கண்டு கொண்டிருந்தமையால் வந்த மனோ துக்கம் என்றபடி. தம்முடைய ஆசாரியரான எம்பெருமானார் இங்கே எழுந்தருளியிருப்பதனால் 'ஆளவந்தார் ஸ்ரீபாதத்து ஏறப் போனால்' என்கின்றார். இப்படிச் சொல்வதாவது 'பரமபதத்தை அடைதல்' என்பதாகும்.

49. திருவாய். 6.8;6

[மின்னு நூல்—பூணூல்; நீள்கழல்—நீண்ட திருவடிகள்; மன்னு—பொருந்தியிருக்கின்ற, கற்மின்கள்—பயிற்சி செய்யுங்கள்; மாற்றம்—பாசுரங்கள்; சென்மின்கள்—செல்லுங்கள்.]

மகள் பாசுரம்: திருநாடு முதலியவற்றிற்குத் தலைமகள் பறவைகளைத் தூது விடுவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். "தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே! என் மின்னு நூல்மார்பன், என் கரும் பெருமான் என் கண்ணன் தன்னுடைய நீண்ட திருவடிகளின் மேலே பொருந்தியிருக்கின்ற குளிர்ந்த திருத்துழாயினை நமக்கு அன்றிக்கொடான்; 'கற்றுக் கொள்ளுங்கோள்' என்று உங்களை யான் கற்பித்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு செல்லுங்கோள்" என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

'தன்நீள் கழல்மேல் மன்னு தண்துழாய் நமக்கு அன்றி நல்கான்': இனிமை அளவிறந்த திருவடிகளிலே பொருந்திச் சிரமத்தைப் போக்கக் கூடிய திருத்துழாயை எவ்வகையிலும் பிறர்க்கு ஆக்கான். 'அடியார்க்குப் பரதந்திரப்பட்டவன்' என்பதற்குக் காட்டும் சம்வாதம்: "ஓ நீண்ட கையையுடைய அநுமனே, மகாத்மாவாகிய ஸ்ரீராமனுக்கும் அவருடைய தம்பிமாருக்கும் அந்த அரச குலத்திற்கும் பிராணனானது என் அதீனமாக இருக்கிறது"[50] என்றாள் என்றது என் சொல்லியவாறோ எனின்: தம்மையும் தம் உடைமையையும் எனக்கு ஆக்கியவர் என்பதனைக் கூறியபடி. இதுதான் தன் சுபாவம் கொண்டு சொல்லுகிறாள் அல்லள்; அவருடைய சுபாவ அநுசந்தானத்தாலே சொல்லுகின்றாள். அவருடைய சுபாவமாவது, கிருபையும் காதலும்.

50. ஸ்ரீ ராமா. சுந். 37:57.

அடியார்க்குக் கிருபையாலே பவ்யனாக இருப்பான் என்பதற்குக் காட்டும் சம்வாதம்: "ஓ வானரங்கட்குத் தலைவனான சுக்கிரீவனே! அந்தப் புறாவானது தன் மனைவியை அபகரித்தவனைத் தன்னைக் கொடுத்துக் காத்தது; என்னைப் போன்றவர்கள் சரணாகதி செய்கிறவனைக் கைக்கொள்ள வேணும் என்பது சொல்லவும்வேணுமோ?"[51] என்ற இடத்தில் சொல்லுவது ஒரு வார்த்தை உண்டு. அது: அருளாளப் பெருமாள் எம்பெருமானாருடைய அந்திம தசையிலே, 'திருவுள்ளத்தில் ஓடுகிறது என்?' என்ன: 'ஒரு பறவை பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தியபடி என்! என்று கிடந்தேன் என்றார்' என்பது. இதற்குக் கருத்தாக நம் பிள்ளை அருளிச் செய்யும் வார்த்தை: 'நாம் பண்ணின சரணாகதி ஆகையாலே, பலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது;[52] இனி சரண்யன் நீர்மையின் ஏற்றத்தாலே நமக்கு ஒரு குறை இல்லை என்கிறது' என்பது. அதாவது, வேடுவனது சரணாகதி ஆநுகூல்யாதிகளால் அன்றிக்கே சரண்யமான புறாவினது குணாதிக்யத்தாலே பலம் சித்தித்து போன்று, நம்முடைய ஆநுகூல்ய சங்கல்பாதிகளன்றிக்கே சரண்யனான சர்வேசுவரனுடைய குணாதிக்யத்தாலே பலிக்கும் என்பது.

'பேடையைப் பிடித்துத் தன்னை
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றோ?'

—கம்பரா. யுத்த. வீடணன் அடைக்-112

---

51. ஸ்ரீ ராமா. யுத்த. 18:25. மேலும்,
52. அவ்யபிசாரியாக மாட்டாது — பலத்தோடே கூட்டுவிக்க மாட்டாது.

'தீவினையேன் வளர்த்த' என்பதற்கு நெஞ்சைத் தொடும்படியான (மர்மஸ்பர்ஸியான) பொருளை நம் பிள்ளை வெளியிட்டருள்வதைக் காணீர்: ''என்னுடைய பாபம் இருந்தபடி பாருங்கோள்; அவனும் நானும் கூட விருந்து உங்களைக் கொண்டாடுகையன்றிக்கே உங்களைக் கொண்டு காரியம் கொள்ளும்படியான பாபத்தைப் பண்ணினேன். வயிற்றில் பிறந்தாரை இடுவித்துக் காதலனை (அபிமதனை) அழைத்துக் கொள்ளுதலைப் போன்ற புன்மை இல்லையே'' என்பதாக.

198

ஞாலத் தூடே நடந்தும்
நின்றும் கிடந்திருந்தும்
சாலப் பலநாள் உகந்தோறு
உயிர்கள் காப்பானே!
கோலத் திருமா மகளோடு
உன்னைக் கூடாதே
சாலப் பலநாள் அடியேன்
இன்னும் தளர்வேனோ?[53]

[ஞாலத்தூடே—பூமியில்; சால பலநாள்—பல்லாயிர மாண்டளவும்; கோலம்—அழகு; திருமா மகள்—பெரிய பிராட்டியார்; கூடாதே—இட்டியநுபவிக்கப் பெறாமல்; தளர்வேனோ—இழந்து துடிப்பேனோ]

கேட்டோர் நெஞ்சம் நீராய் உருகும் வண்ணம் ஆழ்வார் எம்பெருமானைக் கூப்பிடுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். ''யுகங்கள் தோறும் பூலோகத்திலே நடந்தும் நின்றும் இருந்தும் கிடந்

53. திருவாய். 6.9:3

தும் மிகப் பல நாட்களாக உயிர்களைக் காப்பாற்றுகின்ற வனே, அழகிய பெரிய பிராட்டியாரோடு சேர்ந்திருக்கின்ற உன்னை அடியேன் அடையாமல் மிகப் பல நாட்கள் இன்னம் தளர்வேனோ?'' என்கின்றார் ஆழ்வார்.

'ஞாலத்தூடே நடந்தும்' : ''இராமாவதாரத்தில் காட்டிலே நடையழகு காட்டினாய்; குருடர் முன்னே நடக்குமா போலே யன்றோ[54] ஆயிற்று அது? நடையழகு காண விரும்பியிருக்கும் என் முன்னே நடந்தாலாகாதோ?'' என்பது உட்கருத்து.

இங்கே ஈட்டில் ஓர் ஐதிகம்: அடியார்க்காக நடந்து வந்ததற்கு ஓர் ஐதிகம் காட்டுகின்றார். வடநாட்டினின்றும் போரப் பாடவல்லராயிருப்பவர் ஒருவர், 'பெருமாளைத் திருவடி தொழ வேணும்' என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் தீர்த்தத்தின் அன்று இருந்து[55] திருமாலையை[56] பாடிச் சமைந்து[57] பெருமாளை மத்தகஜங்களை ஏத்துமாறு போலே ஏத்தி

54. மூடர்முன்னே பாடல்
மொழிந்தால் அறிவரோ
ஆடெடுக்த தென்புலியூர்
அம்பலவா—ஏடாகேள்
செந்திருவைப் போலணங்கைச்
சிங்காரித் தென்னபயன்?
அந்தகனே நாயகன்
ஆனால்.

என்ற பாடல் ஈண்டு நினைக்கத் தகும்.

55. தீர்த்தவாரியின் அன்று இருந்து

56. தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய பிரபந்தம்.

57. பாடி முடித்து.

வசமாக்கிக் கணிசம் கொண்டு[58] "நாயனதே! தேவரீர் திருவடிகளுக்குப் போர நல்லான் ஒருவன் தேவரைத் திருவடி தொழ நெடுந்தூரமுண்டு வந்திருக்கிறது; இவனை அழைத்துக் கொண்டு சம்பாவனை பண்ணியருள வேணும்" என்ன, பெருமாளும் 'அப்படியே செய்கிறோம்' என்று திருவுள்ளமாய் அருளப் பாடிட்டு, திருப்புன்னைக் கீழ் நின்றும், அவர் நின்றவிடத்தளவும் செல்ல நாலுக்கோல் தரை திருக்கைத் தலத்தே எழுந்தருளி, விண்ணப்பம் செய்வார்களை எல்லாம் அருளப் பாடிட்டு "வாரீர் கோள்! நாம் இவன் வந்த தூரத்துக்கு எல்லாம் போருமோ செய்த தரம்?" என்று திருவுள்ளமானார்.

199

ஆவி திகைக்க ஐவர்
குமைக்கும் சிற்றின்பம்
பாவி யேனைப் பலநீ
காட்டிப் படுப்பாயோ?
தாவி வையம் கொண்ட
தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளும் காலம்
இன்னம் குறுகாதோ.[59]

[ஆவி—மனம்; திகைக்க—கலங்கும் படியாக; ஐவர்—பஞ்சேந்திரியங்கள்; குமைக்கும்—பீடிக்கப் படியான; காட்டி—காண்பித்து; படுப்பாயோ—முடிக்க நினைக்கின்றாயோ; வையம்—பூமி; தாவி—அளந்து; கூவிக் கொள்ளும்—அழைத்துக் கொள்ளும்; குறுகாதோ—நெருங்காதோ]

58. சபதம் கொண்டு.
59. திருவாய். 6.9;9

கேட்டோர் நெஞ்சம் நீராய் உருகும் வண்ணம் ஆழ்வார் எம்பெருமானைக் கூப்பிடுவதாக அமைந்த திருவாய் மொழியில் இஃது ஒரு பாசுரம். ''மனம் கலங்கும் படியாக ஐந்து இந்திரியங்களும் வருத்துகின்ற பலவகை யான சிற்றின்பத்தை எனக்குக் காட்டிப் பாவியேனை அழிக்க நினைக்கின்றாயோ? பூலோகத்தை அளந்து கொண்ட தாமரை போன்ற திருவடிகட்கு அழைத்துக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ?'' என்கின்றார் ஆழ்வார்.

பல நீ காட்டிப் படுப்பாயோ: இரட்சகனான நீ காட்டி முடிக்கப் பார்க்கிறாயோ? நாட்டார் 'காணாவிடில் பிழையோம்' என்று இருக்கிற விஷயம் இவர்க்குக் கண்ட மாத்திரத்திலேயே மோகிக்கும் படியாக இருக்கின்ற தன்றோ? ஆகையால் 'காட்டிப் படுப்பாயோ' என்கின்றார். அசுணமா[60] என்று சில பறவைகள் உள்ளன; அவை பிடி கொடா ஒன்றுக்கும்; அவற்றைப் பிடிக்க நினைத்தார் முற்படப் பாடுவார்கள்; அது கேட்டு நெஞ்சு நெகிழும்; பின்பு பறையை அடிப்பார்கள்; இதன் வன்மையாலே பட்டுக் கிடக்குமாம். அது போலே, இவர் பகவத் குணங் களிலே நைந்தபடி. இதர விஷயங்களைக் கேட்ட அளவிலே முடியும்படி ஆனார். நெடுநாள் அநுபவித்துப் போந்தா லும், கடக்க இருந்த அன்று 'நாம் இன்னது அநுபவித்

---

60. மறக்கும் பதந்தியும் சேலும் அசுணமும் வண்டினமும்
பறக்கும் பதந்தமும் போல்ஐவ ராற்கெடும் பாதகனே

என்பது திருவேங்கடத் தந்தாதி-28. அசுண மாவைப் பறவை என்பர் ஒரு சாரார்; விலங்கு என்பர் மற்றொரு சாரார். 'பறை பட வாழா அசுணமா' என்பது நான்மணிக் கடிகை.

தோம்' என்று நினைப்பதற்கு ஒன்று இன்றிக்கே இருக்கும் அன்றோ? இங்ஙனே இருக்கச் செய்தேயும் அவற்றில் ஆசை செலுத்துவது பாவத்தின் மிகுதி அன்றோ?

தாவிவையம்...இன்னம் குறுகாதோ : 'தாவி வையம் கொண்ட தடந்தாமரை' என்றதனால் நினைத்தது தலைக் கட்டும் சத்தியோகம் கூறியபடி; பூமிப் பரப்பு முழுவதும் வருத்தம் இன்றி அளந்து கொண்டபடி—இனிமை அளவிறந்த திருவடிகளாதலின் 'தடந்தாமரை' என்கிறது. இதில் பிராப்யம் சொல்லுகிறது. 'கூவிக் கொள்ளும் காலம்' என் கையாலே பிராபகத்தின் தன்மை சொல்லு கிறது. 'இன்னம் குறுகாதோ' என்கையாலே ருசியின் தன்மை சொல்லுகிறது. இதர விஷயங்களின் காட்சி முடியும் படியாய் உன் திருவடிகளில் இனிமை அறிந்துவிட மாட்டாத அளவு பிறந்த பின்பு இன்னும் தாழ்க்கும் அத்தனையோ?

இங்கே ஓர் ஐதிகம் : "பிள்ளானுடைய[61] அந்திம தசை யிலே நோவு அறிய நஞ்சீயர் புக்கு இருக்க, 'கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ?'' என்று பல கால் சொல்ல, இதனைக் கேட்டு சீயர் அழ, 'சீயரே! நீர் கிடந்து அழுகிறது ஏன்? அங்குப் போய்ப் பெறப் புகுகிற பேறு இதிலும் தண்ணிது (குறைவுடையது) என்று தோற்றி யிருந்ததோ? என்று பணித்தான்.''

200

ஆ ஆ! என்னாது உலகத்தை
அலைக்கும் அசுரர் வாணாள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த
சிலையா! திருமா மகள்கேள்வா!

---

61. பிள்ளான்—திருக்குருகைப் பிரான் பிள்ளான். ஆறாயிரப் படியை அருளிச் செய்தவர்.

தேவா! சுரர்கள் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
பூவார் கழல்கள் அருவினையேன்
பொருந்து மாறு புணராயே.[62]

[ஆஆ என்னாமல்—இரக்கமின்றி; அலைக்கும்—இம்சிக்கும்; வாழ்நாள்—ஆயுள்; தீவாய்—நெருப்பை உமிழும்; வாளி—அம்பு; சிலை—வில்; கேள்வா—கொழுநனே; சுரர்கள்—தேவர்கள்; பூ ஆர்—பூக்கள் நிறைந்த; பொருந்தும் ஆறு—கிட்டும்படி; புணராய்—கற்பித்தருள வேண்டும்]

திருவேங்கட முடையானது திருவடிகளில் சரணம் புகுவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். " 'ஐயோ, ஐயோ' என்று இரங்காமல் உலகத்தி லுள்ளாரை வருத்துகின்ற அரக்கர்களுடைய வாழ்நாளின் மேலே, நெருப்பினை வாயிலேயுடைய அம்புகளை மழையைப் போன்று பொழிந்த வில்லையுடையவனே! திருமகள் கேள்வனே! தேவனே! தேவர்களும் முனிவர் கூட்டங்களும் விரும்புகின்ற திருவேங்கடத்தில் எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமானே! போக்கற்கரிய வினைகளை யுடைய அடியேன், உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பொருந்துமாறு கற்பிக்க வேண்டும்" என்கின்றார் ஆழ்வார்.

"பொருந்துமாறு புணராயே" என்றதில் நோக்காக அவதாரிகை அருளிச் செய்கின்றார் நம்பிள்ளை 'உன்னைப் பெறுகைக்கு உடலாக நீ சாத்திரங்களில் காட்டிக் கொடுத்த சாதனங்களொன்றும் எனக்குப் பயன் படவில்லை; ஆன பின்பு, உன்னை அடைவதற்கு எனக்கு என்னத் தனியே ஒரு சாதனம் கண்டு தரவேண்டும்'

62. திருவாய். 6.10:4

என்கின்றார். 'தனியே ஒரு சாதனம் கண்டு தர வேணும்' என்றதற்குக் கருத்து என்ன? "நான் செய்த பாவங்கட்கு நீ வைத்துள்ள நரகங்கள் போரா; எனக்கு என்று ஒரு நரகம் கல்பிக்க வேண்டும் என்றால், உண்டாக்க வேண்டும் என்பது ஈண்டு பிரார்த்தனை அன்று காண். அருட்பெருங் கடலாய் பேராற்றலையுடையவனான நீ அதனைப் போக்க வேண்டும் என்பது கருத்தாமாறு போன்று, சித்தோபாயமான நீயே காக்க வேண்டும் என்பது 'ஒன்றும்' உடலாகின்றன இல்லை' என் கையாலே, கர்ம ஞான பக்திகள் போன்று, சித்தோபாயமும் சாதனமன்று என்று தோற்றினாலும், சித்தோபாயமான நீயே விரைவில் செய்ய வேணடும்'' என்று பதற்றம் சொல்லுகின்றது.

இந்த விளக்கத்தில் ஈட்டில் ஓர் ஐதிகம் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. நம்பிள்ளை நஞ்சீயரை ஒருநாள், " 'பஞ்சமோபாயம் என்று ஒன்று உண்டு' என்று சொல்லா நின்றார்கள்; நாட்டிலேயும் அங்ஙனே இருப்பது ஒன்று உண்டோ?'' என்று கேட்டருள, அதற்கு அவர், "நான் அறிகிலேன்; இனி நான்காவது உபாயமான ஈசுவரனை யொழிய வேறு உபாயம் இல்லை; ஆகாயம் என்று கூறப்படுகின்ற நாராயணனுக்கு அப்பால் ஒன்றுண்டு என்று சொல்லுவாரைப்போல 'அவனுக்கும் அவ்வருகே ஒன்று உண்டு' என்னைய நான் கேட்டறியேன்'' என்று அருளிச் செய்தார்.[63]

இந்த விதமாக நஞ்சீயர் நம்பிள்ளைக்கு அருளிச் செய்த போது பின்னையும் நம் பிள்ளை கேட்டாராம்—"இப்படி

63. இந்த ஸ்ரீ சூக்திகளைக் காணுமவர்களுக்கு ஓர் ஐயம் தோன்றும்; 'ஆசாரியபிமானம் ஐந்தாவது உபாயமென்று ஸ்ரீ வசன பூஷணாதிகளில் பிரசித்தமாக இருக்க, அதற்கு மாறாக நஞ்சீயர் அருளிச் செய்தாப்போலே தெரிய வருகின்றதே; இந்து

யானால் 'ஆவா வென்னா' என்கின்ற பாசுரம் அருளிச் செய்யும் போது 'எனக்குத் தனியாயொரு சாதனம் கண்டு தர வேண்டுமென்கிறார்' என்று தேவரீர் அருளிச் செய்வதுண்டே, அஃது எங்ஙனம்?'' என்று. அதற்கு நஞ்சீயர் அருளிச் செய்த விடையாவது—''நான் அங்ஙனே சொன்னதற்குத் தாத்பரியம் கேளாய். 'எம்பெருமானே, நீ இருக்கும் போது நான் இங்ஙனே இழக்கலாகுமோ? சித்தோபாயமும் தட்டுப்படலாகுமோ?' என்று வெறுத்துச் சொல்வது மாத்திரமே தாத்பரியம்'' என்று. அதாவது, வேறோர் உபாயம் கண்டு தர வேண்டும் என்று கேட்கிறார் அல்லர் என்பது அறியத் தக்கது.

நான்காவது உபாயம் ஈசுவரன் என்றார் மேல்; ஆனால் பிரபத்தியினால் காரியம் இல்லையோ? என்கிற ஐயத்தைப் போக்குவதற்காக ஓர் ஐதிகம் காட்டுகின்றார்: நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே அடைந்த ஒருவன், 'எம்பெரு

என்ன?' என்று. (இதற்குச் சமாதானம்) ஆசார்ய பிமானம் சுதந்திர உபாயமானாலும் அது சித்தோபாயத்திற்குள்ளேயே அந்தர்ப் பூதமாக நினைக்கத் தக்கது. 'ஈசுவரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோ பாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப் பிடித்துக் கார்யங் கொள்ளுமோ பாதி' (ஸ்ரீ. வசன—430) என்ற திவ்விய சூக்தியை நன்கு நோக்குமளவில் இவ்விஷயம் ஆழ்ந்து தோன்றும். ஆகவே ஆசார்ய பிமானம் என்பது சித்தோபாயத்திலேயே செருகி நிற்கும். இதை ஐந்தாவது உபாயமென்று சொல்லி யிருந்தாலும் 'காரியம் செய்யும் விஷயத்தில் இது அமோகமானது' என்பதைத் தெரிவிப்பதிலேயே அது பர்யவஸித்து நிற்குமத்தனை (பி.ப. அண்ணங்கராசார்ய சுவாமிகளின் திருவாய் மொழி—திவ்யார்த்த தீபிகை காண்க).

மானே உபாயமாகில் சரணாகதி கொண்டு இங்குச் செய் கிறது ஒன்று கண்டிலேன்' என்ன, அதனைக் கேட்ட சீயர் செவியைப் புதைத்து 'நாதமுனிகள் தொடங்கி இன்றளவும் வர நம் ஆசார்யர்கள் பரம இரகசியமாக உபதேசித்து ஓராண்வழியாய்க் கொண்டு போந்த இதனை, இதன் சீர்மை அறியாத உனக்கு மகாபாபியேன் இதனை வெளி யிடுவதே!' என்று திருமுடியிலே அடித்துக் கொண்டு திருப் பள்ளியறையிலே [64] புக்கருளினார்.

ஆனால் அவர் கேட்'டதற்குப் பரிகாரம் யாது என்ன, அதற்கு அருளிச் செய்த விடை: திவ்விய மங்கள விக்கிரக மும் விக்கிரக குணங்களும் திவ்வியாத்ம சொரூப குணங் களும் நித்திய முக்தர்கட்குப் பிராப்யமானாற் போலே, முமுட்சுவாய்ப் பிரபந்நனான இவ்வதிகாரிக்குச் சரணா கதியே பிராப்பியமாய் இருக்கும் அன்றோ?

'ஆஆ என்னாது': ஈசுவரனுக்குப் பிரியம் செய்கை யாகிறது, அவன் விபூதியில் கிருபை செய்தலாகும். "ஒருவனுக்குப் பிறர் துக்கத்தைக் கண்டால் சகிக்க முடியாத தன்மை வந்ததாகில், 'நமக்கு பகவத் சம்பந்தம் உண்டு' என்று அறுதியிடலாம்; 'அது தக்கது' என்றிருந்தா னாகில் 'நமக்குப் பகவத் சம்பந்தம் இல்லை' என்று தனக்கே கைவாங்க அமையும்'' என்று அருளிச் செய்தார்.

'பூவார் கழல்கள்': திருவேங்க முடையானின் திருவடிக்குப் 'பூவார் கழல்கள்' என்றும் அழகிய மணவாள னுடைய திருவடிக்கு 'திருப்பொலிந்த சேவடி' (பெரியாழ்.

64. திருப்பள்ளியறையிலே புக்கதற்குக் கருத்து: துக்கத்தையுடைய ஒருவன் ஆப்த பந்து உள்ள இடத்திலே போமாறு போலே போனார் என்பது. அன்றிக்கே, இவனுக்கு நல்ல புத்தியைக் கொடுப் பதற்குப் பிரார்த்திக்கப் போனார் என்னுதலு மாம். திருப்பள்ளியறை—பெருமாளது.

திரு. 5.4;7) என்றும், கச்சிநகர் தேவப் பெருமாளுடைய திருவடிக்குத் 'துயரறு சுடரடி' (திருவாய் 1.1;1) என்றும் சம்பிரதாயத் திருநாமம் எனப் பெரியோர் வழங்குவர்.

201

அடியேன் மேவி அமர்கின்ற
அமுதே! இமையோர் அதிபதியே!
கொடியா அடுபுள் உடையானே!
கோலக் கனிவாய்ப் பெருமானே!
செடியார் வினைகள் தீர்மருந்தே!
திருவேங் கடத்தெம் பெருமானே!
நொடியார் பொழுதும் உன்பாதம்
காண நோலாது ஆற்றேனே.[65]

[மேவி—கிட்டி; அடுபுள்—பகைவரைப் போக்கும் பறவை (கருடன்); கோலம்—அழகிய; செடி ஆர்—செடி போல் செழித்த; பாதம்—திருவடிகள்; நோலாது—ஒரு நோன்பும் அநுட்டியாது; நொடி—கண நேரம்; நொடித்தல்—இரண்டு விரல் நுனிகளைச் சேர்த்துத் தெறித்தல்]

திருவேங்கடமுடையானது திருவடிகளில் சரணம் புகுவதாக அமைந்த திருவாய் மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''அடியேன் அடைந்து அநுபவிக்கின்ற அமுதே! நித்தியசூரிகளுக்குத் தலைவனே! பகைவர்களைக் கொல்லுகின்ற கருடனைக் கொடியில் உள்ளவனே! அழகிய கோவைக் கனிபோன்ற திருவாயினையுடைய பெருமானே! தூறு மண்டிக் கிடக்கின்ற தீவினைகளைத் தீர்க்கின்ற

65. திருவாய்.6.10;6.

மருந்தே! திருவேங்கடத்து எம்பெருமானே! ஒரு சாதன அநுஷ்டானத்தைச் செய்யாதிருந்துங்கூட, உனது திருவடிகளைக் காண்பதற்குக் கண நேரமும் ஆற்றமாட்டேன்'' என்கின்றார்.

'இமையோர் அதிபதியாய், கொடியா அடுபுள் உடையானாய், செடியார் வினைகள் தீர்மருந்தாய், திருவேங்கடத்து எம்பெருமானாய், கோலக்கனிவாய் பெருமானாய் அடியேன் மேவி அமர்கின்ற அமுதே!' என்று அந்வயித்துப் பொருள் கண்டால் 'பரத்துவத்தைச் சொல்லி, விரோதிகளை அழிப்பதற்கு உறுப்பான பரிகாரத்தைச் சொல்லி, விரோதி நிரசனத்தைச் சொல்லி, சௌலப்பியத்தைச் சொல்லி, அழகைச் சொல்லி இனியனாய் இருக்கின்றான் என்பது புலனாகும்.

'அடியேன்......அமுதே! இங்கு ஓர் ஐதிகம். பட்டர், '' 'நித்தித்யதிலே' (உடையவரால் அருளிச் செய்யப்பெற்ற நூல்) 'அமுது செய்யப்பண்ணும்போது தோத்திரத்தை விண்ணப்பம் செய்வது என்று இருக்கிறதே, என்ன தோத்திரத்தை விண்ணப்பம் செய்வது?'' என்ன, '' 'அடியேன் மேவி அமர்கின்ற அமுதே' 'பச்சைமாமலைப்போல் மேனி' (திருமலை—2) என்பனபோலே இருக்கும் திருப்பாசுரங்களை விண்ணப்பம் செய்வது'' என்று அருளிச் செய்தார்.

202

'அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம்மூன்
றுடையாய்! என்னை ஆள்வானே!

நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன் றில்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

[இறை—கணநேரம்; அகல கில்லேன்—பிரிந்திருக்கமாட்டேன்; நிகர்இல்—ஒப்பற்றதான; முனிக்கணங்கள்—மகரிஷி சமூகங்கள்; புகல்—வேறு வழி; புகுந்தேன்—சேர்ந்தேன்]

திருவேங்கடமுடையானது திருவடிகளில் சரணம் புகுவதாக அமைந்த திருவாய்மொழியில் உள்ள இப்பாசுரம் பிரபத்திநெறியை சூத்திரம்போல் விளக்குவது. இதில் ஆழ்வார், "சிறிது நேரமும் விட்டுப் பிரியேன் என்று பெரிய பிராட்டியார் நித்திய வாசம் செய்கின்ற திருமார்பினையுடையவனே! ஒப்பில்லாத புகழையுடையவனே! மூன்று உலகங்களையும் உடையவனே! என்னை ஆள்கின்றவனே! ஒப்பில்லாத நித்திய சூரிகளும் முனிவர்கள் கூட்டங்களும் விரும்புகின்ற திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கின்றவனே! வேறு கதி ஒன்றும் இல்லாத அடியேன் உனது திருவடியிலே பொருந்தி அடைந்தேன்." என்கின்றார்.

இங்கு 'நிகரில் புகழாய்' என்பதால் வாத்சல்யமும், 'உலகம் மூன்று உடையாய்' என்பதால் சுவாமித்துவமும், 'என்னை ஆள்வானே' என்பதனால் சௌசீல்யமும், நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்பதால் சௌலப்பியமும் தெரிவதாகப் பெரியோர் பணிப்பர்.

அகலகில்லேன்.........உறைமார்பா: இதனால் புருஷகார பூதையான பிராட்டியும் ஈசுவரனுமான இருவ

65. திருவாய், 6:10:7 (சரணாகதி தத்துவத்தை அற்புதமாக விளங்கும் பாசுரம், பிரபத்தி நெறியின் உயிராய பாசுரம்)

ருடையவும் சேர்த்தியானது எப்போதும் உண்டென்று காட்டப்பட்டதாகும். இதனால் எந்தச் சமயத்திலும் எம்பெருமானை அடைக்கலம் புகலாம் என்பது தேறி நிற்கும் பிராட்டியின் புருஷகாரம் அவசியம் வேண்டிய தென்பதை அவதார காலத்துச் செய்தியாலும் தெரிந்து கொள்ளலாம். இராமாவதாரத்தில் அளவு கடந்த அபராதத்தைச் செய்து நான்முகன் கணைக்கு இலக்காய்த் தலையறுப்புண்ண வேண்டிய காகம் கிருபைக்கு இலக்காய்த் தலை பெற்றுப் போனது பிராட்டி அருகிருந்த தனாலேயாகும். அவ்வளவு அபராதி அல்லாத இராவணன் இராமனது அம்புக்கு இலக்காய் முடிந்து போனது இவளது சந்நிதி இல்லாமையினாலேயாகும்.

இந்தச் சிறப்புப் பொருள்களெல்லாம் ஈட்டில் மிக அருமையாக அருளிச் செய்யப் பெற்றவை. "ஒருநாள் பட்டர் பிள்ளையழகிய மணவாள அரையர்க்குத் துவயம் அருளிச் செய்கைக்காக 'எல்லோரும் செல்லுங்கோள்' என்ன, நஞ்சீயரும் எழுந்து சென்று போய், 'நம்மை இராய் என்று அருளிச் செய்திலர்' என்று வெறுத்திருக்க, அப்பொழுதே 'சீயர் எங்குற்றார்?' என்று கேட்டருளித் தேடி அழைத்துக் கூட வைத்துக் கொண்டிருந்த துவயத்தை அருளிச்செய்கையில் அருளிச்செய்தவார்த்தை" என்று சீயர் அருளிச் செய்வர். இது தொடங்கி ஈட்டில் வரும் ஸ்ரீசூக்திகள் சேவிக்கத் தக்கவை.

ஏழாம் பத்து

203

உண்ணிலாவிய ஐவ ரால்குமை
தீற்றி யென்னையுன் பாதபங்கயம்
நண்ணிலா வகையே நலிவா
னின்ன மெண்ணு கின்றாய்

எண்ணி லாப்பெரு மாயனே! இமையோர்கள்
 ஏத்து முலக மூன்றுடை
அண்ண லே! அமு தே! அப்ப
 னே! என்னை யாள்வானே.[1]

[உள் நிலாவிய—உள்ளே நிரந்தரவாசம் பண்ணு கின்ற; ஐவர்—பஞ்சேந்திரியங்கள்: குமை தீற்றுதல்—துன்பத்தை நுகரச் செய்தல்; பாதபங்கயம்—திருவடித்தாமரை; நண்ணிலா வகை—கிட்டாதபடியாக; இன்னம்—இன்னும்; நலிவான்—இம்சிப்பதற்காக: எண் இலா—அளவிட முடியாத: மாயனே—மூலப் பகுதியை யுடையவனே; இமையோர்கள்—தேவர்கள்; அண்ணலே—சுவாமியே; அமுதே—பரமபோக்கியனே; அப்பனே—மகோபகாரங்கள் செய்பவனே]

'இந்திரியங்களால் இன்னும் எத்தனை நாள் துன்புறுவேன்' என்று ஆழ்வார் வருந்துவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "எண்ணிறந்த காரியங்களை யெல்லாம் உண்டாக்குகின்ற பெரிய மூலப் பகுதியைச் சரீரமாக உடையவனே! நித்திய சூரிகளால் துதிக்கப்படுகின்ற மூன்று உலகங்களையுமுடைய அண்ணலே! அமுதே! அப்பனே! என்னை ஆள்கின்றவனே! உள்ளே உறையும் ஐந்து இந்திரியங்களால் நலிவு படுத்தி, உன் திருவடித் தாமரைகளை நான் சேராதபடி என்னை நலிவதற்கு இன்னம் எண்ணுகின்றாய்" என்கின்றார் ஆழ்வார்.

ஐதிகம்: பிள்ளை திருநறையூர் அரையர் "இப் பாசுரங்களின் முன்னிரண்டு அடிகள் இரண்டும், புலியின் வாயிலே

---

1. திருவாய் 7.1.1

அகப்பட்ட குழந்தை தாய் முகத்திலே விழித்துக்கொண்டு புலியின் வாயிலே கிடந்து நோவு படுமாறுபோலே இருக்கிறது'' என்று பணிப்பர்.

204

விண்ணு ளார்பெரு மாற்க டிமைசெய்
வாரை யும்செறும் ஐம்பு லனிவை
மண்ணு ளென்னைப் பெற்றாலென்செய்
யாமற்று நீயும் விட்டால்
பண்ணு ளாய்! கவி தன்னு ளாய்! பத்தியி
னுள்ளாய்! பர மீசனே! வந்தென்
கண்ணுள் ளாய்! நெஞ்சு ளாய்! சொல் லுளாய்!
ஒன்றுசொல் லாயே[2]

[விண்ணுளார் — விண்ணில் உள்ளவர்களான; அடிமை செய்வார் — நித்திய சூரிகள்; செறும்—நலியும்; மண்ணுள் — பூமியில்; என்னைப் பெற்றால் — என்னிடம் வந்து சேர்ந்தால்; மற்று—மேலும்; விட்டால்—கைவிட்டால்; பரம் ஈசனே—மேலான ஈசன்; ஒன்று சொல்லாய்—ஒரு வார்த்தை அருளிச் செய்ய வேண்டும்]

'இந்திரியங்களால் இன்னும் எத்தனை நாள் துன்புறுவேன்' என்று ஆழ்வார் வருந்துவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''பண்ணில் இருக்கின்றவனே! கவியில் இருக்கின்றவனே! பக்தியில் இருக்கின்றவனே! மேலான ஈசனே! எனது கண்ணில் இருக்

2. திருவாய் 7.1:6

கின்றவனே! நெஞ்சில் இருக்கின்றவனே! சொல்லில் இருக்கின்றவனே! நித்திய சூரிகளுக்குப் பெருமானான சர்வேசுவரனுக்கு அடிமை செய்கின்ற வைந்தேயன் முதலாயினோரையும் இந்த உலகத்தில் வருத்துகின்ற ஐம்புலன்களாகின்ற இவை என்னைப் பெற்றால் என்ன காரியத்தைச் செய்யமாட்டா; அதற்குமேல் நீயும் கைவிட்டால் அவை என்ன செய்யமாட்டா; ஆதலால், என் தளர்ச்சி தீரும்படி ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேண்டும்'' என்கின்றார்.

சுவர்க்கலோகவாசிகளான இந்திராதி தேவர்களைக் கொள்ளலாம்; பரமபதவாசிகளான கருத்மான் முதலிய நித்திய சூரிகளைக் கொள்ளவுமாம். இரு வகுப்பினர் விஷயமாகவும் இரண்டு இதிகாசங்களை ஆசாரியர்கள் எடுத்துக் காட்டி இப் பொருளை மூதலிக்கின்றார்கள்.

முதல் இதிகாசம்: நரகாசுரன் என்பவன் பிராக்ஜோதிஷம் என்னும் நகரிலிருந்துகொண்டு எல்லாவகை உயிர்களையும் நலிந்து தேவர் சித்தர் கந்தர்வர் இவர்தம் கன்னிகைகளையும் பற்பலரை வல்லந்தமாய்க் கடத்திக் கொண்டுபோய் தான் மணம் புணர்வதற்காகக் கருதித் தன் மாளிகையில் சிறை வைத்தான். வருணனது கொடையையும் மந்திரகிரி சிகரமான இரத்தின பர்வதத்தையும் தேவ மாதாவான அதிதி தேவியின் குண்டலங்களையும் கவர்ந்து போனதுமன்றி இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக்கொண்டு போகச் சமயம் பார்த்திருந்தான். இதனைக் கண்டு அஞ்சி வந்து பணிந்து முறையிட்ட இந்திரன் வேண்டுகோளுக்கிணங்க கண்ணபிரான் கருடனை வரவழைத்து சத்தியபாமையுடன் கருடன் மேலேறி அந்நகரை யடைந்து எதிர்த்து வந்த நரகனுடன் போர் தொடுத்து நரகனைக் கொன்றான். அதன் பின்னர் அவன் பல திசைகளிலிருந்து கொண்டுவந்து சிறைப்படுத்தி யிருந்த பதினாயிரத் தொருநூறு கன்னிகையரையும் ஆட்கொண்டான்; நரகனால் அதிதியிடமிருந்து கவரப்பட்ட குண்டலங்களை அவளிடம் தரும்பொருட்டு சத்தியபாமையுடன்

கருடன் மீதேறி தேவலோகத்துக்குச் சென்றான். அங்கு இந்திராணி சத்தியபாமைக்கு எல்லாவித உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே உரிய பாரிசாதமலர் மானிடப் பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று அவளுக்கு அளிக்க வில்லை. இதனால் பாமை அம் மலர்மீது விருப்புற்று கணவனை நோக்கி, 'உயிருக்குயிரான நாதனே! இந்தப் பாரிசாத மரத்தைத் துவாரகைக்குக் கொண்டு செல்ல வேண்டும்' என்று கண்ணபிரான் திருச்செவி சாத்தினாள். கண்ணபிரானும் அம் மரத்தை வேரோடு பெயர்த்துக் கருடன் தோளின்மீது வைத்தருளி துவாரகைக்குக்கொண்டு போக, இதனை யறிந்த இந்திராணி தூண்டி விட்டதனால் இந்திரன் தேவ சேனைகளுடன் வழிமறித்துக் கண்ணனுடன் போர் தொடுத்தான்; கண்ணபிரான் அவனைச் சேனைகளுடன் பங்கப்படுத்தி அம் மரத்தைக் கொணர்ந்து சத்திய பாமையின் இல்லத்துப் புழைக்கடைத் தோட்டத்தில் நட்டருளினன். தனக்குப் பேருதவி செய்தருளின பகவான் திறத்தில் இந்திரன் துரோகியானான் என்பது இவ்வரலாற்றால் அறியத்தக்கது. ''விண்ணுளாரையும் ஐம்புலன் செறும்''3 என்பதற்குத் தட்டுண்டோ?

ஈட்டில் கண்ட மற்றொரு இதிகாசம்: ''சுமுகன் என்ற பாம்பு இறைவன் திருவடிகளிலே சென்று கிட்ட, பெரிய திருவடி ஓடிச்சென்று 'எனக்கு மாமிசமா யிருக்கிற இத்தைக்

3. சம்சாரத்தில் முமுட்சுகளாய்க் கைங்கரியத்தில் மூழ்கி இருக்கக் கடவரானவர்களையும் செறும். ஒருவிசுவாமித்திரன்சுக்கிரீவன் முதலாயினோர்கள் இதற்கு எடுத்துக் காட்டாவார்கள். ஞானத்தால் மேம்பட்டவனான விசுவாமித்திரன் அகப்பட்ட ஒரு விஷயத்தின் காற்கடையிலே கிடந்தான் அன்றோ? பெருமானின் கைங்கரியத்திலே ஈடு பட்டவரான மகராஜர் பெருமாளை மின்னலுக்கும் இடிக்கும் இரையாக நான்கு மாதங்கள் விட்டு வைத்து இந்திரியங்களுக்குப் பரவசப்பட்டவராய் அல்வழி என்று நினைத்திலர் அன்றோ?

கைக்கொண்டு நோக்குவதே!' என்று வெறுத்து, 'தேவ ரீரையும் நாய்ச்சிமாரையும் நெடுங்காலம் சுமந்து கொண்டு திரிந்தேன்; நான் என் பெற்றேன்' என்றானன்றோ? இதிலே சம்சார ஸ்வபாவம் இருக்கும்படி.''

இங்குக் குறிப்பிட்ட கதை: தேவேந்திரனுக்கு நண்பனும் மந்திரியும் சாரதியுமான மாதலி அழகிலும் குணத்திலும் மிகச் சிறந்த தன் மகள் குணகேசி என்னும் கன்னிகைக்குத் தக்க வரனைத் தேடுவதற்குப் புறப்பட்டான். வழியில் நாரத முனிவரைச் சந்தித்து அவரைத் துணையாகக் கொண்டு பல வுலகங்களிலும் சென்று பார்த்தும் தக்க வரன் கிடைக்கவில்லை. பாதாளத்தில் வாசுகியால் ஆளப்படு கின்ற போகவதி என்னும் சிறந்த நகரத்தை அடைந்து அங்கிருக்கும் பல இளைஞர்களைப் பார்க்கும்பொழுது சுமுகன் என்னும் நாககுமாரனை நோக்கி அவனுடைய உருவ எழிலில் ஈடுபட்டு அவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்கக் கருதினான். கருதினவன், அவனது பாட்டனாரைக் கண்டு பேச அவர் மகிழ்ச்சியோடு துயரங் கொண்டவராய் 'இவனது தந்தையைக் கருடன் இரையாக்கிக் கொண்டான்; இந்த சுமுகனையும் ஒரு திங்களுக்குள் உண்பதாகச் சொல்லியிருக்கின்றானாதலால் இவனுக்கு மணஞ் செய்தல் ஏற்றதன்று' என்று தெரிவித் தார். அது கேட்ட மாதலி, 'என்னால் மருமகனாக வரிக் கப்பட்ட உனது பேரன் எங்களுடன் வந்து தேவேந்திர னைக் காண்பனாயின் அவனுக்கு ஆயுளைத் தந்து கருடனைத் தடுக்க முயல்வேன்' என்று சொல்லிச் சுமுகனை அழைத்துக்கொண்டு இந்திரனிடம் சென்றான். அங்கு இந்திரனுடன் உபேந்திரமூர்த்தியான திருமாலும் வீற்றிருக் கையில், நிகழ்ந்தவற்றை யெல்லாம் நாரத முனிவர் சொல்லக் கேட்ட திருமால் இந்திரனை நோக்கி 'இவனுக்கு அமிர்தத்தைக் கொடுக்கலாம்; அதனால் இவர்கள் விருப் பத்தை அடைந்தவராவர்' என்று சொல்லியருள, இந்திரன் கருடனது பராக்கிரமத்தை ஆலோசித்துத் திருமாலை

நோக்கி, 'தேவரீரே அவருக்கு அமிர்தத்தையும் ஆயுளை யும் தந்தருள்க' என்று கூற, திருமால் 'சகல உலகங்களின் அதிபதியான நீ கொடுப்பதே போதும்; அதனை மாற்று பவர் யார்?' என்று சொல்ல, பிறகு இந்திரன் சுமுகனுக்கு அமுதம் உண்பியாமல் நீண்ட ஆயுளை வரமாக அளிக்க உடனே மாதலி சுமுகனுக்குத் தன் மகளை மணம் புரிவித் தான். இச்செய்தியைச் செவியுற்ற பெரிய திருவடி மிக்க சினங்கொண்டு இந்திரனுடன் மாறுபட்டு, தனது இரையை அவன் தடுத்து விட்டதற்காகப் பலப்பல கடுமையான சொற் களைக் கூறுகையில் சுமுகன் தான் நீண்ட ஆயுளை வர மாகப் பெற்றிருந்தாலும் கருடனுடைய கறுவுதலைக் கண்டு அஞ்சிப் பாம்பு வடிவாய்த் திருமாலினருகிற் சேர்ந்து அப்பெருமானது கட்டிலின் காலைக் கட்டிக் கொண்டு சரண் புகுந்தான். பின்பு கருடன் திருமாலை நோக்கி, 'சகல தேவர்களினுள்ளும் மகா பலசாலியான உன்னைச் சிறிதும் சிரமமின்றி இறகு முனையாற் சுமக்கின்ற என்னி னும் வலிமையுடையார் யார்? இதனைச் சற்று ஆலோ சித்துப் பார்' என்று செருக்கிப் பேச, அக்கடுஞ் சொற் கேட்ட திருமால் கருடனை நோக்கி, 'மிகவும் துர்ப்பல னான நீ உன்னைத்தானே மகா பலசாலியாக எண்ணி எனது முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்து கொண்டது போதும்; மூவுலகமும் எனது உடம்பைச் சுமக்க முடி யாவே; யானே எனது ஆற்றலால் என்னைச் சுமந்து கொண்டு உன்னையும் சுமக்கின்றேன். எனது இந்த வலக்கையொன்றை மாத்திரமாவது நீ தாங்கவல்லை யாகில் உனது செருக்கு மொழி பயன்பட்டதாகும்' என்று சொல்லி கருடனது தோளில் தனது வலக்கையை வைத்த மாத்திரத்தில் அவன் அதன் பாரத்தைத் தாங்க மாட்டாமல் வருந்தி வலிமையொழிந்து மூர்ச்சித்து விழுந்து, பின்னர் அரிதில் தெளிந்து திருமாலை வணங்கிப் பலவாறு பணிமொழி கூறி, 'என் பிழையைப் பொறுத் தருள வேண்டும்' என்று வேண்ட, திருமால் திருவுள்ள மிரங்கி அவனுக்குச் சமாதானம் கூறித் தனது திருவடியின்

பெருவிரலால் சுமுகனை எடுத்துக் கருடனின் தோளிலிட்டு 'இவனை நீ உன் அடைக்கலமாகக் கொண்டு பாதுகாக்கக் கடவை என்று குறிப்பிக்க, அதுமுதல் கருடன் சுமுகனோடு நட்புக் கொண்டு அவனைத் தோளில் தரிக்க, அவனும் அச்சமின்றிக் 'கருடா, சுகமா?' என்று நலம் விசாரிப்பவனா யினான்[4]—என்பதாம். நித்திய சூரிகளில் ஒருவனாகிய கருடனையும் தன் முனைப்பு விட்டபாடில்லை.

205

'கங்குலும் பகலும்'[5] (அவதாரிகை) : இது திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகின்றது. பராங்குச நாயகியைப் பெரிய பெருமாள் திருவடிகளிலேயிட்டு வைத்துக் கொண் டிருந்து இவள் அழுவது, தொழுவது, மோகிப்பது, பிரலா பிப்பது, அடைவுகெடப் பேசுவது, நெடுமூச்செறிவது, அதுவும் மாட்டாது தொழிவது முதலியவற்றை ஒவ்வொன் றாக எடுத்துச் சொல்லி, "இவள் திறத்தில் நீர் என்ன செய்வதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கின்றீர்?" என்று கேட்கின்றபடியாய் அமைந்துள்ளது.

இப்படி இருக்கின்ற இவருடைய ஆர்த்தியைக் காட்டு கின்ற இத் திருவாய்மொழிக்குப் பொருள் கரை மேலே

---

4. இச்சரிதப் பகுதியை,

'நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணா
நெஞ்சில் கொண்டுநின் அஞ்சிறைப் பறவைக்கு
அடைக்கலம் கொடுத்துஅருள் செய்த தறிந்தும்'

என்னும் பெரிய திருமொழிப் பாசுரத்தால் (5.8:4) உணர்தல் தகும்.

5. திருவாய். 7.2.

நிற்கின்ற நம் போன்றார் சொன்னால் சுவை இராது என்பதனை ஆப்தவாக்கியத்தால் காட்டுகின்றார் ஈட்டாசிரியர். பட்டர் இத்திருவாய்மொழி அருளிச் செய்யும்போது எல்லாம், "ஆழ்வார்க்கு ஓடுகிற நிலை அறியாதே அவருடைய உள்ளக்கிடையும் இன்றிக்கே இருக்கிற நாம் என்ன சொல்லுகின்றோம்?" என்று திருமுடியிலே கையை வைத்துக் கொண்டிருப்பர்.

"இவள்திறத்தில் நீர் என் செய்யக் கடவீர்?" என்பதற்கு இரண்டு ஐதிகங்கள் காட்டப்பெறுகின்றன.

ஐதிகம்-1 : ஆண்டாள்[6] ஒருநாள் ஆழ்வானுக்குப் "பிள்ளைகள்[7] திருமணம் செய்வதற்குத் தக்க பருவத்தை அடைந்தார்கள்; இவ்விடை யாட்டம் ஒன்றும் ஆராயாதிருக்கிறது என்?" என்று திருச்செவி சாத்த, ஆழ்வானும், "பகவத் குடும்பத்துக்கு என்னை இன்று இருந்து கரையச் சொல்லுகின்றனையோ? நாளை நான் வாசித்துச் சமையக் கொள்ள, அங்கே வரக் காட்டு" என்றார். ஆண்டாளும் அங்ஙனமே பட்டரையும் சீராமப் பிள்ளையையும் கொடுத்துப் போக விட்டாள்; ஆண்டானும் வாசித்துச் சமைந்து பெருமாள் திருவடிகளிலே நின்றார். பெருமாளும் "ஒன்று சொல்லுவாய் போலே இருந்தாயே" என்று திருவுள்ளமாக, ஆண்டானும் "இவர்கள் திருமணம் செய்வதற்குத் தக்க பருவத்தை அடைந்தார்கள் என்று நின்றார்கள்" என்று விண்ணப்பம் செய்தார். பெருமாளும் "எல்லாம் செய்கிறோம்" என்று திருவுள்ளமானார். பிற்றை நாளே மன்னியைக்[8] கொண்டு வந்து கொடுத்தார்கள்.

---

6. இவள் கூரத்தாழ்வானின் திருத்தேவியார்.
7. பட்டரும் சீராமப் பிள்ளையும்.
8. இச்சொல் (மன்னி) பல இடங்களில் வந்துள்ளது; இது 'கன்னி' அல்லது 'பன்னி' என்றிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

ஐதிகம்-2 : அகளங்க பிரம்மராயர் அடையவளைந்தான் செய்யா நிற்கச் செய்தே மதிள் போக்குகைக்காக இளையாழ்வான் அகத்தை வாங்கப் புக, பட்டர் அதனைக் கேட்டருளி, ''வாரீர் பிள்ளாய்! நீர் செய்கின்ற மதிள் பெருமாளுக்கு இரட்சகம் என்று இராதே கொள்ளீர்; இங்குக் கிடக்கும் நான்கு குடிகளும் காணும் பெருமாளுக்குக் காவல்; ஆனபின்பு நீர் செய்கிறவை எல்லாம் அழகிது; இவை எல்லாம் நாம் செய்கிறோம் என்றிராதே; பெருமாள் செய்விக்கின்றார் என்று இரீர்; உமக்கு நல்வழி போக உடலாங் காணும்'' என்று அருளிச் செய்தார்.

206

'என்திரு மகள்சேர் மார்வனே!' என்னும்;
'என்னுடை ஆவியே'' என்னும்;
'நின்திரு எயிற்றால் இடந்துநீ கொண்ட
நிலமகள் கேள்வனே!' என்னும்;
'அன்றுரு வேழும் தழுவிநீ கொண்ட
ஆய்மகள் அன்பனே!' என்னும்;
தென்திரு வரங்கம் கோயில்கொண் டானே!
தெளிகிலேன் முடிவிவள் தனக்கே.[9]

[திருமகள்—புருஷகார பூதையான பிராட்டி; ஆவியே—உயிராயிருப்பவனே; எயிற்றால்—கோரப் பற்களால்; இடந்து—பெயர்த்து; கேள்வன்—நாயகன்; உரும்—இடி; ஆய்மகள்—பின்னைப் பிராட்டி; முடிவு—ஆர்த்தி முடியுமாறு]

தாய்ப் பாசுரம் : தலைவியின் நிலை கண்ட தாய் அரங்கரைப் பார்த்து வினவும் போக்கில் அமைந்த

---

9. திருவாய். 7.2:9

திருவாய்மொழியில் ஒரு பாசுரம். ''என் திருமகள் சேர்ந்திருக்கின்ற மார்பையுடையவனே! என்பாள்; என்னுடைய உயிரே! என்பாள்; உன்னுடைய அழகிய கோரப் பல்லினால் இடந்து எடுத்து உன் காதலுக்குரியவளாகக் கொண்ட பூமிப் பிராட்டிக்குக் கணவனே! என்பாள்; கிருஷ்ணாவதாரத்தில் அஞ்சத் தக்க இடபங்கள் ஏழனையும் தழுவி உன் காதலுக்கு உரியவளாகக் கொண்ட நப்பின்னைப் பிராட்டிக்கு அன்பனே! என்பாள்; அழகிய திருவரங்கத்தைக் கோயிலாகக் கொண்டவனே! இவளுடைய துயரத்திற்கு முடிவு அறிகின்றிலேன்'' என்று திருத்தாயார் தன் மகள் நிலையை எடுத்துரைக்கின்றாள்.

இப்பாசுரத்தில் மூன்று ஐதிகங்கள் காட்டப்பெறுகின்றன.

ஐதிகம்-1 : 'என்திருமகள் மார்பனே என்னும்': என்பேற்றுக்குப் புருஷகாரம் இல்லாமல் இழக்கிறேனோ என்னும். 'என்' என்பது திருமகளுக்கு அடைமொழி மார்பனுக்கு அடைமொழி ஆக்கலாகாது. 'என்' என்பதைத் திருவுக்கு அடைமொழி ஆக்கினதற்கு ஒரு சம்வாதம் காட்டுகின்றார். ''அனந்தாழ்வான் தன் பெண் பிள்ளையை 'என்திருமகள்' என்று திருநாமம் சாத்தினான்'' என்பது ஈடு. 'சேர்மார்பன்' என்பது நிகழ்கால வினைத்தொகையாலே இரகஸ்யத்தில் (மந்திர ரத்நமாகிய துவயத்தில் 'ஸ்ரீமந் நாராயண'' என்பதைத் திருவுள்ளம் பற்றி) நித்தியயோகத்தைச் சொல்லுகிறது: என்றது,'அவள் ஒரு கணம் பிரிய இருக்கில் அன்றோ எனக்குப் பேறு தாழ்க்க வேண்டுவது?' என்கின்றாள் என்றபடி.

ஐதிகம்-2 : பட்டர் பெருமாளிடத்தில் ''அடியேனை 'ஸ்திரீதனமாகப் பிராட்டிக்கு வந்தவன்' என்று திருவுள்ளம் பற்றவும்; நானும் 'இவர் எங்கள் நாச்சியார்க்கு நல்லர்' என்று, அவ்வழியே 'அழகிய மணவாளப்

பெருமாள்' என்று நினைத்திருக்கவுமாக வேணும்'' என்று வேண்டிக் கொண்டார்.[10]

ஐதிகம்-3 : ''என்திருமகள் சேர்மார்பனே என்னும்'' என்று ஒருவாக்கியமாகவும், ''என்னுடைய ஆவியே என்னும்'' என்று மற்றொரு வாக்கியமாகவும் கொள்வதும்தவிர, முதலடி முழுவதையும் ஒரே வாக்கியமாகக் கொள்வதும் உண்டு. ''பெருமாளுக்கு விண்ணப்பம் செய்யுமவை கேட்கைக்காக நஞ்சீயரை அழைத்தருளித் தாம் அமுது செய்யா நிற்கச் செய்தே இத் திருவாய்மொழி இயலைக் கேட்டருளாநிற்க, இப்பாட்டளவில் வந்தவாறே 'என்திருமகள் சேர்மார்பனே என்னும் என்னுடைய ஆவியே என்னும்' என்று இயலைச் சேர்த்தருளிச் செய்ய, அதனைக் கேட்டுக் கையுதறி 'ஸ்ரீரங்கநந்த!' என்று அணையிலே சாய்ந்தருளினார் பட்டர் என்று அருளிச்செய்வர். ''அப்போது திருமேனியிலே பிறந்த வேறுபாட்டினைக் கண்டு 'இவர்க்குப் பகவானை அடைவது அணித்தாகிறதோ?' என்று அஞ்சியிருந்தேன்'' என்று சீயர் அருளிச் செய்வர்.

பட்டர் ஸ்ரீரங்கேச புரோகிதராகையாலே அடிக்கடிப் பகவத் சந்நிதியிலே உபந்யாசங்கள் செய்தருள நேரும். அதற்காக முன்பே நஞ்சீயரை அழைத்து அருளிச் செயல் பாசுரங்களைச் சொல்லவிட்டுச் செவிக்கு இனியதாகக் கேட்பது வழக்கம். அமுது செய்து கொண்டே ஒருநாள் கேட்டருளா நின்றார். அப்போது இயல் சேவிக்கின்ற நஞ்சீயர் இப்பாசுரத்தைச் சேவிக்கும்போது ''என்திருமகள் மார்பனே என்னும்'' என்கிற இடத்தில் நிறுத்தாமல் ஒரே மூச்சில் முதலடியை முழுதும் சொல்லி நிறுத்தினாராம். ''என்னும்' என்பதற்கு 'என்று சொல்லுகின்றாள்' என்ற

---

10. வேண்டிக் கொண்டார் என்பது 'மாதர் மைதிலி' என்ற சுலோகத்தில் வேண்டிக் கொண்டார் என்பது.

பொருள்தவிர, 'என்று சொல்லப்படுகின்ற' என்ற பொருளும் உண்டாதலால், 'என்திருமகள் சேர்மார்ப னென்று சொல்லப்படுகிற என்னுடைய ஆவியே என்கிறாள்' என்று விளக்கி நஞ்சீயர் நிறுத்தினபடி. பட்டர் அந்த இன்சுவையை அறிந்து திருவுள்ளம் உடை குலைப் பட்டார் என்றதாயிற்று. "இவர்க்குப் பிராணன் ஒருவாயு விசேடம் அன்று; ஒரு மிதுனமாயிற்று. திருமகள் சேர் மார்பனாய்க் கொண்டு எனக்குத் தாரகனானவனே! என்னும்". இங்கு 'என் திருமகள் சேர்மார்பன் என்று சொல்லப்படுவதான என் ஆவியே!' என்று பொருள் விளக்கமானபடி காணத்தக்கது. ஆனது பற்றியே 'இவர்க் குப் பிராணன் ஒரு வாயு விசேடம் அல்ல; ஒரு மிதுன மாயிற்று"[11] என்றருளிச் செய்தது.

207

வெள்ளைச் சுரிசங்கொடு ஆழி ஏந்தித்
தாமரைக் கண்ணன்என் நெஞ்சி னூடே
புள்ளைக் கடாகின்ற ஆற்றைக் காணீர்
என்சொல்லிச் சொல்லுகேன் அன்னை மீர்காள்!
வெள்ளைச் சுகமவன் வீற்றி ருந்த
வேத ஒலியும் விழா ஒலியும்
பிள்ளைக் குழாவிளை யாட்டொலி யும்
அறாத்திருப் பேரையில் சேர்வன் நானே.[12]

[சுரிதல்—உள்ளே சுரிந்திருத்தல்; ஆழி—சக்கரம்; புள்ளை—கருடப் பறவையை; கடாகின்ற ஆற்றை—நடத்துகிற படியை; வெள்ளம்

11. இவனுக்கு உயிர் மிதுனம் (இரண்டு; பிராட்டி யுடன் கூடிய பெருமாள்).

12. திருவாய். 7.3;1

சுகம்—பேரின்ப வெள்ளத்தையுடைய; குழாம் —கூட்டம்; அறா—நீங்காமல் இருக்கும்]

மகள் பாசுரம் : தாய்மாரும், தோழிமாரும், உற்றாரும் தடுக்கவும் தலைவி திருப்பேரெயில் சேரத் துணிவதைக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம்; இதில் ஆழ்வார் நாயகி, ''தாய்மார்களே! வெண்ணிறத்தையும் உள்சுரிந் திருத்தலையு முடைய பாஞ்ச சன்யம் என்னும் சங்கோடு சுதர்சனம் என்னும் சக்கரத்தையும் ஏந்திக்கொண்டு தாமரைக் கண்ணனான எம்பெருமான் என் மனத்திற் குள்ளே கருடப் பறவையைச் செலுத்துகின்ற விதத்தைக் காணுங்கோள்; அவன் தன்மையை என்ன வார்த்தைகளைக் கொண்டு உங்களுக்குச் சொல்லுவேன்; பேரின்ப வெள்ளத்தையுடைய எம்பெருமான் எழுந்தருளியிருக் கின்ற, வேதங்களின் ஒலியும் திருவிழாக்களின் ஒலியும் நீங்காமல் இருக்கின்ற திருப்பேரையில் என்ற திவ்விய தேசத்தை நான் அடைவேன்'' என்கின்றாள்.

வெள்ளைக் சுரிசங்கொடு ஆழி ஏந்தி : திவ்விய ஆயுதங் களை முன்னே கூறுவதற்கு, பாவம் அருளிச் செய்கின்றார். 'தவள ஒண் சங்கு சக்கரம்'[13] என்றும், 'கூராழி வெண் சங்கு'[14] என்றும், 'சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்'[15] என்றும் கையும் திருவாழியுமான அழகு கைவிடாதே இவரைத் தொடருகின்றபடி. முகில் வண்ணன் அன்றோ? அந்த நிறத்திற்குப் பரபாகமான (பல நிறங்கள் கலத்தலால் உண்டாகும் அழகு) வெளுப்பையும், சுரியையும் உடைத் தான ஸ்ரீ பாஞ்ச சன்யத்தையும், அங்ஙனம் ஒரு விசே டணம் இட்டுச் சொல்ல வேண்டாத படியான அழகை யுடைத்தான திருவாழியையும் ஏந்தி.

13. திருவாய். 6.5;1
14. ஷை. 6.9;1
15. ஷை. 7.2;1

'தாமரைக் கண்ணன்' : 'தாமரைக் கண் என்றே தளரும்'[16] என்றது பின் நாட்டுகிறபடி. திருமேனிக்குத் திவ்விய ஆயுதங்கள் பிரகாசமாய் இருக்குமாறு போலே, ஆன்ம குணங்களுக்குத் திருக்கண்கள் பிரகாசமாய் இருக்கிறபடி. என்றது, அகவாயில் தண்ணளி எல்லாம் கண் வழியே அன்றோ தோற்றுவது என்றபடி. பகைவர்களுக்குத் திவ்விய ஆயுதங்களோடு ஒக்கத் திருகண்களும் விரோதியாய்த் தோற்றுமாறுபோலே அன்றோ, அநுகூலர்க்குத் திருக்கண்களைப் போன்று திவ்விய ஆயுதங்களும் அழகுக்கு உடலாகத் தோற்றுகிறபடி. திருக்கண்களோடே திவ்விய ஆயுதங்களையும் திவ்விய ஆயுதங்களோடே திருக்கண்களையும் சேர்த்தும் ஆழ்வார்கள் அநுபவிப்பார்கள்.[17]

இப்படிச் சேர்த்து அநுபவிப்பதற்குக் காரணம் ஏன்? என்ன: அதற்கு விடை—ஆயுதங்களோடே திருக்கண்களைக் கூட்டுகிறது, தோற்பித்த படிக்கு; 'உனக்குத் தோற்றோம்' என்னப் பண்ணுமன்றோ? இவ்விடத்தே நிலாத்துக் குறிப் பகவர் வார்த்தையை அருளிச் செய்வர் சீயர்.[18] கைக்கு ஆழ்வார்கள் ஆபரணமாய் இருக்குமாறு போலே ஆயிற்று, முகத்துக்குத் திருக்கண்கள் ஆபரணமாக இருக்கும்படியும்.

திருக்கண்டேன்; பொன்மேனி
  கண்டேன்; திகழும்
அருக்கன் அணிநிறமும்
  கண்டேன்; செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன்;
  புரிசங்கம் கைக்கண்டேன

16. திருவாய். 7.2;1

17. திவ்வியஆயுதங்களைத் திவ்விய ஆயுத ஆழ்வார்கள் என்றும்,திவ்விய ஆபரணங்களைத்திவ்விய ஆபரண ஆழ்வார்கள் என்றும் வழங்குதல் வைணவ மரபு.

18. சீயர், நஞ்சீயர். திருவாய். 3.7;2 காண்க (இந் நூல் பாட்டு எண். 157).

என் ஆழி வண்ணன்பால்
இன்று (மூன். திருவருந். 1)

என்று பேயாழ்வார் குறிப்பிடும் வடிவழகைப் போன்று திவ்விய ஆயுதங்களும் ஆபரணமாய் அழகிய வாயன்றே இருப்பன? ஆழ்வார்கள்தாம்[19] அவனைக் கைசெய் திருக்கையாலே[20] ஆபரணக் கோடியிலே இருப்பார்கள்.

நெஞ்சினூடே : "அகவாயில் உள்ளது கண்களுக்குத் தெரியாதோ?" என்று இருக்கிறார்கள் இவர்கள். "குற்றம் அற்றவனான அந்தப் பரமாத்மாவானவன் உன்னுடைய உடலில் நிறைந்து நிற்கின்றான்" (பாரதம்—ஆரண்) என்னுமாறுபோலே, 'நெஞ்சில் இல்லையாகில் நானும் இல்லை என்று நினைத்து இருக்கலாயிற்றுக் காண்' என்று இருக்கிறாள் இவள். ஒருவாசத் தடத்தில்[21] அன்னங்கள் சக்கர வாகங்கள் போன்ற ஆழ்வார்களும், காடுபட அலர்ந்த தாமரைபோலே இருக்கின்ற திவ்விய அவயவங் களும், அத்தடாகத்தில் நீரும் இலையும்போலே இருக்கிற திருமேனியுமாய், அதனைக் கினிய (கபளீகரிக்க) ஒரு மேரு தாங்கினாற்போலே இருக்கின்ற பெரிய திருவடியோடே கூட இவர் திருவுள்ளத்தே உலாவுகிறபடி.[22] இப்படியே அன்றோ அநுகூலரோடு பரிமாறும்படி.

இவ்விடத்தில் ஓர் ஐதிகம் : அநுகூலருடைய மனத்தில் எம்பெருமான் விக்கிரக ரூபமாக வீற்றிருப்பதற்கு ஈட்டாசிரியர் காட்டும் ஐதிகம். நஞ்சீயர் கோயிலுக்கு

19. 'ஆழ்வார்கள்' என்றது திவ்விய ஆயுதங்களை.

20. கைசெய்தல்—அலங்கரித்தலும் துணைசெய்தலும் போர் செய்தலுமாம்.

21. திருவாய். ௮.5;1

22. 'அரவத்து அமளியோடும்' (பெரியாழ். திரு. 5.2;10) 'பனிக்கடல் பள்ளிக் கோளை' (ஷெ 5.4;9) எனப் பெரியாழ்வாரின் பாசுரங்கள் இவ்விடத்து அநுசந்திக்கத் தக்கவை.

எழுந்தருளா நிற்க, வழியிலே திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கண்டு "'ஈசுவரனுக்குச் சொரூப வியாப்தி யேயோ, விக்கிரக வியாப்தியும் உண்டோ?' என்று கேட்க, பாஷ்யக் காரர் தோற்ற அருளிச் செய்து[23] கொண்டு போந்தது, சொரூப வியாப்தியாய் இருக்கும்; ஆகிலும் எம்பார் ஒருநாள் 'உபாசகர்கட்கு அநுக்கிரகம் செய்தற் பொருட்டு அடியார்களுடைய நெஞ்சிலே விக்கிரகத் தோடே வியாபித்திருக்கும்' என்று அருளிச் செய்யக் கேட்டேன்" என்று பணித்தார்.

பிள்ளை விளையாட்டொலியுமறா; என்றது இத்திருப் பதிக்குச்24 சிறப்பானதொரு விசேடணம். சிறு பிள்ளைகள் திரண்டு விளையாடுவதென்பது எங்கும் உண்டு; இவ்வூரில் அப்பிள்ளைகள் விளையாடுவது கோயிலின் திருமுன்பிருக் கும் சந்நிதித் தெருவாகவே அமைந்துள்ளது. அச்சிறார்கள் ஆடும் விளையாட்டின் சுவையைக் கண்டு இத்திருப்பதி எம்பெருமான் ஆசைப்பட்டதாக ஓர் ஐதிகம் உண்டு. எதிரே யுள்ள பெரிய திருவடி சந்நிதி அவர்கள் விளையாடும் காட்சியை மறைப்பதாக இருப்பதைக் கண்டு வருந்தி 'கருடா அப்பால் போ!' என்று பெருமாள் வெறுத்துரைத் தாராம். இந்த ஐதிகம் இன்றும் நிலைபெற்றிருப்பதை உணர்த்துவான் வேண்டி கருடன் சந்நிதி சற்று ஒதுக்கமாக இருப்பதைக் காணலாம்.

208

செங்கனி வாயின் திறத்த தாயும்
 செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்த தாயும்
சங்கொடு சக்கரம் கண்டு கந்தும்
 தாமரைக் கண்களுக்(கு) அற்றுத் தீர்ந்தும்

23. தோற்ற அருளிச் செய்து—வியாக்கியானம் செய்து.

24. தென் திருப்பேரெயில்—பாண்டி நாட்டில் உள்ளது. 'திருப்பேர்' என்பது சோழ நாட்டில் உள்ளது (அப்பக் குடத்தான் சந்நிதி).

திங்களும் நாளும் விழாவ றாத
தென்திருப் பேரெயில் வீற்றி ருந்த
நங்கள் பிரானுக்கென் நெஞ்சம் தோழீ!
நாணும் நிறையும் இழந்த துவே.[25]

[நீள்முடி—நீண்ட கிரீடம்; தாழ்ந்ததாயும்—ஈடு பட்டதாயும்; அற்றுத் தீர்ந்தும்—அநந்யார்க மாகியும்; திங்கள்—மாதம்; அறாத—இடை யறாத; நிறை—காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்]

மகள் பாசுரம் : தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் தலைவி திருப்பேரெயில் சேரத் துணியும் நிலையைக் கூறும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் பராங்குச நாயகி, "தோழீ! எனது நெஞ்சம், சிவந்த கோவைக் கனிபோன்ற திருவதரத்திலே ஈடுபட்டதாயும், சிவந்த பிரகாசம் பொருந்திய நீண்ட திருமுடியிலே தங்கினதாயும், சங்கையும் சக்கரத்தையும் பார்த்து மகிழ்ந்ததாயும், தாமரை போன்ற திருக்கண்களுக்கு அற்றுத் தீர்ந்ததாயும், திங்கள்தோறும் நாட்கள்தோறும் திருவிழாக்கள் நடந்து கொண்டே இருக்கின்ற நங்கள் பிரானுக்கு நாணத்தையும் நிறையையும் இழந்து விட்டது" என்கின்றாள்.

செங்கனிவாய்...தீர்ந்தும் : இந்த முன்னடிகள் இரண்டிலும் செங்கனிவாய், திருமுடி, திருச்சங்கு, திருவாழி, திருக்கண் ஆகிய ஐந்திலே நெஞ்சு அகப்பட்டமை கூறப் பெறுகின்றது. செங்கனிவாய் முதலிய ஐந்தையும் ஒரு சேரச் சொல்லி இவற்றிலே என் நெஞ்சு ஈடுபட்டது என்னாமல் செங்கனிவாய் திறந்ததாயும், செஞ்சுடர் நீள்முடித் தாழ்ந்ததாயும் என்று பல வாக்கியங்களாகச் சொன்னது என்? என்னில்:

---

25. திருவாய். 7.3;3

தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைக்கண் டாரும் அஃதே[26]

என்ற கம்பநாடன் கூறுவதுபோல் ஆழ்வார் திருவுள்ள மானது தனித்தனி வடிவுகொண்டு ஒவ்வொரு அவயவம் தன்னிலும் தனித் தனியே சுழியாறுபட்டது என்பது இதனால் தெளிவாகும். இவ்விடத்தில் நம்பிள்ளை ஈடு: "ஸௌபரி என்பான் ஒருத்தன் ஒரு ஸுக்ருதமடியாக ஐம்பது வடிவு கொண்டானிறே: அவ்வளவல்லவிறே இவள் கலந்த விஷயம் பண்ணவல்லது. அவன் வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலேயாயிற்று இதுவும் அவய வங்கள்தோறும் தனித்தனி அகப்படவல்லபடி."

ஸௌபரி வரவாறு : இந்நூல் பாசுரம்—25இல் காண்க.

209

ஆழி யெழச்சங்கும் வில்லு மெழ, திசை
வாழி யெழத்தண்டும் வாளுமெழ, அண்டம்
மோழை யெழமுடி பாதமெழ, அப்பன்
ஊழி யெழவுல கங் கொண்ட வாறே.[27]

[ஆழி—சக்கரம்; தண்டு—கதை; வாழி—மங்களா சாசன ஒலி; மோழை—நீர்க் குமிழி; அப்பன் —சர்வேசுவரன்; கொண்ட — அளந்து கொண்ட; ஆறு—முறை.]

எம்பெருமானது வெற்றிச் செயல்களைப் பேசுவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம்; இதில் எம்

26. கம்பரா.பால. உலாவியல். 19

27. திருவாய். 7.4:1

பெருமான் திருவுலகு அளந்தருளின பெரிய வெற்றிச்செயல் பேசப்பெறுகின்றது. ஆழ்வார், ''திருவுலகு அளந்தருள வளருகின்றபோது, திருவாழியாழ்வான் முன்னான தோன்ற வும், பின் பாஞ்சசன்யம், கோதண்டம் ஆகிய இவைகள் தோன்றவும், எல்லாத் திசைகளினின்றும் மங்களாசாசனம் செய்கின்ற ஒலி தோன்றவும், கதை என்ன வாள் என்ன இவைகள் தோன்றவும், அண்ட முகடு பிளந்து, நீர்க் குமிழி தோன்றவும், திருமுடியும் திருவடியும் ஒருசேர எழும்படி யாகவும், நல்ல காலம் தோன்றும்படியாகவும் ஆயின; ஆதலால் என்னப்பன் உலகத்தை அளந்துகொண்ட விதம் என்னே!'' என்கின்றார்.

'ஆழி எழ' : தாய் ஆயிரக் காதம் பறப்ப தன் குட்டி ஐந் நூற்றுக் காதம் சிறகடித்துக் கொள்ளும் என்னுமாப் போலே, முற்கோலி வளர்ந்தபடி. சிறகடித்துக்கொள்ளுகை யாவது, பின்பு தூரப் பறப்பதற்குத் தகுதியாம்படி இளமை யிலே பயிலுதல். அச்சங்கொள்ளுதற்கு இடம் அல்லாத இடத்திலும் பயப்படக்கூடியவர்கள், அஞ்சத் தக்க இடத் தைக் கண்டால் வாளா இரார்களேயன்றோ? பயசங்கை இல்லாத இடத்திலும் அஞ்சும்படி செய்கிறது விஷய வைலட்சண்யம் அன்றோ? துரியோதனன் கோட்டியிலே கிருஷ்ணன் எழுந்தருளினபோது அவர்கள் செய்த வஞ்சத் தைக் கண்டு, அச்சங்கொண்டு, தம்முடைய திருமாளிகை யில் படுக்கையையும் தடவிப் பார்த்தாரே அன்றோ விதுராழ்வான்? ''மகா புத்திமானான அந்த விதுரர் கண்ணனுடைய படுக்கையைத் தடவிப் பார்த்தார்'' (பாரதம்-உத்தியோக) என்கிறபடியே, குடல் கலங்குவது தன்னளவிலே அன்றோ?

பேரன்பாலே கலங்குவதற்குக் காரணம் தெளிந்த ஞானமே' என்பதனை ஆப்த சம்வாதத்தாலே தெரிவிக் கின்றார்: பிள்ளையுறங்கா வில்லிதாசர் ''மகாமதி என்றது, மதிகேடர் எப்படியோ?'' என்றார். இந்த தாசர்தாம் பெருமான் எழுந்தருளும்போது ''எங்கேனும் ஒரு சலனம்

பிறக்கில் நம் பிராணனை விடுமத்தனை'' என்று சொட்டையை (வாளை) உருவிப் பிடித்துக்கொண்டு சேவிப்பாராம். நம் முதலிகள் அதனைக் கண்டு, இவரை ''மகாமதிகள்'' என்று அழைப்பார்களாம்.

210

கற்பார் இராமபிரானை : [28] (அவதாரிகை) ஆழ்வான் ஒருகால் இத் திருவாய்மொழிப் பத்துப் பாசுரங்களையும் இராமாவதார விஷயமாக்கி நிர்வகித்தாராம். அதற்குக் காரணம் : ஆயிரத்தில் ஒன்றும் கடலில் குளப்படியும் போலே, பெருமாளுடைய குணத்தில் ஒரு பகுதியே அன்றோ அல்லாத அவதாரங்கள் எல்லாவற்றிலும் உள்ளது ஆதலின். ''பேரெயில் சூழ்கடல் தென்னிலங்கை செற்ற பிரான்''[29] என்றும், ''மாறு நிரைத்திருக்கும் சரங்கள்''[30] என்றும் இராமாவதாரத்தினுடைய செயலை அநுசந்தித்து அவ் வழியாலே அன்றோ அவதாரங்களை அநுசந்திக்கின்றது. மற்றைய அவதாரங்களிலே ஈடுபட்டவர்களும் இராமவதாரம் பிராசங்கிகமாகச் (இடைப் பிறவரலாகச்) சொல்லவேண்டி வந்தால் ''மனத்துக் கினியானை''[31] என்றே அன்றோ சொல்லுவது? ''பட்டர் இராமவதாரத்தில் போர பட்சபாதித்து இருப்பர்'' என்று, அவர் அருளிச் செய்யுமது கேட்கைக்காகச் சிறியாத்தான் ஒரு நாள் ''பெருமாளுக்கு[32] எல்லா நன்மைகளும் உளவாகிலும் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன கிருஷ்ணன் நீர்மை

28. திருவாய். 7.5.
29. திரு. 7.3:7
30. ஷை,
31. திருப்பாவை-12
32. 'பெருமாள்' என்றது சக்கரவர்த்தித் திருமகனை;

இவருக்கு இல்லையே என்ன,"அஃது அங்ஙன் அன்றுகாண்; கழுத்திலே ஓலைகட்டித் 'தூதுபோ' என்பார் இல்லாமை யாலே தவிர்ந்தார் அத்தனை காண்" என்று அருளிச் செய் தார். நாடுடை மன்னர் வேறே சிலர் இலரே. முடி சூடிய இட்சுவாகு குலத்திலே பிறக்கையாலே போக விடுவாரைப் பெற்றது இல்லை. முடியைத் தவிர்ந்து சடையைப் புனைந்து நாட்டினை விட்டுக் காடு ஏறப் போனவர் தூது போகாமை இல்லை அன்றோ?

211

கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்
லால்மற்றும் கேட்பரோ,
கேட்பார் செவிசுடு கீழ்மை
வசவுக ளேவையும்
சேட்பால் பழம்பகை வன்சிசு
பாலன், திருவடி
தாட்பால் அடைந்த தன்மை
யறிவாரைத் யறிந்துமே?33

[கேட்பார்—கேட்க விரும்புகிறவர்கள்; கீர்த்தி—புகழ்; செவி சுடு—கர்ண கடூரமான; கீழ்மை-தண்ணிய; சேண்பால் பழம் — நெடுங் காலத்து; திருவடி—சுவாமி; தாள்—திருவடி]

எம்பிரானது விபவ-அவதார குணங்களை அநுபவித்து ஆளாகாத உலகத்தாரை நோக்கி இரங்குவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில், "பகவானைப் பற்றிய நிந்தை மொழிகளைக் கேட்கவேண்டும் என்னும் விருப்பமுடையவர்களுடைய செவிகளையும் சுடக் கூடிய தாழ்ந்த வசைச் சொற்களையே பேசிய, பல காலமாக

33. திருவாய். 7.5:3

வருகின்ற பழம் பகைவனான சிசுபாலன், கண்ணபிரானுடைய திருவடிகளை அடைந்த தன்மையை அறிவாரான ஞானிகளை அறிந்து வைத்திருந்தும், தாங்கள் உய்வதற்குரிய வழியைக் கேட்கவேண்டும் என்று இருப்பவர்கள் கேசவனுடைய கீர்த்தியை அல்லாமல் வேறு சிலவற்றையும் கேட்பாரோ?'' என்கின்றார் ஆழ்வார்.

'கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்'; இதற்கு ஈடு: ''பகவானுடைய நிந்தைக்கு ஜீவனம் வைத்துக் கேட்கும் தண்ணியர்களும் கூடப் பொறுக்கமாட்டாமை செவி புதைத்து, ''இத்தனை அதிரச் சொன்னாய், இப்படிச் சொல்லப் பெறாய் காண்' என்று சொல்லும்படியான வசவுகளையே வைதல்.''

ஐதிகம் : சிசுபாலனைப் போன்று நாமும் வைது மோட்சம் பெறலாமோ எனின், அது மோட்சம் அன்று என்கைக்கு ஓர் ஐதிகம் காட்டுகின்றார். ஆள வந்தார் ''சிசுபாலன் பெற்றிலன் காண்'' என்று அருளிச் செய்வர்; அதுஎன்? என்னில்: 'இதற்கு அடியாகச்சொல்லலாவது ஒரு சாதனம் இவன் கையில் இல்லாமையாலே; நாட்டை நலியாமைக்குக் கொற்றவன் (சுவாமி) வாசலுக்குள்ளே சுழற்றி எறிந்தான் அத்தனை காண்' என்று அருளிச் செய்வர். சிசுபாலனிடத்தில் என்ன நன்மை கண்டு எம்பெருமான் இங்ஙனம் அருள் செய்தான் என்னில்; வைகிறவனுக்கும் பேர் சொல்லி வைய வேணுமே; ஆகவே நாமசங்கீர்த்தன சுக்ருதம் பெரிதுங் கண்டானாயிற்று எம்பெருமான்.

212

கண்டும் தெளிந்தும்கற் றார்கண்ணற்
காளன்று யாவரோ
வண்டுண் மலர்த்தொங்கல் மார்க்கண்
டேயனுக்கு வாழுநாள்

இண்டைச் சடைமுடி ஈச
 னுடன்கொண் டுசாச்செல்ல
கொண்டங்குத் தன்னுடன் கொண்டுடன்
 சென்ற துணர்ந்துமே?[34]

[கண்டும்—கண்ணாரக் கண்டும்; தெளிந்தும்—நெஞ்சாரத் தெளிந்தும்; கண்ணற்கு-கண்ணனுக்கு அல்லாமல்; ஆள்—அடிமை; வண்டு உண்—வண்டுகள் மதுபானம் பண்ணும்; தொங்கல்—மாலை; வாழுநாள் — ஆயுளுக்காக; உடன் கொண்டு—தன்னோடு கூட அழைத்துக்கொண்டு; உசாச்செல்ல—பேசிக்கொண்டு செல்ல; கொண்டு — அவனை விஷயீகரித்த; உணர்ந்தும் — புராண முகத்தாலே அறிந்தும்]

எம்பிராற்கு ஆளாகாத உலகத்தாரை நோக்கி இரங்குவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒருபாசுரம். இதில் ஆழ்வார், "வண்டுகள் தேனை உண்ணுகின்ற மலர்களால் கட்டப் பெற்ற மாலைகளைத் தரித்த மார்க்கண்டேயனுக்கு வாழ்நாள் அளித்தல் சம்பந்தமாக, பூமாலையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் அவனைத் தன்னோடு அழைத்துக் கொண்டு, அறப்பெரியவனான சர்வேசுவரன் பக்கல் உசாவவேண்டும் என்று செல்ல, அந்த நிலையிலேயே அவனைக் காக்கவேண்டும் என்று திருவுள்ளத்தே கொண்டு தன்னோடே ஒத்த தன்மையையும் கொடுத்துப் பின் ஒரு நாளும் பிரியாதே சென்றபடியை உணர்ந்தும் கண்டும் தெளிந்தும் கற்றவர்கள் கண்ணபிரானுக்கு ஆள் ஆவரேயன்றி மற்று ஒருவருக்கு ஆவரோ? ஆகார்" என்கின்றார்.

---

34. திருவாய் 7.5;7

'மார்க்கண்டனைப் பற்றிய இதிகாசம்': மிருகண்டு என்னும் முனிவர் மக்கட்பேறு இல்லாக் குறையால் நான் முகனைக் குறித்து தவம் செய்தபோது, நான்முகன் அவன் முன்தோன்றி, 'முனிவரே! அறிவில்லாமையும் உறுப்புக் குறையும் பெரும் பிணியும் தீயகுணங்களும் உடையனாய் நூறாண்டு உயிர்வாழ்பவனான மகனை விரும்புகின்றீரோ? அன்றிக் கூரிய அறிவும் அழகு பொலிந்த வடிவமும் உடல் நலமும் நற்குணமு முடையனாய்ப் பதினாறு வயதே வாழ்பவனான மகனை விரும்புகின்றீரோ? சொல்லும்'' என்றார். முனிவர் 'குறைந்த ஆயுளும் நிறைந்த அறிவும் அழகும் குணமும் சிறந்து பிணியிலனாகும் நன் மகனையே வேண்டுகின்றேன்' என்று பதிலிறுத்தார். நான்முகக் கடவுள் அவ்வாறே வரம் அளித்தனர்,

இங்ஙனம் ஊழ்வினையால் பதினாறு வயது ஆயுள் பெற்றுப் பிறந்த நன்மகனான மார்க்கண்டேயன் தன் குறைந்த ஆயுளைப்பற்றி வருந்திய தாய் தந்தையரைத் தேற்றித் தான் விதியைக் கடந்து வருவதாகச் சொல்லி, நிறைந்த ஆயுள் பெறும்பொருட்டு நாடோறும் சிவபூசை செய்து வந்தான். ஒருநாள் யமன் தூதரை அனுப்பினான்; அவர்கள் மார்க்கண்டேயனின் தவக் கனலால் அவனை அணுகமுடியாமல் அவன் செய்து வரும் சிவபூசையின் சிறப் பைக்கண்டு வெருவியோடி யமனிடம் வந்து செய்தி சொல் லினர். யமனும் கோபித்துக் கொண்டு தனது மந்திரியான காலனை ஏவ, அவன் வந்து நயபயங்களால் அழைக்கவும் மார்க்கண்டேயன் வரமுடியாது என்று சொல்லிவிட்டான். பிறகு யமன் தானே நேரில்வந்து மார்க்கண்டேயனைக் காலபாசத்தால் கட்டி இழுக்கத் தொடங்குகையில் கம்முனி குமரன் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டான். யமன் சிவலிங்கத்தையும் சேர்த்து வலிந்து இழுக்கும்போது சிவபெருமான் சீமந்நாராயணனைச் சிந்தை செய்து அவன் திருவருள் பெற்று அங்கு நின்றும் வெளிப்பட்டுக் காலனைக் காலால் உதைத்துத் தள்ளி முனிமகனுக்கு என்றும் பதினாறு

வயதாகவே நிறை ஆயுளை ஈந்தருளினன் என்பது புராணத்தில் கண்ட வரலாறு.

இங்ஙனம் மார்க்கண்டேயனுக்கு அருள் செய்தது திருமாலின் அருளால் தான் பெற்ற சக்தியினாலே என்பதும், அச்சிவபிரானுக்கு அந்தராத்மாவாய் நின்று தொழில் செய்தவன் ஸ்ரீமந் நாராயணனே என்பதுமாகிய உண்மை பற்றி அவ்வரலாற்றைத் திருமாலின் மேலேற்றிக் கூறுவதும் உண்டு. திருமங்கையாழ்வார் பெரிய திரு மொழியில்.

> மன்னு நான்மறை மாமுனி பெற்ற
> மைந்த னைமதி யாதவெங் கூற்றந்
> தன்னை யஞ்சிநின் சரணெனச் சரணாய்த்
> தகவில் காலனை யுகமுனிந் தொழியா,
> பின்னை யென்றும்நின் திருவடி பிரியா
> வண்ணம் எண்ணிய பேரருள், எனக்கும்
> அன்ன தாகுமென் றடியிணை அடைந்தேன்
> அணிபொழில்திரு வரங்கத்தம் மானே.[35]

என்ற பாசுரத்தில் சிவபிரானுடைய இடமே இல்லாமல் அருளிச் செய்துள்ளார்.

மார்க்கண்டேயன் இங்ஙனம் நெடுநாள் வாழ்ந்து வருகையில் மகாப்பிரளயத்தைத் தான் காண்பதற்கு ஆசை கொண்டு எம்பெருமானைப் பற்றிப் பிரார்த்தித்து அங்ஙனம் காணும்போது, மகாப்பிரளயத்தில் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனையன்றி மற்றைத்தேவரையும் பிழைத் திருக்கக் காணாதவனாய் அப்பெருமானது திருவயிற்றி னுள்ளே அனைவரையும் கண்டு முடிவில் தான் நற்கதி பெறும் பொருட்டுத் திருமாலையே சரணம் அடைய, அப்

35. பெரி. திரு. 5.8:6.

பெருமானும் அவனைத் தன் திருவடிகளில் சேர்த்துக் கொண்டான் என்பது மார்க்கண்டேய சரிதத்தின் முடிவாகும்.

213

தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்
கின்பக் கதிசெய்யும்
தெளிவுற்ற கண்ணனைத் தென்குரு
கூர்ச்சட கோபன்சொல்
தெளிவுற்ற ஆயிரத் துள்ளிவை
பத்தும்வல் லாரவர்
தெளிவுற்ற சிந்தையர் பாமரு
மூவுல கத்துள்ளே.[41]

[தெளிவு-சொரூபத்தில் தெளிவு; உற்று-அடைந்து; வீவு—இடையீடு; பாமரு—பரந்திருக்கின்ற]

எம்பிராற்கு ஆளாகாத உலகத்தாரே நோக்கி இரங்குவதாக அமைந்த திருவாய்மொழியின் பலசுருதிப்பாசுரம், இதில் ஆழ்வார் "ஞானத்தைப் பெற்று அந்த ஞானத்திற்கு இடையீடு இல்லாமல் நின்ற அடியார்கட்கு மோட்ச உலகத்தைத் தருகின்ற ஞானமே சொரூபமான கண்ண பிரானை, அழகிய திருக்குருகூரில் அவதரித்த சடகோபரால் அருளிச் செய்யப் பெற்ற தெளிந்த ஆயிரம் திருப்பாசுரங்களுள் இவை பத்தையும் ஓதவல்லவர்கள் பரந்திருக்கின்ற மூன்று உலகத்திற்குள் தெளிந்த சிந்தையினையுடையராவர்" என்கின்றார்.

தெளிவுற்று நின்றவர்க்கு வீவு இன்றி நின்றவர்க்கு—உபாயமும் உபேயமும் அவனே என்று தெளிந்திருப்பவர்கட்கு; இந்தத் தெளிவு இருக்கச் செய்தேயும் சிலர் ஆபாச புத்திகளைக் கொண்டு வாதங்கள் செய்து புத்திபேதத்தை

36. திருவாய். 7.5:11

உண்டாக்க முயலக் கூடும். அப்போதும் தளராது இருப்பவர்கள் 'வீ'வின்றி நின்றவர்.' போர் செய்யேன் என்று நின்ற அருச்சுனன் கீதையைக்கேட்டுத் தலைக்கட்டிக் குழப்பம் தீர்ந்து "உன்னுடைய வார்த்தையின்படி செய்கின்றேன்"[37] என்றானன்றோ? அப்படிப் பட்டவர்களைச் சொல்லுகின்றது.

இவ்விடத்தில் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் ஒரு சம்வாதம் அற்புதமாக உள்ளது. "அருச்சுனன்தான் எம்பெருமானைப் பெற்றானோ? இல்லையோ?" என்று நம்பிள்ளை சீயரைக் கேட்டாராம். அதற்கு நஞ்சீயர் அளித்த மறுமொழி; "அர்ச்சுனன் பெற்றானா இல்லையா? என்ற விசாரம் உமக்கு எதற்காக? யார்யார் பெற்றார்கள்? என்று அவர்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தோ நாம் பற்றவேணும்? எம்பெருமானுடைய அருளிச் செயல் என்று இவ்வளவேகொண்டு நாம் பற்றவேணுமேயொழிய, பெற்றவர்களைப் பார்த்தன்று காணும். குளிர்ந்த தண்ணீர் கண்டால் அது குடித்து விடாய் தீர்கின்றோம்; இது குடித்து யார் யார் தாகவிடாய் தீர்ந்தார்கள்? என்று விசாரித்துப் பார்த்தா பருகின்றோம்? இல்லையே" என்று அருளிச செய்தாராம். இவ்விடத்தில்; "வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது நீர்க்கு இனிது என்று உண்பவோ நீருண்பவர்" (கலி-62) என்ற அடிகளில்வரும் தலைவன் கூற்றோடு வைத்து இஃது எண்ணத்தகும்")

214

'பாகவரு மூவுலகம்[38] (அவதாரிகை) எம் பெருமானது குணம், அழகு முதலியவற்றில் ஆழ்வார் ஈடுபட்டு அவனைக் காணுமாறு மனம் உருகி அழைத்தலைக் கூறும் திருவாய்

37. கீதை. 18:72

38. திருவாய் 7.6.

மொழி இது. எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவிக்க வேண்டும் என்கிற விருப்பம் தமக்குக் குறையற உண்டா யிருக்கச் செய்தேயும் அவ்வநுபவம் பெறாமையினாலே யான இழவு பொறுக்க வொண்ணாதிருந்ததனால், தம் முடைய ஆர்த்தி[39] யெல்லாம் தோற்றப் பரமபத நாதனு டைய திருச்செவியளவும் படும்படியாகப் பெருமிடறு செய்து கூப்பிடுகின்றார் இத்திருவாய்மொழியில்.

அம்மங்கி அம்மாள் என்னும் ஆசிரியர் "இத்திருவாய் மொழி பாடக் கேட்டு இதன் சப்த ராசிகளை வாயாற் சொல்லவும் காதாற் கேட்கவும் அதிகாரிகளே தவிர, இதில் ஆழ்வார்க்குச் செல்லுகின்ற ஆர்த்தி இப்படிப்பட்ட தென்று எடுத்துரைக்க நாம் அதிகாரிகளல்லோம்" என் பாராம்.

215

ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கி
லாதஓர் ஐவர் வன்க யவரை
என்று யான்வெல் கிற்பனுன்
திருவருள் இல்லையேல்!
அன்று தேவர் அசுரர் வாங்க
அலைகட லரவம் அளாவி,ஓர்
குன்றம் வைத்த எந்தாய்
கொடியேன் பருகுஇன் அமுதே![40]

[ஒன்று—ஒருவிஷயம்; ஒருத்து—ஒருமைப்பாடு; நிற்கிலாத—ஆறியிருக்கமாட்டாத; கயவர்— கீழ்மக்கள்; என்று— எப்பொழுது; வெல் கிற்பன்—வெல்ல வல்லவனாவேன்; அன்று—

39. ஆர்த்தி—துக்கம்.

40. திருவாய். 7, 6. 7.

பண்டொரு காலத்தில்; வாங்க—வலிக்கும் படியாக; அரவம் அளாவி—பாம்பைச் சுற்றி; ஓர் குன்றம்—மந்தர மலை; வைத்த-நாட்டின; கொடியேன்—பாவியாகிய யான்; பருகு—பருகும்படியான]

'இந்திரியங்களால் இன்னும் எத்தனை நாள் துன் புறுவேன்' என்று ஆழ்வார் வருந்தும்படியாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "அக்காலத்தில் தேவர்களும் பின்வாங்கி, அலைகளை யுடைய கடலிலே வாசுகி என்னும் பாம்பினைச் சுற்றி ஒப்பற்ற மந்தரம் மலையை வைத்த எந்தையே! கொடியே னாகிய அடியேன் பருகுவதற்குரிய அமுதாய் இருப்பவனே! ஒரு விஷயத்தைச் சொல்லி அந்த ஒருமைப் பாட்டிலேயே நில்லாத ஒப்பற்ற ஐம்பொறிகளாகிய வலிய கயவர்களை, உன்திருவருள் இல்லையேல் என்றைக்குயான் வெல்வேன்?" என்கின்றார் ஆழ்வார்.

அன்று தேவர் ...குன்றம் வைத்த எந்தாய்: இதில் அடங்கி யுள்ள இதிகாசம் : முன்னொரு காலத்தில் இவ்வண்ட கோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணு லோகத்திற்குச் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை அளிக்கப்பெற்றாள் வித்தியாதர மகள் ஒருத்தி. அவள் மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் வீணையில் தரித்துக் கொண்டு பிரம லோகம் வழியாகத் திரும்பி வருகையில் துர்வாசமாமுனி அவளை வணங்கித் துதிக்க, அவ்விஞ்சை மங்கை அம் மாலையை அம் முனிவருக்கு அளித்திட்டாள். முனிவர் அம்மாலையின் பெருமையை உணர்ந்து அதனைத் தலைமேல் கொண்டு களிப்புடன் உம்பர் உலகிற்கு வந்தார். அப்பொழுது அங்கு வெகு உல்லாசமாக ஐராவதத்தின் மீது பவனி வந்து கொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக் கொடுத்தார். இந்திரன் அதை மாவட்டியினால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தான். அம் மதயானை அவனைத்

துதிக்கையாற் பிடித்திழுத்துக்கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது. அதுகண்டு முனிவர் கடுஞ்சினங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற உன்னுடைய ஐசுவரியங்களையெல்லாம் ஒளிந்து விடக் கடவன' என்று சபிக்க, உடனே தேவர்களின் செல்வமெல்லாம் ஒழிந்தன; ஒழியவே அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர். பிறகு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணம் அடைந்தான். அப்பிரான் அபயமளித்தான். அவன் கட்டளைப்படி அசுரர்களைத் துணையாகக் கொண்டு மந்தரமலையை மத்தாகவும் வாசுகியைக் கடை கயிறாகக் கொண்டு பாற்கடலைக் கடையலாயினர். அப்பொழுது மந்தர கிரி கடலில் அழுந்தியது. தேவர்களின் வேண்டுகோளின்படி திருமால் பெரியதோர் ஆமைவடிவங் கொண்டு அம்மலையின்கீழ்ச் சென்று அதனைத் தன் முதுகினால் தாங்கி அம்மலை மீண்டும் அழுந்தி விடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந் தருளியிருந்தனன். இந்நிலையில் வாசுகியின் வாலைப் பிடித்துக் கொண்டு தேவர்களும், தலையைப் பிடித்துக் கொண்டு அசுரர்களும் கடையத் தொடங்கினர். இருவரும் கடைய வலிமையற்றவராய் நின்றனர். அது நோக்கித் திருமால் தான் ஒரு வலிய திருமேனியைத் தரித்து இரு சாரார் பக்கத்திலேயும் நின்று வாசுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளின் அப்பால் திருமால் தன்வந்தரி என்னும் தேவ உருவத்தை மேற்கொண்டு அமுதம் நிறைந்த கமண்டலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தப் பாற் கடலிலிருந்து தோன்றினன். அப்பொழுது அசுரர்கள் தந் வந்திரியின் கையிலிருந்த அமுதகலசத்தை வல்லந்தமாகப் பிடுங்கிக் கொண்டனர். எம்பெருமான் காண்பாரை ஈர்க்கும் அழகிய ஒரு பெண் வடிவத்தைத் தரித்து அசுரர்களை மயக்கி வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர் களின் குழுவிற்கு மாத்திரம் படைத்தனன்.

216

ஆணியைக் காண்பரி யாய்அரி
காண்நரி யாய், அரக்கர்
ஊளையிட் டன்றிலங்கை கடந்து
பிலம்புக்கு ஒளிப்ப
மீளியம் புள்ளைக் கடாய்விறல்
மாலியைக் கொன்று, பின்னும்
ஆளுயர் குன்றங்கள் செய்துஅடர்த்
தானையும் காண்டும்கொலோ?[41]

[யாளி—மிருக விசேடம்; பரி—குதிரை; அரி—சிங்கம்; ஊளையிட்டு—கதறிக் கொண்டு; கடந்து—விட்டு; பிலம்—பாதளம்; மீளி—மிடுக்கு; புள்—கருடன்; கடாய்—நடத்தி; விறல்—வலிய; அடர்த்தானையும்—அழித்த பெருமானையும்; காண்டும் கொல்—காணப் பெறுவோமோ]

எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றில் ஆழ்வார் ஈடுபட்டு அவனைக் காணுமாறு மனம் உருகி அழைப்பதாக அமைந்த திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''யாளியைக் கண்ட குதிரை போலவும், சிங்கத்தைக் கண்ட நரி போலவும் ஆகி அரக்கர்கள் கதறிக்கொண்டு, அக்காலத்தில் இலங்கையை விட்டுப் பிலத்திலே சென்று மறைய, வலிய அழகிய கருடப் பறவையை நடத்தி வலிமையான மாலி என்றவனைக் கொன்று குவித்த சர்வேசுவரனையும் காணக்கூடுமோ?'' என்கின்றார்.

அரக்கர், ஊளையிட்டு...ஆளுயர் குன்றங்கள் செய்து; இதில் அடங்கிய இதிகாசம்: இந்நூல் பாசுரம்—83 இல் காண்க.

---

41. திருவாய்: 7. 6: 8

217

என்றைக்கும் என்னை
    உய்யக்கொண்டு போகிய
அன்றைக்குஅன்று என்னைத்தன்
    னாக்கியென் னால்தன்னை
இன்தமிழ் பாடிய
    ஈசனை ஆதியாய்
நின்றஎன் சோதியை
    என்சொல்லி நிற்பனோ? 42

[என்னை-விஷயீகாரப் பெறா திருந்த அடியேனை; என்றைக்கும்—முதலிலேயே சாசுவதமாக அங்கீகரித்து; போகிய அன்றைக்கு அன்று—நிகழ்கின்ற நாள்தோறும்; தன்னாக்கி—தன்னோடொத்த ஞான சக்திகளுடையனாம் படியாக்கி; இன்தமிழ் — இனிய தமிழ்ப் பிரபந்தம்; பாடிய—பாடுவித்துக் கொண்ட; ஆதியாய் நின்ற—மூலகாரணமாய் இருந்து; நிற்பன்—தரிப்பேன்]

இன் கவிபாடும் பேற்றை எம்பெருமான் தமக்கு அருளியமைக்குக் கைம்மாறு இல்லை எனக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "காலம் என்னும் ஒருபொருள் உள்ள வரையிலும் உய்விக்கத் தகுதியாம்படி அங்கீகரித்துக் கழிகின்ற நாள்கள்தோறும் என்னைத் தனக்கு அடிமையாக்கி, என்னால்தன் இனிய தமிழ்ப் பாசுரங்களைப் பாடுவித்துக்கொண்ட ஈசனை, காரணமாய் நின்ற என்சோதியை என்ன என்றுசொல்லித் தரிப்பேன்?" என்கின்றார்.

'என்னைத் தன்னாக்கி......ஈசனை' : அறிவின்மை, ஆற்றலின்மை இவைகட்கு இலக்காய் இருக்கிற என்னை,

---

42. திருவாய். 7. 9: 1

தன்னோடு ஒக்க ஞானம் சக்தி முதலாயினவைகளை யுடையேனாம்படி செய்து, தன்னாலே சக்தியைப் பெற்ற வனான என்னாலே, வேதங்கள் ஸ்மிருதிகள் இதிகாசங்கள் முதலானவைகட்கும் அறிய முடியாதவனாக இருக்கிற தன்னை, என்னைக் கொண்டு பாடுவித்தான். நான் கவி பாடுகைக்குக் காரணமாய் நின்றான்; அவன் அடியாகக் கவி பாடினேன். பிடாத்தை (போர்வையை) விழவிட்டுத் தன் வடிவழகைக் காட்டினான். 'திருத்திரை எடுத்தாற், கூப்பிடுமாறுபோல் கூப்பிட்டேன்; அது கவியாய்த் தலைக் கட்டிற்று.

இப் பாசுரத்திற்கு ஐதிகம் : இதற்கு ஆளவிந்தார் அருளிச் செய்யும்படி : "சர்வேசுவரன் செய்யப் புக்கால் அரியதும் ஒன்றும் உண்டோ?" என்றாகும். அங்ஙன் அன்றிக்கே, எம்பெருமானார், "இவர்தாம் சொன்னாராகி லும் ஒரு படி போகச் சொல்லித் தலைகட்டுவர்; அவனும் தானே சொன்னானாகில் ஒரு குற்றமும் இல்லாதபடி தலைக்கட்டுவான்; சிறு குழந்தை எழுதிடப்புக்கால் தானே ஏதேனும் ஒரு படி இட்டுத் தலைக்கட்டும்; தந்தையாதல் உபாத்தியாயனாதல் இடப்புக்கால் தானே எழுத்தாய் இருக்கும்; அங்ஙன் அன்றிக்கே, இவன் கையைப் பிடித்து இடுவிக்கப்புக்கவாறே, இவன் ஓரிடத்தே இழுக்கக் குதறிக் கொட்டியாய் உருவம் அழிந்து சிதறிப்போம்; அப்படியே என்னை உபகரணமாகக் கொண்டு கவி பாடா நிற்கச் செய்தேயும், என்னால் வரும் குற்றம் தன்பக்கல் தீண்டாத படி பாடுவித்தான் என்கின்றார்" என்று அருளிச் செய்வர்.

218

என்சொல்லி நிற்பன்?என்
இன்னுயிர் இன்றுஒன்றாய்
என்சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்

தன்சொல்லால் தான்தன்னைக்
 கீர்த்தித்த மாயன்என்
முன்சொல் லும்மு
 வுருவாம் முதல்வனே.43

[என்சொல்லி—எதைச்சொல்லி; என் இன் உயிர்—என்னுடைய ஆன்மா; ஒன்று ஆயர்—தனக்கொருபொருளாக; இன்கவி-இனிய பிரபந்தம்; தன் சொல்லால்—தன் உக்திகளால்; தான் தன்னை—தானே தன்னை; கீர்த்தித்த—புகழ்ந்து; என்முன் சொல்லும்—என் உள்ளேயிருந்து முதலில் சொல்லுகின்ற; மாயன்—ஆச்சரிய பூதன்; மூவுருமாம் முதல்வன்-திரிமூர்த்தியாயிருக்கும் காரண பூதன்]

இன்கவி பாடும் பேற்றை எம்பெருமான் தமக்கு அருளியமைக்குக் கைம்மாறு இல்லையென்று கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "என்னுடைய இனிய உயிரானது இன்று ஒரு பொருளாகும்படி, என் சொல்லால் ,யான் சொன்ன இனிய கவி என்பதாகப் பலர் அறியும்படி செய்து தன் சொல்லால் தானே தன்னைப் புகழ்ந்து பாடிய ஆச்சரியத்தையுடையவனும், எனக்கு முன்னே சொல்லுகின்ற, மும்மூர்த்திகளின் உருவமாய் இருக்கின்ற முதல்வனுமான எம்பெருமானை எந்தக் காரணத்தைக் கொண்டு தரித்திருப்பேன்?" என்கின்றார்.

என்சொல்லால்......இன்கவி என்பித்து : சொல்லும் என்னதாய் சொன்னேனும் நானாய், அதுதான் இனிய கவியாம்படி நாட்டிலே பிரசித்தமாக்கினான்.

தன்சொல்லால்......கீர்த்தித்த : சொல்லும் தன்னது, சொன்னவனும்தான், சொல்லிற்றும் தன்னை,

43. திருவாய். 7,9;2

தான்தன்னைக் கவி பாடினானகில் நீர் கவி பாடினீர் என்று நாட்டிலே பிரசித்தமானபடி எங்ஙனே? என்னில்: மாயன்—சொல்லவேணுமோ? ஆச்சரியமான சக்தியோடு கூடினவன் அன்றோ?

என்னைக் கருவியாகக் கொண்டுதானே கவி பாடினான்; இஃது எங்ஙனே என்னில்: எஃ முன் சொல்லும்—அவன் முன்னே சந்தையிடப் பின்னே நான் சொன்னேன். தான் சொன்னானாகில் கீதையைப் போன்று வறமுறுக லாய்ப் (கருகிப் போதலாய்ப்) போம் அன்றோ?

இவ்விடத்தில் ஓர் ஐதிகம்: நம்பி திருவழுதி நாடு தாசர், "கீதை போவான் ஒருவன் சந்தியா சதஸ்ஸிலே[44] வந்து கண்டால், பின்னை இவனுக்கு உழக்கு அரிசியைக் கொடுப் பித்துவிடுமத்தனை போக்கி அங்கு அவர்கள் உள்ளிடம் கொடார்கள்; திருவாய்மொழி கற்றவன் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், சர்வேசுவரனும் கிராமத்தி லுள்ளாரும் புறப்பட்டு எதிர்கொண்டு தங்கள் இருப் பிடத்தை ஒழித்து அவனுக்குக் கொடுத்து ஆதரியா நிற்பார்கள்" என்று அருளிச் செய்வர்.

219

ஆம்முதல் வன்இவன் என்றுதன் தேற்றிஎன்
நாமுதல் வந்து புகுந்துநல் இன்கவி
தூமுதல பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பனை என்று மறப்பனோ?[45]

[இவன் ஆம் முதல்வன்—'இவன் பிரபந்த ஜன கூடஸ்தனாகக் கடவன்' என்று திருவுள்ளம் பற்றி; தன்தேற்றி—தெளிவைப் பிறப்பித்து;

44. சந்தியா சதஸ்ஸு—ஊர்ப் பொதுச் சாவடியில் மாலை நேரத்தில் நடைபெறும் கூட்டம்.

45. திருவாய். 7.9.3

தூமுதல் பத்தர்க்கு—முமுட்சுகளுக்கு; தான் தன்னை சொன்ன—தானே தன்னைப் பாடின; வாய் முதல் அப்பன்—வாக்குக்கு முதல்வனான மகோபகாரகனை; என்று—என்றைக் காவது; மறப்பனோ—மறக்கமாட்டேன்]

இன்கவி பாடும் பேற்றை எம்பெருமான் தமக்கு அருளியமைக்குக் கைம்மாறு இல்லை என்பதாகக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் ''கவி பாடுகைக்கு முதல்வன் ஆவான இவன் என்று தன்னை நான் தெளியும்படி செய்து, முதலில் என் நாவில் வந்து புகுந்து நல்ல இனிய கவிகளை முதன்மை பெற்ற பரிசுத்தரான அடியார்கட்குத் தானே தன்னைச் சொன்ன என் வாக்கிற்குக் காரணனான அப்பனை இனி ஒரு நாளும் மறக்க உபாயம் இல்லை'' என்கின்றார்.

ஆம் முதல்வன் இவன் என்று தன்தேற்றி : முதல்வன் ஆம் இவன் என்று தன் பக்கலில் எனக்குத் தெளிவு உண்டாகச் செய்து. இதற்கு இரண்டு வகையான நிர்வாகம். முதல்வன் என்பது எம்பெருமானிடத்திலே அந்வயிப்பதாக ஒரு நிர்வாகம். அதாவது, இந்த எம்பெருமானே ஜகத்காரண பூதனென்று தன் பக்கலில் எனக்குத்தெளிவு பிறக்கும்படியாகப் பண்ணி என்பது முதல் நிர்வாகத்தின் பொருள். மற்றொரு நிர்வாகம் முதல்வன் என்பது ஆழ்வாரிடத்தில் அந்வயிப்பது.: குருகூர்ச் சடகோபனாகிய இவன் சம்சாரிகளைத் திருத்திப் பணி கொள்ளும் விஷயத்திலே முதல்வனாகப் கடவன்—தலைவனாகக் கடவன்—என்று திருவுள்ளம்பற்றி என் பக்கலில் தன் சொரூபம் முதலியவைகளைத் தெளியப் பண்ணி என்பது இரண்டாம் நிர்வாகத்தின் பொருள்.

இங்கு பிராசங்கிகமாக (இடைப்பிறவரலாக) ஓர் ஐதிகம் : இங்கே அருளிச் செய்யும் வார்த்தை—''திருப் புற்றுக்குக் கிழக்கே காரியமாணிக்காழ்வார் திருமுன் பின்

படிக் கட்டிலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளி நிற்கின்றவரைக் கண்டு 'ஆம் முதல்வன் இவன்' என்று அருளிச் செய்தாராம்'' என்பது. அதாவது, காஞ்சி அஸ்திகிரியின் திருமடைப்பள்ளி வலம்வரு வீதியிலே ஆளவந்தார் யாதவப் பிரகாசனோடே இருந்த எம்பெருமானாரைத் திருக்கச்சி நம்பிகள் மூலமாகத் தெரிந்துகொண்டு 'ஆம் முதல்வன்' என்று குளிரக் கடாட்சித்தருளின ஐதிகத்தை அருளிச் செய்தபடி. இதனால் இரண்டாவது நிர்வாகம் ஆளவந்தார் திருவுள்ளத்திற்கு மிகவும் இணங்கியதென்று காட்டினபடியாகும்.

220

வாய்க்குங்கொல் நிச்சலும் எப்பொழு
 தும்மனத்துஈங்கு நினைக்கல்பெற,
வாய்க்கும் கரும்பும் பெருஞ்செந்
 நெலும்வயல் சூழ்திரு வாறன்விளை
வாய்க்கும் பெரும்புகழ் மூவுல
 கீசன்வடமது ரைப்பிறந்த
வாய்க்கும் மணிநிறக் கண்ணபி
 ரான்றன்மலரடிப் போதுகளே.[46]

[வாய்க்குங்கொல்—வாய்க்குமோ; நிச்சல—நாள் தோறும்; எப்பொழுதும் — எல்லா நேரத்திலும்; வாய்த்த—தகுதியான; வாய்க்கும்—வாய்த்த; வாய்க்கும்—அநுபவிக்க வாய்த்த; மலர் அடிப்போதுகள் — திருவடித் தாமரைகள்]

இது திருவாய்மொழியில் திருவாறன்விளை எம்பெருமானைக் கண்டு அடிமை செய்ய எண்ணும் பாரிப்பைக்

46. திருவாய். 7.10:4

கூறும் பாசுரங்களில் ஒன்று. ஆழ்வார், "தகுதியான கரும்புகளும் பெரிய செந்நெற் பயிர்களும் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருவாறன்விளை என்னும் திவ்வியதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற, மிகு புகழையுடைய மூன்று உலகங்கட்கும் தலைவனும், வட மதுரையிலே அவதரித்த நீலமணி போன்ற நிறத்தையுடைய கண்ணபிரானுமான எம்பெருமானது இணைத்தாமரை மலரடிகளை, இங்கே இருந்துகொண்டே மனத்திலே நினைப்பதற்கு எல்லா நேரத்திலும் நாடோறும் வாய்க்குமோ?" என்று பார்க்கின்றார்.

நம்மாழ்வார் எந்தத் திருக்கோயிலையும் நேரில் சென்று சேவிக்கவில்லையென்றும் ஆழ்வார் திருநகரியிலுள்ள திருப்புளியாழ்வாரின் திருவடியிலிருந்துகொண்டே எல்லாத் திருப்பதி எம்பெருமான்களையும் பாசுரங்களால் பரவினார் என்றும் ஒரு கொள்கை நிலவி வருகின்றது. இக்கொள்கையினை 'ஈங்கு நினைக்கப் பெற' (முதலடி) என்ற சொற்றொடர் அரண் செய்வதாகக் கருதலாம். சரீர சம்பந்தம் அற்றுப் பரமபதத்திலே போய் ஏற்றமாக அநுபவிப்பதைவிட மனோரத மாத்திரத்தாலே அநுபவிப்பதையே பேறாகக் கருதுகின்றார் ஆழ்வார். இதனை விளக்க ஓர் ஐதிகம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர்.

ஐதிகம் : "முற்காலத்தில் 'இளையாற்றுக்குடி நம்பி' என்ற பரம பக்தர் ஒருவர் இருந்தனர். நம்பி திருநாட்கள் தோறும் கோயிலுக்கு வந்து பெருமாளைச் சேவித்துப் போவாராம். திரும்பவும் திருநாள் வருந்துணையும் அதனையே பொழுதுபோக்காக நினைத்துக் கொண்டிருப்பாராம். ஒருநாள் ஒரு திருநாளின் வைபவத்தை நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது 'அமுது செய்கைக்குப் போது வைகிற்று' என்றார்களாக; 'ஆகில் வருகிற திருநாள் அணித்தாகிறது' என்றாராம். அவர் நூறு வயதும் புகுகையாலே வலிமை குன்றி திருமுளைத் திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவ வந்து புகுரப் பெற்றிலர்;

பெருமாளும் அவரைத் தேடியருளிக் காணாமல் 'நம் இளையாற்றுக் குடியான் வந்திலன்; நங்கண்ணாலம் அல்லவோ?' என்று திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறாந் திருநாளிலே சேவித்திருக்கச் செய்தே 'நாம் உனக்குச் செய்ய வேண்டுவது என்?' என்று கேட்டருள, 'தேவரீர் தந்தருளின சரீரத்தைக் கொண்டு போரக் காரியம் கொண்டேன்; இனிப் போக்குவரத்துக்குத் தகுதியில்லாதபடி போர இளைத்தது என்ன, 'வாராய், மெய்யே இளைத்தேயாகில் இங்ஙனே இரு' என்று அருளிச் செய்தார்; பெருமாள் நடுவில் திருவாசலுக்கு அவ்வருகே எழுந்தருளுங் காட்டில் அவர் திருநாட்டிற்கு எழுந்தருளினார்'' என்பதாக.

221

மலரடிப் போதுகள் என்நெஞ்சத்து
எப்பொழு தும்இருத் திவணங்கப்
பலரடி யார்முன்பு அருளிய
பாம்பணை யப்பன் அமர்ந்துறையும்
மலரின் மணிநெடு மாடங்கள்
நீடு மதிள்திரு வாறன்விளை
உலகம் மலிபுகழ் பாடநம்மேல்
வினைஒன்றும் நில்லா கெடுமே. [47]

[இருத்தி—இருக்கப்படி பண்ணி; வணங்க—தன்னையே வணங்குமாறு; அடியார்—பக்தர்கள்; அமர்ந்து—உகந்து; நெடு—ஓங்கின; நீடு—நெடிய; பாட—பாடின அளவிலே]

இதுவும் நம்மாழ்வாரின் திருவாறன்விளை எம்பெருமான்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருவாய்மொழிப் பாசுரம். இதில் ஆழ்வார், ''மலர்ந்த திருவடித்

47. திருவாய். 7.10;5

தாமரைகளை என்னுடைய நெஞ்சத்திலே இருத்தி எப்பொழுதும் வணங்கும்படியாக, அடியார்கள் பலர் முன்பு செய்த பாம்பணையப்பன் மனம் பொருந்தி எழுந்தருளியிருக்கின்ற பூக்கள் நிறைந்த அழகிய ஓங்கின மாடங்களையும் நீண்ட மதிள்களையுமுடைய திருவாறன்விளை (இப்பொழுது 'ஆரமுல்லா' என வழங்குகின்றது; கேரள மாநிலத்தில் செங்கன்னூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 25 கி. மீ. பேருந்து வசதி உண்டு) என்னும் திவ்விய தேசத்தினது உலகம் எங்கும் நிறைந்த புகழை நாம் பாட, நம்மிடத்திலுள்ள வினைகள் ஒன்றும் நில்லாமல் கெட்டு விடும்'' என்கின்றார்.

'பலரடியார் முன்பு அருளிய' : இங்கு ஆழ்வானுடைய அற்புதமான இதிகாசம் ஒன்று ஈட்டாசிரியரால் காட்டப் பெற்றுள்ளது. அது இது; அக்காலத்தில் அரசோட்சி வந்த சோழ மன்னன் வைணவத்தை வெறுப்பவன்; அவன் ஆங்காங்குள்ள திருமால் சிலைகளை எடுத்து எறிந்துவிட முயன்றபோது அவனுக்கு நெருங்கிய நண்பர்கள் 'மந்திர பூர்வமாகச் செய்யப்பெற்ற திருமால் சிலைகளை அழியச் செய்தால் ஊருக்குப் பெருந் தீங்கு விளையும்' என்று சொல்லவே, அதுகேட்ட அரசன் 'அந்தப் படிமங்களின் தெய்வ சக்தியை உத்வாசனம் பண்ணியழியச் செய்வோம்' என்று நிச்சயித்து ஒரு பிராமணனுக்குச் செல்வம் தந்து அவனுக்கு அப்பணியை இட்டான். அவனும் திவ்விய தேசங்களுக்குச் சென்று உத்வாசனம் பண்ணி பகவத் திருமேனிகளைக் கடலில் எடுத்தெறியும் செய்தி எம்பெருமானார்க்கு எட்டியது. 'நாம் நெடுநாளாக திருவரங்கம் பெரிய கோயிலை விடாது நோக்கிக் கொண்டு வருகின்றோம்; இவ்விடத்திற்கு அழிவு வரும்படி ஆசுர வர்க்கம் மேலிடா நின்றது; இனிமேல் செய்ய வேண்டுவதென்ன?' என்று வருத்தமெய்தி பெரிய நம்பியுடன் சிந்தித்திருக்க; 'நான் பெருமாளுடைய திருவெல்லையிலே ஒரு பிரதட்சிணம் வரும்படியாக உம்முடைய சீடர்களில் ஒருவரை என்

பின்னே அனுப்ப வேண்டும்; என் பின்னே வாரா நின்றால் 'ஒருவன் பின்னே போகின்றோம்' என்று, தன் நெஞ்சில் படாத நிழல்போல் என்னைப் பின் தொடர்பவனாக இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட ஒரு சீடனைத் தேர்ந் தெடுத்து அனுப்புக' என்று பெரிய நம்பி திருவாய் மலர்ந் தருள, இப்படிப்பட்ட ஆண்ம குறை பரிபூரணரான சீடர் ஆழ்வான் ஒருவனே என்பது உடையவருக்கு நன்கு தெரிந் திருந்தும், இதனைப் பெரிய நம்பியின் திருவாக்கினால் வெளிப்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு நம்பியை நோக்கி, 'இப்படிப்பட்ட சீடன் ஒருவன் இவ்விடத் தில் இருப்பதாகத் தெரியவில்லையே' என்று சொல்லி நிற்க, 'நம் கூரத்தாழ்வானை அனுப்பலாகாதோ?' என்று நம்பி நியமித்தருள, அருகிலிருந்த ஆழ்வான் இதைக் கேட்டு 'நம்பிகள் நம் உண்மையான இயல்பை இங்ஙனே யறிந்து பல சீடர்களின் முன்னே இப்படி அருளிச் செய்யும் படியான பேறு பெற்றோமே' என்று பெருமகிழ்ச்சி யடைந்து, நம்பிகளின் திருவுள்ளப்படியே பிரதட்சிணத்திற் குப் பின் சென்றார். இந்து இவ்விடத்திற்குப் பொருத்த மான இதிகாசம்.

222

ஒன்றுநில் லாகெடும் முற்றவும்தீவினை;
　　யுள்ளித் தொழுமின் தொண்டீர்
அன்றங் கமர்வென் றுருப்பிணிநங்கை
　　யணிநெடுந் தோள்பு ணர்ந்தான்
என்றுமெப் போதுமென் னெஞ்சம் துதிப்பவுள்
　　ளேயிருக் கின்றபிரான்
நின்ற அணிதிரு வாறன்வி ளையெனும்
　　நீள்நக ரம்அதுவே.[48]

---

48. திருவாய். 7.10;6

[ஒன்றும் நில்லா—ஒன்றும் மீதமில்லாதபடி; முற்றவும்—முழுதும்; தீவினை—கொடிய பாவங்கள்; உள்ளி—சிந்தித்து; அன்று—முன்பு ஒரு காலத்தில்; அமர்—போர்; உருப்பிணி—உருக்குமிணி; என்றும் எப்போதும்—ஓய்வின்றி; நின்ற—கோயில் கொண்டுள்ள; அணி—அழகிய]

திருவாறன்விளை சென்று, எம்பெருமானைக் கண்டு ஆழ்வார் அடிமை செய்வதாகக் கருதுவதைக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "உருக்குமிணிப் பிராட்டி காரணமாகச் சிசுபாலன் போருக்கு வந்த அக்காலத்தில் போரிலே அவனை வென்று உருக்குமிணிப் பிராட்டியினது அழகிய நீண்ட தோள்களைச் சேர்ந்தவனும், எல்லாக் காலத்திலும் எல்லா நேரத்திலும் என் நெஞ்சமானது துதிக்க என் மனத்திற்குள்ளே எழுந்தருளியிருக்கின்ற உபகாரகனுமான எம்பெருமான் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கின்ற அழகிய திருவாறன்விளை என்னும் பெரிய நகரத்தை, தொண்டீர்! நினைந்து வணங்குங்கள்; தீவினைகள் ஒன்றும் நில்லாவாய் முழுதும் அழிந்து விடும்" என்கின்றார்.

அமர்வென்று உருப்பிணி நங்கை நெருந்தோள் புணர்ந்த வரலாறு: விதர்ப்ப நாட்டில் குண்டினபுரம் நகரை ஆண்டு வந்தவன் பீஷ்மகன் என்னும் அரசன். இவனுக்கு உருக்குமன் முதலிய ஐந்து பிள்ளைகளும் உருக்குமிணி என்ற ஒரு பெண்ணும் இருந்தனர். உருக்குமிணி திருமகளின் அவதாரம். இவளுக்குத் தக்க வயது வந்தவுடன் கண்ணபிரான் அங்குச் சென்று அப் பெண்ணைத் தனக்குத் தாரை வார்த்து மணம் முடிக்குமாறு கேட்க, உருக்குமன் என்பவன் அவளைச் சிசுபாலனுக்குக் கொடுக்க நினைத்துக் கண்ணனுக்குக் கொடுக்க மறுத்து விட்டான். சின்னாட்கள் கழித்து உருக்குமிணியின் திருமணத்திற்காகச் சுயம்வரம் கோடித்து எல்லா நாட்டரசர்கட்கும் ஓலை போக்கினான். இதற்கிடையில்

உருக்குமிணி 'அன்றிப்பின், மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ் சோலை யெம்மாயற் கல்லால்' (பெரியாழ். திரு. 3.4:5) என்ற துணிவையுடையவளாகை யால் தன்னை எவ்வகையாலாகிலும் மணந்து செல்லுமாறு கண்ணனிடம் ஓரந்தணனைத் தூது போக்கியிருந்தாள். கண்ணபிரானும் அங்ஙனமே பலராமன் முதலியோரைத் துணை கொண்டு அப்பட்டணத்திற்கு எழுந்தருளி திருமண ஒலைக்கு முதல் நாள் உருக்குமிணியை எல்லோருமறியத் தேரிலேற்றிக்கொண்டு ஊர் நோக்கிப் புறப்பட சிசுபாலன் முதலிய அரசர்கள் கண்ணனை எதிர்த்துப் போர் செய்ய முயன்றனர். பலராமனும் தானும் அவர்களை வலி யடக்கி வென்று ஓட்டிவிட்டனர். பின்னர் உருக்குமிணியின் தமையனான உருக்குமன் கண்ணனை முடிப்பதாக ஓங்கி வர, அவனைக் கண்ணபிரான் உருக்குமிணியின் வேண்டு கோளின்படி உயிர்க்கொலை செய்யாமல் அவனது மீசையையும் குடுமியையும் சிரைத்து பங்கப் படுத்தினன். இங்ஙனம் பகைவர்களைத் தொலைத்துப் பிறகு உருக்கு மிணியைத் திருமணம் புணர்ந்து கொண்டதாக வரலாறு.

எட்டாம் பத்து

223

அடியேன் உள்ளான் உடல்உள்ளான்
அண்டத்து அகத்தான் புறத்துஉள்ளான்
படியே இதுஎன்று உரைக்கலாம்
படியன் அல்லன் பரம்பரன்
கடிசேர் நாற்றத்துள் ஆலை
இன்பத் துன்பங்கழி நேர்மை
ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே.[1]

1. திருவாய். 8.8;2

[அடியேன்—ஆன்மாவில்; உடல் உள்ளான்—சரீரத்தில் உள்ளான்; அண்டத்து அகத்தான்—அண்டத்துக்குட்பட்ட சகல 'பொருள்களி லும் அந்தராத்மாவாய்; புறத்து—அண்டத்துக்கும் புறம்பு பட்ட எல்லாப் பொருள் கட்கும்; படி — ஒப்பு; படியன் — பிரகாரத்தையுடையன்; பரம்பரன்—மேலான வனுக்கு மேலானவன்; கடி—நாற்றம், மணம்; ஆலை—தேன்; ஒடியா—அழியாத; உம்பர்—மேற்பட்டிருக்கும்]

ஆருயிரின் ஏற்றத்தை எம்பெருமான் காட்டக் கண்டு ஆழ்வார் பேசுவதாக அமைந்த திருவாய்மொழியில் உள்ள பாசுரம் இது. இதில் அவர், "அண்டத்திற்கு உள்ளே இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியாக இருப்பவனும், அண்டத்திற்குப் புறத்திலே இருக்கும் எல்லாப் பொருள்கட்கும் அந்தர்மியாக இருப்பவனும், இது தான் எல்லா வகையிலும் ஒத்த பொருள் என்று எடுத்துக் கூறத் தக்க உவமையை உடையன் அல்லாதவனும், மேலானவர்களுக்கும் மேலானவனும், புதுமை சேர்ந்த மணத்திலும் தேனிலும் உள்ள இன்பத்தினுடைய குற்றம் நீங்கின சாரமான பாகம்போல் இருக்கிற அழியாத ஆனந் தத்தின் பெருமையுடையவனும் ஞானத்தில் மேம்பட்டிருக் கின்ற ஒருவனுமான எம்பெருமான் என் ஆன்மாவிலும் உள்ளான்; என் உடலிலும் உள்ளான்" என்கின்றார்.

அடியேன் உள்ளான் உடல் 'உள்ளான்' : இதிலுள்ள ஐதிகம் : எம்பெருமானார் கோஷ்டியிலே உபய வேதாந்த கிரந்தங்கள் காலட்சேபம் நடந்துகொண்டிருக்கும்பொழுது "ஆன்மாவுக்கு ஞான ஆனந்தங்களும் அடிமையும் நிருபக மாகச் சொல்லப்படுகின்றனவே. இவற்றுள் அந்தரங்க நிருபகம் எது?" என்று திருவோலக்கத்திலே ஓர் ஆராய்ச்சி நடந்ததாம். எம்பெருமானார் தாம் முற்றறிவினராய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் இதனை ஆசாரியர் மூல

மாக வெளியிட வேண்டும் என்று திருவுள்ளம் பற்றிக் கூரத்தாழ்வானை நோக்கி, "வாரீர், ஆழ்வான்! திருக் கோட்டியூர்க்குச் சென்று நம்பியைச் சேவித்து இதனை அறிந்து வாரும்' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பி சந்நிதிக்கு எழுந்தருளி தண்டன் சமர்ப்பித்துச செய்தியை விண்ணப்பம் செய்து ஆறு மாதங்கள் சேவித்திருந்தும் அவர் திருவுள்ளம் இரங்கக் காணாமையாலே, புறப்படப் புக, நம்பி அவரை அழைத்து, "மயர்வற மதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார் 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' என்று அருளிச் செய்தபடி கண்டயே" என்று மொழிந் தருள, ஆழ்வானும் 'கிருதார்த்தன் ஆனேன்' (பேறு பெற்றவன் ஆனேன்) என்று எழுந்தருளி இதனை எம் பெருமானார் திருவடிகளிலே விண்ணப்பம் செய்ய மகாநிதி யான (சேமவைப்பான) இந்த ஸ்ரீசூக்தியின் பொருளைத் திருவோலக்கத்தில் விவரித்தருளினார்.

விவரணம்; 'அடியேன்' என்ற சொல் மற்றும் பல இடங்களில் வந்தாலும் அவ்விடங்களிலெல்லாம் தேக விசிஷ்டனான ஆன்மாவே அடியேனென்ற சொல்லுக்குப் பொருளாகும். 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' (திருவிருத்.1) என்கின்ற இடத்தை எடுத்துக் கொள்வோம். தேகமின்றி வெறும் ஆன்மா விண்ணப்பம் செய்யமுடியா தன்றோ? தேக விசிஷ்டனான ஆன்மாவே விண்ணப்பம் செய்ய முடியுமாதலால் இங்கு வெறும் ஆன்மாவை அர்த்த மாகக் கொள்வதற்கில்லை. எந்த இடத்திலும் இப்படியே. 'அடியேன் சிறிய ஞானத்தன்' என்று ஞானமுடைமை சொல்லியிருப்பதனால அது தேகத்திற்கு அசம்பாவிதமாய் ஆன்மாவிற்கே சம்பாவிதமாகையாலே அங்கு 'அடியேன்' என்பது வெறும் ஆன்மாவைத்தானே சொல்லியாக வேண்டுமென்று சிலர் பிரமிக்கக் கூடும்; அங்கும் தேக விசிஷ்டனான ஆன்மாவையே சொல்லுகின்றது. ஏனெ னில், 'காண்பான் அலற்றுவன்' என்னும் செயலிலே அச் சொல் அந்வயிக்க வேண்டுமாதலால் வெறும் ஆன்மா அலற்ற முடியாதாகையாலே. ஆகவே 'அடியேன்' என்ற

சொல் எந்த இடத்திலும் தேக விசிஷ்டனான ஆன்மாவையே சொல்லி நிற்கும் என்பது திண்ணமாயிற்று. 'ஒருவன் அடியேன் உள்ளானே' (8.8:1) என்ற கீழ்ப் பாசுரத்திலும் அப்படியே கொள்ளல் வேண்டும். ஆனால் 'அடியேன் உள்ளான், உடல் உள்ளான்' என்ற இவ்விடத்தில் மாத்திரம் 'அடியேன்' என்பதற்கு வெறும் ஆன்மாவே பொருளாக வேண்டிய நிர்பந்தம் உள்ளது. ஆன்மாவிற்கு விசேஷ பூதமான தேகத்திற்கு வாசகமான சொல் 'உடல்' என்பது தனிப்பட இருப்பதனால் 'அடியேனில்' தேகத்தைச் சேர்த்துப் பொருள்கொள்ள வேண்டிய அவசியமில்லை. எம்பெருமான் சீவான்மாவையும் உடல் பொருளையும் உட்பிரவேசித்திருப்பவன் என்று சொல்லவேண்டுவது ஈண்டு விரும்பப்பட்டது. உடல உள்ளான் என்பதனால் சடப் பொருளை உட்பிரவேசித்திருப்பவன் என்பது சொன்னதாக ஆயிற்று. சீவான்மாவை உட்பிரவேசித்திருப்பவன் என்று சொல்ல விரும்பப்பட்ட பொருளுக்கு 'அடியேன் உள்ளான்' என்று வாசகமிடப்பட்டுள்ளது. ஆன்மா 'நான்' என்ற பொருளையுடையதாகையாலே 'என் உள்ளான்' என்று சொல்லியிருக்கலாம்; அப்போதும் 'ஆன்மாவில் உள்ளான்' என்னும் பொருள் தேறிவிடும்; ஆனால் ஆழ்வார் அப்படி அருளிச் செய்யாமல் 'அடியேன் உள்ளான்' என்று அருளிச் செய்திருக்கையாலே 'ஆன்மா என்றும், அடியேன் என்றும் பரியாயம்' என்பது ஆழ்வார் திருவுள்ளம் என்று அறுதியிடலாகின்றது.

இந்த மருமம் குருகுலவாசப் பேறு இல்லாதார்க்கு அறிவரிது. திருக்கோட்டியூர் நம்பி ஆளவந்தார் ஸ்ரீபாதத்தில் கேட்ட மகா அர்த்தம் இது. இஃது ஆழ்வான் வழியாக எம்பெருமானார்க்கு நிதிபோல் கிடைத்தபடியால் இந்த மகா அர்த்தம் திருவுள்ளத்திலே ஊறியிருந்து கீதாபாஷ்யத்தில் (7;16) வெளியிடப் பெற்றது.

இங்கு 'அடியேன் உள்ளான்' என்றது ஆழ்வாரது ஆன்மாவில் வியாபித்தவன் என்றும், 'உடல் உள்ளான்'

என்றது அவரது உடலிலும் வியாபித்துள்ளான் என்றும் பொருள்படுகின்றது. 'அண்டத்தகந்தான் புறத்துள்ளான்' என்பதனால் அண்டத்துக்குட்பட்ட பொருள்களோடும் வெளிப்பட்ட பொருள்களோடும் வாசியற (வேறுபாடு இன்றி) எங்கும் உள்ளான் என்று பொருள்படுகின்றது. இதனை 'இன்னபடி என்று உரைக்கலாம்படி அல்லன்' என்றும் பொருள் தரும். பரம்பிரன் — மேலானவற்றுக்கெல்லாம் மேலானவன், ஆனந்தமே வடிவானவன்.

224

'நெடுமாற்கடிமை'[2] (அவதாரிகை) ; அநந்யார்க சேஷத்துவத்துக்கு[3] எல்லை நிலம் அவன் அடியார்க்கு அடிமையாதல். பாகவத கைங்கரியமே புருஷார்த்தம் என்பதில் நோக்கு இத் திருவாய் மொழிக்கு. இதற்கு ஈட்டாசிரியர் காட்டும் ஐதிகம். அம்முனி ஆழ்வான் போசனராச்சியத்தினின்றும் வந்த நாளிலே, பட்டர் கண்டருளி "நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போர அடிமை செய்து போந்தாய் என்று கேட்டோம்; உன் தன்மைக்குச் சேர 'நெடுமாற்கு அடிமை' என்னும் திருவாய் மொழியைக் கேள்" என்று என்று அருளிச் செய்தாராம்.

225

உறுமோ பாவி யேனுக்கிவ்
　　வுலகம் மூன்றும் உடன்நிறைய
சிறுமா மேனி நிமிர்த்தஎன்
　　செந்தா மரைக்கண் திருக்குறளன்

---

2. திருவாய். 8.10

3. அநந்யார்க சேஷத்துவம்—பிறர்க்குப் பயன்படாத அடிமை நிலை.

நறுமா விரைநாள் மலரடிக்கீழ்ப்
புகுதல்; அன்றி, அவனடியார்
சிறுமா மனிச ராய்என்னை
ஆண்டார் இங்கே திரியவே[4]

[உறுமோ—தகுமோ; பாவியேனுக்கு—பாவியாகிய எனக்கு; உடன்நிறைய—ஏககாலத்தில் நிறையும்படி; சிறுமா மேனி—சிறிய பெரிய திருமேனியை; நிமிர்த்த—வளரச் செய்த; திருக்குறளன்—வாமனன்; நறுமா விரை—மிக்க பரிமளம் வாய்ந்த; புகுதல் — சேர்தல், அடியார்—பாகவதர்கள்; சிறுமாமனிசர்—வடிவில் சிறுத்து அறிவில் பெருத்தவர்கள்; ஆண்டார்—ஈடுபடுத்திக் கொண்டவர்கள்]

இது பாகவதர்கட்குத் தாம் அடிமையாயிருக்கும் உண்மையை ஆழ்வார் பேசுவதாக அமைந்த திருவாய்மொழியில் உள்ள ஒரு பாசுரம். இதில் அவர், "வடிவில் சிறுத்தவர்களாய் அறிவில் பெருத்தவர்களாய் மனித வடிவினராய் என்னை அடிமை கொண்டவர்களான அவன் அடியார்கள் இந்த உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருக்க (அவர்களுடைய மலரடிக்கீழ்ப் புகுதல்) அன்றி, இந்த உலகங்கள் மூன்றும் ஒரு சேர நிறையும்படியாகச் சிறிய பெரிய திருமேனியை வளரச் செய்த என் செந்தாமரைக் கண் திருக்குறளனுடைய, பெருமை பொருந்திய சிறந்த மணமுடைய அன்றலர்ந்த திருவடிகளிலே புகுதலும் பாவியேனாகிய எனக்குப் பொருந்துமோ?" என்கின்றார்.

'சிறுமா மனிசர்' என்றவிடத்து பட்டர் அருளிய இதிகாசம் : பட்டர் சிறுவனாக இருந்தபொழுது ஒரு நாள் அவர் தந்தை கூரத்தாழ்வான் திருவாய்மொழி அநுசந்திக்கும்போது இப் பாசுரத்தில் வரும் 'சிறுமாமனிசராய்'

4. திருவாய். 8.10;3

என்ற சொற்றொடரைக் கேட்டு, சிறுமா மனிசரென்றால் சிறியராயும் பெரியராயும் உள்ள மனிசர் என்று பொருளல்லவா? ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கின்ற குணங்களிரண்டும் ஒரு பொருளிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் 'சிறுமா மனிசரெ'ன்று இரண்டையும் ஓரிடத்தே சேர அருளிச் செய்தது பொருந்துவது எங்ஙனம்? என்று திருத் தந்தையாரை வினவினார். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து, "பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபநயனமாகாமையால் இப்போது வேத சாத்திரங்களைக் கொண்டு விடை சொல்லலாகாது; ஆகிலும் பிரத்தியட்சத்திற் காட்டுகின்றோம் காண்" என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி, 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கின்ற சிறியாச்சான் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போல்வாரைச் சிறுமாமனிசர் என்னத்தட்டில்லையே; முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அன்னபானாதிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதிற் பரதபதத்து நித்திய சூரிகளைப் போலுதலால் இப்படிப்பட்டவர்கள் சிறுமா மனிசரென்னத் தக்கவரன்றோ? இங்ஙனமே வடிவு சிறுத்து மகிமை பெருத்தவர்களும், மனிதரென்று பார்க்கும்போது சிறுமை தோன்றினும் பகவத் பக்தி, ஞானம், அநுட்டானம் முதலிய நற்குணங்களை நோக்குமளவில் நித்திய முக்தர்களிலும் மேன்மை பெற்று விளங்குவர்களுமான மகாபுருஷர்களையே ஆழ்வார் 'சிறுமா மனிசர்' என்று குறித்தருளினார் என்று அருளிச்செய்ய, பட்டரும் அது கேட்டுத்'தகும், தகும்' என்று இசைவு கொண்டனர்.

226

நல்ல கோட்பாட் டுலகங்கள்
மூன்றி னுள்ளும் தான்நிறைந்த
அல்லிக் கமலக் கண்ணனை
அந்தண் குருகூர்ச் சடகோபன்

சொல்லப் பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
நல்ல பதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டிர் மக்களே.[5]

[கோட்பாடு—கட்டளைப்பாடு; நிறைந்த—வியாபித்த; கமலம்—தாமரை; கொண்டபெண்டிர் மக்கள்—குடும்பமாக; நல்ல பதம்—நல்ல மேன்மை; மனைவாழ்வர்—இல்லறத்தார்களாக வாழப் பெறுவர்.]

இது திருவாய்மொழிப் பாசுரம்; பாகவதர்களுக்குத் தாம் அடிமையாயிருக்கும் உண்மையை ஆழ்வார் பேசுவதாக அமைந்த திருவாய்மொழியின் பலசுருதிப் பாசுரம். "இத்திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் தாம் கொண்ட பெண்டிரோடும் புதல்வர்களோடும் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிய நல்ல தன்மையோடு இல்லறத்தில் வாழ்வார்கள்" என்கின்றார்.

'சடகோபன் சொல்லப்பட்ட ஆயிரம்': வேதம்போலே தான் தோன்றி அன்றிக்கே இருக்கையன்றிக்கே திருவாய்மொழி ஆழ்வார் பக்கலிலே அவதரித்து உயர் குடிப்பிறப்பு பெற்றதாயிற்று.

இவ்விடத்தில் ஈட்டில் காணும் ஓர் இதிகாசம்: எம்பெருமானார் திருவனந்தபுரயாத்திரை பெருந்திரளாக எழுந்தருளச் செய்தே திருக்கோட்டியூரில் செல்வ நம்பி திருமாளிகையிலே சென்று சேர, அப்போது நம்பி வேற்றூர்க்குச் சென்றிருந்தாராம்; இல்லத்தில் நூறு வித்துக்கோட்டை நெல் கிடந்ததாம். வருந்தியழைத்தாலும் வரமாட்டாத மகாபாகவதோத்தமர்கள் தாமாக வந்தருளினார்களே யென்று குதூகலம் கொண்ட செல்வநம்பியின் தேவி

---

5. திருவாய். 8.10:11

நங்கைமார் அவ்வளவு நெல்லையும் குத்தித் ததியாரா தானை செய்து விட்டார். மறுநாள் கணவர் வந்து சேர்ந்து தானியம் ஒன்றுமில்லாமையைக் கண்டு செய்தி கேட்க, நங்கையார் 'பரமபதத்தில் விளைவதாக வித்தினேன்' என்றாராம். இப்படிப்பட்ட குடும்பவாழ்க்கை ஆழ்வாருடைய மங்களா சாசன பலத்தினால் அமைந்த தென்று கொள்ளக் கடவது.

ஒன்பதாம் பத்து

227

'கொண்ட பெண்டிர்'[1](அவதாரிகை):'நெடுமாற்கடிமை" (8. 10) என்ற திருவாய் மொழியில் எம்பெருமான் அடியார் களையே உபாய உபேயங்களான எல்லாமுமாகப் பற்று யிருக்கையாகிற தம்முடைய சிறந்த விருப்பத்தை வெளி யிட்டார் ஆழ்வார். இத்திருவாய் மொழியில் அவ்வடியார் கள் திருவுள்ளம் உகக்கும்படியான பொருளையே அருளிச் செய்கின்றார். பாகவதர்களே எல்லா உறவும் என்றது முன் திருவாய்மொழி: பகவானே எல்லா உறவும் என் கின்றது இத்திருவாய்மொழி. இவை ஒன்றோடொன்று முரண்பட்டவை என்று கருதுதல் வேண்டா; பகவத் பக்தி யின் எல்லை நிலமாக பாகவத பக்தியும், பாகவத பக்தி யின் எல்லை நிலமாக பகவத் பக்தியும் கொள்ளத்தக்கது. உலகில் நாம் ஒருவரிடம் வைக்கும் அன்பு அந்த ஒருவர் அளவிலே முடிந்து நிற்காமல் அவருடைய சம்பந்தி சம்பந்தி களிடத்தும் பெருகிச் செல்வது போல, பகவான் பக்கலிலே வைக்கும் அன்பு அவன் அளவிலே நில்லாது அவனுடைய சம்பந்தம் சம்பந்தம் பெற்ற பாகவதர்களிடத்தும் வளர்ந்து செல்லும். அப்படியே பாகவதர்களிடத்தே வைக்கும்

1. திருவாய் 9. 1.

அன்பும் அவர்களோடு சம்பந்தம் பெற்றவன் என்கிற காரணத்தனாலேயே பகவானிடத்திலும் பெருகும்.

முன் திருவாய்மொழியில் பாகவதர்கட்கு அடிமைப் பட்டிருத்தலை எல்லையாகவுடைய, தனக்கு மேல் ஒன்றில் லாததான பேற்றினை, யாதொருதடையும் இல்லாதபடி அவன் காட்டிக் கொடுக்க, மிக்க பிரீதியோடே, காட்டிக் கொடுத்த அந்தப்பேருபகாரத்தைக் கூறிக்கொண்டு 'சயமே அடிமை தலைநின்றார்' (8. 10; 2), என்றும், 'கோதில் அடியார்' (8. 10: 9) என்றும், 'நீக்கமில்லா அடியார்' (8. 10: 10) என்றும், பாகவதரை விரும்பினராய் நின்றார். இந்தப் பொருளை அநுவதித்து அதற்கு ஆப்த சம்வாதம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர்.

ஆப்பான் திருவழுந்தூர் அரையர், தாம் ஆசிரியராக அடைந்ததும், திருவாய்மொழி கேட்டதும் ஆழ்வானோ டேயன்றோ? ''சயமே அடிமை தலைநின்றார்' என்றது ஸ்ரீ பரதாழ்வான் போல்வாரை: 'நீக்கம் இல்லா அடியார்' என்பது இளைய பெருமாள் போல்வாரை; 'கோதில் அடியார்' என்றது சத்துருக்காழ்வான் போல்வாரைக் காணும் என்று ஆழ்வான் பணித்தாராகப் பணிப்பர்.

228

பொருள்கை உண்டாய்ச் செல்லக்
காணில் போற்றியென் றேற்றெழுவர்;
இருள்கொள் துன்பத் தின்மை
காணில் என்னேஎன் பாருமில்லை;
மருள்கொள் செய்கை அசுரர்
மங்க வடமது ரைப்பிறந்தாற்கு
அருள்கொள் ஆளாய் உய்யல்அல்லால்
இல்லை கண்டீர் அரணே[2]

---

2. திருவாய் 9. 1; 3

[கைஉண்டாய்—கையிலே பொருள் உண்டாய்; செல்லக் காணில்—நடையாடக் கண்டால்; போற்றி என்று—மங்களாசாசனம் செய்து; ஏற்று—ஏதேனும் ஒன்று பெற்றுக்கொண்டு; எழுவர்—அகன்று போவார்கள்; இருள்—அஞ்ஞானம்; இன்மை—வறுமை; என்னே—ஐயோ; மங்க—தொலைய: அருள்—கிருபை; அரண்—புகல்]

எல்லா வகையிலும் உறவினான திருமாலைச் சேர்மின் என்று கூறும் திருவாய்மொழியில் இஃது ஒருபாசுரம். இதில் ஆழ்வார், ''கையிலே பொருள் இருப்பரைக் கண்டால் 'வணக்கம்' என்று கூறி யாதாயினும் ஒன்றனைப் பெற்றுக் கொண்டு அகன்று போவர்; அறிவின்மையையும் துன்பத்தையும் உண்டாக்குகின்ற வறுமையைக் கண்டால் 'அந்தோ!' என்று இரங்குவாரும் இல்லை; ஆதலால் கண்டவர் அனைவரும் கலங்கும் படியான தொழில்களைச் செய்கின்ற அசுரர்கள் அழியும்படியாக வட மதுரையிலே அவதரித்த கண்ணபிரானுக்கு, அருளைப் பெறுதற்குரிய அடியவர்களாகி உய்வதே நலம்; அங்ஙனம் இன்றேல், பாது காவல் வேறு இல்லை'' என்கின்றார்.

இன்மை காணில் என்னே என்பாரும் இல்லை :கையிலுள்ளதெல்லாம் போய் வறுமை எய்தினவாறே 'ஐயோ! பாவம்' என்கின்ற ஒப்புக்கான சொல்கூட வாயில் வர மாட்டாது. இவ்விடத்தில் பிள்ளை திருநறையூர் அரையர் பணிப்பது; ''இரப்பாளர்களுக்கு இட்டே வறியவனான ஒருதனிகன்; அவனுடைய எல்லாச் சொத்தையும் கொண்டு செல்வம் பெற்றவர்களுண்டே: அவர்கள் இந்த வறுமை எய்தினவனை 'ஏனப்பா! நலமா?' என்று வினவினால் அப்படி வினவின மாத்திரத்தில் அவன் ஒரு மதிப்படைந்து ஜீவிக்கும் படியாயிருக்குமென்று வைத்துக்கொள்வோம்; அதையும் பொறாதே அப்படிப்பட்ட நலம் விசாரித்தலையும் செய்யார்கள் என்று'; '' என்னே என்பாரும் இல்லை'' என்பதற்கு இது சுவை மிக்க பொருள்.

229

வாழ்தல் கண்டீர் குணமி
தந்தோ! மாயவன் அடிபரவி
போழ்து போக உள்ள
கிற்கும் புன்மை இலாதவர்க்கு
வாழ்து ணையா வடம
துரைப்பி றந்தவன் வண்புகழே
வீழ்து ணையாய்ப் போமிதனில்
யாதும் இல்லை மிக்கதே [3]

[மாயவன்—சர்வேசுவரன்; அடி—திருவடி; பரவி-துதித்து; போழ்து போக—காலம்கழிக்க; உள்ளகிற்கும்—நினைக்க வல்லவர்களான; புன்மை இலாதவர்க்கு—உத்தமர்கட்கு; வாழ்துணை ஆ-வாழ்வதற்குத் துணையாக; வண் புகழ் — திருக்குணங்கள்; வீழ்துணையா — ஆசைப்படும் துணையாக; இதனில்-இந்த வாழ்வைக் காட்டிலும்; மிக்கது-மேம்பட்டது]

எல்லாவகையிலும் உறவினனான திருமாலைச் சேர்மின் என்று பேசும் திருவாய்மொழியில் இஃது ஒருபாசுரம். இதில் ஆழ்வார், "(எம்பெருமானுடைய கல்யாண குணங்களையே கூறிக்கொண்டு) வாழ்தலாகிய இஃது அன்றோ குணமாவது; ஐயோ! மாயவனாகிய இறைவனுடைய திருவடிகளைத் துதித்துக் காலத்தைக் கழிக்க நினைக்கக் கூடியவர்களான பெரியோர்களுடைய வாழ்ச்சிக்குத் துணையாவதற்காக வடமதுரையிலே வந்து திருவவதரித்தவனுடைய வளவிய புகழையே ஆசைப்படும் துணையாகக் கொண்டு வாழ்வதே மேலான வாழ்வாம்; இவ்வாழ்வினைக் காட்டிலும் மேம்பட்ட வாழ்வுயாது ஒன்றும் இல்லை" என்கின்றார்.

---

3. திருவாய். 9. 1. 9

மாயவன் அடிபாவிப்...புன்மை இலாதவர்க்கு: அழகு சீலம் முதலியவைகளால் ஆச்சரியப்படத் தக்கவனாகவுள்ள இறைவனுடைய குணங்களுக்குத் தோற்றவர்களாய் பிரீதியாலே அவன் திருவடிகளை முறை இன்னிக்கே ஏத்தி, அதனாலே போது போக்குதலைச் செய்வதாக அறுதி யிட்டுள்ள நன்மையை உடையவர்கள், சீரியர்கள். அதாவது வேறு பயன்களைக் கருதாத ஸ்ரீ வைணவர்கள். இப்படி அறுதியிட வேண்டியிருக்க, 'புன்மையிலாதவர்க்கு' என்று இடைப்பிறவரலாகப் புன்மையைச் சொல்லுவானேன்? என்று ஐயம் தோன்றும்; அதற்குப் பரிகாரமாகப் பட்டர் அருளிச் செய்வது: "இந்த மாயவன் அடிபரவுகையைச் சூதுசதுரங்கம் போலே காலத்தைக் கழிப்பதற்கு வழியாகக் கொள்ளுகின்ற புன்மை இல்லாதவர்கள்" என்பதாக, 'தெரித்தெழுதி, வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது'[4] என்று கூறிய திருமழிசை யாழ்வாரைப்போல உலகில் எல்லாரும் போது போக்குவர் அல்லரே; சூதாடியும் சதுரங்கமாடியும் போதுபோக்குவார் பலருளரே. இச் செய்கைகளினால் ஒருவாறு போதுபோகிற தென்னுமளவேயல்லது அவை போக ரூபமாக உள்ளப வர்கள் என்பதற்குக் காரணம் இல்லையே. பகவத்குணா நுபவத்தையும் அங்ஙனம் போது போக்குவதற்காகவே கொள்ளுவது புன்மையேயாம்: அதைப் பிரம்மாநந்த ரூபமாக குணாநுபவம் நடக்குமதுவே புன்மையிலாமை. இதைத் தெரிவிக்கைக்காகவே இங்கு ஆழ்வார் 'புன்மையி லாதவர்க்கு' என்று அருளிச் செய்தார் என்ப.

231

பண்டைநா ளாலே நின்திரு வருளும்
பங்கயத் தாள்திரு அருளும்
கொண்டு,நின் கோயில் சீய்த்துப்பல் படிகால்
குடிகுடி வழிவந்தாட் செய்யும்

4. நான். திருவந். 63

தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்துன்
தாமரைக் கண்களால் நோக்காய்
தெண்டிரைப் பொருநல் தன்பணை சூழ்ந்த
திருப்புளிங் குடிக்கிடந் தானே.[5]

[பண்டைநாள்—நெடுநாள்; பங்கயத்தாள்—பெரிய பிராட்டியார்; கோயில் சீய்த்து—திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் போன்றவை செய்து; பல படிகால்—அநாதி காலமாக; குடிகுடி வழி வந்து—வமிச பரம்பரையாக; ஆட்செய்து—அடிமை செய்து; தெண் திரை—தெளிந்த அலை; பொருநல்—பொருநை நதி; பணை—பண்ணை]

எல்லா உறவின் காரியமும் நமக்குக் குறைவில்லாமல் அருளுமாறு ஆழ்வார் எம்பெருமானை வேண்டுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "தெளிந்த அலைகள் பொருந்திய தாமிர பரணியையுடைய, குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்புளிய் குடி என்னும் திவ்விய தேசத்தில் சயனத் திருக்கோலம் கொண்டிருப்பவனே! உனது திருவருளையும் பெரிய பிராட்டியாரின் திருவருளையும் ஆதிகாலம் தொடங்கியே உடையோமாய்க்கொண்டு, உனது திருக்கோயிலைத் திருவலகிடுதல் முதலிய தொண்டுகளைச் செய்து, தொன்று தொட்டு வமிச பரம்பரையாக வந்து அடிமை செய்கின்ற அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் செய்து, பிரகாசம் பொருந்திய திருவாயைத் திறந்து வார்த்தை களைப் பேசி, உனது தாமரைக் கண்களால் நோக்கி அருள வேண்டும்" என்கின்றார்.

இந்தப் பாசுரத்தின் உரையில் இரண்டு ஐதிகங்கள் காட்டப்பெறுகின்றன.

5. திருவாய். 9.2;1

ஐதிகம்-1; நின்கோயில் சீய்த்து : திவ்விய தேசங்களில் பண்ணும் கைங்கரியங்களில் தலையாயது இது. 'கடைத் தலைச் சீய்க்கப் பெற்றால் கடுவினைகளையலாமே'[6] என்று மேலும் அருளிச் செய்வர். திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலியன செய்தலையே 'கோயில் சீய்க்கை' என வழங்குவர். இங்கே ஈட்டில் திருக்கண்ண மங்கை யாண்டானின் இதிகாசம் ஒன்றுள்ளது. அஃது இது; திருக் கண்ண மங்கையாண்டான் திருக் கண்ண மங்கை என்னும் திவ்விய தேசத்திலே ஒரு மகிழ மரத்தடியிலிருந்து, சருகைத் திரு அலகிடா நிற்க, கூடவாசித்து நாத்திகனாயிருப்பான் ஒருவன் 'பகவான் உபாயம், நாம் வேறு பயன் கருதாத வர்கள், இப்போது செய்யும் இப்பணிக்குப் பயன் என்ன?' என்றானாம். அப்போது திருக்கண்ண மங்கையாண்டான் திருஅலகு இட்ட இடத்தையும், திருஅலகு இடாத இடத் தையும் காட்டி, 'இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாயே; இங்கொரு பலம் இல்லை என்று தோற்றி யிருந்ததோ?' என்று பணித்தாராம்; இங்கு அறிய வேண்டுவதாவது; நேரில் காணும் பயன் என்றும், நேரில் காணாப் பயன் என்றும் பயன் இருவகைப் படும். சந்நிதி வாசலை அலகிடுதல் முதலிய திருப்பணிகளை ஒரு பயன் கருதாது செய்வதனால் ஒரு குறையும் இல்லை; இது பயனற்றது என்று கருதுதல் வேண்டா; திருவலகிடாத இடம் கண்கொண்டு காண வொண்ணாததாயும், திருவல கிட்ட இடம் கண்ணாற் காண இனிதாயிருப்பதே பயன்.

ஐதிகம்-2; தாமரைக் கண்களால் நோக்காய் : வார்த்தை யிலே தோற்றாத அன்பும் நோக்கிலே அநுபவிக்கும்படி குளிர நோக்கி அருள வேண்டும். கோயிலில் (திருவரங்கத் தில்) பிள்ளை தேவப் பெருமாள் அரையர் இப்பசுரத்தைச் சேவிக்கையில் 'உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்று ஒரு தடவை சொல்லி நிறுத்தாமல் 'நோக்காய்,

---

6. திருவாய். 10.2:7

நோக்காய், நோக்காய்' என்று பலகாலும் சொல்லிக் கொண்டிருந்தது மேலடியில் போக மாட்டாதே நின்றாராம்; அப்போது கோஷ்டியில் வீற்றிருந்த அவரது திருத் தந்தையாரான ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் எழுந்திருந்து "பிள்ளாய்! நீ எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி இங்ஙனம் பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ? அழகிய மிடற்றைத் தந்து, நல்ல பாசுரத்தைத் தந்து, பிள்ளைகளையும் செல்வத்தையும் தந்தருளியிருக்க ஒன்றும் செய்யாதாராக நினைத்து இன்னமும் 'நோக்காய், நோக்காய், நோக்காய்' என்றால் 'இஃது என்னே! மேலே பாடு' என்றாராம்.

231

புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்துவை குந்தத்துள் நின்று
தெளிந்தவென் சிந்தை அகங்கழி யாதே
என்னையாள் வாய்எனக் கருதி
நளிர்ந்தசீ ருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூத் தாடிநின் றார்ப்ப
பனிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்பநீ காணவா ராயே.[7]

[கிடந்து—சயனித்து; இருந்து—வீற்றிருந்து; கழியாதே—பிரியாதே; நளிர்ந்தசீர்—குளிர்ந்த திருக்குணம்; ஆர்ப்ப—கோலாகலம் செய்ய; முகில்—மேகம்]

எல்லா உறவின் காரியமும் தமக்குக் குறைவில்லாமல் அருளுமாறு ஆழ்வார் எம்பெருமானை வேண்டுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில்

7. திருவாய். 9.2;4

ஆழ்வார், ''திருப்புளிங்குடியிலே திருக்கண் வளர்ந்தும், வரகுண மங்கையிலே வீற்றிருந்தும், வைகுண்டத்திலே நின்றருளியும், தெளிந்திருக்கின்ற என் மனத்தின் கண் பிரியாமல் இருந்தும் என்னை ஆள்கின்றவனே! எனக்குத் திருவருள் புரிந்து, குளிர்ந்த உன் கல்யாண குணத்தை மூன்று உலகங்களும் ஒருசேர ஆச்சரியப்படும்படியாகவும், நாங்களும் கூத்தாடி நின்று ஆனந்தத்தாலே ஆரவாரிக்கும் படியாகவும், தெளிந்த தண்ணீரை முகந்துள்ள காள மேகத்திலே பவளக் கொடி படர்ந்தாற் போன்று கனிந்த திருவாயானது சிவந்து தோன்றும்படி நாங்கள் காண நீ வரவேண்டும்'' என்கின்றார்.

தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே : 'தெளிந்த' என்றதற்கு எத்துணைத் துக்கங்கள் வந்தாலும் கலங்காத என்று பொருள் அருளத் திருவுள்ளம்பற்றி அதற்கு ஐதிகம் காட்டுகின்றார். பட்டர் திருநாராயண புரத்தில் வெறுப்பிலே[8] 'தேவர் சுவாதந்திரியம் எல்லாம் காட்டினாலும் பின்னையும் பண்ணின நம்பிக்கையில் குலைத்தல் இன்றிக்கே இருக்கும்படி எலும்பு உரமுடைய எம்பெருமானார்போல்வார் பக்கல் செய்யுமதனை, எலி எலும்பனான அடியேன் பக்கலிலும் செய்வதோ?' என்றாராம்.

'நீ காண வாராய்' : என் எதிரே உன் அழகு காண வரவேண்டும். அவன் கூத்து இருக்கிறபடி அவன் மாறி மாறி இடும் அடி, வல்லார் ஆடினாற் போலே காணும் இருப்பது, அவன் நடத்தல் கூத்து என்பதற்குச் சம்வாதம் காட்டுகின்றார்: பிள்ளை அழகிய மணவாள அரையரை பெருமாள் (திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன்) அருளப் பாடிட்டு, ''நாம் இங்ஙனம் நடக்கிறோம்; அதற்கு ஈடாக

8. என்றது; எம்பெருமான் திருமேனிக்கும் அழிவு வந்து பிள்ளை திருநறையூர் அரையரும் திருநாட்டுக்கு எழுந்தருளினதால் வந்த துக்கத்தைக் குறித்தபடி.

நீ ஆடிக்காண்!'' என்ன, அதற்கு அரையர், ''தம் பிரானே! அந்நடைக்கு ஈடாக என்னால் ஆடப்போமோ? 'கானசும் படி உலாவிஉலாவி' என்கிறப்படியே, தேவருடைய குழ லோசையைக் கேட்டவாறே, பாடல் தவிர்ந்தார்கள்! தேவர் இயல்பாகவே நடக்கிற நடைக்குப் பயிற்சியின் பலத்தால் உண்டான தங்கள் ஆடல் தவிர்ந்தார்கள்: குரக்குக்[10] கைகொடு கூழ்துறவி அடியேன் தேவர் திரு முன்னே ஆடவல்லேனோ?'' என்றாராம்.

232

எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம்
இணையடி தொழுதெழுந் திறைஞ்சி
தங்களன் பாரத் தமதுசொல் வலத்தால்
தலைத்தலைச் சிறந்துபூ சிப்ப
திங்கள்சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
திருவைகுந் தத்துள்ளாய்! தேவா!
இங்ஙன்மா ஞாலத் திதனுளும் ஒருநாள்
இருந்திடாய் வீற்றுஇடம் கொண்டே.[11]

[எங்கள் கண்முகப்பே—எங்கள் கண் முன்பே; அடியிணை—திருவடிஇணை; தொழுது எழுது இறைஞ்சி — தொழுவதும் எழுதுவதுமா யிருந்து வணங்கி; அன்புஆர—பக்தி வளர; தமது சொல் வலத்தால்—தாம்தாம் சொல் லும் அளவில்; தலைத்தலை சிறந்து பூசிப்ப— ஒருவருக்கொருவர் மேல் விழுந்து தோத் திரங்களைப் பண்ணும்படி; மாஞாலம்—

9. பெரி வாழ்.திரு. 3.6;4

10. குரக்கு — குரக்குவாதம். குரக்குவலித்த கை என்க.

11. திருவாய். 9.2:8

விசாலமான உலகம்; இதனுளும்—திருப்புளிங் குடியிலும்; வீற்று இடம்கொண்டு — உனது மேன்மை இடங்கொண்டு தோன்றும்படி; ஒருநாள் இருந்திடாய்—ஒரு நாளாவது இருந் திடல் வேண்டும்.]

எல்லா உறவின் காரியமும் தமக்குக் குறை இல்லாமல் அருளிமாறு ஆழ்வார் எம்பெருமானை வேண்டுவதைக் கூறும் திருவாய்மொழியிலுள்ளது இப் பாசுரம். இதில் ஆழ்வார், "சந்திரன் வந்து தங்கும்படி உயர்ந்திருக்கின்ற மாடங்களையுடைய திருப்புளிங்குடியில் சயனித்திருக் கின்றவனே! திருவைகுந்தத்து[12] நின்ற கோலமாய் எழுந் தருளி இருப்பவனே! தேவனே! எங்கள் கண் முன்னே, உலகத்தினர் எல்லாரும் இரண்டு திருவடிகளையும் தொழு வதும் எழுவதுமாய் இருந்து வணங்கித் தங்களுடைய பக்திக்குத் தகுதியாக ஒவ்வொருவரும் தாம்தாம் சொல்லக் கூடிய அளவிலே அவர் அவர்கள் மேல் விழுந்து துதித்து மிகவும் கொண்டாட, இடமகன்ற பெரிய இந்த உலகத்தில் இந்தத் திருப்புளிங் குடியிலும் இடம் கொண்டு உனது மேன்மை தோன்ற ஒரு நாளாவது இருந்தருள வேண்டும்" என்கின்றார்.

'தங்களன்பாரத்...பூசிப்ப' : தங்கள் பக்திக்கு மிக்குவர தமது ஆற்றலுக்குத் தகுந்த சொற்களாலே, அல்லது தாம் தாம் சொல்லவல்ல அளவுகளாலே என்னுதல். "அந்தப் புராண புருஷனைப்பற்றி நான் அறிந்த அளவு சொல்லு கின்றேன்" என்பது நாராயணீயம்...அறிந்த அளவு சொல் லுகைக்குக் காட்டப்பெறும் ஐதிகம் : வங்கிபுரத்து நம்பி பெருமாளைச் சேவிக்க எழுந்தருளின அளவிலே ஒரு பக்கத் தில் ஸ்ரீவைணவர்களும் மற்றொரு பக்கத்தில் ஆய்ச்சிகளும் நின்றுகொண்டு பெருமாளைச் சேவித்திருந்தார்களாம்; வங்கிபுரத்து நம்பி ஸ்ரீவைணவவர்கள் நிற்கிற பக்கமாக

12. ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருப்பதியில்.

நில்லாமே ஆய்ச்சிகள் பக்கமாக நின்றாராம்; அதை முலிதயாண்டான் கண்டு 'இதென்ன? ஸ்ரீவைணவர்கள் திரளில் சேராமல் ஆய்ச்சிகள் பக்கமாக நிற்கிறதேன்?' என்று கேட்டாராம். அதற்கு நம்பி சொன்னாராம்— 'எப்படியும் நாம் பலவகை அபிமானம் கொண்டு அகங்கார மமகார யுக்தர்களாக இருப்போம்; நம்மேல் பகவத் கடாட்சம் பாய்வது மேட்டு மடையாகவே இருக்கும்; அவர்கள் அறிவொன்றுமில்லாத ஆய்ச்சியர்கள் ஆகை யாலே உண்மையில் தாழ்ச்சியுடையவர்களாயும் தாழ்ச்சி தோற்றப் பேசுமவர்களாயு மிருப்பவர்களாகையாலே அவர்கள்மேல் பகவத் கடாட்சம் பாய்வது பள்ளமடையா யிருக்குமென்று அவர்கள் பக்கமாக நின்றேன்' என்று.

ஆனாலும், எம்பெருமானை நோக்கி ஆய்ச்சிகள் போற்றும் படியையும் நம்பி போற்றும் படியையும் ஆண் டான் கண்டவராகையாலே இந்த வாசியை (வேற்று மையை) எடுத்துக்காட்ட வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி நம்பியை நோக்கிக் கேட்டாராம் — 'ஆய்ச்சிகள் சொன்னதென்? தேவரீர் அருளிச் செய்ததென்?' என்று. "பொன்னாலே பூணுநூலிடுவீர், நூறுபிராயம் புகுவீர், அழுத்த விரட்டையுடுப்பீர், பழம் உண்பீர், பால் உண்பீர் என்பனபோன்று ஆய்ச்சிகள் சொன்னது; 'விஜயஸ்வ, விஜயீபவ இத்யாதிகள் அடியேன் சொன்ன வார்த்தை" என்று நம்பி சொல்ல, அதற்கு ஆண்டான் "அங்குப்போயும் முரட்டு சமஸ்கிருதம் விட்டீரில்லையே; எங்கேயிருந்தாலும் நாம் நாமே; இங்கே எழுந்தருள்வீர்" என்று அருளிச் செய்தாராம்.

இதுதான் 'தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் பூசிப்பது'. அது தன்னிலும் 'தலைத்தலைச் சிறந்து பூசிப்ப தாவது'—ஒருவருக்கொருவர் மேல் விழுந்து மிகவும் ஆச்ர யித்துக் கொண்டாடுவது. இப்படிப்பட்ட சந்நிவேசங்களை யெல்லாம்[13] ஆழ்வார் காண விரும்புகிறபடி.

---

13. சந்நிவேசங்கள்—நிலைகள்.

233

ஓரா யிரமாய் உலகேழ் அளிக்கும்
பேரா யிரம்கொண்டது ஓர்பீடு உடையன்
கரா யினகாள நல்மே னியினன்
நாரா யணன்நங் கள்பிரான் அவனே.[14]

[ஓர் ஆயிரமாய்—ஒரு திருநாமமே ஆயிரம் திரு நாமமாய்க் கொண்டு; அளிக்கும்—இரட்சிக் கும்; ஆயிரம் பேர்—ஆயிரம் திருநாமங்கள்! பீடு—பெருமை; காளம் கார் ஆயின—காள மேகம் போலே சாமளமான; நல்மேனியன்— அழகிய திருமேனியையுடையவன்; பிரான்— உபகாரகன்]

எம்பெருமானோடு உள்ள தொடர்பினைக் கண்ட ஆழ்வார் அவனது சீலத்தில் ஈடுபட்டுக் கூறும் திருவாய் மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "ஒவ்வொரு திருப்பெயரே ஆயிரம் முகமாக நின்று ஏழு உலகங்களையும் பாதுகாக்க வல்லதாக இருக்கும்; அப்படிப்பட்ட திருப் பெயர்கள் ஆயிரமுடையவன். ஆகையாலே ஒப்பற்ற பெரு மையையுடையவன்; காளமேகம் போன்ற கரிய அழகிய திருமேனியையுடையவன்; நாராயணன் என்னும் திருப் பெயரையுடையவன்; அவனே நமக்கு உபகாரகன் ஆவான்" என்கின்றார்.

பேராயிரம் கொண்டதோர் பீடுடையன் : இப்படிப்பட்ட அதிசயம் வாய்ந்த பலபல திருநாமங்களையுடையனாகின்ற பெருமை பொருந்தியவன். திருநாமம் தஞ்சமாக இருக்கும் என்பதற்கு ஓர் ஐதிகம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர். "கோயிலாய்த்தான் புத்திர வியோகத்திலே பட்டர் ஸ்ரீபாதத் திலே வந்து தன் சோகமெல்லாம் தோற்ற விழுந்து கிடக்க,

14. திருவாய் 9.3:1

அவர் அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது'' என்றுள்ளது. அதாவது, கோயிலாய்த்தான் என்பவர் பட்டரையே தெய்வமென்று நினைத்திருந்தவர், அவர் தமக்குப் பிறந்த பிள்ளைக்கு 'பட்டர்' என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். அந்தப் பிள்ளை தெய்வாதீனமாக ஆசாரியன் திருவடி சார, தந்தை பட்டர் பக்கலிலே வந்து கதறியழ, பட்டரும் 'நீ நம்முடைய திருப்பெயரிட்ட பிள்ளை போனா'னென்றன்றோ துக்கப்படுகின்றாய்; அதற்குத் துக்கப்பட வேண்டா; அந்தத் திருப் பெயரை யுடைய நாம் இருக்கத் துக்கப்படுவானேன்?'' என்று அருளிச் செய்தார். பின்னர் தம்மைப்போலே ஒரு விக்கிர கத்தை ஏறி அருளப் பண்ணி அவருக்குக் கொடுத்தருளி னார் என்பது சரிதம். திருநாமமுடைய எம்பெருமான் நிலை நின்றிருந்து நம்மைக் காத்தருள்புவன் என்பதை வற்புறுத்தும் இந்த சம்வாதம்.[15]

234

மனமே! உன்னை வல்வினையேன் இரந்து
கனமே சொல்லினேன் இதுசேரல் கண்டாய்
புனமே வியபூந் தண்துழாய் அலங்கல்
இனமே தும்இ லானை அடைவதுமே.[16]

[வல்வினையேன் — கொடிய வினையேனாகிய நான்; இரந்து—வேண்டி; சோரேல்—நழுவ விடாதே; புனம் மேவிய—தன் நிலத்தில் வளர்ந்த; அலங்கல்—மாலை; ஏதும்—ஒரு விதத்திலும்; இனம்இலான்-ஒப்பில்லாதவன்; அடைவதும்—கிட்டவேணும் என்கிற இது தான்]

---

15. சம்வாதம்—தர்க்கம், சம்பாஷணை, உரையாடல்,
16. திருவாய். 9.3:5

எம்பெருமானோடு உள்ள தொடர்பினைக் கண்ட ஆழ்வார் அவனது சீலத்தில் ஈடுபட்டுக் கூறுதலாகிய திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "மனமே! வல்வினையேனாகிய யான் உன்னை இரந்து உறுதியாகச் சொல்லுகின்றேன்; இதனை நழுவ விடாதே காண்! புனத்திலே பொருந்தியிருக்கின்ற அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த ஒப்பு ஒரு சிறிதும் இல்லாதவனை அடைவோம் என்னும் இதனை நழுவ விடாதே காண்!" என்கின்றார்.

புனம் மேவிய பூந்துழாய்...அடைவதுமே : பரம போக்கிய னான அவனை ஆச்ரயித்திருக்கை என்னும் இவ்வர்த்தமே. தன் நிலத்திலே வளர்ந்து அழகிதான திருத்துழாய் மாலையணிந்து "தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும், தாளிணை மேலும் புனைந்த தண்ணந் துழாயுடை அம்மான்"[17] என்று வாய் நிறையப் பேசும்படி யான யோக்யதை வாய்ந்த சர்வாதிகனை விட்டுப் பிரியா மையாகிற இவ் வர்த்தத்தையே திடமாகச் சொன்னா ராயிற்று.

இடைப் பிரவரலாக ஓர் ஐதிகம் : ஒரு திருமுளைத் திருநாளில்[18] இப் பாசுரத்தை அருளிச் செய்து முன்னாள் "கையார் சக்கரத்து"[19]க்குப் புறப்பட்டருளினபடி[20] திருவுள்ளத்தில் கிடக்க, 'புனம் மேவிய தண்துழாய் அலங்கல் இனம் ஏதும் இலான் ஆகையாவது நேற்றுப் புறப்பட்டபடி அன்றோ?' என்று அருளிச் செய்தார்.[21]

17. திருவாய். 1.9:7
18. திருமுளைத் திருநாள்—பிரம்மோற்சவம்.
19. கையார் சக்கரம்—ஆழ்வார் திருநாள்
20. புறப்பட்டருளினபடி—சேனை முதலியார் புறப் பட்டருளினபடி. சேனை முதலியார் புறப்பாட் டைப் பெருமாள் புறப்பாடாகத் திருவுள்ளம் பற்றினார் என்றபடி.
21. 'அருளிச் செய்தார்' என்றது நஞ்சீயரை.

235

அடியா னிவனென் றெனக்கா ரருள்செய்யும்
நெடியானை, நிறைபுகழ் அஞ்சிறைப் புள்ளின்
கொடியானை, குன்றாமல் உலகம் அளந்த
அடியானை, அடைந்தடி யேயுய்ந்த வாறே!22

[அடியான்—அடிமைப்பட்டவன்; ஆர் அருள்—பேரருள்; நெடியான்—சர்வேசுவரன்; புள்—கருடன்; கொடியானை—கொடியாக உடையவனை; குன்றாமல் — ஒன்றுவிடாமல்; அடியான்—திருவடியை உடையவன்]

எம்பெருமானைக் காண விரும்பி அழைத்து, தாம் விரும்பிய வண்ணமே கண்டு மகிழ்தலைக் கூறும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "இந்தச் சடகோபன் அடியவன் என்று எனக்குப் பேரருளைச் செய்த நெடியவனும், நிறைந்த புகழினையும் அழகிய சிறகுகளையுமுடைய கருடப்பறவையினைக் கொடியிலே உடையவனும், ஒரு பொருளும் தவறாதபடி உலகத்தையெல்லாம் அளந்த திருவடியை யுடையவனுமான எம்பெருமானை அடைந்து அடியேன் வாழ்ந்தபடி என்னே" என்கின்றார்.

'அடியான் இவன் என்று' : உண்மையில் தான் அடியவன் அல்லன் என்பதும், அடியவனென்று அவன் ஆரோபித்துக் கொண்டானென்பதும் தெரிவிக்கப் பட்டதாகின்றது 'ஆழ்வார் பக்கலிலே ஏன் அத்தனை யருள் செய்தாய்?' என்று யாரேனும் கேட்டால் 'அவர் எனக்கு அடியவராயிருந்தபடியினாலே' என்று அவர்களுக்கு ஒரு மறுமாற்றம் சொல்வதற்காக 'அடியான் இவன் என்று ஏறிட்டுக் கொண்டு அருள் செய்தான்' என்கின்றார்,

22. திருவாய். 9.4;10

இறைவனுடைய திருவருள் அடியார்களிடத்தில் மிக்கிருக்கும் என்பதற்கு ஐதிகம் காட்டுவார்; "பிள்ளை அகளங்க பிரமராயர், பட்டரைச் சமாதானம் செய்ய வேண்டும் என்று, பட்டர் திருவுள்ளத்திற்கு உகந்த இருகை மதவாரணம்[23] என்கின்றவனைப் பட்டர் பக்கல் வரவிட, அவனும் வந்து சில வார்த்தைகளை விண்ணப்பம் செய்து, திருவுள்ளமும் மகிழ்ச்சியை யுடையதாய் இருக்கிற அளவிலே 'இவனுடைய வைணவத்துவம் இருக்கும்படி திருவுள்ளம் பற்றியிருக்கை உண்டே' என்றானாக, 'சொல்ல வேண்டுமோ, கர்ப்பதாசர்கள்[24] அன்றோ' என்றது தொடக்கமாக, இப்பாசுரத்தை அருளிச் செய்தார் பட்டர்.

236

'அறுக்கும் வினை'[25] (அவதாரிகை) மகள் பாசுரம். தூதர் மீளும் அளவும் தனிமை பெறாத தலைவி தலைவன் நகரான திருநாவாய் செல்ல நினைத்தலைக் கூறும் திருவாய்மொழி. 'திருவடி சென்று பிராட்டியைத் திருவடி தொழுது மீண்ட பின்னர் பெருமாளை அடைவதற்கு முன்பு பிராட்டிக்குப் பிறந்த எண்ணங்கள் போலே, முன் திருவாய்மொழியில் விட்ட தூதுவர்கள் (9.7) அங்கே சென்று அவனைக் கொண்டு வருவதற்கு முன்னே நடுவில் இவர்க்குப் பிறந்த எண்ணங்களைச் சொல்லுகின்றது. அதாவது 'காலாளும் நெஞ்சழியும் கண் சுழலும்[26] என்ன வேண்டும் என்ற நிலையிலிருக்கும் இவர் எங்ஙனே திருநாவாய்க்குச்

---

23. 'இருகை மதவாரணம்' என்பவன், நம்பெருமாளிடத்தில் பரமபக்தி வாய்ந்த ஒருகைக் கோளன்; பரம வைணவன்.
24. கர்ப்பதாசர்கள்—கருவிலே திருவுடையவர்கள்.
25. திருவாய். 9.8
26. பெரி. திருவந். 34

செல்வர்? இருந்தவிடத்தேயிருந்து 'குறுக்கும் வகை உண்டு கொலோ?' (1), 'அணுகப்பெறும் நாள் எவை கொலோ?' (2), 'நான் அறியேனே' (3), கண்ணாரக் களிக்கின்றது இங்கு என்று கொல்?' (5), என்பன போன்றவைகளை மனோரதிக்கின்றார் என்பதைக் கூறுவது இத்திருவாய் மொழி.

உபாயமும் உபயேமும் என்னும் இரண்டும் ஈசுவரனே என்று அறுதியிட்டார்க்கு பிராப்பியத்திலே ருசி கண்ணழி வற்றால் காலதாமதத்திற்குக் காரணம் இல்லாமையாலே பேறு சித்திக்கும் அளவும் எண்ணம் செல்லுமன்றோ? இந்த எண்ணம்தான் இந்த ஆழ்வாருக்குத் தவிராததுமாய், அது தான் இனியதுமாய், இவருடைய சொரூபத்தோடு சேர்ந் திருப்பதுமானது ஒன்றே அன்றோ? இதிலுள்ள ஐதிகம். பெரிய முதலியார்[27] பேற்றினைப் பெறுவதில் உள்ள விரைவாலே எப்போதும் இத்திருவாய்மொழியினைச் சொல்லிக் கொண்டேயிருப்பர். ஆகையாலே, இத்திருவாய் மொழி 'பெரிய முதலியார் திருவாய்மொழி' என்று வழங்கப் படுகின்றது.

237

அறுக்கும் வினையாயின
    ஆகத்து அவனை
நிறுத்தும் மனத்து
    ஒன்றிய சிந்தையினார்க்கு;
வெறித்தண் மலர்ச்சோலைகள்
    சூழ்திரு நாவாய்
குறுக்கும் வகையுண்டு
    கொலோகொடி யேற்கே.[28]

---

27. பெரிய முதலியார்—ஆளவந்தார்.
28. திருவாய். 9.8;1

[அறுக்கும்—போக்கக் கடவதாய்; ஆகத்து—தங்கள் உள்ளத்திலே; நிறுத்தும் மனத்து—நிலை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்திலே; ஒன்றிய—ஒருமைப்பாடுடைய; சிந்தையினார்க்கு—மனோரதத்தையுடைய பக்தர்க்கு; வெறி—நறுமணம் மிக்கு: குறுக்கும்—கிட்டும்; கொடியேற்கு—கொடியேனான எனக்கு]

மகள் பாசுரம், தூதர் மீளும் அளவும் தனிமை பொறாத தலைவி தலைவன் நகரான திருநாவாய் செல்ல நினைத்தலைக் கூறும் திருவாய் மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார் நாயகி, "அந்தச் சர்வேசுவரனைத் தங்கள் உள்ளத்திலே நிலை நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற கருத்திலே ஒருமைப்பாடுடைய எண்ணத்தையுடைய அடியார்களுக்கு வினை என்று பெயர் பெற்றவைகள் அனைத்தையும் போக்குவான்; அத்தகையோன் எழுந்தருளியிருக்கின்ற மணம் பொருந்திய குளிர்ந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருநாவாய் என்னும் திவ்விய தேசத்தைக் கொடியேனாகிய எனக்கு அணுகும் வகை உண்டோ?" என்கின்றார்.

குறுக்கும் வகை உண்டுகொலோ! குறுகச் செய்யும் வகை ஏதோ? அன்றிக்கே, குறுகும் விரகு ஏதோ? என்னுதல். 'குறுக்கு' என்பது மலையாள நாட்டு வழக்கு. குறுகும்—அணுகும்; 'குறுகும்' என்பதற்கு மலையாள மொழியில் 'அண்மையில் உள்ளது' என்பது பொருள். மலையாள நாட்டு வழக்கு என்பதற்கு ஐதிகம் அருளிச் செய்கின்றார் ஈட்டாசிரியர். ஒரு சமயம் எம்பெருமானார் மலைநாட்டுத் திருப்பதி யாத்திரையாகச் சென்றிருந்தார். திருநாவாய்க்கு அணித்தாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது எதிரிலே வந்து கொண்டிருந்த மலையாளர்களை நோக்கித் 'திருநாவாய் எவ்வளவு தூரமுண்டு?' என்று வினவினார். அவர்கள் 'குறுக்கும்' என்றார்கள்; அண்மை

யில் உள்ளது என்பது இதன் பொருள் என்பதை இராமாநுசர் நன்கு அறிந்தவர். இதனைக் கேட்டவுடன் அவர் 'இப்பகுதி மொழியாலன்றோ அருளிச் செய்துள்ளார் ஆழ்வார்!' என்று பாசுரத்தில் மிகவும் ஈடுபட்டதாக வரலாறு ஒன்று உண்டு.

238

''மல்லிகை கமழ்''[29] (அவதாரிகை) : இது மகள் பாசுரம். தலைவி மாலைப்பொழுது கண்டு தன் ஆற்றாமையை இரங்கிக் கூறுவதாக அமைந்த திருவாய்மொழி; நம் முடைய முதலிகள் இத் திருவாய்மொழியை 'மாலைப் பூசல்' என்று வழங்குவர்—இத் திருவாய் மொழியின் பல சுருதிப் பாசுரத்தில். 'மாலைப் பூசல்' வரும் தொடரை நோக்கி, மேல் வரும் திருவாய்மொழி[30] யொன்றிற்கு ('வேய் மருதோ ளிணை மெலியு மாலோ'—என்று தொடங்குவது) 'காலைப் பூசல்' என்று நம் ஆசாரியர்கள் வழங்கும் திருநாமம். கண்ணபிரான் விடியற் காலத்தில் பசு மேய்க்கப் போனா னாக அதிசங்கை[31] பண்ணி அவன் முகத்தைப் பார்த்து 'நீ பசு மேய்க்கப் போனால் நலியக் கடவனவான பதார்த்தங் கள் நலியாகின்றன' என்று முறையிடுவது 'காலைப் பூசலான' அத் திருவாய்மொழியில். மாலைப் பூசலான இத் திருவாய்மொழியிலோ வென்னில் 'காடுகள் ஊடு போய்க் கன்றுகள் மேய்த்து மறியோடிக் கார்க்கோடல் பூச்சூடி'[32] வருகின்ற தாமோதரன் மாலைப் பொழுதே திருவாய்ப்பாடியேறத் திரும்பி வரும்போது சில நாட்களில் பசுக்களை யெல்லாம் பின்னே வரவிட்டுத் தான் முன்னே

29. திருவாய். 9.9
30. ஷை 10.3
31. அதிசங்கை—மிகுந்த ஐயம்
32. பெரியாழ். திரு. 3.3;4

குழலூதிக் கொண்டு வருவான்; சில நாட்களில் பசுக்களை யெல்லாம் முன்னே போகவிட்டுத் தான் பின்னே வருவது முண்டு; அப்படி வருகின்ற நாளில் அப்பெருமானைப் பசுக் களின் முற்கொழுந்தில் காணாமல் திருவாய்ப் பாடியில் பெண்கள் பட்ட பாட்டை ஆழ்வார் தாம் ஏறிட்டுக் கொண்டு பேசுகிறதாக அமைந்தது இத் திருவாய்மொழி.

இத் திருவாய்மொழி 'மாலைப் பூசல்' என்கைக்குச் சம்வாதம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர். "ஒருநாள் நம்பி திருவரங்க நாராயண தாசர்[33] என்பார் ஒருவர் என் பக்கலில்[34] திருவாய்மொழி கேட்டு, பெற்றி[35] பக்கல் செல்ல, பெற்றி 'இன்று பிள்ளைபாடு விநோதம் ஏன்?' என்று கேட்டார். அதற்குத் தாசர், 'அறுக்கும் வினை' என்ற திருவாய் மொழியைச் சாற்றினோம்' என்று மறுமொழி தர, பெற்றி 'நாளை மல்லிகை கமழ் தென்றலும் மாலைப் பூசலும் என்னாய்' என்று பணித்தாராம்.

239

கள்ளவி ழும்மலர் இட்டுநீ ரிறைஞ்சுமின்
நள்ளி சேரும் வயல்சூழ் கிடங்கின் புடை
வெள்ளி ஏய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி,நா ளுந்தொழு தெழுமினோ தொண்டரே![36]

[கள் அவிழும்—தேன் ஒழுகுகின்ற; மலர் இட்டு—பூக்களைப் பரிமாறி; நள்ளி—பெண் நண்டு: வயல்—கழனி; கிடங்கு—அகழ்; வெள்ளி—சுக்கிரன்; உள்ளி—சிந்தித்து; நாளும்—நாடோறும்; தொழுது—வணங்கி]

33. இவர் நம்பிள்ளையின் மாணாக்கர்.
34. என் பக்கலில்—நம்பிள்ளைபக்கலில்.
35. பெற்றி—இவர் நஞ்சீயருடைய மாணாக்கர்.
36. திருவாய். 9.10;2

திருக்கண்ணபுரம் சேருமாறு பிறருக்கு உபதேசிக்கும் திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "அடியீர்காள்! நீங்கள், பெண் நண்டுகள் சேர்ந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்த அகழியின் அருகில் சுக்கிர மண்டலம் வரையில் உயர்ந்து பொருந்தியிருக்கின்ற மதில்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரம் என்னும் திவ்விய தேசத்தை நாள் தோறும் மனத்தால் நினைத்து, தேனோடு மலர்கின்ற பூக்களைக் கொண்டு அருச்சித்து வணங்கிக் கைகூப்பித் தொழுது பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏறுங்கள்" என்கின்றார்.

கள் அவிழும்...இறைஞ்சுமின்: செவ்விப் பூவைக் கொண்டு அருச்சித்து அடிவணங்குங்கோள். பக்தியையுடையவர்கள் செவ்விப்பூவைத் தேடுவார்கள் அன்றோ? "கள்ளார் துழாயும் கணவலரும்" [37] என்கின்றபடியே பூக்களின் இனத்தைச் சார்ந்தவை யாவும் அமையும் அன்றோ, அவன் படியைப் பார்த்தால். ஆக, பொருள்களின் உயர்வு தாழ்வுகளை நோக்கான், அடைகின்றவனுடைய அன்பினையே பார்க்குமத்தனை.

'அன்பினையே பார்க்கும்' என்பதற்கு ஐதிகம் காட்டுவர் ஈட்டாசிரியர். ஸ்ரீ புருஷோத்தமமுடையானுக்கு [38] அரசபுத்திரன் சாத்தின செண்பகப் பூவாரத்தை நினைப்பது. இதன் விவரம்: ஸ்ரீ புருஷோத்தமமுடையான் செண்பகம் உகத்து அணிவர்; அரசகுமாரர்கள் சிலர் செண்பகம் கொண்டு சாத்துவதற்குத் தேடி, கடைகளில் சென்று பார்க்க, ஒரு பூ இருக்கக் கண்டு அப்பூவுக்கு ஒருவர்க்கொருவர் செருக்காலே விலையை மிக ஏற்ற, அவர்களிலே ஒருவன் நினைக்கவொண்ணாதவாறு பொருளை மிகக் கொடுத்து அதனை வாங்கிக் கொண்டுவந்து சாத்தினான;

---

37. பெரி.திரு. 11.7:6

38. ஸ்ரீ புருஷோத்தமம்—ஒரு திவ்வியதேசம்.

அன்று இரவு அவனுடைய கனவில் 'நீ இட்டபூ எனக்குக் கனத்துச் சுமக்க முடிகிறதில்லை' என்றுஅருளிச் செய்தான் எம்பெருமான் என்பது வரலாறு.

பத்தாம் பத்து

240

ஏத்து மினநமர் காள்! என்று
தான்குட மாடு
கூத்த னை,குரு கூர்ச்சட
கோபன்குற் றேவல்
வாய்த்த ஆயிரத் துள்ளிவை
வன்திரு மோகூர்க்கு
ஈத்த பத்திவை யேத்தவல்
லார்க்கிடர் கெடுமே.[1]

இது திருவாய்மொழிப் பாசுரம்; திருமோகூர்மீது மங்களா சாசனம் செய்யப் பெற்ற திருவாய்மொழியின் பல சுருதிப் பாசுரமாகும். "சடகோபர் அருளிச் செய்த ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் கற்க வல்லவர்கட்குத் துன்பமெல்லாம் அழியும்" என்கின்றார் ஆழ்வார்.

'திருமோகூர்க்கு ஈத்த பத்திவை' என்ற விடத்து அறியத் தக்க தொன்றுண்டு; திருவாய்மொழித் தனியன்களுள்,

வான்திகழும் சோலை
மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ் மறைகள்
ஆயிரமும்

1. திருவாய். 10. 1.11

என்பதும் ஒன்று. இது பராசரபட்டர் அருளிச் செய்த தாகும் என்பதை யாவரும் அறிவர். இதில் திருவாய்மொழி ஆயிரமும் பெரிய பெருமாள்மீதாகும் என்று சொல்லப் பெற்றுள்ளது; இஃது எப்படிப் பொருந்தும்? திருவாய் மொழியாயிரத்தில் பலபல திவ்விய தேசங்களன்றோ அநுபவிக்கப் பெற்றுள்ளன? அவற்றுள்,

'கங்குலும் பகலும் 2

என்ற திருவாய்மொழியொன்றே அரங்கநாதன் விஷயமாக காணாநிற்க, 'ஆயிரமும் மதிரளங்கர் வண்புகழ் மேலான்ற தென' எப்படிச் சொல்லுகின்றார்? என்று முன்பே சிலர் கேட்டார்களாம். அதற்கு மறுமொழி பகர்ந்தவர்கள் " 'கங்குலும் பகலும்' என்ற பதிகத்தின் முடிவில்,

முகில்வண்ணன் அடிமேல் சொன்னசொல்மாலை
ஆயிரத் திப்பத்தும்

என்கையாலே திருவாய்மொழி ஆயிரமும் அரங்கநாதன் திருவடிகளுக்கே சமர்ப்பிக்கப்பட்டது; அதிலிருந்து சில திவ்விய தேசங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; ஆனது பற்றியே,

'திருவேங் கடத்துக் கிவைபத்தும்'3

என்றும்,

'திருமோகூர்க்கு ஈந்த பத்திவை'4

என்றும்

'இவை பத்தும் திருக்குறுங்குடி அதன்மேல்' 5

என்றும் ஆழ்வாரே அருளிச்செய்துள்ளார்" என்றார்களாம்.

---

2. திருவாய. 7. 2.
3. திருவாய். 6.10:11
4. ஷை. 10. 1: 11
5. ஷை 5. 5: 11

241

கெடும்இட ராய எல்லாம்
　　கேசவா என்ன; நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின்
　　தமர்களும் குறுக நில்லார்;
விடமுடை அரவில் பள்ளி
　　விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம்உடை வயல னந்த
　　புரநகர் புகுதும் இன்றே[6]

கெடும்— தொலைந்துபோம்; இடர்— துன்பம்; நாளும்— தினந்தோறும்; கொடுவினை— கொடுமைகள்; செய்யும்— செய்யநிற்கும்; நிற்கும்; கூற்றின் தமர்—யமபடர்கள்; குறுக நில்லார்— அணுகமாட்டார்கள்; சுரும்பு— வண்டுகள்; அலற்றும்—ஆரவாரிக்கும்; தடம் தடாகங்கள்; புகுதும் புகுவோம்]

திருவனந்தபுரத்தைச் சேர்ந்தால் பரமபதத்திற் போலத் தொண்டு செய்யலாம் என்று கூறுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒருபாசுரம். இதில் ஆழ்வார், "கேசவா! என்று ஒருமுறை சொல்ல எல்லாத் துன்பங் களும் அழியும்; எப்பொழுதும் கொடிய காரியங்களையே செய்கின்ற யமதூதர்களும் அணுகமாட்டார்கள்; ஆதலால் நஞ்சு பொருந்திய ஆதிசேட சயனத்திலே அறிதுயில் செய் கின்ற எம்பெருமானுடைய, வண்டுகள் ஒலிக்கின்ற தடா கங்களையுடைய வயல்கள் சூழ்ந்த திருவனந்தபுரம் என்னும் நகரத்தை இன்றே அடைவோம்" என்கின்றார்.

யமனுடைய துன்பத்திற்கு அஞ்சவேண்டா என்னு மதற்கு ஐதிகம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர். ஒரு திரு

6. திருவாய் 10.1;11

வேட்டையிலே, பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாக இருக்க, 'மாலைப் பொழுது ஆயிற்று' என்று சிலர் விண்ணப்பம் செய்ய, "நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்று ஒருநாளும் செய்ய வேண்டிய காரியத்திலே சிறிது தாழநின்றோம் என்றால் இது குற்றமாக யமன் கேட்கவோ? ஓர் அரசன் இருந்து நாட்டுக்கணக்கு கொடுவரா நின்றால் அரசனுக்கு அந்தரங்கனாய் இருப்பான் ஒருவன் பெயரை வாசித்தால், 'ஓம் காண்! அது கிடக்க! மேலே செல்' என்றால் பின்னை ஒருநாளும் அப்பெயரை எடுத்து வாசிக்கப்பெறான் காண்; இந்த விஷயத்திலே 'உனக்காகித் தொண்டுபட்ட, நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ'[7] என்று 'திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பாசுரம் அறியீர்களோ? அவனுக்காகத் தொண்டு பட்டுப் போதுபோக்குமவர்களை வினைகள் நலியுமோ?" என்று அருளிச் செய்தாராம்.

242

இன்றுபோய்ப் புகுதி ராகில்
எழுமையும் ஏதம் சாரா
குன்றுநேர் மாட மாடே
குளுந்துசோ செருந்திபுன்னை
மன்றலர் பொழி லனந்த
புரநகர் மாயன் நாமம்
ஒன்றுமோர் ஆயிர மாய்
உள்ளுவார்க் கும்ப ரூரே[8]

---

7. பெரி. திரு. 6:3:9

8. திருவாய். 10. 2; 2

இன்று—இன்றே; புகுதிராகில்—சென்று அடைவீர்களாகில்; எழுமையும்—ஏழேழ் பிறப்பும்; ஏதம்— சம்சாரதோஷம்; சாரா—சேராது; குன்றுநேர்—மலைபோன்ற; மாடம் மாடே—மாடங்களின் அருகே; குருந்துசேர்—குருந்த மரங்களோடு; பொழில்—சோலை; நாமம்—பெயர்; உள்ளுவார்க்கு— அநுசந்திப்பவர் கட்கு; உம்பர் ஊர்—பரமபதம்,]

இது நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். திருவனந்தபுரம் என்ற திருப்பதிமீது மங்களாசாசனம் பெற்ற திருவாய்மொழியில் உள்ளது. இதில் ஆழ்வார், "இன்றே சென்று அடைவீர்களாயின், எப்பொழுதும் ஒரு துன்பமும் உங்களை வந்தடையாது; மலைகளை யொத்த மாளிகைகளின் அருகில் குருந்த மரங்களும் சேர்ந் திருக்கின்ற செருந்தி மரங்களும் புன்னை மரங்களும் மணத் தோடு மலர்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரம் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானின் திருப்பெயர்கள் ஒவ்வொன்றுமே ஆயிரம் திருப்பெயர்கள் கொடுக்கின்ற பலனைக் கொடுப் பனவாம்; ஆதலால், இத்தன்மையினை நினைப்பவர்கட்குக் கிடைப்பது பரமபதமேயாம்" என்கின்றார்.

'குன்றுநேர் மாடம்': இதில் அமைந்த ஐதிகம். ஒரு சமயம் பிள்ளை நறையூர் அரையரும் பட்டரும் திருக் கோயிலை வலம் வந்து கொண்டிருந்தனர். வேறுபக்தர்கள் எதனையும் கவனியாது மிக விரைவாக வலம் வந்து கொண்டிருந்தனர். இந்த இருவர் மட்டிலும் திருமாளிகை களையும் திருக்கோபுரங்களையும் பிறவற்றையும், 'பருகு வன்ன அருகாநோக்கமொடு' பார்த்துக் கொண்டுவந்த நஞ்சீயர் அல்லாதார்க்கும் இவர்கட்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே இவர்களான வாசி இருந்தபடி என்? என்று இருந்தேன்" என்று அருளிச் செய்துள்ளார்.

இன்னோர் ஐதிகம்: ஜனநாதப்பிரம்மராயர் திருமுடிக் குறையிலே மரம் வெட்டுவியாநிற்க, எம்பார் அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது.[11] இதன் விவரம்: எம்பார் பிரம்மராயரை நோக்கி, 'அல்லாளப் பெருமானே! ஈசுவர விபூதியை அழிக்கப் பார்த்தாயா?' என்ன, இவர் சொல்லும் வார்த்தையைக் கேட்கைக்காக, 'ஈசுவர விபூதி அல்லாத இடமும் உண்டோ?' என்ன, 'அவைபோல் அல்ல காண் இவை; சார்வ பௌமனான ராஜாவும் தேவியுமாக முற்றூட்டாகக் (பூர்ண அநுபவமாக்க) குட நீர்வார்த்து ஆக்கும் சோலை போலே, பெருமாளும் பெரிய பிராட்டியாரும் கூடக் கைதொட்டு ஆக்குமவைகாண்!' என்று அருளிச் செய்தார். உகந்தருளின நிலங்களிலே மெய்யே பிரபத்தி விளைந்தார்க்கு அங்குள்ளவை எல்லாம் உத்தேஷ்யமாகத் தோன்றுமன்றோ?

பிறிதோர் ஐதிகம்: ஆச்சான் திருவாலிநாடுதாசர் சுரவன் பாக்குகள் (உயர்ந்த பாக்குகள்) நல்லன சிலவற்றைப் பட்டருக்குக் கொடுவந்து கொடுக்க, அவற்றைக்கண்டு, 'இவை இருந்தபடி என்?' திருவருள் கமுகின்றும் வந்தவையோ?' என்று அருளிச் செய்தாராம். நீராலே வளர்ந்தவை அன்றே, அவனுடைய திருவருட்பார்வையாலே வளர்ந்தவை அன்றோ? [திருவாய் 8. 9; 5 ஈட்டுரையையும் காண்க]

243

புண்ணியம் செய்து நல்ல
புனலொடு மலாகள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம்
இப்பிறப் பறுக்கு மப்பால்

10. திருமுடிக்குறை— பெருமாளுடைய திருமுடிப் பிரதேசமான உபயகாவேரியின் மத்தியப் பிரதேசம்.

11. 33. காண்க

திண்ணம்நாம் அறியச் சொன்னோம்
　　செறிபொழில் அனந்த புரத்து
அண்ணலார் கமல பாதம்
　　அணுகுவார் அமர ராவார்.[12]

[புண்ணியம—பக்தி; நல்ல—மணப் பொருள்கள் கலவாத; எண்ணுமின்—சிந்தனை செய்மின்; பிறப்பு—சம்சாரம்; அறுக்கும்—தொலைத் தருள்வன்; அப்பால்—மேலும், கமலம்—தாமரை; அமரர்—நித்தியசூரிகள்; திண்ணம்-திடமாக.]

இஃது அனந்தபுரத்தின்மீதுள்ள திருவாய்மொழியின் ஒரு பாசுரம். இதில், ஆழ்வார், "பக்தியோடு தண்ணீரையும் மலர்களையும் கொண்டு அருச்சித்து எம்பெருமானுடைய திருநாமத்தை நினைமின்; அதனால் இப் பிறப்பு நீங்கும்; அதற்குமேல் செறிந்த சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரியோனுடைய திருவடித் தாமரைகளைச் சேர்க்கின்றவர்கள் நித்தியசூரிகள் ஆவார்கள்; எல்லோர்கள் அறியும்படியாக நாம் அறுதியிட்டுச் சொன்னோம்" என்கின்றார்.

'எந்தை நாமம்' : இதினுள்ள ஐதிகம். இடறினவன் 'அம்மே!' என்னுமாறுபோல திருநாமம் சொல்லுவதற்கு ஒரு தகுதியைத் தேடிக்கொள்ள வேண்டா. நஞ்சீயர் 'திருநாமம் சொல்லும்போது பக்தியுடையனாய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ?' என்று பட்டரைக் கேட்க, 'கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறு ஓர் உவர்க்குழியிலே முழுகிப் போகவேண்டுமோ? மேல் உண்டான நன்மையைத் தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ?' என்று அருளிச் செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்.

12. திருவாய். 10.2:5

'இப்பிறப்பு அறுக்கும்': கண்டதே அன்றோ இதனுடைய இழைவீடு? கழிந்துபார்க்க அமையுமே இதனுடைய அகவாயை; தன்னடையே வைராக்கியம் பிறக்குமே. இப்படிக் கண்கூடாகக் கண்டிருக்கச் செய்தேயும் வைராக்கியம் பிறவாதிருக்கிறதேயன்றோ வாசனையின் கனம்? இங்கு ஒரு சம்வாதம் ஈட்டில் காட்டப்பெற்றுள்ளது. ஒரு செட்டியை 'இவன் தமிழில் சிறந்த புலமை படைத்தவன்' என்று பட்டருக்குக் காட்டினார்கள் சில சீடர்கள். பட்டர் அவனைப் பார்த்து 'உனக்கு யாதேனும் விருப்பம் இருப்பின் கேட்கலாகாதோ? என்று கூற, அதற்கு அவன், "சிலர் 'காண்கின்ற தேகத்துக்கு அவ்வருகு ஆன்மாவும் இல்லை, புண்ணிய பாவங்களும் இல்லை, ஈசுவரனும் இல்லை' என்கின்றனர். சிலர், 'இச் சரீரந்தான் நிலையற்றது' என்று இதனுடைய தாழ்வினைக் கண்டு 'அவ்வருகே நிலைத்திருக்குமது ஒன்றனைப் பற்றவேண்டும்' என்கின்றனர்; விஷயம் ஒன்றாக இருக்க, வேறுபட்ட இவ்விரண்டு கொள்கைகளும் நடக்கிறபடி எங்ஙனே?' என்று கேட்க, "என்னுடைய மாயையானது ஒருவராலும் தாண்ட முடியாதது"[13] என்றும், 'என்னையே பற்றினவர்கள் அம் மாயையினைத் தாண்டுகின்றனர்' என்றும் கீதை உரைக்கின்றபடியே, நல்லவர்கள் இதனுடைய தாழ்வினைக்கண்டு இதனைக் கழித்துக் கோடற்கும், மற்றையோர்கள் இதிலே இனிமை உண்டு என்று நினைத்துக் கேடுறுதற்கும் உடலாம்படி காமங்கட்குத் தகுதியாக இதனை அறுதியிட்டுக் காணும் ஈசுவரன் பண்ணிற்று" என்று அருளிச் செய்தார்.

244

கடுவினை களைய லாகும்
காமனைப் பயந்த காளை
இடவகை கொண்ட தென்பர்
எழிலணி அனந்த புரம்

13. கீதை. 7:14

படமுடை அரவில் பள்ளி
பயின்றவன் பாதம் காண
நடமினோ நமர்கள் உள்ளீர்
நாமுமக் கறியச் சொன்னோம்.[14]

[கடுவினை—கொடிய பாவம்; களைய—போக்க; எழில்அணி—அழகு அணிந்த; இடவகை—இருப்பிடமாக; நமர்கள் உள்ளீர்—நம்மோடு சம்பந்தம் பெற்றவர்களா யிருப்பவர்களே! நடமின்—நடவுங்கள்; அறிய—தெரிய]

திருவனந்தபுரம் சேர்ந்தால் பரம பதத்தில் செய்வது போலத் தொண்டு செய்யலாம் என்று கூறும் திருவாய் மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார். "மன் மதனுக்குத் தந்தையாகிய கிருஷ்ணன் தனக்கு வசிக்கும் இடமாகக் கொண்டது, அழகு பொருந்திய திருவனந்த புரம் என்பர்; நம்முடைய பந்துக்களாக உள்ளவர்களே; நீங்கள் அறியும்படி நாம் சொன்னோம்; அங்குப் படத்தை யுடைய ஆதிசேஷசயனத்திலே அறிதுயில் செய்கிறவ னுடைய திருவடிகளைத் தரிசிப்பதற்கு நடவுங்கள்; நடந் தால், கொடிய வினைகளை எல்லாம் போக்கலாம்" என்கின்றார்.

'படமுடை அரவில்...சொன்னோம் : இந்த அடிகளில் அநுசந்திக்கும் ஓர் ஐதிகம் உண்டு; ஆளவந்தார்க்கு எல்லாப் பொருளையும் உபதேசித்த மணக்கால் நம்பி 'யோக ரகஸ் யம் மாத்திரம் குருகைக் காவலப்பனிடத்திலே பெறக் கடவீர்!' என்று சாதித்திருந்தபடியாலே, ஒருகால் அதனை நினைத்துக் குருகைக் காவலப்பனிடம் சென்று 'அடியே னுக்கு யோக ரகஸ்யத்தை அருளிச் செய்யவேண்டும்' என்று வேண்டினார். அவரும் ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் வந்து உபதேசம் பெறுமாறு சொல்லிப் போக விட்டார். ஆளவந்தாரும் நம்பெருமாள் சந்நிதிக்கு எழுந்

14. திருவாய். 10.2:8

தருளினார். அந்தச் சமயம் திருவத்யயநோத்சவம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. அரையர் கோட்டியில் சேர்ந்த அவர் சேவிக்கும் திருப் பாசுரங்களில் ஆழ்ந்து ஈடுபட்டிருந் தார். அரையர் 'கடுவினை களைய லாகும்' என்கின்ற இந்தப் பாசுர அளவிலே வரும்போது,

எழிலணி அனந்தபுரம்
படமுடை அரவில் பள்ளி
பயின்றவன் பாதம் காண
நடமினோ நமர்கள் உள்ளீர்
நாமும் உமக்கறியச் சொன்னோம்'

என்ற அடிகளைச் சேவிக்கும்போது, ஆளவந்தார் திருமுகத் தைப் பார்த்து ஊன்றி உறுத்திச் சேவிக்க, ஆளவந்தாரும் இதைக் கேட்டு 'ஆழ்வாருடைய தமர்களிலே நாம் சேர வேண்டில் திருவனந்தபுரம் சென்று சேவித்து வரப் பிராப் தம்' என்று சொல்லிக்கொண்டே அப்போதே ஸ்ரீபாதத்தை உடையாரைக் கூட்டிக்கொண்டு நம்பெருமாளிடம் விடை பெற்றுப் பயணமாகித் திருவனந்தபுரத்திற் கெழுந்தருளி அனந்த பத்மநாபனை மங்களாசாசனம் செய்து வாழ்ந்து வந்தார். இந் நிலையில் குருகைக் காவலப்பன் எழுதித் தந்த சிறு முறியைப் பார்க்க நேர்ந்து அந்நாளே அவர் குறிப்பிட்ட நாளாக இருந்தது. உடனே துணுக்குற்று அலமந்து 'ஐயோ, நாம் நினைத்தவுடன் எங்கும் சென்று சேரும் ஆற்றலுடைய பெரிய திருவடியும் அல்லோம்; சிறிய திருவடியும் அல்லோம். அங்குச் சென்று சேர்வதற்கு ஒரு புட்பக விமானம் பெற்றிலோமே' என்று சோகித்து எழுந் தருளியிருந்தார்.

இங்கே ஈட்டு ஸ்ரீசூக்தி : "திருவத்யயநம் பாடாநிற்க இத்தைக் கேட்டருளி ஆளவந்தார் 'நமக்கு ஆழ்வாரோடே ஒரு சம்பந்தமுண்டாக வேணும்' என்று அப்போதே ஸ்ரீ பாதத்தை உடையாரைக் கூட்டிக் கொண்டு எழுந்தருளி னார்" (அனந்தபுரத்துக்கு).

245

நாமுமக் கறியச் சொன்ன
  நாள்களும் நணிய வான
சேமநன் குடைத்துக் கண்டீர்
  செறிபொழில் அனந்த புரம்
தூமநல் விரைம லர்கள்
  துவளற ஆய்ந்து கொண்டு
வாமனன் அடிக்கென் றேத்த
  மாய்ந்தறும் வினைகள் தாமே.[15]

[உமக்கு—உங்களுக்கு: நாளும்—இறுதி நாளும்; நணியவான—நெருங்கின; தூமம்—தூபம்; துவள் அற—பரிசுத்தமாக; ஆய்ந்து கொண்டு —சேகரித்துக் கொண்டு; ஏத்த—துதிக்க; வினைகள்—பாவங்கள்; மாய்ந்து போம்—தொலைந்துபோம்]

திருவனந்தபுரத்தைச்சேர்ந்தால் பரமபதத்தில் செய்வது போலத் தொண்டு செய்யலாம் என்று கூறுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "நாம் நீங்கள் அறியும்படி கூறின நாட்களும் குறுகின வாயின; செறிந்த சோலைகள் சூழ்ந்த திருவனந்தபுரம் பாதுகாவலையுடையதாகும்; தூபத்தையும் சிறந்த வாசனையையுடைய மலர்களையும் குற்றம்அற ஆராய்ந்து எடுத்துக்கொண்டு ஸ்ரீவாமனனுடைய திருவடிகளுக்கு என்று துதிக்க, பாவங்கள் எல்லாம் அழிந்து ஒழியும்" என்கின்றார்.

'நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணிய ஆன': "நாளேல் அறியேன்"[16] என்றும், "மரண மானால்"[17]

15. திருவாய். 10.2:9
16. திருவாய். 9.8;4
17. ஷெ. 9.10;5

என்றும் சொல்லிப் போன நாட்களும் கிட்டிய ஆயிற்றன. "வீடுமன் முடியா நின்றான், பின்னை இவ்வர்த்தம் தெரிந்து கொள்ளுமாறு வினாவப் படுவதற்கு உரியர் யாரும் இலர்"[18] என்று அவன் அருளிச் செய்த வார்த்தையை இப்போது இவர்தாம் அருளிச் செய்கின்றார். வீடுமனே வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எற்றிற்கு? என்ன, வீடுமன் போனால் பின்னைக் கொள்வாரும் கொடுப்பாரும் இன்றிக்கே தொடர்ச்சி அறும். இதற்கு (இச் சுலோகத்திற்கு) ஒரு பெரியாருடைய சம்வாதத்தைக் காட்டுகின்றார். இதற்கு பட்டர் அருளிச் செய்ததாக, பரிநை[19] அப்பர் "ஒரு மதிப்பன் தலையில் கிடவாத அன்று கொள்வார் கொடுப்பார் இன்றியே எளி விலையனாய்ப்போம்" என்று அருளிச் செய்வர்.

246

தொழுத்தையோம் தனிமையும் துணைபி ரிந்தார்
துயரமும் நினைகிலை, கோவிந் தா,நின்
தொழுத்தனில் பசுக்களை யேவி ரும்பி
துறந்தெம்மை இட்டவை மேய்க்கப் போதி;
பழுத்தநல் அமுதின்இன் சாற்று வெள்ளம்
பாவியேன் மனம்அகந் தோறும் உள்புக்
கழுத்தநின் செங்கனி வாயின் கள்வப்
பணிமொழி நினைதொறும் ஆவி வேமால் [20]

[தொழுத்தை—அடிச்சி; துணை—துணையாகிய உன்னை; துயரமும்—அலமாப்பையும்; நினைகிலை—நினைக்கின்றாயில்லை; தொழு—

18. பாரதம்—தருமனை நோக்கிக் கண்ணன் கூறியது.
19. பரிநை—ஓர் ஊர்
20. திருவாய். 10.3:4

மாடு கட்டும் இடம்; விரும்பி—ஆதரித்து' போதி—போகா நின்றாய்; பழுத்த—பரி பக்குவமாய்; பணிமொழி — தாழ்ந்த வார்த்தை]

ஆநிரை மேய்க்கச் சென்றால் பிரிவாற்றி இரோம் என்று போக்கைத் தவிர்க்குமாறு ஆய்ச்சியர் கண்ணனை வேண்டுவதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "கோவிந்தா! அடிச்சியோமாகிய எங்களுடைய தனிமையையும் துணையாகிய உன்னைப் பிரிந்தவர்களுடைய துன்பத்தையும் நினைக்கின்றிலை; தொழுவத்திலே உள்ள உன்னுடைய பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்து போகட்டு அப்பசுக்களை மேய்ப்பதற்காகப் போகின்றாய்; பக்குவமான சிறந்த அமுதினுடைய இனிய காற்றின் வெள்ளமானது பாவியேனாகிய என்னுடைய மனத்தின் இடந்தோறும் புகுந்து அழுத்த, நினது சிவந்த மேனி போன்ற திருவாயில் நின்றும் வருகின்ற வஞ்சகமான தாழ்ந்த வார்த்தைகளை நினையுந்தோறும் உயிரானது வேகின்றது" என்கின்றார்.

'நின்தொழுத்தனில்...போதி' : ஓரிடத்திலே வளைத்து வைத்த பசுக்களையோ காக்கவாவது? உன் கைக்குள் அகப்பட்டாரைக் காக்கலாகாதோ? இவர்களை அணைத்து விட்டுப் பின்னை அன்றோ பசு மேய்க்கப் போவது? பசுக்களையே என்ற ஏகாரத்தால் நீ போனால் பிரிவுக்கு ஆற்றாமைப் பட அறியாதோரையோ நீ ஆதரிப்பது? என்பதனைத் தெரிவித்தபடி. விரும்பி—இவர்களை அணைத்துக் கட்டிக் கொண்டு கிடந்தாலும் கண்ணி என்பது, கன்றுகள் விட்டுக்கொடு போகா நின்றது என்பதாய் வாய் வெருவுதது அவற்றையே ஆயிற்று. இங்கு இருக்கும்போது நெஞ்சு அங்கே ஆயிற்று. இங்குள்ளது பொய் ஆலிங்கனமே. முடிவில் எல்லைக்குச் சம்வாதம் காட்டுகின்றார். பிள்ளையமுதனார் "ஒரு பசுவின் காலிலே

முள் பாய்ந்தால் ஆயன் தலைகாண் சீக் கொள்வது'' என்பாராம். சரீரத்தில் ஒன்று வந்தால் இன்ப துன்பங்கள் அநுபவிப்பது ஆன்மா அன்றோ?

247

அருள்பெறுவார் அடியார்தம்
அடியனேற்கு, ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான்
அதுநமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்துள்
இனிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே!
வாட்டாற்றான் அடிவணங்கே.[21]

[அடியார்—பாகவதர்கள்; ஆழியான்—சக்கரப் படையையுடைய எம்பெருமான்; இருள்—அறிவின்மை; ஞாலம்—உலகம்; மடநெஞ்சே—சபலமான மனமே; மருள்—மயக்கம்]

இது வாட்டாற்றுமீது மங்களாசாசனம் செய்யப் பெற்ற நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''தனது திருவருளைப் பெறுதற்கு உரியவரான அடியவர்களுக்கு அடிமைப்பட்டிருக்கின்ற எனக்கு, திருவாழியைத் தரித்த எம்பெருமான் திருவருளைச் செய்வதற்கு சமைந்திருக்கின்றான்; அங்ஙனம் அவன் திருவருளைச் செய்வதும் நாம் விதித்த கட்டளையின் படியேயாம்; ஆதலால் அறிவின்மையை உண்டு பண்ணுகின்ற பெரிய இந்த உலகத்தில் இனிப் பிறவியை நான் விரும்பேன்; அறியாமை பொருந்திய மனமே! நீ மயக்கம் நீங்கு; திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கு'' என்கின்றார்.

21. திருவாய். 10.6;1

இங்கு ஓர் ஐதிகம் : இராமாநுசரின் சீடரும் பரிசாரகரு மாகிய கிடாம்பி ஆச்சான் (மடைப்பள்ளி ஆச்சான்) பட்டரிடத்தில் மிக்க அன்பினை வைத்திருப்பவர். கிடாம்பி ஆச்சானுடைய சீடராகிய இளையாழ்வான் தன் ஆசாரியனாகிய ஆச்சானை நோக்கி 'பட்டரை அடைந்த அடியவர்கள் எல்லோரையும் விட நீர் தாழ நின்று பழகுவதேன்?' என்று கேட்க, அதற்கு ஆச்சான், 'நீ அன்று கண்டிலைகாண்; எம்பெருமானார், பட்டர் கையிலே புத்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே ஒரு சுலோகத்தை விண்ணப்பம் செய்வித்துத் திருப் பிரம்புக்குப் புறம்பாகக் கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, நம்முடையோர் அடங்கலும் நம்மை நினைத்திருக்குமாறு போலே இவனை நினைத்திருங்கோள்' என்று அருளிச் செய்தார். 'நமது விதி வகையே' என்பதற்கு இஃது ஐதிகம்.

248

வானேற வழிதந்த
    வாட்டாற்றான் பணிவகையே
நானேறப் பெறுகின்றேன்
    நரகத்தை நகுநெஞ்சே
தேனேறி மலர்த்துளவம்
    திகழ்பாதன், செழும்பறவை
தானேறித் திரிவான
    தாளிணையென் தலைமேலே 22

வான்—பரமபதம்; வழி—அர்ச்சிராதி நெறி; பணி வகை—திருவுள்ளமான படி; தேனேறு—தேன் பொருந்திய; பறவை—பெரிய திருவடி;

22. திருவாய். 10,6:5

திரிவான—உலாவுகின்றவனான; தாளிணை—இரண்டு திருவடி]

இது திருவாட்டாறு என்ற திவ்விய தேசத்தின்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''பரமபதத்திற்குச் செல்ல அர்ச்சிராதி நெறியை உண்டாக்கித் தந்த திருவாட்டாற்றில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் பணித்த வகையே நான் பரமபதத்திற்குச் செல்லப் போகின்றேன்; தேன் பொருந்தியிருக்கின்ற மலர்களையுடைய திருத்துழாயானது விளங்குகின்ற திருவடிகளை யுடையவனாய்ச் செழுமை பொருந்திய கருடப் பறவையின்மேல் உலாவுகின்றவனான எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளும் என் தலைமேலே இருக்கின்றன; ஆதலால், நெஞ்சே! நரகத்தைப் பார்த்துச் சிரிப்பாய்'' என்கின்றார்.

'நான் ஏறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே : இதற்கு ஐதிகம். ''பரமபதம் கிட்டிற்று என்னாக் கடுகக் கால் வாங்கிப் போகப் பாராதே காண்! பல நாட்கள் நம்மைக் குடிமக்கள் ஆக்கி எளிவரவுபடுத்தின இவ்வுலக வாழ்க்கையைப் (சம்சாரத்தை) புரிந்து பார்த்துச் சிரி; 'உன்னை அடியறுத்தோமே' (உன்னை வென்றோமே) என்று பார்த்துச் சிரி ' என்கின்றார். பிள்ளையழகிய மணவாளப் பெருமாள் அரையர் ஒருநோயால் வருந்தா நிற்க, திருவரங்கநாதன் அவருக்குப் பரமபதம் கொடுக்கத் திருவுள்ளம் பற்றித் திருமாலை, திருப்பரிவட்டம் முதலான வரிசைகளைக் கைவிட்டருளின அளவிலே 'நானேறப் பெறுகின்றேன் நரகத்தை' நகுநெஞ்சே' என்று இப்பாசுரத்தைச் சொல்லிக்கிரந்தியைப்(கட்டியைப்)பார்த்துச் சிரித்தாராம். 'நரகத்தை நகு' என்ற இவ்விடத்திற்கு 'நரகலோகத்தைப் பார்த்துச் சிரி' என்றுசிலர் பொருள் கூறுவர்: அதுவேண்டா; சம்சாரத்திற்கே நரகம் என்று பெயராதலால் சம்சாரபூமி என்ற பொருளே கண்டுக் கொள்ளத் தகும்.

249

செஞ்சொற் கவிகாள்! உயிர்காத்தாட்
செய்மின் திருமா லிருஞ்சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன்
மாயக் கவியாய் வந்து,என்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து
நின்றார் அறியா வண்ணம், என்
நெஞ்சும் உயிரும் அவையுண்டு
தானே யாகி நிறைந்தானே[23]

[உயிர்காத்து—பாது காத்துக் கொண்டு; ஆள் செய்யுமின்—அடிமை செய்யுங்கள்; உயிர்—ஆன்மா: நின்றார்—அருகே நின்ற பிராட்டியார்)

ஆழ்வார் தமது மேனியின்மேல் எம்பெருமான் வைத்துள்ள வாஞ்சையைப் பாராட்டிப் பேசுவதாய் அமைந்துள்ள திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "செவ்விய சொற்களையுடைய புலவர்களே! உங்களைப் பாதுகாத்துக் கொண்டு கவிபாடுதலாகிற அடிமையைச் செய்யுங்கோள்; திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருந்தருளியிருக்கின்ற வஞ்சக் கள்வனும் மாமாயனுமான எம்பெருமான் 'ஆழ்வாரே! உம்மைக்கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளப்பாரா நின்றேன் என்றேன் ஒரு மாயம் செய்துவந்து, என் மனத்தினுள்ளும் உயிரினுள்ளும் ஒரு நீராகக் கலந்து, நிற்கின்ற பெரியபிராட்டியார் முதலாயினோரும் அறியாதபடி, என்மனத்தையும் உயிரையும் அநுபவித்து, என்னைக் காண இடமின்றித் தானேயாகி நிறைந்தவன் ஆனான். ஆதலால். உயிர்காத்து ஆட்செய்மின்" என்கின்றார்.

---

23. திருவாய். 10.7:1

உயிர்காத்து ஆட்செய்மின் : இவ்வாறு கூறுகின்றார். கவிபாடுதல் வாக்கினால் செய்யப்படுகின்ற அடிமை ஆகையாலே. ஆட்கொள்வான் ஒத்து என் உயிர் உண்ட மாயன்[24] அன்றோ? அடிமை கொள்வாரைப்போலே புகுந்து மற்றைப் படியேயாய் இருக்கும் பலிப்பது, பாதுகாத்துக் கொள்ளுங்கோள். 'உயிர் காத்து ஆட்செய்மின்' என்று ஈடுபட்டுச் சொன்னதற்குச் சம்வாதம் காட்டுகின்றார். 'ஆழங்காலிலே இழிந்து அமிழ்வார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாறுபோலே, கொண்டைக்கோல் [25] நாட்டுகின்றார் ஆழ்வார்' என்று சிற்றாள் கொண்டான் பணிப்பர். 'இவ்விடம் பரப்புத்துறை இவ்விடம் மடு' என்று நிலவர் எல்லை குறிக்குமாறுபோலே.

250

நண்ணா அசுரர் நலிவுஎய்த
நல்ல அமரர் பொலிவுஎய்த
எண்ணா தனகள் எண்ணும் நன்
முனிவ ரின்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என் அம்மான்
திருமா லிருஞ்சோ லையானே[26]

[நண்ணா— கிட்டத்தகாத; நலிவு— அழிப்பு; பொலிவு—மகிழ்ச்சி; பண்ஆர்—பண்நிறைந்த]

---

24. திருவாய் 9.6;7
25. கொண்டைக் கோல் என்பது, நிலவராய் இருப்பார் ஆறுகளிலும்மடுக்களிலும் மேடுபள்ளங்களுக்கு அடையாளமாக நடுகிற கோல்.
26. திருவாய் 10.7:5

ஆழ்வார் தம் மேனியின் மேல் எம்பெருமான் வைத்துள்ள வாஞ்சையைப் பாராட்டிப் பேசுவதாக அமைந்துள்ள திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், ''கிட்டக் கடவோம் அல்லோம் என்று இருக்கிற அசுரக் கூட்டங்கள் அழியும் படியாகவும், சிறந்த குணங்களை யுடையரான தேவர்கள் மேன்மையினை அடையும் படியாகவும், மற்றை மக்கள் எண்ணாதனவற்றை எண்ணுகின்ற சிறந்த முனிவர்கட்கு இன்பம் மேலும் மேலும் ஓங்கும் படியாகவும், பண்ணோடு கூடிய இசையையுடைய இனிய பாசுரங்களைத் தானேயானாகித் தன்னையே தான்பாடித் தென்னாதெனா என்று ஆளத்திவையா நிற்கும் எம்பெருமான் திருமாலிருஞ்சோலை மலையிலே உள்ளவன் ஆவான்'' என்கின்றார்.

'நண்ணா அசுரர் நலிவு எய்த'; என்ற இடத்தில் ஈடு; ''அவ்யபதேஷ்யனுக்கு [27] அநந்தரத்திலவன் [28], தமப்பன் செய்ததைக் கேட்டு 'இவன் என் செய்தானானான்?' என்று சிரித்தான்; 'ஒருமதிளை வாங்கும் காட்டில் அத்தர்சனம் குலைந்ததோ? திருவாய்மொழியென்றும் இராமாயணம் என்றும் வலியன இரண்டு பிரபந்தங்கள் உண்டாயிருக்க' என்றானாயிற்று! இப்படி உகவாதார் நெஞ்சு உளுக்கும் படியான பிரபந்தமாய்த்து''. திருவாய்மொழி விரோதிகள் அழிவதற்குக் காரணம் என்பதற்கு இது சம்வாதம.

இதனை விவரிப்போம் ; அவ்யபதேச்யனென்றது கிருமி கண்ட சோழனை. இவன் பதினோராம் நூற்றாண்டில் (கி. பி. 1070—1116) இருந்த முதற்குலோத்துங்கன் என்பர். இவன் தத்துவ ஞானிகளான பெரிய நம்பி, கூரத்தாழ்வான் என்னும் பெரியார்கள் இருவருடைய திருக்கண்கள்

27. அவ்யபதேசயன் எடுத்துப் பேசுவதற்குத் தகாதவன்; நீசன் (கிருமிகண்டன்)

28. அந்தரத்தில்வன்— அவன் மகன் (விக்கிரம சோழன்)

போவதற்குக் காரணமாக இருந்த பெரும்பாதகன். ஆதலால் அவன் பெயரைச் சொல்லுதற்கும் வாய்வராமல் 'அவ்யபதேச்யன்' என்கின்றார்.

அவத்தப்புன் சமயச்சொல் பொய்யை மெய்என்று
அணிமிடறு புழுத்தான்தன் அவையின் மேவி
சிவத்துக்கு மேல்பதக்கு உண்டென்று தீட்டும்
திரிக்கூர வேதியர்கோன் செவ்வி பாடப்
பவத்துக்கம் பிணிநீங்க நரகம் தூரப்
பரமபதம் குடிமலியப் பள்ளி கொள்ளும்
நவத்துப்புச் செங்கனிவாய்க் கரிய மேனி!
நம்பெருமாள் அரங்கேசர் ஆடீர் ஊசல் [29]

என்கின்றார் திவ்விய கவியும்.

கிருமிகண்டனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவன் அவன் மகன் விக்கிரம சோழன். இவன் காலம் கி. பி. 1116-1134. தமப்பன் செய்தது திருக்கண்ணபுரத்தின் திருமதில்களை இடித்துத் தள்ளியது. இது வைணவ தர்சனத்திற்குச் செய்த விரோதமான செயல். தமப்பன் பெருமாள் கோயிலை இடித்துப் போட்டானென்று கேள்வியுற்று, 'ஐயோ! ஒருகோயிலை இடித்துப் போட்டதனால் என்னாகும்? இதனால் தரிசனம் குலைந்ததாமோ? திருவாய்மொழியும் ஸ்ரீ ராமாயணமும் ஆகிய இரண்டு பிரபந்தகளன்றோ வைணவ தரிசனத்திற்குக் கல்மதில்களாக இருப்பவை? அவற்றை அசைக்க முடியுமோ ஒருவர்க்கு?'' என்றானாம் கிருமி கண்ட சோழனின் மகன். இதனால் திருவாய்மொழியான அசுரப் பிரகிருதிகள் மண்ணுண்ணும் படியாகவும் தேவப் பிரகிருதிகள் வாழ்ந்து போம்படியாகவும் அவதரித்தது என்னுமிடம் ஒரு சிறுவன் வாயினாலும் வெளிவந்தது என்று காட்டப் பெற்றது.

---

29. சீரங்க நாயகர் ஊசல் 20

'யானாய்த் தன்னைத் தான்பாடி! தந்தையானவன் மகனுக்குப் பசுவினை நீர்வார்த்துக் கொடுத்து அவன் பக்கலில் தான் மீள நீர் ஏற்றுப் பசுவினைப் பெறுமாறு போலே; மகனுக்குச் சொற்களைக் கற்பித்து அவன் சொல்லக் கேட்டுத் தந்தை இனியன் ஆமாறுபோலே; தான் பாடாமல் இவரையிட்டுப் பாடுகிறது என்? என்னில் தான் பாடினானாகில் கீதையோடு ஒத்துப்போம். கீதையைக் காட்டினும் இது உயர்ந்தது என்பதற்கு ஐதிகம் காட்டு கின்றார். நம்பி திருவழுதி நாடுதாசர் என்பார் 'அருள் கொண்டாடும்' [30] என்ற பாசுரத்தில் ''ஸ்ரீ கீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்திலே ஒரு சபைக்குச் சென்றால், பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து நம்ப மாட்டாமையாலே 'புறத்திண்ணையிலே கிட'என்பார்கள். திருவாய்மொழியைக் கற்ற ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், சர்வேசுவரன் அகப்படப் புறப்பட்டு எதிர் கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுதுபடியும் எடுத்து விட்டு உபசரிப்பர்கள்.'' என்றாராம். ஆயினும், 'ஸ்ரீ கீதைக்குச் சிறப்புஇல்லையோ?' என்ன, ''பாண்டே பரமன் பணித்த''[31] என்று இவர் அங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீ கீதைதானும் வீறு பெற்றது அன்றோ?

251

பிடித்தேன்; பிறவி கெடுத்தேன்; பிணிசாரேன்
மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை
கொடிக்கோ புரமாடங்கள் சூழந்திருப் பேரான்
அடிச்சேர்வ தெனக்கெளி தாயின வாறே[32]

[பிடித்தேன்—திருவடிகளைப் பிடிக்கப் பெற்றேன்; பிறவி—சம்சாரம்; கெடுத்தேன்—தொலையப்

30. கண்ணிநுண் சிறுத்தாம்பு-8
31. திருவாய். 10. 4: 9
32. திருவாய். 10.8:3

பெற்றேன்; மனை வாழ்க்கையுள்—சம்சாரத்தில்; மாயை—அஞ்ஞானம்; மடித்தேன்—அழித்தேன்]

எம்பெருமான் காரணமின்றியே அருளி மகிழும். திறத்தைப் பேசும் திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "கொடிகள் கட்டிய கோபுரங்களும் மாடங்களும் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானது திருவடிகளை யடைவது எனக்கு எளிதாக இருந்தவகை என்னே! திருவடிகளைத் துணையாகப் பிடித்தேன்; பிறவியினை அழித்தேன்; நோயினை அடையேன்; மனைவாழ்க்கையுள் நிற்பதற்குக் காரணமான மூலப்பகுதியை அழித்தேன்" என்கின்றார்.

'பிடித்தேன் : 'தலை மேலதாளிணைகள்'[33] என்றுஅவன் திருவடிகளைத் தலைமேலே கொண்டுவந்து வைக்கையாலே அவற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். 'பிறவி கெடுத்தேன்' பிறவியை மறுவல் இடாதபடி போக்கினேன்.[34] 'காணோ ஒருங்கிற்றும் கண்டிலன்'[35] என்கின்றபடியே, எங்கே போயிற்றுக் கண்டிலன். 'பிணிசாரேன்' ;பிறவிபுக்க இடத்தே புகக் கூடிய பிணியைக் கிட்டேன். 'மனை வாழ்க்கையுள் நிற்பது ஓர் மாயையை மடித்தேன்[36] இவ்வுலக வாழ்க்கையிலே நிற்கைக்கு அடியான மாயையை:(மூலப்பகுதியை) திரிய விடுவித்தேன், தொடருகின்ற பாம்பைத் திரிய விடுவிப்பாரைப் போலே.[37]

---

33. திருவாய் 10. 6: 6
34. தூலசரீரத்தின் நாசத்தைச் சொல்லுகிறது.
35. பெரி. திருவந். 54
36. சூக்குமசரீரத்தின் நாசத்தைச் சொல்லியபடி
37. என்றது அருச்சுனன் கிரீடத்தை எடுத்துக் கொண்டு போய்ப் பின்னையும் தொடர்ந்து வருகின்ற நாகக் கணையைக் கண்ணன் நியமனத்தாலே திரிய விட்டார் போலவே என்றபடி.

இப்பாசுரத்திற்கு ஓர் ஐதிகம் : எம்பெருமானார் ஒரு சமயம் ''உண்டபின் நூறு அடி உலாவ வேண்டும்' என்ற சாத்திர விதிப்படி திருவமுது செய்தபிறகு நூறு அடி உலாவ வேண்டுகையாலே அதற்கு உறுப்பாக மடத்திற்குள்ளேயே உலாவி வந்து கொண்டிருந்தார். அப்போது 'திருமாலிருஞ் சோலை மலை' என்ற திருவாய்மொழியை அநுசந்தானம் செய்து கொண்டிருக்கையாலே, இப்பாசுரத்தின் 'மடித்தேன்' என்ற இதற்குச் சேர மேலே போகாமல் திரும்பியருளினார். எம்பார் கதவினை ஒருபுறமாகச் சாய்த்து அதன் புரையாலே அவர் திரும்புவதைக் கண்டு '' 'திருமாலிருஞ்சோலை மலை' என்ற திருவாய்மொழி அநுசந்தான மன்றோ திருவுள்ளத்தில் ஓடுகின்றது?'' என்றாராம். ''ஆம், அப்படியே'' என்று விடையிறுத்தாராம் எம்பெருமானார்.

252

இன்றென்னைப் பொருளாக்கித்
தன்னையென் னுள்வைத்தான்
அன்றென்னைப் புறம்பாகப்
புணர்த்ததென் செய்வான்?
குன்றென்னத் திகழ்மாடங்கள்
சூழ்திருப் பேரான்
ஒன்றெனக் கருள்செய்ய
வுணர்த்தலுற் றேனே[38]

[என்னை இன்று—அநாதிகாலம் தன்னைப் பெற்றிருந்த என்னை இன்று; தன்னை—பரம போக்கியனான தன்னை; என்னுள்—என் நெஞ்சினுள்; அன்று என்னை—அநாதி காலம் நான் கைகழிந்து போம்படி; புறம்போக புணர்த்தது— என்னைத் தள்ளிவைத்தது; குன்றுஎன்ன—குன்றுகள் இவை என்னலாம்

38. திருவாய். 10.8: 9

படி; ஒன்று—ஒருவிடை; உணர்த்தலுற்றேனே விண்ணப்பிக்கின்றேன்]

காரணம் இன்றியே அருளி மகிழும் எம்பெருமானது திறத்தைப் பேசி மகிழுவதைக் கூறும் திருவாய்மொழியில் ஒருபாசுரம். இதில் ஆழ்வார், "இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என் மனத்தின் கண்ணே இருத்தினான்; அன்று ஐம்புல இன்பங்களிலே கலையும்படி செய்து பராமுகம் பண்ணி இருந்தது எதற்காக? மலைகளைப் போன்று விளங்குகின்ற மாடங்கள் சூழ்ந்த திருப்பேர் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் தக்கது ஒரு விடையைச் சொல்லவேண்டும் என்று விண்ணப் பிக்கின்றேன்" என்கின்றார்.

ஒன்று எனக்கு அருள் செய்ய: முன்பு என்னைக் கை விட்டதற்குக் காரணம் சொல்லவுமாம்; இன்று என்னை அங்கீகரித்தற்குக் காரணம் சொல்லவுமாம். ஆழ்வார் எம் பெருமானை நோக்கி 'இப்படி வினவினாரே? இதற்கு எம் பெருமான் என்ன மறுமொழி கூறினான்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டாராம்; அதற்கு பட்டர் அருளிச் செய் தாராம்: "அவன் பதில் சொல்லுவதற்கு என்ன இருக் கிறது? 'இவர் தலையிலே ஒரு பழியை ஏறிட்டு நெடுநாள் இழந்து கிடந்த நாம் என்ன சொல்லுவது?' என்று வெட்கிக் காலாலே தரையைக் கீறி நிற்பதைத் தவிர வேறுண்டோ? என்று."

253

எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்,
கதிரவர் அவரவர் கைந்நிரை காட்டினர்,
அதிர்குரல் முரசங்கள் அலைகடல் முழக்கொத்த
மதுவிரி துழாய்முடி மாதவன் தமர்க்கே[39]

39. திருவாய் 10. 9; 4

[எதிர்எதிர்—போகிறவழிக்கு முன்னே; இமையவர் தேவர்கள்; இருப்பு இடம்—தங்கும் இடம்; வகுத்தனர்— சமைத்தார்கள்; கதிரவர்— பன்னிரண்டு ஆதித்தர்கள்; அவரவர்—மாற்று முள்ளவர்களும் ஆதிவாசிக கணங்களெல்லாம் கைநிரை காட்டினர்—கைகாட்டிக் கொண்டே சென்றார்கள்; அதிர்குரல்— அதிருகின்ற முழக்கம் முரசங்கள்—பேரிகைகள்; முழக்கு— கர்ச்சனை; ஒத்த—போன்றன; மாதவன் தமர்—பாகவதர்கள்]

இது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம்; திரு நாட்டுக்குச் செல்வாருக்கு நடைபெறும் உபசாரங்களை ஆழ்வார் தாமே அநுபவித்துப் பேசும் பதிகத்திலுள்ள ஒரு பாசுரம். இதில் "மாதவன் அடியார்கட்கு தேவர்கள் வழி நெடுக இடம் வகுத்தனர்; ஆதித்தர்கள் கைகாட்டிக் கொண்டே சென்றார்கள்; அவர்கள் அடித்த முரசங்களின் ஒலி கடல் முழக்கத்தை ஒத்திருந்தது" என்கின்றார் ஆழ்வார்.

இவ்விடத்து நம்பிள்ளை ஈட்டில் அற்புதமான ஒரு ஸ்ரீ சூக்தி உள்ளது. "இங்கே வைணவர்களென்பதுவே ஏது வாகப் பங்கு பெறாதே திரியுண்ட வைணவர்களை அங்குள்ளார் எதிர்கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கிற படி" என்று. அதாவது—திருநாட்டில் இப்படிப்பட்ட சத் காரம் பெறும் ஸ்ரீ வைணவர்கள் இந்த நாட்டில் இருக்கும் பொழுது இங்குள்ளவர்களால் ஒரு சத்காரமும் பெறாத தோடு திரஸ்காரமும் பெறுகிறார்களே என்று திருவுள்ளம் நொந்து அருளிச் செய்கின்றபடி. இதற்காக ஓர் இதிகாசமும் அருளிச் செய்கின்றார். மிளகாழ்வான் என்கின்ற ஒரு ஸ்ரீ வைணவர். அரசன் வித்துவான்களுக்கெல்லாம் கிராம பூமிகள் வழங்குகின்றானென்றுகேள்வியுற்றுத் தாமும் வித்து வானாகையாலே 'தமக்கு அவை கிடைக்கக் கூடுமென்று எண்ணி அவ்வரசனிடம் சென்றார். அந்த அரசன் வீர

சைவனாகையாலே இவருக்கு ஒன்றும்தரமாட்டேன் என்றான். 'ஏன் எனக்குத் தரமாட்டேன் என்கின்றாய்? எனக்குத் தர்க்கம் தெரியாதா? வியாகரணம் தெரியாதா? மீமாம்ஸை தெரியாதா? எந்தச் சாத்திரத்தில் வேண்டு மானாலும் தேர்வு வைத்துத் தேறலாமே' என்றார். அதற்கு அரசன் "ஓய்! உமக்குப் புலமையில் குறை யொன்றும் நினைத்திலேன். நீர் பெரும் புலவர் என்பதை அறிவேன். ஆனால், நீர் வைஷ்ணவனாகையாலே தர மாட்டேன்" என்றான். அது கேட்டு மிளகாழ்வான் "உண்மையில் நமக்கு வைஷ்ணத்துவம் இல்லையாகிலும் இவனுடைய எண்ணத்திலாவது நமக்கு வைஷ்ணவத்துவம் உண்டாகப் பெற்றதே!" என்று ஆனந்தக் கூத்தாடிக் கிராம பூமிகள் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு மேலாக மன நிறைவு பெற்றானாம். இதனால் சாதாரண மக்கள் வைணவர்கள் என்று திரஸ்கரிப்பதும் நன்றே என்று காட்டினபடி,

254

கோல மலர்ப்பாவைக் கன்பா
கியவென் அன்பேயோ!
நீல வரைஇரண்டு பிறைகவ்வி
நிமிர்ந்தது ஒப்ப
கோல வராகம்ஒன்றாய் நிலம்கோட்டிடைக்
கொண்ட எந்தாய்!
நீலக் கடல்கடைந்தாய் உன்னைப்
பெற்றினிப் போக்குவனோ? 40

---

40. திருவாய்-10. 10 : 7

[கோலம்-அழகிய; மலர்ப்பாவை-பெரிய பிராட்டியார்; அன்பேயோ-அன்பு செய்கின்றவனே; நீலம் வரை-நீலமணி மலை; நிமிர்ந்தது ஒப்ப—எழுந்ததுபோலே; நிலம்—பூமி; கோடு-எயிறு; உன்னைப் பெற்று—உன்னைப் புகலாகப் பெற்று; போக்குவனோ—நழுவ விடுவேனோ.]

ஆழ்வார் பரமபக்தியால் கனிந்து திருமாலைத் தாம் அடைந்தமையை அருளிச் செய்வதாக அமைந்த திருவாய்மொழியில் ஒரு பாசுரம். இதில் ஆழ்வார், "அழகிய தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாருக்கு அன்பனாக இருக்குமதனாலே என்னிடத்திலும் அன்புடையவனாக இருப்பவனே! கரிய நிறத்தையுடைய ஒரு மலையானது இரண்டு பிறையைக் கவ்விக்கொண்டு புறப்பட்டாற் போன்று, ஒப்பற்ற அழகிய வராகமாகி, பாதாளத்தில் அழுந்திக் கிடந்த பூமியைத் தந்தத்திலே கொண்டு காப்பாற்றிய எந்தையே! நீல நிறத்தையுடைய கடலைக் கடைந்தவனே! உன்னை அடைந்த பின்பு இனி நழுவ விடுவனோ?" என்கின்றார்.

'கோலம் மலர்ப்.........அன்பேயோ' : பிராட்டிறக்கல் உள்ள அன்பின் மிகுதியாலே அந்த அன்பே காரணமாக அவளால் அங்கீகரிக்கப்பட்ட என் பக்கலில் மிக்க அன்புள்ளவன் ஆனவனே! இதற்கு ஒரு சம்வாதம் காட்டுகின்றார் ஈட்டாசிரியர். பட்டர் தம்முடைய இறுதிக் காலத்தில் அருளிச் செய்தவார்த்தை; பெரிய பிராட்டியாருக்கு அன்பன் ஆகையாலே அவளால் அங்கீகரிக்கப்பட்ட நமக்கு அன்பனாம் என்று இப்பாசுரத்தை நம்முடையார் துவயத்தின் பொருளோடு அநுசந்திப்பர்கள் என்பது.

இயற்பா

255

தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்
தெவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ் வண்ணம் ஆழியான் ஆம். 41

[தமர்—அடியார்கள்; உகந்தது—உகக்கப் பட்டது; தானே ஆம்—பரிணாமமடைவன்; பேர்—திரு நாமம்; எவ்வண்ணம் சிந்தித்து—எந்த விதமாகவோ அநுசந்தித்து; இமையாது இருத்தல்—ஓயாமல் பாவனை பண்ணிக் கொண்டிருத்தல்; ஆழியான்—சக்கரப் படையான்.]

இப்பாசுரம் பொய்கையார் அருளிச் செய்தது. அடியார்கள் இறைவனுக்கு அடிமை செய்யும் போது எந்த உருவத்தையும் எந்தத் திருப் பெயரையும் உகந்திருப் பார்களோ அந்த திரு உருவத்தையும் அந்தத் திருநாமத்தை தையுமே அர்ச்சாவதார உருவமுடையவனாய்த் தன்னை அமைத்துக்கொண்டு அவர்களை அடிமை கொள்வான் இறைவன் என்கின்றார் ஆழ்வார். தமர்கள் கல் மண் உலோகங்கள் இவற்றுள் எதனைக் கொண்டு இறைவனு டைய திருமேனியை அமைக்கின்றார்களோ அதனையே இறைவன் தனது ஒப்பற்ற திருமேனியாக ஏற்றுக்கொண்டு அதிலே சந்நிதானம் பண்ணி எழுந்தருளியிருப்பன்,

41 : முதல் திருவந்—44

அந்தத் திருமேனிக்கு எந்தத் திருநாமத்தையிட்டு வழங்கு கின்றனரோ அந்தத் திருநாமத்தையே நாராயணாதி நாமங்கள்போல் விரும்பி ஏற்றுக்கொள்வன். மற்றும், குணம் சேஷ்டிதம் (அற்புதச் செயல்கள்) முதலியவற்றில் எந்தக் குணசேஷ்டிதங்களை அநுசந்தித்து நாள்தோறும் பாவனை பண்ணுவார்களோ அவற்றையே கொண் டிருப்பன் — இவ்வாறு எம்பெருமானின் அர்ச்சாவதார சௌலப்பியத்தை இப்பாசுரத்தில் அருளிச் செய்கின்றார். ஆழ்வார்.

இந்தப் பாசுரம் இராமாநுசரின் வாழ்க்கையில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியுடன் பொருந்தி அமைகின்றது. இராமாநுசர் திருவரங்கத்தில் வாழ்ந்தபோது ஒரு சமயம் மாதுகரத்திற்கு (பிட்சைக்கு) திருவரங்கத் திரு வீதி ஒன்றில் சென்று கொண்டிருந்தார். அப்போது இவர் உள்ளம் முதலாழ்வார்கள் மூவரிலும் முதலாழ்வார் என்று வைணவர்கள் குறிப்பிடும் பொய்கையாழ்வார் அருளிய மேற்குறிப்பிட்ட பாசுரத்தின் பொருள் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தது. இறைவன் தன் உருவில் மனிதனைப் படைத்தான் என்கின்றது கிறித்தவர்களின் சத்திய வேதம் என்பதை நாம் அறிவோம். இதனை மறுத்து மனிதன் தன் உருவில் இறைவனைப் படைத்து விடுகின்றான் என்று அறிவியல் மனப்பான்மை தெரிவிக் கின்றது என்பதும் நமக்குத் தெரியும். இந்த இருவகை மன நிலைகளையும் சமரசப்படுத்துவதுபோல் அமைந்துள்ளது பொய்கை யாழ்வாரின் அருள் வாக்கு.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டே இராமாநுசர் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது தெருப் புழுதியில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். திருவரங்கத்துச் சிறுவர்கள் அல்லவா? திருக்கோயிலில் தாங்கள் கண்டவற்றையே தங்கள் விளையாட்டிலும் பிரதிபலிக்கச் செய்தனர். பாவனை சிறுவர்கள் விளை யாட்டின் ஒரு முக்கிய கூறு என்பதை உளவியல் அறிஞர்கள்

எடுத்துக் காட்டியுள்ளனர். ஆண் பிள்ளைகள் 'அப்பா விளையாட்டும்' பெண் பிள்ளைகள் 'அம்மா விளையாட்டும்' இருவரும் 'ஆசிரியர் விளையாட்டும்' விளையாடுவதை நாம் காணத்தான் செய்கின்றோம். கற்பனையான்றலால் ஊஞ்சல் கப்பலாக மாறிவிடுகின்றது! மரக் கட்டை குதிரையாகி விடுகின்றது! உயிரில்லாதவை உயிருள்ளவைகளாகி விடுகின்றன; பேசுகின்றன! கடை வைப்பதிலும் பள்ளிக் கூடம் வைப்பதிலும் பாலர்கட்கு அதிக ஆசை என்பதை நாம் அடிக்கடிக் காண்கின்றோம்.

ஒரு சிறுவன் மண்ணில் சில கோடுகளை வரைந்தான்; 'இதோ திருக்கோயில்' என்றான். இன்னொரு சிறுவன் வேறு இரண்டொரு கோடுகளைக் கீறி 'இதோ பெரிய திருமண்டபம்' என்றான். அந்த இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்த இராமாநுசரைக் கண்டதும் பிறிதொரு பையன் மேலும் இரண்டொரு கோடுகளைக் கிழித்து, 'ஜீயரே, 'இதோ உம்முடைய பெருமாள்!' என்று காட்டினான். இராமாநுசர் வந்து பார்த்தார். மற்றொரு சிறுவன், 'அதோ பெருமாளின் திருவாழி, திருச்சங்கு!' என்று சுட்டிக் காட்டினான். உடனே இராமாநுசர்,

> தமர் உகந்தது எவ்வுருவம்
> அவ்வுருவம் தானே.

என்று சொல்லிக்கொண்டே, அந்தச் சிறுவரின் கீறல்களை நோக்கித் தண்டனிட்டார். இவரது திருவுள்ளம் அந்தக் கீறல்களை உண்மையாகவே எம்பெருமானின் திருமேனியாகவே கருதி பிரபத்தி பண்ணிவிட்டது.

> தமர்உகந்தது எப்பேர்
> மற்று அப்பேர்.

அருகிலிருந்த இன்னொரு சிறுவன் ஒரு 'கொட்டாங் குச்சியில்' மண்ணை வாரி வைத்துக்கொண்டு சந்நிதியில்

அருளிப்பாடுகள் சொல்லுகின்ற மாதிரியே சொல்லிக் கொண்டு வரும்போது 'ஜீயரே!' என்று அருளிப்பாடு சொல்லிக் கூவினான். இராமாநுசரும், 'நாயிந்தே!' என்று கோயிலில் சொல்லுவதுபோல் சொல்லிக் கொண்டே கையை நீட்டித் தம் மேலாடையில் அந்த மண்ணைப் பிரசாதமாக ஏற்றுக் கொண்டார். சிறுவர்களுக்கு ஒரே குதூகலம்; இராமாநுசருக்கோ பொய்கையாழ்வாரின் இதயத்தையே பார்த்துவிட்டது போன்ற பரவசம்.

பின்னிணைப்பு—1

பயன்பட்ட நூல்கள்

அ. தமிழ் நூல்கள்

அண்ணங்கராசாரிய சுவாமிகள் பி. ப: நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்-திவ்வியார்த்த தீபிகை, கிரந்தமாலா ஆபீஸ் காஞ்சிபுரம்.

இராகவய்யங்கார், இரா. பெருந்தொகை.

இராசகோபாலன், T. S. திருக்கண்ணபுரக் கலம்பகம் (புக்ஸ் இந்தியா, (பிரைவேட்) லிமிடெட், 135, பவழக்காரத் தெரு, சென்னை—1)

இராமலிங்க சுவாமிகள் : திருஅருட்பா (இராமலிங்கர் பணி மன்றம், சென்னை—89)

இளங்கோ அடிகள் : சிலப்பதிகாரம் வேங்கடசாமி நாட்டார் உரை-(பாகனேரி வெளியீடு-1942).

இளவழகனார் (பதி) : கலித்தொகை-நச்சினார்க்கினியர் உரை (பாகனேரி வெளியீடு-1949)

இறையனார் : களவியல் (நக்கீரர் உரை) கழக வெளியீடு

கம்பர் : கம்பராமாயணம் (வை. மு. கோ. உரை)

கிருஷ்ணவேணி அம்மையார் : செம்பொருள் (திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி-1952)

சாமிநாத அய்யர் உ. வே. (பதி) : புறநானூறு-(நான்காம் பதிப்பு-1950)

சாமிநாத அய்யர் உ.வே. (பதி): பத்துப்பாட்டு-(நான்காம் பதிப்பு-1930)

சோமசுந்தரனார் (பதி) : ஐங்குறுநூறு (கழகம்)

சிராமதேசிகாசாரியர், வ. ந : ஸ்ரீதேசிகப் பிரபந்தம் உரை (ஒப்பிலியப்பன் சந்நிதி, திருநாகேஸ்வரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்)

சுப்புரெட்டியார், ந : முத்திநெறி (பாரிநிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108).

சுப்புரெட்டியார், ந : பாண்டி நாட்டுத் திருப்பதிகள்.

திருவள்ளுவர் : திருக்குறள்-பரிமேலழகர் உரை, கழக வெளியீடு (தாது. மாசி)

நாராயணசாமி அய்யர், பி. : நற்றிணை உரை (ஆனந்த வருடம், ஆடி மாதம்)

பிள்ளை உலக ஆசிரியர் : தத்துவத் திரயம் (பி. ப. அ. பதிப்பு)

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : அஷ்டப் பிரபந்தம் (வை. மு. கோ. உரை)

புருடோத்தம நாயுடு. பு. ரா : திருவாய்மொழி-ஈட்டின் தமிழாக்கம் I-X பகுதிகள் (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு)

புருடோத்தம நாயுடு, பு. ரா. ஆசாரிய ஹிருதயம் (2 பகுதிகள்) (சென்னைப் பல்கலைக் கழகம்)

புருடோத்தம நாயுடு, பு. ரா: ஸ்ரீவசன பூஷணம் (தி. கி. நாராயணசாமி நாயுடு பதிப்பு.)

மயிலை மாதவதாசன் : திருப்பாவை வியாக்கியானங்கள் (திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன், தெரு, சென்னை-600 001,

மணவாள மாமுனிகள் : உபதேச ரத்தின மாலை (பி. ப. அ. பதிப்பு)

வேங்கடசாமி, கி: நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்—மூலம் திருவேங்கடத்தான் திருமன்றம் 32, பெருமாள் முதலி தெரு, இராயபேட்டை, சென்னை-600 014)

வேங்கடசாமி நாட்டார், ந. மு. (பதி) : அகநானூறு மூன்று பகுதிகள் (கழக வெளியீடு).

வில்லிபுத்தூர்ஆழ்வார் : பாரதம் (ராஜம் பதிப்பு)

ஆ. ஆங்கில நூல்கள்

Subbu Reddiar N. : Collected Papers, Paari Nilayam, 184, Prakasam Salai, Madras-600 108.

Subbu Reddiar N. : Reiigion and Philasophy of Nalayira Diva Prabandham, with Special Reference to Nammalvar S. V. University Tirupati-517 502 (1977)

பின்னிணைப்பு—(2)

வைணவப் பெரியார்கள்

அகளங்க பிரம்மராயன் : கூரத்தாழ்வானின் சீடர். திரு அரங்கம் மதில் நிர்மாணம் செய்தவர் (பாசுரம்—205 235 காண்க).

அத்துழாய் : பெரிய நம்பியின் திருமகளார். இராமாநுசர் 'உந்து மதகளிற்றன்' அநுசந்திக்கும்போது திருக் கடைக் காப்பு நீக்கிப் பிச்சையிட வந்தபோது ஜீயர் தண்டனிட்டார். (பாசுரம்—6 காண்க).

அநுமந்த தாசர் : இராமாநுசருடைய சீடர். இவருக்கும் கூரத்தாழ்வானுக்கும் இராமாநுசர் திருவாராதனக் கிரமம் உபதேசித்தார் (பாசுரம்-65 காண்க)

அப்பன் ('குருகைக் காவலப்பன்' காண்க)

அம்பரீஷன் : நபாகன் புத்திரன். எகாதசி விரதம் அநுட்டித்து முடிவில் அறுபது கோதானம் செய்து துவாதசிபாரணை செய்யவிருக்கையில் துருவாசர் அதிதியாக எழுந்தருளினார். முனிவர் காளிந்தி சென்று தீர்த்தம் ஆடுகையில் அரசன் துவாதசி கடத்தலை எண்ணிப் பயந்தவனாய் சலபானம் செய்தனன். தன் கருமம் முடித்துத் திரும்பிய முனிவர் அரசன் செய்கையறிந்து சினங் கொண்டுத் தம்மை அவமதித்துச் சல பானம் செய்த அரசனைக் கொல்ல எண்ணித் தமது சடையிலொன்றைக் களைந்துக் கோபத்துடன் பூமியில் எறிய, அதினின்றும் ஒரு பூதம் உண்டாகி அரசனை எதிர்த்தது. அரசன் அதை விஷ்ணு சக்கரத்தாற் கொன்றனன். பிறகு சக்கரம்

முனிவரைத் துரத்த, முனிவர் திரிமூர்த்திகளிடம் சரணம் புக்கனர்; அப்படிச் செய்தும் சக்கரம் விடாது தொடர்வது கண்டு அரசனை அடைக்கலம் புகுந்து வேண்ட, அரசன் சக்கரத்தை வேண்டிக் கொல்லாது காத்தனன். முனிவர் அச்சம் நீங்கி அரசனை ஆசீர்வதித்தனர். இவன் தீவிரமான திருமால் பக்தன். இதனைத் திருமால் இந்திரன் வடிவங் கொண்டு சோதித்த வரலாற்றை பாசுரம்-128, 169 இல் காண்க.

அம்மங்கி அம்மாள் ; அருளாளப் பெருமாள் எம்பெருமானாருடைய சீடர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். இவர் நோயால் வருந்தியிருக்கும்போது நஞ்சீயரும் நம்பிள்ளையும் நலம் விசாரிக்கச் சென்ற நிகழ்ச்சி நினைவு கூரத் தக்கது (பாசுரம்—47 காண்க).

அம்முனி ஆழ்வான் : பராசர பட்டர் காலத்தவர். இவர் பட்டர் திருவடிகளை வணங்கி தமக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் பிரசாதித்தருளுமாறு வேண்ட, அவர் 'நெடுமாற்கடிமை' என்ற திருவாய்மொழியை ஓதுமாறு அருளிச் செய்தார் (பாசுரம்—194, 224 காண்க).

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ; எம்பெருமானாருடைய சீடர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். இவர் ஆதியில் யஞ்ஞமூர்த்தி என்ற பெயருடன் (அத்வைதி) இருந்து திக்விஜயம் பண்ணிக்கொண்டு வருங்கால் கோயிலில் (திருவரங்கத்தில்) 18 நாட்கள் வாதம் செய்து தோற்று அவர் திருவடிகளில் ஆச்ரயித்து அவரிடம் பஞ்ச சம்ஸ்காரம் பெற்று வைணவரானார். அனந்தாழ்வான், அம்மங்கி அம்மாள் இவரது சீடர்கள். (பாசுரம்—196 காண்க.)

அழகிய மணவாளசீயர் : நம்பிள்ளையின் சீடர். முதலில் இவர் புலவரல்லர். இவர் நம்பிள்ளையின் திருவடியில் நன்கு கற்று விரைவில் புலவரானார். தம்மைப் பரிகசித்தவர்கள் வியக்கும்படி முசலகிசலயம் என்ற ஒரு நாடகத்தை

யும் அப்பேருள்ள ஒரு காவியத்தையும் செய்தருளினார். இவர் சந்நியாசியாசிரமத்தை மேற்கொண்டு திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்ற உரையை அருளிச்செய்தார். இது தவிர, திருவிருத்தத்திற்கு ஸ்வாபதேச உரை, இரகசியத்திரய விஷயமாக தத்துவதீபம் என்ற நூல், அதற்கு உரையாக தத்துவப் பிரகாசம் என்றநூல், இரகசியத்திரய காரிகை என்ற நூல் ஆகியவற்றைச் செய்தவர் (பாசுரம்-75 காண்க.)

அனந்தாழ்வான் : இவர் இராமாநுசருடைய சீடர். அவர் நியமனப்படி திருமலையில் கைங்கரியம் செய்தவர். அங்கு ஓர் ஏரியை வெட்டி, அதற்கு 'இராமாநுசன் புத்தேரி' என்ற பெயரை அமைத்து, ஒரு நந்தவனத்தை உண்டாக்கி அதிலிருந்து மலர்களைப் பறித்து மாலை தொடுத்து திருவேங்கடமுடையானுக்கு நாடோறும் மலர்த்தொண்டு செய்துவந்தவர் (பாசுரம்—138, 173, 192, 206 காண்க)

ஆச்சான் : 'கிடாம்பி ஆச்சான்' காண்க.

ஆச்சான் பிள்ளை : பெரியவாச்சான் பிள்ளை. இவர் நம்பிள்ளையின் சீடர். நம்பிள்ளையின் நியமனத்தினால் திருவாய்மொழிக்கு 'இருபத்து நாலாயிரப்படி' என்ற வியாக்கியானமும், மற்ற மூவாயிரத்துக்கும் வியாக்கியானமும் செய்தார். 'உரை வேந்தர்' என்ற புகழ்பெற்றவர். இவர் பிறந்த ஊர் சேங்கநல்லூர் (தஞ்சை மாவட்டம்).

ஆண்டாள் : (1) கூரத்தாழ்வான் தேவிகள், (2) உய்யக்கொண்டார் தேவிகள், (3) திருமங்கையாழ்வார் சகோதரி. (4)பெரியாழ்வாரின் திருமகளான கோதா தேவி. (பாசுரம்-265 காண்க.)

ஆண்டான் : 'முதலியாண்டான்' காண்க.

ஆப்பான் : பட்டர் காலத்து வைணவர் (பாசுரம்—49, 187 காண்க.)

ஆப்பான் திருவழுந்தூர் அரையர்: இவர் பட்டர்காலத்து வைணவர். திருவாய்மொழி விண்ணப்பம் செய்யும் தம் பிரான்மார்களில் ஒருவர் (பாசுரம்—169, 176, 227காண்க)

ஆமருவி நிரைமேய்த்தான் நம்பியார்: கூரத்தாழ்வான் காலத்தவர். நூறுவயது நிரம்பிய பெரியார். (பாசுரம்-172 காண்க).

ஆய்ச்சி மகன் : எம்பெருமானார் காலத்து வைணவர். அழகிய மணவாளனிடத்தில் மிக்க பக்தியுடையவர். இவர் நோய்வாய்ப் பட்டிருந்தபோது பட்டர் இவரைப் பார்க்கச் சென்ற நிகழ்ச்சி நினைவுகூரத் தக்கது (பாசுரம்—162 காண்க.)

ஆலவாயுடையான்: பட்டர் காலத்துத் தமிழ்ப் புலவன். பட்டரிடம் 'புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்' என்ற தொடருக்கு விளக்கம் பெற்றவன் (பாசுரம்—54 காண்க).

ஆழ்வான் : 'கூரத்தாழ்வான்' காண்க.

ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் : பெரிய நம்பிக்குப் பின்னவர். ஆளவந்தாரின் திருமகனார். இவருக்கு ஆளவந்தாழ்வார் எனவும் திருநாமம் உண்டு (பாசுரம்—171, 198, 230. காண்க).

ஆளவந்தார் : யாமுனாசாரியர் என்ற திருப்பெயரினர். மணக்கால் நம்பிக்குப் பின்வந்த ஆசாரியர். ஈசுவரமுனிகளின் குமாரர்; நாதமுனிகளின் பேரர். மகாபாஷ்ய பட்டரிடம் சாத்திரப் பயிற்சி பெற்றவர். மகாபாஷ்யப் பட்டருக்குப் பதிலாக இவர் தண்டிகையிற் சென்று ஆக்கியாழ்வானை வாதில் வென்றவர்; அரசமாதேவி திருவரங்கத்தம்மையாரால் 'என்னையாள வந்தார்' என்று புகழப்பெற்று அன்றுமுதல் 'ஆளவந்தார்' என்று புதிய திருநாமத்தால் திகழ்ந்தவர். அரசன் வென்றவனுக்குப் பாதி இராச்சியமும் தோற்றவர்க்குப் பணி செய்தலும் எனக் கூறிப் பந்தயத்தில் இராச்சியத்தை மாத்திரம் கொண்டு

பணிசெய்தலை விலக்கிக் கொண்டவர். இல்லற வாழ்க்கையை ஏற்று சொட்டை நம்பிகள், திருவரங்கப் பெருமாளரையர் முதலிய குமாரர்களைப் பெற்று இன்புற்றிருந்தவர். மணக்கால் நம்பிகளிடம் இரகசியங்கள் உபதேசம் பெற்று; நாளுக்குநாள் சம்சாரத்தில் வெறுப்புற்றவர். நம்பிகள் பெரிய பெருமாளிடம் அவரை இட்டுச் சென்று 'இதுதான் நும் பிதாமகர் தேடிவைத்த மாநிதி' எனக்காட்ட, அன்றுமுதல் தம் குமாரர்களையும் நம்பிகளின் திருவடிகளிவிட்டுத் ஆச்ரயிக்கச் செய்து ஆத்ம சமர்ப்பணம் செய்து சதுசுலோகி என்ற வடமொழி நூலை அருளிச்செய்து துரியாச்சிரமத்தைக் கைக்கொண்டவர். இவர்தம் சீடர்கள் பெரியநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, திருமாலையாண்டான், மாறனேர் நம்பி, திருவரங்கத்தம்மை, திருக்கச்சி நம்பி முதலியோர். 'ஆகமப் பிரமாண்யம்' 'புருஷநிர்ணயம்' 'ஆத்மசித்தி' 'கீதார்த்த சங்கிரகம்' 'ஸ்ரீதோத்திரம்' 'சது சுலோகி' முதலிய வடமொழி நூல்கள் இவர் அருளிச்செய்தவை. இராமாநுசரின் மானச ஆசாரியர். (பாசுரம்—48, 132, 191, 219, 244 காண்க).

இருகை மதவாரணம்; பட்டர் காலத்தவன். நம்பெருமாளிடத்தில் பரமபக்தி வாய்ந்த ஒரு கைக்கோளன் பரம வைணவன். (பாசுரம்—235 காண்க).

இளையாழ்வார்; எம்பெருமானார் காண்க.

இளையாழ்வான்: பட்டர்காலத்து வைணவன் (பாசுரம் 205 காண்க).

இளையாற்றுக்குடி நம்பி: பரமபக்தர். திருநாட்கள் தோறும் கோயிலுக்கு வந்து பெருமாளைச் சேவித்துப் போவாராம். திரும்பவும் திருநாள் வருந்துணையும் அதனையே போதுபோக்காக நினைத்துக் கொண்டிருப்பாராம். மேலும் விவரம் பாசுரம்—220 இல்காண்க.

உடையவர் : எம்பெருமானார் காண்க.

உய்ந்த பிள்ளை ; இராமாநுசர் காலத்தில் திருவரங்கத்தில் வாழ்ந்த அரையர்களுள் ஒருவர். இவர் அபிநயித்ததை எம்பார் திருத்திக் காட்ட அதன்படி அபிநயித்துக் காட்டி உடையவரின் உகப்புக்கு ஆளானவர் (பாசுரம் 2 காண்க).

எம்பார் : உடையவரின் சிறிய தாயார் மகன். மாதுலனான திருமலை நம்பியால் 'கோவிந்த பட்டர்' என்று திருநாமம் சாத்தப்பட்டவர். இளையாழ்வாரும் இவரும் யாதவப்பிரகாசரிடம் வேதாந்தங்களைக் கற்றவர்கள். இவர் கங்கையில் நீராடும்போது ஒரு சிவலிங்கம் இவர் கையில் வந்து சேர்ந்தது. அதுவே ஏதுவாக இவருக்கு 'உள்ளங்கை கொணர்ந்த நாயனார்' என்று பெயரிட்டுக் காளத்தியில் சிவ வழிபாடு செய்து வந்தார். பெரிய திருமலை நம்பி இவரைத் திருத்திப் பணி கொள்ளக் காளத்தியில் ஸ்ரீபாத முதலிகட்கு 'திண்ணன் வீடு' (திருவாய். 2. 2). காலட்சேபம் சாதித்து வந்தார். அப்போது 'எம்பெருமானுக்கெல்லாம் பூவும் பூசையும் தகுமே' (2. 2, 3) என்றதன் வியாக்கியானத்தைக் கேட்ட போதே கையிலிருந்த பூப்படலிகையையும் உருத்திராக்கச் சின்னங்களையும் வீசி யெறிந்து 'தகாது, தகாது' என்று நம்பி திருவடிகளில் அடைவுகெட விழ, நம்பியும் அவரைப் போரக் கடாட்சித்து திருத்திப் பணி கொண்டார். இராமாநுச தரிசனம் பரப்புவதில் முக்கியமான தொண்டராகத் திகழ்ந்தார். (பாசுரம்—5, 108, 112, 127, 135, 154, 190, 193, 242 காண்க).

எம்பெருமானார் : இவர் இராமாநுசர். ஸ்ரீ பெரும்புதூரில் பிறந்தவர். தந்தையார் கேசவ தீட்சிதர்; தயார் காந்திமதி. திருத்தமக்கையார் நாச்சியாரம்மன். நம்பெருமாள் 'உடையவர்' என்றும், தேவப் பெருமாள் யதிராசர்' என்றும், திருவரங்கப் பெருமாளரையர் 'இலட்சு

மணமுனி' என்றும், திருக்கோட்டியூர் நம்பி 'எம்பெருமானார்' என்றும் திருமாலையாண்டான் 'சடபகபேன் பொன்னடி' என்றும் திருமலை நம்பி 'கோயிலண்ணன்" என்றும், எம்பார் 'ஸ்ரீபாஷ்யக்காரர்' என்றும், ஆதிகேசவர் 'பூதபுரீசர்' என்றும், திருவேங்கட முடையான் தேசிகேந்தரர் என்றும் திருநாமங்கள் சாத்தினர். இவர்தாம் வைணவ சித்தாந்தத்தை முறைப்படுத்தி உலகுக் களித்தார். எண்ணற்ற சீடர்களைக் கொண்டவர். இவர்கட்கெல்லாம் உபதேசித்துக் கொண்டு கோயிலில் 125 ஆண்டுகள் எழுந்தருளியிருந்தார். இவர் அருளிச் செய்த நூல்கள் 'ஸ்ரீபாஷியம்', 'வேதாந்த சாரம்', 'வேதாந்த தீபம் 'வேதாந்த சங்கிரகம்' ''உடையவர் நித்தியம் 'கீதா பாஷியம்' முதலியன. வைணவத்தின் 'வளர்ப்புத்தாயாகத்' திகழ்ந்த பெருமகனார் இவர் (பாசுரம் 8, 45, 81, 138, 148, 182, 192, 217, 226, 231, 251 காண்க).

கரிகால் சோழபிரம்மராயன்: இவன் கலப் பிரதேசத்தி லுள்ள ஒரு பிரபு. நஞ்சீயர் காலத்தவன். இவன் திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானம் எழுதி அதை நஞ்சீயரிடம் காட்டி, மதிப்புரை வாங்கப் பார்த்தான். அதைச் சீயர் நம்பிள்ளையிடம் தந்து அவரை மதிப்புரை தருமாறு பணித்தார். மேல் விவரம் பாசுரம்—152 நோக்கி அறிக.

கிடாம்பி ஆச்சான்: இவர் பெரிய திருமலை நம்பிக்கும் மருமகன். இவர் திருக்குமாரர் இராமாநுசப் பிள்ளான்' இவர் திருக்கோட்டியூர் நம்பி நியமனத்தால் உடையவருக்கு மடப்பள்ளி கைங்கரியம் செய்தவர். சாத்திரங்களையும் சம்பிரதாயங்களையும் பழுதற ஓதி உணர்ந்தவர். இவரை 'மடைப்பள்ளி ஆச்சான்' என்றும் வழங்குவதுண்டு. ஸ்ரீபாஷ்யக்காரருடைய திருமடைப் பள்ளியில் அந்தரங்க கைங்கரியம் செய்து வந்து அவரிடமே எல்லாப் பொருள்களையும் கற்றறிந்த கிடாம்பி ஆச்சான் வழியாக வைணவ சம்பிரதாயம் தழைத் தோங்குவதால் 'மடைப் பள்ளி வந்த மணம்' என்று சிறப்பித்தார் வேதாந்த

தேசிகர் (தே. பி. 133). இவர் எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர் (பாசுரம்—166 காண்க).

குருகைக் காவலப்பன் : நாதமுனிகளின் சீடர். நாதமுனிகளின் சொற்படி ஆளவந்தாருக்கு யோக இரகசியங்களை உபதேசிக்க இருந்தவர் (பாசுரம்—132 காண்க).

குன்றத்து சீயர் : இவர் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தில் ஓர் அயனத்தில் புகுந்தார். இவருடைய இயற்பெயர் 'சிங்கப்பிரான்' என்பது, அயனத்தின் உட்பொருளை பாசுரம் —111 இல் காண்க.

கூரத்தாழ்வான் : இவர் பிறப்பிடம் காஞ்சிபுரத்தருகிலுள்ள கூரம் என்ற சிற்றூர். உடையவரின் சீடர். உஞ்ச விருத்தி செய்து வாழ்ந்தவர். ஒரு நாள் உஞ்சவிருத்திக்குச் செல்லாமலிருக்க கோயிலில் பெருமாள், அமுது கொள்ளத் திருச்சின்னம் பரிமாறினார். பிராட்டி பெருமாளை நோக்கி "ஆழ்வான் பட்டினி, யிருக்க, தேவரீர் அமுது கொள்ளலாமோ?" எனப், பெருமாளால் அமுது தரப்பெற்றவர். உடையவருக்கு எல்லாவிதத்திலும் உதவினவர். "வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் கூரத்தாழ்வான்" (இராமாநுச நூற். 7) என்று அமுதனாரால் போற்றப்பெற்றவர். இவர் சோழனால் கண்ணிழந்து திருவரங்கத்திலிருந்து பெருமாளைப் பிரார்த்தித்து உடையவர் ஸ்ரீபாததீர்த்தம் பெற்று திருநாட்டுக்கு எழுந்தளினார். இவர் கூரேசர், கூராதிபர், கூராதிபதி, கூரநாதர், ஸ்ரீவத்ஸசிஹ்னர் என்ற திருநாமங்களாலும் வழங்கப்பெறுவார். இவர் வரதராஜ ஸ்தவம்' 'சுந்தர பாஹுச்ஸ்தவம்' 'அதிமானுஷியஸ்தவம்' 'ஸ்ரீவைகுண்டஸ்தவம்', 'யமகரத்நாகரம்' 'கத்தியத் திரயவியாக்கியானம்' முதலிய நூல்களைச் செய்தவர். பிள்ளைப் பிள்ளையாழ்வான், திருவரங்கத்தமுதனார், நாலூரான் என்பவர்கள் இவருடைய சீடர்கள். 'சிஷ்ய

லட்சணத்திற்கும் ஆசார்ய லட்சணத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டாவார்' என்று ஆச்சான் பிள்ளை அருளிச் செய்வர் (பாசுரம்—22, 65, 145, 154, 159, 225 காண்க).

கோயிலாத்தான் : பட்டர் காலத்து வைணவர்; பட்டரையே தெய்வமென்று நினைத்திருந்தவர்: தமக்குப் பிறந்த பிள்ளைக்குப் 'பட்டர்' என்றே பெயரிட்டவர். அந்தப் பிள்ளை தெய்வாதீனமாகத் திருநாட்டுக் கெழுந்தருள, ஆத்தான் பட்டர் பக்கலிலே வந்து கதறியழ, பட்டரும் 'நீ நம்முடைய திருப்பெயரிட்ட பிள்ளை போனான்' என்றன்றோ துக்கப்படுகின்றாய்; அதற்குத் துக்கப்படவேண்டா; அந்தத் திருப் பெயரையுடைய நாம் இருக்கத் வக்கப்படுவானேன்?' என்று அருளிச் செய்தார். (பாசுரம்—233 காண்க).

கோவிந்தசாமி : இவன் ஓர் அந்தணன். கண்ணன் செய்த சிறு குறும்புகளையும் குரவைக் கோத்தல் முதலிய வைகளையும் நேரில் கண்டு களிக்கக் கருத்துடையவனாய் எம்பெருமானை வேண்ட, அவனும் அப்படியே காட்டிக் கொடுத்தான்...மேல் விவரங்களைப் பாசுரம்—60-இல் காண்க. இந்த இதிகாசம் எந்தப் புராணங்களிலும் காணப் படாதது.

கோவிந்தர் : 'எம்பார்' காண்க (பாசுரம்—126 காண்க).

கோவிந்த பட்டர் : 'எம்பார்' காண்க.

கோளரியாழ்வான் : பட்டர் காலத்தில் திருக்கோட்டியூரில் வாழ்ந்த ஒரு வைணவர். புறச் சின்னங்களுக்கும், புறச் செயல்கட்கும், சடங்குகட்கும் மதிப்பு தருபவர். (பாசுரம்—116 காண்க).

சிறியாத்தான் : பட்டர் காலத்து வைணவர். இவர் பட்டருடைய அருளிச் செயல்களைக் கேட்க விரும்பி அவர் சந்நிதியிலே விடை கொண்டு ''சக்கரவர்த்தித் திருமகனுக்கு எல்லா ஏற்றமிருந்தும் அன்பர்கட்காகக் கழுத்திலே ஓலை

கட்டித் தூதுபோன ஏற்றமில்லையே'' என்று கேட்க; அதற்கு அவர், ''க்ஷத்திரிய குலத்தில் பிறந்தால் 'தூதுபோ' என்று சொல்ல ஒருவருக்கும் நா எழாதிறே'' என்று அருளிச் செய்தாராம் (பாசுரம்—28 காண்க).

சிற்றாட் கொண்டான் : திருவரங்கத்தில் வாழ்ந்த ஒரு வைணவர். பகல் பத்து—இராப் பத்து திருநாளில் அரையர் 'மழுங்காத வைந்நுதிய' (திருவாய். 3.1;9) என்ற பாசுரத்தைச் சேவியா நின்ற அரையர், 'உன் சுடர்ச் சோதி மறையாதே' என்ற அளவில் வந்தபோது இவர் 'மறையும், மறையும்' என்றாராம் (பாசுரம்—137 காண்க).

சீராமப் பிள்ளை : பட்டருக்குத் திருத்தம்பியார்; கூரத் தாழ்வானின் இரண்டாவது பிள்ளை. (பாசுரம்—175, 193, 203 காண்க).

சொட்டை நம்பிகள் : ஆளவந்தாரின் திருக்குமாரர்; 'என்னாச்சான்' என்பவருக்குத் தமப்பனார். 74 சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர்; திருவாய்மொழிக்கு ''மனத்தாலும் வாயாலும்'' என்ற தனியனை அருளிச் செய்தவர்.

திருக்கண்ணபுர சுவாமி : திருக்கண்ணபுரத்தில் வாழ்ந்த ஒரு வைணவப் பெரியார். ஆழ்வான் அருளிய சுந்தர பாஹுஸ்தவத்திலுள்ள ஒரு சுலோகத்தை அடிப்படையாகக் கொண்டு 'சிலம்பாறு' என்பதற்கு ரஸோக்தியாக ஒரு பொருள் கூறுவர். (சின்னரப் பெண்மணிகள் திருமாலிருஞ் சோலைத் தாழ்வரையில் வந்து நம்மாழ்வாரது திருவாய் மொழிப் பாசுரங்களை இசையோடு பாட (பெரி. திரு. 9.8;9)'மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ' (திருவாய். 6.5;9) என்று கூவின. அவ்வாழ்வாரது பாசுரங்களைக் கேட்ட குன்றும் உருகிப் போகா நின்றது) என்று அருளிச் செய்தமையால் ''குன்றே உருகி ஆறாயிற்று என்ற காரணங் கொண்டு 'சிலம்பாறு' என்னலாயிற்று'' என்றருளிச் செய்தார் (பாசுரம்—91 காண்க).

திருக்கண்ணமங்கை யாண்டான்: திருக்கண்ண மங்கை என்ற திவ்விய தேசத்திலுள்ள ஆலயத்தில் கைங்கரியம் செய்து கொண்டு வாழ்ந்தவர் (பாசுரம்—230 காண்க).

திருக்குருகைப் பிரான்பிள்ளான்: இவர் பெரிய திருமலை நம்பியின் திருமகனார்; இராமாநுசரின் சீடர்; திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி' என்னும் வியாக்கியானத்தை அருளிச் செய்தவர். பிள்ளான் என்பது இவருடைய இயற்கைப் பெயர். திருக்குருகைப்பிரான் என்பது நம்மாழ் வாரின் திருப்பெயர்; அவருடைய திருப்பெயரை, அவருடைய நினைவின் பொருட்டு தம் சீடரும் அபிமான புத்திரருமான இவருக்கு வைத்தனர் இராமாநுசர். பின்னர் 'திருக்குருகைப் பிரான் பிள்ளான்' என்றே இவர் வழங்கப் பட்டார். திருவரங்கத்தில் வாழ்ந்தவர். 74 சிம்மாசனாதிபதி களுள் இவர் ஒருவர் (பாசுரம்—175 காண்க).

திருவரங்க நாராயணதாசர்: திருவரங்கத்தில் வாழ்ந்த ஒரு வைணவப் பெரியார்; நம்பிள்ளையின் மாணாக்கர் (பாசுரம்—238 காண்க.)

திருவரங்கப் பெருமாளரையர்: இவரை ஆளவந்தார் ஆழ்வார் எனவும் வழங்குவர். பெரிய நம்பிக்குப் பின்னவர், ஆளவந்தாரின் திருக்குமாரர். (பாசுரம்—171, 198, 230. காண்க).

திருவாய்க் குலத்தாழ்வார்: இராசேந்திர சோழன் என்ற ஊரில் வாழ்ந்து வந்த ஒரு வைணவப் பெரியார். இவர் ஒரு சமயம் வயலருகில் போய் கொண்டிருக்கையில் மேகத்தைக் கண்டு மோகித்து விழுந்தார் (பாசுரம்—158 காண்க).

தெற்காழ்வான்: இவர் திருக் கோட்டியூர் நம்பியின் திருக்குமாரர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் இறைவ னின் திருப்பெயரும் இதுவே. இவன் வேறு; கோளரி

யாழ்வானுடன் நட்பு கொண்ட தெற்காழ்வான் வேறு. (பாசுரம்—116 காண்க).

நஞ்சீயர் : இவர் பிறப்பிடம் திருநாராயணபுரம். இவர் வேதாந்தி என்று பெயர் கொண்ட அத்வைதி. பட்டரிடம் வேதாந்த விஷயம்பற்றி வாதிட்டுத் தோற்றவர். பின்னர் பட்டரின் திருவடி சம்பந்தம் பெற்றுச் சீடரானார். ஒரு நாள் பிச்சைக்கு வந்த வைணவருக்குப் பிச்சையிட மறுத்த தேவியரை வெறுத்துத் திரவியத்தைப் பகுத்து பெண் சாதிக்கு அளித்து குருதட்சிணை கொண்டு சந்நியாசியாச்ரமத்தை அடைந்து ஆசாரியரைக் காணப் போனார். "நம் சீயர்" வந்தார் என்று பட்டர் சொல்ல, அன்றிருந்து இவருக்கு 'நஞ்சீயர்' எனப் பெயர் உண்டாயிற்று. ஸ்ரீரங்க நாதர் என்பது இவருக்குத் தாஸ்யத் திருநாமம். திருவாய் மொழிக்கு 'ஒன்பதினாயிரப்படி' என்ற வியாக்கியானம் செய்தருளினவர். இதைத் தவிர, 'திருப்பாவை ஈராயிரப் படி', 'திருவந்தாதிகள்', 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' 'திருப்பல்லாண்டு' இவற்றிற்கு உரை கண்டவர் (பாசுரம்—7, 24, 27, 36, 46, 47, 61, 97, 109, 121, 125, 130, 144, 148, 150, 152, 156, 166, 173, 183, 189, 200, 213, 243, 253 காண்க).

நம்பிள்ளை : நம்பூரில் திருவவதரித்தவர். வரதராசர் என்பது இவரது இயற்பெயர். நஞ்சீயரால் 'நம்பிள்ளை' எனப் பெயர் பெற்றவர். இவருக்கு வழங்கிய வேறு பெயர் கள் கலிவைரி, திருக்கலி கன்றிதாசர், லோகாசாரியார், ஸ்ரீ சூக்திசாகரர் என்பவை. வடக்குத் திருவீதி பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவரும் இவருடைய சீடர்கள். திருவாய்மொழிக்கு 'முப்பத்தாறாயிரப்படி' என்னும் வியாக்கியானத்தை அருளிச் செய்தவர். திருவாய் மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி என்னும் வியாக்கியானம் வரையுமாறு பெரியவாச்சான் பிள்ளைக்குக் கட்டளையிட்டவர். (பாசுரம்—7, 47, 97, 114, 115, 120, 150, 176, 200 காண்க).

நம்பி சேனாபதி தாசர் : ஒரு வைணவப் பெரியார். திருமலைக்குப் போகும் வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சியை ஞானிகட்கு எல்லாம் பரம் பொருள் மயமாகத் தோன்றும் என்று இவர்கூறியதை ஐதிகமாகக் காட்டுவர்ஈட்டாசிரியர் (பாசுரம்—188 காண்க).

நம்பி திருவழுதி நாடு தாசர் : இவர் ஒரு வைணவப் பெரியார். இவர் திருநாட்டிற்கெழுந்தருளுகின்ற சமயத்தில் தம் ஸ்ரீபாதத்திலே சேவித்திருந்த ஒரு வைணவர் அழ, அதற்கு நம்பி "கெடுவாய்! செத்துப் போகின்ற நான் போகா நின்றேன். பராசர பட்டர் வாசிக்கக் கேட்டிருக்கின்ற நீயோ அழுகின்றாய்?" என்று அருளிச் செய்தார். (பாசுரம்—122, 218 காண்க).

நல்லார் : இவர் ஒருவைணவப் பெரியார். இவரும் நம்பி சேநாபதி தாசரும் திருமலைக்கு எழுந்தருளின நிகழ்ச்சியை நம்பிபற்றிய வரலாற்றில் காண்க. (பாசுரம்—188 காண்க)

நல்லான் : பட்டர் திருவடிகளைப் பணிந்து வாழ்ந்தவர் (பாசுரம்—179 காண்க).

நாலூரான் : கூரத்தாழ்வானின் சீடன். சோழமன்னனின் அமைச்சர் குழுவில் ஒருவன். சோழ அரசனுக்கு துர்ப்போதனை செய்து வந்தவன். இந்த அரசன் தன் வழிபடு கடவுளாகிய சிவனுக்குமேல் ஒன்றுமில்லை என்று பண்டிதர்களிடம் கையெழுத்து வாங்கித் தானும் தன் கொள்கைக்குப் பாதுகாப்பாக ஒரு கோட்டை கட்ட விரும்பினான்...எம்பெருமானார், கூரத்தாழ்வான் தொடக்கமான மகாவித்துவான்கள் உபயவேதாந்தங்களில் வல்லவர்களாகையாலே, அவர்கள் கையெழுத்தை வாங்கினீராகில் இது 'நிலைபெறும்' என்று தன் அரசனிடம் நாலூரான் தெரிவித்ததாகக் கூறுகிறது ஒரு குரு பரம்பரை வரலாறு. (பி.ஸ்ரீ. இராமாநுசர்—பக் 203—204) பாசுரம்—13 கத்திர பந்து வரலாறு கூறுமிடத்தில் காண்க.

நிலாத்துக்குறிப் பகவர் ; பட்டர் காலத்து வைணவர்களில் ஒருவர். ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமான் நாற்றோளனாக இருக்கும் இருப்பைக் கேட்டு அறிந்தவர் (பாசுரம்—149 காண்க)

பட்டர் ; பராசரபட்டர். இங்ஙனம் சுருக்கமாக வழங்கப் பெறுவர்.

பரகால சுவாமி : திருவாய்மொழிக்குப் 'பதினெண்ணாயிரப்படி' என்னும் வியாக்கியானம் அருளிச் செய்தவர் (பாசுரம்—27 காண்க).

பராசர பட்டர் : உரைகளிலே பட்டர் என்றே சுருக்கமாக வழங்கப்பெறுபவர். திருத்தமப்பனார் கூரத்தாழ்வான். சகோதரர் சீராமப்பிள்ளை. நம்பெருமாள் வரப்பிரசாதத்தினாலே திருவவதரித்த இவருக்குப் பராசரபட்டர் வேதவியாச பட்டர் என்றும் திருநாமம் சாத்தினார் எம்பெருமானார். கூர்மையான அறிவுடைய இவரைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக உரையில் வருகின்றன. எம்பெருமானார் கட்டளைப்படி விஷ்ணு சகஸ்ர நாமத்திற்குப் பேருரை வகுத்த பெருமகனார். திருநெடுந்தாண்டகத்தில் "மைவண்ண நறுங்குஞ்சி" (21) என்ற பாசுரத்திற்கு இவர் அருளிய வியக்கியானம், தனிப்பெருஞ் சிறப்புடையது. (பாசுரம்—24, 27, 28, 34, 36, 48, 54, 61, 66, 69, 88, 110, 114, 115, 116, 117, 118, 121, 123, 125, 129, 139, 141, 148, 149, 153, 162, 168, 175, 176, 179, 186, 195, 206, 215, 225 229, 231, 233, 235, 243, 246, 252 காண்க).

பரிஞை அப்பர் : பட்டர் காலத்து வைணவர். பரிஞை என்ற ஊரினர் (பாசுரம்—245 காண்க).

பாலிகை வாளிப் பிள்ளை : நஞ்சீயர் காலத்திலிருந்த ஒரு வைணவர் (பாசுரம்—150 காண்க).

பிள்ளை அகளங்க பிரம்மராயர்: அகளங்க பிரம்மராயன் காண்க (பாசுரம்—235 காண்க).

பிள்ளை அழகிய மணவாளரையர் : திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த அரையர்களுள் ஒருவர். (பாசுரம்—73 காண்க).

பிள்ளை அழகிய மணவாளப் பெருமாளரையர் : நஞ்சீயர் காலத்து அரையர்; திருவரங்கத்தில் வாழ்ந்தவர். 'வரை மீகானில் தடம்பருகு கருமுகிலை' (பெரி. திரு.2.5,3) என்பதற்கு பட்டர் உரைத்த நயப்பொருளை நஞ்சீயருக்கு எடுத்துக் காட்டியவர். (பாசுரம்—34 காண்க. மேலும் பாசுரம்—202, 231, 248 காண்க).

பிள்ளை திருநறையூர் அரையர் : கீழை நாட்டில் கோயிலுக்கு முக்காத வழி தொலைவில் உள்ள தொட்டியம்திரு நாராயணபுரத்திலே பெருமாளைச் சேவிக்கக் குடும்பத்துடன் எழுந்தருளின சமயத்தில் சில பகவத் விரோதிகள் சந்நிதியில் நெருப்பை வைத்தனர். இதனைக் கண்ணுற்ற அரையர் அவ்வெம்பெருமான் திருமேனிக்குண்டான ஆபத்தைக் கண்டு தாமும் பிள்ளைகளுடன் அத் திவ்விய மங்கள விக்கிரகத்தைக் கட்டிக்கொண்டு திருமேனியை விட்ட உபேய அதிகாரி. எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர் (பாசுரம்—18, 66, 106, 135, 167, 193, 203, 228, 242 காண்க).

பிள்ளை தேவப்பெருமாள் அரையர் : ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரின் திருக்குமாரர். இவரும் பாசுரங்களை உருக்கமாகச் சேவிப்பார். (பாசுரம்—230 காண்க).

பிள்ளையமுதனார் : பட்டர் காலத்து வைணவர். பட்டர் பாசுரங்கட்குப் பொருள் கூறுவதை விரும்பிக் கேட்டு மகிழ்பவர் (பாசுரம்—69, 246 காண்க).

பிள்ளை பிள்ளை; பிள்ளை பிள்ளையாழ்வான் என்றும் வழங்கப்பெறுபவர். அனந்தாழ்வான் திருவடி சம்பந்தி. கூரத்தாழ்வானின் சீடர். எழுபத்து நான்கு சிம்மாசனாதி

பதிகளுள் ஒருவர். கூரத்தாழ்வான் திருநாட்டுக்கெழுந் தருளும்போது இவர் மடியிலே திருமுடியையும் ஆண்டாள் மடியில் திருவடிகளையும் வைத்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்பர்.

பிள்ளை விழுப்பரையர்: பட்டர் காலத்து வைணவர் (பாசுரம்—49, 169 காண்க).

பெரிய திருமலை நம்பி: பிறப்பிடம் திருமலை. ஸ்ரீ சைல பூர்ணர் என்ற பெயராலும் வழங்குபவர். குமாரர் பிள்ளை திருமலை நம்பி. இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு. மருமக்கள் எம்பார், எம்பெருமானார். இவர் எம்பெருமானார்க்கு இராமாயணம் சொன்னதாக வரலாறு. (பாசுரம்—119 காண்க.)

பெரிய நம்பி ஆளவந்தாரின் திருவடி சம்பந்தி. பெருமாள் நியமனத்தால் இளையாழ்வாரைக் (இராமாநுசரைக்) காண வருகையில் மதுராந்தகத்தில் ஏரி காத்த பெருமாள் கோயிலில் அவருக்குப் பஞ்ச சம்ஸ்காரம் செய்து துவயத்தை உபதேசித்தவர். பிறந்த இடம் திருவரங்கம். மகா பூர்ணர், பூர்ணாசாரியர், பராங்குச தாசர் என்ற பெயர்களாலும் வழங்கப்பெறுபவர். இவர் திருக்குமாரர் புண்டரீகர் (பாசுரம்—145 காண்க).

பெற்றி: நஞ்சீயரிடம் திவ்யப் பிரபந்தங்களின் சிறப்பான பொருள்களைக் கேட்ட முதலிகளில் ஒருவர்; சீடருங் கூட (பாசுரம்—7, 46, 238 காண்க).

மிளகாழ்வான்: 74 சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். திரு ஆனைக்காவில் இலிங்கத்திற்கு அபிஷேகம் செய்த பாலைக் கொண்டு ததியாராதனத்தில் சேர்ப்பிப்பதை அறிந்த மிளகாழ்வான் அப்படிச் செய்யலாகாதெனத் தடுத்தவர். பிரசாதத்திற்கு முழு மிளகை அம்மியில் நுணுக்காமல்

பயன்படுத்தினார். இதைக் கண்டு உடையவர் காரணம் வினவினார். தேவதாந்தரம் சம்பந்தப்படாமல் மிளகைச் சேர்த்ததாகவிடை யிறுத்தார் மிளகாழ்வான். இலிங்கமும் அம்மிக் குழவியும் ஒரு பொருளாக நினைத்த இவருடைய பக்திக்கு வியந்தார் உடையவர் (பாசுரம்-144,149 காண்க).

முதலியாண்டான் : காஞ்சி மாநகரில் பச்சை வண்ணப் பெருமாள் கோயில் என்கிற புருஷமங்கலத்தில் பிறந்தவர். உடையவரின் சகோதரி புத்திரர். உடையவரின் திருவடிகளை ஆச்ரயித்தவர். தாசரதி, வாதுலதேசிகன், ஸ்ரீ வைணவதாசன், இராமாநுச பாதுகை என்பன இவரது வேறு பெயர்கள். இவர் குமாரர் கந்தாடையாண்டான் (பாசுரம்—134, 232 காண்க).

வங்கிபுரத்து நம்பி : உடையவரின் ஸ்ரீபாதங்களை ஆச்ரயித்தவர். உடையவர் இவருக்குத் திருவாராதனக் கிரமம் உபதேசிக்கவில்லையே என்று வருந்தினதாக வரலாறு (பாசுரம்—65 காண்க).

வீர பிள்ளை : நஞ்சீயர் காலத்திலிருந்த வைணவர். இவரும் பாலிகை வாளிப் பிள்ளை என்ற வைணவரும் தேசாந்தரம் போனவிடத்து வெறுப்புண்டாகி ஒருவரோ டொருவர் பேசாதிருக்க, நஞ்சீயர் தலையிட்டால் வெறுப்பு நீங்கப்பெற்று நண்பர்களாயினர் (பாசுரம்—150 காண்க).

வேதாந்த தேசிகர்: காஞ்சியில் 'திருத்தண்கா' என்னும் விளக்கொளிப் பெருமாள் சந்நிதிக்கருகிலுள்ள தூப்பில் என்ற திவ்யத் திருத்தலத்தில் அவதரித்தவர். இதனால் தூப்பில் பிள்ளை என்று வழங்கப்பெற்றார். அப் பிள்ளா ருடைய உடன் பிறந்தாளுடைய குமாரர். இவருடைய பிள்ளைத் திருநாமம் வேங்கடநாதன் என்பது. நடாதூரம் மாள் என்பாரின் கடைக்கண் நோக்குக்கு இலக்கானவர்,

அப்பிள்ளார் திருவடிகளை ஆச்ரயித்து சகல வேதாந்தங்களையும் கற்றுத் துறைபோய வித்தகரானார். திருவேங்கடமுடையான், திருப்பாணாழ்வார், ஹயக்கிரீவர் இவர் தம் ஆராதனப் பெருமாள்கள். இவர்தம் பெரும் புலமையாலும், வாதிடும் வல்லமையாலும் 'கவிதார்க்கிக சிம்மம்' 'சர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்ற திருநாமங்களைப் பெற்றுத் திகழ்ந்தவர். இவர்தம் திருக் குமாரர் நைனாராச்சான் (பாசுரம்—124 காண்க).

வேல் வெட்டி பிள்ளை : நம்பிள்ளையின் மாணாக்கர் (பாசுரம்—124 காண்க).

பின்னிணைப்பு-3

பாசுர முதற்குறிப்பு

[எண், பக்க எண்]

அகலகில்லேன்	435
அக்கும் புலியின்	200
அஞ்சிறைய (அவ)	249
அடங்கெழில்	242
அடியான் இவன்	503
அடியார்ந்த	323
அடியேன் உள்ளான்	480
அடியேன் மேவி	434
அப்பனே அட	350
அமலனாதி	61
அமுதம் அமரர்	265
அயர்க்கும்	337
அருள்கொண்	71
அருள்பெறுவார்	247
அறுக்கும் வினை (அவ)	504
அறுக்கும் வினை	505
அன்னை முனி	217
அன்னையென்	366
ஆஆ என்னாது	429
ஆடி யாடி	278
ஆணல்லன்	283
ஆணியைக்	468
ஆம் முதல்வன்	472
ஆவிதிகைக்க	427
ஆராஅமுதே	378
ஆளும்பரமனை	318
ஆழியெழச்	455
இடரின்றி	326
இண்டையாயி	82
இந்திரற்கும்	221
இரக்கமின்றி (அவ)	210
இரக்கமின்றி	211
இரங்கி நாடொ	405
இருந்தண்மா	116
இரைக்கும்	370
இனிதிரைத்	56
இன்று என்னை	532
இன்று போய்	513
ஈதேயான்	288
உடம்புருவில்	96
உண்ணிலாவிய	437
உண்ணும் சோறு (அவ)	407
உண்ணும் சோறு	410
உந்துமதகளிற்	53
உயர்வற	238
உயவு பாய	332
உவந்த உள்ளத்	63
உளனாகவே	324
உறுமோ பாவி	484
உன்னித்து	343
எங்கள் எம் (அவ)	204
எங்கள் எம்	206
எங்கள் கண்முகப்	497
எங்ஙனேயோ	372
எண்பெருக்	245
எதிர்எதிர்	533
எத்திசையும்	290
எனக்கேயாட்	290

[எண், பக்க எண்]

என் செய்ய	250	கள்ள வேடத்தை	387
என் சொல்லி	470	கறவா மட	167
என் திருமகள் சேர்	446	கற்பார் இராமபி (அவ)	437
என் நீர்மை	253	காட்டி நீ	354
என் மின்னு	422	காண்டாவன	88
என்றைக்கும்	469	காரியம் நல்ல	415
ஏத்துமின் (அவ)	214	கார்த் தண்	41
ஏத்துமின்	510	காவலனிலங்கை	209
ஏழுமராமர	187	குடதிசை	57
ஏறனைப்	272	குரங்குகள்	53
ஏனத்தின்	97	குழகி எங்கள்	400
ஒடுங்க அவன்	243	கெடும் இடராய	512
ஒத்தார்மிக்	275	கேசவன் தமர் (அவ)	286
ஒருநல் சுற்றம் (அவ)	209	கேட்பார்கள் கேச	458
ஒளியாவெண்ணெய்	159	கைம்மான மத	194
ஒழிவில் கால	294	கைம்மான மழ	145
ஒன்று சொல்லி	465	கொண்ட பெண்டிர் (அவ)	488
ஒன்று நில்லா	478		
ஓடி ஓடிப்	357	கொண்டலவண்	70
ஓதிலும் உன்	109	கொழுங்கயலாய்	156
ஓர் ஆயிரமாய்	500	கோலமலர்ப்	535
கங்குலும் பகலும் (அவ)	444	சந்தமலர்க்	214
கடிகமழு	101	சாதிமாணிக்கம்	301
கடுவினைகளை	517	சாதுசனத்தை	307
கணமருள	181	சாந்தேந்து	153
கண்சோர	173	சிக்கெனச்	284
கண்ட இன்பம்	403	சிலம்படியுரு	80
கண்டும் தெளிந்	459	சிலையிலங்கு (அவ)	177
கண்ணியெ்ன	330	சீமாலிகன்	27
கண்ணுள்ளே	210	சுமந்து மாமலர்	299
கரையெடுத்த (அவ)	179	செங்கனிவாயின்	453
கருமுகில்	122	செஞ்சொல் கவி	526
கல்லார் மதில்	166	செருவரை முன்	178
கலையும் கரியும் (அவ)	79	சேர்ந்தார்	277
கள்வன் கொல்	129	ஞாலத்தூடே	425
கள்ளக் குறளாய்	139	தணியும்பொழு	345
கள்ள விழும்	508	தமருகந்த	539

[எண், பக்க எண்]

தருமான	197
தளைக்கட்ட	136
தாங்கரும் போர்	111
தாய்நினைந்த	171
திசைக்கின்ற	343
திருவுடம்பு	281
திருவுடை மன்னரை	333
திவளும் வெண் (அவ)	102
திவளும் வெண்	103
தீர்ப்பாரை (அவ)	341
துண்ட வெண்	65
துப்புடை	23
துயரமேதரு	315
துன்னிமண்	143
தூவிரிய (அவ)	128
தெளிவுற்று வீவி	463
தேவும்எப்	274
தேனுகன் ஆவி	204
தொழுத்தையோம்	524
தோற்றக் கேடவை	312
நடந்த கால்கள்	41
நண்ணா அசுரர்	524
நண்ணாதார் (அவ)	486
நமக்கும்	339
நமனும் முற்	54
நல்கித்தான்	254
நல்ல கோட்பாட்	486
நாதனை	320
நாம் உமக்கு	520
நாளு நின்றடு	347
நாறு நறும்	39
நான்முகன்	123
நிலையாளா	127
நிலையாளாக	175
நிறைந்தவன்	374
நின்றவாறும்	392
நின்றனர்	240
நீயலையே	257
நீரகத்தாய்	211
நீர்மையில்	309
நெடுமாற்கு (அவ)	484
பட்டரவேர்	124
பண்டை நாளாலே	492
பண்ணேர்	135
பத்துடை (அவ)	247
பந்தார் விரலாள்	176
பரனே	176
பரியனாகி	67
பரிவதில்	263
பாமருமூவுல (அவ)	465
பாராய	91
பிடித்தேன்	530
பிணக்கி	401
பிறந்தவாறும் (அவ)	385
புகரார் உரு	89
புண்ணியம் செய்து	515
புரங்கள் மூன்று	212
புளிங்குடிக்கிட	495
பூண்டவத்தம்	94
பேச நின்ற	355
பேயிருக்கும்	219
பொருந்தா அரக்	188
பொருள்கையுண்	489
பொன்னுலகாளிரோ	420
போற்றியான்	398
மகாப்பிரவேசம்	237
மணிமாமை	352
மண்மிசைப்	404
மலங்கு	190
மலரடிப் போதுகள்	476
மல்லிகை கமழ் (அவ)	507
மறந்திகழு	44

[எண், பக்க எண்]

மழுங்காத	293	வலம்புரி	203
மனமே உன்னை	501	வலையுள்	368
மன்னஞ்ச	170	வள்ளிக்கொழுநன்	161
மாக மாநிலம்	149	வாதமாமகன்	148
மாசறுசோதி (அவ)	361	வாயெடுத்த	183
மாதவத்தோன்	29	வாய்க்குங்கொல்	474
மாயன் என்	266	வார்புனல்	311
மாரிமாக்கடல்	185	வாளையார்	138
மானேய் நோக்கி	259	வாழ்தல் கண்டீர்	491
மானேய் நோக்கு நல்	152	வான் ஏற	521
மானேய் நோக்கு (அவ)	380	விடுமின் (அவ)	241
மானேய் நோக்கு	382	விண்ணுள்ளார் பெரு	439
மின்னிலங்கு	232	விரும்பிப் பகவரை	335
மின்னினன்ன	141	விரைகமழ்	119
மீனோடாமை	192	வில்லால் இலங்கை	199
முற்ற மூத்து	77	வில்லேர் நுதல்	169
முன்னிலவேழு	144	வெள்ளைச் சுரி	449
முன்னோர் தூது	84	வெள்ளைப் புரவி	155
மெச்சூது	25	வேங்கடங்கள்	297
மேவிநைந்து	412	வேதத்தை	188
மொய்த்தவல்	51	வேதநூல்	148
மொய்ம்மாம் பூம்பொழில்	304	வேயர்தங்கள்	30
வந்தருளி	376	வைகல் பூங் (அவ)	394
வம்பவிழ	305	வைகல்பூங்	396
வலஞ்செய்து	292	வைத்தமாநிதி	417

* *

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் நூல்கள்

ஆசிரியம் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல்நூல்

இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்-1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

சமயம், தத்துவம் :

17. மலைநாட்டுத் திருப்பதிகள்
18. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
19. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
20. வடநாட்டுத் திருப்பதிகள்
21. சோழ நாட்டுத் திருப்பதிகள்—முதல் பகுதி (தமிழக அரசு பரிசு பெற்றது)

22. சோழ நாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி (தமிழக அரசு பரிசு பெற்றது)
23. முத்தி நெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
24. சில நோக்கில் நாலாயிரம்
25. வைணவமும் தமிழும்
26. சைவ சமய விளக்கு
27. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
28. ஆன்மிகமும் அறிவியலும்
29. கலியன் குரல்

திறனாய்வு :

30. கவிதையநுபவம்
31. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
32. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
33. அகத்திணைக் கொள்கைகள்
34. புதுக்கவிதை-போக்கும் நோக்கும்
35. கண்ணன் பாட்டுத் திறன்
36. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
37. பாரதீயம் (தமிழக அரசு பரிசுபெற்றது)
38. குயில்பாட்டு-ஒரு மதிப்பீடு.
39. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)

தன்வரலாறு, வரலாறு :

40. நினைவுக் குமிழிகள்—பகுதி—1
41. நினைவுக் குமிழிகள்—பகுதி—2
42. நினைவுக்குமிழிகள்—பகுதி—3
43. வேமனர்
44. குரஜாட
45. மேகாணி
46. சி. ஆர். ரெட்டி
47. தாயுமானவர்

48. வடலூர் வள்ளல்
49. தம்பிரான் தோழர்
50. நாவுக்கரசர்
51. காழிப்பிள்ளையார்
51. ஞானசம்பந்தர்
52. மாணிக்கவாசகர்
53. பட்டினத்தடிகள்

அறிவியல் :

54. மானிட உடல்
55. அணுவின் ஆக்கம்
56. இளைஞர் வானொலி
57. இளைஞர் தொலைக்காட்சி
58. அதிசய மின்னணு
59. நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது)
60. இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது)
61. அம்புலிப் பயணம்
62. தொலை உலகச் செலவு
63. அணுக்கரு பௌதிகம் (சென்னைப் பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
64. இல்லற நெறி
65. வாழையடி வாழை
66. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
67. வானமண்டலக் காட்சி

ஆராய்ச்சி :

68. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
69. *Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special raference io Nammalvar*
70. *Studies in Arts and Sciences* (61st birth day Commemoration Volume)
71. *Collected Papers*

பிழை—திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	27	கெய்தார்	செய்தார்
6	17	தெள்ளிதா	தெள்ளியதா
8	28	களிப்	கற்
48	17	நிறித்திக்	நிறுத்திக்
60	31	அருளிக்	அருளிச்
69	அ. கு. 4	வரதனைப்	வாதனைப்
81	7	கெடடேன்	கெட்டேன்
86	9	களிற்றைக	களிற்றைக்
88	1	காண்டவான	காண்டாவன
91	13	றொழித்தான்	கொன்றொழித் தான்
94	20	ளேததும்	ளேத்தும்
97	2	பரம்புருடனான	பரமபுருடனான
97	3	சேநங்கள்	சேசநங்கள்
103	8	ஏறட்டுக்கொண்டு	ஏறிட்டுக்கொண்டு
119	13	விரைகமகிழ்ந்த	விரைகமழ்ந்த
124	25	பாட்டரவே	பட்டரவே
126	22	பாசுரம்	(நீக்குக)
131	16	உசாசாக்	உசாவிக்
132	8	தலைமனுடன்	தலைமகனுடன்
152	18	துன்னடைந்நேன்	துன்னடைந்தேன்
181	17	கனகயமான	கனகமயமான
182	13	சாபத்தாம்	சாபத்தால்
193	1	பகவன்	பகவான்
207	2	வர்கள்	வர்கட்கா
221	6	இந்திரக்கும்	இந்திரற்கும்
249	6	காமான	தாமான
250	9	வாரஜாதி	வானரஜாதி
258	9	கிந்தை	சிந்தை

271	10	கட்டுரையில்	ஈட்டுரையில்
297	15	கருதியான	தகுதியான
305	14	வமிபவிழ	வம்பவிழ்
307	10	முதலவனை	முதல்வனை
311	10	வர்த்தித்துக்கு	வர்த்தத்துக்கு
327	13	வற்து	வந்து
329	19	யன்றால்	என்றால்
343	9	அனறிது	அன்றிது
345	9	பாரா	பராசரபட்டர்
385	1	பிறந்தவானும்	பிறந்தவாறும்
390	19	அகரர்கள்	அசுரர்கள்
391	1	மாலத்தில்	காலத்தில்
435	20	திருமலை	திருமாலை
439	11	தன்றுசொல்	ஒன்றுசொல்
464	24	பாகவரு	பாமரு
467	11	கயிறாக	கயிறாகவும்
437	24	தருளின்	தருளினன்
469	9	விஷயீகாரப்	விஷயீகாரம்
471	12	மூவுருமாம்	மூவுருவாம்
474	22	திகுதியான	தகுதியான
478	6	ஆண்ம குவிற	ஆன்ம குண
482	10	கண்டயே	கண்டாயே
483	7	நிர்பந்தம்	நிர்ப்பந்தம்
499	2	முலிதயாண்டான்	முதலியாண்டான்
500	6	கெணேடு	கொண்டு
522	28	வெருவுதது	வெருவுவது
529	21	பிரபந்தகளன்றோ	பிரபந்தங்களன்றோ
530	8	உபரிந்தது	உயர்ந்தது
552	2	சடபகபேன்	சடகோபன்

குறிப்பு : பாடங்களின் எண்கள் 52, 53 எப்படியோவிடு பட்டன. 51க்குப் பிறகு 54 தொடர்கின்றது (இதைக் கவனிக்க.)

First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India
Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF
PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN 978-81-939685-5-0

Six Goswamis in Vaishnavism